பத்தாண்டுவிழாத் தொடக்கம்
தலைவர் வரவேற்பு.

வெளியீடு எண். 186.

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம்

இருபத்துநான்காவது குருமூர்த்திகள்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

பத்தாண்டுவிழா.

1943

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.
1949.

உள்ளுறை

பக்கம்.

1.	நிகழ்ச்சி	...	...	...	1.
2.	பிரசங்கங்கள்		...	...	15.
3.	வாழ்த்துப் பத்திரங்கள்		...	...	57.
4.	வாழ்த்துச் செய்திகள்		...	...	105.
5.	பத்திரிகைச் செய்திகள்		...	...	213.

படங்கள்

1. பத்தாண்டு நினைவு வளைவு
ஸ்ரீ ஷண்முகம் ஆர்ச் — அட்டைப்படம்.
2. தலைவர் வரவேற்பு — முகப்புப் படம்.
3. முதல்நாள் நிகழ்ச்சி ... ... 17.
4. இரண்டாம்நாள் நிகழ்ச்சி ... ... 26.
5. மூன்றும்நாள் நிகழ்ச்சி ... ... 35.
6. கண்டிகைபந்தம் ... ... 107.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன 24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்ட விழா

நிகழ்ச்சி

பூவிரி பொழில்சூழ் காவிரி வளம்பெறும் சோணாட்டில் திகழும் சைவ மடங்கள் யாவும் சிவனையும், சிவச்சின்னங்களையும், திருநெறித் தமிழ் மறைகளையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் தம்மைவந்தடைந்த பக்குவிகட்கறிவுறுத்தி வேதநெறி, சைவநெறி, பத்திநெறி ஆகிய செந்நெறிகளை வளர்த்துவந்தன, வருகின்றன. அவைகளுள் **திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன மடாலயமும்** ஒன்று. அதில் துறவரசுபூண்டு ஞானபீடத்தெழுந்தருளி ஞானச் செங்கோல் நடாத்திய அருட் குருமூர்த்திகள் இருபத்துமூவரெனக் கணக்கிடப்படுவர். அவர்களுள் ஞானபீடத்தமர்ந்த ஒவ்வொரு குருமூர்த்திகளும் பற்பல அருட்செயல்களைப் புரிந்துவந்தனர் என்பது அவ்வவர்களின் வரலாறுகள் தெள்ளிதிற் புலப்படுத்துவனவாம்.

இப்போது ஸ்ரீமத் குருஞானசம்பந்தருக்கு 24-வது பிற்றோன்றலாக ஞான பீடத்தமர்ந்து ஞானவரசு நடாத்துபவர்கள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.** இவர்கள் "வேண்டி னுண்டாகத் துறக்க; துறந்தபின் ஈண்டியற்பாலப் பல" என்னும் பொதுமறைத் திருவாக்கிற் கிலக்கிய மாக, இளம்பிராயத்திலேயே துறவறம்பூண்டு அருளாட்சியும் (26-வது வயதில்) ஏற்றார்கள். ஏற்றகாலம் 1933ம் வருடம் ஜூன் மாதம் 26ம் நாளாகும். பின்னர் இதுகாறும் பத்தாண்டுகளாகச் சமயமுன்னேற்றம், மொழி முன்னேற்றம், சமூக முன்னேற்றம் என்ற பற்பல துறைகளிலும் ஆழ்ந்த நுண்ணறிவுடன் திட்டங்கள் பல வகுத்து அவ்வாறே பணிகள் புரிந்துவருகிறார்கள். அவற்றின் விரிவினைப் **பத்தாண்டு ஆட்சி மலரில்** தெளிவாகக்காணலாம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மதிநுட்பமும், தாம்கொண்ட கருத்தினைப் பிறர்க்கு விளங்கக்கூறும் சொல்லாற்றலும், ஏற்றதைச் செம்மையுற நடாத்தும் சீர்மையும், உயர்ந்த இலக்ஷியத்திற்காக உழைக்கும் உறுதியும், உண்மைநெறி கோடாத கொள்கையும், வந்து கேட்போர்க்கு உண்டெனின் உண்டு இல்லெனின் இல்என விடையிறுக்கும் வீரமும், கழிபெருங் கண்ணோட்டஞ் செய்யாத நீதிநிர்வாகத் திறமும், யாவர்க்கும் காட்சியளித்து இன்னுரை அருளும் எளிமையும் இன்னோரன்ன பிறகுணநலங்களும் வாய்ந்தவர்களாக இருத்தலின், இவர்களின் நிர்வாகத்தைக் கண்டார் யாவரும் வியப்புறுகின்றனர். மேலும், மகாசந்நிதானமவர்கள்

தம்மை ஒருமுறை கண்டவர்களது மனத்தைவிட்டு அகலாத அமைதித்தன்மையும் உடையவர்கள்.

இவைகளையெல்லாம் நேரிற்கண்டுணர்ந்த மாவூர் சர் R. S. சர்மா C. I. E., அவர்களும், நெடும்பலம் இராவ்பகதூர், திரு. N. R. சாமியப்ப முதலியார் அவர்களும், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சியினை ஓர் சிறப்பு விழாவாகக் கொண்டாட நினைந்தனர். அதைப்பற்றி ஆலோசித்தற்கு 10—6—1943ல் மாயவரம் நகரசபை மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூட்டினர். அக்கூட்டத்திற்குப் பற்பல இடங்களிலிருந்தும் பற்பல பெருமக்களும் வந்து குழுமினர். வருதற்கு இயலாத பலரும் "கருணைவள்ளலாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்திற்குப் பத்தாண்டு ஆட்சிவிழாக் கொண்டாட வேண்டியது அவசியம்" என வற்புறுத்துமுகத்தான் தங்கள் தங்கள் கருத்தைக் கடிதமூலமாக தெரிவித்திருந்தனர். வந்திருந்தோரனைவரும் மகாசந்நிதானத்தின் பெருஞ் சேவைகளைப் பாராட்டிப் பேசியதோடு, அவ்விழாவினை நடத்துவதற்கு 194 பெருமக்களை விழாக் குழுவினராக ஏற்றுக்கொண்டனர். அதிலும் திருவாளர்கள், மாவூர் சர். R. S. சர்மா C. I. E., நெடும்பலம் இராவ்பகதூர், N. R. சாமியப்ப முதலியார், மாயூரம் நகராண்மைக்கழகத் தலைவர் C. கனகசபை செட்டியார், மாயூரம் தாசில்தார் S. இராமச்சந்திர ஐயர், மாயூரம் நகராண்மைக்கழக ஆட்சியாளர் A. கோபால கிருஷ்ணையர், கூறைநாடு K. S. சுந்தரஞ் செட்டியார், மாயூரம் S. ரத்தினம் பிள்ளை, மாயூரம் வழக்கறிஞர் N. வைத்தியநாதையர், ஏனாதிமங்கலம் இராவ்சாகிப் E. N. சோமசுந்தரம் பிள்ளை, திருக்கடவூர் K. கனகசபைப் பிள்ளை ஆகிய பதின்மரைச் செயற் குழுவினர்களாகவும், அக்குழுவிற்குத் திரு. C. கனகசபைச் செட்டியார் அவர்களை அமைப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இக்குழுவினர் 26—6—43ல் அவ்விழாவைக் கொண்டாட உத்தேசித்தனர். ஆனால் இடையில் ஏற்பட்ட சிற்சில வசதிக்குறைகளால் குறிப்பிட்ட நாளைமாற்றி 5—9—43ல் கொண்டாடலாம் என முடிவுக்கு வந்தனர். 5—9—43க்கு இடையில் 23—8—43ல், செயற்குழு அங்கத்தினர்களின் கூட்டம் நடைபெற்றது. அதில் விழாவினை இன்னின்னவிதமாகக் கொண்டாடுவது எனப் பலவாறாகப் பேசி, முடிவில் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்தனர்:-

5—9—43	விழாத்தொடக்கம்
6—9—43	புலவர்கள் தினம்
7—9—43	மாகேசுவர பூசை, பட்டணப்பிரவேசம்
8—9—43	ஆவணிமூலம் — மாணவர் தினம்
9—9—43	ஆதித்திராவிடர் தினம்.

ஏற்பாடுகள்

மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் கற்சாலையினின்றும் தருமபுரத்திற்குக் கிளைப்பாதை பிரிகிறது. அது வளைவு உள்ளதாக இருந்ததால், நேராகப் புதிய சாலை ஒன்று அமைத்து அதன் இருபுறங்களிலும் அழகிய வளைவு மதில்

கள் எடுக்கப்பட்டன. அப்பாதையிலுள்ள சிறிய ஆற்றிற்குப் பாலம் ஒன்றும் கட்டப்பட்டது. இச்சாலை பிரிகின்ற தொடக்கத்தில் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்ட நினைவாக அழகிய வளைவு ஒன்று அமைக்கப்பெற்றது. அதனைக் காண்பவர்கள் யாவரும் இதுதான் மடாலய முகப்போ என ஐயுறுகின்றனர். ஊரில் பழமையான இடங்கள் பலவும் புதுக்கி அழகுபடுத்தப்பெற்றன. தெருக்கள் சுத்தஞ்செய்து புதுமணல் பரப்பப்பட்டது. சுகாதார வசதிகளும் செய்யப்பட்டன. மேலை வீதியில் சண்முகவிலாச விருந்தினர் மாளிகைக்கு முன்னர், விழாவிற்கு வரும் திரளானமக்கள் வசதியாக இருந்து நிகழ்ச்சியினைக் காண்பதற்கு ஒரு பெரிய கொட்டகை அமைத்து, தலைவரவர்கள் அமர்வதற்கு உயர்ந்த மேடையொன்றும் கட்டப்பட்டது. கொட்டகை கல்யாண மண்டபமாக அலங்கரிக்கப்பெற்று இடையிடையே மின்னொளி விளக்கங்களும் அமைக்கப்பட்டு அழகு படுத்தப்பட்டது. ஆங்காங்கும் ஒலிபெருக்கிகளும் வைக்கப்பட்டிருந்தன. மடாலயத்தின் கீழைமுகப்பிலும் பந்தல் அமைத்து வண்ணத்திரைகளும் துகிற்றோரணங்களும் கட்டப்பட்டன. வருபவர்கள் தகுதிக்கேற்ப நீராடும் சாலையும், உணவுச்சாலையும் திட்டஞ்செய்யப்பட்டிருந்தன. தங்குதற்கு விடுதிகளும் அங்ஙனே. விழா நிகழ்ச்சிக் காலங்களில் குளிர்பானங்கள், கைவிசிறிகள் முதலியன கொடுத்துதவவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாயூரம் நகரத்திலுள்ள பள்ளிமாணவர்கள் யாவர்க்கும் பத்தாண்டு ஆட்சிப் பந்தய விளையாட்டுக்கள் நடத்தவும் ஏற்பாடாயிற்று. 4—9—43 அன்று ஊரெங்கும் மாலைகளும், கூந்தல்களும் பிணைத்து அழகு செய்யப்பட்டது. மடாலயமும் அப்படியே அழகு செய்யப்பட்டு மிளிர்ந்தது. பல இடங்களிலிருந்தும் யானைகள், நாட்டியக் குதிரைகள், பொய்க்கால் குதிரைகள், ஒட்டகங்கள் முதலிய விருதுகள் வந்தன. பிரபல பத்திரிகைப் பிரதிநிதிகளும் ஆங்காங்கிருந்து வந்தனர். செட்டிநாட்டிலிருந்து சாரணப்படையினரும் உதவிக்காக வந்திருந்தார்கள்.

4—9—43 அன்று ஆதீன நிர்வாகத்துக்குட்பட்ட தேவஸ்தானங்களில் பெருமானுக்குச் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஆங்காங்கும் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

முதனாள்

5—9—43 ஞாயிற்றுக்கிழமை

விழாத்தொடக்கம்

இன்று விழா ஆரம்பம். சென்னை முதலிய இடங்களிலிருந்தும் நாலாபுறங்களிலிருந்தும் கூட்டங்கூட்டமாகப் புலவர்களும், பெருமக்களும், பெருநிலக்கிழார்களும், பெருநிதிச்செல்வர்களும் இன்னும் பலரும் வந்தவண்ணமாகவேயிருந்தனர். காலையில் தேவஸ்தான அருச்சகர்கள் விபூதிப்பிரசாதத்துடன் மடாலயத்திற்கு வந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைக் கண்டுசென்றார்கள்.

இன்றைய நிகழ்ச்சித் தலைவர் திருவாங்கூர் சமஸ்தான திவான் சச்சி வோத்தம டாக்டர், சர் C. P. ராமசாமி அய்யர் K.C.S.I., K.C.I.E., LL.D., அவர்கள்.

காலை 10 மணிக்கு தலைவரவர்கள் பத்தாண்டு ஆட்சி வளைவிலிருந்து சகல விருதுகளுடனும், வாத்திய முழக்குகளுடனும் மிக விமரிசையாக, வீதிவலமாக வரவேற்கப்பட்டார்கள். பத்தாண்டாட்சிவளைவின் தொடக்கத்தில் தலைவர் வந்த வுடன் செட்டிநாட்டுப் பாரதி வகுப்புச் சாரணப் படையினர் (Guard of honour) கழிக்கூடமமைத்து மரியாதை செய்தனர். மடாலயத்திற்கு வந்து சேர்ந்ததும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைப் பேட்டிகண்டு அளவளாவினார்கள். வரவேற்புக் கூட்டத்தில் மாயூரத்திலிருந்து ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமிகள் "மகா சந்நிதானம் வாழ்க" "சமயத்தைப் போற்றுக" "இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே" முதலிய பல ஒலி முழக்கங்களுடன் வந்து கலந்து கொண் டார்கள். அவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

மாலை 4-மணிக்கு அவைகூடியது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், தலைவரவர்களும், முனிபுங்கவர்களும், ஏனையோர்களும் தத்தமக்குரிய இடத் தமர்ந்து யாவர்க்கும் காட்சியளித்தனர். திருமுறை ஓதப்பட்டது. கீழ்த்தஞ்சை ஜில்லாஜட்ஜ் திரு. K. S. கணேசய்யரவர்கள், B.A., B.L., தலைவர் பிரேரணையைச் செய்யத் திரு. இராவ்பகதூர், V. ராமச்சந்திர அய்யர் அவர்கள் அதனை ஆமோதித் தார்கள். முதலில் மகாசந்நிதானத்தின் வரவேற்புரையை ஆதீனத் திருக்கூட்டத் தினரான (தற்போது திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்) ஸ்ரீமத் அருணந்தித்தம்பிரான் சுவாமிகளவர்கள் வாசித்தளித்து ஆதீன நூல்நிலையத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்வர வேற்புப்பத்திரம் அழகிய வேலைப்பாடு மிக்குள்ள தந்தப்பேழையில் வைத்து அளிக்கப்பட்டது. அடுத்தபடியாகக் கொண்டாட்டவிழாக் குழுவினரின் சார்பில் அக்குழுவின் அமைப்பாளரான C. கனகசபைச் செட்டியார் அவர்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். மேலும், பாராட்டு வளைவையும் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கு மாயூரம் நகராண்மைக் கழகத்தினர் சார்பில் அதன் தலைவர் திரு. C. கனகசபைச் செட்டியாரவர்களும், கொண்டாட்ட விழாக் குழுவினரின் சார்பில் திருக்கடவூர் திரு. K. கனகசபைப்பிள்ளை அவர் களும், சீகாழி நகரவாசிகள் சார்பில் அவ்வூர் பெருநிலக்கிழார் திருவாளர் C. கிருஷ்ணமூர்த்தி முதலியாரவர்களும், மாயூரம் சாரணச்சிறுவர் சங்கத்தின் சார்பில் அச்சங்கக் கமிஷனர் திரு. T. P. சீனிவாசன் B.A., L.T., அவர்களும், பிறையாறு நகரசபைச் சார்பில் அவ்வூர் திரு. ஜம்புகேசுவர நாடார் அவர்களும், மாயூரம் நகராண்மைக்கழக ஊழியர் சார்பில் மானேஜர் திரு. M. A. ஜகந்நாதம் பிள்ளை அவர்களும் வாழ்த்துரைகள் படித்துக்கொடுத்தனர். காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அனுப்பிய வாழ்த்துரையை அவர்களுடைய பிரதிநிதிகள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்திடம் ஈந்து பொன்னாடையினையும் சாத்தி னார்கள். பிறகு மகாசந்நிதானத்தின் நிர்வாக நேர்மையினையும், குணாதிசயங்களையும் பற்றிச் சீகாழி இராவ்சாகிப் திரு. C. சீனிவாச முதலியார் அவர்களும், நெடும்பலம் இராவ்பகதூர் திரு. N. R. சாமியப்ப முதலியார் அவர்களும் சிறப்புரைகள் மொழிந்

தார்கள். இந்துசமய அறநிலையக் கழகத் தலைவர் திவான்பகதூர் திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை M.A.,B.L., அவர்கள் வெள்ளிப் பேழையில் வைக்கப் பட்டிருந்த பத்தாண்டு ஆட்சிமலரை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தினிடம் சமர்ப் பித்து அம்மலரில் அடங்கியுள்ள பொருள்களை மிகச்சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்து மொழிந்தனர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரைகள் வழங்கிய சங்கங்கட்கும் சிறப்புரை பேசிய பெருமக்களுக்கும், அதனைச் செவிமடுத்த அன்பர்கட்கும் உபசாரமொழிகள் கூறி ஆதீன ஆத்மார்த்த பூஜாமூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கத்தின் அருள் சுரக்கப் பிரார்த்தித்து ஆசிமொழிந்தார்கள்.

பிறகு தலைவரவர்கள், முன்பு வழக்கறிஞர் என்ற தொழில் முறையில் வந்திருந்தபொழுது கண்ட தருமபுரம், தாம் கேள்விப்பட்டிருக்கிறபடி, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் நிர்வாக காலத்தில் அமைந்திருக்கும் பெரும் நலப்பாடு களையும், செய்யப்பட்டிருக்கும் பல சீர்திருத்தங்களையும் ஒவ்வொன்றும் எடுத்துக் காட்டுவதாயும் தாம் இங்குப் பலவழிகளிலும் முன்னேற்றத்தையும் தீர்க்கா லோசனையையும் காண்பதாயும் பாராட்டிப்பேசினார்கள். மொழிவாதம் பரவும் இக்காலத்தில் நமது ஆன்ற முன்னோர்களின் செய்கையை யோசிக்குமிடத்துத் தாயுமானவர் போன்ற அருள் வழிப்பட்ட பெருமக்கள் உண்மைத் தத்துவங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டார்களே யொழிய மொழிவாதங்களை ஏற்றுக்கொள்ள வில்லை யென்பதை அப்பெரியார் அருளிய பாடல்களிலிருந்து இருபாடல்களை உதாரணமாக எடுத்துக் காட்டியும் விளக்கினார்கள். திருவாங்கூர் சமஸ்தான ஆட்சிக்குட்பட்டவற்றுள் சுமார் 15 லக்ஷம் தமிழ் மக்கள் இருப்பதாகவும் அவர் களுக்குச் சைவசித்தாந்த உண்மைகளைப் பரப்ப பல பிரசாரகர்கள் தேவை யென்றும் மொழிந்து முடித்தனர்.

அதன் பிறகு மாவூர் சர் R. S. சர்மா C.I.E. அவர்கள் மகாசந்நிதானத்தின் ஆட்சி நலத்தினைப் பாராட்டிப் பேசியதோடு தாம் இரண்டு தினங்களுக்குமுன் சென்னை மகிமைதங்கிய கவர்னரவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது ஆதீனத் தைப் பற்றியும் மகாசந்நிதானத்தைப்பற்றியும் பேச வாய்ப்பு ஏற்பட்டதாகவும் அப்பொழுது கவர்னர்துரை அவர்கள் இக்கூட்டத்தில் வாசித்தளிக்கும்படி வாழ்த்துரை ஒன்று எழுதிக்கொடுத்திருப்பதாகவும் கூறி அதனை வாசித்தளித் தார்கள். அவையில் பெருமகிழ்ச்சிக் கடையாளமாக ஆரவாரங்கள் நிகழ்ந்தன. மேலும் அவர்கள் "இங்குத் தலைமை வகித்திருக்கின்ற பெரியாரவர்கள் குண நலம்படைத்தவர்கள். நிர்வாகதீரர். இவர்களுடைய பெருமுயற்சியாலேயே தஞ்சை ஜில்லாவிற்கு மேட்டூர் தேக்கத் திட்டம் வந்தது. விவசாயிகள் நன்மை பெற்றனர். இவ்விதம் தமிழ்நாட்டுப் பெருமகன் ஒருவனுக்குச் செய்ய முடிந்தது பற்றி யான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். திருவாங்கூரில் இவர்கள் செய்து வரும் பணிகளோ மிகப்பல. அவைகளையெல்லாம் இங்கே கூறுவதென்றால் காலம் நீடிக்கும். நிர்வாக நேர்மைமிக்கார் ஒருவரைப் பாராட்டுங் கூட்டமொன்றுக்குத் தலைமைவகிக்க நிர்வாக (தேர்ச்சி) அனுபவம் மிக்கார் ஒருவரால்தான் முடியும். ஆகவே, இவர்கள் இங்கு வந்து இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்து நடத்திய தற்கு யான் நன்றி செலுத்துகிறேன். இதற்கு உதவிபுரிந்த பலருக்கும் நன்றி செலுத்துகிறேன்" என்று கூறி அமர்ந்தனர். திருமுறை யொலிப்பக் கூட்டம்

முடிவுற்று யாவரும் கொண்டாட்ட வளைவு ஆதீன நூல் நிலையங்களைத் திறக்குமிடத்திற்கு விரைந்து சென்றனர்.

திருவையாறு பஞ்சாயத்துபோர்டு, சென்னை தமிழ்ச்சங்கம், சென்னை சைவாசாரியர்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தில்லைத் தமிழ்க் கழகம், குடந்தை தமிழ்ச்சங்கம், காழிக் கல்விக்கழகம், மாயவரம் தமிழ்ச் சங்கம், சென்னை தமிழிசைச் சங்கம், மாயவரம் சாசுவதநிதி, திருச்சி சாவித்திரி வித்தியாலயா ஹிந்து பெண்பாடசாலை, கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரசுவாமி தேவஸ்தான ஸ்ரீமங்கள விலாச நூல்நிலையம், ஆக்கூர் பாரதி சங்கம், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்கம், சென்னை ஸ்ரீ குகாநந்த மண்டல், சைவப்பிரகாச வித்தியாசாலை தேவகோட்டை, தியசபிக்கல்லாட்ஜ் கள்ளக்குறிச்சி, ராமகிருஷ்ண மிஷன் மாணவர் விடுதி மைலாப்பூர், வந்தவாசி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் சங்கம், மெய்கண்டார் கழகம் காஞ்சிபுரம், தம்பிரான் தோழர் தமிழ்ச் சங்கம் திருவாரூர், சைவாசாரிய சங்கம் திருவாரூர், குறுக்கை ஆஸ்திக சங்கம், காசி பாரததர்ம மகாமண்டல், சென்னை வேதப்பரவசன மந்திரம் முதலிய பற்பல சங்கங்களிலிருந்தும் வந்தனுபசாரப் பத்திரங்களும், வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன.

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள், செட்டிநாடு டாக்டர் இராஜா சர். அண்ணமலை செட்டியார், சர். P. T. இராஜன் Bar-at-law, ரெட்டயம்பாடி ஜமீன்தார் A. L. V. R. P. பெத்தபெருமாள் செட்டியார், கலாக்ஷேத்திர ருக்மினிதேவி அருண்டேல், திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் (ரிட்டயர்டு ஜில்லா ஜட்ஜ்) வடபாதிமங்கலம் இராவ்பகதூர் V. S. தியாகராஜ முதலியார் M. A., சீகாழி S. சுப்பராய முதலியார், தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தலைவர் V. நாடிமுத்துப் பிள்ளை, பூண்டி வீரய்யா வாண்டையார், தேவகோட்டை O. Rm. M. Sp. Sv. M. மெய்யப்ப செட்டியார், சென்னை இராவ்பகதூர் P. சம்பந்த முதலியார் B. A., இராஜபாளையம் P. A. C. இராமசாமி ராஜா, கும்பகோணம் "காவேரி" ஆசிரியர் N. R. இராமானுஜம், கும்பகோணம் "யதார்த்தவசனி" ஆசிரியர், T. V. கோவிந்தசாமி பிள்ளை, சென்னை சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி M. பாலசுப்பிரமணிய முதலியார் B. A. B. L., பம்பாய் M. R. ஜம்புநாதன், கும்பகோணம் S. சுந்தரேசஞ் செட்டியார் B. A. L. T., சென்னை "கலைமகள்" ஆசிரியர் K. V. ஜகந்நாதன், பெங்களூர் வித்யா பூஷணம் V. S. சஞ்சீவிராவ், திருச்சி நாட்டாண்மைக் கழகத் தலைவர் B. வெங்கடாசலம் பிள்ளை B. A. B. L., M. L. A., சென்னை S. முத்தையா முதலியார் C. I. E., அனந்தபூர் A. கொண்டப்பாகாரு B. A., B. L., தேவாரமணி, இசையரசு M. M. தண்டபாணி தேசிகர், ஆற்காடு V. அண்ணமலை முதலியார், V. C. வெள்ளிங்கிரி கவுண்டர், அண்ணமலைநகர் கா. சுப்பிரமணிய பிள்ளை M. A, M. L., வித்துவான் G. சுப்பிரமணிய பிள்ளை B. A., B. L., சென்னை இராவ்பகதூர் V. S. செங்கல்வராய பிள்ளை, இராவ்சாகிப் டாக்டர் B. V. நாராயணசாமி நாயுடு M. A., PH. D, B. Com., Bar-at-Law, S. நாகராஜய்யர் B. A., B. L., பிக்ஷாண்டார் கோயில் இராவ்சாகிப் இராஜகோபால் பிள்ளை, கவியரசு கோவைகிழார் இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., சென்னை இராவ்சாகிப் S. R. ரெங்கனுதன், T. K. சிதம்பரநாத முதலியார் B. A., B. L., இராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளை B. A., B. L., சென்னை

K. இராமனுதஞ் செட்டியார் B. A., B. L., குண்டூர் இராவ்பகதூர் K. அரங்கசாமி முதலியார், ஆதிலக்ஷிமி அம்மாள், கடலங்குடி பண்டிட் நடேச சாஸ்திரிகள், வேதாரணியம் A. வேதரத்தினம் பிள்ளை, காரைக்கால் ஹாஜி மூனு தம்பி மரைக்காயர், திருவாங்கூர் Hon'ble Chief Justice திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர், புதுக்கோட்டை இராவ்பகதூர் T. V. கிருஷ்ணசாமி அய்யர், கும்பகோணம் R. கந்தசாமி மூப்பனர் B. A., B. L., திருவையாறு B. N. K. சர்மா M. A., திருவாரூர் "நவஇந்தியா" ஆசிரியர் T. S. தியாகராஜ ஞானியார், காரைக்கால் Madam V. தோமஸ் அருள், இராஜபாளையம் இராவ்பகதூர் R. V. இராமசுந்தரம் பிள்ளை Dr. P. சுப்பராயன் (குமாரமங்கலம் ஜமீன்தார்), இராவ்பகதூர் Dr. T. S. திருமூர்த்தி B. A., M. B. & C. M, பழனி J. M. சோமசுந்தரம் பிள்ளை B. A., B. L., தேவகோட்டை குமார ஜமீன்தார் AL. AR. காளைராஜா செட்டியார், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள், சீகாழி சதாசிவ முதலியார், சென்னை V. P. நாராயண நம்பியார் B. A., B. L., சென்னை K. S. ஜெயராமய்யர் B. A., B. L, அம்பாசமுத்திரம் சிவஞானம் பிள்ளை B. A, B. L., போன்ற பல பெருமக்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம், தலைவரவர்கள், கொண்டாட்டவிழாக் குழுவினர் அடங்கிய புகைப்படமொன்று பிடிக்கப்பட்டது. பிறகு கொண்டாட்ட வளைவும், ஆதீன நூல்நிலையக் கட்டிடங்களும் தலைவரவர்களால் திறந்து வைக்கப்பட்டன. நூல் நிலைய அமைப்பைப் பார்த்துப் பெருமிதங் கொண்டதோடு பல அரிய நூல்கள் இருப்பதைக்கண்டு தலைவரவர்கள் மகிழ்ச்சி கூறினர்கள். வந்திருந்தோர்க்கு விருந்தளிக்கப்பட்டதும் திருவாங்கூர் சமஸ்தான நடனகலா வல்லபர் திரு. கோபிநாத் கோஷ்டியார் நடனத்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள்

6—9—43 திங்கட்கிழமை

புலவர்தினம்

காலை 10-மணிக்குக் கூட்டம் ஆரம்பமாயிற்று. இன்றைய தலைவர் சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத் தலைவர் திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை M. A., B. L., அவர்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடியார் கூட்டங்களுடன் எழுந்தருளியிருந்தார்கள். ஓதுவாமூர்த்திகளாலும், ஆதீன தேவாரப் பாடசாலை மாணவர்களாலும், திருவிடைமருதூர் தேவார ஆசிரியர் வித்துவான் மு. நடராஜ தேசிகர் அவர்களாலும், சிதம்பரம் தேவார ஆசிரியர் இராமலிங்க ஓதுவார் அவர்களாலும், காஞ்சிபுரம் விநாயக முதலியார் அவர்களாலும் திருமுறை ஓதப்பட்டது. கொண்டாட்டவிழாக் குழுவின் அமைப்பாளரும், மாயூரம் நகராண்மைக்

கழகத் தலைவருமாகிய திரு. C. கனகசபைச் செட்டியார் அவர்கள் கொண்டாட்ட விழாக் குழுவினரின் சார்பாகத் தலைவரவர்களுக்கு வரவேற்புரை படித்து வழங்கினார்கள்.

பின்னர், தலைவரவர்கள் முகவுரையில் ஆதீனங்களிலிருக்கின்ற குருமகாசந்நிதானங்களின் அருளுக்கு நம்மவர்கள் இலக்குடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பதனையும், அவ்வாறே குருமகாசந்நிதானங்களும் மக்களிடத்து எல்லாவகையிலும் அன்புடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பதனையும், அத்துறையில் நமது மகாசந்நிதானம் அவர்கள் முன்னணியில் நின்று நம்மால் கொண்டாடப் பெறும் செவ்விவாய்ந்திருக்கின்றார்க ளென்பதையும் நன்கு எடுத்துக்கூறி, கோவை சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியாரவர்களால் எழுதப்பெற்று, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கருணைச் செயல்கள் பலவற்றுள் ஒன்றின் வடிவமாக விளங்கும் **திருநாவுக்கரசு சுவாமிகள் புராண விரிவுரையை** அரங்கேற்றும்படிக் கேட்டுக்கொண்டார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம் அருட்டிருநீறு பெற்று சிவக்கவிமணியவர்கள் விரிவுரை நுட்பங்கள் சிலவற்றையும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வெளியீட்டுப் பணிக்குச் செய்த பேருபகாரச் செயல்களையும் எடுத்து விளக்கினார்கள். பின்னர், சென்னை சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்களும், காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் செயலாளர் திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., அவர்களும் பின்பற்றிப் பேசினார்கள். காலை நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்றது.

பிற்பகல் 4-மணிக்கு அவை தொடங்கிற்று. புலவர்பெருமக்கள் சுமார் முப்பதின்மர் வாழ்த்துப்பாடல்களை மகாசந்நிதானத்தின் திருவடிகட்கு உரிமையாக்கிப் பணிந்து திருநீறுபெற்றுக்கொண்டனர். தலைவரவர்கள் கீழ்க்கண்ட புலவர் பெருமக்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் சிறப்புரைகள் மொழிந்து அவர்களை ஆதீனப் புலவர் குழாத்தில் சேர்த்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சிறப்புக்கள் வழங்கப்போவதையும் குறித்தார்கள்.

அவ்வாறே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்,

1. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B. A., L. T,
   கணித ஆசிரியர், பச்சையப்பன் உயர்தரப்பள்ளி, காஞ்சிபுரம்.

2 வித்துவான், ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
  சித்தாந்த போதகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

3 வித்துவான், இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள்,
  விரிவுரையாளர், அரசர் கல்லூரி, திருவையாறு.

4 வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
  தமிழாசிரியர், நாட்டாண்மைக்கழக உயர்தரப்பள்ளி, திருவாரூர்,

5 வித்துவான், வை. மு. சண்முகதேசிகர் அவர்கள்,
தமிழாசிரியர், தேசிய உயர்தரப்பள்ளி, நாகை,

6 வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
ஆராய்ச்சியாளர், சென்னைப் பல்கலைக்கழகம்,

7 வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், நகராண்கழக உயர்தரப்பள்ளி, சென்னை,

என்ற ஏழு அறிஞர்களுக்கும் **தருமையாதீனத் தமிழ்ப் புலவர்** என்ற பட்டமும், இசையரசு, தேவாரமணி M. M. தண்டபாணி தேசிகரவர்களுக்குத் **"தருமை யாதீன இசைப் புலவர்"** என்ற பட்டமும் அளித்து அவ்வவர்கள் பெயர்கள் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கங்களும் வழங்கி வாழ்த்தியருளினர்கள்.

பத்தாண்டாட்சி விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றிபெற்ற மாயூரம் நகரத்துப் பள்ளி மாணவ மாணவிகளனைவருக்கும் சிறந்த பல பரிசுகள் வழங்கி னர்கள். தலைவரவர்களின் உயரிய முடிவுரைக்குப் பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நி தானம் அவர்களின் ஆசியுரையை ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் படித்தார்கள்.

இரவு 9-மணிக்குக் கோகிலகான இசைவாணி **M. S. சுப்புலட்சுமியின்** இசையரங்கு நிகழ்ந்தது. இயல் இசை விருந்துகளும், உணவுவிருந்தும் நுகர்ந்த அனைவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் பெருங்கருணைத் திறத்தை நினைந்து வியந்து பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

மூன்றும்நாள்

7—9—43 செவ்வாய்க்கிழமை

மாகேசுவரபூசையும் பட்டணப்பிரவேசமும்

வழக்கப்படி காலை 10-மணிக்கு அவை தொடங்கிற்று. இன்றைய தலைவர் மாயவரம் நகராண்மைக் கழகத் தலைவர் **திரு. C. கனகசபைச் செட்டியார் அவர்கள்.** தமிழ்வேத பாராயணம் நடைபெற்றது. வரவேற்புரை வாசித்து அளிக்கப்பெற்றது. தலைவரவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருஞ்செயல் களைப் பாராட்டிப் பேசினர்கள்.

பின் பழநி வேதசிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் காசிவாசி சிவஸ்ரீ **ஈசானசிவாசாரியாரவர்கட்குச் "சைவசித்தாந்த சரபம்" என்னும் பட்டம்** அளிக்க ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருவுள்ளங்கொண்டிருப்பதைப் பற்றியும், சிவாசாரியாரவர்களது சீரிய குணநலங்களைப்பற்றியும் முதனாள் பட்டம் பெற்ற தருமையாதீனத் தமிழ்ப்புலவர் எழுவரும் முறையே எடுத்து மொழிந்தார் கள். அதன் சார்பாகவே சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியா ரவர்களும், தாம்பரம் திரு. பூ. சமரபுரி முதலியாரவர்களும், வேதாரண்யம்

பிரதோஷமடத்ததிபர் திருவாளர் சுப்பையா பட்டாரகரவர்களும், தேவ கோட்டை பாலகவி திரு. வே. இராமநாதஞ் செட்டியாரவர்களும் சிவாசாரியா ரவர்களின் தகுதிப்பாட்டினையெடுத்து விளக்கிக் கூறினர்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிவாசாரியார் அவர்களுக்குப் பொன் னுடை சாத்திச் "சைவசித்தாந்த சரபம்" என்னும் பட்டம் வழங்கி, அச்சிறப்புப் பெயர் பொறிக்கப்பெற்ற பட்டயத்தையும் அளித்து, ஆசி கூறியருளினர்கள். சிவாசாரியர் அவர்கள் தம்முடைய நன்றியைத் தெரிவிக்குமுறையில், சைவ சித் தாந்த சமயத்தின் உயர்வும் சாத்திரக் கருத்துக்களும் பற்றி ஒருசில கூறி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் நற்றொண்டையும் சீரியகுணநலங்களையும் பாராட்டிப் பேசினர்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்குத் திருவாரூர் இலக்கணவிளக்கப் பரம்பரை வித்துவான், சோம இராமலிங்க தேசிகர் அவர்கள் வாழ்த்துப்பா வாசித்தளித்து தம் தந்தையார் எழுதிய பதினேழாம் நூற்றாண்டுப் புலவர்கள் என்னும் தமிழ்நூல் இரண்டாவது பதிப்பினை இவ்விழாவின் நினைவாகத் தமிழுல கத்திற்குக் கொடுப்பதாகக்கூறி, வெளியிட்ட முதல் பிரதியைச் சந்நிதானமவர் களிடம் சமர்ப்பித்தார்கள்.

தலைவர் அவர்களின் ஆழ்ந்த கருத்துக்களமைந்த முடிவுரைக்குப்பின், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆசியை ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் கூறினர்கள்.

தலைவரவர்கட்கும் மற்றுமுள்ளார் அனைவர்க்கும் மாயவரம் வழக்கறிஞரும் கொண்டாட்டவிழாக் காரியக்குழுவின் உறுப்பினருமான ஸ்ரீ வைத்தினதய்யர் B. A., B. L., அவர்கள் வந்தனோபசாரம் கூறக் காலைநிகழ்ச்சி முடிவுற்றது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அடியார் கூட்டங்களுடன் புலவர் கூட்டங் களும், ஏனைய பெருமக்களும் உடனிருக்க மாகேசுவரபூசை கொண்டார்கள்.

மாலை 6-மணிக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களை ஆதீனப்புலவர் குழாங்கள் சூழ புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர் தருமை ஆதீன இசைப் புலவர் இசையரசு தேவாரமணி M. M. தண்டபாணி தேசிகரவர்களால் இசை யரங்கு நிகழ்த்தப்பெற்றது.

முடிவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் செம்பொன்னர்கோயில் கோவிந்தசாமி, தட்சிணமூர்த்தி ஆகிய இருவருக்கும் "தருமையாதீன நாதசுர வித்துவான்" என்னும் சிறப்புப்பெயர் வழங்கிப் பொற்பதக்கங்களும் அளித் தருளினர்கள்.

இரவு 8-மணிக்கு ஸ்ரீமதி S. D. சுப்புலட்சுமி கோஷ்டியாரின் நாட்டிய அரங்கு நடைபெற்றது.

11-மணிக்குத் திருக்கூட்டத்தடியார்களும், ஆதீனப்புலவர்குழாங்களும், பேரன்பர்களும் நெருங்கிவர யானைகள், நாட்டியக்குதிரைகள், எடுபிடிகள் முன்

சென்று அழகுசெய்ய, வாத்தியங்கள்பல முழங்க ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சிவிகையில் ஆரோகணித்துப் பட்டணப்பிரவேசம் வந்தார்கள். அதன் முடிவில் அடியார்கள் பூசைகொள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஞானக்கொலு வீற்றிருந்து அருட்பிரசாதம் வழங்கினுர்கள். அக்காட்சியைத் தரிசித்தோர் யாவரும் கண்களாற் பெறுபயனை இன்று பெற்றோம் என்று மகிழ்ச்சியுற்றனர்.

நான்காம்நாள்

8—9—43 புதன்கிழமை

ஆவணிமூலத் திருநாள் — மாணவர் தினம்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் தருமபுர ஆதீனத்தின் குருமகாசந்நிதானங்களுக்கு ஆத்மார்த்த பூசாமூர்த்தி. அப்பெருமானுக்கு உகந்தநாள் ஆவணிமூல நன்னாளாகும். அந்நன்னாளில் ஆண்டுகள் தோறும் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அவ்வழக்கம்போல் இன்றும் பூசைமடம் வாழை, தோரணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பெற்றது. மகாசந்நிதானமவர்கள் ஆனிடத்தைந்து, ஐயமுதம், நறுநெய், பால், தயிர், தேன், இளநீர் முதலாகிய எல்லாவற்றாலும் முறையே ஒன்றன்பின் ஒன்றாகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து பூசித்து ஆராதித்து ஆங்குக் குழுமியிருந்தார் அனைவர்க்கும் விபூதிப்பிரசாதம் வழங்கியருளினுர்கள்.

இறுதியாக, தேவகோட்டை "பாலகவி" வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்களுக்குத் தருமையாதீன வித்துவான் என்னும் சிறப்புப்பெயர் வழங்கி, பொற்பதக்கமும் அளித்தருளினுர்கள். செட்டியாரவர்கள்,

"தாவியங் சயற்க ணம்மை காதல்செய் சொக்கநாதன்
ஆவணி மூல நாளில் அடியனேற் கருள லாகத்
தாவில்சீர்த் தருமை மேய சண்முக சாமி யெற்குக்
கோவியல் வித்துவான்பேர் கொடுத்தல்முன் தவத்தால் மன்னே."

என்னும் பாமலர் சூட்டிப்பணிந்தனர்.

மாலை 4-மணிக்கு மாயவரம் நகரத்திலுள்ள பள்ளிக்கூட மாணவ மாணவிகட்குத் தின்பண்டங்களும், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுருவமைந்த பதக்கங்களும் (Medalians) வழங்கப்பட்டன. ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் திருமுன்னர் இரவு 7-மணிக்குப் பூசைமடம் தொட்டிக்கட்டு மண்டபத்தில் தருமை ஆதீன சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசானசிவாசாரியாரவர்கள் தலைமையில், சென்னை ஸ்ரீமதி காஞ்சனமாலை அம்மையாரவர்கள் **மணிவாசகர் வரலாறு** பற்றியும், தருமையாதீன வித்துவான் பாலகவி இராமநாதன் செட்டியாரவர்கள் **திருவாசகச் சிறப்புப்** பற்றியும், சென்னை தாம்பரம் திரு. பூ. சமரபுரி முதலியாரவர்கள் **மணிவாசகரும் சைவ வாழ்க்கையும்** பற்றியும், தருமையாதீன சைவப்

பிரசாரகர் திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள் திருக்கோவையார் பற்றியும் சொற்பொழிவாற்றினுர்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருநாரையூர்ச் சிவாலயத்தில் மெய்கண்ட சந்தானுசாரியர்களையும், சேக்கிழார் சுவாமிகளையும் பிரதிட்டை செய்ததைப்பற்றியும் அதுசம்பந்தமாகத் தாமியற்றிய சித்திரக் கவியைப்பற்றியும் ஆடூர் திரு. ஆ. சு. கணபதிப் பிள்ளையவர்கள் விளக்கிப் பேசினுர்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் அருட்பணியில் ஒன்ருக விளங்கும் தருமபுர ஆதீன வேதசிவாகம, தேவாரப் பாடசாலை மாணவர்களின் ஆண்டுத் தேர்தலில் மிகத்தேர்ச்சிபெற்ற மாணவர்களை மேன்மேலும் கல்வியில் ஊக்குதற் பொருட்டுச் சில பரிசுகள் வழங்கவும் திருவுளங்கொண்டார்கள். அவ்வாறே ஸ்ரீ மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கி, அம்மாணவர்களைப் பாராட்டி, அடுத்த ஆண்டில் மாணவர்கள் யாவரும் பரிசுபெறுதற்குரிய தகுதி பெற்றிருத்தல் வேண்டுமெனக் கூறி ஆசியுரை அருளினுர்கள்.

பரிசுபெற்ற மாணவர்களும், பரிசுகளும்

தேவாரப் பாடசாலை

முதற் பரிசு.	S. தண்டபாணி	அப்பர்தேவாரம்
2-வது ,,	G. முருகையன்	நீதிநெறிவிளக்கம்
3-வது ,,	S. குருசாமி	சித்தாந்தசைவவினுவிடை

வேதசிவாகம பாடசாலை

முதற் பரிசு.	M. ராஜம்	அப்பர்தேவாரம்
2-வது ,,	V. சந்திரசேகரன்	நீதிநெறிவிளக்கம்

பின் தலைவரவர்கள் திருநாரையூருக்குத் தாம் சென்று முற்கூறிய பிரதிட்டைகளைக் கண்டுகளித்ததைப் பற்றிப் பேசி, சிறந்த ஆராய்ச்சியமைந்த முடிவுரை கூற, கூட்டம் 10-மணிக்கு முடிவுற்றது. இறுதியாக அண்ணுமலைப் பல்கலைக்கழக சங்கீதபூஷணம் T. P. A. முத்துக்குமாரசாமி நல்வீணை வாசித்து இசையின்பத்தை ஊட்டினுர்.

ஐந்தாம் நாள்

9—9—43 வியாழக்கிழமை

ஆதித்திராவிடர் தினம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் பத்தாண்டாட்சிவிழாக் கொண்டாட்டத்தில் எல்லோரும் கலந்து இன்புறவேண்டும் என்று கருதப்பட்டது. அதில் பல வருணத்தாரும் கலந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளவே சந்தர்ப்பமளிக்கப்பட்டது. ஆனுல் ஆதித்திராவிடமக்கள் திரளான பொதுக்கூட்டங்களில்

அவ்வளவாகக் கலந்து கொள்வதில்லை. அதற்காகக் கொண்டாட்டத்தில் அவர்களுக்கெனத் தனியாகவே இந்நாள் திட்டம் செய்யப்பட்டது.

காலையிலிருந்தே ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், முதியோருமாக ஆயிரக்கணக்கான மக்கள் வந்துகூடினர். வந்தவர்களுக்கெல்லாம் எண்ணெய் முழுக்குக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் தலைமூழ்கி வெண்ணீறு பூசி நின்றது ஒரு சிவக்கோலக் காட்சியாகவே யிருந்தது.

பிற்பகல் மடாலயமுகப்பில் பந்திபந்தியாக அமரச்செய்து அறுசுவை உணவும் அளிக்கப்பட்டது. முடிவில் சந்தனம் வழங்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் தங்களுடைய எல்லையற்ற மகிழ்ச்சியில் மூழ்கியவர்களாய் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் எளிவந்து தங்களுக்குக் காட்சிநல்கி ஆசிதந்த பெருமையைக் கொண்டாடிச் சென்றனர்.

பத்தாண்டு ஆட்சி தருமம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்ட தருமமாக மாயூரத்தில் பெண்கள் குழந்தைகள் மருத்துவசாலை ஒன்று அமைக்கத் திருவுளங் கொண்டார்கள். அவ்வாறே மாயூரநாதசுவாமி வீதி வடகிழக்கு மூலையில் பெண்கள் குழந்தைகள் சம்ரக்ஷணசாலையும், மருத்துவசாலையும் சேர்ந்த மருத்துவவிடுதி கட்டுதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

மாயூரம் இராஜன்தோட்டம் அவ்வூர் நகரசபைக்குச் சொந்தமானது. அதில் மருத்துவ விடுதிக்கு வேண்டிய நிலத்தை நகரசபையினர் கொடுத்துதவினர். அதனை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஏற்றருளி அஸ்திவாரம் போடத் திட்டஞ் செய்தனர். அஸ்திவாரக்கல் நாட்டச் சென்னை மகிமைதங்கிய **கவர்னர் சர் ஆஸ்வால்டு ஜேம்ஸ் ஹோப்துரை** அவர்களை அழைத்திருந்தார்கள். அதற்கான ஏற்பாடுகள் மிகவிரைவாக மாயூரத்தில் நடந்துவந்தன. அதனைக் காண்பதற்கு மகாசந்நிதானம் அவர்கள் ஒருமுறை 28—11—43-ல் இராஜன் தோட்டத்திற்கு எழுந்தருளினர்கள். இச்செய்தியினை அறிந்த நகரமக்கள் தங்கள் தங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்னும் பேரவாவுடனும் உற்சாகத்துடனும் மாலைகளோடு வந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்து வணங்கினர்.

ஏற்பாடுகள் திட்டமானவுடன் அஸ்திவாரக்கல் அமைக்கும் விழாவினை 29—11—43-ல் கொண்டாடுவது என்று உறுதி செய்யப்பட்டது. அதற்காக இராஜன் தோட்டத்தில் ஒரு பெரிய கொட்டகை அமைத்து அலங்காரஞ் செய்யப்பட்டது. ஆங்காங்கும் வளைவுகள் நிறுத்தி மகரதோரணங்களும் கட்டப்பட்டன. கவர்னர்துரையவர்கள் குறித்தநாளில் மடாலயத்திற்கு வந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்து இன்னுரையாட விரும்பினர். ஆதலின் தருமபுரம் மீண்டும் ஒருமுறை அலங்கரிக்கப்பெற்றுப் புதுவ்டிவுடன் துரை அவர்களை வரவேற்கத் தயாராயிற்று. எங்கும் தோரணங்கள்; எங்கும் ஆலவட்டங்கள்; ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மகாசந்நிதான ஞாபகார்த்த வளைவிலிருந்து முறையாக எடுபிடி

கள்; மடாலயத்திலும் ஆங்காங்கும் அணி அணியாக வாகனாதிகளும், திருவாபரணங் களும், கண்காட்சிப் பொருள்களும்.

மாலை 5-10 மணிக்குக் கவர்னர்துரையவர்கள் மடாலயத்திற்கு விஜயம் செய்தனர். அப்பர்நிலைய வாயிலிலேயே ஒடுக்கம் ஸ்ரீ சிவகுருநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள் மாலைபோட்டு வரவேற்றார்கள். துரையவர்கள் நூல்நிலை யத்தையும், மடாலயத்தின் பலபாகங்களையும் பார்வையிட்டனர். பேருவகை கொண்டனர். இறுதியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்னர் அழைத் செல்லப்பட்டார். ஒருவரோடொருவர் அளவளாவினார்கள். மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை சாத்திச் சிறப்புறச் செய்தார்கள். கவர்னர் துரையின் விஜயத்தைக் குறித்துத் துருப்புகள் வசதிநிதிக்கு ரூ. 5000 அளித்து ஆசி அருளினார்கள். மடாலய அலுவலாளர்களின் சார்பில் மேற்சொன்ன நிதிக்கு ரூ. 500 அளிக்கப் பெற்றது. அப்பொழுது கவர்னர்துரை உள்பட அரசியல் பெருமக்களுடன் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தை நிழற்படம் பிடிக்கப்பட்டது.

பின்னர் கவர்னர்துரையவர்கள் மாயூரம் இராஜன் தோட்டத்திற்கு விஜயம் செய்தனர். அங்கு மகாசந்நிதானத்தின் பிரதிநிதியாக வந்திருந்த ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் வரவேற்றனர். மகாசந்நிதானத்தின் வரவேற்புரையை வாசித்து ஒருவெள்ளிப் பேழையில் வைத்து அளித்தனர். துரையவர்கள் அதற்குப் பதிலளிக்கையில், "நான் சற்று முன்பு தருமையாதீன மடாலயத்திற்குச் சென் றிருந்தேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைக் கண்டு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் பேச்சு எனக்கு இனிமை தந்தது. மகாசந்நிதானம் அவர்கள் செய்து வரும் பணிகளைப்பற்றிப் பலவாறாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். யுத்த முயற்சி களில் அவர்கள் அவ்வப்போதும் பெருநிதியளித்து உதவியிருக்கின்றார்கள். அது வும் எனக்குத் தெரியும். இன்று இங்கே அளிக்கவிருக்கும் பெருத்த தருமமும் அவர்களது கொடைவகையில் குறிப்பிடத் தக்கதொன்று. சென்னை பெரிய மாகாணம். அதற்கு இதுபோன்ற நிலையங்கள் பல தேவை. அவைகளைக் கட்டித் தர பலரும் முன்வரவேண்டும். நான் இந்த மாகாண நிர்வாகத்தில் இருக்கும் வரை இத்தகைய முயற்சிகளுக்கு உதவியளிக்க முற்படுவேன்" என்று பல வாறாகப் பேசினர். அஸ்திவாரக்கல் அமைத்தனர்.

பின்னர் துரையவர்கள் மற்ற இடங்களில் நடக்கவிருக்கும் பிற கூட்டங் களுக்கு ஏகினர்.

பிரசங்கங்கள்



பத்தாண்டு விழா:

முதல் நாள் : 5—9—1943

தலைவர்:

சச்சிவோத்தம *Sir C. P.* இராமஸ்வாமி அய்யர் K. C. S. I., K. C. I. E., LL. D.

திருவாங்கூர் சமஸ்தானதிவான்.

முதனாள்

5—9—43 ஞாயிற்றுக்கிழமை

விழாத்தொடக்கம்

In inviting Sachivothama Sir C. P. Ramaswamy Aiyar B. A., B. L., K C. I. E., K. C. S I., LL. D., Dewan of Trawancore to open the Decennial Celebrations Sri. K. S. Ganesa Aiyyer, B. A., B. L., District and Sessions Judge, East Tanjore, Negapatam, said:—

The occasion is unique in the annals of this ancient Mutt. The number of famous and pre-historic temples throughout this vast sub-continent of India is in myriads. Those among them which are managed or helped with Kattalai aradhanas by the Dharmapuram Adhinam are quite a legion. Everywhere it touches it adorns; it has added to its own prestige and usefulness during the regime of ten golden years of the present incumbent **Sri-la-Sri Shunmuka Desika Gnanasambanda Swamigal.** His vast erudition, his unassuming and accessible personality, his eagerness to devote the wealth and wisdom of the mutt to the service of religion and religious institutions, and Vedic and Vedantic culture, to relief of disease and distress is a remarkable dedication to God, Crown, and Country.

A more worthy President who in his own person, has cultivated, combined and expressed all these great virtues than the **Sachivothama** could not have been thought of, and could scarcely be found. As he has himself stated elsewhere, his association with this Mutt has been long and intimated, and has helped in times of stress and strain with his sage counsels and his rare gifts of forensic skill. As we all know, his brilliant life has been a dedication too as Sir Tagore has put it in the Gitanjali, this harp of life, which he takes up like the master musician swells up the music to tuneless strings tuned to the notes of "**For Ever**" service.

May the Almighty bless the Mutt and set it to an ever widening sphere of service and renown and to fulfil itself.

பத்தாண்டாட்சிக் கொண்டாட்டவிழா அமைப்பாளர், நெடும்பலம் இராவ்பகதூர், திரு. N. R. **சாமியப்ப முதலியாரவர்கள்** பேசியதன் சுருக்கம்.

எனக்கு முன்னேற்றமாக உள்ளது எதனையும் ஆதரிக்கும் தன்மை உண்டு. ஆனால் முன்னேற்றம் அடையாதவைகளுக்கு ஆதரவில்லையா எனின் அவற்றிலும் முன்னேற்றமடையக் கூடியவற்றிற்கும் பாடுபட முன்வருவேன். நமது சைவமடங்கள் காலத்திற்கேற்ற முறையில் முன்னேற வேண்டுமென்பது என் பேரவா. அதற்கு இத்தருமையாதீனம் முன்னணியில் நிற்பதைக்காண

என்னுள்ளம் பூரிக்கின்றது. மகாசந்நிதானமவர்கள் இளந்தோற்ற முடையவர்களாயினும் ஒருமுறை பார்த்துப் பேசியதுமே பிறர் மனதில் பதியவைக்கும் பேராற்றலுடையவர்கள். அதாவது ஆங்கிலத்தில் impressive personality என்று சொல்லலாம். அவர்கள் தலைமைவகிக்கும் இவ்வாதீனத்தில் அவர்களுடைய நுண்ணறிவாற்றலாலே பற்பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துவருவதைக் கண்டுமிருக்கின்றேன். பலர் வாயிலாகக் கேட்டுமிருக்கிறேன். நெருங்கிப்பேச வாய்ப்பு வந்த காலங்களில் அதனைப்பற்றிப் பேசி மகிழ்ந்துமிருக்கின்றேன். அதுதான் என்னை இக் கொண்டாட்டத்தைத் திட்டம் செய்யத் தூண்டியது. இப்பெரியார் ஆட்சிபெற்ற ஒரு சிறு கால அளவிலே இவ்வளவு சீர்திருத்தங்களும் முற்போக்கும் காட்டியிருக்கிறார்க ளென்றால் இன்னும் இவர்கள் காலத்தில் என்னென்ன பெருஞ் செயல்களை நாம் காணக்கூடுமோ? இவர்களுக்கு இப்பத்தாண்டல்ல, இருபதாண்டு, முப்பதாண்டு என்று பல பத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுதல் கூடும். அப்படியே நடைபெறுதலும் வேண்டும். வேறுவழிகளில் நாம் பலரும் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருந்தாலும், ஒரே இடத்தில் கூடி ஒரேகாலத்தில் ஒரேமுகமாகப் பாராட்டுதல் சிறப்பு மிக்குடைத்தாகும். அந் நந் நோக்கத்தைக் கொண்டே இச்சபை கூட்டப்பட்டுள்ளது. நீங்களும் அந்த நோக்கங் கொண்டே கலந்துகொண் டிருக்கின்றீர்கள். இவர்கள் செய்து வந்திருக்கும் அரும்பணிகளைப்பற்றி எனக்குமுன் பேசிய பெரியார் கூறிவிட்டார்கள். வாழ்த்துப்பத்திரங்களிலும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. சமூக முன்னேற்றம் சமய முன்னேற்றத்தோடு பிணைப்புள்ளது. அறிவு முதிர முதிரத்தான் சமயச்சார்பு உண்டாகும். சமய அறிவின் சேமிப்பே நமது மடங்களாகும். ஆகவே அதன் வளர்ச்சி யெல்லாம் சமூக வளர்ச்சியாகும்; கலைவளர்ச்சியாகும்; நாகரிக வளர்ச்சியும் அதுவே. ஆகையால் நமது மடங்களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் நாம் ஆதரவுகாட்டவேண்டும். பாடுபடவேண்டும்.

மகாசந்நிதானத்திற்கு என் வணக்கங்கள்.

சென்னை இந்துசமய அறநிலையக் கழகத்தலைவர் திவான்பகதூர் திரு. T. M. **நாராயணசாமிப் பிள்ளை** B. A., B. L., **அவர்கள்** பேசியதன் சுருக்கம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கும், தலைவரவர்களுக்கும் எனது வணக்கம் உரியதாகுக. தலைவர் உயர்திரு. Sir. C. P. இராமஸ்வாமி அய்யரவர்கள் இந்தப் பெருவிழாவில் கலந்து கொள்வது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. அவர் நமது ஆதீனத்தில் மிகவும் அபிமானமுள்ளவர். எனக்கு இரண்டொரு எண்ணங்கள் தோன்றுகின்றன. அவைகளை நான் இப்பொழுது சொல்லப் போகிறேன். அவைகளை நீங்கள் ஆதரிப்பீர்கள் என்றும் நினைக்கிறேன்.

நமது ஆதீனத் தலைவரவர்கள் செய்திருக்கும் பெரிய வேலைகளைப்பற்றி எல்லோரும் வியந்து பேசியிருக்கின்றார்கள். அது சரியே. நமது சந்நிதானம் அவர்கள் ஓர் காரியத்தை எண்ணித் துணிந்து துணிந்தவாறே முடிக்கவல்லவர். எந்தக் கஷ்டத்தையும் எந்த ஆக்ஷேபணையையும் பொருட்படுத்தமாட்டார்கள்.

ஆனல் நானே அவர்கள் செய்தவைகளைப் புகழப் போவதில்லை; அவர்கள் இனி செய்யப்போவதாயுள்ள வேலைகளைப் பற்றித்தான் புகழப்போகின்றேன். இத் தருணத்தில் பெரிய புராணத்தின் பாட்டொன்று என் ஞாபகத்திற்கு வருகின்றது. அது திருஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்றபோது அவரை எதிர்கொள்ளச் சென்ற மந்திரியாரான குலச்சிறையார் சொல்லியதைக் குறிக்கும். அஃது,

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனல் எற்றைக்குந் திருவரு ளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்"

என்பதாம்.

இதில் சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும் எதிர்காலத்து வரும் சிறப்பையும் ஒன்ருய்க் கண்டதுபோல் விவரித்திருக்கின்ருர். நமது மகாசந்நிதானம் சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தைச் சிறப்பிக்கப் போகின்ருர்கள். பழுதிலாத்திறம் மங்காமல் எப்பொழுதும் பிரகாசிக்கும்படி பல திட்டங்கள் செய்து பரப்பி, எதிர்காலத்தின் சிறப்பை விளங்கச் செய்ய இருக்கின்றனர். பலப் பல எண்ணங்கள் அவ்விஷயத்தில் அவர்களுக்குத் தோன்றி வருகின்றன. முதலாவது இப்பொழுது ஆதீனத்திற்கும் சமூகத்திற்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு இல்லை. மடம் தன்னை வேருகப் பாவிக்கின்றது. சமூகமும் மடத்தை அப்புறமாகப் பாவிக்கின்றது. இரண்டுக்கும் மிக நெருங்கிய உறவு இருக்க வேண்டும். உயிருக்கும், உடலுக்கும் உள்ள நேர்மையைப் போல் இருக்கவேண்டும். ஆனல் உண்மையில் அவை அவ்வாருக இல்லை. எதிர்காலத்தில் சுவாமிகள் அவர்கள் இவ்விரண்டுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, ஒன்றை மற்றொன்று தழுவி வாழும்படிச் செய்ய நினைத்திருக்கின்ருர்கள். அவர்கள் யோசித்து வரும் திட்டங்களில் ஒன்று என்னவெனில், தம்பிரான்களுக்கு ஒரு உயர்தரப் பள்ளிக்கூடம் அல்லது உயர்தரக் கல்விக்கழகம் ஏற்படுத்துவது. நான் திருச்சியில் உள்ளவன். நான் படித்துவந்த செயின்ட் ஜோசப் காலேஜ் என் ஞாபகத்திற்கு வருகின்றது. அதனோடு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் ஞாபகமும் வருகின்றது. இந்த இரு மடங்களிலும் நினைத்த மாத்திரத்தில் ஒருவர் சந்நியாசியாக வர முடியாது. பல வருஷங்களாக (5 அல்லது 7 வருஷங்கள்) முறையாகப் பொதுக் கல்வியிலும் சிறப்பாகச் சமயக் கல்வியிலும் தேர்ச்சி பெற்று, முறையாக யாத்திரை செய்து, பிறகு நல்ல நெறிகளில் கட்டுப்பட்டுத் தகுதியான பிறகு தான் அந்தந்த மடத்தில் சந்நியாசிகளாக ஏற்றுக்கொள்ளப் படுவார்கள். அப்படிக் கற்று, கேட்டு, உணர்ந்து, வளர்ந்த சந்நியாசிகள் தாங்கள் கற்றதையும், கேட்டதையும் சமூகத்தினிடையே போய்ப் பரவச் செய்வர். இப்பொழுது தம்பிரான்களுக்கென்று ஒருவிதக் கல்லூரியும் இல்லை. அப்படி ஒரு கல்லூரி ஏற்படுத்தி அந்தக் கல்லூரியில் தேர்ச்சிபெற்று ஒழுங்கின் மேன்மையினல் அங்கீகரிக்கப் பட்டவர்களே சந்நியாசிகளாக வேண்டும் என்று ஏற்பட்டிருந்தால் அது எதிர்காலத்தின் சிறப்பை ஓங்கச் செய்யும். சேர்பவர்கள் நல்ல குலத்தவர்களாயும், நல்ல உணர்ச்சி உள்ளவர்களாயும், சைவ மக்களை நல்ல வழியில் கொண்டு செலுத்தச் சக்தி பெற்றவர்களாயும் இருக்கவேண்டும். இது ஒன்று.

மற்றொன்று என்னவெனில் ஏதாவது ஒரு தாலுகாவிலாவது ஆரம்பப் படிப்பைப் பாதிரிமார்களைப் போலவே நமது சைவ சமயத்தையும், ஒழுக்கத்தையும் மாணவமாணவிகளுக்குச் சிறு வயது முதற்கொண்டே புகட்டி வருவதாகும். பாதிரிமார்கள் கல்வி விஷயமாகச் செய்து வந்திருக்கும் தொண்டை நினைக்கும் போது மிகவும் ஆச்சரியமாக யிருக்கிறது. ஆகவே இரண்டாவது திட்டம் கல்வி இலாகாவைக் கைப்பற்றுவது.

மூன்றாவது என்னவெனில் மடத்துத் தம்பிரான்கள் சமூகத்திற்குச் சேவை செய்வது. தங்கள் தங்கள் ஆத்ம பூசையை மட்டும் கவனித்து மடத்திலேயே இருக்காமல் ஜனங்களுக்கு வேண்டிய உதவிகளைச் சந்நியாசிகள் செய்துவர வேண்டும். இராமகிருஷ்ண மடத்தாரும், கிருஸ்தவப் பாதிரிமார்களும் செய்துவரும் தொண்டு போற்றத்தக்கது. அதைப்போலவே நமது மடமும் பின்பற்றவேண்டும்.

நமது ஊர்களில் ஏற்படும் கஷ்டங்களுக்கு மற்ற இடங்களிலிருந்து வந்து உதவி செய்கிறார்கள். ஏன் நமது தம்பிரான்கள் சென்று அக்கஷ்டங்களை நிவர்த்திக்கக் கூடாது. ஏன் அவர்கள் சென்று சமூகத்திற்கு உதவி செய்யக் கூடாது. இவ்விதம் செய்து வந்தால் அவர்களை யாவரும் போற்றிக் கொண்டாடுவர். இவைபோன்ற திட்டங்களைச் சுவாமிகள் தீர ஆலோசித்துச் செய்யும்படி வேண்டுவதுடன் எல்லோருக்கும் என் வணக்கத்தையுஞ் செலுத்துகிறேன்.

நீண்டகாலமாக இந்த மடத்தின் தலைவர்களைப்பற்றி நெருங்கித் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நமது மடங்களில் ஒன்று முற்போக்கு உடையதாக இருப்பதும், அதனைப் பலர் பாராட்டுஞ் சீர்மை யடைந்திருப்பதும் எங்கள் இந்துசமய அறநிலையக் கழகத்திற்கும் பெருமை கொடுப்பதாகும். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சி மலரை அவர்களுக்குச் சமர்ப்பிக்கும் கடமையை எனக்கு அளித்திருக்கின்றீர்கள். அதில் இவ்வாதீன மடாலய, தேவஸ்தான நிர்வாகங்கள் எவ்வெவ்வழிகளில் சீர்பெற நடைபெற்றிருக்கின்றன என்பது பற்றியும், மடத்தின் சரித்திரங்களைப் பற்றியும், அதன் சித்தாந்தக் கொள்கையைப் பற்றியும் பரக்க எழுதப்படிக்கின்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சமயப்பணி, கலைப்பணி, பொதுப்பணிகளில் ஊக்கங்காட்டி உழைத்து வருவது பற்றிய விபரங்களை அதில் நீங்கள் காணலாம். நான் இப்பெரியாரிடம் பலமுறையும் கலந்து பேசும் வாய்ப்புப்பெற்றேன். அவ்வப்போதும் அவர்கள் ஆழ்ந்த கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் இன்றும் என் ஞாபகத்தில் இருக்கின்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பாராட்ட முன்வந்த இம்மாபெருஞ் சபையினருக்கு நான் அதிகம் எடுத்துக்கூறத் தேவையில்லை. எல்லாம் பலரும் அறிந்ததொன்றே.

உங்கள் சார்பில் இந்தப் பத்தாண்டு ஆட்சி மலரை நான் மகாசந்நிதானமவர்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கு வாசித்தளித்த வரவேற்புப் பத்திரங்கள், வாழ்த்துச் செய்திகள் முதலியவற்றிற்கு அருளிய உரைச் சுருக்கம்.

அன்புமிக்க அவைத்தலைவர்களே! அன்பர்களே !!

இவ்வாதீன சரித்திரத்தில் இத்தகைய விழா நடைபெறுவது நூதனமாகும். நமது 10-வது ஆண்டு ஆட்சிப் பூர்த்தியைக் கொண்டாட விரும்பித் தக்கார் முன்வந்து குழுவொன் றமைத்து இத்துணைச் சிறப்பாக நடத்தியதற்கு ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருவருள் பாலிப்பாராக! திருவிழாக்குழுவினர் மாயூரம் நகராண்மைக் கழகத்தினர், காமகோடி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், மற்றும் பல அன்பர்கள், சபையினர்கள் அன்புடன் பத்திரங்கள் வாசித்தளித்ததற்கு இறைவன்றிருவருள் நிறைவதாக !!

இஃது திருவருள் நிறைந்த பீடம். அருட்பெருங் குரவர்கள் அமர்ந்தருளிய பெருமையுடைத்து. அன்னார் செய்தருளிய செயற்கரிய செயல்கள் பல. அத் தகைய ஸ்தாபனத்தில் ஸ்ரீ சொக்கநாதன் திருவருளால் அமர்ந்த நாம் கண்ணுதற் பெருமான் கருணைகாட்டிய வண்ணம் இயன்ற பணிகளை இயற்றிவருகின்றோம். அதனை அன்பர்கள் அனைவரும் பாராட்டிப் போற்றியது ஊக்கந்தருவதாகும்.

பத்திரங்களில் கண்ட கோரிக்கைகள் எல்லாம் உயர்வானதே. மாயூரம் நகராண்மைக் கழகத்தினரின் பத்திரத்தில் கண்டது முக்கியமாகக் கவனிக்கக் கூடியது. திருவருட் டுணைகொண்டு காலக்கிரமத்தில் நிறைவேறக் கூடுமென எண்ணுகின்றனம்.

ஈண்டுக் குழுமியிருக்கும் அன்பர்கள் யாவரும் கண்ணுதற் கருணை வெள் ளத்தில் திளைப்பாராக! ஆழ்க தீயது!! எலாம் அரன்நாமமே சூழ்க!!! வையகம் துயர் தீர்கவே !!!!

Speech of the President Sachivothama, Dr. Sir C. P. Ramaswamy Aiyar, B.A., B.L., K.C.S.I., K.C.I.E., Ll.D., (Dewan of Travancore State)

Your Holiness and Friends!

It is with genuine pleasure that I participate in this auspicious function, designed, as has been so felicitously expressed, not only to express the gratitude of the recipients of the numerous benefits conferred on this locality, on the institutions connected with this Mutt and on like institutions, by His Holiness the present occupant of this Adhinam, but also to anticipate, to foresee what might be achieved by institutions of this kind properly ruled, adequately governed, and appropriately regulated by men with right impulses, with virtuous thoughts and lofty ideals. This great assemblage, I take it, has come together with these two objects in view; namely

to look over the past, to see the contrast that has been wrought during the ten years of the tenure of office of the present occupant of this great historic and ancient Adhinam and also to try and put into His Holiness' mind the thanks of those present here that it might be given to him under the dispensation of providence to revive that root idea of the Mutt which started five hundred or six hundred years ago. Let me add my chorus of gratification and genuine pleasure at what I have seen to-day.

It was my privilege thirteen years ago to come to this Adhinam to visit the then Headship of the Mutt on whose behalf I had conducted a litigation in the Mayavaram Sub-Court. I have seen this place then, and I see it to-day. I need say no more than this, that an organising mind and a capable hand have been at work. The place cannot easily be recognised. But from what I have heard to-day, from the unanimous tributes that have been paid by many persons, it is not merely the walls that have been raised, it is not merely the structures that have been built, it is not merely the edifices that have been reared, that mean and involve all that has been done in the last ten years. It is, I take it, the spirit the attitude, the out-look towards the duties of the head of the Mutt that has been responsible for these tributes, and I regard the latter as much more significant, important, and appropriate for us to consider to-day than the outer embellishments and improvements. But we would be wanting in our duty, if we did not pay a tribute and I join my tribute to those that have been paid.

It is perhaps not wholly inappropriate that I should take part in a function of this kind. My father was professionally connected with another Mutt not far from here. I was professionally connected with this very Mutt and my father's father was connected with a third Mutt in an official capacity (Cheers). Thus, therefore, I have some connection with the Mutt of Tiruppanandal, Tiruvaduthurai and Dharmapuram. Not only that, but for many years I have been an anxious student of our scriptures, not only our Sanskrit scriptures, but of our Tamil scriptures, and I know the meaning and the significance of the origin of institutions of this kind. Time was 500, 600, 700 years ago, when strange faiths, new cults, new ways and philosophies invaded this country of ours, and threatend to immerse under the flood tide of those new fangled ideas the ancient thoughts, imaginings and dreams and aspirations of our religion. These Mutts were originated as centres, let us remember this, centres first of learning, centres where the old primordial pristine learning was kept intact and the torch of learning was lit never to be extinguished. The Mutts were therefore first and primarily centres of learning, centres, no doubt, of religious learning, but religious or sectarian learning cannot be adequately assimilated, cannot form part of that texture of our mental and moral make-up unless a background of sufficient secular learning was also imparted. These Mutts therefore had the idea of imparting not only religious but secular learning. Having imparted this learning, what did the Mutts proceed and determined to do? They intended to employ those who had received that learning, the blessing of that knowledge to spread that knowledge throughout the country. A previous speaker has spoken of missionary enterprise, referring in particular to the enterprise of Christian missionaries. For many

years now I have known of the efforts and enterprises of our friends, the Christian missionaries. You and I may not always see eye to eye with the doctrine of the tenets of that faith, although I myself believe that there is really very little difference between one faith and another, intrinsic or sectional. But is there not something uplifting, something arresting, also something humiliating in the spectacle of men giving up everything, coming 5 thousand or 6 thousand miles away and trying to impart to the people of this country the gospel which they conceive to be true gospel? In the country from which I come, Travancore, the efforts of the missionaries have been continuous, it has really gone on for a thousand years in that country because many years ago, I think in 500 A. D. as a matter of fact, when persecuted and sent away from Asia Minor, the Christians came to Travancore and the Travancore Maharajas gave equal rights and opportunities to the religious dignitaries and gave them liberty to preach the truth which they thought to be true, realising as they wisely did, that truth needs no hindrance, truth wants no obstacles and handicaps. Truth will prevail if truth is truth and it will not prevail if it is alloyed. It is not a question of religion but the question of practice on which I shall dwell for a moment. Go anywhere you like, in the blazing sun, in the monsoon rains, in the country side and in town, we see a salvation army lecturer trying to get some kind of assemblage and unfettered by the sun, unaffected by ridicule, he preaches the gospel as he sees before himself. All glory to them.

Now let us consider another aspect. It was the Swami Vivekananda who stated on a memorable occasion, that as the times change so changes the mode of service to the Divine. There was a time when the Holy Men, when the Saints of our country withdrew from the world, retreated into the innermost recesses of their own conscience, sought Samathi - Salvation - which they considered to be appurtenant to the human spirit. That time was. A new period has come when, on account of the threatening of things, with the fusion of learning and the impact of new and destructive forces through out the world, a new ideal has to take its place not by withdrawing from the world but by working in the world, not by going to the citadel and immuring yourself in fortress, but coming from the citadel into the market place and the forum. Therefore the function of religion, the function of the holy-man and the minister of religion is now facilely different from what it was in the past. It has ceased to be withdrawal. It has ceased to be static. It has become dynamic, vital, and full of import. So have I come here to try not only to congratulate the occcupant of this Mutt but also to point out to all our teachers what I believe is our duty and theirs. Why do I say our duty? The strength of a teacher is very rarely the teacher himself. The strength of the leader is mainly his followers. The strength of a cause is in the protagonists and indeed sometimes in the antagonists of that cause. Unless you believe in your cause, sufficiently to make yourself a nuisance, sufficienly to attract, sufficiently to keep the reaction which follows in the universe in the course of action, you shall have not served the Maker.

What have we done? What shall we do? My point is - and I shall make it abundantly clear on an occasion like this, that our religious institutions, our temples, our Mutts, whether they be the Mutts of Sringeri or Kamakoti or the Mutts of

Dharmapuram, Tiruppanandal or Tiruvaduthurai, would be failing in their ancient duties, would be untrue to the great trusts that have devolved upon them if they did not insist on a system by which the truth as they see as truth is not propagated or spread amongst us so that it might be as Lord Buddha commanded his followers to say "Let no man starve, let no man be thirsty of the doctrine without the doctrine being brought to him when he is thirsty and hungry." I trust that these ideals will be fulfilled by heads of our Mutts and Institutions so that it might be said that if our faith is true and I regard it as ineffably - eternally true, the meaning, the import and the significance, the fundamentals of that faith are brought home to everybody in the street, in the market place amidst struggle and strain.

On this occasion let me say how close had been the inter-connection of culture and culture, of sect and sect, of country and country. I come to-day from the service of a great Maharaja, the descendant of 2000 years' rule dedicated to the Divine, the Ruler calling himself Padmanabhadasa - Servant of Padmanabha. The same spirit that animated the first Maharaja who dedicated his country to Sri Padmanabha has continued from that day to this. They are imbued not merely with the Sanskrit culture, but they realised the value to their subjects of other cultures and faiths. There are endowments in the Travancore State, to the Dharmapuram * and Tiruvaduthurai mutts of lands and buildings made by the ancient monarchs and handed over to these mutts for the purpose of proclaiming and preaching the truths of Saiva Siddhanta. Some of the buildings are in ruins. Services in many of them are not conducted to-day. The old teachings are not imparted, and the Travancore Government has had to say, that the Government had nothing to do with these mutts, unless the old spirit was revived, and unless there was a band of scholars and teachers in each of those mutts who atleast knew the Thevaram and Tiruvachakam. I am saying this because, in the Cheranad, there has been a lively consciousness of the value in the past of these mutts, of their possibilities in the future; and it is my fervent hope and prayer that these mutts should endeavour - and our gracious Highness will co-operate in that endeavour - so that in the Tamil districts of that country (and remember, my friends, that one and a half millions of the people of Travancore are Tamilians) the followers of the Saiva Siddhanta who are asking for instruction and light, may fet them. What should be our duty? The Travancore Govenment have made it a rule that nobody who has not passed through the Tantra class and through religious schools which are maintained by Government should perform service in any temple in Travancore. But this is only with regard to the Sanskritic side of it. Why should not similar service be done by those who are the custodians of the ancient Tamil culture?

I pause, and speaking as I am doing to a cultured and far-seeing representative of this historic mutt, may I be considered fulfilling my true function or will this

* This question was taken up with the State authorities. Some properties were named by them as belonging to this mutt. Enquiry showed that they are not within living memory in the possession or enjoyment of this mutt. Due intimation of this has been given to the State authorities. To the knowledge of the mutt no lands or buildings charged with service are now in the enjoyment of this mutt. If anything comes to light, it is well known, that necessary action will be taken.

audience consider me impertinent and out of place if I, for a moment, refer to a topic which, in the language of the Daily newspaper might well be regarded as a "burning topic", namely the function and the jurisdiction of the respective limits and limitations of Sanskritic and Tamilian culture? I hold the view emphatically and strongly that there is no essential disparity, no divergence of outlook or idea, no contrariety in programme between the one and the other Language; what does it mean? I heard one of the speakers recite a stanza in the Periapuranam. In that great composition, in ineffable language, in absolutely pure Tamil, is given expression the same idea which Tayumanavar in Tamil and in Sanskrit has expressed. And I have to-day, even though it might tire you, resolved to point out how one of our great Saints, one of our national Saints, Saint Tayumanavar thought of the Tamil stream and the Sanskrit stream which in confluence contribute to the national stream of South India. These streams do not run parallel, one river melts into the other. Will you, my friends, allow me to read to you verses by the same person spoken almost in Sanskrit and entirely in Tamil? Those of you who are students of Tayumanavar have noted these great lines:

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி புரந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள புட்பமிசை வீற்றி ருக்கு
நாரணி மனோதீத நாயகி குணாதீத நாதாந்த சக்தி யென்றுன்
னாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே நானுச்ச ரிக்கவசமோ
வாரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ வகிலாண்ட கோடியீன்ற
வன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசு மானந்த ரூபமயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ் வளமருவு தேவையரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை வளர்காத லிப்பெணுமையே.

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள் பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயமப் படரெனுந் திமிரமணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு காயசித் திகளுமுண்டு
கரையுண்ட கண்டர்பா லம்மைநின் றருளிற் கருத்தொன்று முண்டாகுமே
னதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர ஞானவா னந்தவொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே நானெனு மகந்தைதீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே மதுசூத னன்றங்கையே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை வளர்காத லிப்பெணுமையே.

Now, one is practically Sanskrit. The one is all Tamil. But did Tayumanavar hesitate before using the Sanskrit language? Did he have any hesitation in using Tamil when the Tamil spirit was visible? I submit that the history of our literature, the history of our religion, is the history, not of divergences, not of distinctions, not of disparities, not of hostilities, not of rivalries, but of a uniform and eternal synthesis. We have been hospitable to foreigners, whether it was the Parsee, whether it was the Christian or Muhammedan, they came here. Other culture, blended with ours and combined and conjoint culture glorified India. So it was in religion. Who is Buddha to-day, but an Avatar of Vishnu? So it has gone on. Shall we to-day draw artificial boundaries and erect rivalries? All the world over, the effect of racial rivalry, effect of international hatred are so patent and prominent

before us. I pray to God that there shall be no distinction between Tamilian and Sanskritic culture (whether in the domain of art or of literature or of science) even assuming that in art or literature or science there may be difference of opinion. What difference is there for those who follow the same faith, whether they worship Siva or Vishnu?

Those who sung in that strain will find no difference between creed and creed. Why should we suffer and labour under these politics of diversity? I hope and pray that the gospel of unity which was never more needed than to-day will emerge from this and similar conferences. I hope and trust that enlightened men like the head of the mutt and others following and emulating his example will spread the light of true religion, fearless and in abundance, so that it might be said that the message that India has got to preach to the world - and it is a divine and much needed message - is delivered through many mouths in many ways, in diverse conditions and manners but so as to vindicate the position of India. India has never wanted to be a territorial leader, never wanted to grasp domain. It wanted to conquer by the spirit and in that conquest the mutts and temples have a place in the national Life.

இரண்டாம் நாள்

6—9—44 திங்கட்கிழமை

அப்பர் புராண விரிவுரை அரங்கேற்றம்

சென்னை இந்துசமய அறநிலையக் கழகத்தலைவர் திவான்பகதூர் **திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை (M. A., B. L.,) அவர்கள்** நிகழ்த்திய தலைமைப் பேருரை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கு வணக்கங்கள்

பெரிய புராணம் நமது சைவசாத்திரங்களுக்கு இலக்கியமாக அமைந்தது. அதிலும் அப்பமூர்த்திகளின் புராணம் தொண்டர் பெருமானின் சீர்சிறந்த சரித்திரம். மனமுருகித் தொண்டாற்றி, பெருமானின் சிறப்புக்களைப் பாடி, பரவசமடைந்தவர்கள். வாழ்க்கையோ மிக எளியது. அங்கிலத்தில் "Simple and Noble" என்று சொல்லுகின்றேமே, அதை ஒக்க ஆடையோ கந்தை, பணியோ உழவாரப்பணி, தியானமோ பெருமானின் திருநாமங்கள், வேடமோ சிவ வேடம். திருவேடத்தின் இலக்கியமாக, திருத்தொண்டின் இலக்கியமாக வந்த தவஞான முனிவர். இப்பெருமான் ஆரவாரமின்றித் தலங்கள்தோறும் சென்றுசென்று பணிபுரிந்து வந்தவர்கள். மனது பக்தியால் இளகியது. உறுதியால் வீரம் மிக்கது.

அப்பர் பெருமானின் சரிதத்தை இயற்றிய சேக்கிழார்பெருமான் மரபில் தோன்றிய பெரியார் ஒருவரே அதற்குப் பேருரை வகுக்கத் தகுதிமிக்கவர்கள். அப்பெரியார் அப்பமூர்த்திகளைப்போன்று இறைவன்பால் ஆழ்ந்த அன்புமிக்க



பத்தாண்டு விழா:

இரண்டாம் நாள் : 6—9—1943

தலைவர்:

திவான்பகதூர், திரு. *T. M.* நாராயணசாமிப் பிள்ளை M. A., B. L.,

இந்துமத மாண்யக் கழகத் தலைவர்.

வர்கள். பெரியபுராணத்தின் பொருளாழத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து உணர்பவர்கள். அவர்கள் அவற்றினைச் சுவைத்துச் சுவைத்து எடுத்துத்தந்த சாரப்பொருளே இப்பேருரையாகும்.

மடங்கள் என்றாலே பலரும் பலவிதமாக நினைத்துப்பேசி வருகின்றனர். மடத்துத்தலைவர்கள் தங்களுடைய பொறுப்புணர்ந்து காலத்திற்கேற்ப ஒன்றும் செய்து வரவில்லை யென்ற குறையும் கூறப்படுகின்றது. மடத்து அடியார்களும் தாம்சார்ந்த மடத்தின் கொள்கைக்கேற்ப, காலத்திற்கேற்ப பணிகள் புரிய முன் வரவில்லையென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதமாகப் பேசிப்பேசி மடங்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே அகன்றதொரு அகழ் உண்டாகியிருக்கின்றது.

நமது திருமடங்கள் முற்காலங்களில் ஆத்மார்த்தமாக நிறுவியனவாம். அவைகளில் தலைமைவகித்த பெரியோர்கள் ஆத்மார்த்தத்திற்காகப் பாடுபட்டு உழைத்து வந்தனர். வெளியுலக வளர்ச்சியில் அவர்கள் அவ்வளவாக அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. ஆச்ரமங்களை ஊருக்குத் தொலைவில் தனிமையில் அமைத்து, ஆன்ம ஆராய்ச்சியில் தனித்து நின்று, நிட்டைகூடியிருந்து வந்தனர். ஆனால் அவர்களுடைய ஆன்மவளர்ச்சி சிவஞான வளர்ச்சியாக முதிர முதிர, அடியார்கள் - பக்குவிகள் அவர்கள்பால் வந்தடைந்தனர். உபதேசம் பெற்றனர். சாத்திரஞான அறிவு ஊட்டப்பெற்றனர். அவரவர் தகுதிக்கேற்ப வேண்டுவன பெற்று அவ்வாச்ரமங்களை நிலைத்த ஸ்தாபனங்களாக, மடங்களாக அமைத்து, அதற்கு வழிவழியாக ஞானசாரியர்களைப்பெற்றுப் போற்றினர். அக்காலத்தில் நமது பெரியார்கள் உலகியலை விட்டு விலகவிலக பக்குவான்மாக்கள், அவர்களைச் சென்றுசென்று பற்றின. அப்பெரியார்கள் அவைகளை வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் கடமைவந்தகாலத்து அதைச்செய்துவிடவும் அவர்கள் தவறியதுமில்லை.

நேற்றுத் தலைமைவகித்த பெரியார் கூறியாங்கு காலநிலை மாறிவிட்டது. இப்பொழுது மக்களுக்கு சமய உணர்வு அற்றகாலம். சரியான தலைவன் இல்லாத வெறித்த குதிரை மேடுபள்ளங்களையும் பாராமல் சென்று வீழ்ந்து அவதியுறுதல் போல, இக்காலமக்களும் சமய நெறியினின்றும் பிறழ்ந்து தலைவரில்லாது அல்லலுறுகின்றனர். அவர்களுக்குச் சமய உணர்வைக்கொடுத்துக் கைதூக்கிவிட வேண்டியதாக இருக்கின்றது. மேலும் பரசமய வாதிகள் தந்திரமாக மக்களிடம் இதமாகப்பேசி, காலத்திற்கேற்பத் தொண்டாற்றி, சமயமாற்றஞ்செய்து, கணக்கெடுத்து மகிழ்கின்றனர். அதனால் துன்பமுறும் மக்கள் பலர்.

ஆகவே இவ்விதம் அலமரும் மக்களுக்கு நமது சமயம் இன்னிது, அதன் கொள்கைகள் இவ்விவை, அவற்றைக் காலத்திற்கேற்ப இவ்விவ்விதங்களில் மேற்கொண்டொழுகுதல்வேண்டும் என்று எடுத்துச்சொல்ல சான்ற பெரியோர்கள் மிகமிக அவசியம். நமது மடங்களிலுள்ள பெரியோர்களே அதன் பொறுப்பேற்று நடத்துந் தகுதிமிக்கார். நமது ஆன்ற பெரியோர்களாகிய நாயன்மார்கள் பஞ்சம் வந்தகாலத்தும், சமயப்பற்றுக் குறைந்தகாலத்தும், மக்கள் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டகாலத்தும் அவ்வப்பொழுதும் திருவருட்டுணைகொண்டு தொண்டுகள் செய்துவரவில்லையா ? சமயவிளக்கம் செய்யவில்லையா ? அவர்களை நமதுமடங்களும்

ஏன் பின்பற்றக்கூடாது? ஆகவே நமது மடத்திலுள்ள பெரியோர்களும் அவ் வழிக்குப் பலவாறாக முன்வந்து உதவவேண்டும். பழங் கொள்கைகளை கொஞ்சம் விட்டுக்கொடுக்கவேண்டும். இவர்கள் மௌனமாக வேலைசெய்துவர இதுகாலமல்ல. இக்காலத்தில் அவைகள் பிரசுரப்படுத்தப் படல்வேண்டும். அப்பொழுதுதான் நம் மக்களுக்கு நமது மடங்கள் செய்யும் வேலைகள் தெரியும். இருபாலாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகும். அவதூறு 'ஒழியும். இதுவே என் தாழ்மை யான எண்ணம். நமது மடங்களில் பிரசாரகர்களை, தொண்டர்களை நியமனம் செய்து வெளியிடங்களுக்கு அனுப்பவேண்டும். நமது அடியார்களுங்கூட அதில் பங்கெடுத்துக்கொள்ளுதல் சிறப்புடைத்தாகும். பெரும் நகரங்களிலும் கிளை மடங்கள் நிறுவவேண்டும். தொண்டாற்ற வேண்டும். காலத்தின் தேவைகளை இவை ஒருவாறாகப் பூர்த்திசெய்யும். இதுவரை நான் பேசியது ஒரு சார்பான மடங் களைப்பற்றி யல்ல. நமதுமடங்கள் எல்லாவற்றையும் பொதுவாகக் குறித்துப் பேசியதேயாகும்.

காலத்திற்கேற்பப் பணிபுரிந்து வருபவைகளில் தலைசிறந்தது நமது தருமையாதீனம். எங்களூரிலுள்ள இதன் பகுதியாகிய மௌனமடத்தில் எனக்கு நெருங்கிய பழக்கம் உண்டு. அங்கு வந்திருக்கும் பெரியார்களோடு கலந்துபேச எனக்கு அவ்வப்பொழுதும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அருட்பெரியா ராகிய சாரமா முனிவரின் மடம் அது. இடம் நோக்கியே இவ்வாதீனத்தில் பிணைக்கப்பட்டுத் தலைசிறந்த பகுதிகளில் ஒன்றாகத்திகழ்வது. ஆகவே இம்மடத் தின் பெரியோர்கள் பலரைப்பற்றியும் தெரிந்துகொள்ளும்பேறு எனக்கு உண்டு. அதன் தலைவர்களாக எழுந்தருளி இங்கே நமக்குக் காட்சியளிக்கும் குருமூர்த்தி களின் நன்முயற்சியாலேயே இவ்வாதீனத்தின் பெருமை வளர்ந்து வருகின்றது. அவர்கள் கலைவளர்ச்சிகருதிச் செய்துவரும் பணிகள் பலப்பல. புத்தகங்கள் வெளி யிட்டு வழங்கிவருவதும், வெளியிட உதவியளிப்பதும், அதற்காக அச்சகம் ஒன்று திருமடத்தில் நிறுவியிருப்பதுவுமே கண்கூடு. சமயப்பணிக்கோ மகாநாடுகளைக் கூட்டுவித்தும், பிரசாரகர்களைத் திட்டம் செய்து வேண்டும் வெளியிடங்களுக் கனுப்பியும் பலவாறாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்களுடைய செயல்களை இம்மாதிரியான பொதுக்கூட்டங்களில் பலரும் பாராட்டிப் பேச வாய்ப்புத்தந்ததும் காலத்திற்கேற்பவே நலம்பெற அமைந்திருக்கின்றது. பொதுமக்கள் பாராட்டும் தனிச்சிறப்பையும் மதிப்பையும் பெற்றிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மடத்தில் செய்துவரும் தொண்டுகளில் ஒரு பகுதியேயாகும். பொதுப்பணியாகப் பலவும் செய்திருப்பது இவ்வூரை முன்காலத்திலும் இக்காலத்திலும் வந்து பார்க்கும் பலரும் கண்டுகொள்ளக்கூடும். இவ்விதம் எல்லாவழிகளிலும் பணிபுரிந்துவரும் பெரியார், அறிவில் அதிலும் அருள்நூல் ஆராய்ச்சியில் மிக்கார் ஒருவரைக் கொண்டு அப்பர் பெருமான் புராணத்திற்கு விரிவுரை இயற்றச் செய்து அதனை வெளியிட்டு உதவியது பேருபகாரமாகும். அதுவும் காலத்திகேற்ற ஆராய்ச்சி நூலாக அமைந்திருத்தல் மிகப்பொருத்தமாக இருக்கின்றது. இதனைப் பின்பற்றி மற்ற மடங்களும் முன்வந்து பணிபுரியின் நம்சமயமும், மொழியும் எவ்வளவு முன்னேறக்கூடும்! சமூகம் எவ்வளவு பயனடையக்கூடும்!

இவ்வளவு பெருமைமிக்க அப்பேருரையைப் புலவர் பெருமக்களும் அறிவில் மிக்கார்களும் குழுமியிருக்கும் இப்பேரவையில் குருமூர்த்திகளின் முன்பாக

அரங்கேறச் செய்திருப்பது எவ்வளவு பொருத்த முடைத்து. எல்லாம் இனிதே நிறைவேற இறைவனை வழுத்துகின்றேன்.

என்னை இன்று தலைமைவகிக்கத் திட்டம் செய்து எனக்கு வரவேற்பும் படித்துக் கொடுத்த கொண்டாட்டகுழுவினருக்கு என் வணக்கங்களும் நன்றியு முரித்தாகுக.

கோவை சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் (B. A.) அவர்களின் அரங்கேற்றுரை.

மனத்தகத்தான் றலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தா னிமையவர்தஞ் சிரத்தின் மேலா
னேழண்டத் தப்பாலா னிப்பாற் செம்பொன்
புனத்தகத்தா னறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையா னெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே.

பெரியோர்களே !

பெரிய புராணத்தினுள் திருநாவுக்கரசு நாயனர் புராணத்திற்கு அடியேன் எழுதிய உரையைத் தமது ஆதீனத்தின்சார்பாக அச்சிடும்படிக்கும், இப் பெரும்புலவர் கூட்டத்தைக் கூட்டி அதனை அரங்கேற்றும்படிக்கும் திருவுளங் கொண்டு பணித்தருளிய மகாசந்நிதானங்களின் திருவடிகளுக்கு அடியேனது நன்றியும், நமஸ்காரமும் முதற்கண் உரியதாகுக. இப்பேரவையிற் கூடியுள்ள பெரியோர் எல்லாருக்கும் என்வணக்கம் உரியது.

நூல் அரங்கேற்றம் என்பது இந்நாளிற்காண்டற்கரிய பொருளாயிற்று. அச்சுக்கூடங்கள் மலிந்தன. யாரும் எதையும் அச்சிட்டு வெளியிடும் உரிமையும் மலிந்தது. நாடோறும் வாரந்தோறும் மாதந்தோறும் மேலும் வெளிவரும் நூல் களைக் கணக்கிடவும் முடியுமோ? அவையெல்லாம் அரங்கேறுகின்றனவா? அவற்றுள் "மாந்தர் மனக்கோட்டம், தீர்க்கு நூன்மாண்பு" என்றபடி நூலிலக் கணம் பொருந்துவன எத்துணை? புகழேந்திப்புலவர் பாடிய நளவெண்பாவும், கம்பர் பாடிய இராமாயணமும், சிவஞானமுனிவர் இயற்றிய காஞ்சிப்புராணமும் இவைபோன்ற நூல்களும் புலவர்கூட்டங்களின் முன் அரங்கேற்றப்பட்டன. என்றும், அப்போது அவற்றைப் புலவர் சங்கைசெய்தும் ஏற்றும் கொண்டனர் என்றும் சரிதவாயிலாக அறிகின்றோம். ஏன்? பெரிய புராணமும் பேரடியராகிய அநபாயச்சோழர் பெருமானது பேரவையின்முன் ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் அரங்கேற்றப் பட்டதென்றும் அறிகின்றோமன்றோ? அடியேன் எழுதிய சிறிய இந்தவுரை ஞானபீடமாகிய திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் திருமுன்பு கூட்டப்பட்ட பெரும்புலவர் கூட்டமாகிய

இப்பேரவையின் முன்பு ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் சந்நிதியில் அரங்கேற்றப் பெறுவது அடியேன் பெற்ற பெரும்பேறுகும். இம் மகாநாட்டுக்கு வரும் வழியில் அடியேனிடம் "ஐயா, நூல் அரங்கேற்றுவதென்றால் என்ன? புராணமுழுமையும் விரித்துத் தொடர்ந்து உரை செய்யப் போகின்றீர்களா?" என்று சில அன்பர்கள் கேட்டார்கள். அதற்கு அடியேன், "வந்துபாருங்கள்; அரங்கேற்றம் என்ற சொல்லுக்குப் பொருள் காண்பீர்கள். பெரும்புலவர்கூட்டம் கூடும். மகாசந்நிதானங்கள் எழுந்தருளி ஆசிமொழி யருளுவார்கள். புராணத்தினுள் சிலபாட்டுக்கள் வாசித்துப் பொருள் கூறுவேன்" என்று சொன்னேன். இங்கு நான் காண்பன இவையே.

உரை எழுதவும், மகாசந்நிதானங்களின் அருளாசிபெறவும் நேர்ந்த முன்னிகழ்ச்சிகளைப்பற்றிச் சில பேசுதல் இங்கு அவசியமாகின்றது. பெரியபுராண உரை என்ற இப்பெருமுயற்சியில் சிறுபிள்ளை விளையாட்டாகத் துணிந்து தொடங்கியபின் ஒன்றிரண்டாண்டுகளில் என்பிழையை உணர்ந்து விழித்துப் பெரியோர் உதவியை நாடினேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களின் அருளாதரவைநாடித் திருநள்ளாற்றில் கண்டு தரிசித்து விண்ணப்பித்தேன். பொதுவகையாலன்றித் தனிப்பட்ட முறையில் ஏதேனும் ஒரு நாயனர் புராணத்தை ஆதீனத்தில் வெளியிடலாமென்று உத்தரவாயிற்று. அவ்வுத்தரவின் பொருளாழத்தை உணர்ந்து ஊக்கமடைந்தேன். திருநாவுக்கரசர் புராணம் தொடங்குமுன் மீண்டும் விண்ணப்பித்தேன்? நாயனர் துறவறத்தார் ஆதலின் ஆதீனவெளியீட்டுக்கு அவர்புராணமே ஏற்றதென்று மகாசந்நிதானங்களின் திருவுளங்கொண்டருளியது எனக்குக் "காலத்தினற்செய்த நன்றி" யாயிற்று. இவ்வாறு திருவருள் காட்டவில்லையாயின் வேண்டுவன எல்லாம் பஞ்சமாயிருக்கும் இந்நாளில் இவ்வெளியீட்டின் முயற்சி நின்றுபோயிருக்கும் என்பதை நான் மனமார்ந்த நன்றியுடன் எடுத்துச் சொல்ல விழைகின்றேன்.

இனி உரையின் ஒன்றிரண்டு பொருள்களைப் பற்றிமட்டும் சிலவார்த்தைகள் சொல்லி என்பேச்சை நிறைவாக்குவேன். இப் புராணம் ஆறு சஞ்சிகைகளில் முடிவாயுள்ளது. அவற்றுள் ஐந்து சஞ்சிகைகள் முன்னமே வெளியாகி அன்பர்கள் கையில் சேர்க்கப்பட்டன. அவற்றை அன்பர்கள் எல்லாரும் பார்வையிட்டுள்ளார்களாதலின், அவற்றுள் உரைக்கப்பெற்ற உரையைப்பற்றி இங்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இறுதிப் பகுதியில் உள்ள பாட்டுக்களின் உரைதான் இப்போது அன்பர்கள் முன்பு வருகின்றது.

திருநாவுக்கரசரைப் பெருமுனிவராகக்கண்டு ஆசிரியர் நமக்குக் காட்டுகின்றார். "உன்னுடன் பிறந்தான் முன்னமே முனியாகி யெமையடையத் தவமுயன்றான்" என்று சிவபெருமான் திலகவதியாருக்குக் கனவில் உணர்த்துகின்றார். முன்னை நிலையில் அரசர் பெருமுனிவராதலின் அத்தன்மையினையே தொடர்ந்துவந்து இப்பிறவியில் விளங்குகின்றார். இதனைத் "திருத்தொண்டினெறி வாழ வருஞானத்தவமுனிவர் வாகீசர்" என்று இப் புராணத்தைத் தொடங்கிய ஆசிரியர் "அப்பரமுனிவன் கடிமலர் மென்பூங்கழல்கள் கைதொழுது" என்று முடித்தும் காட்டியவதனல் நன்கு வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு தலைப்பிலும் நடுவிலும் முடிவிலும் இத்தன்மையாற் கூறியது "கந்தைமிகையாங் கருத்து" டைய

அப்பர் சுவாமிகளது முழுத்துறவாகிய பெருநிலையைக் காட்டுகின்றது. இக்கருத்துப்பற்றியே மகாசந்நிதானங்களும் இப்புராணத்தைத் தமது ஞான ஆதீனத்தின் வெளியீடாக இருக்க மேற்கொண்டருளிற்று என்பது குறிக்கத்தக்கது.

"அருட்பெருகு தனிக்கடலும்" என்ற திருப்பாட்டுச்சிறந்த பல பொருள்களுக் கிருப்பிடமாகிய பொக்கிஷமென்று புலவர்களாற் பாராட்டப்படுவதொன்றாகும். இதனுட் புலவர் பெருமக்கள் பலப்பல நயங்கள் காண்பர். அரசுகளும் பிள்ளையாருமாகிய இரண்டு ஆசாரியர்களும் முதல்முறை கூடிச் சீகாழித் திருக்கோயிலுக்குச் சென்ற செய்தியை ஆசிரியர் மூன்று உவமானங்களால் விளக்குகிறார். அருட்கடல் அன்புக்கடல் என்றும், சைவக்கண் இரண்டு என்றும், அப்பரருள் அம்மையாரருள் என்றும் மூன்று உவமைகள் கூறியது, இவ்வாசாரியர்களின் சந்திப்பு மூன்றுமுறை நிகழ்வதாகக் குறிப்பதாம் குணமுடைய பொருள்களுக்குக் குணங்களை உவமிப்பது ஒரு பெருஞ் சிறப்பாகும். இதனை ஆளுடைய பிள்ளையார் புராணத்துள் "ஞானத்தின் றிருவுரு" என்றபாட்டிற் சிறப்பாகக் காணலாம்.

"நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகிய" என்று திருநாவுக்கரசர் இறைவரது திருவடி நீழலிற் கலந்த நிலையை ஆசிரியர் அறிவித்தல் நம்மாற் சிறப்பாகச் சிந்திக்கப்பாலது. சிவம் என்பது சத்து என்பதனையும், ஞானம் என்பது சித்து என்பதனையும் குறிக்கும். எனவே இங்குக் கூறியது சிவபெருமானது சத்து, ஆனந்தம், சித்து - என்ற சச்சிதானந்தம் என்ற முழுநிறைவாகிய நிலையாம் - ஆனந்தத்தை இடையில்வைத்தது என்னையெனில், சத்தும் சித்தும் ஆனந்தம் விளைத்தற் பொருட்டேயாகலின் என்க. இனி இதன் உருவம் தான் நமது திருக்கோயில்களில் **சோமாஸ்கந்தர்** என்ற சிவமூர்த்தமாக வைத்துத் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. அதனுள் சத்தாகிய சிவத்துக்கும், சித்தாகிய அம்மைக்கும் இடையில் ஆனந்த உருவாகிய கந்தர் நின்று காட்சியளிப்பது காண்க. ஆசிரியர் இதனையே **சிவ - ஆனந்த - ஞான** - வடிவு என்ற முறையில் வைத்துக் காட்டியருளினர். இவ்வாறன்றி சச்சிதானந்தம் என்ற அம்முறையே "கொன்றைவேணியார் தாமும் பாகங்கொண்ட குலக்கொடியும், வென்றி நெடுவேன் மைந்தரும்" என்று சிறுத்தொண்டநாயனர் புராணத்துள் அச்சரித் இயைபு நோக்கிக் கூறுதல்காண்க.

இனி எனது உடல்நிலையினையும் காலச் சுருக்கத்தையும் கருதிச் சிலவார்த்தைகள் மட்டும் சொல்லி என்பேச்சை நிறுத்திக் கொள்வேன்.

இவ்வுரையினுள் அடியேன் கண்டன சிலவும் கேட்டன பலவும் தொகுத்துள்ளேன். அவற்றுட் குற்றம் பலவாகக் குணங்கள் சிலவுமே காணப்படலாம். "இப் பொருட் கென்னுரை சிறிதாயினும் மெய்ப்பொருட் குரியார் கொள்வர் மேன்மையால்" என்று திருவருள்பெற்ற ஆசிரியரே கூறுவாரானல், ஒன்றுக்கும் பற்ருத சிறியேன், கற்றறிந்தான்ற இந்த அவையின்முன் உரைவகுக்க என்ன தகுதியுடையேன்? இதனுள் காணப்படும் குற்றங்களைக்காட்டி என்னைத் திருத்தும் படிக்கும் குணங்களிருப்பின் அவைகொண்டு அடியேனுக்கு ஊக்கமளித்துத்

தேற்றும்படிக்கும் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். சைவவுலகத்துக்கு அடியேன் சம்பளமில்லாத ஒரு சேவகன், மகாசந்நிதானங்களின் திருவுள்ளக் கருணையினால் இப்பகுதி அச்சிட்டு வெளிவந்துள்ளது. இதற்குப் பல்லாயிரம் வெண் பொற்காசுகள் மனமுவந்து செலவிட்டுள்ளது அவர்களது கருணை. இவ்வாறே ஆளுடைய பிள்ளையாரது புராணமும் முடிவுபெறச் சைவவுலகம் துணை செய்யு மானால் அடியேன் ஊழியம் செய்யச் சித்தமாய்இருக்கின்றேன். ஞானசம்பந்தர் இவ்வாதீனத்தின் தலைவராதலின், அவர் புராணத்தையும் வெளியிடுதல் இதற்குத் தகுதியேயாகும்; ஆயினும் அதனை மகாசந்நிதானங்களினிடத்து நான் இப்போது வேண்டிக்கொள்ளமாட்டேன்; ஆனால் சமயமும் அவசியமும் நேர்ந்தபோது அடியேன் விண்ணப்பித்துக்கொண்டால் அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்ற உறுதி அடியேனுக்கு உண்டு (சபையோர்களிடையே கரகோஷம்). இதுபோலவே புராண உரை முழுதும் விரைவில் நிறைவேற வேண்டுமென்பது பல அன்பர் களின் அவா. அடியேனுக்கும் அதனில் அதைவிடப் பேரவா; சிவனருளும் சைவ வுலகத்தின் ஊக்கமான உதவியும் துணை செய்வனவாக. அடியேனையும் அடியே னது சிறிய உரையினையும் பொருட்படுத்திப் பெருமைப்படுத்திய பெரியோர்களுக்கு என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

தலைவர், திவான்பகதூர், திரு. T. M. **நாராயணசாமிப் பிள்ளை M. A., B. L.,** அவர்களின் **முடிவுரை**

எனக்குத் தொண்டு செய்வதில் ஆர்வம் அதிகம். ஆகவே தொண்டர்பெருமா னாகிய அப்பர்பெருமானின் தொண்டுகளைக் கற்றுக்கேட்டு உவப்பேன். அதில் எனக்கு அதிகப்பற்றுண்டு. அப்பெருமான் திருத்தொண்டின் நெறிவழிவந்த ஞானத்தலைவரல்லவா? உண்மை ஞானத்தலைவர்களுக்கு இலக்கியமாக-உதாரண மாக அவதரித்த பெரியாரல்லவா? அப்பெரியார் நின்ற நெறியெலாம் எடுத்து உண்மைக்காதலினாலே விளக்கியருளினார் சேக்கிழார் பெருமான். அதற்கு விரிவுரை தந்த பெரியார் நமதுபக்கலிலேயே இப்பொழுது அமர்ந்திருக்கின்றார். அதனை ஏற்றருளி உலகுக்களிக்கும் குருமகாசந்நிதானமும் நமக்குக்காட்சியளித்து இங்கு எழுந்தருளியுள்ளார்கள். அதன் உயர்வுதெரிந்து அதனை ஏற்றுக்கொண்ட அறிஞர் கூட்டமும் இங்குத் திகழ்கின்றது.

நூல்கள் இறைவன் சந்நிதானங்களிலே அருட்பெரியார்களின் முன்னிலை யிலேயே அரங்கேற்றப்படுவன. அதற்கேற்பவே இங்கும் குருமகாசந்நிதானத்தின் முன்னிலையிலே புலவர் பெருஞ்சபையில் இன்று அரங்கேறியது.

அரங்கேற்றம் மகாசந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்டத்தின் பகுதியாக ஒரு நன்னாளில் அமைந்திருப்பது மிகப்பொருத்தமே. இதுபோன்ற பல பெருநூல்களும் வெளிவருவதையும் நாம் எதிர்பார்க்கலாம்.

மேலும், குருமகாசந்நிதானம் இன்று ஆதீனத்திற்கு ஒரு புலவர் பெரும் படை ஒன்று ஏற்படுத்தி யுள்ளார்கள். பல பெரும் புலவர்களை அதற்குச் சேர்த்துக் கொண்டுள்ளார்கள். அப்பெரும் புலவர்களின் பெருமைகளையும் அறிவாற்றலையும்பற்றிப் பலவிடங்களிலும், நேரிலும், கேள்வியாலும் அறிந்திருக்கின்றேன். அவர்கள் இப்பெருஞ் சிறப்புக்கு உரிமையுள்ளவர்களே. இன்னும் மேலும் பலசிறப்புக்களும் பெற்று அதற்கேற்பத் தொண்டுகள்புரிந்து வருவார்களாக.

திருவாளர் வித்துவான், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சிறிதுகாலம் தொண்டாற்றிப் பின்னர் திருப்பதி கீழ்த்திசைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆசிரியராக விளங்கினர். அவர்களால் எழுதப்பட்ட சிலப்பதிகாரச் சுருக்கம், சீவகசிந்தாமணிச் சுருக்கம் முதலிய உரைநடைநூல்களைப் படித்து மகிழ்ந்திருக்கின்றேன். அவர்களது நுண்மாண் நுழைபுலத்திறனை அவை நமக்கு அறிவிக்கின்றன. அவர்களது அறிவின்திறத்தைக்கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார்கள் தங்கள் கலாசாலைக்குச் சிந்தாந்தபோதகராக நியமனஞ் செய்திருக்கின்றார்கள்.

திருவாளர், க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B. A., L. T., ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சிபெற்றுத் தற்போது காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்தரப் பள்ளியில் கணிதபோதகராக இருக்கின்றார் இவர் ஆங்கிலக்கல்வி பயின்றும் அதன்வழியே சென்றுவிடாது சித்தாந்தசாத்திரங்களையும் நன்குபயின்று பிறர்க்கு விளங்கச் சொல்லும் ஆற்றலும்பெற்றுத் திகழ்கின்றார். மேலும் வடநூல் அறிவும் பெற்றுள்ளார். சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த இலங்கைச் சைவ மகாநாட்டில் தலைமைதாங்கியது இவரது அறிவாற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

திருவாளர் வித்துவான், இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் தமது இளமைமுதற்கொண்டே கல்வித்துறையில் காலங்கழித்துவருபவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இவர் படித்தவர். கவிபாடுவதில் திறம்பெற்றவர். தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தார்கள், திருவையாறு அரசர்கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கும் பதவியை இவருக்கு அளித்துள்ளார்கள். மேலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்து மாணவர்களுக்குப் பரீக்ஷாதிகாரியாகவும் விளங்கினர். தற்காலம் பல கல்லூரிகளில் தமிழாசிரியர்களாக விளங்கும் பல வித்துவான்கள் இவரது மாணவர்களாகவே காணப்படுகின்றனர்.

திருவாளர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க்கல்லூரியில் தமிழ்க்கல்வி பயின்று தேர்ச்சிபெற்றவர். அக்காலம் இவர் இளைஞராயிருந்தபோதிலும், அறிவாற்றலில் மேம்பட்டு விளங்கியதால் அப்போது அதன் தலைவராக விளங்கிய மகாமகோபாத்யாய தக்ஷிணாத்யகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையர் அவர்கள் அக்கல்லூரியிலேயே தமிழாசிரியராக

அமர்த்தினர். அதன் பின்னர் சிறிதுகாலம் நாகை நேஷனல் உயர்தரப்பள்ளியில் ஆசிரியராக இருந்து தற்காலம் திருவாரூர் நாட்டாண்மைக்கழக உயர்தரப்பள்ளியில் தமிழாசிரியராக விளங்குகின்ருர். வடநூற்புலமையும் உடையவர். அவர் எழுதிய சில தலவரலாற்று நூல்களைப் படித்திருக்கின்றேன். அந்நூல்கள்யாவும் மிக எளிய நடையில் அமைந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

திருவாளர் வித்துவான், வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் அண்ணு மலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று, சென்னையில் சிறிதுகாலம் தமிழாசிரியராக இருந்தார். தற்போது நாகை நேஷனல் உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழா சிரியராக இருந்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு அந்நகரிலும் அதன் பக்கங்களிலும் உள்ள எல்லாமக்களுக்கும் சமய உணர்ச்சியையும் ஊட்டுகின்ருர். சமீபத்தில் அந்நகரமக்கள் ஒன்றுகூடி இவர்களைக்கொண்டு பெரிய புராண விரிவுரையாற்றச் செய்து முடிவில் பெருஞ்சிறப்புக்களும் செய்து மகிழ்ந்தார்கள். சிலவிடங்களில் அவருடைய சொற்பொழிவினையும் கேட்டிருக்கின்றேன். அவரது இசையுடன் கூடிய சொற்பொழிவு எனக்கு இன்பமளித்தது.

திருவாளர் வித்துவான், மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தென்மொழிக் கல்வியோடு வடமொழிக் கல்வியும் மிக்கவர் இதுகாறும் தென் ஞற்காடு நாட்டாண்மைக்கழக உயர்தரப்பள்ளிகளில் தமிழாசிரியராக இந்தார். இருவகை மொழியறிவின் திறங்களைக்கண்ட சென்னைப் பல்கலைக்கழகத்தார்கள் இவர்களைத் தங்கள் கழகத்தில் ஆராய்ச்சியாளராக நியமித்திருக்கிருர்கள் என் பதைக் கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்தேன். இவர்களது முன்னோர்களும் தமிழ்ப் பயிற்சியில் மிக்கவர்கள்.

இனி இறுதியாகச் சொல்லவேண்டியவர் வித்துவான், வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள். யான் இதுகாறும் கூறிய புலவர்களைக்காட்டிலும் என்னுடன் அதிகமாக நெருங்கிய பழக்கமும், தொடர்பும் உள்ளவர். அடிக்கடி சென்னையில் பலநாள், பலதடவை இவரது சொற்பொழிவுகளைக்கேட்டு இன்புற்றிருக்கிறேன். இசைப்பயிச்சி யுடையவர். இவரது மனைவியாரும் சொற்பொழிவாற்றுவதில் திறம் பெற்றவர். இவரது மைத்துனர் வித்துவான், மறை. திருநாவுக்கரசு அவர்கள் எங்கள் இந்துசமய அறநிலையப் பாதுகாப்புக்கழகத்தில் பிரசாரகராக இருக்கிருர். மறைமலையடிகளின் மருகனர் இப்புலவர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் புலவர்பட்டம் பெறவிருக்கும் ஏழு இயற்றமிழ் அறிஞர்களைப்பற்றிச் சுருக்கமாக ஏதோ இரண்டொருவார்த்தைகள் கூறினேன். இனி இசைத்தமிழ் அறிஞர் ஒருவர் இருக்கின்ருர். அவர்களைப்பற்றி யான் உங்கட்கு அறிமுகப்படுத்திக் கூறவேண்டுவது மிகையாகும். ஏன்? உலகம் புகழும் உத்தமர். இசையரங்கிலும், படக்காட்சியிலும் நற்புகழ்பெற்றவர். இவர் களுடைய பாடலினிமைப்பண்பை இவர்களது பட்டப்பெயர்களாகிய "தேவாரமணி, இசையரசு" முதலியவைகள் தெளிவுபடுத்தும். அப்பெரியாராகிய திருவாளர், M. M. தண்டபாணி தேசிகர் அவர்களுக்கும் நமது குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டமளித்து ஆதீனப் புலவராக ஏற்றுக்கொள்ளப் போகின்ருர்கள். இத்தகைய சீலக் காட்சியை நாமெல்லோரும் கண்டுகளிக்கப் போகின்ரும்.



TANJORE

பத்தாண்டு விழா:

மூன்றாம் நாள் : 7—9—1943

தலைவர்:

திரு. C. கனகசபைச் செட்டியாரவர்கள்,

மாயூரம் நகராண்மைக் கழகத் தலைவர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியுரை

திருவருணெறியாகிய தெய்வச் சிவநெறியை, உண்மை நாயன்மார்கள் சென்ற செம்மைநிலை நன்னெறியை உள்ளவாறு எடுத்துரைக்கும் வாயிலான் விளக்குவதாய், சைவசமயப் பேருண்மைகளையும் சம்பிரதாயக் கிரமங்களையும் ஆங்காங்குத் தெரித்துரைப்பதாய், சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிப் பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் நாயனாரால் அருளிச் செய்யப்பட்ட திருத்தொண்டர் பெரியபுராணம் என்னுஞ் சிவானுபவவிளக்கத் தெய்வ அருண்ஞான நூலுக்கு; அவ்வருளாசிரிய சேக்கிழார் மரபில் வந்த சிவக்கவிமணியவர்கள், முன்னோர் சென்ற நெறிபற்றி இயற்றிவரும் விளக்க விரிவுரையில், திருநாவுக்கரசுநாயனார் புராண விரிவுரை, நமது ஆதீன வெளியீடாக நம்முன் இன்று அரங்கேறியது.

அது சம்பந்தமாகத் தலைவர் அவர்களும், விரிவுரையாசிரியராகிய சிவக்கவிமணியவர்களும், மற்றும் பல புலவர்களும் சிறப்பாக எடுத்துரைக்க, யாவருங் கேட்டு மகிழ்ந்தோம். விரிவுரையாசிரியராகிய சிவக்கவிமணியவர்கள் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் உடல்நலமும், செல்வநலனும் மேன்மேலும்வளர நீடுவாழ்ந்து, சிவநெறியை விளக்கும்வகையான் பல்லோருக்கும் பயன் தந்து திருத்தொண்டு புரிந்துவருக !

தலைவரும், பின்பற்றிப் பேசினோரும், வந்திருந்து கேட்டு விழாவைச் சிறப்பித்த அன்பர்களும், மற்றும் இத்திருத்தொண்டில் ஈடுபட்ட பணியாளர்களும் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவருளால் நோயற்றவாழ்வும், குறைவற்றசெல்வமும், எண்ணியபொருட்பேறும், சிவஞானமும் மேன்மேலும் வளர நீடுவாழ்வார்களாக !

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

மூன்றும் நாள்
மாகேஸ்வர பூசையும் பட்டணப் பிரவேசமும்
7—9—43 புதன்கிழமை

மாயூரம் நகராண்மைக் கழகத்தலைவர் திரு. C. **கனகசபைச் செட்டியாரவர்கள்** நிகழ்த்திய தலைமைப்பேருரை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கு அளவில் வணக்கங்கள்.

மாயூரம் நகரசபை தோன்றி வெகுநாட்களாகியும் இதுவரை இவ்விதமான நெருங்கிய தொடர்பு சபையாருக்கும், இவ்வாதீன ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கும் ஏற்பட்டிருக்கவில்லை. நான் முன்செய்த நல்வினைப்பயனாலேயே இப்

பொழுது இங்கே நமது முன்பாக எழுந்தருளிக் காட்சியளிக்கும் குருமூர்த்திகளுக்குத் தொண்டாற்ற சமயம் வாய்ந்தது. மாவூர் சர் ஆர். எஸ். சர்மா அவர்களும், நெடும் பலம் இராவ்பகதூர், N. R. சாமியப்ப முதலியாரவர்களும் மகாசந்நிதானமவர் களின் பத்தாண்டாட்சியைக் கொண்டாட நினைத்ததும் நானும் அவ்விதம் செய்ய வேண்டியது மிகப்பொருத்தம் என எண்ணினேன். அவர்களுடன் கூடி யோசித்து, பொதுக்கூட்டம் ஒன்றை மாயூரம் நகரசபை மண்டபத்தில் கூட்டினேம். அங்குப் பலரும் கூடினர். மகாசந்நிதானமவர்களின் அருஞ்செயல்களைப் பாராட்டினர். ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டது. அக்குழுவில் என்னையும் அமைப்பாள ராகத் தேர்ந்தனர். அவர்கள் கூடித்தீர்மானித்த முறையே இக்கொண்டாட்டம் இரண்டு நாட்கள் விமரிசையாக நடந்தது. ஒவ்வொருநாளும் அறிவிலும் ஆற்றலி லும் பதவியிலும் மேம்பட்ட பெருமக்கள் தலைமைவகித்துக் கூட்டங்களை இனிதே நடத்தினர். நாம் எல்லோரும் கண்டு கேட்டுக்களித்ததையே நான் இப்பொழுது சொல்லுகின்றேன். இன்று என்னையும் நகரசபைத்தலைவர் என்ற முறையில் தலைமைவகிக்கச் செய்திருப்பது என்னை கவுரவப்படுத்தவேண்டுமென்ற பெருநோக் கால்தான்; அதிலும் அறிவில்சிறந்த புலவர் பெருமக்கள் பேசவிருக்கும் இந்த சபைக்குத் தலைமை வகிக்கும் பெருமையை எனக்கு அளிக்கவேதான்; அதிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்டத்தில் எனக்குப் பெருமைகொடுக்கும் பெருநோக்கமென்றே நான் அதைச் சொல்லுவேன். மகா சந்நிதானமவர்கள் தங்களுடைய ஆதீனத்திற்குட்பட்ட எல்லாக் கோவில்களையும் திருப்பணிகள் புரிந்தும், செல்வநிலையை உயர்த்தியும் ஆட்சிபுரிகின்றூர்கள். திருப் பணிசெய்யப்படாத கோவிலோ இடமோ இல்லை எனலாம். இவ்வூருக்கு முன்னட் களில் வந்து பார்த்துமிருக்கிறேன், இப்பொழுதும் பார்க்கின்றேன். தேவமயனின் கைவேலையில் நிகழும் காட்சியையே இன்று காண்கின்றேன். அன்று இங்கு வரு வதற்கே பலரும் பயப்படுவதுண்டு. இதனல் முன்னிருந்த பெரியார்களைக் குறை கூறுவதாக எண்ணக்கூடாது. இப்பொழுது இங்கு எழுந்தருளியிருக்கும் மகா சந்நிதானம் நிர்வாகம் ஏற்றதிலிருந்து எந்தவழியில் முன்னேற்றம் எதிலில்லை என்ற குறை சொல்ல இடமேயில்லை. நமது மடங்கள் சமயத்திற்கு என்ன செய் கின்றன? மொழிக்கு என்ன செய்கின்றன? சமூகத்திற்கு என்னசெய்கின்றன? என்று பலவாறுகப்பிதற்றித்திரியும் பலரும் இங்குவந்து பார்க்கட்டும்; என்ன காண் பார்கள்? இவ்வாதீனத்தை ஒரு சமய நிலைக்களனுக - அறிவுக்கருவூலமாக - சமூகத் திற்கு ஒருபெருந்துணைக வல்லவா காண்பார்கள்! ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தை ஒருபெரும் ஞானகுரவராக-சமயமுதல்வராக-மொழிவளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு நிலையாக சீர்திருத்த சமூகத்தலைவராக ஏன் ஒருபெரும்புரட்சித்தலைவராக-கொடை வள்ளலாக வல்லவா காண்பார்கள்? பின் ஏன் இந்தப் பிதற்றல்? எல்லாம் அறி வின் குறுகல்தான் அது என்று நான் துணிந்து கூறுவேன்.

நான் இது சொல்வது ஒரு சார்புபற்றியல்ல. நடந்திருக்கும் ஒவ்வொன்றை யும் கண்கொண்டுபார்க்கும் ஒருவன் சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். நமது திருக்கோவில்களின் வளர்ச்சியே சமயவளர்ச்சிக்குப் பெரும் அடிப்படை. அதைச் சரியான முறையில் பரிபாலனம் செய்வதே அதற்கு ஓர் தூண்டுகோல். அதனை உணர்ந்திருக்கின்றூர்கள். நடைமுறையில் காட்டியும் வருகின்றூர்கள். அதுமட்டுமா? சமய மகாநாடுகளையும் சபைகளையும் அவ்வப்பொழுது கூட்டுகின்றனர். எல்லாத்

திருக்கோவில்களிலும் பிரசாரம் செய்யவும் திட்டம்செய்திருக்கிறார்கள். அவற்றிலும் சமயவுணர்வு இளமையிலேயே மனத்தில் ஊன்றிப்பதியவைக்கவும் திருவுளம் கொண்டார்கள். அதற்காகச் சமயப்பாடசாலைகள் இரண்டு நிறுவியுள்ளார்கள். ஒன்றில் சைவ மாணவர்களுக்குச் சமய பாடங்கள் இலவச வசதிகளுடன் நடத்தப்படுகின்றன. மற்றொன்றில் கோவிலில் பூசைபுரியும் குருக்கட் சிறார்க்கு ஆகம பாடங்கள் நடத்தப்படுகின்றன. கலைவளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்குமாக நூல்கள் பல அச்சிட்டு வழங்கி வருகின்றார்கள். கலை மகாநாடுகளுக்கு உதவி வருகின்றார்கள். சமூகத்தில் தாழ்த்தப்பட்டிருக்கும் ஆதித்திராவிடர்களுக்கு அவர்கள் சேரியில் குடிதண்ணீர்க் கிணறுகள்வெட்ட – பாதைகள் போடச் செய்துவருகின்றார்கள். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவ்வப்போதும் ஏழைகளுக்கு அன்னமளிப்பும் ஆடையளிப்பும் செய்து வருகின்றார்கள். இளஞ்சிறார்களுக்குக் கல்விநலமளிக்க ஆரம்பபாடசாலை நடத்திவருகின்றார்கள். ஏழை மாணவர்களுக்குப் பள்ளிச்சம்பளம் முதலியன வழங்கி வருகின்றார்கள். உடலுக்கு உறுதி பயப்ப உயிர்க்கு உறுதி பயப்பதாக உடற்பயிற்சி விளையாட்டுப் பந்தயங்களுக்கும் உதவியளிக்கின்றார்கள். எந்த உயர்ந்த காரியங்களுக்கும் உதவ மறுப்பதில்லை. இதுவரை மாயூரம் நகரத்திற்கே சரியான வசதியுடன் பிரசவ மருத்துவசாலை இல்லை என்ற பெருங்குறையிருந்து வந்தது. அதனை நான் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டேன். உடனே அதைச் செய்யவும், அதனை இந்தப் பத்தாண்டாட்சிக் கொண்டாட்டத் தருமமாக அளிக்கவும் திருவுளம் இசைந்தனர். அதனை முதல்நாள் கூட்டத்தில் குறிப்பாலுணர்த்தவும் செய்தார்கள் அதற்கு நான் நகரத்தின் பிரதிநிதியாக நகரசபைத் தலைவனாகத் தலைவணங்கி ஏற்றுக்கொண்டு எங்களுடைய மட்டடங்காப் பெருமகிழ்வையும் நன்றியையும் தெரிவித்துககொள்ளுகிறேன். இவைகளெல்லாம் என்ன? வெறும் வேலைகளா? பெருஞ்சேவைகளல்லவா? அவர்களுடைய விரிந்த உள்ளத்தில் இம்மட்டுமா கிடக்கின்றது. இன்னும் என்னென்ன காலக்கிரமத்தில் நமக்குக் கிடைக்கப்போகின்றதோ? நாம் அறியவல்லோமா? அவர்களுடைய மாபெருஞ் செயலெல்லாம் என்னால் எடுத்துக்கூற முடியவில்லை. என்னுடைய அவாவின் தேற்றமே இவ்வளவும் சொல்லச் செய்தது.

சூரியனை இது சூரியன் என்று சொல்ல ஒருவன் வேண்டுமா? அதனை ஒப்பவே இதுபரியந்தம் நான் சொல்லி வந்துவிட்டேன். அவ்வளவும் எனக்கு இருந்த பேரவாவின் முடிவுதான். இன்னும் பேச எனக்கு எண்ணமிருந்தாலும் மகாசந்நிதானமவர்களின் சமூகத்தில் பேச ஏற்படும் அச்சத்தாலும் விடுக்கின்றேன். என்னை இம்மாபெருஞ்சபைக்கு இன்று தலைமை வகிக்கச்செய்த குழுவினருக்கும் அதனை ஏற்றருளி என்னையும் தங்களுடைய காட்சியினால் பெருமைதந்த மகாசந்நிதானமவர்களின் ஆசீர்வாதத்திற்கும் நன்றி செலுத்தும் பெருங்கடப்பாடுடையேன். மறுமுறையும் என்வணக்கங்கள்.

எனக்கு அளித்த வரவேற்பில் என்னைப்பற்றி பல உபசாரங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அவ்வளவும் என்மீது கொண்டாட்டக்குழுவினருக்கு உள்ள அன்பின்பெருக்கே. அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலும் வணக்கங்களும் உரித்தாகுக.

புலவர் பலர் பேச இருக்கும் இச்சபையில் என் புன்மொழிகளை மழலை மொழியாக ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்திக்கின்றேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக சித்தாந்த போதகர், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் பேசியதன் சுருக்கம்.

தலைவர் அவர்களே! சான்றோர்களே!!

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீன மகாசந்நிதானத்தின் திருவருட் செங்கோலாட்சியின் பத்தாண்டு விழாவினைக் கொண்டாடும் இத்திருநாளில் மகாசந்நிதானத்தின் திருமுன் நாம் அனைவரும் கூடி அவர்களுடைய திருவருட் செங்கோலாட்சி நலத்தை வியந்து பாராட்டி இன்புறுகின்றோம். சைவவுலகில் இவ்விழாவே முதன்முதலாக நிகழ்வதாகச் சைவசமயவரலாறு கூறுகிறது. நாடாளும் வேந்தர்கள் வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா முதலிய விழாக் களைக்கொண்டாடி மகிழ்வது வரலாற்றிற்காணும் உண்மை. நம் சைவவுலகுபுரக்கும் சிவராஜதானிகளுள் இத்தருமையாதீனத்திற்போல வேறெங்கும் திருவருட் செங் கோலாட்சி விழாக்கள் நடந்ததாகவோ நடப்பதாகவோ வரலாறு கூறுகின்றதில்லை. எதிர்காலத்தில் சைவசமய வரலாறு கூறக்கருதும் வரலாற்றாசிரியன் இவ்வாட்சி நலத்தை உயரியவிடத்தே பொறித்து எதிர்காலச் சைவநன்மக்களை இன்புறுத்து வன் என்பது ஒருதலை. சென்றகாலத்தின் பழுதிலாத்திறனும் எதிர்காலத்தின் சிறப்பும் இன்று நம்முன் நிகழும் திருவருட் செங்கோலாட்சி விழாவில் சிறப் பெய்துகின்றன எனின் அது புனைந்துரையாகாது.

பெருமக்களே! இன்று நம்முன் தோன்றித் திருவருட் காட்சி வழங்கியின் புறுத்தும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியர்களின் திரு வருட்செங்கோலாட்சி நிலவிய பத்தாண்டுகளில், இத்தருமையாதீனத்தின் ஆட்சிக் குட்பட்ட திருக்கோயில்கள்-இருபதுக்கு மேற்பட்டன-எய்தியிருக்கும் திருப்பணி களும் திருத்தங்களும் மிகப்பலவாகும். ஆண்டுதோறும் திருவிழாக்களும் நாடோறும் நித்திய வழிபாடுகளும் ஆகமமுறையே அணுவளவும் வழுவின்றி நடைபெறுதலுற் றன. எந்தை சிவபரம்பொருள் திருக்கோயில் கொண்டருளும் எல்லை முழுதும் தூய்மையின் விளக்கம் தலைசிறந்து நிற்கிறது.

கோயிற் சுவர்களில் பண்டை நாளில் இருந்த வேந்தர்கள் தாம் செய்த வெற்றிச் செயல்களையும் வீரக் குறிப்புக்களையும் நன்மக்களும் தாமுமாகச் செய்த திருப்பணிகளையும் பொறித்துவைத்தனர். இன்றோ, அத்தகைய வேந்தர் இல ராயினும், அவ்வேந்தர்காலத்துக்குச் சிறிது முன்னேயிருந்து சிவநெறியைத் தமிழக முழுதும் தழைத்தோங்குவித்த சமய குரவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைப் பாட்டுகள் அழகிய உருவில், காண்பார் கண்ணைக்கவர்ந்து அக்கண்வழி நுழைந்து

மனக்கிழியில் பதியத்தக்க முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. இது பல நூற்றுண்டுகட்கு முன்னேயிருந்து திருமந்திரம் வழுத்தியருளிய திருமூலநாயனுர், "ஞானமுண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே" என்ற திருக்கருத்தைக் செயலில்காட்டும் சான்ருகத் திகழ்வது சைவமக்கட்கு மிக்க இன்பத்தைச் செய்கிறது.

விழாக்காலங்களிலும் திங்கடோறும் நடைபெறும் சிறப்புக்களிலும் கற்றுவல்ல புலவர்களைக்கொண்டு சமயச் சொற்பொழிவு செய்வித்தலும், மெய்கண்டான் சித்தாந்தமாநாடு கூட்டிச் சைவம் வளர்த்தலும், சைவாகம பாடசாலை நிறுவி அவற்ருல் சைவாகம அறிவை நாட்டிற் பரப்புதலும், திருமுறைப் பாடசாலைகள் நிறுவிச் சைவத்திருமுறை கற்பித்து மக்களை அவற்றையோதி உய்திபெறச் செய்வதும் "ஞானசம்பந்தம்" என்னும் அழகிய திங்கள் வெளியீட்டால் சமய அறிவினை நாட்டிற் பரப்பு முகத்தால் தமிழ்மொழி புரத்தலும் இச்சைவத் திருவருட் செங்கோலாட்சியின் சிறப்பு நலங்களாகத் திகழ்கின்றன.

அழகிய கட்டிடங்களும், கண்கவர் ஓவியங்களும், மிகப்பெரிய நூல்நிலையமும், சமயக் கருத்துக்களை வழுவின்றிப் பதித்து வழங்கும் அச்சுப்பொறி நிலையமும், காவிரியின் கரையில் இருள்படப் பொதுளிய நறும் பொழிலிடையே இயற்கையழகு இனிதுற வீற்றிருக்கும் இத்தருமையம்பதிக்குச் செயற்கையழகு பயந்து, "சைவ சாம்ராஜ்யத்தின் தலைநகர் இது" என்று சான்ரேர் கண்ணுரக்கண்டு பரவும் கழிபெருஞ் சிறப்பினை நல்குகின்றன. நேரிற்சென்று காண்பன, கண்டு செய்வன, செய்து செம்மையும் சிறப்புமே எம்மருங்கும் இனிது விளங்கச்செய்யும் ஸ்ரீலஸ்ரீமகா சந்நிதானத்தின் ஆட்சி நலத்தில் சீர்மைகள் பலவற்றுள் சிலவாகும்.

இத்தருமையாதீனத்தின் ஆட்சிக்குட்பட்ட திருக்கோயில்களில்பணிபுரிவோர் ஒவ்வொருவரும் தங்கடமையறிந்தாற்றும் நற்பண்பும், தம்மைப் புரக்கும் மகா சந்நிதானத்தின்பால் மெய்யன்பும் உடையராய் இருக்கின்றனர். என்போன்ருர் செல்லும்போது செய்யும் சிறப்புக்களால் இவை மிக நலங்கொண்டு விளங்குகின்றன. கடவுள் வழிபாடு, சமய அறிவு, தமிழ்ப்பற்று, நல்லொழுக்கம் என்ற இந்நான்கும் இச்செங்கோலாட்சியின் பயனுக மக்களிடையே பரவியிருக்கின்றன.

ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானத்தின் செங்கோன்மையின் விளைவே திருக்கோயில்கள் புதுமை நலமும் மக்கள் மனத்தை சிவவழிபாட்டில் ஈர்த்து நிறுத்தும் இயல்பும் சமய அறிவு வழங்கும் சால்பும் பெற்று விளங்குதற்குக் காரணமாகும்.

இம்மட்டோ, இத்திருவருட் செங்கோன்மையின் திருமிக்க பயன்களாக மிகவுயர்ந்த தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும், ஆங்கில நூல்களும் தோன்றியுள்ளன. சிறிது கற்ருேரும், தன்னகத்தேகிடக்கும் பொருளை இனிதறிந்து இன்புறச் செய்யும் சிவபோகசாரம் என்னும் சீரிய செந்தமிழ் நூல் நம்மனோர் காலம் வாய்க்குந்தோறும் கற்று மகிழத்தக்க நிலையில் வழங்கப்பட்டுள்ளது. பொய் கண்டகலும் வன்மையினைத் திண்ணிதின் நல்கும் மெய்கண்ட நூல்கள் இச்செங்கோலாட்சியிலே சைவர் அனைவரும் இனிது பெறுமாறு வழங்கப்படுகின்றன. பல சொல்லுவதென்; இப்பத்தாண்டு விழாவிலே, சேக்கிழார் சுவாமிகள் திருவாய்

மலர்ந்தருளிய திருநாவுக்கரசு நாயனுர் புராணத்துக்கும் நம் சிவக்கவிமணியார் எழுதிய அகலவுரை அச்சிடப்பெற்று அரங்கேற்றம் செய்யப்பெறுகிறது.

இவ்வாறு எல்லாவகையாலும் சைவநெறி மேம்படச் செய்து, "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலிய" திருத் தருமையில் இருந்து திருவருட் செங்கோலாட்சி புரிந்து சிறந்தருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் இப் பத்தாண்டு விழா வைப்போல் இருபதாமாண்டு விழா, முப்பதாமாண்டு விழா, நாற்பதாமாண்டு விழா, ஐம்பதாமாண்டு விழா என்பன முதலிய பல பத்தாண்டு விழாக்களும் வெள்ளி பொன் மணி முதலிய பல விழாக்களும் நிகழ அவர்தம் திருவடிகள் இம்மாநிலத்துப் பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்தியமைக்கின்றேன்.

திருவாரூர் போர்டு உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் பேசியதன் சுருக்கம்.

அறிஞர் பெருமக்களே!

இன்றைய விழா:— உலகத்துப்பல ஆட்சிக்களுக்கு வெள்ளி பொன் வயிர விழாக்கள் நடைபெறும். ஆனல் அவ்வாட்சி பௌதிக ஆட்சி. அவ்வாட்சி யால் எய்தும் பயனும் நிலைத்த – உறுதியான பெரிய இன்பம் பயப்பன அல்ல. இன்றைய விழாவிற்குக் காரணமான ஆட்சியோ ஞான ஆட்சி. அதினும் ஞான சம்பந்தராட்சி. இவ்வாட்சி நற்பயனெய்திய நம் சைவ உலகால் பத்தாண்டிலேயே பாராட்டும் தன்மையை அடைந்தது. இங்ஙனம் பாராட்டும் நாம் நமது நன்றி யறிதலை ஒருவாறு காட்டிக்கொள்கின்றேமாயினும் இவ்விழாவை அங்கீகரிக்கத் திருவுளங்கொண்டு அருள்பாலித்த மகாசந்நிதானத்தின் திருவுளம் வருங்காலத் திட்டங்களைக் காலமறிந்து தரமறிந்து நிலையறிந்து செய்ய எண்ணியிருக்கின்றது. நாமும் பல ஆட்சிப் பாராட்டு விழாக்களைக் கொண்டாடத் திருவருள் பெறவேண்டும். அதுவும் அந்த குருமுகமாகவே பெறவேண்டும்.

ஆட்சி அளித்தபேறுகள் :—

பலர் பல பேறுகள் காணக்கூடும், "தான் கண்டனைத்திவ் வுலகு." அடியேன் பெற்ற ஒரு பேற்றினை மறக்கமுடியாது. அப்பேறுதான் ஞானதானப்பேறு. அதனையும் சைவசீலமும் நல்லொழுக்கமும் ஈசுரபக்தியும் நிறைந்த ஆசிரியரைக் கொண்டு அளிப்பித்த நன்றி எத்துணைச்சிறந்தது. "இதனை இதனல்" என்று வள்ளுவர் வகுத்த ஆட்சி முறையையே அறிவித்து நிற்கின்றது. அத்தகைய ஆசிரியப் பெருந்தகையார் தாம் யாவரெனின் சிவத்திரு சிவாசாரியார்களே யாவார்கள். இவ்வாதீன ஸ்தாபகரான குருஞானசம்பந்தர் குருபூஜா சமயத்தில் புலவர்கள் பலரும் முத்திக்கு வழிகாட்டும் சித்தித்தேனை அவர்கள் வாயிலாக உண்டு

தேக்கெறிந்தமை தமிழ் நாடு நன்கு அறியும். இந்நன்றியே என்மனத்துப் பதிந்த நன்றியாகும்.

சரபம் :— இரணியனைக்கொன்ற நரமடங்கல் ஒன்றின் வலிகெடுத்தாட்கொள்ள, பரமேசுவரன் சரபவடிவங்கொண்டு எழுந்தருளினர். ஆனல் பரமேசுரன் ஆட்கொள்ள இலக்கான நரமடங்கல் ஒன்றே. இன்ருே மனிதவாழ்க்கையின் லக்ஷியம் சமயவாழ்வே என்ற மனிதத்தன்மையினின்றும் மடங்கிய நரமடங்கல்கள் பல. உடன் பிறந்தே கொல்லும் வியாதிபோல சமயத்துறையிற்ருேண்டனென்று பதிவு செய்துகொண்டு மறைந்து திரியும் நரமடங்கல்கள்வேறு. காற்றுவாடையில் சாய்ந்த சாய்ந்தபடி பேசித்திரியும் நரமடங்கல்கள் பல. இங்ஙனம் பலமடங்கல்களை மடங்கவைக்க ஒரு சரபம் வேண்டும். அதற்காகச் சொக்கலிங்கமூர்த்தி - அன்று மங்கையர்க்கரசியாரைக்கொண்டு சைவங்காத்த தனிப்பெருங்கடவுள் இன்று மகாசந்நிதானத்தின் திருவுள்ளத்தினின்று ஒருசைவ சித்தாந்த சரபத்தைத் தோற்றுவித்து அதனை எவ்வகையிலும் வரம்புகடவாது சமய உண்மை காக்கும் சிவாசாரியரவர்களுக்கு வழங்கியது. அது மிகப்பலராலும் பாராட்டக்கூடியதேயாம்.

இங்ஙனம் எல்லா நலனையும் எய்துவிக்கும் எங்கள் மகாசந்நிதானத்தின் திருவடிகள் என்றென்றும் வாழவேண்டும் என்று நிறைசெல்வத் தியாகேசன் திருவடிகளை வணங்குகின்றேன்.

திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. **இராம. கோவிந்தசாமிப் பிள்ளை** அவர்கள் பேசியதன் சுருக்கம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஆதிரை நாளான் ருனே யவனியி னுசா னுகி
ஆதிரை நாளில் வந்த அண்ணலே ! சண்முகப்பேர்
சோதியார் நாமந் தாங்கிச் சொற்றமிழ்த் தருமை மேவும்
ஆதியே! அடியேன் றன்னை யாண்டருள் குரவ போற்றி.

அருளே யுருவாய்த் திகழும் ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னடிகளை யுளத்தால் உன்னி, உரையால் உரைத்து, உடலால் வணங்கிப் பத்தாண்டாட்சிக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாகிய, இயல் இசை சமயக்கலைகளில் வல்லுனராகிய தமிழறிஞர்கட்குப் பட்டமளிக்கும் விழாவில் "**சைவசித்தாந்தசரபம்**" எனும் பட்டத்தினை, சிவஞான சித்தியார் வகுப்பின் பேராசிரியரா யமர்ந்து அவ்வகுப்பினை யினிதுற நடாத்திய ஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்கட்கு அளித்தருளினதைப்பற்றிச் சில பேசுவான் துணிகின்றேன். அவைத்தலைவர் அவர்களே ! ஆன்ருேர்களே ! வணக்கம். வணக்கம்.

எங்கள் ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நீடூழிவாழ்க! நீடூழிவாழ்க!! அருளாட்சி ஓங்குக!!! இவர்களுடைய பத்தாண்டாட்சி விழாக் கொண்டாடும் பேற்றில் கலந்துகொள்ள, குருவருள்பாலித்தமைக்கு அடியேனின் அகம் மிகமகிழ்வுறுகின்றது.

திருக்கயிலாய பரம்பரை நந்திமரபு மெய்கண்டசந்தானத்துவரு தருமபுர ஆதீனத்திருத்தளியின்கண் குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிலகும் எங்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவருளாணையால் இவ்வாண்டு குருபூஜைப் பெருவிழாவின்கண் ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளே மூலபண்டாரம் வழங்கும் ஞானபண்டாரக்கட்டின்கண் பரமாசாரியராய் அமர்ந்தருளி அவர்கள் அதிட்டிப்பினுல் அவர்கள் திருமுன்னிலையில் சைவமக்களாகிய தமிழறிஞர்களே மாணவர்களாயிருந்துகேட்ப, சிவஞானசித்தியார் எனும் சிவஞான போதவழி நூலாகிய விரிநூலினை வரிவரியாக, கற்றுக்கேட்டுணர்ந்து விமரிசனஞ் செய்த வகையில் உபதேசஞ் செய்தருளினர்கள். அவர்கள் யாரெனில், இங்கு இப்போது "சைவ சித்தாந்த சரபம்" எனும் பெரும்பட்டத்தினை யேற்றருளும் சிவாசாரியார் ஆவர். இவ்வாசிரியப் பெருந்தகைக்கு, சிவஞான சித்தியார் வகுப்பு மாணவர்களாகிய யாங்கள் அனைவரும் ஒருமித்த உளத்துடன் இப்பட்டத்தினை ஸ்ரீ சிவாசாரியாரவர்கட்கு வழங்கவேண்டுமென எங்கள் பரமாசாரிய சுவாமிகளிடம் வேண்டி விண்ணப்பித்தோம். அவ்வேண்டுகோளினை அருளாலேற்றருளி அங்ஙனமே இப்பட்டத்தினை வழங்கி யருளினமைக்கு ஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னடிகளைப் பல்காலும் வணங்கி வாழ்த்துகின்றேன்.

அறிஞர்களே! திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான சித்தியார், பேரானந்த சித்தியார், திருக்கோவையார், நாலடியார் முதலிய பலநூல்கள் ஆர் என்னும் விகுதி புணர்த்திக் கூறப்பட்டுள்ளனவேனும் அவற்றுள், "வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே, தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை - ஒள்ளியசீர்த், தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும், தண்டமிழின் மேலாந் தரம்" எனவும், உந்திகளிறு வுயர்போதஞ் சித்தியார், பிந்திருபா வுண்மைப் பிரகாசம் - வந்தவருட், பண்புவினு போற்றிக் கொடி நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி சங்கற்பமுற்று" எனவும், "ஆரூறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும், நீருக முத்தி நிலை நிற்போர்க்குப் - பேருகப் பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதிபோதும்" எனவும் வரும் வெண்பாக்களினுல் சிவஞான சித்தியார் சிறப்புடைத்து என்பது துணியத்தகும். சிவஞான சித்தியார் சிவஞானசித்தி, சித்தியார், சித்தி எனவருதல் போல் திருச்சிற்றம்பலக் கோவையார் திருக்கோவையார், கோவை என வழங்கப்பெறுகின்றது. பண்டார சாத்திரத்தும் பேரானந்த சித்தியார் எனும் நூலும் கேட்கப்படுகின்றது.

எங்கள் தருமபுர ஆதீன முதற்குரவர் பெருமானுகிய ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த சிவபோகசாரப் பாட்டினைமேலே நினைவுறுத்தினேன். அச்செய்யுளில் "பேருகப், பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே, ஓர்விருத்தப்பாதி போதும்" எனச்சிறப்பித்திருத் தலையுங் கூறிச் செல்வேன்.

சித்தியார் சுபக்கம் பரபக்கம் என இருபக்கங்களுடைத்து. பக்கம் - பகுதி, கூறு. அவற்றுள் சுபக்கவுரையினையே யாங்கள் கேட்கும் பேறுற்றோம். இச் சுபக்கத்தினிடையே,

" என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித்தத்தே
தன்னை வைத் தருளினாலே தாளினை தலைமேற் சூட்டும் "

" மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலாலனாலே
எண்ணிய வுருவமெல்லாம் இயற்றுவன் ஈசனாகும் "

" அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரன் அடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவ மாகும் "

" மாலிடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக் காயம்
ஆனிடத் தைந்துமாடும் அரன்பணிக் காகவன்றே "

" பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்திபண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினிற் றொகுப்பன் "

என்பன போன்ற பாதிவிருத்தப்பாக்களை நுனித்தறியின் குனித்தபுருவமுடைய கூத்தப்பிரான் திருவருளைக் குறிப்பிக்குமன்றே !

இப்பெற்றியாய நூலுக்குச் (சிவஞானசித்தியாருக்கு) **சிவாசாரியார்** எனுங் காரண விடுகுறிப்பெயருடைய ஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் சிவஞான சித்தியை யருளினமைக்கு ஒப்புயர்வற்ற இப்பட்டம் சால ஏற்புடைத்தெனயாங்கள் மகிழ்கின்றோம். அடுத்துவரும் குருபூஜையிலும் எங்கள் குரு மகாசந்நிதானம் சிவப் பிரகாச முதலிய நூல்களைப் போதிப்பித்தருளுமாறு செய்வார்களாக என இம்மட்டில் என் சிற்றுரையினை முடித்துக்கொள்கின்றேன்.

ஈசானப் பேர்புனைந்த எந்தைகுரு நற்றாளை
வாசா கயிங்கரிய மாகவே—கூசாமல்
ஏத்திப் புகழ்வேன் என்றுமற வாதிருப்பேன்
கூத்தன் றிருவருளாக் கொண்டு.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர், தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான், திரு. **முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்** அவர்கள் பேசியதன் சுருக்கம்.

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத் திருமடாலயத்தில் சிவஞானசித்தியார் வகுப்பு ஒன்று கோடைகாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, சைவசமயத்தைச் சார்ந்த தமிழ்ப் புலவர் பலர்க்கும், அவ்வகுப்பில் வந்து கேட்டு நலமுறவேண்டும்

எனக் குருமகாசந்நிதானம் அவர்களது திருவாணையடங்கிய திருமுகம் விடுக்கப் பட்டது. அடியேனுக்கும் அது கிடைத்தது. அவ்வாதீனத்தின் அடிமைப் பேறு கிடைக்கப்பெற்றதுமுதல் சில ஆண்டுகளாக அத்தருமபுரத்திற்கு அடிக்கடி வந்து தரிசித்தல் வழக்கம். அவ்வழக்கத்தின் பெரும்பயன் "சிவஞானபோதக்காட்சி" யாகத்தோன்றியது. தமிழகத்தில் சைவ மடாலயங்களில் எத்தனையோ நூற்றாண்டு களாக இத்தகைய காட்சி கிடைக்காமற்போயிற்று. இப்போது முதன் முதல் நம் குருமகாசந்நிதானம் அவர்கள் சிறந்த ஆட்சிக் காலத்தில் பழைய வழக்கத்தைப் புதிதாகத் தோற்றியருளிச் செய்தார்கள். சைவமுந் தமிழும் தழைத்தோங்கச் செய்தருளும் பெருநலத்தை எல்லோரும் எப்பொழுதும் எவ்விடத்தும் போற்றக் கடவர். இப்பரமாசாரியசுவாமிகள் சிவராஜதானியிலமர்ந்து ஆட்சிபுரியத் தொடங் கியதுமுதல் சிவத்தொண்டும் சிவாலயத்தொண்டும் அடியார்க்கன்பும், சைவ நூல் களின் வளர்ச்சியும், சாத்திரங்களும் தோத்திரங்களும் நீதிகளுமான நூல்களின் வளர்ச்சியும், சமயக்கல்வி வளர்ச்சியும் பெருகிவருதல் உலகறிந்த உண்மை. இவ்வுண்மையின் வளர்ச்சி 'சித்தியார் வகுப்பும்' இதுபோல் இனி நடைபெற இருக்கும் வகுப்புக்களுமாகும். சாத்திரக்கல்வியை வளர்க்கும் உரிமையுங்கடமையும் சைவத்திருமடாலயங்கட்கே உள்ளன. அவ்வுண்மையறிந்து அவற்றை வளர்த்து வரும் எங்கள் குருமகாசந்நிதானத்தின் திருக்கருணையை யாங்கள் எம்மொழியில் பாராட்ட வல்லோம். சொல்லுக்கடங்காததும் எண்ணத்திற்கு எட்டாததும் ஆன அளப்பருங்கடலன்ன அவ் அருளைப்போற்றுவதன்றிப் புகழ வல்லேம் அல்லேம். எங்கள் பரமாசாரிய சுவாமிகள் கிழக்குநோக்கி வீற்றிருந்தருளுகின்றார்கள். அவர்கள் திருமுன்னர், பழனி சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியாரின் பொருளை(ச் சுருங்கிய காலத்தில் எல்லாம் சொல்லியாதல் வேண்டும் என்னுந் திருவுள்ளத்தர்களாகி)த் திருமுறை மேற்கோள்களும் இனிய வரலாறுகளும் இடையிடையே பொருந்தக்காட்டி விளங்க உபதேசித்தருளி வருகின்றார்கள். சைவப்புலவர்களும் சாத்திரப் பற்றுடையவர்களும் வடபாலுந் தென்பாலும் வரிசையாகப் பணிவும் அன்பும் பற்றும் மற்றும் புலப்படச் சைவாசாரந்தோன்ற அமர்ந்து சிரவணஞ் செய்கின்றார்கள். முனிவர்கள் பலர் குருமகாசந்நிதானம் அவர்களை அடுத்து விதிப்படி விளங்கிக் காட்சியளித்தருளினார்கள். அவ்வகுப்பு நடந்த நாட்களில் எங்கள் வாழ்க்கை தூய வாழ்க்கை - அருள் வாழ்வு - நோயற்ற வாழ்வு. முன்னும் பின்னும் இருந்த இருக்கின்ற வாழ்வு அதற்கு ஒருபோதும் ஈடாகாது. இனி அத்தகைய வகுப்பு நடக்குந்தோறும் அவ்விழுமிய சிவாநந்த வாழ்வு சித்திக்கப் பெறுவோம் என்று நம்புகின்றோம். எங்கள் பரமாசாரிய சுவாமிகள் திருவுள்ளம் அடிக்கடி இப்பேரின்பவாழ்வை எங்கட்கு அளித்தருளும் என முற்றும் நம்பி, அவர்கள் திருவடிமலர்களை எண்ணி ஏத்தி இறைஞ்சுகின்றோம் தருமபுரம் வாழ்க. திருமடாலயம் திகழ்க. குருமகாசந்நிதானம் கோடிசூரியனினும் சுடர்விட்டு நீடூழி வீற்றிருந்தருள்க. சைவந்தழைத்தோங்குக. தமிழ் எவ்வுயிர்க்கும் அமிழ்தாகி வாழ்வித்து வளர்க. எங்கும் எல்லாம் சிவமயம் என்னும் உண்மை விளங்கத் திருக்கோயில்களும் சிவத்தொண்டர்களும் சிவமுனிவர்களும் பல்குக.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரனாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே."

சென்னை கார்ப்பொரேஷன் உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர், தருமபுர ஆதீனத்தமிழ்ப் புலவர், வித்துவான், திரு. **வை. குஞ்சிதபாதம் பிள்ளை** அவர்கள் பேசியதன் சுருக்கம்.

இப்போது நமது தருமபுர ஆதீனத்தில் இருபத்துநான்காவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருட்செங்கோலெய்திய பத்தாண்டு நிறைவு விழாவை மிக்க சிறப்புடன் நடத்திவருகிற உயர்திரு. சர். ஆர். எஸ். சர்மா முதலான பெரியார்கட்கும், மூன்றாம் நாளாக நடைபெறும் இன்றைய விழாவிற்குத் தலைவரும், இப்பத்தாண்டு விழாச் செயலாளரும், திருமயிலாடுதுறை நகராண்மைக் கழகத்தலைவருமாகிய உயர்திரு. C. கனகசபை செட்டியாரவர்கட்கும் எனது நன்றியும், வணக்கமும் உரியதாகுக. சிறப்பாக ஈண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கட்கு எனது தாழ்மையான வணக்கம் உரியதாகுக.

இவ்விழா, தஞ்சை ஜில்லா வாசிகள் மட்டும் கூடிக்கொண்டாடுவதல்ல. தமிழ் மணமும் சைவமணமும் எங்கெங்கே கமழ்கின்றதோ அங்கங்கே உள்ளாரெல்லாம் ஒருங்கு கூடிக்கொண்டாடுவதற்குரிய பெருமை உடையதாகும். தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாய் விளங்குதல் போல, எங்கள் பரமாசாரியரவர்களும், யாங்கணும் வாழும் சைவ நன்மக்களுக்கெல்லாம் சைவ சமய குரவராக விளங்கும் பெற்றியுடையராயுள்ளார்கள். காசியிலும் சைவத்திருமடத்தை நிலை நாட்டிய ஸ்ரீ குமரகுருபர அடிகள் தருமையாதீனத்தின் தவப்பெருஞ் சீடரன்றோ!

இப்போது எழுந்தருளியுள்ள குருமகாசந்நிதானமவர்கள் காட்சிக்கெளியராய்க் கடுஞ்சொல்இலராக, யாவரும் போற்றும்படியான அருளாட்சி புரிந்து தேவாலயத் திருப்பணி, திருமடத்திருப்பணி, சமயசாத்திர வெளியீட்டுத் திருப்பணி, சமயப்பிரசாரத் திருப்பணி, வேதாகமம் தேவாரம் கற்பிக்கும் கல்விக்கூடம், மாபெரும் நூல் நிலையம் ஞானசம்பந்த இதழ் வெளியீடு, அதற்குரிய அச்சகம், பொதுக்கல்வி, நிலவளம் நீர்வளம் காவளம் பெருக்கல் முதலிய அரும்பணிகளால் மடத்தை மிகவும் முன்னணிக்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

இவ்வரிய நற்பணிகள் புரிந்து நம்மனோரை உய்விக்கும் சந்நிதானமவர்களின் ஆட்சிச் சிறப்பை நன்றியறிதலுடன் பாராட்டி விழாக்கொண்டாடுதல் சைவத் தமிழ் மக்கள் கடமையாகும். இவ்விழா முதல் நாள் உயர்திரு. சச்சிவோத்தம சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் தலைமையிலும், இரண்டாம் நாள் இந்து அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தலைவர் உயர்திரு. திவான்பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. இவ்விழாவை யொட்டிக் குருமகாசந்நிதானமவர்களின் திருவுளப்பாங்கின்படி நேற்றைய விழாவில், என் போன்ற தமிழறிஞர்கட்கும், இசைவாணர்கட்கும் ஆதீனப் புலவர் என்னும் பட்டமளித்துப்பாராட்டியது அவர்கள் கலைவாணர்களிடத்தும், கலைவளர்ச்சியினிடத்தும் கொண்டுள்ள பேரன்பையும், பெருங்கருணையையும் விளக்குவதாகும். அது குறித்து

யான் சந்நிதானமவர்கட்கு எனது எழுமையும் மறவாத நன்றியறிதலையும் வணக்கத்தையுந்தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பாராட்டு என்போன்றாரைச் சமயப் பணிசெய்ய ஊக்குவதாகும். கடந்த மூன்று நாட்களாக நடந்து வருகிற விழா நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கிற எனக்கு இது ஒரு தெய்வீகக்காட்சியாகவே காணப்படுகிறது. என்னை இம்மடத்தின் தொண்டனாக ஆக்குவித்த ஸ்ரீ மௌன சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகட்கு எனது மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

இன்று காசிவாசி ஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களுக்குச் சந்நிதானமவர்கள் "சைவசித்தாந்த சரபம்" என்ற பட்டமளித்துப் பட்டுப்போர்த்துப் பாராட்டியது ஒரு பெரிய சிறப்பாகும். சிவாசாரியர்களில் இத்துணைத்தமிழ்ப்பயிற்சியும், திருமுறைப் பயிற்சியும், சித்தாந்த சாத்திரப்பயிற்சியும், சாத்திரங்களிடத்தும் அடியார்களிடத்தும் உண்மையன்பும், உருக்கமும் உடையவர்களை யான் கண்டதில்லை. சிவாசாரியாரவர்கள் திருமுறைகளை ஓதும்போது, காதலாகிக் கசிந்து கண்ணீர் உகுத்துப் பரவசப்பட்டிருப்பதை யான் நேரில் பலமுறை கண்டிருக்கிறேன். அவர்கட்கு மெய்கண்டசாத்திரத்திலும், திருமுறை, வேதாகமம் முதலியவற்றிலுமுள்ள ஆழ்ந்த அறிவையும், சொல்வன்மையினையும், அவர்கள் இத்தருமையாதீனத்தில் சென்ற குருபூசையின்போது சிவஞான சித்தியார் விரிவுரை வகுப்பு நடத்தியகாலத்திலும், மற்றும் அவைகளில் விரிவுரை புரிந்தகாலங்களிலும் அறிந்து உளங்களித்திருக்கிறேன்.

கல்வியறிவிலும், சாத்திர அறிவிலும், நல்லொழுக்கத்திலும் இறையன்பு, அடியாரன்பிலும் மேம்பட்டு விளங்கும் சிவாசாரியரவர்கட்குச் 'சித்தாந்த சரபம்' என்ற பட்டமளித்தது மிகவும் பொருத்தமுடையது என்பதை யான் என் முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

கோவை, பெரியபுராண விரிவுரையாசிரியர், சிவக்கவிமணி. திரு. **C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள்** பேசியதன் சுருக்கம்.

ஐயன்மீர் !

இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பேறு கிடைத்தது பற்றிப் பெருமகிழ்ச்சியடைகிறேன். சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களுக்குச் "சைவ சித்தாந்த சரபம்" என்றதோர் உயர்ந்த பட்டம் திருக்கயிலாய பரம்பரையில்வரும் நமது ஆதீனச்சார்பில் மகாசந்நிதானங்களால் அளிக்கப்பெறுவது சைவவுலகத்துக்குப் பெருமைதருவதொன்றாகும். அவர்கள் இந்த உயர் பட்டத்தைப் பொறுத்தற்கு மிகவும் தகுதியுடையவர்கள் என்பது யாராலும் மறுக்கமுடியாததொன்று.

சைவம் என்பது இறை - உயிர் - உலகம் என்றமுப்பொருள்களைப் பற்றி இவ்வுலகில் எத்தனை கோட்பாடுகளுண்டோ அவை யெல்லாம் தன்னுள்ளே

அமைந்து காணத்தக்கதோர் தொகுதியாகும். அம்மட்டோடன்றி அவற்றையெல்லாம் ஆவதும் அல்லதும் முடிவுகாட்டி அவை எவற்றுள்ளுமடங்காத முடிந்த முடிபாகிய பெருங்கொள்கையும் கொண்டது. "உலகெங்கு நிறைந்த சைவம்" உயர்ந்துமன்ன மூர்த்தி நாயனுர் மும்மையாலுலகாண்டனர் என்பது புராணம். இனிச் **சித்தாந்த** மாவது முடிந்த முடிவு; தனக்கு மேற்பட்ட வேறுமொன்றில்லாதது. இது வேதசிவாகமங்களின் முடிபாகும். நமது சிவாசாரிய சுவாமிகள் பற்பல்லாண்டுகள் காசியிலும் இன்றும் வடநாட்டில் பல இடத்தும் தங்கி மூலாகமங்கள் பலவும், மற்றும் பல கலைஞானங்களையும் நன்கு பயின்றுள்ளவர்கள். வேதாங்கங்களிலும் வல்லவர்கள். சைவத்திறத்தில் அவர்கள் உள்ளூறிய அன்பு நிறைந்தவர்கள். அவ்வாறே தமிழிலும் தேர்ந்த புலமைவாய்ந்தவர்கள். சைவத் தெய்வத்திருமுறைகளை நன்கு பயின்று பூசிக்கும் நியமமுடையவர்கள். சைவ சமயாசாரியர்களிடத்தும், அறுபான் மும்மை நாயன்மார்களிடத்தும் பேரன்பு பூண்டு அவர்களது திறங்களைக் கேட்குந்தோறும் கசிந்துருகும் மனமுடையவர்கள். மெய்கண்ட சித்தாந்த சாத்திரங்களில் மிகத்தேர்ந்துள்ளார்கள் என்பது பல புலவர்களுக்கும் அவர்கள் ஊட்டிய சித்தாந்த உணர்ச்சியால் அறியக்கிடக்கின்றது. சைவசிந்தாந்த மரபுகளினின்று சிறிதும் வழாத ஒழுக்கமுடையர்கள். இவ்வாறுகிய பெரியார்களை இந்நாளிற்காண்பதரிது.

இனிச் **சரபம்** என்பது ஒரு பறவை என்றும், மிருக அரசு என்று கொள்ளப்பட்ட சிங்கத்தினைக் கொன்று வென்றுவிடும் தன்மையுடையது என்றும் சொல்லப்பெறுகின்றது. **சைவ சித்தாந்த சரபம்** என்பது சைவசித்தாந்த உண்மைகளின் தன்மையில் முழுப்புலமையும் வாய்ந்து, அதற்குமாறுக எதுவரினும் எதிர்த்துப் போக்கும் சத்திவாய்ந்த பொருள் என்பதாம். இந்தப்பட்டத்தைப் பல்லாண்டுகளின்முன் சோமசுந்தர நாயக்கர், அஷ்டாவதானம் கல்யாணசுந்தர முதலியார் முதலிய பெரியார்கள் தாங்கிச் சைவத்தை ஓங்கவளர்த்து வந்தனர். காசிவாசி ஸ்ரீ செந்திநாதையர், ஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலிய பெரியார்களின் சரிதங்கள் இங்கு நினைவுக்கு வருகின்றன. நமது சிவாசாரியர் அவர்களும் அவ்வாறே இந்த உயர் பட்டத்தை ஏற்றுச்சிவபெருமான் றிருவருள்வழியே நின்று, சைவத்திற்கு மாறுகிய களைகளை யெல்லாம் களைந்து ஒதுக்கிச்சைவப்பயிரை நன்கு வளர்ப்பார்களாக.

இவ்வுரைகளுடன் அவர்களுக்கு இந்தப்பட்டம் அளிக்கும் பெருஞ் சிறப்பை நான் மனமார ஆதரிக்கின்றேன்.

சென்னை, தாம்பரம், இந்துசமய அறநிலையப் பாதுகாப்புக் கழகச் சைவப்பிரசாரகர், திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் பேசியதன் சுருக்கம்.

தலைவரவர்களே! அடிகண்மார்களே!! அறிஞர்களே!!!

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருத்தருமபுர ஆதீன ஆசாரிய பீடத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகட்கு அடியேனது தாழ்மையான வணக்கத்தை உரிமையாக்குகின்றேன்.

சிவஸ்ரீ ஈசான சிவாசாரியர் அவர்கட்குப் பட்டம் வழங்கப்படுவது சம்பந்தமாக அடியேனையும் சில சொற்கள் கூறும்படி பணித்ததற்கு மகிழ்கின்றேன். இதில் தருமையாதீனத் தமிழ்ப் புலவர்களும் சிவக்கவிமணி அவர்களும் கலந்து கொள்வதற்கு உரிமையுடையவர்கள்; ஆனல் அடியேற்கு யாது உரிமை உளது என வினவுவாரும் உளராலோ வெனின் அவர்களினும் அடியேன் பழவடியான்; அடியேற்கு மிக்க உரிமை உண்டு என்பதை மிக வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ள அகமிக மகிழ்கின்றேன். எனது ஆசிரியர் யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்கள் இவ்வாதீனத்து வித்வசிகாமணியாய் அமர்ந்திருந்தவர்கள். "தந்தை உரிமை மகற்குண்டு" என்பதை மறுப்பார் யாரே! அது பற்றியே, அடியேற்குக் கொடுத்த பணியை ஏற்று ஒரு சிலவற்றைப் பேச முந்துகின்றேன்.

"சித்தாந்தம்" என்ருலே சைவ சித்தாந்தத்தையே குறிக்கும். இந்த முடிபுக்கு மேற்பட்ட முடிபு இல்லை; இதுவே முடிந்த முடிபு; ஆகலான், "சித்தாந்த சரபம்" என்று வழங்குவதே போதுமாயிருக்க, "சைவ சித்தாந்த சரபம்" என்று சொல்வது மிகையாலோ வெனின், அற்றன்று. முன்னரேயே சித்தாந்த ஞான பானுவாய் விளங்கி, நூல்கள் வாயிலானும், சொற்பொழிவுகள் வாயிலானும், வாதங்கள் வாயிலானும் பொன்னையும் புகழையும் கருதாது நியாயவாயிலாகப் புறச்சமயங்களை நிராகரித்துச் சித்தாந்த சைவத்தை நிலைநாட்டிச் சிவனடிமறவாப் பேராண்மை வாய்ந்த சிவஸ்ரீ அட்டவதானம் பூவை. கலியாணசுந்தரயதீந்திரர் அவர்கள் "சித்தாந்த சரபம்" எனும் பட்டம் பெற்றிருந்தார் ஆகையான், அவரினின்றும் பிரித்துக்காட்டுவதற்கே போலும், நம் சிவாசாரியார் அவர்கட்குச் "சைவ சித்தாந்த சரபம்" எனப்பட்டம் அளிக்க உள்ளார்கள் எனக் கருதுகின்றேன்.

சிவாசாரியர் அவர்களுடைய தகுதியைப்பற்றிச் சில சொற்கள் கூறி எனது பேச்சை முடிக்கின்றேன். அவர்கள், எங்கள் சுந்தரர் பெருமானுலே திருத்தொண்டத் தொகையுள் விதந்து பேசப்பட்ட முப்போதும் திருமேனி தீண்டுவாராகிய முதற்சைவகுலத்திலே தோன்றி, முழுநீறு பூசிய முனிவர்போலத் திருவாளன் திருநீற்றைப் பெருவாழ்வு கொடுக்கும் மெய்ப்பொருள் என்று எண்ணி உருவார அணிந்து,

"ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார்மெய்க் குணமிக்கார்"

என்ற எங்கள் தெய்வச்சேக்கிழார் பெருமான் உண்மைத் திருவாக்குக்கு இலக்கியமாய் அமைந்த பத்தராய்,

"தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
பன்றியுடன் புள்காணுப் பரமனையே பாடுவார்" களாயுள்ளவர்கள்.

வேதாகமங்களை நன்றாகக் கசடறக் கற்றுணர்ந்து, அவ்வேதாகமங்களின் சாரமாய் விளங்கும் தோத்திர சரித்திர வடிவாய் அமைந்துள்ள பன்னிரு சைவத் திருமுறைகளைச் சிக்கற ஓதி, மற்றைய சிவாசாரியர்களைப் போலாது, அவைகளில் நிச்சயபுத்தியுடையவராய், சாத்திர வடிவமாய் அமைந்துள்ள மெய்கண்டசாத்திரம் பதினான்கினையும் ஐயம் திரிபு அறியாமை யென்னும் முக்குற்றங்கள் நீங்கக் கற்றுப் பிறர்க்கெடுத்துரைத்து அவர்களை நன்னெறியிலே நிறுத்தும் பண்பாளர்.

தேவர்கட்கும் மற்றையோர்கட்கும் இன்னல் புரிந்த இரணியனைக் கோறல் காரணமாக விஷ்ணு மூர்த்தியானவர் நரசிம்மமாய்த் தோன்றி அவ்வசுரனை அழித்தது தகுதியேயாயினும், அத்துடன் அமையாது அதிக்கிரமித்துத் தேவர்கட்கு இன்னல் புரியத் தொடங்கிய காலத்து அத்தேவர்கள் முறையிடச் சிவபிரான் சரபமாய்த் தோன்றி நரசிம்மத்தின் வீற்றினை அடக்கித் தேவர்களைக் காத்தது போல, பலதிறப்பட்ட பக்குவம் வாய்ந்த மக்களின் முன்னேற்றத்திற்குப் பலதிறப் பட்ட சமயங்கள் வேண்டப்படுகின்றனவே யாயினும், அக்கொள்கை சித்தாந்த சைவத்திற்கு உடன்பாடேயாயினும், "விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ் செய்தே, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" என்பது உண்மைத் திருவாக்கேயாயினும், அவ்வச்சமயம் தத்தம் வரைக்கண் அடங்கி நில்லாது, அதிக்கிரமித்து அதீத நிலையிலுள்ள சித்தாந்த சைவத்தை நியாய வரம்புகடந்து தூஷிக்கத் தலையெடுக்குங்கால் அவற்றினை நிராகரித்துச் சித்தாந்த சைவத்தை நிலை நிறுத்துவதில் "சரபம்" போல் விளங்குபவர். இடம், காலம், பொருள் முதலிய வற்றை நோக்கித் தாங்கொண்ட உண்மைக் கொள்கையை மாறுகொளக் கூறாத அஞ்சாத்தன்மை படைத்தவர். ஆகையால், மெய்யன்பர்களே! "சைவ சித்தாந்த சரபம்" என்னும் பட்டம் வழங்கப்படுதற்கு உரிமையும் தகுதியும் வாய்ந்தவர் நம் சிவாசாரியராவர்.

இத்துடன் என்னுடைய சிறு பேச்சை முடித்துக்கொண்டு, இப்பேரவையில் பேசுதற்கு அடியேற்கும் வாய்ப்புக்கொடுத்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கும், இவ்விழாக் குழுவினர்கட்கும் அடியேனது வணக்கத்தை உரிமையாக்கு கின்றேன்.

தேவகோட்டை, தருமபுர ஆதீன வித்துவான், பாலகவி வயி நாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் பேசியதன் சுருக்கம்.

இன்று நமது குருமகாசந்நிதானம் அவர்களால் "தருமையாதீன சைவசித் தாந்த சரபம்" என்னும் சிறப்புப்பெயர் பெற இருக்கின்ற சிவஸ்ரீ ஈசான சிவாசாரியாரவர்கள், அப்பெயர் பெறுதற்குப் பெரிதும் தகுதியுடையவர்கள். சைவ சித்தாந்த மெய்கண்ட நூல்களையும், பன்னிரு திருமுறைகளையும், வேத சிவாகமங்களையும் முறையே கற்று, உணர்ந்து, அந்நூல்களில் உள்ள அரிய கருத்துக்களை யெல்லாம் எளிய மக்களுக்கும் புலனாகும்படி எடுத்துப் பேசும்

ஆற்றல் இவர்களுக்கு உண்டென்பதை நாமறிவோம். சைவசித்தாந்த நுட்பங்களைத் தெளிவுபெறக் கற்றோர்க்கும், மற்றோர்க்கும் புலனாகும்படி விளக்கிக் கூறுவது, வெறும் நூற்கல்வியால்மட்டும் முடியாதென்பதனை அறிஞர்கள் அறிவார்கள். சொல்லாற்றலோடு கூடிய கல்வியே தனக்கும், பிறர்க்கும் பயன் தருவதாகும். அவ்விருவகைப் பயனும் ஒருங்கேதரும் கல்வியறிவில், இவர்கள் தலைசிறந்து விளங்குகின்றார்கள். மேனாட்டுப் பேரறிஞரொருவர், மற்றோரறிஞர் எழுதியதொரு நூலைப்பற்றித் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற பொழுது, "அந்நூலாசிரியரின் நுண்ணுறுப்பாகிய உள்ளத்தில், உலகையே அளந்துக்காட்டும் பேராற்றலுடைய அறிவு தங்கியிருப்பது வியப்புடையது" என்று கூறினாராம். சிவாசாரியாரவர்களுடைய நுண்ணுறுப்பாகிய உள்ளத்தில், உலகையும் இறைவனையும் விளக்கிக் காட்டும் பேராற்றலுடைய அறிவு தங்கியிருப்பது பெரும் வியப்பன்றோ? இவர்களின் சிறந்த தகுதியை நன்கறிந்து, இச்சிறப்புப்பெயரை வழங்கத் திருவுளங்கொண்ட நமது மகாசந்நிதானம் அவர்கட்கும், சிறப்புப் பெயர்பெற இருக்கின்ற சிவாசாரியார் அவர்கட்கும் எனது உளமார்ந்த வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.

பழனி, சைவசித்தாந்த சரபம், காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள் பேசியதன் சுருக்கம்.

குரு, ஆசாரியர், தேசிகர் என்பன இறைவன் உயிர்களுக்கு அருள் சுரத்தற்பொருட்டுக்கொண்டருளிய கருணைவடிவத்தை யுணர்த்துவனவாம். குருவாவார் அழிவில்லாத உயிருக்கு நிலைபேறான இன்பத்தை வழங்குபவர் ஆவர். அழிவுள்ள உடம்பைத் தன்பயன்கருதிப் பெற்று வளர்த்த தாய்தந்தையர்களினும், நிலைபேறானதும் இன்பமயமுமான உயிருக்கு(த் தன்பயன் கருதாமல் நம்பயன் கருதி நமக்கு) நல்லறிவும் நல்லுணர்ச்சியும் வருவித்த குரு மேலானவர். "ஆசாரியர் முன்னாகப் போற்றுதற்குரியவர்" என்பது வேதாகமங்களின் முடிபாகும். ஆன்மாக்களாகிய நாம் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவர்கள். நம்முடைய அறிவினாலே புண்ணியபாவங்களை உள்ளபடி அறிதலும் அங்ஙனம் அறிந்து பாவங்களை விலக்கிப் புண்ணியங்களைச்செய்தலும் நம்மால் இயலாவாம். இதனால், புண்ணிய பாவங்களின் இயல்பையறிவித்து, பாவங்களைவிலக்கி, புண்ணிய நெறியில் மக்களைச் செலுத்துதற்குரிய தக்கார் ஒருவர் எப்போதுமே மக்கட்பண்புடையார்க்கு வேண்டப்படுவர். நான்மறைவழி நின்று ஒழுக்கநெறி கடைப்பிடித்து "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள்" காண விருப்புவார்க்கெல்லாம் "பீடுடைத் தேசிகன் பேரருள்" வேண்டற் பாலனவே. அவ்வருள்பெற்றே "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்று நீடுவாழ்வோர்; இதுபற்றியே, "குரு" ஆணையைக் கடக்காதே; அவர் அருளிய நெறியைச் சிரமேற்கொண்டொழுகுக; சிவனே குருவாவர்; குருவே சிவனாவர் என்ற பல திருவாக்குக்கள் எழுந்தன; திங்களைக் கங்கையைக் கொன்றையை மறைத்து எங்களை யாட்கொள எழுந்தருள் வடிமேதிப்பியம் பழுத்த திருவருள் வடிவமாம்; அவ்வருள் வடிவமே குருபரன்

வடிவமாம். எங்கணும் எக்காலமும் செறிந்து எல்லாவுயிர்களுக்கும் அவரவர் பக்குவத்துக்கேற்ப, உயிர்க்குயிராய் நின்று அறிவைப் பிறப்பிக்கும் அம்மையும் அப்பனும் ஆகி நிற்கும் இறைவனே குருவாவார். குரு ஆணவமாகிய பெரிய அகவிருளை நீக்கிப் பேரொளியை விளக்கஞ் செய்பவர் ஆவார்.

அகவிருளும், புறவிருளும்

"அகவிருள், புறவிருள்" என இருள் இருவகைப்படும். அவற்றுள், அக விருள் உயர்களின் "அறிவு" எனப்படும் சித்துமயமான ஆகாயத்தில் விரவி நிற்கும். புறவிருளோ அறிவற்றதும், புறத்தேயுள்ளதுமான "சட" ஆகாயத் தில் விரவி நிற்பதாகும். புறவிருள் புறத்தேயுள்ள கண்ணொளியை மட்டும் மறைத்து நிற்கும். அகவிருளோ புறத்தேயன்றி, அகத்தே அகக்கண் முதலிய வற்றையும், மன முதலியவைகளையும் மறைத்து நிற்பதாகும். புறவிருளோ கதி ரோனது ஒளிவீசப்பெறாத இரவிலே விரவி நிற்கும். அந்த இருளுக்கு ஆட்சிக் காலமும் இரவேயாகும். இரவிலும், முழுமதிக்கிரணத்தின் முன் முளைத்து நிற்பது மன்று; மிகவுங் கலைகுறைந்த மதிநிலவும் வெளியிலேதான் முளைத்து நிற்கும். அத்துணையுமன்றிக் கண்ணொளிபெற்ற மக்கள் எல்லோருடைய கண்களையும் ஒப்ப மறைத்து நிற்குமேயன்றி ஏககாலத்திலேயே ஏற்றத்தாழ்வாக மறைத்து நிற்ப தன்று. புறவிருள் அங்ஙனம் எல்லாப்பொருளையும் காணவொட்டாது கண்ணொளி யையும், கண்காணும் பொருளையும் மறைத்து நிற்குமேயன்றித் தான் மறைந்து நிற்கமாட்டாது. மறைந்து நிற்கவும் அதனால் இயலாது. ஆனால், அகவிருளின் மாட்சியோ இதற்குப் பெரிதும் மாறுபட்டதாகும். பகலிலே விரவி நிற்கப்பெறாத புறவிருளின் தன்மை போலாகாது, பகலிலே பல்கோடி கதிரவன் ஒருங்கு தோன்றித் தனது எண்ணில்லாத கிரணங்களை வீசி நிற்கும்போதும் மறைத்து நிற்கும். பகல் இரவென்னும் வேறுபாடின்றி, எப்போதும் ஓவாது எல்லாப் பொருளையும், பொருளைக்காணும் கண்ணொளியையும் மறைத்துத் தானும் மறைந்து நிற்கும். புறவிருளானது மக்களுடைய கண்ணொளியை ஒப்ப மறைத்து நிற்கும். அகவிருளோ மக்கள்தோறும் அறிவை ஏற்றத்தாழ்வாகவே மறைத்து நிற்கும். புறவிருளோ ஒவ்வொருவருடைய கண்ணொளியையும் என்றும் ஒரேதன்மையாக மறைத்து நிற்கும். அகவிருளோ ஆணவ மலத்தின் வலிமைக்குத் தக்கபடி கணந் தோறும் பொங்கி மிகுந்து மறைத்து நிற்பதாகும். புறவிருளால் கண்ணொளி யிழந்தான் ஒருவன், அந்த இருளை இருளென்றும், இவற்றிற்கு வேறாக ஒளி யென்பது ஒன்று உண்டென்றும், அந்த ஒளியைப் பெறாமையே பொருட் காட்சியை இழந்து அல்லலுறுவதற்குக் காரணமென்றும் தெரிந்து, அந்த ஒளிப் பேற்றையே விரும்பி நிற்பான்; அகவிருளால் தடுக்கப்பட்ட அறிவையுடையவனே அவ்விருளே தானாய் தானே இருளாய் (அவ், ஆணவத்தோடத்துவிதமாய்) வேறற நிற்பான்; இன்னும் இவைபோன்ற பலகாரணங்களால் காணப்படாத இவ்வக விருளின் தன்மையை மிக மிக ஊன்றிச் சிந்தித்தற்குரியதாகும்.

தலைவர் திரு. C. கனகசபைச் செட்டியார் அவர்களின் முடிவுரை.

இதுவரை பலபுலவர் பெருமக்களும் பேசியவற்றைக்கேட்டு மகிழ்ந்தீர்கள். பேச்சின் இனிமையில் நமக்குக்காலம் போனது கூடத் தோன்றவில்லை. சமய

மேடைகளில் நான் தலைமை வகித்தது இதுவே முதல்தடவை. சிவாசாரியார் அவர்கள் ஆழ்ந்தகருத்துக்களடங்கிய பலவிஷயங்களையும் எடுத்து நமக்கு உரைத்தார்கள். அவர்களுடைய பெருமையினை நாம் பலரும் அறிந்ததே. அதனைப்பாராட்டு முகத்தால் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சிவாசாரியார் அவர்களுக்கு "சைவ சித்தாந்தசரபம்" என்ற பட்டமளித்துப் பெருமைப்படுத்தியது அவர்களின் வள்ளற்றன்மையின் பெருமையைக் குறிக்கும். அதன் பொருத்தத்தைப் புலவர்களாகிய நீங்களே பலவாறாக எடுத்துரைத்திருக்கின்றீர்கள். மீண்டும் ஒருமுறை, எனக்கு இன்று தலைமையளித்ததற்கு என் நன்றியறிதலையும் இவ்வளவு குணநலங்கள் வாய்ந்த மகாசந்நிதானத்தின் பத்தாண்டு ஆட்சிப் பாராட்டுக் கூட்டவேலையில் ஈடுபட இடமளித்ததற்கு என் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான்காம் நாள்

8—9—43 வியாழக்கிழமை

ஆவணிமூலத் திருநாள்

தேவகோட்டை, தருமபுர ஆதீன வித்துவான், பாலகவி, வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் பேசியதன் சுருக்கம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், எட்டாந் திருமுறையாய் இலங்குவது திருவாசகம். இது, சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு சிறு பிரிவுகளையும், திருக்கோவையார் என்னும் ஒரு பெரும் பிரிவையும் தன்னகத்தே கொண்டது. சிறு பிரிவுகளாகிய ஐம்பத்தொரு பதிகங்களிலும் அறுநூற்றைம்பத்தெட்டுத் திருப்பாடல்களும், பெரும் பிரிவாகிய திருக்கோவையாரில் நானூறு திருப்பாடல்களும் காணப்பெறுகின்றன.

உள்ளத்தை உருக்கி உயிர்களை ஆண்டவனெண்ணத்தில் நிலை நிறுத்துவதில் "திருவாசகம்" தன்னிகரற்றது. "திருவாசகத்தில் உருகாதார் ஒருவாசகத்திலும் உருகார்" என்பது முதுமொழி.

"திரு" என்ற சொல்லுக்கு உரை எழுத வந்த பேராசிரியர், "கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம், என்றது அழகு" என்று கூறியுள்ளார். அழகுடையனவாகக் காணப்பெறுகின்ற உலகத்துப் பொருள்கள் அனைத்தும், காணுகின்ற அனைவருக்கும் ஒரே படித்தாகவோ - என்றும் மாற்றமுறாத நிலையிலோ - என்றைக்கும் அழியாத நிலையிலோ அழகுடையனவாயிருப்பதில்லை. அழிதன் மாலைத்தாகிய பொருள்களைச் சார்ந்து நிற்கும் அழகும், அழிதன் மாலையதே. அழியா அழகே, கண்டாரால் விரும்பப்படும் ஒரே படித்தாயதாயிருக்கும். "இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்" என்னுங் கம்பர் வாக்கு இங்கே கருதற்குரியது.

தோற்றமும், இறுதியும் இல்லாது என்றும் நிலைத்து நிற்கும் பெருமானைப் பற்றிய வாசகமாதலின், நிலைத்த அழகுக்குரிய சொல்லாகிய "திரு" என்னும் அடைமொழி சேர்க்கப்பெற்றது. "வாசகம்" என்னும் சொல்லால் அழைத்தற்குரிய தகுதியுடையது, வாதவூரடிகள் வாய்மொழியே என்று சிவப்பிரகாச அடிகள் கூறுகின்றார்.

"பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம்; அதற்கு வாச்சியம்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே"

என்பது அவரது சிறந்த திருவாக்கு.

பன்னிரு திருமுறைகளில் இறைவனே பாடிய திருப்பாடலொன்றும், இறைவன் அடியெடுத்துக் கொடுக்கப் பாடிய பாடல்கள் சிலவும், இறைவனருளாற் பாடப்பெற்ற ஏனைப்பாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றுள் திருவாசகமோ எனில்: ஒரு நாமமும் ஓருருவமும் இல்லாத இறைவன் வாதவூரடிகள் முன்னே மனித்தவுருவொடு ஏடும் எழுத்தாணியுங் கைக்கொண்டெழுந்தருளிவந்து, பாடல்களைச் சொல்லும்படி அவரைவேண்டி, அவர் சொல்ல எழுதிய பெருமையையும், மணிவாசகத்திருவாயாற் கோவையொன்றும் பெற விழைகின்றேனென்று அவ்விறைவனே வேண்ட, அவ்வேண்டுகோளுக் கியைந்த அடிகளின் மணிவாயிலிருந்து வெளிவந்த பெருமையையும் உடையது.

திருவாசகத்தைப் பேரார்வத்தோடு ஏடும் எழுத்தாணியுங்கைக்கொண்டு வந்து, ஆண்டவன் எழுதிக்கொண்டதற்குச் சிறந்ததொரு காரணம், திருவனந்தபுரத்துப் பேராசிரியராகிய சுந்தரம் பிள்ளையவர்களாற் கூறப்பெறுகின்றது. உயிர்களெல்லாம் மாயையில் ஒடுங்கிவிடச் சிவம் மட்டும் தனித்திருக்குங் காலம் ஒன்று உண்டு. அது ஊழிக்காலம் அல்லது சர்வ சங்கார காலம் எனப்பெறும். அக்காலத்து, வேறு துணையில்லாது தனித்திருப்பவனாகிய ஆண்டவன், அத்தனித்த பொழுதைப் போக்குவதற்காக, ஒரு நல்ல நூலை இப்பொழுதே வாங்கி வைத்துக் கொள்ளுவோமென்றெண்ணி, வாதவூரடிகளிடம் வந்து, திருவாசகத்தை எழுதி வாங்கி வைத்துக்கொண்டானாம். அது,

"கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே"

என்னுந் தாழிசையால் அறியக்கிடக்கின்றது. இறைவனது தனிமையினும், மகிழ்வு தருவது திருவாசகமெனில், அதனைப் பயிலும் ஆன்மாக்களுக்கு அது, எத்துணைச் சிறப்பியல்புகளைத் தரும் ஆற்றல் உடையதாய் இருத்தல் கூடுமென்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! திருவாசகத்தை முறையே படித்துணர்ந்த பெருமக்கள், பரம்பொருளுறுதி கூறாத காரணத்தால், வேதத்தையும் ஓதத் துணியார்கள் என்று மற்றொரு தாழிசையிற் கூறுகின்றார். அது,

"மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கணமூடிக் கதறுவரோ" என்பதாகும்.

"வேதம்" மக்களாய்ப் பிறந்து, பகுத்தறிவு நூலறிவாதியன பெற்றிருக்கின்ற அனைவரும் ஓதியுணர்ந்து பயனடைய ஏற்றதாயில்லை. திருவாசகமோ மக்கட் குழுவினரில் யாரும் படித்தற்கும், படித்த அனைவருக்கும் பயன் தருதற்கும் தகுதியுடையதாய் விளங்குகின்றதென்று சிவப்பிரகாச அடிகளார் கூறுவர். திருவாசகத்தின் சிறப்பு, மக்களை இறையுணர்ச்சியில் ஈடுபடுத்துகின்ற அளவோடு நின்றுவிடவில்லை; கொடுமையையே குணமாகக் கொண்டுள்ள காட்டு விலங்குகளையும், ஈர்த்திழுத்து மெய்ஞ்ஞான உணர்ச்சியிற் றலைப்படுத்தும் நிலையிலிருக்கின்றது என்று இராமலிங்க அடிகள் கூறுவர்.

மொழியாலும், சமயத்தாலும், நடையாலும், பிறவாற்றாலும் வேறுபட்ட மேலைநாட்டவரான ரெவரெண்டு போப், திருவாசகம் படித்துப் போப்பையரான செய்தியும், திருவாசக முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த செய்தியும், இறுதிக் காலத்தில் திருவாசகம், மணிவாசகர் நினைவோடு அவரது நண்பர்களிடம் உரையாடிய செய்தியும் பொதுவாகத் தமிழருள்ளத்தில், சிறப்பாகச் சைவருள்ளத்தில் நிலைத்திருக்கவேண்டியனவன்றோ ? தமிழகத்துத் தலையாய செல்வங்களாகிய திருவாசகமும்; திருக்குறளும் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்ற அளவு, வேற்றுமொழி நூல்கள் எவையேனும் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கின்றனவா ?

இத்தகைய நமது அரும்பெருஞ் செல்வமாகிய திருவாசகத்தை ஓதியுணர்ந்து இம்மை மறுமை நலங்களை எய்துவோமாக.

சென்னை தாம்பரம், இந்துமத அறநிலையக் கழகச் சைவப் பிரசாரகர், திரு. **பூ. சமரபுரி முதலியார்** அவர்கள் பேசியதன் சுருக்கம்.

மெய்யன்பர்களே !

நாயினேனையும் பொருட்படுத்தி இன்று இங்கு உங்கள் முன் "மாணிக்கவாசகரும் சைவ வாழ்க்கையும்" என்னும் பொருள்பற்றிப் பேசுதற்கு அடியேற்குப் பணித்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு எனது வணக்கத்தை உரிமையாக்குகின்றேன்.

மாணிக்கவாசகருடைய சரித்திரத்தைப் பற்றியும் அப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தைப் பற்றியும் எனக்குமுன் பேசிய இரண்டு பெருமக்களும் பேசினார்கள்.

இனி, அவர் நடத்திக்காட்டிய சைவ வாழ்க்கையைக் குறித்து அறிந்து கொள்ளவேண்டியது சைவர்களாகிய நங்கள் கடமையாகும். அவர் சைவ சமயாசாரியர்களுள்ளே ஞான பாதத்தை விளக்கிக்காட்டவந்த மூர்த்தி. மக்கள் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதை தம்வாக்கினல் உபதேசித்து, அவ்வாறே நடத்திக்காட்டுபவரே ஆசாரியராவார். ஆசரித்தல் என்பதற்குப் பொருள் நடத்தலாகும்.

ஆகையால், நம்பெருந்தகையார் எவ்வாறு தம்வாழ்க்கையை நடத்திக்காட்டினார்கள் என்பதைப் பார்ப்போம்.

சைவவாழ்க்கை - மங்கலகரமாக வாழ்தல், சிவத்தை அடையா வாழ்தல் எனப்பொருள்படும். சைவம் சிவசம்பந்தத்தையுடையது. "சைவம் சிவத்தொடு சம்பந்தம் என்றான், சைவம் வளர்க்கும் சம்பந்தமூர்த்தி" என்பது ஞானசாரியர் திருவாக்கு. குறைவிலா மங்கல குணத்தையுடையது எதுவோ அது "சிவம்" என்று அறிவின் மேலவர் அறைகுவர். மங்கலகுணம் என்பது பிறத்தல் இறத்தல் களினின்றும் அவற்றிற்கு ஏதுவாய மலங்களினின்றும் நீங்கி, பேரானந்தப் பெரு வாழ்விலே கிடத்தலாகும். இந்தச்சைவ வாழ்க்கையைப் பெறுதற்கே நம்பெருமான் உழைத்து உறுதி பெற்றார். சிவத்தை அடைந்தார்.

கற்கவேண்டிய நூல்களையே கசடறக்கற்று, கல்வியின் பயன் வாலறிவன் தாள்தொழுதலே எனக்கண்டு அதிற்றலைப்பட்டுநின்று, அதன் பயனாக இறைவன் திருவருள் கைகூட, உண்மைப் பொருள் ஈதென்றும், பொய்ப்பொருள் ஈதென்றும் அறிந்தாராய், இம்மை மறுமை இன்பங்கள் அழிதற்றன்மையுடையன - நிலை பேறற்றன வாதலால் உண்மையுணர்ந்தவர்களால் விரும்பதகாதவை என்ற துணிவு பிறந்தது. அவற்றின்பாலுள்ள ஆசை குறையத் தலைப்பட்டது. தலைப்படவே பூர்த்தியான - நித்தியமான - தூய்மையான இன்பத்தைக் கொடுக்கக்கூடிய அத் தகைய இன்பவடிவினனான சிவத்தை அடைதற்குரிய வழிகளைத் தேர்வாராயினர். "ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள் ஆசை விடவிட ஆனந்த மாமே" என்பது ஓத்தாகலின் தாம் மேற்கொண்ட அமைச்சுத் தொழிலையும், சுற்றத்தாரைக் காக்கவேண்டிய கடமைகளையும் பற்றின்றிக் கடனென்றே செய்து கொண்டு, சிவத்தைக்காட்டவல்ல ஆசாரியன் எப்போது கிட்டுவான் என ஏங்கி நின்றார்.

சைவ வாழ்க்கைக்கு, தாம் மேற்கொண்ட கடமைகளைப் பற்றின்றி செய்து கொண்டு, கற்கவேண்டிய நூல்களைக் கற்று, அதன்படி ஒழுகி, இம்மை மறுமை இன்பங்களை இகந்து, அழியாத இன்பத்தைத் தரவல்ல சிவத்தைப் பேணி, ஆசாரியனை அடையவேண்டும் என்பதைச் சுவாமிகள் வாழ்க்கையிலே காண் கின்றோம்.

சிவத்தையன்றி மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டெனக் கனவிலும் நினை யாது, சைவ வேடந்தாங்கி அவ்வேட நெறி நின்று, சைவத் திருப்பணிகள் செய்ய வேண்டுமென்பதைக் காட்டினார். சைவத் திருப்பணிகளாவன :— திருக்கோயில் திருப்பணிகள் செய்தல், அடியார் பூசை மாகேசுர பூசை செய்தல், திருமடஞ் சமைத் தல், திருநந்தனவனம் அமைத்தல், நித்திய நைமித்திக பூசை நடைபெற ஏற்பாடு செய்தல் முதலியனவாம். அன்பர்களே! ஓர் ஐயம் நிகழலாம்; இவ்வாறு எல் லார்க்கும் கூடுமோ என்பது. யாவர்க்கும் கூடாதென்பது உண்மை. யார் யார்க்கு எந்தெந்த வகையிலே சிவப்பணி செய்யக்கூடுமோ அந்தந்த வகையிலேதான் செய்ய வேண்டுமென்பது பெருநூல்களது கருத்தாகும், ஆனால் என்ன வேண்டும்? அன்புவேண்டும். அன்பின்றிச் செய்யும் எத்தகைய பெருந் திருப்பணியும் பயன் தரா; அன்போடு கூடிச்செய்யும் எத்தகைய சிறிய திருப்பணியும் ஆண்டவற்

கேற்கும். "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்றார் தேவரும்.

ஆசாரியன் மூலமாக சிவதீட்சையும் ஐந்தெழுத்துபதேசமும் பெற்று, விதிப்படி எண்ணவேண்டும் என்பதைத் தம் வாழ்க்கையில் வைத்துக்காட்டினர். அதுவே பிறவிக்கடலை நீந்தி முத்திக்கரையை அடைவதற்குரிய தோணியாகும். இவ்வுண்மையைச் சுவாமிகள் தம் மணிவாசகத்தில் "தனியனேன் பெரும் பிறவிப் பவ்வத் தெவ்வத் தடந்திரையால் எற்றுண்டு..........." என்னுந் திருச்சதகச் செய்யுளால் அழகுபடப் பேசுகின்றார்.

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைந்து, முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயலாது" சிவபத்தர்களோடு இணங்கியிருக்கவேண்டும் என்றும், உலக முகத்திலே செல்லுகின்ற கருவிகளைச் சிவ வழிபாட்டிலே செலுத்தவேண்டும் என்றும், அதுவே சைவவாழ்க்கையை அடைதற்கு நல்வழியாம் என்றும் பற்பல வகையாகப் போதிக்கின்றார்.

"சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணை நின்திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்கு உன் மணிவார்த் தைக்காக்கி ... ..." எனவும்,

"காணுங் கரணங்க ளெல்லாம் பேரின்பமெனப் பேணும் அடியார் ... ..." எனவும்,

"வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய்வாழ்த்த வைத்து" எனவும்,

"தன்னீரடிக்கு என்னிரண்டு கரங்கள் தந்தான்" எனவும்,

கூறியுள்ள அடிகளாரது அமுதவாக்குகளை நோக்கி நமக்குவாய்த்த இவ்வருமையான பிறவியைச் சிவத்தை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வை அடையப் பயன் படுத்திக்கொள்வோமாக.

முத்தியிலேயும் ஆண்டானடிமைத்திறம் உண்டு என்பதை நயம்படப்பேசி, அதனல் தாம் பெற்ற அருட்டிறத்தை அச்சோப்பதிகத்தில் "சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்னுஞ் சொற்றொடரினலே தம்மநுபவத்தின் பயனைக் குறிக்கின்றார்.

நன்மை தீமைகளைச் செய்விக்கின்றவன் சிவன் என்றும், அவன் ஆணையில் அடங்கி நிற்கவேண்டுவது ஆன்மாக்களின் கடமை என்றும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் தம்வாழ்க்கையில் வைத்துக்காட்டித் தாம் உய்ந்த நெறியை "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றபடி நாமெல்லாம் உய்யுமாறு தந்தருளிய அடிகட்கு நாம் எழுமையும் கடமைப்பட்டுள்ளோம்.

மெய்யன்பர்களே! இன்று ஓர் நன்னுள்! இன்றே நாம் பிறந்த நாள்!! அடிகளாரைப் பற்றிப் பேசுதற்கு அடியேற்கு வாய்ப்புத்தந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கட்கு மீண்டும் வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

இதோடு என் சிறு சொல்லை முடித்துக் கொள்கின்றேன்.

வாழ்த்துப்பத்திரங்கள்.

ADDRESS PRESENTED BY

His Holiness

Sri-la-Sri Shanmuga Desiga Gnanasambanda Pandarasannathi Avl.,

Adhinakarthar, Dharmapuram Adhinam,

Dharmapuram Mayavaram

To

Sachivothama Sir C. P. Ramaswami Aiyar K. C. S. I., K. C. I., E. LL.D.,

Dewan of Travancore State

May it please you, Sir,

It gives us great pleasure to welcome you to our Mutt, and our pleasure is all the greater, when we think that it is given to us to have the previlege of greeting you as a friend and adviser to this institution of ours. You may know that this Mutt was founded by a great Saint, Sri Guru Gnanasambanda, some five centuries ago to keep up his lineage which would live up to his ideals. As is well known, attached to this Adhinam are a number of temples, known as "Adhinam Devasthanams". Great Scholars and Saints have presided over this sacred seat at one or other occasion and they have left behind them, their spiritual experiences in excellent treatises, which bear the stamp of their greatness. We have now the fortune to occupy such a great seat and it is our desire to walk in the footsteps of our great predecessors as far as it lies in our power.

Almost all our institutions lie in the Tanjore and Trichy Districts and the Mettur project and the Pykara Scheme are divine-sent-boons to the people of these districts. Our institutions enjoy in full the benefits of the same and we know, only too well, that, but for your efforts these great works would not have come into existence at all. They are monuments of your great genius and broad vision. They give us all, a very large population, peace and plenty. If the food problem in this part of province is not so acute, as in most places, it is not a little due to the great and beneficient measures which you initiated when you were a member of the Government of Madras. Our gratitude to you is unbounded and it can be expressed only by saying that you are enshrined in the hearts of all here. We see the mark of your genius in all your activities, which embrace every field of public life.

With your kind leave, we may take you back to the days when you had been to our Mutt to unveil the photo of His Highness the Maharaja of Mysore. We may also bring back to your memory the days you spent here on professional engagement. When we think of this, we cannot but remember how great had been your contribution to the well being of this institution. We may say in all sincerity that this institution is very much indebted to you for all your services.

We are sure, it will please you to know that there is no litigation here of any importance now-a-days. Our entire energies are directed towards the furtherance of the cause for which we and our institutions stand. We do not want to enumerate what all we have attempted to do. Some years ago you have been to this village. You had seen the Mutt before. Now you see it. We may add that our temples also have received equal attention in our hands.

We have in recent times, added to our usual religious and charitable activities, new ones that would accord with the time spirit, of course, consistant with the original ideals. Periodical conduct of Religious Confrences and lectures, printing and reprinting of philosophical works, and giving them gratis or at nominal prices, publication of a Magazine purely devoted to religion, keeping a press and running of Vedagama, Thevara patasalas are some among them.

Now we have enlarged our library and housed it at the entrance so that it may be within easy access of all people irrespective of religion and caste. In the midst of multifarious functions and duties, the acceptance of this small function by you places us in a deep debt of gratitude to you and in expressing our grateful thanks, we would like to say that we consider it a special previlege extended to us. Now we request you to kindly open the Library Buildings.

5–9–43.

——

ADDRESS OF WELCOME

PRESENTED TO

SACHIVOTHAMA SIR C.P. RAMASWAMI AIYER K. C. S. I., K. C. I. E., LL.D.,

DEWAN OF TRAVANCORE

BY

THE CELEBRATION OF THE FIRST DECENNIAL RULE OF

SRI-LA-SRI

SHANMUGA DESIKA GNANASAMBANDA PARAMACHARIA SWAMIGAL

OF DHARMAPURAM ADHINAM

Esteemed Sir,

We the Members of the Celebration Committee of the first Decennial Rule of His Holiness the Mahasannidhanam of the Dharmapuram Adhinam offer you esteemed sir, the most cordial welcome, on the occasion of your visit to our town, to associate yourself with our celebrations, and preside over the same.

We feel highly honoured by the presence amongst us of a gentlemen of your eminence in the public life of our land. Few can lay claim to the various achievements you have won in the different fields of national life. Your indomitable energy, wonderful capacity to carry things through in the teeth of opposition, and your personal attainments in law, literature, and public administration have won for you universal admiration You have adorned almost all the high positions open to a citizen of our country. We, of the Tanjore District, remember with special gratitude the active and substantial contribution you made to the Mettur Irrigation Scheme. The lead you have given to the Scout Movement in our Province, and the State of Travancore, and the keen interest you have been taking in education in all its stages are an index of your realisation of the fact that the future of the nation lies with the youth of the land. No wonder that you were chosen to represent the country, in the Assembly of the League of Nations, in Geneva. No greater tribute can be paid to your statesmanship than your appointment to a number of Committees formed to effect reforms in the constitution of our land.

The Dharmapuram Adhinam administered by His Holiness **Shanmuka Desika Gnanasambanda Paramacharia Swamigal**, its 24-th Head, the completion of whose first decennial rule, we are met here to celebrate, was founded about 500 years ago for the protection and propagation of the Saiva Creed and the proper maintenance of Hindu temples dedicated to that creed. During the last 500 years, through many historic vicissitudes, the mutt has been shouldering the responsibility of administering to the moral and spiritual needs of a large section of the people of South India. In appreciation of the successful rule of His Holiness an arch has been erected in commemoration. It is therefore fitting that on an occasion such as this, the President should be the administrative head of one of the most enlightened and religious minded native states of India, where the title of "Servant of the Lord" is one of the most important appellations of the ruler. We request you, Sir, to open the arch.

We pray that God may be pleased to bestow on you a long and happy life so that the country may benefit by your guidance in the difficult times ahead.

Mayavaram,
5—9—43.

CELEBRATION COMMITTE.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்

இருபத்துநான்காவது குருமூர்த்தியாக எழுந்தருளியுள்ள

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளாட்சியின்

பத்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில்

கொண்டாட்டக் குழுவினர் வாசித்தளித்த

வாழ்த்துரை.

ஆட்சி முறையை அழகுற நடத்தும் மாட்சி மிகுத்த மாண்புடைப் பெரியோய்!

நம்நாட்டில் அறவுணர்ச்சியுடன் நம்முன்னோர்கள் அமைத்த நிலையங்கள் யாவும் தற்காலம் தங்கள் ஆட்சியில் முன்னோர்கள் என்னேக்கத்துடன் அவைகளை அமைத்தனரோ, அன்னேக்கம் முட்டுப்பாடின்றி முடிவுற நடைபெற்றுவருவதைக் கண்ணாரக் காண்கின்றோம்; காதாரக்கேட்கின்றோம். இச்செயல்களை யெல்லாம் வாயாரப் புகழ்ந்து தங்களை மேலும் மேலும் ஊக்கும் பொருட்டும் எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டுமே இத்தகைய கொண்டாட்டம் ஒன்றை அமைத்தோம்.

உலகத்தில், தங்கள் தங்கட்கேற்ற பணிகளை, ஒழுங்குறச் செய்கின்றவர்கள் எக்காலத்தும் எவராலும் போற்றப்படுவார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையன்றோ? தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட கோயில்கள் எல்லாம் கண்டாரும் கேட்டாரும், வியக்கத்தக்க முறையில் சீர்திருத்தப்பெற்றும், நடைமுறைகள் ஒழுங்குபெற அமைக்கப்பெற்றும், மங்கொளிநீங்கி, மாணொளிதன்னைப் பொங்குறப் பெற்றும், தெய்வம் கமழும் திருப்பாடல்கள் செய்ய முறையில் ஆங்காங்கு பொறிக்கப் பெற்றும், காட்சியளிக்கும் கவினுறுதோற்றமானது, கடவுட் பற்று அற்றார் பலரையும், அவ்வெண்ணம் கைக்கொள்ளுமாறு தூண்டுகின்றன என்று நாங்கள் சொல்வோமாயின், இது மிகை என்று எவரும் எண்ணுதற்குக் கூட இடமில்லை என்பது எவருமறிந்த உண்மை.

சைவக்கலையும் சார்ந்த நற்றமிழும் மெய்வைத்து ஓங்க மேவிடுமடிகாள்!

"ஆய்வார்பதிபசு பாசத்தின் உண்மையை" என்று சொல்லிய தங்களது முன்னோர் வாக்கிற்கிணங்க, சைவ நூல்கள் பலவற்றையும் அச்சிட்டுப் பலரும் அறிய காலநிலை நோக்காதும் வழங்கி வருகின்றீர்கள். அத்துடன், அவம்போக்கவும், சிவம் பெருக்கவும் தக்க புலவர்களை அறிஞர்களைக்கொண்டு ஆலயந்தோறும் சொற்பொழிவுகளைச் சுவையுறச்செய்வித்து வருகின்றீர்கள்.

கேட்டாரன்றி பார்ப்போரும், பயனடைய, ஊனம் ஒன்றில்லா ஞான சம்பந்த மாதவெளியீட்டை மாண்புற நடத்திவருகின்றீர்கள். அன்றியும், சென்ற ஆண்டு தாங்கள் நடத்திய மெய்கண்டான் மகாநாடானது சைவ உலகத்தை - தமிழ் உலகத்தை - ஏன் தென்னிந்திய மக்கள் அனைவரையுமே உணர்ச்சி பெறத் தட்டி எழுப்பிவிட்டதென்பதைச் சொல்லிக்கொள்ளாதவர் எவரும் இந்நாட்டில் இல்லை என்பது ஒருதலை.

''செல்வத்துப்பயன் துய்த்தலே'' ஆதலால் அதனைப் பலநன்முறையில் செல வழித்து, பாடசாலை மூன்றைப் பயன்பெறத் தாங்கள் வைத்து நடத்தி வருகின்றீர்கள். தாங்கள் அமைத்திருக்கும் நூல்நிலைய அமைப்பு தங்களுடைய விரிந்த அறிவை வெளிப்படுத்திக் காட்டுகின்றதெனலாம். தாங்கள் செய்துவரும் இத்தகைய செயல்கள், ''பெருமையுடையவராற்றுவார் ஆற்றின் அருமை யுடைய செயல்'' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு ஓர் விரிவுரை செய்து காட்டுவதுபோல் இருக்கின்றன. மேலும் காலநிலைக்குத் தகுந்தாற்போல் சமூகத்துடன் கலந்து கொண்டு செய்து வரும் செயல்களும் அறிவுடையோர் பலரும் ஆய்ந்துகொண்டாடும் தங்களது நிர்வாக முறையும் கண்டறிந்த எங்கட்கு ''பெற்றான் ஒருவன் பெருங்குதிரை, அந்நிலையே கற்றான் அஃது ஊருமாறு'' என்ற அடிகளின் கருத்துக்கள் உள்ளத்தே உதித்தெழுகின்றன. தாங்கள் வசிக்கும் இத்தருமையம் பதியை, மக்கள் வாழ்க்கைக்கேற்ற சுகாதார முறைகள் சூழுறச்செய்தும், வேண்டிய வகையில் வீடுகள் அமைத்தும், விருந்தினர் பலர்க்கு விடுதிகள் கண்டும், சிற்றூரதனைப் பேரூராக்கியும், இலட்சத் தோப்பை இயல்புற வளர்த்தும், குளம் பல தோண்டியும், கோயில் திருத்தியும், சாலையமைத்தும், சோலை பெருக்கியும், செய்து வரும் இம்மாபெருஞ்செயல்கள் அனைவர் உள்ளத்திலும், ''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே'' என்ற தாயுமான அடிகளின் தனிப்பெருவாக்கை நினைவிற்குக்கொண்டு வருகின்றன என்பதை யாங்கள் கூறவேண்டுவதில்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாகிய ஆதித்திராவிடமக்களுக்கு உடை பல கொடுத்தும், உணவினை அளித்தும் அவர்கள் நிலையை உயர்த்த தாங்கள் எடுத்து வரும் முயற்சியை ஒவ்வொரு இந்தியனும் பாராட்டக் கடமைப்பட்டவனாகின்றான்.

''நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று மன்னவன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்பதை நன்குணர்ந்து நமது அரசாங்கம், வீரமோங்கிவெற்றிகாண அரசினர் நிதிக்கு ஆயிரக்கணக்கில் அரும்பொருள் உதவியதை மிக மிக மெச்சுகின்றோம்.

வாழி பரமாசாரிய வள்ளால் ஊழி தோறூழி வாழி வாழியவே!

தாங்கள் இன்றைய நிலைபோன்றே காட்சிக்கெளியராய், கடுஞ்சொல் அற்றவராய், பண்பு பல படைத்துப் பல்லாண்டிருந்து, அருட் செங்கோல் ஓச்சி, ஆண்டுவர வேண்டுமென்றும், தங்கள் ஆட்சிக்கு வெள்ளிவிழா, பொன்விழா, வைர விழா முதலான விழாக்கள் எல்லாம் கொண்டாடும் பேறு, எங்கட்கும் கிடைக்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை நெஞ்சில் நினைத்து நீடுறவணங்குகின்றோம்.

இங்ஙனம்,

மாயூரம்,
4—9—43.

கொண்டாட்டக் குழுவினர்.

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்
இருபத்துநான்காவது குருமூர்த்தியாக எழுந்தருளியுள்ள

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளாட்சியின்

பத்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில்

மாயூரம் நகராண்மைக் கழகத்தார் வாசித்தளித்த

வாழ்த்துரை.

திருக்கயிலாயத்திலிருந்து வந்த பரம்பரை தன்னில் திகழுஞ் செம்மால்!

கடல்புடை சூழ்ந்துள்ள இக்கண்ணகன் ஞாலத்து, ஆங்காங்கு செந்நெறி குறுகியும் தீநெறி பரந்தும், மக்கள் பலரும் மனந்தடுமாறும் நிலையொன்று ஏற்படுமாயின் அதுகாலை எல்லாம் வல்ல இறைவன், தக்கார் சிலரை இத்தாரணி விடுத்து, செந்நெறி பெருக்கிச் சீருறச்செய்வான் என்பது எந்நாட்டவரும், எம் மதத்தினரும் எளிதினேற்பது இயல்பே.

ஆதலின், செம்மை நெறிச் சீர்கெட்டுவரும் இக்கால நிலையை, ஏற்புடை முறையில் இனிதுறச் செய்யத் தோன்றிய தங்கள் தோற்றத்தை, கயிலாய பரம்பரையில் இருபத்து நான்காவது குருமூர்த்தியென இயம்புவது மிகமிகப் பொருத்தமென்று உன்னி உன்னி உவப்பெய்துகின்றனம்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்றெனக்கூறும் பான்மை கொண்டுள மக்கள் வணங்கி, வழிபாடியற்ற, தங்கள் ஆட்சியில் தயங்குறும் தளி பலவற்றையும் திருத்தியும் புதுக்கியும் மிகப்பெருஞ்செலவில் திருப்பணிசெய்தும் பல்லாயிரமாம் பணஞ்செலவழித்து நினைத்தால் திருப்பணி, நிமிர்ந்தால் தமிழ்ப்பணி, கொண்டால் குடமுழுக்குக் கூடினல் மதிலெடுப்பு என்று செய்துவரும் தங்களது இம்மாபெருஞ் செயல்களைக்கண்டு பெரிதும் வியக்கின்றோம்; அன்றியும் அக்காலம் கடவுளர் பலர்க்கும் கற்றளியெடுத்த முடியுடை வேந்தர் மூவர்தாமும் ஓருரு எடுத்துத் தருமையாதீனத்தில் உற்றனரோ என எண்ணி எண்ணி இறும்பூதடைகின்றோம்.

தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க அமிழ்தா மென்னத் தோன்றிய அண்ணல்!

கடவுட்பூசையும் காண்டகு விழாக்களும், சிறப்புற நடத்தியும், அரும்பொருள் பொதிந்து மறைந்துகிடந்த மாண்புடை நூல்கள் பலவற்றை யாவரும் கற்றுணருமாறு, நாளொன்றிற்கு இரண்டொன்ருக அச்சியற்றி வெளிவரச் செய்யுந் தங்களது விரிந்த செயலுக்கு இத்தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

அமிழ்தினுமினிய தமிழ் நூல்களையும், ஆங்கிலம் வடமொழி ஆய நூல்களையும் நன்கு தொகுத்து, புத்தம் புதிய முறையில் தாங்கள் அமைத்துள்ள நூல் நிலையம் கண்ணையுங் கருத்தையும் கடிதினிற் கவர்ந்து, இத்தமிழ்நாட்டில் ஓர்மாதிரி நிலையமாய் மன்னி வருகின்றது. மேலும், தவநெறியாம் சிவநெறியின் பெருமையினை எவருமறிந்து இன்புறுமாறு ஞானசம்பந்தமென்னும் திங்கள் தாளைத்

தாங்கள் செழிப்புற நடத்திவருவதை நாங்கள் மறப்பதற்கில்லை யென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

ஈனசம்பந்த மெல்லா மோட்டும் ஞானசம்பந்த சண்முக தேசிக !

கல்வி பெருகவும், கலைகள் ஓங்கவும், தேவாரமெனுந் திப்பிய மறைக்கும் வேதாகம மென விளங்குறுமவைக்கும் பாடசாலைகளைப் பயனுற நிறுவியும், தஞ்சை அரண்மனைச்சுவடி நிலையத்திற்குப் பணமுதலுதவியைப் பண்புறச் செய்தும், கற்கும் மாணவர் கவலையகற்ற உதவிச்சம்பளம் உலையாதளித்தும், ஊக்கம் அளிக்குந் தங்கள் உத்தம குணத்தை நாங்கள் எவ்வாறு ஓர் அளவுக்குட்படுத்தி உரைக்கமுடியும்.

இன்னும் வெள்ளத்துன்பம் விரைவிலகற்றக் கொள்ளை கொள்ளையாய்க் கொடுத்து உதவியதையும் நாங்கள் மனமார எண்ணி வாயார வாழ்த்துகின்றோம்.

எத்திசையும் புகழ்மணக்க இலங்கு சந்நிதானமெனும் வித்தக!

தங்கள் புகழை என்னென்று விளம்புவதே !

அருளேவுருவாய் அமைந்த அடிகாள்! தாங்கள் இத்தருமபுர ஆதீனத்தில் ஏற்றுக்கொண்ட அருளாட்சி இற்றைக்குப் பத்தாண்டுகள் நிறைவெய்துகின்றது. அன்றுதொட்டின்றுவரை தாங்கள் செய்துள தவப்பெருஞ் செயல்களை எண்ணும் பொழுதுங் கண்ணுறும் பொழுதும் "செயற்கரிய செய்வார் பெரியார்" என்ற வள்ளுவர் வாய்மொழி வயங்கி முன்நிற்கின்றது.

இந்நகர மக்களின் வாழ்வை நன்முறையில் நடத்திவரத்தக்க பல வசதிகளை எங்கள் நகராண்மைக் கழகத்தின் பொருளாதார நிலைக்குத் தக்கவாறு அமைத்துவருகிறோம்.

இந்நகரத்தில் பொதுமக்கட்குச் செய்யவேண்டியிருக்கின்ற பற்பல நற்செயல்களில் மிகமிக இன்றியமையாததாகவும் விரைவிற் செய்யத்தக்கதாகவும் இருப்பவை **பிரசவ கவனிப்பு மருத்துவச்சாலையும், குழந்தைகள் பாதுகாப்பு மருத்துவச்சாலையுமாகும்.** தாங்கள் அவற்றிற்காவன செய்யவேண்டுமென்பதே எங்கள் ஆர்வம் நிறைந்த வேண்டுகோள்.

மேலும் தாங்கள் இவைபோன்றே இன்னும் பொற்புடை பற்பல நற்பெருஞ் செயல்களையும், இந்நகராண்மைக்கழகத்திற்கும், இது போன்ற பொது நிலையங்கட்கும், வேண்டியவற்றை விருப்புடன் அளித்தும், தங்கள் ஆட்சியில் தயங்குறும் இருபத்தேழ் கோவில்களும் இருபத்தேழ் தாரகையாய் விளங்கத் தாங்கள் அவற்றின் நடுவண் முழுமதியென விளங்கி, குறைவிலா நிறைவாய் கோதிலா அமுதாய் ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றாய் திகழ்ந்து வரவும் தங்களது பத்தாண்டு ஆட்சிவிழா பற்பல என்றும் பண்புடன் நடந்தேறவும், திருவருள் பாலித்துத் திறனுறச் செய்யுமாறு, எல்லாம்வல்ல இறைவனை மனமார எண்ணி, வாயார வாழ்த்தித் தலையார வணங்குகின்றோம்.

இங்ஙனம்,

மாயூரம் நகராண்மைக் கழகத்தார்

C. கனகசபைச் செட்டியார், தலைவர்.

[சுபானுஆண்டு ஆவணித்திங்கள் உ௦-ம் நாள், 5—9—1943]

உ
சிவமயம்.

தருமபுர ஆதீனத்தின்
24-வது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்ற
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்
பத்தாவது ஆண்டு ஆட்சிவிழாக்கொண்டாட்டத்தின்போது
மாயூரம் ஊராண்மைக் கழகத்து உத்தியோகச் சங்கத்தார் வாசித்தளித்த

வாழ்த்துரை.

துறவரசு ஆளும் தூயநற் பெரியோய்!

அறம் எனும் ஒன்றை ஆன்றோர் அந்நாள் முப்பத்து இரண்டென மொழிந்தனர். இந்நாள், தங்கள் ஆட்சி இத்தரணியில் தோன்றியது முதல், அவ்வறச்செயல் முப்பத்திரண்டோடு முற்றுற எண்ணாது, தங்களைச் சார்ந்து தான்பெருக்கடைய எண்ணி, இன்று நம் நாட்டில் ஆங்காங்கு ஏழைமக்கள் இளகிய நெஞ்சிலும், பிறவா யாக்கைப்பெரியோன் உறையும் கண்கவர் தோற்றக் கற்றளிபலவினும், சொரிபழந் தாங்குச் சோலைபலவினும், வெள்ளக்கஷ்டம் விரிந்த இடத்தும், அரசியல் போர்நிதி ஆர்ந்த இடத்தும், ஏட்டுமன்றமாம் இணையிலகத்தும், அலுவலகத்திலும், அடியார் உளத்திலுமாக தன் உருவிரிந்து தழைத்து "என்தொகை இனிமேல் முப்பத்து இரண்டென மொழிவாரோ" என எண்ணி மொழிந்து இறுமாந்திருக்கின்றது.

ஒழுங்கு முறைக்கு ஓர் உறையுளாம் என்னதழங்கும் அரசே சண்முக தேசிக!

தாங்கள் இவ்வரும் பெரும் நிர்வாகத்தை, கண்ணிற் சொல்லியும், செவியின் நோக்கியும், எவரெவர் எத்திறத்தர் அத்திறத்தராய் நின்று அவரவர்க்கு ஆவன கூறியும், ஏற்புடைச் செயல்களை இனியவாய்ச் செய்தும், பற்பல செயல்களைப் பார்வையிற் செய்தும், தான்புரிச் செய்கைகளைத் தானே செய்தும், தங்கள் அரிய நிர்வாகத்தை ஆற்றி வருவதோடன்றியும் தங்கள் நிர்வாகத் தனித்தனி பிரிவிற்கும், அடிகள் பலரையும் ஆழ்ந்த அறிவுடை நல்லோர் பலரையும், "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண்விடல்" என்ற பொன்மொழிக்கிணங்க புகுத்தி, அவ்வந் நிலையில் அமைவுறச் செய்து, உயர் நிர்வாகம் உஞற்றி வருகின்றீர்கள் என்பது பறையறைந்தாலென பரந்து உலவுகின்றது. இத்தகைய இணையில் செயலால் நீணிலம் இதனில் நிர்வாகம் எனப் பேசுறும் ஒன்று, பத்தாண்டுகளாக தங்களாணைக்குத் தலைகுனிந்து நின்று குற்றேவல் செய்யுங் கோலமதனை, உத்தியோகத்துறையில் ஒருவாறு அனுபவமுள்ள நாங்கள் பலகாலும் மெச்சிமெச்சி பேசியிருப்பினும், அதை வாயாரச் சொல்லி வாழ்த்தும் வாய்ப்பு இப்பொழுது கிடைத்திருப்பதால் அதைவிரிவான முறையில் விளம்புவதற்கு விரும்பினோம்.

ஆலவாய்ச் சொக்கர் அடியினைப் போற்றும் சீலம் நிறைந்த செம்மால் வாழி!

தாங்கள் இன்றேபோல என்றும் இருந்து தமிழ்த்தாய் தன்னைத் தகவுறச் செய்து, ஆலயம்பேணி, அறம்பல நாட்டி, ஏழைபங்காளராய் இனியனசெய்து, பன்னாள் இருந்து, பண்புடன் வாழ்ந்துவரக் கருணை செய்யுமாறு அம்மையப்பனை-அருளுடைக் கடவுளை- எம்மையாளும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மாயூரம்,
5—9—43.

இங்ஙனம்
மாயூரம் ஊராண்மைக் கழகத்து உத்தியோகத்ச் சங்கதார்.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்
24-வது குருமூர்த்தியாகிய
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்
பத்தாண்டு ஆட்சிவிழாக் கொண்டாட்டத்தின் பொழுது
பிறையாறு தரங்கம்பாடி மக்களின் சார்பாக வாசித்தளித்த

வாழ்த்துரை

தருமையமர் குருமணியே தலைவ வாழி!

உலகியல்துறை ஒன்றிலேயே உழன்று உழன்று தம் வாழ்க்கையைப் பெரிதும் வீணிலே கழிக்கும் உலகமாந்தர், புனிதத்தன்மை வாய்ந்த மனிதப்பிறப்பின் மாண்பினை யுணர்ந்து, செவ்விய நெறியினின்று கடைத்தேறும் வண்ணம் தாங்கள் மேற்கொண்டிராநின்ற சமயப்பணியின் ஆட்சித்திறம் கண்டு வியவாத மாந்தரும் உளரோ.

சமயப்பணிபுரி சம்பந்த மாயோய்!

திருக்கயிலாய பரம்பரையில் குருபரனாய் எழுந்தருளும் தாங்கள், மாந்தர்கள் பொய்வந்துழலும் சமயநெறியிற் புகாது "சைவசமயமே சமயமெனவும் சமயாதீதப் பழம்பொருளாம் பரசிவமே" தனிப்பெருங் கடவுளெனவும் கண்டு கேட்டு உணர ஆலயம் புதுக்கியும் அருமறை பயிற்றியும் சாத்திர நூல்களைத் தான் வெளிப்படுத்தியும் அறிஞர்கள் தம்மால் அறவுரை யாற்றியும் ஞானசம்பந்த நல்லிதழ் நடத்தியும் தாங்கள் மேற்கொண்டு ஆற்றும் செய்கை எம்மால் வாழ்த்தும் தகையதன்றி சாற்றுந்தகையதன்று.

பெருமையில் எளிமைகொள் பெருந்தவக்குரிசிலே!

உலகம் போற்றும் உயர்நிலைவாய்ந்த தாங்கள் ஒருபோது ஏழைக்குடிலாம் எம்மகம் நண்ணி, எம்மொடும் பல்கால் இன்மொழி பயின்று, எங்களை மகிழ்வித்த தொருகாட்சி "பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு" என்ற பொய்யாமொழிக்கே எடுத்துக்காட்டாய் இலங்கும் தங்களது மாசற்ற மனப்பண்பை மறக்கத்தான் ஒண்ணுமோ? யாங்கள் பலநாள் தங்களுடன் பயின்றக்காலும் தலைநாட் கண்ட விருப்பமே கொண்டு எம்மொடு பழகிய இன்பச் செயலை என்னென் றுரைப்போம்; யாதெனப் புகழ்வோம்.

மதுரைச் சொக்கர் மலரடி மறவா சதுரப்பாடுறு சண்முக தேசிக!

தண்டமிழ் நாட்டில் சைவ மோங்கவும் தமிழ்வளம் பெருகவும் சென்ற பத்தாண்டில் செய்துறும் அருளாட்சி வானுற வோங்கி வளம்பல பெற்று வாழிய பெரிதே! வாழியபெரிதே!!

பிறையாறு, 5—9—43.

இஙஙனம்,
பிறையாறு தரங்கம்பாடி வாசிகள்.

AN ADDRESS OF FELICITATION
TO
HIS HOLINESS SRI LA SRI SHANMUGA DESIKA GNANASAMBANDHA PARAMACHARYA SWAMIGAL,
DHARMAPURAM ATHINAM, DHARMAPURAM.

Most Revered Holiness,

We, the citizens of Shiyali, have very great pleasure in expressing our feelings of joy and esteem on the memorable occasion of the celebration of the first decennial rule of your Holiness.

As the worthy head of one of the most leading Saivaite mutts in South India your contribution towards the spread of Saivaism and Siddhantha philosophy has been very valuable. The living interest your Holiness evinced in the successful conduct of the Siddhantha Conferences held year after year is a remarkable testimony to the innate love of your Holiness for the dissemination of spiritual knowledge to one and all. It is highly delightful to note that by arranging thought-provoking religious discourses in all shrines during festival times, you have really sought to stir the religious fervour in your devotees and have helped them considerably in their search after Truth.

As the happy successor of a brilliant line of pontiffs, you have not lagged behind in distinguishing yourself as an earnest patron of letters. The founding of a Patasala for the imparting of Saivaite culture and a high class Tamil Organ 'The Gnanasambantha' bristling with rich stores of Siddhantha philosophy, the publication of many religious ancient Tamil works in Literature and Philosophy from cudjan leaves and above all, affording the facility of a consulting library in every Devasthanam under your control have won for you the lasting gratitude of every close student of Tamil.

We are much struck with the vast improvements you have made in the local Brahmapureeswarar Temple and the renovations you have done of a number of small shrines around Shiyali. It is highly gratifying that you have planned to do a lot in future and we eagerly wish that your schemes are fulfilled.

We are happy to observe that your constant visits to Devasthanams have to a very large measure helped to systematise the conduct of worship in temples. We are comforted to learn that during your tenure of office these ten years the source of revenue from temple lands in the Taluk has considerably increased.

In fine, we all fervently pray Lord Chockalinga to bless you with long life and health to carry on your noble mission with ever-increasing success for many a long year to come.

Shiyali,
2—9—43.

We beg to remain,
Most Revered Holiness,
Your Ever Devoted Citizens Of Shiyali.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

24-வது குருமூர்த்தியாக எழுந்தருளி அருளாட்சி புரிந்துவரும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

10-வது ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில்

திருவையாறு பஞ்சாயத்து போர்டார், ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமூர்த்திகள் திருவடிகட்குச் சமர்ப்பிக்கும்

வாழ்த்துரைகள்

---

1. *அவனியெலாமுய அவதரித்தருளிய ஆசாரிய! இந்நகர் நடு நாயகமாக இலங்கும் ஸ்ரீ பஞ்சநதீசுவரர் திருக்கோயில் பரம்பரை டிரஸ்டியாகிய தாங்கள் ஆட்சிக்கு வந்த பத்தாண்டுகளில் பரிவுடன் புரிந்தருளிய பல பணிகளை யென்னென்று எடுத்துரைப்போம்! என்னென்று எடுத்துரைப்போம்!*

2. *தேவாலயங்களைச் சீர்பெறவாக்கிய தேவ தேவ! தங்களாட்சிக்குள் மாட்சிமைப்பட்ட இருபத்தேழு ஆலயங்களும் தாரகைகளாகத் தண் மதியமாகிய தங்கள் அருளொளிவீசி வரலைக் கண்டும், கேட்டும், முன்னையினும் பன்மடங்கு மனமகிழ்கின்றோம்.*

3. *உண்மாசகற்றி ஒளியுருவாக்கும் சண்முக தேசிக சற்குருமூர்த்தி! எங்களூர் திருக்கோயிலின்கண் நித்திய நைமித்திக பூசைகளும் விழாக்களும் குறித்த காலத்தில் சிறப்பாகச் செய்யச் செய்வித்தருளியும், சைவசமயச் சொற்பொழிவு மன்றமொன்று வனப்புற நிறுவி அடிக்கடி சைவசமயச் சொற்பொழிவுகள் புரியவருளியும், நூல்நிலையம் ஒன்றைப் பயன்பட மன்றத்து நிறுவியும், ஆலயங்களை ஆங்காங்கே நிலைபெற வரைவித்தருளியும், ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி மகாகும்பாபிஷேகத்தினை மாட்சிபெற செய்வித்தருளியும் உள்ள தாங்கள் நீடூழி வாழ்க! நீடூழி வாழ்க!*

4. *அருட்பெருந்தகையீர்! 10 ஆண்டுக்குள் மடாலயங்களும் திருக்கோயில்களும் பலவகையிலும் முன்னேற்றமடைந்துளதெனலை யார் மறுக்கமுடியும்! யார் மறக்கமுடியும்! எங்களூர் காவேரித்தீர்த்த பூசைப்படித்துறையினைப் பல்லாயிர ரூபாய் செலவில் சொல்லரும் திருப்பணி செய்தருளிய சிறப்பிற்காக எங்கள் நன்றியினை யென்றும் செலுத்துவோம்.*

5. *தனக்கென வாழாப் பிறர்க்குரியாள! எங்களூருக்குத் திங்கடோறும் தவறாது எழுந்தருளித் திருக்கோயிலைக் கண்காணித்து வருகின்றீர்களென்பதைக் கண்டுள்ளோம். தண்டமிழுக்கும், சைவத்திற்கும் பயனுள்ளவற்றைப் பண்புறத் தங்களாட்சிக் காலத்திற்றான் நடப்பித்தருளியிருக்கின்றீர்கள்.*

6. நாவலர் போற்றும் நற்பெருங் குரவ! தங்கள் ஆட்சிக்காலத்தன்றே ஞானசம்பந்தம் என்னும் நற்றமிழ் திங்கட்டாள் நானில மக்களை மேனிலைக்கு ஆளாக்குகின்றது.

7. அருளுருவார்ந்த திருவுருவுடையீர்! எல்லாரு மின்புற்றிருக்க எண்ணி யிருக்கும் தாங்கள் பெறும் புகழுடன் ஸ்ரீ தருமஸம்வர்த்தனீ சமேத ஸ்ரீ பஞ்ச நதீசுவரன் திருவருட்பெருக்கால் நீடூழி வாழ்க! நீடூழி வாழ்க!

திருவையாறு, 3...9...43.

இங்ஙனம்
பஞ்சாயத்துப் போர்டார்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில்

24-ஆவது குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்து வருகின்ற

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகளின்

10-ஆவது ஆண்டு ஆட்சிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றபொழுது

மாயூரம் தமிழ்க்கழகத்தார் வாசித்தளித்த

வாழ்த்துரை

செக்கர் வார்சடைச் சொக்கநாதப்பிரான் பொற்கழல் போற்றும் புண்ணிய வாழி!

சொக்கலிங்கப்பெருமான் மதுரையில் இருந்து மாத்தமிழ்வளர்த்த செயலது போலவே செய்யநற்றருமையினும் எழுந்தருளி அமிழ்தென விளங்கும் தமிழ்மொழி தன்னை உலகெலாம் போற்ற உயர்த்தற் பொருட்டே தங்கள் ஆதீனத்தின் தனி முதல் தோன்றலாகிய கமலைஞானப் பிரகாசரின் செவ்வியகரத்தில் அன்று பொற் றாமரைத் தடத்தில் சேர்ந்தனரோவென கற்பனைசெய்து கழறிக்கொண்டிருந்தனம். ஆனால் அப்பெருமான் தன்பெருங்கருணையால் தங்களை இவ்வாதீனத்தின் 24-வது குருமூர்த்தியாக வீற்றிருக்கச் செய்து தனது திருவுள்ளப்பாங்கின்படியே தங்கள் ஆட்சியின் வாயிலாக இன்று தமிழ்ப்பணி பலவும் தாழாது உஞற்றி வருகின்றார் என்பது யாங்கள் கண்டறிந்த உண்மை.

நீதி நிர்வாகம் நிரம்பிடப் புரிவோய்!

தங்கள் அருளாட்சி இவ்வாதீனத்தில் தொடங்கப்பெற்று இற்றைக்குப் பத்தாண்டுகளும் சில திங்களுமாயின. இவ்வுலகில் பத்துப் பத்தாண்டு ஆட்சி செய்தாரெவரும் செய்திராத பன்னருஞ் செயல்களைத் தங்கள் பத்தாண்டாட்சியில் செய்திருக்கின்றீர்கள். தங்கள் ஆட்சியில் இருள் நீங்கி ஒளியடைந்த மாளிகைகள் எத்தனை? குடமுழுக்குப்பெற்ற கோயில்கள் எத்தனை? ஓலை சேர்ந்து மூலையில் கிடந்து தங்கள் முயற்சியால் தயங்குருப்பெற்று நந்தமிழ்நாட்டில் நடம்புரியும் சைவ நூல்கள் எத்தனை? 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் நல்விழாப் பொலிவு கண்டார்தல்' என்ற நம் தெய்வப் பெருமான் திருவாக்கிற் கிணங்க பெருவிழாக்கொண்ட அரும்பெரும் கடவுளர்கள் எத்துணையர்? மூங்கையெனவே முடங்கிக்கிடந்து தற்காலம் தங்கள் ஆதரவில் சொன்மூகிலென்ன சொற்பொழிவியற்றும் புலவர் எத்துணையர்? "சைவத்தின் மேற்சமயம் வேறிலை" என்ற பொய்மை நீங்கிய புகழுரையை மனங்கொள அறிந்த மக்கள் பல்லாயிரவர்? மெய்கண்ட சாத்திரத்தைக் கைகண்டவர் கணக்கற்றவர்? மாநாடுகண்டு மகிழ்வுற்றோர் மட்டற்றவர்? இவ்வாறு செயற்கரிய செய்துவரும் தங்களது சீரிய இச்செயல்களைக் கண்டு தங்களிடம் அன்புபூண்ட இப்பெரியோர்கள் அவற்றை உள்ளவாறு வெளிப்படையாக உரைக்க முற்பட்டார்கள். பெரியோர்கள் உண்மையை உரைக்க ஒருக்காலும் பின்வாங்கமாட்டார்களல்லவா? ஆதலின் நிர்வாகத் துறையில் மிகமிக முற்போக்கடைந்துள்ள, சச்சிவோத்தம. சர். சி. பீ. இராமசுவாமி அய்யர் அவர்கள் தங்களுக்குக் கொண்டாடும் இத்தகைய விழாவில் தலைமை வகிப்பது மிகமிகப் பொருத்தமென்பது யாங்கள் சொல்லாமலே விளங்கக் கூடியதாகும். மற்றும் இக்கொண்டாட்டத்தை அமைத்த பற்பல நல்லறிஞர்களும் தங்களது நிர்வாகத்திறமையைப் போற்ற முன்னிற்கின்றனர்.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாள!

சென்ற ஆண்டு அருள்மிகு அடிகள் விபுலானந்தர் தொடங்கி வைத்த "மாயூரம் தமிழ்க் கழகத்திற்கு" அவ்வப்பொழுது பேராதரவுகாட்டியும், தங்கள் திருமடத்தில் சாரும் புலவர்கள் பலரைச் சொற்பொழிவாற்ற சோர்விலாதனுப்பியும் நன்கொடை அளித்தும் பேணிவருகின்ற தங்களது அருங்கருணைக்கு யாங்கள் பெரிதும் கடப்பாடுடையோம். எங்கள் கழகம் தங்கள் ஆதீனத்தின் மிக அண்மையிலேயே நிறுவப்பெற்றிருப்பதால் தங்கள் அன்புகூர்ந்த மேற்பார்வையையும் கருணையையும் அதன்கண் செலுத்தி, சென்ற காலத்தில் பழுதிலாத்திறனுக்கியது போலவே இனி எதிர்காலத்திலும் சிறப்புக்கள் செய்து சீரிய முறையில் செயல்பல நடத்தித் தாங்கள் எளியோர் பலர்க்கும் ஏற்றன புரிந்து அருந்தமிழன்னைக்கு அணி பலவாக்கி பல்லாண்டிருந்து பயனுற வாழ்ந்து வரவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றனம்.

இங்ஙனம்,

தலைவர்கள்,	பொருளாளர்.	அமைச்சர்கள்,
C. கனகசபைச் செட்டியார்.	S. இரத்தினம் பிள்ளை.	S. M. முத்தையஞ் செட்டியார்.
V. இராகவய்யங்கார் M. A., L. T.,		S. இராமலிங்கம் பிள்ளை.
		A. தருமநாதன் பிள்ளை.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில்

24-வது குருமூர்த்தியாக எழுந்தருளி இருக்கின்ற

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகளின்

10-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடிய பொழுது

மாயூரம் தாலூகா சாரண சங்கத்தார் வாசித்தளித்த

வாழ்த்துரை

அன்புருக்கொண்ட ஆதீனத்தலைவ!

தாங்கள் அருளாட்சி ஏற்றீர்கள். பத்தாண்டுகள் பயனுற்றன; பற்பல நற் செயல் பண்புடன் கூடின என்பதைக் கேட்ட யாம் இறுமாந்து எழுந்தனம்; களி மிகக் கொண்டோம்; கண்டோம் காட்சியை; மக்கள் மனதில் மகிழ்ச்சி பொங்கு கிறது; கற்றோர் உள்ளத்தில் கல்வி பொங்குகிறது; கலைஞர் நெஞ்சில் கலை பொங்கு கிறது; எங்கள் சாரணர் குழுவில் பொதுநலத் தொண்டின் ஆர்வம் ததும்புகிறது. ஆர்வமதனை அணிந்துரைக்கின்றோம்.

எதிர்காலப் பெரியோர்களாக இன்று மதிக்கப்படும் பள்ளிச் சிறுவர் களுக்குப் பொதுநலத் தொண்டைப் போற்றி ஆற்றத்தகுந்த அறிவை உள்ளத்தில் செறித்து ஊடுற நிற்கும்படி செய்வதற்கு இக்கால ஆசிரியர்களும் அவர்களுடைய கண்காணிப்பாளர்களும் கடமைப்பட்டவர்கள் என்பதை நன்குஉணர்ந்து அதற் காகக் குருளைய ஆசிரியப் பயிற்சி கூடிச்செய்யவேண்டும் என்று எங்கள் உள்ளத் தெழுந்து ஓங்கிய ஆர்வத்தைக் கொள்ளுமிடமாகிய தங்களிடத்து யாங்கள் தெரிவித் துக்கொண்டவுடன் எங்கள் வேண்டுகோளைத் தங்கள் கொள்கையாக உடனே ஏற்று மன்னம்மந்தலென மக்கள் அறியாது பிதற்றும் அச்சிற்றூரை உண்மை யாகவே மன்னன்பந்தலென மயங்குறும் வண்ணம் பத்தின்மேல் ஏழெனப்பகரும் கொட்டகைகளையும், தண்ணீர்வசதிக்குத் தனிப்பெரும் குழாய்களையும் அமைத்துக் கொடுத்தும், வந்தோர் பலருக்கும் வரையாது அறுசுவை உண்டி அனைத்தும் வழங் கியும் எங்கள் நோக்கம் இனிது நிறைவேறும் வண்ணம் பெருந்துணை புரிந்து பேராதரவு காட்டினீர்கள். மேலும் தங்கள் உத்தரவைத் தலைமேல்கொண்ட அருள்நந்தி என்னும் அடிகளை அனுப்பி எங்கள் முகாமிலிருந்த பலருக்கும் அறவுரைதந்த அரும்பெரும் கருணைக்கு எங்களது மனமார்ந்த நன்றியை இன்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மற்றும் தங்கள் திருமடத்தில் எங்களைத் தகவுட னேற்று இன்சொல் பலகூறி எங்களனைவர்க்கும் தனித்தனியே புத்தகங்கள் பல வழங்கியும் காட்சியளித்தும் கடமைஉணர்த்திய காண்தகுதோற்றம் இன்னும் எங்கள் மனக்கண்முன்னே நிலவுகின்றது.

சிறுவர் கல்வியே செல்வமாம் என்ன கொள்ளும் பான்மை கொண்டுளோய் வாழி !

தக்கார் கையால் தொடங்கிய எந்தச்செயலும் வான்சிறிதாப் போர்த்து விடும் என்னும் பொன்மொழியின் பொருள் சென்ற ஆண்டில் நடத்திய மாணவ மாணவி இசைப்போட்டிக்கு வெண் பொற்பதக்கங்கள் நல்கியதின் காரணமாக, இன்றைக்கு இசைக்கலையும் நடனக்கலையும் விருவிருப்புடனும் சுறுசுறுப்புடனும் வளர்ந்து வருவதால் எங்களுக்குப் புலனுகிறது.

இன்றைய விழா போன்றே தங்கள் ஆட்சிக்கு பலப்பல பத்தாண்டு விழாக்கள் கொண்டாடப்படவேண்டும் என்றும், தங்கள் அருள்நோக்கத்தால் எங்கள் சாரண இயக்கம் பயன் பலபடைத்து அரசெனத் தழைத்து ஆலென ஊன்றி வளர்ச்சி பலவும் வாய்ப்புறவேண்டுமென்றும் அருளேவடிவாம் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

தங்கள் அன்பும் பணிவுமார்ந்த

T. P. சீனிவாசன், B.A., L.T., A. D. C.
S. இரத்னம் (S. R. Bros.)
R. இராமலிங்கம் பிள்ளை,
(பல்லவராயப்பட்டு.)
தலைவர்கள்.

ௐ

ADDRESS PRESENTED TO

HIS HOLINESS SRI-LA-SRI
SHANMUGA DESIKA GNANASAMBANDA PARAMACHARIA SWAMIGAL

OF DHARMAPURAM ADHINAM

on the occasion of the celebration of the First Decennial of his administration of the Mutt and its associate Temples

BY

THE PRESIDENT AND MEMBERS OF THE SAIVACHARIYARS' SANGAM.

YOUR EXALTED HOLINESS,

We, your humble and devoted disciples beg to offer to you on this unique and memorable occasion our heartfelt greetings and respectful salutations. The Almighty, in His infinite mercy, has been pleased to entrust the administration of this most hoary and sacred Adhinam of Dharmapuram to your benevolent care and farsighted statesmanship. May we humbly submit that you have more than fulfilled the great trust laid upon you by the Lord?

Your Exalted Holiness has been a shining example to us in versatility of intellect, in profundity of scholarship, in devotional piety, and in that suavity and geniality of temperament, which is the crown and consummation of human character. It is no exaggeration to say that during the past ten years of Your Exalted Holiness' benign and praiseworthy administration, the Mutt and other allied charitable institutions have advanced immeasurably in usefulness, have become a source of light and learning to Hindus of Southern India, and an impregnable stronghold of Saiva Siddhanta culture and philosophy.

May we remind Your Exalted Holiness, in the fulness of a heart overflowing with gratitude, that your services to the Hindu Religion, Hindu Philosophy and Hindu Culture are unrivalled today as becoming the Head of the most sacred religious institution in South India? Your efforts to renovate and rebuild Hindu Temples are an earnest of your passion for Hindu architecture, and the success that has attended your efforts will redound to your everlasting fame as a great Hindu savant of India. In the field of Hindu literature, your endeavours have elicited universal approbation and applause. The Saiva Siddhanta Conference that your Exalted Holiness organized recently is a standing monument to your zeal to further the religion of Saiva Siddhanta in this ancient Tamilakam of ours. The various lectures that have been organized under your wise and inspiring leadership have also promoted the cause, which you held dear to your heart. Above all Your Exalted Holiness has endeared yourself to the Saivites of Tamilakam by organizing and financing the publication of learned and scholarly treaties on Saiva Siddhanta Philosophy. The magnificent Library, which Your Exalted Holiness has built up with such erudite skill and enormous industry, and which has been opened by a distinguished Scholar and Statesman like Sachivothama Sir C. P. Ramaswamy Iyer, is but another monument to your fame as a Patron of Tamil learning and culture.

May the Almighty continue to shower on you His choicest gifts so that you will shine as a beacon light to us, your humble disciples, scattered far and wide in this sacred land of ours, which is now beset with the darkness of sin and ignorance born of an inhuman war!

Om Namasivaya!!

14, Picha Pillai St.,
Mylapore, Madras.
5—9—43.

We beg to remain,
Your most humble and devoted disciples,
The Members of the Saivacharyars' Sangam.

உ
குருபாதம்
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்
இருபத்துநான்காவது குருமூர்த்தியாக எழுந்தருளியுள்ள

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளாட்சியின்

பத்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில்

கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேசப்பெருமான் ஆலயத்தில் உள்ள
ஸ்ரீ மங்கள விலாஸ நூல்நிலயத்தின் சார்பாக வாசித்தளித்த

நல்லுரைப் பத்திரம்

சைவம் தழைக்கச் சார்ந்தருள்புரியும் சண்முகத்தேசிக சற்குருமணியே!

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாயும் விளங்கும் சிவபரஞ் சுடரின் முழுமுதற்றன்மையை உலகினர்க்குணர்த்தும் சைவசமய நூல்களை நவீன முறையில் பலரும் விரும்பத்தக்க வகையில் மேம்பாடுடையதாக அச்சிட்டு, காகிதம் கிடைத்தற்கரிய இக்காலத்திலும், யாரும் எளிதில் அடையும் படியாக இலவசமாக உதவி வருவதுமன்னியில் அந்நூற் பகுதிகளை எமது நூல்நிலயத்திற்கும் உதவி வருவதை நாங்கள் மிகவும் நன்றியுடன் பாராட்டுகின்றனம்.

தக்கவர் பலரால் சமயப் பிரசாரம் தலங்கள்தோறும் தழைத்திடச் செய்வோய்!

யாதொரு தெய்வங்கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே எழுந்தருள் புரியும் எங்கள் மாதொரு பாகனுரின் மாண்புசேர் விழாக்கள் நடக்கும் தலங்கள்தோறும் தக்கார்பலரை அனுப்பிச் சைவசமய சமரசத்தன்மையையும் அதன் மேன்மையையும் மக்கள் நன்குணரச்செய்து சமயப்பிரசாரத்தைச் சிறப்புற நடத்திவருவதுடன் தங்களது ஆட்சிக்கு உட்பட்ட தேவஸ்தானங்களிலெல்லாம் நூல் நிலயங்கள் பல அமைத்தும், எமது நூல்நிலய ஆண்டு விழாக்கள் போன்ற இதர தேவாலய விழாக்களிலும் தங்கள் ஆதீன தம்பிரான் திருக்கூட்டத்தினரில் ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் போன்ற பெரியோர் பலரை அனுப்பி, சைவ சமயத்தின் மேன்மை பொருந்திய நுட்பங்களை எடுத்து உபன்யசிக்கச்செய்து எமக்கெல்லாம் நல்லறிவு புகட்டி வருகின்றமைக்கு நாங்கள் எமது நன்றியறிதலை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பத்திரிகை மூலம் பாரோர்க் கெல்லாம் பந்நூல் ஞானம் பரவிடச் செய்வோய்!

தென்மொழியாய நம் தமிழ்மொழி மூலமும், மன்மொழியாய ஆங்கில மூலமும், சைவசமய உண்மைகளை, உலகினர் உணரக்கூடிய வகையில் எளிய சந்தாவில் "ஞானசம்பந்தம்" என்ற மாதத்தாள் ஒன்றைத் தங்கள் ஆதீனத்தின்சார்பில் (முதல் முதலாக இதர மதஸ்தாபனங்களுக்கும் வழிகாட்டக் கூடிய வகையில்) ஆரம்பித்து நடத்திவருவதுடன் எமது நூல் நிலயம் போன்ற ஸ்தாபனங்களுக்கும் ஷை சஞ்சிகைகளை உதவி, பலவிதத்திலும் சமயப்பிரசாரம் செழித்தோங்கும் வண்ணம் அருள்புரிந்து வருவதை இந்நிலயத்தார் மிகவும் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள்.

ஞானசம்பந்த ஞானுச்சார்ய நீ ஞாலமீதினிலே வாழிய நீடே!

ஆதீன பரிபாலனம், மடாலயத்திருப்பணி, கோவில்கள் புதுக்கிக் குடமுழுக் காட்டல், தருமபுர புனருத்தாரணம், நூல்கள் பல பதிப்பித்தல், பழய நூல்களைச் சேகரித்து சேமித்தல், கற்றோரை ஆதரித்தல், ஆகம தேவாரபாடசாலைகள் அமைத்தல் மற்றும் எமது ஆலய மாசிமக விழாவிற்குத் தேரோள் முதலிய அனுப்பி அரும் பணிகள் பலவும் இயற்றி வரும் தங்களது ஆட்சியின் பத்தாவது ஆண்டுவிழா இன்று கொண்டாடப் பெறுவதே போன்று இன்னும் பல வெள்ளி, பொன், வயிர விழாக்களை தங்களுக்கு நடத்தி நாங்களெல்லாம் கண்டுகளிக்க எல்லாம் வல்ல இறை வனுகிய எமது ஸ்ரீமங்களாம்பிகா சமேத ஆதிகும்பேசப்பெருமான் நுமக்கு அரோக திடகாத்திரமும் நீண்ட ஆயுளும் நல்கவேணுமாய் மன மொழி மெய்களால் பணிந்து இறைஞ்சுகின்றனம்.

வாழி சிவமயம் வாழி சிவனடியார்
வாழி திருத்தருமை மாமடந்தான் —வாழிமிகச்
சண்முகத் தேசிகனுர் தாரணியிற் பல்லாண்டு
மண்ணவர்கள் வாழ்த்த மகிழ்ந்து.

இங்ஙனம்

கும்பகோணம் 5—9—43.

கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேசர் தேவஸ்தானத்து
ஸ்ரீமங்களவிலாஸ் நூல்நிலய
நிர்வாகிகள்.

உ

தமிழ்வாழ்க

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்துநான்காவது குருமூர்த்தியாக எழுந்தருளியுள்ள

அருட்டிரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியர் அவர்கட்கு

பத்தாம் ஆண்டு நிறைவு விழாவில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் கூறிய

வாழ்த்துரை.

சைவநல் வாழ்வாம் தரும புரமடம்
பன்னெடுங் காலம் பண்பார் தவஞ்செய
வந்திங் கெழுந்த மாபெருங் குரவன்!
நால்வர் நற் புகழ் நிலை நாடியோ ருருவம்
கொண்டினி திந்த மண்டிணி ஞாலத்துப்
பண்டையிற் சைவந் தண்டமிழ் ஓங்க
வந்தெனத் திகழும் மாண்புயர் தேசிகன்!
சமய வாழ்வே தன்பிறப் பாகலின்
இளமையிற் றுறந்து நிலவுறு தவத்தோன்!
சான்றோர் நூலும் தகையார் செய்யுளும்

சமய தத்துவ சாத்திரக் கலைகளும்
கற்றுத்துறை போகிய முற்றறி புலவன்!
தென்றிசைச் பேற்றால் திருமுகம் அருளிய
எம்பெரு மான்றன் இரும்பே ரருளென
அடியார்க் கருங்கலை அருளும் ஆசான்!
மண்ணுள நாளெலாம் தண்ணொளி பரப்பும்
விண்ணுண் மீனின் எண்ணுமா லயங்கள்
நாவர சாண்ட நல்லூழி போலத்
தோமில வாகத் தூய்மைகள் ஆற்றித்
துங்கமார் தனது பொங்கொளி போன்மென,
கைலையின் உருவென, கண்ணுதல் அருளும்
நிலவினற் பெருக்கென இலகுறப் புதுக்கலின்
பாரெலாம் போற்றும் சீர்பெறு பண்ணவன்!
ஆறுசேர் பொழுதில் ஊறிலாப் பூசையும்
திங்களும் ஆண்டும் திகழுபல் விழாக்களும்
எங்கணும் இனிதுற இயற்றிடும் திறலோன்!
நால்வ ரருளிய நற்றமிழ் மறையைப்
பண்முறை யறிந்து பயிற்றுவார் பாலே
திண்ணிதிற் கற்கும் செழுநிலை யமைத்து
மாணவர் பற்பலர் ஊண்முதல் பெற்றுப்
பீடுற அருளும் ஈடிலாப் பெருமான்!
அன்னவர் தம்மால் ஆலய மெங்கும்
பண்ணுற ஓதும் பாங்கருள் மூர்த்தி!
ஆகமச் சாலையும் அங்ஙனே அருள்வோன்!
சாத்திரக் கலைகள் தமையெலாம் கற்றோர்
நாத்திறம் படைத்த நாவலர், அவற்றின்
நுண்பொரு ளெல்லாம் எண்பொரு ளாச்சொல
வல்லோர் தமது மாநாடு கூட்டி
உலகிற் குதவும் தலைமைசால் வள்ளல்!
கலைநூல் பலவும் கவின அச் சியற்றி
எவ்வெவர் தமக்கும் இனிதருள் அறவோன்!
சைவ உலகாள் தண்ணரசின் குடை
கவினுற நிழற்றல் கண்கூடாமெனத்
தலமெலாம் தென்னைத் தண்ணிழற்படுத்த
துங்கமார் நல்லறம் தோய்ந்துயர் புங்கவன்!
இன்னதோர் சீரெலாம் எய்திய வெங்கள்
சண்முக தேசிக ஞானசம் பந்த
சைவநல் வாழ்வாம் தண்ணருள் மூர்த்தியின்
திருவடி ஊழிகள் திகழ்ந்துவா ழியரோ!

கருந்திட்டைக்குடி,
சுபானு, ஆவணி, உம.

ஐ. குமாரசாமிப் பிள்ளை,
சங்கத் தலைவர்.

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்
24-வது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்ற
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
பத்தாவது ஆண்டு ஆட்சி விழாக் கொண்டாட்டத்தின்போது
காழிக் கல்விக் கழகத்தார் புகழ்ந்து கூறிய

அருளாட்சிச் சிறப்பு

தண்டமிழ் நாட்டில் திருக்கயி லேசன் தன்னுருக் காட்டியே சைவத்
தொண்டினை யாற்றி அகவிரு ளோட்டித் தூயமெய்ச் சிவவொளி காட்டி
எண்டிசை நீற்றுக் கொடியினை நாட்டி இணையிலா அருளர சாற்றிப்
பண்டொளிர் சைவத் தினைநிலை நாட்டும் பதிதிருத் தருமையம் பதியே. (1)

தருமையா தீனத் திருபதி னன்கிற் சார்ந்தபட் டத்தினி லுற்ற
குருமகா னய சண்முக ஞானக் குரிசிலே உமதருள் வெள்ளம்
பெருமகி தலத்தி லெங்கணும் பரந்து பேரின்பம் அளித்தலை நினைக்கின்
ஒருமன முடன்நீர் வழுத்திடும் சொக்கர் உமக்குறு துணையென அறிந்தோம். (2)

பண்டுசீ காழி ஞானசம் பந்தர் பாண்டிநன் னாட்டினிற் சைவத்
தொண்டினைச் செய்தா ரென்பதைச் செவியால் கேட்டுள மகிழ்ந்தனம் இன்றே
கண்டதோர் தருமை ஞானசம் பந்தர் காசினி முழுவதும் கருணை
கொண்டுநற் சிவத்தைப் பரப்பின ரென்னுங் கொள்கையைக் கண்டனம் நேரே. (3)

உலகியற் றுறையில் ஒன்றிலே நின்றே உலவிடும் மாந்தர்தாம் ஆத்ம
நிலையினை யுணர்ந்து சிவநெறி யடைய நிலவுதே வாலயப் பணியும்
புலவராற் பன்னூல் வெளியிடு பணியும் புகழ்மிகு சைவமா நாட்டு
நலமுறு பணியும் புரியுநுந் திறத்தை ஞாலத்தில் யார்விய வாதார். (4)

தமக்கெனக் குறித்த தலத்தினி திருந்தே தாணியை யாளர செனநீர்
நுமக்கெனக் குறித்த தருமையம் பதியா மூயர்சிவ ராஜதா னியினின்
றெமக்கினி தான ஞானசம் பந்த இதழினால் தமிழுல கொருங்கே
இமக்கொடி பாகன் திருவரு ளாணை இயக்குநுந் தகைமைதான் என்னே. (5)

ஒருமுகந் தேவா லயப்பணி செயமற் றொருமுகஞ் சீடரைத் தேட
ஒருமுகம் புலவர்க் காக்கம தளிக்க ஒருமுக நூல்வெளிப் படுத்த
ஒருமுகஞ் சைவ உண்மையைக் காக்க ஒருமுக முயிர்களுக் கருள
ஒருமுகங் கொண்டே ஆற்றுசண் முகநும் உறுபெயர்க் குறுபொருள் கண்டோம் (6)

ஆண்டுபத் தாண்டு வாழ்நும் அடியிணை என்றும் வாழ்க
காண்டகு மறைகள் வாழ்க கருதுநற் றொண்டர் வாழ்க
பூண்டிடு கண்டி நீறு புனிதவைந் தெழுத்து வாழ்க
ஆண்டவ னருளால் சைவம் அனைத்துல கெங்கும் வாழ்க. (7)

சீகாழி,
5—9—1943

இங்ஙனம்,
காழிக் கல்விக் கழகத்தார்.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்
24-வது குருமூர்த்தியாகிய

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

பத்தாண்டு ஆட்சிவிழாக் கொண்டாட்டத் தளித்த

வாழ்த்துப்பா

விண்முகில் தோயும் தண்பொழில் சூழ்ந்த
பண்ணமை மாடம் கண்கவர் வனப்பின்
பொலிவுறு தருமைப் புண்ணியத் தலத்தில்
மடாலயம் விளங்கத் தடாதகை யாட்சி
மதுரைச் சொக்கன் இதமுறப் பூசை
புரியும் பரம்பரை முருகன் திருவருள்
என்றும் நிலைத்த குன்றலில் ஆட்சியில்
திருக்கயி லாய பரம்பரை விளங்க
இருபத்து நான்காம் பட்டத்து இருந்தருள்
சண்முக தேசிக ஞானசம் பந்தன்
கல்வி நிலையமும் பல்வித அறமும்,
நூனிலை பலவும் மேனிலை விளக்கும்
ஞானச் செல்வர் நன்மா நாடும்
கற்றளி பலவும் முற்றவும் ஆக்கி
இயலிசைத் தமிழ்ப்பா என்றும் ஓங்கிட
தேவா ரம்பயில் சாலையும் நிறுவி
விதிமுறைப் பூசையும் விளங்குறச் செய்ய
ஆகமப் பள்ளியும் ஆக்கி அச்சகம்
அழகுற முன்புறம் அமைத்து மதிதொறும்
தமிழக மக்கள் தமிழமு துண்ண
தெய்வத் தேறலால் சிந்தை தெளிய
ஊனசம்பந்த உயர்வின் மையுணர்ந்
தீன சம்பந்தம் எளிதி னீங்க
ஞான சம்பந்த நற்றுள் தந்தும்
பல்வகைத் திறம் பெறு பண்பாராட்சி
ஓங்குக என்றும் உயர்ந்து வாழ்க
சண்முக தேசிகர் தாள்கள்
அடியேம் சிந்தையில் அருள்மிகப் பொழிந்தே.

திருவாரூர், 6—9—43.

டி. எஸ். தியாகராஜ ஞானியார்,
நவஇந்தியா பத்திராதிபர்.

உ

குருபாதம்

திருத்தருமபுர ஆதீன மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அருளாட்சியின்

பத்தாவதாண்டு நிறைவு விழாவில்

காரைக்குடி "செட்டிநாடு" பத்திரிகை ஆசிரியர் A. S. சர்மா மகிழ்ந்தளித்த

பஞ்சரத்ன வாழ்த்துப்பாமாலை

சீரோங்கு சண்முகதே சிகஞான சம்பந்தச் செம்மால் உன்றன்
பாரோங்கு புகழ்மேவு பத்தாமாண் டாட்சிவிழாப் பார்க்கும் பேறு
நீரோங்கு கடல்புடைசூழ் நீணிலத்தார் தமக்கின்று நேர்ந்த தீசன்
கூரோங்கு கருணையித னின்வேறு யாங்குளது கூறின் மாதோ !

முன்னுளின் குருஞான சம்பந்தன் ஐந்நூருண் டுகட்கு முன்னர்
பொன்னூர்ந்த திருத்தரும புரமெனுமித் திருப்பதியில் புகழ்சேர் பீடம்
தன்னுலே சைவமொடு தமிழ்வளர்க்கத் தொடங்கியது முதலா யிந்நாள்
நின்னுலே அவைசிறப்புற் றிலங்குமள வெவர்புரிந்தார் நினைப்பின் மன்னே !

கல்லாலின் கீழமர்ந்து நால்வர்தமக் குபதேசம் நவின்ற நாதன்
அல்லாமல் வேறெவரு நிகரிலராங் குருமூர்த்தி அருநான் கோருள்
சொல்லாலும் செயலாலும் தூய்மைதிக ழுளத்தாலும் துகடீர் கீர்த்தி
எல்லாவாற் ரூலுமியார் நின்போல்வார் எங்குருவே! இறைவ! தேவே!

பாருள்ளே பழமையதன் சிறப்பினொடு பண்பமைநற் புதுமை என்னும்
சீருள்ள திறங்கலந்த செயலாள! தெய்வீகத் திருவே! மேலோய்!
யாருள்ளம் எந்நலத்தை விரும்பிடினு மகிழ்ந்தளிக்கும் அருள்சே ரண்ணல்!
நீருள்ள தண்மையனுய்! நிறைந்திலங்கு சோதியனுய்! நீடு வாழி!

எண்ணிறந்த அறச்செயல்கள் நாள்தோறும் இயற்றிவரும் ஏந்த லேயோ!
புண்ணியத்தின் வடிவேயோ! பொங்குமருள் தங்குமுளப் புனித னேயோ!
நண்ணிடுவோர் துயர்தீர்க்கும் நாயகமே! என்றுலகம் நாளு மேத்தக்
கண்ணுதலான் றிருவருளால் கற்பகமே! நீடூழி வாழி! வாழி!!

சுபம்.

சுபானு௵ ஆவணி மீ 20௳

உ

ஸ்ரீ திருச்சிற்றம்பல நடேசர் துணை.

திருத்தருமபுரம் ஆதீனம் 24வது பட்டம்

திரு. ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்

அவர்களின்

10-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடிய பொழுது

சிதம்பரம் ஸரஸகவிராஜ

ப்ரம்மஸ்ரீ நி. செ. சிதம்பரேஸ்வர தீக்ஷிதர்

இயற்றி வாசித்துப் பாடி ஷை சந்நிதானத்தில் அளித்த

மங்கள வாழ்த்து கீர்த்தனம்.

கடவுள் வணக்கம்

स्कन्दं स्मरामि सततं सरसीरुहाक्षं
मन्दस्मिताननं मनोहर मादिवीरम् ।
छन्दश्चरश्चरण मञ्जज गर्वनिघ्नं
कन्दर्प कोटिसदृशं वरदं भजामि ॥

தமிழ்

கர்ப்பகமாம் கணபதியை ஈன்றெடுத்துக் காசினிக்கு தவினானை
பொற்கொடியாள் உமைஎன்ற பெண்ணரசிபோற்றிமகிழ் புண்யவானை
சிற்சபையில் சிறப்பாகச் சிலம்பசைய நிர்த்தமிடும் சிவபிரானை
சர்க்குருவைச் சின்மயனை சிவநாமம் ஜெபித்தென்றும் போற்றுவோமே.

ராகம் — கானடா. தாளம் — ஆதி.

பல்லவி

தர்மபுரமெனும் தரணி புகழ் திரு
நிர்மலபுரிபதி நீடூழிவாழ்க ஸ்ரீ தர்மபுரம்.

அனுபல்லவி

கர்மவினை நீக்கும் கனகசபேசன்
பிர்மவிஷ்ணுகாண பதமலரருளால் தர்மபுரம்.

சரணங்கள்

1. சிவமத ஜோதியை சகலரும் காண
குவலயத் துள்ளுயர் கவிகள் சூழ்ஞான
சுவைதரும் சொற் பொழிவாற்ற ப்ரதான
புவனம் புகழ்பல புலவர்கள் கூடின தர்மபுரம்.

2. எங்கும் சிவநாமம் எல்லோரும் முழங்க
மங்களம் பாடிபல மாதர் துலங்க
தங்க சிம்மாசனத் தில்தம்பிரான் தங்கி
கங்கா பிஷேகம்பெற்ற கீர்த்தி விளங்கும் தர்மபுரம்.

3. ஷண்முக தேசிக ஞான சம்பந்த
பண்டார சன்னதி புகழெங்கு மோங்க
ஷண்மதம் நாட்டிய சங்கரரும் புகழ்
சின்மயன் வாழ்தில்லை சிதம்பரன் கவிமகிழ் தர்மபுரம்.

4. ஆண்டுசுபானு திங்கள் ஆவணி யாவரும்
வேண்டு ரவிவாரம் வர இருபதாம்நாள்
பூண்டபட்டத்தின் பத்தாண்டு நிரைவிழாவில்
வேண்டிய தர்மத்தில் வெகுதனம் வீசும் தர்மபுரம்.

நற்குண வர்ணன வாழ்த்து மணிமாலை

கடவுள் வணக்கம்.

गणेश शैव गुरुनाथ महेश गौरी
दिनेश विष्णु वरलक्ष्मि सरस्वतीनाम्।
मनोहराब्ज चरणानि महासुखानि
तनोतु दिव्य शिवभक्तिमतां जनानाम्॥

விருத்தங்கள்.

1. கணநாதர் முதலான தேவர்களினாலயம் கவனமாய் கட்டிவைத்தும்
மணிவாசகர் முதலாம் மஹநீய சைவமத குருமார்கள் கோயில்செய்தும்
அனுதினமும் அருகில்வரும் அற்புதப்புலவர்கட் கருந்தனமளித்தும் நல்ல
குணங்களெல்லாம் நிறைந்த இணையிலா தருமபுரத்ததிபர் என்னாளும் வாழ்க

2. ஆதியாம் கைலாச அற்புதபரம்பரையி லவதரித்தோ ரினுயர்வாய்
சோதியாம் சுந்தரர் அப்பர் சம்பந்தர் மணிவாசகர்கள் செய் செந்தமிழ்
வேதமென்றே பல வித்வான்களும் புகழ் தேவார திருவாசகம்
நாதனருளா லுயர்தன் ஆதீன கோயில்களில் நாட்டியவரென்றும் வாழ்க.

3 ஆசை எல்லாம் அற்று அரன்பாதமலரிலே அனுதினம் அன்புபெற்று
காசைக் கடல்மணல்போலெண்ணி காசினியில் கர்ணனென புகழும் உற்று
வாசித்த நூல்களின் வழியே நடந்தென்றும் வற்றுதஞானமேற்றித்
தேசத்திலே உயர் தேசிகன் தர்மபுர தம்பிரானென்றும் வாழ்க.

4. அப்பர் புராணத்தை ஆராய்ந்து அதிலொளிரும் அற்புதப்பொருளெடுத்து
செப்பமுன் வந்த திரு சுப்ரமணியனெனும் சாந்தகுண புலவர் வந்து
ஒப்புயர்வில்லாது செய்த உபன்யாசமதின் உத்தமகருத்தறிந்து
முப்புரமெரித்தவர் பாதமலர் பாடிமகிழ் முனிவர் ஷண்முகர்வாழ்கவே.

5. மாவூரில் வாழ்ந்தொளிர் சர்மாவெனும் கனவான் மகிழ்ந்திதைநடத்திவைக்க
யாவரும்புகழ்திவான் ஸர். ஸி. பி. ராமஸாமி இதைத்திறந்து வைக்க
பாவலர்கள் பக்தர்கள் பலகனதனவான்கள் பார்த்திதைக் கண்களிக்க
தேவர்களும் கொண்டாட தன்பட்ட பத்தாண்டு நிறைவிழா குருவாழ்கவே.

6. நல்லவர்கள் பெரியோர்கள் நயமுள்ள கவிகளுமென் நாளுமிவ்வுலகில் வாழ்க
கல்வியும் செல்வமும் பெற்றிந்த காசினிச்சோதரீ சோதரர்கள் வாழ்க
செல்வமாம் சேயுடன் ஆவினம் நீர் நிலம் சார்ந்த அந்தணரும் வாழ்க
தில்லைநடராஜர் அருளால் சிதம்பர தீக்ஷிதர் கவிகள் வாழ்க.

மங்களம் :

मङ्गलं सर्वलोकाना मस्तु मन्मथवैरिणः।
शङ्करस्य कृपापाङ्ग वीक्षणेनाऽनिशं वरम्॥

சுபமஸ்து.

இங்ஙனம்,
இயற்றியவர்
ஸரஸகவிராஜ N. S. சிதம்பரேஸ்வர தீக்ஷிதர்,
ஸ்ரீ நடராஜர் தேவஸ்தான டிரஸ்டி அண்டு ஸ்தானீகர், சிதம்பரம்.

49, கீழவீதி, சிதம்பரம்.
1—9—43.

உ
குருபாதம்

தருமபுர ஆதீன 24வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பத்தாண்டு மணிமுடி நிறைவுவிழாவில்

வாழ்த்து

ராகம்: கல்யாணி. — தாளம்: ஆதி.

பல்லவி

தருமையா தீனத்தலைவரின் ஆட்சியைப்
பெருமையுடன் புகழ்வோம் திருத் (தருமை)

துணைப்பல்லவி

ஒருமை மனத்துடன் உளத்தினில் நினைந்திடில்
இருமையிலும் நமக் கின்பமளித்திடும் (தருமை)

சரணம்

அருந்தமிழ் வாணர்க்கு அள்ளியே கொடுத்தும்
அறிவுக்கலை களினை அமிழ்தென நினைத்தும்
வருந்தும் எளியோர்கள் வாழவே செய்யும்
வாலறிவன் றனை வாழ்த்தியே உய்யும் (தருமை)

தமிழரின் நன்மையைத் தமதென மதித்தே
தாய்மொழி யாகிய தமிழினை வளர்த்தும்
அமைவுறும் அன்பினை அருளென வளர்த்தும்
ஆக்கமுடன் பல அறங்களைச் செய்யும். (தருமை)

இராகம்: தோடி. — தாளம்: ஆதி.

பல்லவி

பொன்னடி போற்றிடுவீர்—புகழ்வீர்
ஷண்முக தேசிக ஞானசம்பந்தத்தின் (பொன்)

துணைப்பல்லவி

மன்னிய காவிரித் தென்கரை மேவிய
மாவளத் தருமையில் மேவிய பெருமான் (பொன்)

சரணம்

தேனினும் இனியசெந் தமிழ்மொழி செழிக்க
தேவர்கள் தேவனின் சிவநெறி தழைக்க
மாநிலப் பாவலர் நாவளங் கொழிக்க
மன்னிய திருவரு ளால்வரு மாதவன் (பொன்)

வானுற ஓங்கிய் கோபுர மெங்கும்
வளம்பெறும் ஓவிய மண்டபம் எங்கும்
தேனுறழ் தமிழும் சிவாகமம் எங்கும்
சிறந்திடச் செய்தோர் மாதவனூர் அவர். (பொன்)

நிலைமண்டில ஆசிரியப்பா

பூவுல கதனில் புகழ்மிகப் பெற்றும்
நாவலர் போற்றும் நற்றமிழ் வளர்த்தும்
மாசிலா மணிச்சிவ தேசிகன் முதலோர்
காசி மடங்காண் கலைக்குரு பரருடன்
சைவந் தழைக்கத் தனித் தொண்டாற்றிக்
கைவந் துயர்ந்த மேன்மை படைத்தும்
விளங்கிடுந் திருமடம் தருமையா தீனம்!

நலங்கிளர் இவ்வா தீனந் தன்னில்
இருபான் நான்காம் பட்டத் தமர்ந்து
பெரும்பயன் உலகு பெறச்செய் பெரும!
சண்முக பரமா சாரிய அடிகாள்!
நுண்முகச் சைவமுந் தமிழுந் தழைக்கப்
பள்ளியும் கண்ட பண்புடை அறவ!
கள்ளியும் முள்ளியு மாக இதழெலாம்
மடிந்து கெடுதலின் மக்கட் கிந்நாள்
விடிந்து தெளிதந் துய்விக்குஞ் சிவ
ஞானம் நல்கிட ஞானசம் பந்தம்
வானொளி வீசி இயங்கிடச் செய்வோய்!
ஆதீனத்தை அடுத்திடும் எல்லா
ஆலயங் களிலும் அவ்வவ் விழாவில்
உய்திக் குரிய உரைபகர் வித்துச்
செய்தித் தாளில் செறித்துப் பரப்பி
ஆங்கில வழியிலும் அவ்வுரை நிரப்புவோய்!
ஈங்கியாம் உய்ய எழுந்தருள் குரவ!
சிவநெறி நூல்களைச் சிறப்புடன் பதித்து
விலைய தின்றியும் எளிய விலையிலும்
உலைவிலா தளித்திடும் உயர்வுடை யோயே!
இத்தகை நினக்குப் பட்டம் ஏற்றுப்
பத்தே ஆண்டுக ளாயின இன்று
பத்தாம் நிறைவு விழாவும் உற்று
எத்திசைப் புகழும் ஏற்று விளங்குவோய்!
பின்னும் பற்பல நிறைவும் வெள்ளிபொன்
மன்னும் மணிவிழா என்பவுங் கண்டு
மலர்தலை யுலகில் மாண்புடன் எந்தாய்!
பலர்புகழ் எய்திப் பல்லாண்டு வாழி!

இசையரசு, எம். எம். தண்டபாணி தேசிகர்,
சென்னை.

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உசு-ஆம் மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்
பத்தாம் திருவருளாட்சி ஆண்டு நிறைவு விழா

வாழ்த்து

வாழ்க நின்னறம் வாழ்க நின்னருள்
வாழ்க நின்மல வாழ்க நின்பெயர்
வாழ்க நின்குடை வாழ்க நின்கொடை
வாழ்க சண்முக தேசிக வாழ்கவே!

பொலிக நற்றமிழ் பொலிக வாரியம்
பொலிக நன்னெறி யாம்சிவ மெய்ந்நெறி
பொலிக நின்னருட் கண்ணின் நோக்கமே
பொலிக யாவும் பொலிக பொலிகவே!

ஓங்குகநின் னாட்சிமுறை ஓங்குகநின் னருளாற்றல்
ஓங்குகநின் னடியவர்கள் ஓங்குகநின் புலவர்குழாம்
ஓங்குகநின் திருமடமே ஓங்குகநின் திருத்தளிகள்
ஓங்குகநின் திருப்பணிகள் ஓங்குகநின் பெரும்புகழே!

சென்னை
5—9—1943

காழி சிவ. கண்ணுசாமி, *B. A*,
ஆதீன வித்துவான்.

உ

குருபாதம்

தருமபுரவாதீனம் 24ம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அவர்களது

பத்தாவதாண்டு ஆட்சித் திருவிழாவின்போது அவர்கள் திருவடிமலர்க்குச்சாத்திய

பழம்பொருட் புதுமொழிமாலை

ஆசிரியப்பா

திருத்தரு மபுரா தீனத் திறைவா
கருத்தவிர்த் தாளுங் கழலோய் கமலையும்
மதுரையும் ஆளும் மன்னவ நின்பெருஞ்
சதுரையும் பிறபெருந் தகையையும் சாற்றற்
கடியேன் வல்லேன் அல்லேன். அதனல்,
நொடியே வேண்டலில் நுழைகின் றேன் நின்
ஆட்சிக் குரிய அதீன முனிவருள்
மாட்சி மிக்க வண்டமிழ் நாவலர்
குமர குருபரர் கொள்கையின் வண்ணம்
அமரருக் கரியவுன் அடிமலர் பிரியாச்
சிறப்புற வேண்டிப் பிறப்பஞ் சாமையும்,
மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையிற்
செம்மாந் திருப்பது தீர்ந்து மெய்ம்மையிற்
பொலிந்த வீட்டிற் புக்கே விடுதலும்,
இருகாற் சேவகத் தைம்புலக் களிறும்
பலகால் இழுப்பப் பவவனத் துழலா
தடிநிழ லுடுற அறிவுக் களிறும்,
அறிவொழுக் கம்மில ராயினும் ஆக,நின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலியாய் வளமய ராமையும்
பெறற்கரி யனவிலாப் பேறருள் செயவல
மாலற நேய மலிந்த வேடங்
கொண்டநற் றொண்டர் குழாத்தொடும் வைகலும்,

பெருங்குளிர்க் குடைந்துழி யருந்துணி பெருமை
கடைப்புறத் திண்ணையே கிடக்கைக் குண்மை
அழிபசிக் குப்பின் றட்ட புற்கையூண்
அல்லது மற்றெரூண் அகப்ப டாமையென்
றுரைத்த மூன்றும் உடனிங் களவும்
உதவிநின் பெருங்கழ லொழிந்து பிறிதொன்
றிரந்தன்ன் வேண்டினும் ஈந்தி டாமையும்,
பிறவிப் பெருங்கடல் உறவீழ்த் தவாவாம்
வறுமைதீர்த் தறிவின் வளமளித் தருளலும்,
ஆணவக் கொடிபுணர் வகற்றி மாயையின்
ஐயெழு மகளிர்தம் அணைவும் வெறுத்து
ஞான வல்லியை நன்மணம் புணர்த்தலும்
வேண்டுவர் வேண்டுக. அடியேன் வேண்டுழி,
அவற்றுள் எதனையும் அவாவும் நிலையிலேன்.
ஆதலின் நின்னடி யார்கணக் கிதழில்
ஏற்றிற் சேர்த்தெழு தின்பொன் றருளிப்,
பல்பே ரூழி செல்லினும் அடிகட்
கொல்லையுஞ் செல்லா வுயர்வொடு விளங்கி, யெற்
கிம்மை மாறி மறுமை யெய்தினும்
நீயா கியரென் இறைவனே
யானா கியர்நின் எழிலடி யேனே.

அடியன்

சென்னை,
5—9—1943.

வித்துவான், முந்து. சு. மாணிக்கவாசகன்,
உதவியாராய்ச்சியாளன்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

உ
சிவமயம்.

தருமபுராதீனம் 24-ம் குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அவர்களின்

பத்தாவதாண்டு ஆட்சிக் கொண்டாட்டத்தின்போது

கூறிய பாக்கள்

அறுசீராசிரிய விருத்தம்

1 திருத்தரும புரத்தொளிருங் குருஞான சம்பந்த தேசி கேந்த்ரர்
கருத்தடியாக் கொடுசிவத்தொண் டியற்றுதிரு மடாலயத்துட் கயிலைச் சார்பு
பொருத்தருளா சிரியர்வழி யினிலறுநான் கெனத்திகழும் புனித வாழ்க
பெருத்தபுகழ்ச் சண்முகதே சிகஞான சம்பந்தப் பெருமான் வாழ்க.

2 நின்னுளிற் றமிழ்ச்சைவ சித்தாந்தத் தனிமணமும் நிலவு வேதச்
சொன்னுலின் மணமும்உய ராகமத்தின் நறுமணமும் தூயன் கோயிற்
பன்னுளும் சிறப்புவிழா நிகழ்மணமும் சிவநூலின் பயனை யூட்ட
நன்னுவ லோரினஞ்சேர் புதுமணமும் கமழ்விக்கும் நாத வாழ்க.

3 பரசணிமான் முதலியதாங் கிறைவாநின் பதமலரைப் பணிந்து நாளும்
பரசடியார்க் குணர்வருளத் தனிச்சடையா தியபூண்டும் படியை யாளும்
அரசரமைச் சரும்பிறரும் அகலாது தொழுஞ்சீர்த்தி அணைந்த தாலவ்
அரசருக்கும் அரசரென உலகுதொழ இலகுமுயர் அடிகள் வாழ்க.

4 எத்தனைமக் களினுளத்தில் தருமபுரம் திருமடம்உள் இலகு கோயில்
அத்தனைநீங் காதொளிரும் தென்கங்கை முனிவர்குழு அடியார் கூட்டம்
வித்தனைய மெய்கண்டான் மாநாடு முதலியன மேவி யுள்ள
அத்தனைநற் பெருமைகளுக் குரியபெருங் குருமணியாம் அடிகள் வாழ்க.

5 செந்தமிழா ரியம்வாழத் திருமுறையெல் லாம்வாழச் சிவனைப் போற்றுஞ்
சிந்தனைமேன் மேலோங்க முனிவர்குழாம் அடியரினம் செழித்து வாழ
வந்தனைசெய் நிலையருணு னெறிவாழ ஊழிதொறும் வாழ்க சோம
சுந்தரனே சண்முகதே சிகஞான சம்பந்த சோதி வாழ்க.

நேரிசை வெண்பா

6 பெருங்கமலை ஞானப் பிரகாசன் மைந்தன்
வருங்கவலை தீர்க்கும் மரபன்---தருங்கவியை
யேற்கும் உரிமையுளாய் இன்னும்பன் னூற்றாண்டை
யேற்கும் படிவா ழினிது.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை வித்துவான்
சோம. இராமலிங்க தேசிகர்,
தமிழாசிரியர், நகராண்மைக் கழகத்துக் கலாசாலை, சென்னை.

சென்னை,
5—9—43

உ

திருச்சிற்றம்பலம்

திருத்தருமபுர ஆதீனத்தின் இருபத்து நான்காவது பட்டமாகத் திகழும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள்

பட்டமெய்திய பத்தாமாண்டு நிறைவிழாக்
கொண்டாடிய காலையில் வித்துவான்.
வை. குஞ்சிதபாதம் படித்தளித்த

வாழ்த்துப்பா

பூமலி சோலையும் புனல்மலி வாவியும்
பொன்னிகல் நிதியும் துன்னிய சிறப்பால்
பெருவளம் கொழிக்கும் தருமையம் பதியில்
திருக்கயி லாயத் திருமரபு வாழத்
தமிழர் செய்த தனிப்பெரும் தவத்தால்
இமிழ்கடல் வரைப்பில் இனிதே தோன்றித்
தருமையா தீனத் தனிப்பே ராட்சியில்
இருபத்து நான்காம் பெருமுடி தரித்த
எம்மருட் குருவே எம்மருட் குருவே!
சண்முக தேசிக பரமா சாரிய!
தேவரீர் பட்டம் பெற்றபத் தாண்டில்
இறைதிருக் கோயில் நிறைதிருப் பணியை
குறைவிலா தியற்றிய முறைபெரி தென்கோ?
குளம்நிலம் திருத்திய வளம்பெரி தென்கோ?
காவினை வளர்த்த கவின்பெரி தென்கோ?
நூல்பல பதித்த சால்புபெரி தென்கோ?
சாத்திரம் வளர்க்கும் கீர்த்திபெரி தென்கோ?
புலவர் புரக்கும் புகழ்பெரி தென்கோ?
அரசர் போற்றும் அருள்பெரி தென்கோ?
இப்படி தன்னில் எப்படி நின்றன்
ஒப்பில் பெருமையைச் செப்புவன் யானே
நின்பே ராட்சி நிலவுமிக் காலையில்
காணாக் காட்சி யெல்லாங் கண்டனம்
கேளா ஞானநூல் எல்லாம் கேட்டனம்
வாழ்க பெரும நின்திருக் கொற்றம்
வாழ்க திருமிகு தருமைத் திருமடம்
எந்தமை யாட்கொளும் எழிலோய் வாழ்க
முந்தை வினைகெட அருள்வோய் வாழ்க
கருணை வழங்கும் கழலோய் வாழ்க
புத்தக சாலை வைத்தோய் வாழ்க
ஞானசம் பந்தம் நல்கியோய் வாழ்க
ஊனமில் ஒருவன் அருளால்
ஞானச் செங்கோல் நாளும் வாழ்கவே.

இங்ஙனம்:
அன்புமிக்க தொண்டன்,
வை. குஞ்சிதபாதம்.
தமிழாசிரியர், சென்னை.

தருமபுரம்
9—9—'43

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன
இருபத்து நான்காவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவருட் செங்கோலாட்சியின்
பதிற்றியாண்டு நிறைவுவிழாவிற் கூறிய

வாழ்த்து.

உலக மளந்த நிலவுபெருஞ் சீர்த்திக்
கலைத்துறை நிரம்பிய நிலைத்தமிழ் வரைப்பின்
நீர்வளங் கவின்ற சீர்வளர் பழனத்துப்
பேர்வளர் காவிரிப் பெருந்திரு நாட்டிடை
இருமையும் பயக்குந் தருமையம் பதியில்
ஒருமைசேர் நெஞ்சினோர்க் கொளிநெறி வாய்ப்ப
வம்பறு சம்பிர தாயத் தஞ்சுடர்
உம்பரும் வியப்ப உதவி யேனையர்
தத்தம் நிலையிற் றுவின்று நிறீஇ
ஒத்த காட்சி உரவோர் தொழுதெழும்
அருணிலைத் தானம் பொருணிலை தெரீஇத்
தெருள்பெறப் பூசனை சிறப்பொடு செலுத்திச்
செந்தமிழ் மொழியுந் தெய்வமெய்ந் நெறியும்
மூந்துற வளர்த்தே யெந்தமை யாள
அறவோ ளொருபா லணைந்த நாயகன்
துறவோர் சூழச் சுடர்ச்சடை மிளிர
எழினீ றணிந்து விழிமணி பூண்டு
தொழுதக வுடுத்துத் தூய கல்லாடை
வெங்கண் அரவே மிடற்றுக் கறையே
திங்கட் கொழுந்தே செங்கண் ணுதலே
என்றிவை தழீஇ ஈர அன்பினர்
சென்னி மீதுஞ் சிந்தையி னுள்ளும்
மன்னிவீற் றிருந்து மலவிரு டுமிக்கும்
உண்முக மணியாஞ் சண்முக தேசிக
ஞானசம் பந்த சற்குரு நாதனும்
ஊனமில் கேள்வி ஞானப்ர காசன்
றிருவருள் கொடுப்பத் திகழ்தரக் கொண்டு
பெருநெறி தெரிக்கும் பீடுடைத் தேசிகன்
வானவர் போற்று ஞானசம் பந்தன்

மேனவில் மரபின் ஞானமார் பீடத்
திருபத்து நான்கா வெண்ணு முறையிற்
பொருவற வமர்ந்து பூத நாயகன்
அருணெறி தெரிக்கும் பொருணிறை புலவர்
மெய்நிலைத் தொண்டர் பொய்ந்நெறி கடிந்து
தந்நிலை மறந்து தற்சூழ்ந் தேத்த
அருந்தமிழ்ப் புலவோர் ஆலயந் தோறுந்
திருந்திய விரிவுரை செவ்விதி னிகழ்த்தக்
கல்லா மாந்தரும் நல்லா றெய்தப்
பேரவை கூட்டிப் பெரும்பயன் விளைத்தல்
சீரமை நூல்கள் சிறப்புற வெளியிடல்
இனையநற் செயல்கள் நினைவருந் திறத்த
பற்பல வியற்றிப் பதிற்றியாண் டினிய
திருவருட் செங்கோல் பொருவறச் செலுத்தலின்
எம்முளத் துவகைமீ தெழுந்ததை யன்றியும்
மெய்ம்மைசேர் பயனு மேவினம் அம்ம!
ஈங்கிவை
கைம்மா றற்ற கடப்பா டாகலின்
செம்மைகொள் சண்முக தேசிகன் வாழ்க!
எம்முளத் தொளிரும் எழின்மணி வாழ்க!
சைவம் வளர்க்கும் தண்முகில் வாழ்க!
உய்வைத் தரவருஞ் செய்தவன் வாழ்க!
துறவோன் வாழ்க! தூயோன் வாழ்க!
அறவோன் வாழ்க! அங்கணன் வாழ்க!
வானந் துளங்கினும் மண்புடை பெயரினும்
ஏனைய பூதம் இயனிலை திரியினும்
ஊழி யூழி யோங்கி
வாழிய பெரிதென வாழ்த்துது மினிதே.

தருமபுரம்,
6—9—43.

க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,
மெய்கண்டார் கழகச் செயலாளர்,
காஞ்சிபுரம்.

உ
பாலருவாயர் துணை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
24-வது குருமூர்த்தியாக எழுந்தருளியுள்ள

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்

ஆட்சியேற்ற பத்தாவதாண்டு நிறைவுக் கொண்டாட்ட விழாவில்

தேவகோட்டை "பாலகவி" வயிநாகரம்

வே. இராமநாதன் செட்டியார்

கூறிய செய்யுட்கள்

திங்களைக் கங்கையைக் கொன்றையைத் தும்பையைச் சென்னிவைத்து
மங்கையைப் பங்குவைத் தெங்களை யாட்கொள வல்லபிரான்
பங்கயத் தோனைப் படைத்துப் படைக்கப் பணித்தனன்மாத்
தங்கிய மார்பனை யாக்கினன் காப்புத் தழைக்கவென்றே. 1

உருத்திர தேவை யொடுக்குதற் காக வுவந்தளித்தான்
பெருத்த புகழுடை சைவசித் தாந்தப் பெருநெறியைத்
திருத்த முறுவளஞ் சேர்தமி ழாய திருமொழியைக்
கருத்தினில் வைத்து வளர்க்குந் தொழின்மிகக் காதலித்தே. 2

முன்னாட் பலகா லுலகினில் வந்த முறையறிந்தோந்
தன்னால் வளருஞ் சமயமுஞ் செய்ய தமிழுமின்றிங்
கென்னால் வளரு மியல்பினைக் காண்மி னிருநிலத்தீர்
என்னா மனித வுருக்கொடு நாமின்ப மெய்துதற்கே. 3

திருக்கயி லாய பரம்பரை மன்னுந் திருவடைந்து
மருக்கமழ் சோலைத் திருந்தரு மைப்பதி வாழவந்த
குருக்கிளர் ஞானசம் பந்தநன் மாமணி கோதிலருள்
உருக்கிளர் சுப்பிர மாமணி தோற்ற வுவப்புடனே. 4

வந்தனன் சண்முக ஞானம் வளர்மணி யாகிநலந்
தந்த புகலி விழனகர் பேரளந் தாடகையார்
முந்து பனந்தாள் பறியலூ ரையாறு முல்லையின்வாய்
நந்து மணக்குடி வேளூர் கடவூர் நறும்பதியே. 5

கோளிலி கற்குடி நள்ளாறு குத்தாலங் கோதிலிறை
யாளுமாச் சாபுர நின்றி கொறுக்கை யமைதருமை
மூளுங் கருவைப் பறியலூர் முன்னைத் திரிபுவனம்
நீளுங் கருங்குயி னாதன் றளிவள்ள னேர்தளியே. 6

பொன்னிக் கரையில் விசுவநா தேசன் பொருந்துதளி
முன்னைக் கமலையின் ராசாங்கக் கட்டளை முற்றுபுகழ்
மன்னுஞ் சிராமலைக் கோட்டையின் கட்டளை மாதவத்தோர்
துன்னு மிடைமரு தூர்ப்பிச்சைக் கட்டளை தொல்லிசையே. 7

தோய்ந்தமா யூரக் குமரவேள் கட்டளை துன்னியசீர்
ஏய்ந்த விருபத் தெழுகோயி லாட்சி யினிதியற்றி
வாய்ந்த புகழை வகுத்தெடுத் தோதுதன் மற்றறியேன
ஆய்ந்த தமிழ்நூல் வடமொழி நூல்களை யச்சிலிட்டே. 8

திருத்த மிகத்தருஞ் செம்மையைச் செப்பச் சிறியவனுன்
அருத்த மிகக்கொளு நாவலர் தம்மை யழைத்தினிதிற்
கருத்த னுயர்புகழ் பேசப் பணித்துக் கடவுலகின்
வருத்தந் தணித்தருள் வள்ளன்மை பேச வரம்புடைத்தே. 9

பெருமைக் கொருபொரு ளாகி நமதின்பம் பேணுகுரு
தருமைப் பதியினிற் சண்முக தேசிக சாமிமக்கட்
கிருமைத் திருவு மருளுதற் காக விவணுலகில்
அருமைத் திருவுடல் வாழிபல் லூழி யணிபெறவே 10

நலம் பெருகுக.

சுபாநு. ஆவணி. 20.

உ

சிவமயம்

ஞானசம்பந்தர் நற்ருள் வாழ்க!

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின்

உசு-ஆம் மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்

பத்தாம் திருவருளாட்சி ஆண்டு நிறைவு விழாவில்

மனமுவந்தளித்த வாழ்த்துரை

தமிழும் சைவமும் தழைக்கத் தோன்றிய தேவே!

வாழி! நீடூழி! தாங்கள் இறைபணியாற்றும் இம்மடாலயத் தலைவரின் வழியில் இருபத்து நான்காவது பட்டத்தலைவராக வந்துள்ளீர்கள். தங்களது உருவும், திருவும், அருளும், அன்பும், அறனும், பிறவும், பொருந்திய தோற்றமும், செயலும் கண்டு செம்மைபெற்று மகிழ்வெனும் கடலுள் மல்கி நிற்கின்றேன். அம்மகிழ்ச்சியின் சிகரமென இந்தப் பத்தாம் ஆண்டு நிறைவு விழா நிலவுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தங்கள் சைவப்பணி சிறக்க என வாழ்த்துதும். தவமே! வாழ்த்துதும் நீடு!

துறவற ஒழுக்கமும் தூயநற் செயலும் துலங்கும் செம்மால்!

உண்மைத் துறவொழுக்கத்தை உளத்தால் ஏற்று, இறைவனுக்கும், அவனடியவர்களுக்கும் ஆற்றும் வழியெலாம் அருந்தொண்டாற்றி அமைந்து வருகின்றீர்கள். தங்களது சமயப்பணி செப்பத்திறமோ! சைவசித்தாந்தத் தனிப் பெருங்கடலாகிய தாங்கள் சைவசித்தாந்த மாநாடு நடத்தித் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற ஆன்றோர் வாக்கை மெய்ப்பித்தீர்கள். இன்னும் வடமொழிக்கும் தித்திக்கும் தமிழ் மொழிக்கும் கல்லூரி அமைத்து அவற்றின் மூலமாக மொழி வளர்ச்சி கருதும் தங்கள் தவப்பணியே பணி! அன்பர் பணியே ஆண்டவன் பணி எனக் கருதி அவ்வன்பர் உய்யத்தக்க அருஞ்செயல் பலபுரியும் அண்ணல்! நின் அருள் நலம் சிறக்க என வாழ்த்துகின்றேன்!

சொல்லும் செயலும் தூயதாய் அமைந்தோய்!

அறப்பணி புரியவும் அருந்தமிழ் பெருகவும் 'ஞானசம்பந்தம்' என்ற நற்றமிழ் இதழை அதற்குத் தகுந்த அச்சு இயந்திரங்களும் அமைத்து தாங்கள் நடத்துகின்ற நிலை என்றன் உளத்துக்கு உவகை அளிப்பதொன்றாகும். இருந்த இடத்திலிருந்து அறம்புரியும் தங்கள் அருட்டிறனே, தங்கள் தவ வெளியீடு 'ஞானசம்பந்தம்' யாண்டும் பரப்பி வருகின்றது. ஏழைகட்கும் தாங்கள் ஆற்றும் இனியபணி இயம்பும் தரத்ததோ! ஏழைகளை ஒத்து நோக்கி ஆதரிக்கும் தங்கள் இன்ப உளங்கண்டு உவக்கின்றேன். இத்தகைய அறச் செயல்களுக்கெல்லாம் அமைந்த பல கட்டிடங்களைப் புதிதாக அமைத்துக் கொண்டதோடு, பழையன வற்றையும் புதுப்பித்துப் பெருமை கொண்டீர்கள்! வாழி!

அறப்பணி புரியும் திறத்தகு நல்லீர்!

தாங்களும், தங்கள் சைவத் தமிழ்ப் பணிகளும், பிற அறச் செயல்களும் எங்கும் நிறைந்த இறைவன் அருளால் பலகால் பாரிடை வாழ வேண்டுமென அவ்விறைவன் இணையடிகளைப் போற்றுகின்றேன்.

வாழி! வாழி!! வாழி!!!

இங்ஙனம்:

சென்னை }
5—9—1943 }

ர. வடமலை செட்டியார்,

உ

சிவமயம்

அன்பின் உணர்ச்சி.

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில்

24-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள்

பத்தாண்டு ஆட்சி விழாவின்போது

அளித்தது

உணர்ச்சி பற்றற்றது. [விருப்பும் - வெறுப்பும் பற்று] அவ்வுணர்ச்சி நித்தியமான சத்தியம். (அழிவற்றது) சத்தியத்தின் இயல்பு வேற்றுமையற்ற அன்பு அன்பின்மயம் ஒற்றுமை (ஐக்கியம்).

தான்உதிக்க எல்லாம் தோன்றும். (பிரவிர்த்தி தோற்றம்) தான் அழிய எல்லாம் தன்னில் ஒடுங்கும் (உதித்த இடத்தில்-தன்னில்) அழியும். தான் மாயையில் பிரவேசித்தது. அதுஅற, தன்னில் தானாகிய தானே எஞ்சும். (நித்தியமாகிய நிரந்தர அபேத அன்பு அது).

அவ்வன்பின் ரூபமாய் தாங்கள் உதித்து உயரிய பீடத்திலிருந்து என்னுளும் அன்பைப் பெருக்கும் கைங்கரியம், நிஷ்காமியமாக செய்ய, தாங்கள் காரணதூலமும் நித்திய தூலமுமாக அருள்புரிய பிரார்த்திக்கும்,

அன்பன்,
S. V. சீனிவாசன்.
7—9—43

உ
சிவமயம்

திருத்தருமபுர ஆதீனம்,

24-வது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாட்சியில்

10-வது ஆண்டு வைபவத்தின்போது சமர்ப்பித்த

வாழ்த்துப் பாக்கள்.

ஸ்ரீ சொக்கலிங்கம் துதி.

(குறள்)

"ஆலவாயீசா யருட்டருமை சொக்கேசா; சாலவும் நின்றாளே சரண்."

(எழுசீராசிரியம்)

ஆத்திகம் குறைந்து நாத்திகம் சிறந்தும் அருமறை நெறியெலாம் மறைந்தும்
தீத்தொழில் மிகுந்தும் உலகெலாம் மாறிச் சிதைந்திடும் காலமிக் கலியே
காத்துன தருட்கண் பார்த்திடில் உய்வேம் கைவிடிற் கதிபிறி துளதோ?
சீர்த்தநற் றருமைச் சண்முகப் பரமாச் சாரியே சிவமொளிர் திருவோய்!

மனமொழி மெய்யால் அன்பொடு நினைத்தும் வாழ்த்தியும் தொண்டுகள் புரிந்தும்
நினதடிக் கடிமை பூண்டுளங் நாளும் நிலவுபன் னலமெலாம் குலவ
பனிமலர்த் தாளிற் பரவிடும் எம்மைப் பரிந்துகொண் டணைத்தருள் புரிவாய்
தினகரத் தருமைச் சண்முகப் பரமாச் சாரியே சிவமொளிர் திருவோய்!

(வாழ்த்து)

வாழி நற்றரு மாபுரி மாநகர்
வாழி சண்முக தேசிகன் வார்கழல்
வாழி யன்பர்கள் வாழிசி வாகமம்
வாழி நல்லறம் வாழி யுலகெலாம்.

மாயூரம்,
5—9—43.

R. கோவிந்தராஜன்.

உ

திருத்தருமபுர ஆதீன மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

பத்தாண்டு ஆட்சிவிழாக் கொண்டாட்டத்தில்

மகிழ்ந்து கூறியது

தேனுருங் கருங்குவளை மலர்த்தொகையும் பொலங்கமலச் செழுந்தண் போதும்
கானுரு மலர்க்குழலி உமைகூறன் தனைக்காட்டுங் கவின்சேர் பொய்கை
மீனூரப் பால்சுரந்து மேதியினம் படிந்துழக்க விரிநீர்ப் பொன்னி
ஆனாத வளந்தருநற் சோணாட்டில் தருமபுர மதனில் மன்னி. 1

சைவமொடு தமிழ்வளரத் தழைத்துவள ராதீனத் தலைமைச் சால்பின்
ஐவகையொ டுறழ்நான்கும் ஒருநான்கும் உரைபட்டம் அரிதின் வாய்த்துத்
தெய்வமலி சண்முகதே சிகஞான சம்பந்தத் திருப்பேர் தாங்கி
மெய்வகைய சிவத்தொண்டுந் தமிழ்த்தொண்டு மேவியசீ ரடிகள் வாழி. 2

சிவமலியும் திருக்கோலச் செல்வர்களும் சிறுவர்களும் சிறந்து சூழத்
தவமலியும் திருக்கோலத் துறவியர்கள் நாற்புறமும் தழுவிச் சூழப்
பவமலியுந் தொடக்கொழியச் சிவஞானப் பொருள்தேற்றும் பரம மூர்த்தி
கவைமலிநற் கல்லாலின் புடையமர்ந்த பெருங்காட்சி கவினும் வாழ்வே! 3

வெண்ணீறு தரித்திலங்கு பொன்மேனி விரிக்குமொளி விழுமி தென்கோ
மண்ணூர்ந்து மடிதழைசெந் துவராடைப் பட்டிகையே மாண்பிற்றென்கோ
கண்ணூரு மணிவடமும் கண்டிகையும் புரள்மார்பிற் கவினே யென்கோ
எண்ணோங்கு சடைமுடியும் வைரமிளி ராழிகளும் இனிய வென்கோ. 4

கண்கவர்நல் லோவியமும் கறைமிடற்றோ னருள்சேர்நற் கதைக்கு றிப்பும்
பண்கவர்செந் தமிழ்வாய்த்த அருட்பாடல் பலவுமுயர் பண்பிற் றீட்டி
எண்கவரச் சமைத்தபுகழ்த் திருமடத்தைத் காண்பார்கள் என்ன ரேனும்
மண்கவரும் இயல்மறந்து மதிச்சடையோ னருள்வாழ்த்தி மகிழ்ந்து மீள்வார். 5

மதியணிசெஞ் சடைநாதன் சொக்கலிங்கப் பெருமான்றன் மலர்த்தாள் போற்றித்
துதியணிந்து தொழுதேத்திப் பூசனைசெய் தூய்மைமலி காட்சி கண்டோர்
பொதியவிழும் நறுங்கொன்றைப் புனிதனூர் வளர்மன்றம் போற்றி செய்யும்
பதஞ்சலிமா முனிவரனெ மெனவெண்ணிப் பத்திநெறி படர்வ ராலோ. 6

கலைவளமும் அருள்நெறியுந் தனிவளரு முயர்நெறியாக் கண்ட முன்னோர்
சிலைவளத்தா னமைத்தநெடுங் கோயிலெலாம் சிதைந்தழியச் சிந்தை நொந்தே
பொலன்மணிசெய் கலன்போல அவையெல்லாம் பொங்கொளியாற் சுடர வைத்துப்
பலகோயிற் றிருப்பணிசெய் புகழ்பெற்றார் நின்னையலாற் பாரமீ தியாரே. 7

மருவாரு மலர்க்கொன்றை வேணியினன் மணிமிடற்றன் மகிழ்ந்து மேனாள்
திருஞான சம்பந்தர் தீந்தமிழுக் காயிரம்பொன் சிறக்கத் தந்தான்
விரிவாரும் தமிழ்ச்சங்கம் சித்தாந்தம் இவைவளர விரும்பும் நீயும்
உரையார ஆயிரமா யிரமாக அளிக்கும்முன தருளும் வாழி. 8

எத்திசையும் புகழ்வளர இனியதிரு வருட்செங்கோ லாணை ஏற்றுக்
கொத்துறுமுத் தமிழ்வளர்த்துப் பத்தாண்டு நிரம்பியது குறிக்குந் தோறும்
"பத்துடையீர் ஈசன்றன் பழவடியீர் பாங்குடையீர் பண்பு சான்றீர்"
இத்தரைமேல் நெடிதூழி வாழ்கவென வாழ்த்தியுல கேத்து மாலோ. 9

தண்டமிழ்செம் மொழிவயலில் விளையன்பாம் சைவநெறி தழையப் பெய்யும்
கொண்டலெனும் சண்முகதே சிகஞான குருபரநீ வாழி ஊழி
தண்டமிழ்மா சங்கமொடு சைவநெறி பொதுநெறியாய்த் தழைத்து வாழி
வண்டுமுரல் கடம்பணிதோள் வள்ளிமண வாளனருள் ஞாலம் வாழி. 10

சென்னைத் தமிழ்ச் சங்கம்

உ

குருபாதம்

பத்தாண்டுவிழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் தலைமை வகித்த

சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத் தலைவர்

திருவாளர் திவான்பகதூர்

T. M. நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., அவர்கட்கு

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பத்தாண்டு ஆட்சிப் பாராட்டுக் குழுவினர் தருமபுரத்தில் அளித்த

வரவேற்புரை

பலரும் நலமுறப் பொதுநலம் பேணும் பண்புசால் அறிஞ! வருக!

தாங்கள் தமிழ்த்தாயினிடத்து என்றும் நீங்கா அன்பு பூண்டு அதனோடு அரசர் மொழியாம் ஆங்கிலத்திலும் உயர்தரப் பட்டம் பெற்றுச் சட்டத் திறமையும் சார்ந்து தக்கசொல்லாளராகவும், வழக்கறிஞராகவும் விளங்கி வருகின்றீர்கள். வாழ்க்கையின் குறிக்கோள் தன்னலமும், புகழுமே யாகா என்பதைத் தெரிந்தார் பல்லாயிரத் தொருவரே இருப்பர். அங்ஙனம் இருப்பவர் சிலருள் தாங்களும் ஒருவரென்பதற்குத் தங்கள் தன்னலம் பேணாத் தொண்டுகளே சான்று பகர்கின்றன.

நம்நாட்டு நலஞ்சிறந்த நல்லோய் வருக!

ஆண்டுகள் பலவாகப் பதவி வகிப்பது பல அருங்குணங்க ளமைந்தாராலேயே ஆவது. ஒப்பநாடி அத்தக உஞற்றும் உறுதியைத் திருச்சி மாநாட்

டாண்மை மக்கள் பலகாலும் அறிந்த பண்பால் தங்களைத் தலைவராகப் பெற்ருர்கள். தலைமைப்பதவி என்பது தானே பிடித்துக்கொள்ளும் குடை போல்வது என்பர் தக்க அறிஞர் ஒருவர். அதுபோல அப்பதவி சீரால் பேரால் சிறந்த தாயினும் அளவறிந்து ஆற்றும் திறத்தால் அரியதாதலின், இன்பமுந் துன்பமும் ஒருசேரத் தருவது என்பதனை அறிந்தே தாங்கள் தலைமைப் பதவியைத் தாங்கி வந்தீர்கள். அப்போதும் தமிழுக்கும் சமயத்திற்குமாகத் தாங்கள் பணிபல புரிந்து வந்தமை தமிழுலகம் நன்கறிந்ததே.

அரனடியாரை அரனெனவே கொள்ளும் அறிவுடைப் பெரும!

சேரமான் பெருமானைப் போலச் சிவனடியாரிடத்துச் சிந்தை நிறைந்த அன்பால் தொண்டுபல புரியும் தங்கள் பெருந்தகைமையைப் பார்த்து வியந்த பலரும் பகரக் கேட்டு மகிழ்கின்ருேம்.

குருபக்தி நிறைந்த திருவுடைக் குரிசில்!

சமயப்பணியில் தலைசிறந்து விளங்குகின்ற சமய நிலைக்களங்களில் தளராத பேரன்பு தங்களிடம் இயற்கையாகவே சார்ந்துள்ளமையால், முன் எழுந்தருளியிருந்த இவ்வாதீன மகாசந்நிதானம் யாத்திரையாக எழுந்தருளிய காலத்துத்தாங்கள் தங்களூரில் பட்டணப் பிரவேசம் முதலியவை நடைபெறுவித்த தங்கள் அன்பை இங்குப் பலரும் பாராட்டுகிருர்கள். அத்தகைய பேரன்பு இன்றும் பதின்மடங்கு வளர்ந்து வருகின்ற தென்பதைத் தங்களுடைய பல நிகழ்ச்சிகளாலும் அறிகின்ருேம். இன்று நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குத் தாங்கள் சொந்த முறையிலும் உத்தியோக முறையிலும் தலைமை பூண்பது பலவிதத்தும் பொருத்தம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

அறநிலையங்களுக்கோர் அணியாய் அமைந்த தலைவ!

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தங்கட்கிருக்கும் சமயப்பற்றை, அறத்தின் ஆதரவை உலகிற்கு வெளிப்படுப்பான்வேண்டி அறநிலையப் பாதுகாப்புத் தலைவராக அருள்பாலித்தார். அதனுல் தாங்கள் சமயத் தோழராக, கல்விக் கண்காணிப்பாளராக, கலையில் ஊக்கமுடையாராக விளங்கித் திருக்கோயில்கள் பண்டைய தமிழரசர் காலங்களில் எவ்வாறு இன்னருள் வழங்கும் இனிய தெய்விக இல்லங்களாக, கலைக்கூடங்களாக, ஓவிய உறையுள்களாக, காவியக்கற்றளிகளாக, நாடக நல்லவைகளாக, சமயம் வளர்க்கும் தனிப்பேரவைகளாக விளங்கினவோ, அவ்வாறே இப்போதும் அத் தோற்றம் எய்தியுள்ளமையைக் காண்கின்ருேம். இப்பேறு தங்களாலேயே தமிழுலகம் அடைந்தது என்பது மிகையாகாது.

எல்லா நலனும் இசைந்த பெரும!

தமிழ்நலம் சிறக்க மறைமுறை வளரத் தங்கட்கு நீண்ட ஆயுளும் நோயிலா உடலும், ஆட்சித்திறனும் அளித்தருளும் வண்ணம் செந்தமிழ்ச் சொக்கர் திருவடி போற்றுகின்ருேம்.

(6—9—43)

உ

குருபாதம்

பத்தாண்டு விழா மூன்றும் நாள் நிகழ்ச்சியில் தலைமை தாங்கிய

மாயூரம் நகராண்மைக் கழகத் தலைவர்

உயர்திரு, C. கனகசபைச் செட்டியார் அவர்கட்கு

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பத்தாண்டு ஆட்சிப் பாராட்டுக் குழுவினர் தருமபுரத்தில் அளித்த

வரவேற்புரை

இந்தியத் தாயின் இனிய புதல்வ! வருக.

இந்தியர் முன்னேற்றத்திற்காக இந்தியப் பொருளாதாரப் பெருக்கிற்காகத் தன்னலன் சிறிதுமின்றி யுழைக்கும் பழுங்குழுவின் பேரன்பராகத் தாங்கள் விளங்கி வருகின்றீர்கள். அங்ஙனம் பாடுபடும் உண்மை உழைப்பாளரையே நாடு என்றும் எதிர்நோக்கி நிற்கின்றது. நாட்டின் வருங்கால வாழ்விற்கு ஒற்றுமையே இன்றியமையாதது. நாட்டுமக்கள் உழைப்புப் பொருள்களை நாட்டு மக்கள் பயன் பெறுதலாலேயே நாடு நன்னிலையடையும் என்பனவற்றைப் பலரும் அறியப் பகர்ந்தும், செய்கையிற் காட்டியும் வருந் தங்கள் அருந் தொண்டினை மிகப் பாராட்டுகிறோம்.

இகலிலாத் தகவுடன் நகராள் கழகத் தலைவ!

நகரம் என்பது பல படி குழுவினரை-நாகரிகம் சிறந்த நல்லோர்களை யுடையது. ஆதலின் அங்குப் பல எண்ணங்கள் எழும்பி வளரும். அதற்கு இடையில் எல்லோர்க்கும் நல்லோராகத் தலைவர் இருப்பதென்பது இயலாத காரியம். அங்ஙனமிருந்தும் தாங்கள் சிறு மனவேற்றுமையும் மக்களிடையே யுண்டாகாது, வேண்டியார்—வேண்டாதார் என்ற வேறுபாடு இன்றிப் பொது நன்மையே பொருளெனக் கொண்டு உழைத்து வருகின்றமை எல்லார் உள்ளத்தையும் பிணித்து நிற்கின்றது.

தமிழன்பு நிறைந்த தண்ணிய உளத்தோய்!

தமிழ் உணர்ச்சியே உயிரின்வளர்ச்சி; தமிழ்வளர்ச்சியே தமிழராக்கம் என அறிந்து தமிழ்க்கழகத் தலைவராயிருந்து தமிழ்த் தொண்டு ஆற்றி வருகின்றமையை அவ்வப்போது அறிந்துவக்கின்றோம்.

பத்தாண்டு ஆட்சி பாராட்டுக்குழுவின் அமைப்பாளர் தலைவ!

திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர மடாலயத்தில் என்றும் நீங்கா அன்பு படைத்த தாங்கள் மடாலயத்தின் வளர்ச்சியைக் கவனித்து பாராட்டுந் தன்மை படைத்தவர்கள் என்பதற்கு, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் ஆட்சியேற்ற பத்தாண்டிற்குள் பல நற்பணிகளைப் படைத்துப் பரிபாலித்து வருவதைப் பாராட்டும் இக்குழுவிற்கு அமைப்பாளராக ஆற்றிய தொண்டும், இன்று தலைவராக இருந்து இயற்றும் தொண்டும் எடுத்துக் காட்டாக இலங்குவன.

சமய அன்புடைய தக்கோய்!

பொது வாழ்வாளர்க்குச் சமய நிலை சமய நிலையாகவே இருப்பது பெரும்பாலும் வழக்காயினும், தாங்கள் 'உறைத்த சமயத் தொண்டராக' இருப்பது பொன்மலர் நாற்ற முற்றது போலாகும் என அனைவரானும் மகிழ்ந்து பேசப்பெறுவதாகும்.

இறைவன் திருவருளால் எல்லாம் எய்துக இனியோய்!

இங்ஙனம் பொதுநலத்தொண்டு புரிவார் எல்லார் மனக்கோயிலிலும் மன்னிவாழ்வார் ஆதலின், எல்லோரும் தாம் வாழத் தங்கள் வாழ்வை விரும்புவர். ஆதலால் எல்லார் உள்ளக் கோயிலிலும் இனிதுறையும் இறைவன் தங்களுக்கு நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும் எண்ணிய எண்ணியாங்கெய்தும் திண்ணிய மனத்தையும் அளிப்பாராக.

7—9—43

Thanks-giving proposed by

Sri N. VAITHINATHA AYYAR, B. A., B. L.,

Advocate, Mayavaram,
Member of the working Committee.

Sri-la-Sri Mahasannidhanam, Devotees, and Friends!

I have been asked by His Holiness to perform the very pleasing part of thanks giving to our Day's President and the function. I dare say, it is a very rare event, rendered doubly worthy because, our Holiness is having here the President of the Hindu Religious Endowments Board who in his usual forceful expression has told us how the spiritual head and the Government Head to supervise the religious endowments have been brought together to enjoy the very successful and progressive reign of the 10th year of His Holiness in all its varied festivities. I heartily cooperate in this performance and on your behalf, I thank our President of the day for his consideration to go over here even yesterday and for his hearty participation in all the functions since yesterday.

Friends! I may be pardoned if I say that our Holiness' position as a spiritual head has a peculiar predominent significance. All of us know that the Sun that shines all over the world eternally is a life given and the Moon who takes the brightness from the sun is the soothing element. God Almighty who rules us all in his omnipotent, omniscient invisiblenss has cast his full beam in our Holiness as his representative for us all. Just as the life of mortals is governed by the Zodiac with 27 stars with the sun and moon our Holiness is having the 27 Devasthanams under his care. Even as the moon sojourns in all the regions of the 27 stars, our Holiness visits them to befit them to be as they should be. You must all agree with me that birth, life, and death are the 3 important epochs in a life, and as such they must be well looked after. So we have Tiruvadi, Vaithiswarankoil and Tirukadavoor as the three epoch epic temples under the sway of our Holiness. So I am justified in saying that our Holiness has the three vital places in his orbit of supervision just to take care of all his devotees in their birth life and death. I am sure the three blessings are united in His Holiness and why not then we gloatingly participate in the 10th year of his reign and wish for many such tens of reigns to make us all the more happy, more joyous and participate in festivities of the type we are having from yesterday.

வாழ்த்துச் செய்திகள்



நேரிசை வெண்பா.

நீதிபதி சோதிமதி நேர்தருமைச் சண்முகரே
ஆதியிற்சந் தானகண மாதிபதி—பூதிபொதி
பாதிமதி யாதிபதி பார்நாரை யூர்ப்பதிட்டை
நீதிதவஞ் செய்தருள்வாழ் நீ.

ஆ. சு. கணபதிப் பிள்ளை,
சிதம்பரம்.

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம்
கும்பகோணம்.

முகாம்: திருவானைக்காவல்,
4—9—1943.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம்

சிவனருட் கடாக்ஷத் தவனருந் தரும
புரத்தா தீன வரத்தன் கடவூர்
திருபுவ னஞ்சீர் தருதிருப் பறியலூர்
திருமண நல்லூர்ப் பெருமணம் வேளூர்
முன்னிரு பத்தே ழென்னுமா தீன
வாலயத் திருப்பணி சால நடத்தும்
பத்தியன் றருமஞ் சத்தி யேசுரர்
பணியனு தினமு மணிபெறச் செய்வோன்
சங்கரா சாரியா ரங்கமை யாற்றிற்
றங்கப்ர திட்டை பொங்கச் செய்தவன்
மாமறை யோர்முன் பாமர ரெவரும்
வித்தக ராகப் புத்தகம் பதிப்போன்
சண்முகப் பெருந்தகை யெண்முக மலர்ச்சிய
னிட்டனு தினப் பட்டம் பூண்டதோ
ராண்டு பத்தினுட் காண்டரு தரும
தானமீ சன்பணி யானவை யாங்காங்
கருமை பெறச்செய் பெருமைய னவர்க்குச்
சுபானு வாவணி சோபன விருபது
ஞாயிறு நாளி லேயுமா விழாவைச்
சந்திர மௌளீ சன்றிரு வருளாற்
கொள்பவன் பெருங்களி கொள்பவ னெமது
முருகன் கிருபை பெருக நீண்ட
வாயுளுந் தருமமும் வாயுறப் புகழ்மிக
வாழி வாழிநீ டூழி வாழியே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருப்பனந்தாள், 5-9-1643.

தருமை ஆதீனத்தில் இப்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் ஸ்தானத்துக்கு வந்ததுமுதல் பல துறைகளிலும் அபிவிருத்திகள் அடையச் செய்து போற்றத்தக்க வகையில் நடந்து வருகிறது. அந்தக் கீர்த்திக்குச் சான்று பெருமக்கள் ஒன்று கூடி, பத்தாண்டு ஆட்சிப் பூர்த்தியைக் கொண்டாட முற்பட்டதேயாகும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரர் ஆலயம் தருமையாதீன ஆளுகைக்குட்பட்டது. அதில் நடந்துள்ள அபிவிருத்திகள் நமக்குத் தெரிந்தவை. இவ்வாலயமே இவ்வளவு சீர் பெற்றிருக்கும்போது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் திருக்கண்ணேக்குஅடிக்கடி ஏற்படுகிற ஆதீனமடம், இதர ஆலயங்கள் அபிவிருத்திகளைப் பற்றி நன்ருய் ஊகிக்கக்கூடும்.

இந்தக் கொண்டாட்டத்தை ஏற்படுத்திய கமிட்டியாரை நாம் பாராட்டி நன்றி கூறுகிறேம். மேன்மேலும் சிவப்பணிகள் செம்மையாக நடைபெறுமாறு நமது மகாசந்நிதானத்துக்கு நீடூழிவாழ்வளிக்க இறைவன் திருவருள் புரிவாராக.

செந்திலாண்டவன் துணை.

GOVERNMENT OF MADRAS.

Government House,
Guindy,
3—9—'43.

Your Holiness,

It is with very sincere pleasure that I send you my congratulations and best wishes on the 10th anniversary of Your Holiness' accession to the Dharmapuram Adhinam.

I have frequently heard of the widespread and beneficient influence which you exercise and of all that you have done in various ways, for the war effort. I am particularly pleased that you should have taken the opportunity, on the auspices occasion of today's celebrations, once again to set an example by investing, as a first instalment, one lakh of rupees in Defence Loans.

I am sure that your decision to make this investment will give a lead to many of the guests and devotees present today.

Oncemore I would like to thank you for your co-operation, on which I know I can always trust, and I sincerely hope that you will continue for many happy years in the illustrious office which you now hold.

Yours sincerely,
ARTHUR HOPE.

His Holiness Shanmuga Desika Gnanasambandha Pandarasannathi Avl., Dharmapuram.

Sri V. C. VELLINGIRI GOUNDAR, Vellakinar P. O. (Coimbatore Dt.)
28—8—1943

மடங்கள் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட உண்மைகளை அறிந்து, அதன் கருத்துக்களை நிறைவேற்றுவதில் மஹாசன்னிதானம் முயற்சியெடுத்துக் கொண்டு செய்து வரும் காரியங்களைச் செய்வதில் தமிழ் நாட்டுக்குப் பெரிய நன்மையை உண்டாக்கும் என்பதில் எல்லோரும் சந்தோஷம் அடையவேண்டியதே. இவ்விதமே மென்மேலும் தருமபுரம் ஆதீனம் பெருமையடைய அபிமானிகளான நாம் பிரார்த்திப்போமாக.

RAJAH SIR ANNAMALAI CHETTIAR, Kt., Lld. of Chettinad,
24th August 1943,

His Holiness, the present head of the Mutt is actuated by a pasaionate desire to make the Mutt life conform to its ancient ideals with necessary adjustments to suit modern conditions. The Swamigal has, introduced very salutary reforms in the administration of the temples and other properties under his control. System and method seem to be his watch-words; order now reigns where disorder was rampant a few years ago. The books published under the auspices of the Adhinam and the Tamil monthly "Gnanasambandam" started and run under his enlightened patronage offer enough evidence of his great interest in the cause of Tamil learning and Saiva Siddhanta. May God vouchsafe His Holiness many more years of health and strength to continue the good work he is doing.

Sri S. MUTHAIH MUDALIAR, C. I. E., Advocate, Mylapore,
25th August 1943.

The library of the mutt has been considerably enlarged and I trust the reading public will take full advantage of it. The new and unique feature in the history of the mutt is the holding of periodical conferences and discourses on religion and Tamil literature. A monthly journal "Gnanasambandam" with articles by scholars on Saivasidhantam is regularly published in a press newly established in the mutt for this purpose. It is the earnest wish of all that the Swamigal be blessed with a further long period of successful administration.

Hon'ble T. M. KRISHNASWAMI AIYAR, Chief Justice, Trivandrum.
31st August 1943.

It is a great pleasure to me to record my sincere appreciation of the great work that has been done during the last 10 years by the Head of the Dharmapuram Athinam. The spreading of the gospel of love which is the bed-rock of Saivism has engaged the constant attention of the Sri Pandarasannadhigal. It is very fitting that the Decennial Celebration will be presided over by Sachivothama Sir. C. P. Ramaswami Aiyar, Dewan of Travancore whosebroad culture and large heart have not been excelled, remarkable as they may be, even by his forensic or administrative successes. Let me add my humble tribute of praise and admiration for the work so far achieved by the Dharmapuram Adhinam and of the still higher achievements that His Holiness has made us all to await for in his illustrious career.

Rao Bahadur, Sri V. S. TIYAGARAJA MUDALIAR, M. A., Tiruvarur,
5—9—1943.

It gives me very great pleasure to participate in the celebrations of the first decennial rule of His Holiness Sri-La-Sri Shanmuga Desiga Gnanasambandha Pandasannithi Avergal of Dharmapuram Mutt under the distinguished presidentship of Sachivothama Sir C P. Ramaswami Iyer.

An air of all round improvement is evident in every direction of the mutt's activities since the present Pandarasannidhigal assumed charge of this famous institution. Propaganda of the Saivate philosophy by sending out eminent pandits has been done to a very great extent in addition to the publication of many valuable books on Saiva Siddhantha philosophy. The mutt can well be proud of one of the best libraries in South India which is of immense value to the public. Renovation of many temples and tanks have been carried out during this period and much has been done by way of propagating our religion. May God give His Holiness long life, and health to continue the useful service to the public.

Sri AL. VR. P. PETHAPERUMAL CHETTIAR, Zamindar of Rettayampadi, Devakottai.
24th August '43.

The pujas and other religious festivites are conducted with scrupulous care and in due pomp and ceremony. Further by his surprise visits, His Holiness keeps up his staff in vigilance which enables him to carry on the administration efficiently and well.

The Swamigal is taking a very keen and abiding interest in improving the income of the Adhinam properties in all possible ways. It is noteworthy, in this connection, that many thousands of co-coanut trees have been planted in various places under his Adhinam, which will be yielding very good results. Apart from his administrative skill. His Holiness evinces a great interest for the upliftment of religious instruction. He owns a press and runs a monthly journal called "Gnanasambandam."

In short, the present Swamigal, a young and energetic head of very prominent mutt in South India, combines in him all the requisite qualities and is, as it were, an example among the religious heads for administrative skill and for disseminating religious learning. May the Almighty bless His Holiness with a long and healthy life so that he may carry on the good and beneficient work to the public, for which he is eminently fitted.

Sri P. A. C. RAMASAMY RAJA,
Chairman, Municipal Council, Rajapalayam.
23rd August, 1943.

It has been my previlege to be in contact with His Holiness, the present Head of Dharmapuram Mutt Sri-la-sri Shunmuga Desika Pramacharya Swamigal for the past nine years and I have entertained an yearning to express my humble feelings of appreciation of His Holiness. His Holiness, being the head of the most premier and aristocratic adhinams in South India, possesses also the most democratic and philonthropic ideals. It is indeed a rare combination. His spirituality borne out of the highest culture, unique in type, is manifest in his many sided activities that reveal his simple and unselfish ideals that go to speak of the highest realisation of the Alimighty in material life of the universe, contributing to the fullest extent for the happiness of one and all coming in contact with His Holiness. His life has been one of disinterested sacrifice made manifest in his diverse activities such as reclaiming many old shrines and neglected tanks, infusing through his journal 'Ganasambandam, religious atmosphere for which the Mutt is reputed, feeding the poor and improving the national arts and industries.

His Holiness at top of the spiritual peak, has an extremely correct conception of life and things. His charity is unbounded and his liberal contribution to the improvement of national industries and national enterprises is worth mentioning.

He has modelled the town 'Dharmapuram' on the most up-to-date and sanitary Town-planning lines worthy of imitation. He stands as a diamond set in the ring of Saiva Siddantha Philosophic organisation. In short His activities in the various social, religious and economic spheres are highly exemplary and his towering personality stands dazzling before our eyes radiating his influence in all that is noble and humane.

Rao Bahadur, Sri R. V. RAMASUNDARAM PILLAI,
Pannayar, Rajapalayam.
5—9—43.

It is very kind of your committee to have extented the invitation for the celebration of Decennial Rule Celebration and the opening of the Library building. I am sure this will be an eye opener to other institutions and really be doing a great service to the country.

I wish your function as well your object is crowned with success.

Sri. V. C. VELLINGIRI GOUNDER,
Vellakinar P. O. Coimbatore Dt.,
28—8—1943.

மடங்கள் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட உண்மைகளை அறிந்து, அதன் கருத்துக்களை நிறைவேற்றுவதில் மகாசந்நிதானம் முயற்சி யெடுத்துக் கொண்டு செய்துவரும்காரியங்களைத் தெரிவதில் தமிழ்நாட்டுக்குப் பெரியநன்மையை உண்டாக்கும் என்பதில் எல்லோரும் சந்தோஷம் அடையவேண்டியதே. இவ் விதமே மென்மேலும் தருமபுர ஆதீனம் பெருமையடைய அபிமானிகளான நாம் பிரார்த்திப்போமாக.

Dr. P. SUBBARAYAN, Bar-at-Law,
Zamindar of Kumaramangalam, Tiruchengode.
4—9—1943.

I hope the Adhinakarthar will continue to manage successfully the affairs of the Adhinam for many years. I am glad you have made a distinguished person as Sri C. P. Ramaswami Aiyar to preside on the occasion. I am sure it will be a great success and Sir C. P. will tell you in what way the Mutts can help in the regeneration of our Country and specifically of Tamil Culture. In this Dharmapuram surely has a great part to play and I am sure will render a great account of itself.

Please inform the Adhinakarthar for his kind invitation for the opening of the Library. I am sorry that I am not able to be present on the occasion. I am sure the Library will be of great help to all Tamil Scholers. I trust it will be a centre of research for all Tamil schoiars.

Dewan Bhadur, Sri K. S. RAMASWAMI SASTRIGAL,
District & Sessions Judge (Retired), Royapettah, Madras.
26—8—1943.

The completion of the first ten years of the spiritual ministry and secular administration of His Holiness Shanmuga Desika Paramacharya Swamigal, the present head of the Dharamapuram Mutt, is a noteworthy and memorable event. The mutt is of great antiquity and standing and is venerated all over the Nad and beyond. It has been one of the great centres for the diffusion of the great and unique system of Saiva Siddhanta. From very ancient times it has performed also the functions of a Sangam or academy making for the gathering together of great scholars and acting as a cleraing house for cultural and religious ideas. The present head of the mutt has energised and inspired the activities of the mutt in all these directions. Under his effective and beneficient management, the cause of scholarship and culture and religion has received a considerable and admirable impetus. He has published and popularised and broadcasted many works presenting the essentials of Tamil culture and Saiva siddhanta in a simple and charming

and attractive manner. Under His Holiness' guidance much has been done in many directions and I feel sure that in the coming years the cause of culture and philosophy and religion will benefit very much by aid and inspiration. I feel it to be a previlege and a duty to offer my felicitations on such an unique occassion.

Sri. K. S. RAMASWAMI SASTRI, Vellore,
4—9—43.

I thank you sincerely for your kind invitation. I am glad that the first decennial rule celebration of Sri-la-Sri Shanmuga Desika Gnanasambanda Paramacharya Swamigal of Dharmapuram Adhinam is to take place on 5th September, 1943. I have been studing of late with care and thoroughness the history of the evolution of Tamil literature and culture and realise that a great and vital part the Adhinam has played in such evolution. I am glad that the celebration as well as the opening of the Dharmapuram Adhinam Library are to be under the ausprices of Sachivottama Sir C. P. Ramaswami Iyer who is one of the greatest son of India and who not only a great lawyer and a great statesmen and administrator but is also a man of profound culture and considerable achievements in the realms of literature and art. I wish the functions every success.

Sri. A. KONDAPPA, B. A., B. L., Advoctae, Anantapur.
26—8—1943.

I had occasion to watch at close quarters the administration of Dharmapuram Math affairs by the present head of the mutt when I was the president of the H. R. E. Board from 1935 to 1940. I was impressed with the efficiency and usefulness of the administration by the head of the math. He was devoting his full attention to the details of administration with a strict eye on economy.

Rao Bahadur, Sri V. S. CHENGALVARAYA PILLAI, M. A., Madaras.
31—8—1943.

இங்கிருந்தபடியே ஸ்ரீ ஷண்முகப்பெருமானது திருநாமத்தைப் பூண்ட பரமாசாரிய சுவாமிகளது பத்தாண்டு நிறைவு விழா பூரணமங்களமாக நிறைவேறுமாறு என்னையாளும் ஸ்ரீ தணிகைநாதரை மனப்பூர்வமாக வணங்கித் துதிக்கின்றேன்.

Mrs. RUKMINI DEVI, Kalakshetram, Adayar.
2—9—1943.

சிலமுற்றபல தேவாலயங்கள் இவர்கள்காலத்தில் திருப்பணி செய்யப்பெற்று நல்லநிலைமையை அடைந்து விளங்குகின்றன. நூல்களில் விதித்துள்ளபடி ஒவ்வொரு தேவாலயத்திலும் காலந்தவறாமல் பூசைகள் நடக்கும்படித் திட்டம்செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. உத்ஸவகாலங்களில் தக்க பண்டிதர்களைக்

கொண்டு சமய உபந்நியாசங்கள் நடத்துவது இவர்கள் காலத்தில் ஏற்பட்ட ஒரு நல்ல புதியவழக்கம். அந்தந்த தேவஸ்தானங்களில் மிஞ்சும் வரும்படிகள் அவற்றிற்கே நல்லகாரியங்களுக்கு உபயோகிக்கப்பெற்று வருகின்றன. தமிழில் ஒரு மாதப்பத்திரிகை சைவசித்தாந்தம் சம்பந்தமாக இவ்வாதீனத்திலிருந்து வெளிவருவது அறிஞர்கள் அறிந்ததே. செவ்விய முறையில் இங்கே ஒரு தமிழ்க்கலாசாலையும், தேவாரப் பாடசாலை யொன்றும், ஓர் ஆகமப் பாடசாலையும் இவர்கள் ஆதரவில் நடந்துவருவதை அறிந்து நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். இதுவரையில் வெளிவராத தமிழ்நூல்கள் உசிதமானகாலங்களில் தக்க வித்வான்கள்மூலம் வெளியாகித் தமிழர்களுக்குப் பயனையளிககின்றன. இன்னும் பல நற்காரியங்கள் செவ்வையாக நிகழ்கின்றன.

உலகம் போற்றுதற்குரிய இத்தகைய நற்காரியங்களை இவர்கள் செய்வித்துக் கொண்டு அரோகதிடகாத்திரத்துடன் பல்லாண்டு விளங்கும்படி செய்விக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

Sri. P. SAMBANDAM MUDALIAR, Author & Dramatist,
Pammal Lodge, George Town, Madras 2.
23rd August, 1943.

The Dharmapuram Mutt under able guidance and management of its present head His Holiness Sri-la-Sri Shanmuga Desika Paramacharya Swamigal has set an example for almost all the other mutts in this Presidency, if not India, as to how to manage such religious and charitable institutions, and also as to how to utilise the income of such mutts, for religious, educational, and charitable purposes. I pray God grant His Holiness a long and healthy life to continue His great benefactions is the humble prayer of an of the humble devotee of the Mutt.

Rao Sahib, Sri. S. R. RANGANATHAN, Librarian, Madras University,
Library & Secretary, Madras library Association.
3rd September 1943.

I have been watching with great enthusiasm and interest the literary output of the Dharmapuram Adhinam during the last few years. Our Mutts had been conceived not only as centres of administration for our religious institutions but also as sources of spiritual inspiration for creative literary work and as agents for dessemination of knowledge.

Your Holiness is striving to fulfil this three-fold original purpose with unusual success; and in regard to the last, it is a matter of gratification for the Madras Library Association that provision is now being made for the most modern mode of dessemination which is a public library conceived and conducted as a live work-shop and not merely as a collection of books looked upon as property or as ornament.

May the Dharmapuram Adhinam Library be a beacon of light for Tamil Nad for all time to come.

Sri G. RAJAGOPAL PILLAI, F. R. H. S. Mirasdar, Bikshandarkoil.
22—8—1943.

உலகம் உய்யும்வண்ணம் பொய்கடிந்து மெய்கண்டார் மெய்யாய்க்கண்ட சைவசமய நெறியின் பெருந்துணையாம் சிவதரும வழிகளை, நம்மவர்க்கு எளிதில் தருவான் வேண்டித் தருமபுரமே தவபுரியாக விளங்க வீற்றிருக்கும் அருள் அரசாம் ஆதீனகர்த்தரவர்கள் "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் நினை சிவன் தாளிணை" என்பதற்கோர் இலக்காய் சிவபாவனையில் கடந்த பத்து வருடங்களாய் பசு பதி புண்ணியங்களைச் செய்தும் செய்வித்தும் வருவது நம் தமிழ்நாட்டின் புண்ணியவசமேயன்றோ. தீயதெல்லாம் ஆழ்கவும் அரன் நாமமே சூழ்கவும் அதனால் உலகம்வாழ்கவும் வேண்டிச் சைவசமய நூற்களை விளக்கமாய்ப் பதிப்பித்து எல்லோருக்கும் எளிதாய் வழங்கிவரும் மா பெருந்தருமமே தருமத்தைக் காக்கின்றது. தருமபுரத்தின் பெயர் இப்படியே என்றென்றும் தழைத்தோங்குக! திருவருள் துணை.

Dr. B. V. NARAYANASWAMY, M.A., P.H.D., B.COM., BAR-AT-LAW,
Principal, Pachaiyappa's College, Madras.
3rd September '43.

Eminent people are presiding over the various functions arranged in connection with the celebration. I am sure it will be a great success. I wish the function all success.

Sri S. NAGARAJA AIYAR, Advocate, Mylapore.
31—8—1943.

The Dharmapuram Adhinam is an ancient Hindu Saivite charitable institution very largely endowed and imparting spiritual instruction or upadesam to the disciples and generally for promoting religious learning and for performance of religious and other charities including feeding of the poor.

As one who has been watching the progress of the institution for over a decade it can be said without any exaggeration that His Holiness is a model head. The glory of he ancient traditions of this place will I hope be nothing as compared with the glory of the present and the one which ought to be its future. I may be permitted to express my appreciation of His Holiness presonality, a personality marked by refinement of manner and speech, persuasive argument, and resolution and resourcefulness in pursuing a set purpose to its successful termination.

In this brief memoir it is not possibie to elaborate in detail the useful contribution made by His Holiness, except referring to them. The formation of the new road with the commemoration arch leading to the ideal village of Dharmapuram, the attractive and spacious building of modern construction and equipments, for distinguished visitors to stay, the broad and neat streets with electric lights, decent small houses constructed for the staff who heartily cooperate with the master, the new guest houses put up, the impressive appearance of the entrance to the mutt with

ancient Indian architecture, a big tank in the front of the mutt, with a library facing the tank are some of the new features, which have really metamorphosed the old place, The interest which His Holiness is taking in imparting spiritual and religious instruction is patent from the increase in the number of the Thambirans and disciples of the adhinam attending the function. The Thevaram and the Agama Patasala which are residential institutions maintained by the adhinam, the scholarships to the poor students of the local school, the opportunity given to pandits to lecture and have discussions are a few of the outstanding contribution to education. The religious publications printed and distributed to various people, the costly library specially constructed and equipped with rare and valuable literature, the *Mahanadu* held under his auspices recently could not be easily forgotten. Tamil and Samskrit culture will hereafter radiate from this place. The efficient management of the various devasthanams under his charge with puranic history of the temples. the personal supervision of the important festivals in the temples, have spoken of highly by worshippers who frequent the places. Some of the temples have been renovated according to modern ideas of sanitation and ventilation and this feature is attracting large crowds. The temple tanks which were once filthy and the dangerous flight of steps causing much inconvenience to pilgrims have been attended to and it is a pleasure for worshippers to spend some time in the vicinity and have real relief. As regards the administration of the mutt itself it is methodical as in any office under the British administration: the nature of the registers kept the diary of the staff the check made from time to time to clear off the arrears, the businesslike correspondence the system of account keeping and checking daily balances are novel to this institution in the past and to many such institutions. Every correspondence is signed by His Holiness, More than everything what struck me was that is Holiness has departed from the ancient practice of keeping all the monies in the mutt subject to all risks, and has openee accounts with the banks in the names of the various institutions and is operating on them. This does not give room for any mingling of the trust funds. The frequent personal inspection to various places where work is done on a big scale, and the surprise visits without notice to check the work of the subordinates are new to men of his position. As a man His Holiness is accessible to all and gives a patient hearing to one and all, has always got the welfare of the humanity before him, and is of a very generous disposition. It is no wonder that his servants and those who come into contact with him are sincere loyal and faithful. The popularity and the esteem in which he is held is seen from the variety of public men and officials who are celebrating the commemoration.

It is the wish and prayer of all arouud him that he may be spared for many more decades of happy, active, and successful life, to complete some of his laudable schemes as the starting of the Oriental University and give further impetus to spiritual and religious education, so that those who attend the function may have much more to say at the next commemoration. Let me convey my most cordial and affectionate greetings on the occasion of the Commemoration celebration. The event represents according to Hindu notions a significant milestone in one's life and it is singulary appropriate that the public to whose advancement His Holiness has been exerting should organise the celebration with felicite and goodwill.

Sri O. Rm. M. Sp. Sv. M. Meyyappa Chettiar, Devakottai.
22—8—1943.

தருமபுரம் ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளுக்கு மேற்படியார் பட்டத்துக்கு வந்த பத்தாவது ஆண்டுப் பூர்த்திவிழாவை நடத்திவைக்க வேண்டுமென்னும் பெரும் விருப்பத்தைக் கொண்ட பலருள் நானும் ஒருவனே. ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகளுக்கு இவ்வரிய பெரிய விழாவை நடத்திவைக்கவேண்டுவது ஆவசியகத்திலும் ஆவசியகமே! தருமபுரம் ஆதீனத்திய நீண்டகாலமாகத் தொடர்புடைய நான் கண்டும், கேட்டும் அறிந்த விஷயங்களை இதன்கீழ்க் குறித்துள்ளேன். கண்டுமகிழ்வீர்களாக.

தருமபுரம் ஆதீனத்தில் இருபத்து நான்காவது பட்டத்துக் குருமூர்த்தியாக எழுந்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் கடந்த பத்து வருடங்களாகச் சிவஞானயோகபீடத்தின்கண் ஜடாமகுடம் புனைந்து சின்முத்திரைத் திருக்கரப் பொலிவுடன் வீற்றிருந்து அறச்செங்கோல் செலுத்தி ஆளும் பேரருளாட்சியின் றிறத்தை, தருமபுரப் பதியும், அவ்வாதீன அதிகார வரம்பைக் கொண்ட பல சிவாலயங்களும் அடைந்து நோக்குவார்க்குக் குன்றின் மேற்றீபம் போன்று நன்று அறிவிக்கின்றன. பேரறிஞரும் இரும்பூதுற்று மகிழும் வண்ணம் மடாலயம், சிவாலயம், மாளிகை, கூடம், கோபுரம், தடாகம், சாலை, சோலை, மலர்க்கா வாதியன நிறைந்து ததும்பும் பேரழகுடன் மின்சாரதீப வொளியால் இரவொரு சிறிதுமின்றி விளங்கும் தருமபுரம் பதியானது இற்றை ஞான்று ஒரு விண்ணகரம் போன்று தோன்றக்காண்கின்றோம். அப்பதியில், திருமகளும், கலைமகளும், ஞானப்பெருமகளுடன் கொலுவீற்றருளுன்றார்களென்று கூறவுந் தடையுளதோ?

உத்தமத் துறைகள் யாவற்றினுஞ் சதுரத் தன்மையும், உலகமாந்தர்க்கு இதம்புரியும் நன்னோக்கமுங் கொண்டுள்ள சைவபரமாச்சாரியரான ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் பேரருளாட்சி இந்நிலவுலகில் பன்னெடுங்காலம் நின்று நிலவுமாறு எல்லாம் வல்ல முழுமுதலும், பரங்கருணைத் தடங்கடலுமான ஸ்ரீ ஐயாறப்பரின் திருவடித் தாமரைமலர்களை அனவரதமும் சிந்தித்து வந்தித்துத் துதிக்கின்றேன்.

Rao Bahadur, Sri K. RANGASWAMI MUDALIAR, B. A.,
Deputy collector (Retired), Madras.
3—9—1943.

ஆதீனத்திற்கு வணக்கம் பல. தமிழ்மொழி வளர்ச்சியும் சைவசமய நெறியும் குன்றிய தற்காலத்தில் பெயர்பெற்றபெரிய மடங்களால் ஆற்றுத தொண்டினைத், தாங்கள் முழுமனதுடன் ஆற்றிவருவது தமிழ்நாடெங்கும் அறிந்ததே.

சமய அறிவில் ஆண்மக்களேயன்றி பெண்மக்களும் முன்னேற்றமடைய வேண்டுமென்றே அவாவும், தங்களுக்குள்ளதென்பது வெளிப்படை.

இத்திருத்தொண்டை இன்னும் பல்லாண்டு ஆற்ற தங்கட்கு நீண்ட ஆயுளைத் தர சிவகுருநாதனைப் பிரார்த்திக்கின்றேன்.

Rao Bahadur, Sri C. M. RAMACHANDRAN CHETTIAR, B.A., B.L.,
1st Commissioner, Hindu Religious Endowments Board, Madras.
4th September '43.

Humble Namaskarams to His Holiness. My respectful thanks are due to His Holiness for his kind invitation to be present on the occasions of the 10th anniversary of His Holiness accension to the Adhinam of Dharmapuram, of the opening of Dharmapuram Adhinam Library Buildings and of the conference to be held along with them. I wish very much to be present personally on the occasions. But my official duties prevent me from leaving the Head Quarters at present. I wish complete success to all the functions as they deserve to be as they are objects of public good sanctioned by religion texts and usage. May the Lord Siva bless His Holiness with long, happy and useful life.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

தரவு 2

சீரோங்குஞ் செந்தமிழுஞ் சின்மயமுஞ் செறிந்திலங்கப்
பாரோங்குந் தவநெறியின் பற்பலனும் விரிந்திலங்கக்
காரோங்கும் நலம்பெறலால் காவிரியின் வளம்பெறலால்
ஒரோங்கும் பொழில்வளர வொண்டிசையும் எழில்சிறக்கத்
தேரோங்கு தெருவினம்பர் திண்மனைகள் வரிசைபவாய்த்
தாரோங்குஞ் சிறப்பினைக்கொள் தருமபுர மடப்பாங்கர்

பாலோங்கும படிகமமும் பசுவினங்கள் திகழ்ந்திலங்க
ஆலோங்கு நிழலிடைமெய் யந்தணர்க டவமியற்ற
காலோங்கும் விசும்பிழிந்துக் ககனவர்க ளாசிதரக்
கோலோங்குந் தவவரசைக் குணவகையாற் புரந்தருளி
நூலோங்கும் பவனமதை நோன்பெனவே நிகழ்வித்து
மாலோங்கு முலகினரை மக்களெனச் செய்வோய்கேள்!

தாழிசை 6.

ஆலயங்கள் வெகுபலநின் ஆளுகைக்கு ளுளவெனினும்
வாலயமாய்ப் பிறவிடம்போல் வளங்குறையக் காண்கிலமே!

மெய்கண்டார் மெய்ம்மொழியை மேவியுரை வகுக்கவொரு
கைகண்டார் இவனென்னவே கருதுமவை வகுத்தனையே!

நூலகமொன் றிதையொத்தெம் தமிழகத்தே இலையெனிலோ
மேலகத்து மிலையெனச்சொல் மெய்ம் மொழியும் வியப்பலதே!

சித்திதனின் சிறப்பதனைச் செகமுய்யச் செப்பியிட
முத்திதனி னிச்சையுறு மூதறிவை வளர்த்தனையே!

மெய்ப்பொருளை யுலகறிய மெய்யுரைகள் பலதொகுத்துப்
பொய்ப்பொருளின் களையெடுத்துப் புத்தகங்கள் தந்தனையே!

சைவரெனில் புலவரெனில் சேயிழைக்கு மிடந்தந்து
தெய்வமொழி மணக்கவுமெம் திண்தமிழைப் போற்றினையே!

அராகம் 1.

அறமதை யளவினி லளவில ரணுகிடின்
மறமதை மனதுற மகரினி மலிவுறில்
துறவற மதிலுறை துயராறு தவநினை
யுறவற வடிதொழ வுளமெயை யருளுவை

அம்போதரங்கம் - முச்சீர்.

தென்னம் பொழிலினஞ் செழித்தன
துன்னும் கழனிகள் துளிர்த்தன
முன்னும் மிகுமதி முளைத்தன
அன்ன வகைபல வளித்தனை

அம்போதரங்கம் - இருசீர்

ஏழ்மை யகற்றினை
தாழ்வை விலக்கினை
ஊழ்வினை தடுத்தனை
வாழ்வினை மிகுத்தனை

அம்போதரங்கம் - ஒருசீர்

தமிழ்மொழி
அமிழ்தினும்
கமழ்ந்திட
அமைத்தனை

தனிச்சொல்

என நீ

தாழிசை 6.

தருமபுர மடத்தலைமைத் தாங்கினது முதற்கொண்டு
கருமமதே கண்ணதுவாய்க் கனிந்திருந்தா யதிலென்கோ!

மடமென்று விதுபொழுது மடியினிட மெனுஞ்சொல்லுக்
கிடமின்று யியக்கினதி விறுமாப்புண் டெமக்கென்கோ!

சமயமதைச் சிறிதறியா சாளரங்க ளென் போர்க்கும்
இமயமதை நிகர்க்குமினி யிம்மடமென் றுரையென்கோ!

ஒழுக்கமதைப் பேய்த்தேரென் றுரைக்குமவர்க் கதுதவறென்
றிழுக்கமிலா திவணுண்டென் றியம்பிடலா மென்றென்கோ!

கீழ்ப்படிதல் எனுமரிய கிளவியொரு மடத்தினிலும்
வாழ்ப்படுத விலையென்பார் வம்மினென மொழியென்கோ!

பல்லாண்டு வாழ்தலினைப் பாரறிதல் வியப்பெனவே
சொல்லாண்ட தன்மையது சோர்வடையு மினியென்கோ!

நவிச்சொல்

எனிலிங்கு

ஆசிரியச் சுரிதகம்

திருக்கயி லாயத் திகழ்பரம் பரைக்கண்
அருக்கன் கதிரென அனைவர்க் குதவுறுந்
தரும புரத்துத் தனியா தீனத்
தருமையி லமர்ந்தே யறுநான் கெனுமுறை
பட்டத் துறையும் பரமா சாரிய!
இட்டத் துடனமக் கின்செய லியற்றிடும்
சண்முக தேசிக! சண்முக னருளால்
திண்முக வாண்டுகள் திகழ்பத் தளவும்
திறமை திகழத் தேர்ந்தனை, நல்லறம்
கறவைப் பசுவென களிப்பொருள் தந்தனை
தமிழுஞ் சைவமுந் தகுமிட மமைத்தனை
அமிழ்தெனப் பலரு மருந்திட அளித்தனை
இனியும் இப்பணி யினிதுற வாற்றக்
கனிவுறு மாண்டுகள் காவிரி எக்கரின்
பல்லாண் டாகப் பரவ
நல்லாட்சியில் நீ நலம்பெற வாழ்கவே!

வெண்பா

வருடஞ் சுபானு மதியோ மிதுனந்
தருமை மடத்தின் றலைமை — யருமைத்
தவவரசின் பத்தாண்டில் தந்தனிவ் வாழ்த்தைக்
கவியரசு கோவை கிழான்.

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.,

விடுதிபெற்ற ஜில்லா கல்வி அதிகாரி, வேலூர்.

2—9—1943.

மகா சந்நிதானத்தின் ஆட்சிக்காலத்தில் பல திருக்கோயில்கள் சீர்பெற்ற தும், பல நறு நூல்கள் உயரிய முறையில் வெளியிடப்பட்டு இலவசமாகவும் வெகு சொற்ப விலைக்குமாகத் தமிழகத்திற் பரப்பப்பட்டதும், சமயப் பெருங்கூட்டம் கூட்டப்பெற்றதும், "ஞான சம்பந்தம்" என்னும் சீரிய சைவப்பத்திரிகை தொடங்கப் பட்டதும் சைவ உலகம் நன்கறிந்து பாராட்டும் அரிய தொண்டுகளாகும். இவை களைத் திறம்பட நடத்துமாறு ஆணைபிறப்பித்து ஆதரவளித்து வரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களைச் சைவஉலகமும் தமிழுலகமும் போற்றுகின்றன.

Rao Bahadur Sri T. V. KRISHNASAMI AYYAR,
Retired Deputy Superintendent of Police, Pudukkottai.
3rd September 1943

My daughter, Srimati T.K. Rajammal and I thank the committee of hosts for their very kind invitation to the First Decennial Rule Celebration of Sri la sri Shanmugha Desika Gnanasambhanda Paramacharya Swamigal of Dharmapuram Adhinam. My connection with the Mutt extends over a period of seventy years and the fact that I have been remembered and invited adds greatly to my pleasure. In my early days, the Mutt retained traces of a grandeur which must have been far greater in earlier years. Its hospitality knew no difference of caste or creed and no beggar was allowed to go back unfed. Nor did the Mutt neglect the spiritual refreshment of the neighbourhood. Education of the masses was still tolerated and the head of the Mutt was honoured and revered as standing for all that was good and noble in the traditions of this country. Every one felt that his own dignity and good name was involved in that of the Mutt. The honour and respect shown to the Head of the Mutt was not due to the hospitality of the instituition only, but they had their roots deeper still. The spirit creates a house for itself and the house confines the spirit. This perhaps was the reason why subsequently the Mutt fell some-what from its high estate-but such changes are quite common and are perhaps incidental to the administration of great houses. But what I am happy to record and that from my own knowledge is that the present Pandarasannidhi has spared no pains to improve the administration of the Mutt and restore its earlier glories. The temples attached to the Mutt are now what temples ought to be and the Mutt has come to occupy that place in the life of the country which it once did.

The future is rosier still. The inauguration of a public libraray is an indication that real learning and culture will again be revived in right earnest. That Sir C. P. Ramaswami Aiyar inaugurates and blesses the library is sufficient guarantee that it will survive and prosper. We know that whatever he touches, he strengthens and recreates and re-invigourates into fresh life. I request you to convey my own and my daughter's very sincere felicitations to His Holiness the Pandarasannidhi on this auspicious occasion and our sincere hope that he may, step by step, rise to higher achievements and bring back the old grandeur and spirituality for which the Dharmapuram Adhinam has always been famous.

திரு. S. முத்துராமலிங்கம், B. A., முனிசிபல் கமிஷனர், காரைக்குடி.
4—9—1943.

சைவசமயத்தின் தற்காலப் பெருமை தருமபுர ஆதீனமே என்று சற்றும் கூசாமலும் தயங்காமலும் கூறலாம். அது தனிப்பெருமையே; மிகையாகாது. தாங்கள் கூட்டுவித்த ஒப்பற்ற மெய்கண்டான் மகாநாடே அதற்குப் போதிய சான்றாகும். எல்லாம் செய்யவல்லான் அருளால் வாழி பல்லாண்டு! வாழி நீடூழி.

திருவும் மருவும் அருளும் பெருகும்
பரதகண் டத்துப் பண்டைப் பெருமை
தழைத்தே ஓங்கிட உழைத்திடும் இனிய
செந்தமிழ் நாடெனும் நந்தமிழ் நாட்டில்

சைவச் சுடராய் சைவப் பெருமையே
தன்னல மாக உன்னிடு பெரியோர்
தருமம் சுரக்கும் தரும புரத்து
ஆதீன கர்த்தர் சாது ஸ்ரீலஸ்ரீ
சண்முக மாமெய்ஞ் ஞான சுவாமிகள்
தண்முகங் காட்டித் தண்ணருள் புரிபவர்
தெய்வத் திருப்பணி செய்தும் பறபல
கோயில் அமைத்து நாவில் நாமகள்
வந்திட வேநிரு வாகத் திறமையும்
அந்தமி குந்திடு செந்தமிழ் அறிவும்
மெய்கண் டோர்க்கே மெய்கண் டான்மா
நா(டு) அறிவிக்கும் நா(டு)அறியும் அவர்
"எம்மதமும் நன்(று) எச்சாதி யும்நம்
சம்மதமே" எனும் தம்மருங் கொள்கை
பட்டமே ஏற்றுப் பத்தாண் டுகளாய்த்
திட்டமாய் நன்மைகள் செய்தவர்; இதுபோல்
பத்துநூ றுண்டும் பலநூ றுண்டும்
பத்தி யுடனே பட்டத் திருந்து
உலகம் உய்யும் நிலையில் அமர்ந்து
எல்லாம் செய்ய வல்லான் அருளால்
வாழிபல் லாண்டு! வாழிநீ டூழி.!!

Sri C. AMRITAGANESAN, B. A., Municipal Commissioner, Vellore.

3—9—1943.

திருத்தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆட்சியின் முதற் பத்தாண்டு நிறைவைத் தமிழ்ப் பெருமக்கள் ஒன்று சேர்ந்து தகுந்தமுறையில் கொண்டாடப் புகுந்திருப்பது நமது தமிழ் நாட்டுக்கே ஒரு பெருமையாகும்.

இவ் வாதீன பரம்பரையில் குமர குருபர சுவாமிகள், சம்பந்த சரணாலய சுவாமிகள் முதலிய மிகப் பெருந்துறவிகள் தோன்றிச் சைவப்பெருமையையும் தமிழ்ப் பெருமையையும் தமிழுலகில் மட்டுமின்றி காசி, மைசூர் போன்ற தொலைவிலுள்ள இடங்களிலும் நிலைநாட்டியுள்ளனர். இப்போதுள்ள மகா சந்நிதானமும் அவ்வழியிலேயே நின்று சென்ற பத்தாண்டுகளாக சைவத்தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றிவருதல் உலகமறிந்தது. கோயிற்றிருப்பணியிலும் நூல்கள் வெளியீட்டிலும் மகாசந்நிதானம் காட்டிவரும் ஊக்கம் அளவற்றது. மற்றும் அவர்களுடைய ஆட்சித்திறமை போற்றத்தக்கது. மகா சந்நிதானத்தின் சீடகோடிகளில் ஒருவனான அடியேனுக்கும் என்னுடைய வியப்பைக் கூறிக்கொள்ள வாய்ப்பளித்த இந்த விழாக் கொண்டாட்டக் குழுவினருக்கு எனது நன்றியுரித்தாயதாக.

திரு. எஸ். பஞ்சநத முதலியார், பி. ஏ., பி. எல். அட்வகேட், சென்னை.
4—9—1943.

மகாசந்நிதானம் எழுந்தருளி இதுகாறும் சைவம் தழைக்க நடத்திவந்த காரியங்களும் சாதனங்களும் மேன்மேலும் ஓங்கிவளரவும், பரவவும், மகா சந்நிதானம் நீடூழிவாழவும், ஆட்சி ஓங்கவும் எந்நாளும் ஸ்ரீ சொக்கலிங்கமூர்த்தியைப் பிரார்த்திக்கின்றேன்.

Sardar Sri A. VEDARATNAM PILLAI, M. L. A., Vedaraniam.
4—9—1943.

His Holiness' contribution to open the Library adds much to his devotion to improve the Oriental Literature and learning. I pray the Almighty to bless him with more and more enthusiasm to do such uesful Devotions.

Sri C. V. RAJAGOPALACHARIAR
Government Pleader, Tiruvadi.
4—9—1943.

I am, in receipt of the invitation sent to me for the Commemoration festival of the completion of the very useful and successful period of Your Holiness' assumption of the Sacred Trust.

I am all happy to think of the highly useful and philanthropic service rendered by Your Holiness to the humanity at large.

I pray for the successful termination of the function

Sri A. GANESA IYER, Vakil, Tiruvadi.
4—9—1943

In this connection I wish to state that it is indeed a happy idea that the tenth anniversary of Your Holiness' assumption of this Holy office should be celebrated in a fitting manner. It is common knowledge that Your Holiness has been doing your best for the cultural and spiritual advancement of the country and for the promotion of true Dharmic ideals.

The institutions in your charge are all being worked very satisfactorily in furtherance of the purposes for which they are intended.

May God bless Your Holiness with long life, peace of mind, and selfless devotion to matters spiritual and cultural.

Sri M. K. VAIDYANATHA AIYAR, B.A., B.L.,
High Court Vakil, Kumbakonam.
4—9—1943

The opening of the Dharmapuram Adhinam Library Buildings will, I hope open a new Epoch for Tamil & Saiva Sidhanta Learning & attract Scholar & Students from all parts of Tamilnad including Jaffna.

The Solicitude of His Holiness for the vast number of His disciples is remarkable. May He live long for ideal administration of Temples entrusted to His care & for the spiritual elevation of His numerous disciples & for patronage of Learning & Art.

திரு. A. முத்தைய பிள்ளை B. A. B. L., பாளையங்கோட்டை.
9—9—1943

1 கல்லாவின் நிழலமர்ந்தான் காட்டு பொருள் தெளிந்துலகம் உய்யக் கொண்ட
சொல்லாளன் மெய்கண்டான் சந்தானம் குறைவுபடா தோங்கக் காக்கும்
வல்லாள! வதனங்க ளாறுடைய வள்ளற்பேர் புனைந்த வள்ளால்!
சொல்லாலுன் புகழ்சொல்லல் துரும்பு பற்றிக் கடல் கடக்கும் துணிபதாமே.

2 எந்தை குரு பாற்கன்று எழிலாரும் திருமேனி தாங்கிக் கண்டம்
மூந்தையுறு கறை மறைத்தும் முனிமகிழ மாசிலாமணியாய் வந்தாய்
சிந்தைதெளிந் தின்பமுறச் சிவஞான நிதியுதவி இன்றுன் பாதம்
வந்திப்பார்க் காறுதலை ஆனபுகழ் வழுத்துமுறை என்னே என்னே.

3 அம்மையுடன் அப்பனுமாய் அகில மெலாம் தனிபுரக்கும் அருளினலே
செம்மைதரு சிவஞானம் எல்லோர்க்கும் படிமுறையிற் சேருமோனும்
எம்மையுடை யாள்யானே உலகென்ப ணின்றென் றல றிசைத்த உண்மை
செம்மையுற நினதருளாற் றிரிபின்றித் தெளிந்தோரே தெளிந்தோ ரம்மா.

திருவடிகளுக்கு அன்பும் பணிவும் மிக்க வணக்கத்துடன்.

Janab HAJEE MOONA THAMBI SAIBOO MARICAN BROS.,
General Merchants & Mirasdars, Karaikal.
4th September 1943.

We are in due receipt of Swamigal's kind invitation for the opening of Dharmapuram Adhinam Library Buildings and we thank Swamigal from the bottom of our heart.

We have noticed with great admiration Swamigal's efforts to build a building for Library which will be most beneficial for the public and we heartily pray Almighty that Swamigal may be spared long to contribute Swamigal's efforts to building up

such public institutions and wish the Library every success and encouragement. We thank our present Swamigal has started this new venture.

Sri R. KANDASAMY MOOPPANAR, B. A., B. L., Kumbakonam.
5th September 1943.

It has given me immense pleasure to learn that Your Holiness is starting a Library in the Mutt premises and arranging to open the same to-day by one of the greatest sons of the soil, Sir. C. P. Ramaswami Iyer, the Dewan of Travancore.

The idea of establishing a Library is an original and laudable one for which the Tamilians can take a legitimate pride and feel ever grateful to Your Holiness. I hope and pray that with your Holiness' munificence, it will develop, ere long, into the Bodleian of South India, and radiate knowledge throughout the world and demonstrate to the world the greatness, civilization, and culture of the Tamilians.

To The Committee

It is really notable that you have arranged the celebration of the Decennial Rule of Sri-la-Sri Shanmuga Desika Gnanasambanda Paramachariya Swamigal in a fitting manner worthy of praise and admiration Very few among the Heads of the Adhinam have done such service to the Institution or to the humanity as the present Pandarasannadhigal who within the short time His Holiness has assumed office has by precept and example demonstrated his wounderful capacity as an Administrator and as a Religious Guru. Many old and ancient temples have been renovated and the portals are thrown open for the worship by the public to offer their prayers in conformity with the tenets; and thousands of religious books have been unearthed and given to the public free, for them to read digest and follow the sacred religion of Saiva Sidhantha. The public at large and Saivites in particular cannot adequately thank His Holiness for all that His Holiness has done and is prepared to do. We can only offer our humble prayer to the Almighty God to spare His Holiness for a long long time and sustain him with energy and enthusiasm to carrying on this sacred mission on earth

May His Holiness live long.

Sri S. RANGASWAMI PILLAI, Pleader, Vriddhachalam.
5—9—1943.

தருமபுர மடத்தின் நிர்வாகத்தையும் அதன் ஆளுகைக்கு உட்பட்ட தேவஸ்தானங்களின் பரிபாலனத்தையும் பார்க்கிறபோது யாவரும் சந்தோஷப் படவேண்டியதே. நான் சென்ற 1943ம் வருஷம் கோடை விடுமுறை நாட்களில் சந்நிதானத்தின் ஆளுகைக்குட்பட்ட கோயில்களில் அநேகம் கோயில்களுக்குச் சுவாமி தரிசனத்திற்குப் போயிருந்தேன். நான் தெரிந்த ஒவ்வொரு கோயிலி லும் அதற்குத் தக்கபடி திருப்பணி நடந்துவந்ததுடன் காலாகாலத்தில் பூஜை

களும் தவறுமல் நடந்து வந்ததைப்பற்றி இப்போது எடுத்துச் சொல்வது மிகையாகாது; அதைத் தவிர மடத்திலும் பாடசாலைகளைவைத்துத் தேவாரம் வேதமிவை ஓதுவிக்குப்படி செய்திருப்பதையும் நான் அப்போது வந்தபோது பார்த்திருக்கிறேன். என் மனதில் அப்போது அடைந்த திருப்தியை அவ்விடம் சந்நிதானத்திற்கு வெளியிட இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி நான் மிகவும் சந்தோஷிக்கிறேன்.

Sri. T. V. RAMANATHA IYER, Advocate, Madrs.

4—9—1943

Please convey to His Holiness the warmth of my regard and esteem for his beneficient activities and excellent administration for the past ten years and may God Almighty preserve His Holiness for many many years is the earnest prayer of his sincere admirer.

Sri V. NADIMUTHU PILLAI, M. L. A., President, District Board, Tanjore.

4th September 1943

Please accept my hearty felicitations on the completion of your Holiness' first decennial rule. The opening of the library buildings will be a special feature of your Holiness' administration and will be an everlasting benefit to the general public.

I sincerely wish and pray for your Holiness's successful administration for some more decennial periods.

Rao Bahadhur, Sri A. VEERIYA VANDAYAR, Poondi,

4th September 1943

I am glad Sri-la-Sri Pandarasannithi had made a new departure in this direction. The public of Tanjore District have some thing to be appreciated for his services, rendered. I only pray for his long life and perfect health so as to enable him to continue to serve for the cause of the country. Kindly convey my best regard to Sir C. P. Ramaswamy Iyer and Mr. T. M. Narayanaswamy Pillai. Wishing every function complete success.

திரு. P. T. S. குமாரசாமி செட்டியார், கும்பகோணம்.

4—9—1943.

தங்களாட்சிக்குட்பட்ட தேவாலயங்களைப் பழுது போக்கிப் புதுக்கியும், நித்திய நைமித்திக விழாக்களைச் செவ்வனே நடைபெறச்செய்தும் தம் ஆதீன மடாலயத்தையும் அதைச்சார்ந்த கிளைமடங்கள் சிலவற்றையும் கண்கவர் வனப்பின் திண்மை நிலையில் புதுப்பித்தும் மிகைபட எடுப்பித்தும் அரும்பணியாற்றியுள்ளார்கள்.

தங்கள் ஆதீனப் பெரியோர்களால் இயற்றப்பெற்ற சமய சாத்திர நூல்களையும் பிரபந்தங்களையும் பல ஆலய வரலாற்றுச்சுருக்க நூல்களையும் தல புராணங்களையும் சீரிய முறையில் அச்சிட்டு இலவசமாயும் குறைந்த விலையிலும் யாவரும் பெற்று உய்யச்செய்து, மொழியையும் சமயத்தையும் பாதுகாத்துள்ளார்கள். இவ் ஆதீன மடாலயத்தில் ஒரு நூல் நிலையம், ஆகம பாடசாலை, தமிழ்வேத பாடசாலை, இவைகள் நிறுவியும், சில ஆலயங்களில் நூல் நிலையங்கள் ஏற்படுத்தியும், சென்ற விஷு ஆண்டு ஆவணித்திங்களில் 'மெய்கண்ட' சாத்திர மகாநாடு ஒன்று கூட்டி அதில் ஞான மணிகளாயுள்ள பெரியோர்களைக் கொண்டு சைவ சித்தாந்த உண்மை விளக்கம் செய்வித்தும், தம் ஆட்சிக்குட்பட்ட ஆலயத்திருவிழா நாட்களில் தக்க புலவர் பெருமக்களைக் கொண்டு மொழி, சமயம் இவைகளைப்பற்றிய சொற்பொழிவுகள் ஆற்றுவித்தும் தமிழ் நாட்டையும் சைவ உலகையும் பலவகைகளில் மேன்மையுறச் செய்திருக்கிறார்கள்.

தமது ஆதீன மடாலயத்தில் பொதுவாக ஆதீன சம்பந்தமாக அச்சுவேலை நடப்பதற்கும், சிறப்பாகத் தமிழ் நூல்கள், சைவ நூல்கள் முதலியவைகளை அச்சிடும் வேலைகள் காலத்தாழ்ச்சியின்றி நடைபெறவேண்டியும் ஆதீனச் சார்பில் பெரும் பொருட்செலவில் ஒரு அச்சு இயந்திரசாலையும் அமைத்துள்ளார்கள்.

ஆதீன மடாலயத்தில் 'நூல்நிலையத் திறப்பு விழா' நடைபெறும் என்ற செய்திபடிக்க என் உளக்களிப்பிற்கோர் அளவின்று. நம் தமிழ் நாட்டுச் சைவ மடாலயங்களில்எழுந்தருளியிருந்த பண்டைப் பெரியோர்கள் சமய நூல்களையும் உரை நூல்களையும் இயற்றியும் இயற்றுவித்தும் பல மாணவர்கட்கு அறிவுச்சுடர் கொளுத்தியும்-கொளுத்துவித்தும் நமது தெய்வத் தமிழையும் தொன்மைத் தெய்வச் சைவத் திருநெறியையும் வளர்த்து நம் தமிழுலகையும் சைவ உலகையும் கண்ணும் கருத்துமாய்ப் போற்றிவந்தார்கள். அஃதேபோல் இவ்வாதீனத்துப் பண்டைப் பெரியோர்கள் பல சரித்திரங்கள் எழுதியும் எழுதுவித்தும் பல தொகுதிகளை ஒருசேரத் தொகுத்தும் உயரிய சைவாகமநூல்களைத் தங்கள் சீரிய உயிரினும் ஓம்பியும் சைவஉலகத்தைச் செழுமையுறப் பாதுகாத்தனர். அம்மாதிரி பல நூற்றுகுதிகளைத் தொகுத்து வைக்கப்பெற்றிருந்த இம்மடாலயத்தின் ஒரு பகுதிக்கு இன்றும் ஆகமக்கட்டு எனவே பேர்வழங்கப்பெறுவது யாவரும் அறிந்ததே. அஃதொப்ப இதுபோழ்தும் நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்களின் உயரிய சீரிய ஆழ்ந்தகருத்தோடுகூடிய செயன் முறையினலே செந்தமிழும் தெய்வச்சைவ நெறியும் சில்லாண்டுகளில் சில உயரியநிலையை அண்மியுள்ளன. இனியும் மிக உயரிய இணையற்ற நிலையில் நம்மையும் நமது மொழியையும் நமது நெறியையும் விளங்குறும்படிச்செய்வார்கள் என்பதற்கோர் ஐயமுமின்று. பர பக்கமும் சுபக்கமும் படித்து அறியவேண்டும் என்ற நம் ஆன்றோர் கொள்கைக்கிணங்க இந்நூல் நிலையத்தில் நம் சமய நூல்கள் நம் தமிழ் நூல்களோடு பிறமொழி நூல்களும் பிற சமய நூல்களும் தொகுக்கப்பெற்றிருப்பது போற்றத் தகுந்ததாகும். இப்பெரும் நூல் நிலையம், பெருந்தகுதியும் பேராற்றலும் பேரறிவும்படைத்துள்ள நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் பெரும் பொருட்செலவில் கண்கவர் வனப்பில் நிறுவப்பெற்று, தக்க காலத்தில் பேரறிவும் பேராற்றலும் பெருந்தகுதியும் வாய்ந்த தக்க ஓர் பெரியார் அவர்களால் திறக்கவும்படுகிறபடியால் அஃது பலர்க்கும் பயன்படும்.

இது போன்ற பெருவிழா ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகளின் ஆட்சியின் ஐந்தாவது ஆண்டு நிறைவிலும் நாம் கொண்டாடி இருந்திருக்கவேண்டும். இனி இப் பத்தாண்டு விழா எனது தொழுகுலமாம் ஆலவாய் அண்ணலின் திருவருளால் இனிது நடைபெறுமாறு அப்பெருமானின் திருவடிகளைப் பன்முறையும் வழுத்துகின்றேன்.

சைவாதீனங்கள் வாழ்க; சைவமும் செந்தமிழும் ஓங்குக; சிவனருள் சிறக்க; சிவபக்தி வளர்க; உலகம் என்றும் இன்பம் பெறுக.

Sri T. M. MEENAKSHISUNDARAM IYER, B. A., B. L.,
Advocate, Tinnevelly Junction.
4—9—1943.

I here by offer my heartfelt felicitations to your Holiness on the occasion of the first decennial celebration of your accession to the Gadi of the Dharmapuram Adhinam which you so nobly adorn. May the Lord Sri Chokkalingaswami grant your Holiness success and glory in all your efforts in furtherance of art and culture.

Sri J. M. SOMASUNDARAM PILLAI B. A., B. L.,
Executive Officer, Sri Dhandayudapani Devasthanam, Palni.
3—9—1943.

The first decennial Rule celebration of Sri-la-Sri Shanmuga Desika Gnanasambanda Paramacharya Swamigal of Dharmapuram Adhinam marks an epoch in the history of Saiva mutts. Inaugurated nearly five centuries ago, the Adhinam was presided over by a galaxy of Paramacharyas, but the present Swamigal by his unique qualities of head and heart may be easily said to have outshone them all. Almost verging on fanaticism, the Swamigal during the last few years has launched forth scheme of reform in almost all branches of the mutt activities in the service of the saivites. The 27 temples in his charge have been repaired and renovated and a number of tanks dug almost under his personal supervision. The dissemination of Saiva Religion through periodical lectures in the mutt and the temples is almost a new venture highly to be appreciated, The publication of "Gnanasambandam" as the journal of the mutt, and other useful Saiva literature at their actual cost price and the inauguration of one of the best libraries in South India in the Mutt, and, the institution of a Printing Press, almost reminds me of the Renaissance of Europe in the 14th Century. The conference "மெய்கண்டான் மகாநாடு" brought together almost all the Saiva-Pandits together to consider the truths of Saivaism and gave a popular commentary on some of the Saiva Philosophical texts. The torch of Knowledge thus lit by the Adhinam will I am sure go on for decades and decades under his august patronage. I wish Sri-la-Sri Swamigal of the Adhinam a long and benevelent Rule, and the celebrations of a number of jubilees by the grace of Muruga.

திரு. என். ஆர். ராமானுஜம், 'காவேரி' ஆசிரியர், கும்பகோணம்.

24—8—1943.

ஒரு பெரிய தேவஸ்தானம். அதனுள் நுழைந்தோம். நுழையும் போதே மனத்தை மகிழ்விக்கும் தோற்றம், எங்குபார்த்தாலும் பரிசுத்தமாகவும் கவர்ச்சியாகவும் வைக்கப்பட்டிருந்தது, நிர்வாகஸ்தரின் ஊக்கமும் திறமையும் எங்கும் காணப்பட்டன. பூஜைமணி ஒலித்தது. இக் கோவிலில் நித்தியபூஜைஉண்டு என்பதை அங்குள்ள விக்ரகங்களே எங்களுக்கு அறிவிப்பனபோல் விளங்கின. கோயில் சிப்பந்திகள் பயபக்தியுடனும், ஊக்கத்துடனும் நடந்து கொண்டார்கள். அந்த ஊர் ஓர் ஒதுக்கப்பாடான குக்கிராமந்தான்; ஆயினும் திறமையான நிர்வாகம். விசாரித்ததில் செவ்வனே நடத்தப்பட்டுவரும் அத் தேவாலயம் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தது என்று தெரிந்துகொண்டோம்.

இதன்படி பார்த்தால் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் தரும பரிபாலனம் மிகச்சிறந்தது என்று யாரும் ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் ஆதிக்கத்துக்குட்பட்ட ஆலயங்களில் தெய்வ சான்னித்யம் தாண்டவமாடுகிறது. நாம் ஒரு கோவிலுக்குள் சென்றால் அங்கே நம்மிடம் அன்பு தோன்றி நாம் என்பு உருகவேண்டும். அங்குள்ள காட்சிகள் நம்மையும் அறியாது நம்மைப் பரவசப்படுத்துகின்றது. தருமபுரம் ஆதீனத்துக்குட்பட்ட கோயில்களில்தான் நாம் இதை அனுபவிக்கலாம்.

தருமசொத்தைக் குறிப்பிட்ட வகையில் செலவிடுவதுதான் தருமகர்த்தாக்களின் முதற்கடமை என்பதை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள்.

இந்தப் பத்தாம் ஆண்டு நிறைவுவிழாவைப்போல் இன்னும் பற்பல ஆண்டு நிறைவு விழாக்கள் இவர்களுக்கு நிகழவேண்டுமென்றும் எல்லாம்வல்ல இறைவனை மனம்மொழிமெய்களால் வணங்குகின்றேன்.

திரு. டி. வி. கோவிந்தசாமி பிள்ளை,
'யதார்த்தவசனி' பத்திராதிபர், கும்பகோணம்.
27—8—1943.

சிவஞானச் செல்வர் அருளாட்சி தொடங்கிய காலமுதல் தங்களாதீன பரிபாலனத்திற்குப்பட்ட ஆலயங்கள், மடாலயங்கள், தடாகங்கள் முதலியவற்றைச் சீர்திருத்தியும், புதுக்கியும், தமிழ் ஆரிய வேதபாடசாலைகளை அமைத்து நலமுறப் பேணியும், சைவ நூல்கள் பலவற்றைச் செவ்விய முறையில் தக்க சான்றோரைக் கொண்டு வெளியிட்டும், சைவப் பேரவை கூட்டியும், 'ஞானசம்பந்தம்' என்னும் பதிப்பகத்தையும், அதன் வாயிலாக அத்திருப்பெயர் பூண்ட செந்தமிழ்த் திங்கள் வெளியீட்டையும் செம்மையுற நடாத்தியும், இன்னோரன்ன நல்லறச் செயல்கள் பலவற்றைச் செய்தும் வருகின்ற செயலின் சிறப்பை எம் ஒரு நாவால் என்னென்று விரித்து விளக்கவல்லேமாவேம். அவற்றை மிக்கெடுத்துப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுதற்குக் குழுமும் ஆரியம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழியினும்

வல்ல செம்மைநலம்வாய்ந்த சீரியோர்கள் நாவாற்செப்புந் தரத்தன வாகுமன்றி, வேறெவ்வகையாயினும் விளம்புதற்கரியனவேயாம். ஆகவே, சைவ சமயமும், நமது தாய்மொழியும் தனிமொழியுமாகிய தமிழ்மொழியும் தழைத்துச் செழித்து வளர்தற்கேற்ற வகைகளை நாடோறும் விருத்திசெய்து, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அரோக திடகாத்திரமாய் நீடூழி வாழவேண்டுமென்று ஸ்ரீ ஞானசம்பந்த சற்குரு மூர்த்தியின் சரணாரவிந்தங்களைச் சந்ததமும் வாழ்த்தி வந்திக்கின்றோம்.

திரு. எஸ். சுந்தரேசஞ் செட்டியார். பி. ஏ., எல். டி., ஆசிரியர், கும்பகோணம்.
27—9—1943.

பொன்கொழிக் கும்புனல் பொற்பமை காவிரி
மன்னிய புகழ்சேர் சென்னிநா டதனில்
மயிலுருக் கொண்டு மாதுமை தானும்
மாதே வன்றனை வழிபா டியற்றிய
மயூரமா தலத்தின் மருங்கினில் மிளிரும்
மல்குசீர் தருமையின் மடாலய அதிபருள்
இருபத்தி நான்கென வருபிற் றோன்றலாய்
எழுந்தருள் புரியு மெம்முடை யண்ணல்
சண்முக தேசிக சற்குரு மணியின்
மண்புகழ் பத்தாம் வருட விழாவினில்
அன்னவ ரியற்றிடு மாலயப் பணிகள்
கோவில்கள் புதுக்கிக் குடமுழுக் காட்டல்
கோதிலாச் சைவக் கொள்கை நூல்களை
உலகோ ருய்ய உவப்புட னளித்தல்
'ஞானசம் பந்தமாம்' நற்றமிழ்த் தாளால்
ஞானசம் பந்தம் ஞாலமெல் லாமுறத்
தமிழ்மொழி யொடுசிவ சமயமுந் தழைக்கத்
தண்ணருள் கொண்டு தகுபணி புரிதல்
தரும புரமெனுந் தகவுசேர் பதியை
தக்கவர் புகழுந் தன்மையி லமைத்தல்
மடாலய மதனை மாண்புறப் புதுக்கி
மாதவர் பலரும் மகிழ்வுற வமைத்தல்
ஆகம வேத புராணதே வாரம்
அனைவரு மோதுதற் கமைதரு பாட
சாலைகள் சமைத்த லானநற் சீராம்
அரும்பணி யாவையும் அன்புடன் மொழிந்து
நற்குண மிகுந்த நம்மிறை யாய
சற்குரு சண்முக தேசிகர் பன்னாள்
இத்தரை நிலவி ஈடிலாப் பணிகளை
இன்புட னியற்றி யெமக்கருள் புரிய
எண்டோ ளண்ண லின்னருள் சுரக்க
ஏத்துவ மன்னன் இணையடி மலரே!

திரு. ஆதிநாத பிள்ளை, வேகுப்பட்டி.

26—9—1943.

இறையவன் றன்னரு ளினிதுட னிறையத்
தரும புரமதிற் றண்ணரு டாங்கி
யருமை யுடனே யமைதரு முறையுடன்
அறிவு மன்புஞ் செறிதரு மருளுடன்
இருபத் தொன்று மெழிலுடை வழிமுறை
யொருபத் தியாண்டா யுவப்புட னேற்றுப்
பார்த்துப் பலவறம் பண்புட னோங்க
வோர்த்திங் குவப்புட னுஞற்றி யுயர்ந்தோய்
குறைவொன் றின்றிக் கோயிலைப் பேணியும்
துறைபல தோய்ந்த தூயநல் லறிஞர்
போற்றிப் புகழப் பொன்று நல்லற
மாற்றியு முயர்ந்த வருந்தவச் செல்வ !
முன்னொரு நாளதில் முழுவது முணர்ந்து
சொன்னல மிகுந்த சோர்விலா வறிஞர்
குமர குருபரர் விமலர தருளாற்
கூடி யுயர்ந்து பாடி யருளிய
பண்பது போல நண்பது கொண்டு
பாவலர் பரவப் பைந்தமிழ் வளர்ப்போய் !
திரும்பவுந் திருவருள் திகழ்தரு மிடங்க
ளரும்பிப் பூக்க வருளது பூண்டு
கற்றவர் தம்மூட னற்றவ முடையரும்
கலந்து வாழக் காமுறும் வகையில்
நலந்திகழ் நல்லவை நாட்டினிற் கூட்டித்
தனக்கென வாழாத் தன்மையை யாகிப்
பிறர்க்கென வாழும் பெருமையை விளக்கும்
சண்முக பண்டாரச் சன்னதி யாயுறை
கண்முகத் துடையோன் காமுறு மன்ப
அறநிலை யவற்றி னழகிய பெருமை
திறனுற மீண்டும் திகழ்தரத்
திருத்திய செயல்கள் சீரினைப் பெறவே.

L'ADMINISTRATEUR DE KARIKAL.

I seize this opportunity to convey you in the name of H. E. The Governor of French India and in my own name of heartiest thanks and congratulations for your generous con-tribution in favour of Fighting people and patriots of France.

Please agree the assurance of my respectful sentiments.

Sri B. VENKATACHALAM PILLAI, B.A., B.L., M.L.A.,

President. District Board, Trichinopoly.

29—8—1943.

சைவ சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தற்காலத்துக்கேற்றவாறு ஆவன செய்யும் முறையில் பல இலவச வெளியீடுகளை வெளியிடுவித்தும், ஆங்காங்குச் சமயச் சொற்பொழிவுகள் செய்வித்தும், பல ஆலயங்களை நிர்வகித்தும் இவ்வாறு மகாசந்நிதானம் நேரிலேயே கண்காணித்து அருள்புரிந்து வருவது யாவராலும் பாராட்டப்படத்தக்கதே.

Dr. A. NATESA IYER, Mayavaram.

5—9—1943.

I have known His Holiness Sri-la-Sri Shanmuga Desiga Gnanasambanda Swamigal, the present head of the Mutt, when he was Kattalai Thambiran and Odukkam Swamigal. It had been carefully and judiciously trained by his predecessor in all his plans of organisation and the ways and means it had chalked out to improve the resources as well as the activities of the mutt. How wisely the late Subramanya Desiga Gnanasambanda Pandarasannadhi had planned and how faithfully his plans have been carried out by the present head of the Mutt is being demonstrated by the celebrations of to-day.

The old narrow streets with low roofed houses of Dharmapuram village have now given place to broad streets with well built houses and lit with electricity and interspersed with fine gardens, so much so. that the village has improved beyond recognition. Several tanks have been cleaned and improved and provided with parapet walls and steps. Several temples have been similarly repaired and improved. New gardens have been laid out containing choice specimens of fruit bearing trees. Many and commodious quarters have been built to house the staff so as to relieve their small wants and fit them better for work. A new Thevara Patasala and an Agama Patasala have been established in the presincts of the mutt, wherein secular education also is being imparted to the students. A Library rich in literary and religious books has been opened and rare and hitherto unpublished works have been appearing as a regular serial, in the 'Gnanasambandam' the newly started Journal of the mutt issued from the newly started printing machinery of the mutt, and what is more noteworthy is such books are distributed free to those who are eager to read them. All these improvements and activities are of course in addition to the usual and time-honoured practice and method of patronising the fine arts and learning and relieving the poor and the needy and the strict observances of Saiva Siddanta Cult. In a word Dharmapuram has now been made a 'Boologa Indra Bavanam' and the village town is a visible 'Shanmuga Vilasam' and is well worth a visit by every one.

May God bless His Holiness with long life and strength to continue the good work he has begun.

திரு. வி. அண்ணாமலை முதலியார்,
ஆற்காடு சிட்டிசன் பாங்கி, ஆற்காடு.

உலகம் புகழும் உயர்தமிழ் நாட்டில்
இலங்கிடும் தருமை யாதீன மதனில்
திருக்கயி லாயப் பெரும்பரம் பரையில்
இருபத்து நான்காம் எழில்பதம் எய்தி
ஞானச் செங்கோல் நலமுற ஓச்சும்
ஞான சம்பந்த நற்றமிழ் வள்ளால்
கடவுட் கல்வியும் கன்னித் தமிழும்
குறைந்திடும் இந்நாள் நிறைந்திட எண்ணிப்
பதினான்கு சாத்திரம் பண்புடன் ஆய்ந்து
பல்லோர் பயிலப் பதிப்பித் தளித்தும்
சைவசித் தாந்தம் தரணியில் வளர்க்க
'ஞானசம் பந்தம்' என்னும் ஞானத்
திங்கள் வெளியீடு இங்கிவண் தந்தும்
வேத முதலாத் திருமுறை வரையில்
ஓதித் தேர்ந்திட பள்ளிகள் உதவியும்
அமிழ்தினும் இனிய தமிழினை வளர்க்க
அரும்பொருள் கொடுத்தும் பரிசில் அளித்தும்
இசைத்தமிழ் போற்ற இசைவல் லாரை
இசையரங் கேற்றி எழில்பொருள் ஈந்தும்
இன்தமிழ் வளர்க்கும் இயம்பருந் தாயே,
அருந்தவப் பெரியீர், அருங்கலைக் குரிசில்,
எங்கள் குருமணி, இன்னருட் கடலே,
சண்முக னெனும்பேர் சமயத் தலைவ,
மணிமுடி சூடி மகிழ்ந்தர சியற்றிய
பத்தாம் ஆண்டு பெற்றினைக் கண்டு
பெருமகிழ் வுற்றுப் பெருமான் நும்மருந்
திருவடி அணிந்து சேவடி பணிந்து
பற்பல ஆண்டுகள் பாரினில் நன்று
வாழி, வாழி, வாழியென
வாழ்த்துவம் இறையடி வணங்கி யாமே!

Sri C. NARAYANAN, Tanjore
4—9—1943.

உலகமுழுவதும் புகழும்படி பீடாதிபத்யம்பெற்ற கடந்த பத்து ஆண்டுகளிலும், உயிர்நிலைபோல சைவ சமயத்தையும், திருக்கோயில்களையும், கண்ணும் கருத்துமாகப் பரிபாலித்துவந்த தாங்கள் மேலும் மேலும் பலகாலங்கள் சைவ அரசு புரிந்து வாழும் வண்ணம் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன் தங்கள் ஆக்ஞையின் படி வெளியிட்டுள்ள பிரசுரங்கள்யாவும், சைவசமயத்துக்கும், இறைவன் வழிபாட்டுக்கும் புத்துயிர் அளித்து வருகின்றன.

PROF. N. M. சுந்தரம் F. I. A. SC. அப்பர் நிலயம், திருநெல்வேலி.
29- 9—1943.

எல்லாம்வல்ல இறைவன் மகாசந்நிதானத்திற்கு இதுபோல் பத்து, பத்து ஆண்டுகளாகப் பத்துவிழா நடந்துவரவேண்டுமென்றும் அடியார்களெல்லாம் கண்டு ஆனந்தித்து, சந்நிதானத்தின் ஆசிர்வாதம் கிடைக்கும்படி சதா பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றேன்.

Sri. S. RATNAM,
Mint Street, P. T. Madras.
5th Aug. 1943

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில் கடந்த பல ஆண்டுகளாகச் சைவம் தமிழ் தழைத்தோங்கி நிற்கவும், ஏழை மக்களுக்குக் கல்வி பயில உதவி வருவதும், தரும பரிபாலனங்கள் நேர்மையுற்றுச் செவ்வனே நடந்துவருவதும் உலகத்தார் அறிந்த விஷயம். இந்நெறியான தருமகர்த்தா ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஆரோக்கியமும் மகிழ்வும் நிறைந்த நீண்ட நாள் ஆட்சியைத் திருவருள் நிறைநத சொக்கநாதப் பெருமானிடத்தில் வணங்கி வேண்டுகின்றேன். இன்னும் "வெள்ளி விழா" "தங்க விழா" "வைர விழா" முதலியன நடக்கப்பெற வேணுமாய்ப் பெருமான் சொக்கலிங்கத்தைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

Sri R. NAGASUNDARAM, Trichinopoly.
5—9—1943

சென்ற பத்தாண்டுகளாகவே மகா சந்நிதானம் அவர்கள் ஆற்றிவரும் தொண்டுகள் அளவில. அவற்றுள் சமயத்தொண்டு, ஞானத்தொண்டு, தமிழ்த் தொண்டு முதலிய மிக முக்கியம் வாய்ந்தவை. இவைகள் இப்பத்தாண்டிலே தமிழ் நாட்டில் அடைந்திருக்கும் ஒரு உயர்வு மகா சந்நிதானம் அவர்களுக்கு மேற்கண்டவைகளில் இருக்கும் இடையறாப் பற்றேயாகும்.

இதற்கு நமது செந்தமிழிதழ் 'ஞானசம்பந்தமும்', தருமையிலுள்ள 'நூல் நிலயமுமே' சிறந்த எடுத்துக்காட்டாகும்.

THE HAND-MADE PAPERS, Mayavaram
4th September, 1943

It is of immense pleasure to us to join the celebration of the first decennial Rule of His Holiness the Mahasannidhanam of Dharmapuram Mutt.

It is a great trust indeed which His Holiness has been and is discharging with credit and success and it should be the prayer of all that He may ordain the continuance of this beneficial Rule for many more decades to come.

திரு. ச. க. தியாகராஜ பிள்ளை,
குறுக்கை ஆஸ்திக சங்கக் காரியதரிசி, திருவாரூர்.

பொன்னிமா நதிவளம் பொருந்த வோங்கிக்
கதிர்மணி கொழிக்குங் கழனிகள் புடையுடை
தேமா பலாவும் தெங்கு பூகமும்
வானுற வோங்கிய தேனமர் பொழில்சூழ்
கண்ணுதற் பெருமான் கயிலாய பரம்பரைத்
தருமையம் பதியிற் றவசிகா மணியாய்
மூப்பொரு ளுண்மை முற்றும் ஆய்ந்து
பிரபஞ்ச வாழ்க்கையைப் பேணது காய்ந்து
கல்வி கேள்வி கலக்குறு மல்லல்
ஓய்ந்து ஒளிகொடு ஒன்றிரண் டறவே
தோய்ந்து சிவானந்த தெள்ளமு தக்கடலில்
தேக்கிச் செம்மாந் திருந்த மெய்ஞ்ஞான
பானுவின் கதிரால் பல்லுயி ரகவிருள்
ஈனசம் பந்தம் யாவையும் போக்கும்
ஞானசம் பந்தமாம் நற்குரு பீடத்து
இருபத்து நான்கின் இயல்புடைப் பதியாய்
அமர்ந்து அருளொடு ஆற்றும் அறத்திறன்
ஆருயி ரனைத்தும் அருள்பெற் றுய்ய
ஆலயத் திருப்பணி அழகுற அமைத்தும்
கும்பாபி டேகங் குறைவற நடாத்தியும்
புனிதன் றனக்குப் பூசை விழாக்கள்
ஆகம விதிகொடு அனந்த மாற்றியும்
சென்னெறி யாய சிவநெறி கூட்டுந்
திருமுறை சாத்திர தீஞ்சுவை திரட்டிய
சமய விரிவுரை சாற்றச் செய்தும்
புலவர்க் கெல்லாம் பெருநிதி வழங்கியும்
அடியார்க் கன்னம் அன்போ டூட்டியும்
மெய்கண்ட மாநாடு மேம்படக் கூட்டியும்
ஞானசம் பந்தமாம் நன்மலர் விடுத்தும்
வேதாக மந்தமிழ் வேதம் ஓதிடப்
பாட சாலைகள் பாங்குட னமைத்தும்
மாணவர்க் கெல்லாம் மனங்களி கொளவே
கூறையுஞ் சோறுங் குறைவிலா தளித்துப்
பரிசுகள் பற்பல பண்புட னல்கியும்
திருக்குளந் தொட்டுந் திருநந் தனவனம்
அமைத்தும் நுண்ணறி வளிக்கும் நூலின்
நிலையமும் நிலைபெற நிறுவியே எளிதில்
பலருங் கொண்டு பயன்பெற வேண்டுதி
சிறந்த சித்தாந்த சாத்திரம் பன்னூல்

அழகுற அச்சிட் டன்போ டளித்தும்
குறுக்கை ஆஸ்திக குன்றுச் சபைக்குத்
தண்ணளி சுரந்து தனம்தந் துதவியே
ஆண்டு விழாதொறும் அரும்பொருள் விரித்துத்
தலைமை தாங்கத் தகைமை சான்ற
திருக்கூட்டத் தவரைத் திறம்பட அனுப்பி
ஆஸ்திக மோங்க அருளிய பெருமையும்
செயற்கருஞ் செயல்கள் செய்வார் பெரியரே
என்னு மொழிக்கு இலக்கிய மாகவே
இயற்றிய இறைபணி இயம்பிடிற் பலவே;

அதாஅன்று

அருளர சாட்சியின் அமர்ந்த பத்தாம்
ஆண்டு விழாவை ஆர்வங் கொண்டு
தக்க பதவியுந் தனமும் மிக்கார்
சூழ்ந்து போற்றுஞ் சிறப்புங் கண்டேம்
இறைவ னருள்கொடு இனிதி னேங்கிச்
சைவங் காக்குஞ் சண்முக தேசிக
பரமாசாரிய நின் பதமலர்
வாழிநீ டூழி வாழிய மாதோ.

Sri R. KANDASAMY MOOPANAR. B. A., B. L., Kumbakonam.
27—11—43

I thank you for the kind invitation of His Holiness the Pandara Sannadhi Avergal, Dharmapuram Adhinam to the function of the laying of Foundation Stone for the "Sri-La-Sri Shanmuga Desika Swamigal Free Maternity Home and Lying-in-Hospital" at Mayavaram on 29—11—43 by His Excellency and I very much regret that owing to reasons of my health, I could not be present at the august occasion.

I wish the function a grand success and pray for the longevity of His Holiness The Pandara Sannadhi Avergal whose philanthrophic propensities are directed towards the Salvation of the sufferings of the humanity.

Sri M. S. THAYAPPA PILLAI,
Convener, Sri Thayumanavar Tamil Free Class, Trichinopoly,

SONNET.

Revered descendant of a respected race
Of religion's guardians of royal gree,
May peace prevail in Dharumai's Holy see
And life abound with Love and Godly Grace!
Thou Beacon-light that shedst around the rays

Of Truth Divine and Immortality
Amongst mortal men embarked on the Sea
Tempestuous of life, and guidst their ways
Unto the feet of the Lord celestial,
Thou Fountain-head of Saivite Sacred lore,
O Sage! austere divorced to wordly fame,
And Chief of the Order Ecclesiastical,
May thy domain extend from shore to shore,
And, Guru-Deva hallowd be thy name.

வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
விரிவுரையாளர்; ஸ்ரீவேங்கடேஸ்வர நாட்டுமொழிக்கல்லூரி, திருப்பதி.
13—6—43.

திருக்கயி லாயச் சிவம்பெருகு பரம்பரை
வருதிருத் தருமையில் வளர்ஆ தீனத்துச்
செந்தமிழ் மணமும் சிவனருள் மணமும்
அந்தமில் இன்பம் ஆருயிர் நுகரத்
திருவருட் செங்கோற் செம்மையும் திருநின்ற
செம்மையும் செம்மையாக் கொண்டருள்(பு) எம்பால்
சித்தாந்த சைவச் செந்நெறி வளர்த்(து)அரன்
சீர்திகழ் கோயி லேர்திகழ் பணிசெய்து
கல்லார் கற்றோர் எல்லா ரும்பரன்
திருவளர் நலம்பெற வருள்குரு முதல்வன்,
சண்முக தேசிக ஞானசம் பந்த
இறைவன் பதமலர் சிரமன் புறக்கொடு
ஏத்துகம், இறைஞ்சுகம், வாழ்த்துகம், வம்மோ,
சிவந்தரு ஞான பீடத் தேறி
அவந்தரு ஞானத் திருள்கடிந் தாண்டிடும்
இறைவ குருபர பிறைமுடி முதல்வ
ஈண்டீ ரைந்தாண் டாங்குப் பல்லாண்டு
ஆண்டருள் வாழிபல் லாண்டென
வேண்டிய செந்தமிழ் வியனிலத் தீரே.

வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்,
போர்டு உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர், திருவாரூர்.
20—8—43.

தவம்பெருக வறம்பெருகத் தண்ணளிதான் மிகப்பெருகச் சார்ந்தார் தங்கள்
பவஞ்சுருங்க முதலொன்று மாத்திரைசேர் பவஞ்சுருங்கப் பண்பார் சீல
நவம்பெருகும் சீமுகத்தில் ஆனிபதின் மூன்றுநாள் நலமே ஓங்க
சிவம்பெருக்கும் செங்கதிரோன் திகழ்ந்துமிகச் செய்தனகள் கேண்மின் கேண்மின்.

ஒருகதிர்:

தேனிவருங் கொன்றையினர் தெரிநூலாஞ் சிவாகமத்தோ டினிய வேதம்
பானிகரும் மொழிமனைபோல் பலபகரும் காவியமே முதல நூல்கள்
மேனிலைசொல் சமய நூல் விண்ணூல்கள் மொழிபலவின் விளங்கச் சேர்த்து
நூனிலையம் பலவமைத்து நுணுகுமதி மிகவளர நோக்கிற் றூலோ! 2

ஒருகதிர்:

ஒருக்கரந்தான் மேலுறைந் தும் ஊடுருவி உண்ணுழைந்தும் உயர்வை யாரும்
திருக்கோயிற் கோபுரத்தில் திருமதிளில் சுதைபலவுந் திகழத் தீட்டித்
திருக்கோயுங் கருக்கிருகத் திருட்கூட்டச் செறிவொழியச் செய்து காலும்
குறுக்கோடிக் குளிர்தூங்கக் கும்பிடுவார் மனமகிழக் குயிற்றிற் றையா! 3

ஒருகதிர்:

நிறத்திருவன் நெடுங்காலம் கண்மலராற் பூசித்தும் நெஞ்சம் நீங்காத்
திறத்திருளின் வலியழிக்கும் சிவாகமங்கள் சிறுவர்மனம் செவ்வேயார
அறத்திறஞ்சேர் ஆகமபா டச்சாலை யாக்கியருள் அடைவி னாலே
புறத்திருளே யன்றியகம் பொருந்திருளும் போக்கியிடும் பெருமைத் தாகும். 4

ஒருகதிர்:

ஈத்துவக்கு மின்பறியா இந்திரனும் இனியநலம் எவரும் ஆரக்
காத்துவக்கு மின்பொன்றே கருத்துறுத்த திருமாலும் கண்டே மாக்கத்
தோத்திரமா மூவர்மொழி தூயமறை முறையோத பள்ளி தோற்றி
ஈத்துவந்து கேட்டுவந்து இனியவுரை யீந்துவக்க இருப்ப தொன்று. 5

ஒருகதிர்:

புலவர்களாம் பலமேகம் தருமையினிற் பொருந்திமிக ஞான நீரைச்
சிலகொண்டு பலவிடத்தும் சென்றுபிர சங்கமழை செழிக்கப் பெய்து
பலகலைஞர் குழுமலுறு சித்தாந்த மாநாடு பாங்காச் செய்து
இலகுறவே அகத்திலுறை யிருளோட்டி ஞானவொளி இயையச் செய்யும். 6

வாழ்த்து:

இவ்வண்ணம் பத்தாண்டா அரசுபுரி எழிற்குரவ என்றூழ் வாழ்க
பௌவஞ்சூழ் உலகமெலாம் சைவநெறிப் பண்போங்கப் பலருந் தோய்ந்த
எவ்வவிருள் இனிதேக அறிவொளியை ஆக்குமிரு வடிகள் வாழ்க
நவ்விபெரு கண்ணுமையாள் நாயகன்சீர் நானிலத்து நன்கு வாழ்க. 7

வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர்,
தேசிய உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர், நாகை.
6—9—1943.

இராகம் — சாமா. பல்லவி தாளம் — ஆதி.

ஆட்சியின் அற்புதமே — அருள்
ஆட்சியின் அற்புதமே.

அனுபல்லவி

மாட்சியு டன்தரு மாபுரம் வாழ்ந்திடும்
மன்னவர் சண்முக மாசந்நிதானம் ஆட்சி

சரணம்.

மண்ணுல கிற்பல மாந்தரும் போற்றிடும்
மங்கைபங் காளநன் மதியணி வேணியன்
கண்ணுத லோன்றளி கட்குயர் திருப்பணி
கண்ணுறச் செய்திடும் கண்ணிய னெங்குரு ஆட்சி

தமதரு ளாட்சியிற் சாரிரு பானேழ்
தக்கநல் லாலயம் தம்மிலாண் டுகடொறும்
இமயவ டன்னுட னெழுந்தரு ளியுள்ள
இந்தணி கடவுளுக் கேற்றவி ழாச்செய்யும் ஆட்சி

அமயநேர்ந் தபோது ஆன்றவ ரைச்சைவம்
அன்றியொ ருசமய மவனியி லிலையெனச்
சமயிகள் யாவரும் தாமனங் கொள்ளுமா
சாற்றிடச் செய்துநற் சைவம்வ ளர்த்திடும் ஆட்சி

தாரணி யிற்சைவ சாத்திர மோங்கிடத்
தான்பதிப் பித்ததைச் சார்ந்தவர்க் களித்திடும்
சீரணி தருமையிற் சித்தியார் வகுப்பினை
ஏர்பெற நடத்தியே யிணையிலாப் புகழ்பெறும் ஆட்சி

நால்வரி னின்றமிழ் நற்சிவா கமக்கலை
நன்குபு வியினில் நாளும்வி ளங்கவே
சால்புடன் பாட சாலைக ளமைத்தே
சைவவந் தணச்சிறூர் தமைப்பயின் றிடச்செயும் ஆட்சி

சம்பந்த ரப்பர் சண்முக நாதன்
சாந்தமெய் கண்டார் தகுநிலை யங்களும்
செம்மைய தாகவே திருப்பணி செய்திடும்
சீரிய நங்குரு தேசிக சண்முகர் ஆட்சி

தானமுந் தயையும் தன்னருட் குணமும்
சார்ந்தொளிர் சண்முக சற்குரு நாதர்
ஞானசம் பந்த நற்றிங்க ளிதழால்
நவில்சிவ ஞானமாம் நல்லறி வூட்டிடும் ஆட்சி

இருபதோ டிரண்டும் இயைந்தபட் டந்தனி
லிருந்திடுஞ் சண்முக ரிணையடி தமைப்போற்றி
இருநிலந் தன்னில் ஈண்டிநாம் வாழ்வோம்
எங்கள்சண் முககுரு என்றென்றும் வாழியே ஆட்சி

கற்றவர் தங்களைக் கனிவொடுங் காத்தவர்
கைநிறை யப்பொருள் கனகமுந் தந்திடும்
நற்றவச் சண்முக நாதனு மெங்குரு
நாற்றிசை வாழ்ந்திட நாடொறும் வாழியே. ஆட்சி

திருத்தரு மாபுரம் வாழ்ந்திடுஞ் சண்முக தேசிகரே
ஒருத்தரு முன்றனைப் போலரு ளாட்சி யுஞற்றிலரே
குருத்தரு நீறுநல் லக்கமும் பூண்டே குவலயத்தில்
திருத்தரு செல்வனின் சீரடி போற்றிவாழ் சீருறவே.

திரு. தி. சுப்பிரமணிய தேசிகர்.
அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக்கல்லூரி மாணவர்.

கரகரப்பிரியா] பல்லவி. [தாளம் ஆதி:

பரம்பரை ஞானமணியே—திருக்கயிலாய
பரம்பொருளான உருவே சிவகுருமணியே யருள் (பரம்பரை)

அனுபல்லவி

தருமபுர ஆதீனமே சைவம் வளர்க்கும்
சண்முக தேசிகஞான சம்பந்த பரமாசாரிய (பரம்பரை)

சரணம்

பலர்கையில் புலவர்கள் வீற்றிருக்கப் பல
இலகுறு நூலச்சில் இயற்றித்தந் திட்டஸ்ரீ
குலகுரு ஞான சண்முகநற் குணக்குன்றே
குவலயம் போற்றிடக் குருசிலே நீவாழி (பரம்பரை)

திரு. தி. சாமிஐயா தேசிகர், தேவார ஆசிரியர், திருவாரூர்.
சுபானுஹூ ஆவணிமீ 21உ

இராகம்: தோடி] பல்லவி [தாளம்: ஆதி

சைவவுலகத்திற்கே ஞானவரசராக
செங்கோல் செலுத்தும் அருளே—பரம்பொருளே

அனுபல்லவி

மெய்யன்புடனே இந்த மேதினியிலெங்கும்
துய்மையுடனே பலவாலயங்கள் பணிசெய்த (சைவ)

சரணம்

ஆரம்பப்பள்ளியருள் மெய்ஞ்ஞானியே—பல
ஆயிரங்கோடிபக்தர்கள் தியானியே—அருட்
பாப்பயில்சாலை திறந்தமோனியே—ஆங்கில
அரசாங்கத்தார்போற்று மபிமானியே—சிவசொரூபியே (சைவ)

நேமமுடனே ஸ்ரீமுக ஆண்டினில்மிக்க
சேமமாக ஆனி பதின்மூன் றினில்நல்ல
சோமவாரந்தன்னில் பட்டம்ஏற்றவாநீர்
தாமாகமுத்தமிழ் தாரணிமுழங்கிட (சைவ)

குருபக்தியிற்சிறந்து இருபத்திநான்காம்
பட்டம்துறவரசே நீடூழிவாழ்க
தமிழ்மறைஇயலிசை தனிச்சிறப்படைந்த
ஸ்ரீஷண்முகஞான சம்பந்தபரமாசாரிய (சைவ)

திரு. ஆ. முத்துச்சட்டைநாத தேசிகர்,
வேதாரணியம் ஆதீனவித்துவான்.

1 பூவார் பொன்னி வளர்மார்பன் புகழ்ந்து நாளும் போற்றிசைப்ப
நாவார் மடந்தை நாயகனும் நலமார் துதிகள் நவின்றேத்தச்
சேவார் கொடியான் சிவபெருமான் றேவியோடு மினிதமருங்
காவார் கயிலைப் பரம்பரையிற் கவினுர் நந்தி மரபதனில்.

2 பொன்னி நாட்டிற் றிலகமெனும் பொற்பார் தருமை யெனும்பதியில்
சொன்ன விருபா ஞன்கென்னுந் தூயபீடத் தருட் குருவாய்
இன்ன லகல வெழுந்தருளி யின்பா யன்பர்க் கருள்புரிந்து
மன்னி வாழும் நின்னருளி ஞட்சித் திறனின் மகிமைசொல்வாம்.

3 சீரார் கோவிற் றிருப்பணிகள் செய்தெந் நாளுந் தேவர்தொழுங்
காரார் கண்டப் பெருமாற்குக் கவினுர் காலந் தவறுமல்
ஏரார் பூசை நிபந்தங்க ளெல்லாம் மியைய இனிதமைத்தும்
தேரார் வீதி விழா வணியைச் சிவனுர் மகிழச் செய்வித்து.

4 நலமார் மடங்க ளினிதமைத்து நன்கார் வேத மாகமங்கள்
புலமார் தமிழின் வேதங்கள் பகருஞ் சாலை பண்புடனே
வலமார் மாண வர்தமக்கு வழங்கி யாசா னினிதமைத்துத்
தலமா ரன்னந் தூசுமுதற் றக்கவாறே யளித்தருளி.

5 அன்போ டுயர்புத் தகசாலை யச்சார் சாலை யமைப்பித்து
இன்போ டெவர்க்கும் புத்தகங்க ளின்னரு ளோடு மீந்தருளி
நன்கார் ஞானசம் பந்தமெனு நலமார் மலரை நயந்தளித்து
மன்சார் மெய்கண் டானவையை மாண வமைத்தின் னருணூலை.

6 நலஞ்சார் புலவர் தம்மாலே நாளு முரைப்பக் கேட்டுவந்து
பலஞ்சார் மூலத் திருநாளிற் பண்பார் சொக்க நாதற்கு
வலஞ்சார் பூசைசெய்தருளி வளமார் நால்வர் திருமுறையுந்
தலஞ்சார் விமானந் தனிலேற்றித் தண்ணூர்வீதி வலஞ்செய்து.

7 மாதோர் பாகன் திருநாளின் மல்கும் புலவர் தம்மாலே
வேதா கமங்கள் புராணங்கள் விளங்க வுரைக்கச் செய்வித்துக்
காதலாலன் னவர்தம்மைக் கண்ணின் மணிபோற் காத்தளித்து
நாத னருளாற் பத்தாண்டின் நலமார் விழாவுஞ் செய்தருளி.

8 மங்கை பாகன் னடியார்க்கு மற்றோர் யார்க்கு மகிழ்வோடு
தங்கு மிடங்கள் பலவமைத்துத் தகைமை யார்ந்த போனகமும்
இங்கார் புலவ ரடியார்க்கு மின்பார் பொன்னு மணித்தூசும்
பொங்கார் வத்தோ டினிதளித்துப் போத மருளுஞ் சற்குருவே.

9 திருமகள் போற்றுங் கமலையெனுந் திருநகர் வாழு மாதேவன்
அருள்பெறு ஞானப் பிரகாச னன்பார் ஞான சம்பந்தக்
குருவளர் மரபில் வருமணியே கோதில் ஞானக் குணக்கடலே
தருவளர் தருமைத் தவவரசே தண்ணரு ளீயுங் கண்மணியே.

10 அன்பர் போற்ற வருட்குருவே யறிஞர் போற்ற வமர்குருவே
இன்பை யருளு மெழிற்குருவே யிறைவ னுவக்கு மின்குருவே
நன்மை யளிக்கு நற்குருவே ஞான குருவே நானிலத்தோர்
பொன்போற் போற்றிப் புகழ்குருவே புண்ணிய மெய்ச்சண் முககுருவே.

11 இன்ன செய்கைத் திறனதனை யென்னு லியம்புந் தகைமைத்தோ
சொன்ன தன்மச் செயலதன்னைத் தொண்ட னவாவாற் றெழுதுரைத்தேன்
பன்னுமீசன் றன்னருளாற் பல்லாண் டாகின் திருவடிகள்
மன்னி வாழ்க மாநிலத்தோர் போற்றி வாழ்க மாகுருவே.

வித்துவான் திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளை
தமிழாசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பண்காட்டுந் தமிழோடு மறைமணக்கு மிறைமணக்கும்
பழம்பதியாந் தருமை யின்வாய்
விண்காட்டும் பரிதியென விளங்கியொளி ரெண்மூன்றும்
பீடமிசை விளங்க மேவித்
தண்காட்டு மளியாளுஞ் சண்முகதே சிகனெந்தை
சரணமலர்ப் புகழே நாளும்
வண்காட்டும் வரம்பலவுந் தந்தேயித் தராதலத்துப்
பல்லூழி வாழ்க மாதோ.

வித்துவான், திரு. P. இராமச்சந்திர சாஸ்திரிகள்
தேசிய நடுத்தரப்பள்ளித் தமிழாசிரியர், மாயூரம்.

புலவராற்றுப்படை

ஸ்ரீமடந் தைபொ டிகலிய பூமியி
லமைந்த வூர்க ளநேக மவற்றுள்
ஸ்ரீதரு மபுரம் சிறந்த தேனெனில்
சண்மத மாய்ந்த நுண்மதி யுடையோன்
பண்புறு பல்கலை பயின்ற பக்குவன்
முச்சங்க முகிழ்த்த முத்தமிழ்ச் செல்வன்
கணங்கொ ளடியார் கம்பலை யுவப்போன்
தேந்தொறுஞ் சென்ற தீம்புக ழாளன்
சின்மய மாகிய சிவனை வணங்குவோன்
கன்மனத் தோருங் கனியுங் காட்சியன்
ஞாயிறே போல மாயிரு ணீக்கியின்
னமுதென ஞான மளிக்கு முரவோன்
சமய முறைகளைச் சழக்கற நுவல்வோன்
உம்பர் போற்று முயர்ந்த சீலன்
பஞ்சேந் திரியம் பணித்த பான்மையன்
கந்தன் பெயரைக் களிப்புட னணிவோன்
தன்னரசு கொண்ட தாவி லாட்சியிற்
பத்தாண்டு விழாக் கொண்டு பாவல
ரன்புடன் னளித்த ஆசி பலவுளோன்
மாண்புறு மடாதிப ரனைவர்க் குந்தான்
சான்ருய்ச் சார்ந்த நேர்மைய னில்லோ
ரிரந்த காலை யினிதுரைத் துத்தா
யழைத்த சேய்க்களித் தாங்களித் துவப்போன்
சுத்த சற்குணன் நித்தம் புலவர்க்கு
வாயி லடையாக் கோயி லுடையோன்
மிகுபுகழ் சண்முக தேசிக னென்போன்
கண்ட செல்வரைக் கேட்டுப் பயனிழந்
தள்ளூறு மனத்துட னலையும் புலவோய்
வாழ்வ னவனை வாழ்த்திநீ யேகின்
தாழ்வின்றி நல்கி யாங்குக்
கண்ணியம் பெறும்பல சிறப்புக்கள் செயுமே.

சிஃருழிசைக் கொச்சகக் கலிப்பா

தரவு

சீர்மிகுந்த தருமபுரந் தழைத்தோங்கப் பாரதனிற்
கார்கொண்ட செருக்ககலக் கனகமழை பொழிகையால்
இளம்பயிர்போ னல்லோர்க ளிளைப்பகல வினிதளிக்கும்

சம்பந்தன் வழிவந்தோன் சண்முகதே சிகத்தகையோன்
தன்னாட்சி நடத்துமவன் பத்தாண்டு கழிந்ததனுல்
பன்னருஞ்சீர் விழாவொன்று செய்தனனு லதுபுகல்வேம்;

தனிச்சொல்

ஆங்கொருசார்

தாழிசை

புத்தகம் பலபடித்துப் புதுமைசால் பொருளறிவோர்
வித்தகப் புத்தகங்கள் பலவேறு நிறைந்திட்ட
புத்தகா லயம்புகுந்தார் பொழுதறியார் பசியறியார்
எத்தனை நாட்களவை படிப்பாரோ யாமறியோம்.

தனிச்சொல்

ஆங்கொருசார்

தாழிசை

செவிமகிழ மனமகிழ வங்கமெலா முடன்மகிழக்
கவிசெய்வா ரிசைவல்லார் சொற்பொழிவார் களிப்பித்தார்
புவியெங்கு முளரசிகர் பொழுதறியார் பசியறியார்
செவிமடுப்பார் செயலறியா ரகலாரோ யாமறியோம்

தனிச்சொல்

ஆங்கொருசார்

தாழிசை

உலகிலுள்ள வுண்பொருள்க ளொருங்கியைந்து தொகைகொண்டு
குலவிவிழாக் குறித்துவந்த வெனநிறைந்த சமையலறை
நிலவுணவு வகையுண்பார் பொழுதறியார் பசியறியார்
பலகாலு மிகவுண்பா ரமைவாரோ யாமறியோம்

தனிச்சொல்

இவ்வண்ணம்

சுரிதகம்

திருவனந் தபுரந் திவான்பதவி வகிக்கும்
ஸி.பி. ராம சாமி யெனும்பெயர்ப்
பெரியோன் வந்து மகிழ்ந்து தொடங்கப்
பலரும் புகழ்ந்துகொண் டாட
நிறைவு கொண்டதால் விழாவும் இனிதே.

மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர், பண்டிதமணி,
திரு. மு. கதிரேச செட்டியாரவர்கள், அண்ணாமலைநகர்.
27—8—1943.

தருமபுர ஆதீனத்தில் தற்காலம் மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் இற்றைக்குப் பத்தியாண்டுகளுக்கு முன்னர் ஆசாரிய பீடத்திலமர்ந்தமையால் இப்பொழுது பத்தாமியாண்டு நிறைவு விழாக் கொண்டாடப்படுகின்றது. சுவாமிகள் ஆதீன ஆட்சிக்குவந்தது முதல் பற்பல சைவநூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழன்பர்கள் எளிதிற் பெற உபகரித்து வருகின்றார்கள். சைவமாநாடு கூட்டிச் சைவசம்பந்தமான சொற்பொழிவுகளைச் செய்வித்தும், கல்வி பற்றிய அறங்களுக்குப் பொருள் கொடுத்தும், தமிழிசை வளர்ச்சிக்கு வேண்டுவன தந்தும் சமயம் மொழி தமிழிசை என்னும் இவற்றை ஆதரித்து வருகின்றார்கள். சைவமடங்களின் நிலைபேற்றின் பயனைச் சுவாமிகள் முகமாகத் தமிழ்நாடு நன்கு பெற்று இன்புற்று வருகின்றது.

இத்தகைய சிவதருமபரிபாலகராகிய ஸ்ரீ சுவாமிகள் இன்னும் பல்லாண்டு ஆசாரிய பீடத்தை அலங்கரித்துத் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் பேராதரவாக விளங்கும் வண்ணம் எல்லாம் வல்ல ஆண்டவன் திருவருளை வேண்டுகின்றேன்.

Rao Saheb Sri S. VAIYAPURI PILLAI, B.A., B.L., Madras.
4th September 1943

May His Holiness be spared to us for very many long years and may His Holiness continue to bless us with His grace.

May success attend the function.

Rao Saheb Sri VAIYAPURI PILLAI, B.A. B.L.,
Head of Tamil Department of Madras University.

Sri K. RAMANATHA CHETTIAR, B.A., B.L., Advocate.

Our grateful thanks for your invitation. It augers well that the Dharmapuram Adhinam Library Building is opened by one of the greatest sons of India. We congratulate Your Holiness on your choice of the President.

May your Library be a model of Libraries in South India. May God bless the function with success.

Sri K. SUBRAMANIA PILLAI, M.A., M.L.,
Head of Tamil Department, Annamalai University, Annamalainagar.
30—8—1943.

His Holiness Sri-la-Sri Shanmuga Desika Gurugnanasambanda Pandara Sannithigal has with in ten years of his accession distinguished himself not only as a

very able and efficient administrator of The Dharmapura Saiva Athinam and the temples attached thereto, but as a famous patron of Saiva Literature in Tamil and Saiva Siddhantha philosophy.

He has introduced admirable order in the conduct of Mutt and temple affairs and in keeping proper accounts relating to the same. He has repaired a good many temples on modern lines and has caused their walls to be painted with holy figures and inscribed with appealing religious and literary poems which serve as sermons in stone. He has largely added to mutt buildings which now wear the appearance of a Palatial Mansion surrounded by charming scenes of nature.

On the Literary side he has enriched the mutt with an extensive library open to all classes of readers and has established Thevaram and Sivagama schools which are conducted ramarkably well. He has opened a costly printing press and published a large number of religious books. A monthly Magazine called "Gnansambandam" which regularly issued from the mutt contains thoughtful articles in English as well as in Tamil. Rich donations are also vouchsafed to authors for printing and publishing worthy books. Grand conferences are also held from time to time. Every effort is made to popularise and propagate a knowledge of Saiva religion and Literature. The Tamil and Saivite public owe a deep debt of gratitude to the present Maha Sannithanam.

I pray that Providence be graciously pleased to shower his choicest blessings on His Holiness the present Pandara Sannithi of Dharmapuram Athinam, so that with good health, long life and cheerful heart he may very successfully carry on his ordered administration and develop Saiva learning, culture and philosophy on ideal lines and make his mutt a University centre of intellectual light, moral glory and spiritual eminence.

வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன், கலைமகள் ஆசிரியர், சென்னை.

27—8—1943.

உலகில் மனிதர் வாழ்வது மனிதருக்காக மட்டும் அல்ல. மனிதன் விலங்குகளுக்காகவும் வாழ்கிறான்; மனித சமுதாயத்துக்காகவும் வாழ்கிறான்; தேவர்களுக்காகவும் வாழ்கிறான். ஆம்! மனிதன் இல்லையேல் தேவர்களுக்குச் சிறப்பொடு பூசனை செல்லாது!

இந்த உண்மையை உணர்ந்து வாழ்பவர்கள் உலகில் மிகக் குறைவு. மனிதர்களுக்காகவேனும் வாழும் பெரியோர்கள் இருக்கிறார்களா என்றால், அவர்களும் அரியவராகவே இருக்கிறார்கள். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்று போற்றும் பெருமையை எல்லோரும் எளிதிலே பெற்றுவிட முடியுமா?

ஆனாலும் ஒரு மனிதன் மனித சமூகம் முழுவதற்கும் பயன்படாவிட்டாலும் அவனுடைய செயல் மனித சமூகத்தின் ஒரு பகுதிக்காவது பயன்பட்டால் அவனை மனிதருள்ளே உயர்ந்த ஜாதியென்று சொல்லிவிடலாம். ஞானத்துறையிலோ,

செல்வத்துறையிலோ பலருக்குப் பயன்படும்செயலை ஒருவர் செய்தால் அச்செயலைத் 'தொண்டு' என்னும் பெயரால் போற்றப்படுகிறது. இந்தத் தொண்டின் பயன் விரிய விரியத் தொண்டர் பெருமையும் விரிகின்றது.

ஆலயமும் மடங்களும் மக்களின் வாழ்வில் இயற்றி வந்த தொண்டுகள் அளவில்லாதன. கலைகளும், ஞானமும், அறிவும், தொழிலும் கோயிலையும் மடத்தையும் சார்ந்து பெருகின. இந்த உண்மையைச் சரித்திரம் சொல்லுகிறது.

ஆனல் 'இத்தகைய காரியங்களைச்செய்தார்கள்' என்பது பழம்பெருமையாகப் போய்விடலாம்; இன்றும் நடைபெறுகின்றது என்று சொல்லி மார்தட்டும் பெருமிதத்தைத் தமிழர்களுக்கு உதவியிருக்கும் நிலயங்கள் இப்பொழுதும் இல்லாமற் போகவில்லை. இக்கருத்துக்குச் சான்றுபகரத் தமிழ்நாட்டில் தருமபுர மடாலயம் ஒன்றேபோதும்.

தமிழ்த் துறையிலும், சமயத் துறையிலும் இம்மடாலயம் ஆற்றிவரும் தொண்டைப் புலவர்களும், மாணுக்கர்களும் ஒருங்கே பாராட்டுகிறுர்கள். இதுகாறும் அறுபது நூல்கள் வரையில் வெளியிட்டு இலவசமாக வழங்கியிருக்கிறுர்கள். இம்மடாலயத்தார் அவ்வப்போது சமயத் துறையில் வளர்ச்சி கருதி மகாநாடுகள் கூட்டி நல்லறிஞர்களைக் கூட்டி உபந்யாசங்கள் செய்யச்சொல்லிச் சமய அறிவைப் பெருக்கி வருகிறுர்கள். இவை தமிழ் வயல்களில் பெருகும் கால்களாக விளங்குகின்றன.

இவ்வளவும் நிலயத்தின் பெயரால் நடைபெறுகின்றன. ஆயினும் இவ்வளவிற்கும் ஆதரவு தந்து பேரருளுடன் கண்காணித்து இன்புறும் மூலமூர்த்தியாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த மகாசந்நிதானத்தின் நல்லுள்ளமே இவ்வறம் பெருகுவதற்குரிய ஜீவனுக இருக்கின்றது. ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் இத் தமிழ்த் தொண்டுதான் இக்காலத்தில் இன்றியமையாததென்று கருதி அளவாலும் ஆற்றலாலும் பெருமைபெற்றிலகும் செயல்களைச் செய்தலைத் தமிழுலகம் என்றென்றும் மறவாதென்பது திண்ணம்.

இவர்களுடைய நல்லற ஆட்சி பத்தாண்டுகளாக நிகழ்வது இன்பந்தரும் செய்தி; இன்னும் பல்லாண்டுகள் தவஞானச் செல்வர்களாகிய இவர்களது படிமைச் செங்கோலின்கீழ், தமிழும் சைவமும் தழைத்தோங்கும்வண்ணம் இப்பெரு வள்ளலுக்கு எல்லா நலன்களும் அருளும்படி இறைவன் திருவருளை நோக்கித் தவங் கிடப்பது தமிழர்கடமை. வாழ்க இப்பேரறிவாளர் திரு.

அன்பர்களும், தமிழ்ப் புலவர்களும் குழுமி இன்புறும் இந்த விழா அறத்திற்கும் தமிழுக்கும் முடி கவிக்கும் திருவிழாவென்றே கருதுகிறேன்.

இவ்வளவு மக்களும் மனங்களிகூரத் தருமமும் தமிழும் புரக்கும் மடாலயத் தலைவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு:

திருமகளும், ஞானச்செல்வியும் தாண்டவம் புரியும் அவ்விடத்தில் கலைமகளும் நடம்புரியும் கோயில் ஒன்று இன்றியமையாததே. பிற கருவூலங்களைக் காட்டிலும், கலைமாச்செல்வர் தேடிவைத்த கருவூலமாகிய நூல்நிலயம் எத்துணையோ சிறந்தது. இந்நூல் நிலயம் தமிழ் நூல்கள்யாவும் இருக்குமிடமாய், எல்லாப் புலவர்களுக்கும் பிரதிநிதியைப்போல் நின்று நிலவவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இத்தகைய நல்லறங்களைப் பாலித்துவரும் தவமுனிவர்களாகிய அவ்விடத்துத் திருமேனி நலமும் புகழ் நலமும் ஓங்கி வளர்வனவாகுக.

சொத்தாண்ட செல்வரெலாம் மருளாண்டு கர்வமுற்றுத் துயரில் ஆழ்ந்தார்
புத்தாண்டு வந்ததெனக் களிக்குமகிழ் வவர்க்கில்லை புவியில் தர்மம்
ஒத்தாண்டு தமிழ்பரவ அருளாண்டு தவமபேணி உற்ற வாட்சி
பத்தாண்டு நிரம்பியது சண்முகதே சிகர்க்கென்று பகரக் கேட்டேன். 1.

எத்தனைநூல் தமிழ்மகளுக் கிவரளித்தார் எனப்பார்த்தேன் இனியும் நூல்கள்
எத்தனைமற் றிவர்தம்மால் மலருமென மனங்குளிர்ந்தே எண்ணி நின்றேன்
எத்தனையாண் டிவரிருப்பா ரத்தனையும் நூலளவா லெண்ண லாமே
எத்தனையாண் டரியபெரி யோர்க்குண்டு நூறென்பர் இவரும் வாழ்க! 2.

புலவருக்குப் பொருள்கொடுத்தார் நூல்பலவும் புதுக்கிவைத்தார் பொற்றாள் வீழ்ந்த
நலவருக்கு ஞானநவின் றிருள்கெடுத்தார் தருமபுர நன்மடத்துப்
பலவருக்கு மறம்புரிந்தார் தவம்புரிந்தார் கோயிலெலாம் பரிசு கோணா
திலகவர சாட்சிசெய்தார் சண்முகதே சிகப்பெரியோர் ஏற்றம் என்னே. 3.

இவர்வாழும் நாளெல்லாம் தமிழ்வாழும் நாள்தவந்தான் இலகும் பொன்னாள்
இவர்வாழும் நாளெல்லாம் அறம்வாழும் நாள்புலவர் ஏற்ற மார்நாள்
தவர்வாழுந் தருமபுர மடாலயத்துச் சண்முகதே சிகப்பேர் சார்வோர்
இவர்வாழ எலாம்வாழு மாதலினா லிவரென்றும் இனிதே வாழி. 4.

Vidyabhooshana Sri V. S. SANJIVA RAO, Bangalore, City.
26th August, 1943.

His Holiness Sri-la-Sri Shunmuga Desiga Gnana Sambanda Maha Pandara Sannidanam Paramacharya of Sri Dharmapuram mata n has plenty of philosophy in him. His crystal simplicity, is so impressive, that a few minutes stay in his audience chamber makes a man feel that he is in the presence of a superior personality. He was installed at a time when a strong personality was felt necessary. His Holiness has improved the surroundings of the Mutt, renovated the building and thus established himself as a patron of art and architecture. He gave considerable impetus to the religious growth, among his desciples by means of periodical conferences and annual discussions during the Guru Pooja festivals. He has improved the tone of the Mutt administration by constant personal supervision and has thus added glory to himself. He is a shining example of a Matadhipathi and it is in the fitness of things that a committee of competent and respectable

hosts have arranged the commemoration of his decennial rule. It is most appropriate that Sachivothama Sir C. P. Ramaswamier, K. C. S. I., K. C. I. E., LL. D., the talented Dewan of Travancore who has by his bold reforms liberalised Hindu Religion and thus prevented mass conversion of the Hindus has agreed to preside over the interesting function, which we look forward with delight.

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் B. A., B. L, திருக்குற்றாலம்.
31—7—1943.

தருமபுர ஆதீனம், திருக்கயிலாய பரம்பரையைச் சேர்ந்தது. அதாவது எத்தனையோ ஆயிரக்கணக்கானக் வருஷங்களாகக் கயிலைகிரிக்கும் மடத்துக்கும் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. மிக அருமையான சமயப் பண்பாடுகளும் தமிழ்ப் பண்பாடுகளும் நெடுகிலும் ஒட்டிவந்திருக்கின்றன. யாருமே அதிசயித்து அநுபவிக்க வேண்டியவை அவை. மேலேசொன்ன பண்பாடு இன்னும் ஆயிரக்கணக்கான வருஷங்கள் நின்று தமிழகத்தைச் சிறப்பிக்கவேண்டும். அப்படிச் சிறப்பிப்பதற்கு இயைந்தவாறாக இருக்கின்றன ஆதீனத்தின் சமயம், தமிழ்பற்றிய அரியதருமங்கள். எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

Sri S. NARAYANASWAMI NAIDU,
Head of the Tamil Dept., S. V. Oriental College, Tirpati.
4—9—1943

Your kind invitation and Maha Sannidhanam's gracions invitation for the library opening function.

I wish the functions every success and Sri Maha Sannidhanam a long life of many decades rule. May I wish good-look for Mother Tamil during His Holiness benign rule.

May Lord Venkateswara bless our Pandara Sannidhanam Swamigal with his choicest blessings.

வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை; சிதம்பரம்.
5—9—1943.

திருவீற் றிருந்த தருமையில் ஞானம்
ஒழிவின் றுணர்ந்துநல் லுயர்பொருள் சிவமெனத்
தேர்ந்து தெளிந்த தெளிவினை யுடைய
ஞானசம் பந்த நற்பரன் முதலா
யிருபான் நான்காய் எய்திய இறைவ!
மூவாக் குழவியின் மூகையைத் தெளித்த
குமரன் சொற்குக் குருவெனக் கண்ட
வழிமுதல் வந்த ஒருபெருந் தலைவ!
இவ்வையீ ராண்டுபோல் இனிப்பல வாண்டுகள்
வாழி வாழி வாழ்க நின்திருவே.

தருமையாதீன வித்துவான்,

திரு காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A., சென்னை.

27—8—1943.

பொன்னிக் கரைவளர் நன்னகர் தருமை. அந்நகர் கயிலாய வரும்பரம் பரைசார் நந்தியார் மரபிற்பிந்துறக் கிளர்ந்த மெய்கண்ட சந்தானத் தரும்பெறற் றலைநகர். கழுறு மெய்ஞ்ஞானக் கடலினுக் குலகிற் கலங்கரை விளக்கமாய்ப் பிறங்குமந் நகரில் இருந்தரசோச்சினார் இருபான்மூவர் அருந்தவமுனிவர்.

இருபத்துநான்கா மெழிலுறுபட்டம் எய்தினார் சண்முக தேசிக முனிவரர். பொன்னார் மேனியர்; பொலங்குழைக் காதினர்; செஞ்சடைச் செல்வர்; சிவந்திகழ் மார்பினர்; நகைதவழ் முகத்தினர்; பகைதவிர் நோக்கினர்; ஆணிலழகர்; அறப் பெருஞ் செல்வர்; அன்பே யுருவாம் அருட்பெருங் குரவர்.

ஆண்டுகள் பத்து ஆயின வமர்ந்து. அதற்குள் எத்தனை எத்தனைப் பணிகள்! அறப்பணி, அருட்பணி, அன்புறு மொழிப்பணி, திருப்பணி, சிவப்பணி, திகழுறு பொதுப்பணி!!

தருமையிலெழுந்தது வகைவகை விடுதிகள்; திருமடமேற்றது திசைதிசை புத்துரு. கண்ணைக் கவரும் சண்முகவிலாசம்; காலதர்கொள்ளும் கவினுருமாளிகை; சித்திர முகப்பு; சீர்சால் வளைவு; இன்னன பலவும் இவர்செய் திறமே! சண்முகமென்பது அறுமுகமாயின், ஒருமுகந் தருமைக் குயர்வை யளித்தது!!

தொன்னகர் காழி, நல்லூர்ப் பெருமணம், புள்ளுறை வேளூர், புவியுடர் கற்றளி, இன்னும் பலவா யாட்சியுள் ளமர்ந்த கோயில்கள், குளங்கள், ஊர்திகள் யாவும், சீர்பாடுற்றுச் செம்மையிற் சிறந்தன. ஒருமுகந் திருப்பணி திகழ்ந்திடச் செய்தது!

அடுத்துறு மொழிப்பணி அறைகுதற்பாற்றோ? தாய்மொழியாகிய தமிழ் மொழி கண்டது தன்னை வளர்க்கும் தகைசால் செவிலியை. திறமுறு வடமொழி, திகழுறு மாங்கிலம் ஆகிய இரண்டும் ஒருங்குடன் வளர்ந்தன. மும்மொழி தன்னிலும் முந்துறு புலவர் எம்மருங் கிலுமிருந்தீண்டினர் பற்பலர்! பொருட்கொடை பெற்றுக் கல்வி முடித்த ஏழைமாணவர் எண்ணிலர் எண்ணிலர்! நூல்கள் பற்பல நேர்மையா யெழுந்தன! பாவலர், பாமரர், பாலகர், முதியோர் யாவரும் போற்றிக் கற்றிடு நூல்கள்! புராணம், சாத்திரம், புகழ்பெறு சைவம், வேதம், வித்தக அறிவியல், நீதி, வேறுவேறான பலதுறை நூல்கள்! தமிழ்மொழி சிறந்தது; தொடர்மொழி வளர்ந்தது; தண்டமிழ் நாடு கொண்டது பெரும்புகழ்; ஒருமுகம் மொழிப்பணி உஞற்றி மகிழ்ந்தது!

நால்வரருளிய தமிழ்மறை யாண்டும் நலம்பெற ஓங்கித் திறம்பெற ஒளிர்ந்தது; கோயிற் சுவர்கள், கொலுமண்டபங்கள் கோதறவோதும் திருநெறித் தமிழே! தேவாரம் பயில் தனிநிலைப் பள்ளி, வேதசிவாகம வுயர்நிலைப் பள்ளி, விழாக்கள் தோறும் சொன்மழைப் பொழிவு, சைவசித் தாந்த மாபெரும் நாடு, பொய்வழி

கடிந்து மெய்வழி யுய்க்கும் ஞானசம்பந்தப் பெரிய நற்றூள்! இவைபோ லின்னும் எத்தனை வகையோ சைவம் சிறக்க எடுத்த முயற்சிகள்! ஒருமுகஞ் சைவப் பணி தனில் திளைத்தது!

நூற்றுக் கணக்கில் தென்னந்தோப்புகள், பயன்தரு மரங்கள், பல்வகைச் செடிகள், காவும் சோலையுங் கணக்கற் றெழுந்தன! புதுமுறை தெரிக்கும் பொற்புறு அச்சகம், பொதுநலங் கமழும் புகழ் நூல் நிலையம், முன்னேற்றஞ்சார் பற்பல செயல்கள், தங்கு தடையின்றிப் பொங்கி யெழுந்தன. ஒருமுகம் புதுநலங் கண்டு களித்தது!

ஆட்சிச் செங்கோல் அருணெறிச் செங்கோல்! அன்பும் அருளும் ஆடுவ தாண்டவம்! அலுவலாளர் அனைவரு மன்பர்; ஊதியங் கருதும் ஊழியர்களுக்கோ, தன்னலங்கருதுந் தப்பிலிகளுக்கோ, இல்லையில்லை ஆட்சியிலிடமே! ஆங்கிலவாணர், அரசியல்வாணர், அறநிலையத்துறை ஆட்சியாளர் யாவரும் ஆட்சியை வியந்தனர்! மகிழ்ந்தனர்! ஒருமுகம் ஆட்சித் திறமை தெரிந்தது!

இத்திறம் பற்பல நற்பணியாற்றித் தமிழ்நாடெங்குந் தனியருட் செங்கோல் ஓச்சும் திருவடி வாழிய வாழிய வாழிய என்றும், வாழிய பலவே!

வித்தகம் பேசல் வேண்டா பணிசெயல் வேண்டுமென்று
சித்தமே சிவன்பால் வைத்த சேக்கிழார் சொற்றசொற்கு
இத்தரை யெடுத்துக் காட்டா யிலகிடும் சண்முகன்தாள்
நித்தலுஞ் சிறந்து வாழ நிமலன்தாள் போற்றுவோமே.

பண்டிட், திரு. நடேச சாஸ்திரிகள், கடலங்குடி.

4—9—1943.

பத்தாண்டு ஆட்சி நிறைவு விழாவில் மனத்தாற் கலந்து இன்புறும் பேறு எங்கட்கு வாய்த்தமை குறித்து நாங்கள் ஆண்டவனை வழுத்துகிறோம். தங்கள் அன்பார்ந்த போதனையினாலும் பண்பார்ந்த சாதனையினாலும் பலவழியினாலும் நலம் பெற்ற-கடவுள் வழிபாட்டைக் கடைப்பிடித்த நாங்கள் தங்கள் ஒப்புரவுக்கு என்ன கைம்மாறு செலுத்தவல்லோம்! எங்கள் நன்றியை வணக்கமாகவும் வாழ்த்தாகவும் செலுத்துகிறோம். நாத்திகப்பேயின் மறஆட்சிக்கொடுமை மதர்த்தெழுந்து காட்டுத் தீபோல் எங்கணும்பரவி வீறிடும் இந்நாளில், ஆலமர்செல்வன் வழி வழி வளர்ந்து நின்ற ஆத்திகதர்மம் ஆக்கம் பெற்று, பண்டை நிலை எய்தல்வேண்டும் என்று ஊக்கமும் உறுதியுங் கொண்டு உழைப்பவர் தாங்கள் என்பது நாட்டுக்கு நன்கு தெரியும்.

ஆத்திகச் செந்நெறி ஓம்புதற்கென்று, கழிந்த பத்தாண்டு ஆட்சியில் தாங்கள் அரும்பிய தொண்டுகள் பலப்பல.

தங்கள் நல்வாழ்வு நற்றொண்டிலேதோன்றி அதிலேயேவளர்ந்து ஓங்கி ஒரு கற்பகத்தருவாய்ச் செழித்துத் தழைத்து நறுங்கனி வழங்கி வருகிறது. அத்தருநிழலில் அமர்ந்து அக்கனியை உண்போர் சிலர்; ஏகலைவனைப் போலுண்போர் பலர்,

நாட்டில் பிணக்கும் பூசலும் இப்பொழுது கனன்று எழுநாவிட்டு எரிதலை அறியாதாரில்லை. அவ்வெறியைத் தணிக்கும் ஆற்றல் தங்கள் திருத்தொண்டுக்கு உண்டு என்று கூறல் மிகையாகாது.

சாதனையினாலும் போதனையினாலும் இன்ன பிறவாற்றாலும் நாட்டைப் பண்டை நிலைக்குக் கொணர முயன்றுவரும் தங்கட்கு நீண்ட நாளையும், நல்ல யாக்கையினையும், செம்மை வாழ்வையும் எல்லாம்வல்ல இறைவன் அருள்வானாக.

பண்டித திரு. வ. மு. இரத்தினேஸ்வரையர், யாழ்ப்பாணம்.
5—9—1943

சைவத்திருநெறி வளர்த்த சமயாசாரியர்களும் பலர். சந்தானபரமாசாரியர்களும் பலர். திருக்கயிலாய பரம்பரைக்கு அகச்சந்தானம் என்றும், புறச்சந்தானம் என்றும் இருபாகுபாடு உண்டு. புறச்சந்தானத்துட் சார்ந்து இரு பெரு ஆதீனங்கள் தற்காலம் நமது தமிழ்நாட்டில் நிலவுகின்றன! அவற்றுள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஒன்று ஆகும். இவ்வாதீனத்து இருபத்துநான்காவது குருமூர்த்திகளாக ஈண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய பெருந்தகையாரவர்கள் பத்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். புத்தக வெளியீடுகள், பத்திரிகை வெளியீடு, பிரசாரம் என்ற முக்கிய சமயத் திருப்பணிகள் நமது சுவாமிகளின் கருணையாட்சியில் செறிந்து திகழ்ந்தன. இன்னும் பல்லாண்டு அவ்வரிய ஆளுகையும், சமயபரிபாலனமும் இனிது நடக்கும் என்பதிற் சந்தேகமே இல்லை. பிரபுசிகாமணிகளும், உயர்தர உத்தியோகச் செல்வக் கனவான்களும் உறுதுணையாளர்களே. அவ்வுண்மை இன்றைய நிகழ்ச்சிகளானே உணரலாகும்.

தமிழ்நாட்டுப்பெரியார்களும், புலவர்மணிகளும்ஒருங்குசேர்ந்து, மாட்சிமிக்க சுவாமிகள் ஆட்சிசிறப்ப உபசரிப்பது பாராட்டற்குரியதாம். இவ்வரியகொண்டாட்டம் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறவும், நமதுமாட்சிமிக்க சுவாமிகள்சைவத் தனியரசாக நீடுவாழவும், சைவம் மிளிர்வடையவும் நிமல சிவசண்முகப்பெருமானின் தண்மலரடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

மாட்சிமிக்க சுவாமிகள் திருவருளால் நீடுவாழ்க. தங்களது ஆட்சியில் உற்ற மாட்சிகள் பல. இன்னும் 'சைவமுந் தமிழும் தழைக்கவும்' தாங்கள் இனிது சிவகைங்கரியங்கள் ஆற்றி நீடிய சிறப்படையவும் பிரார்த்தனை.

ஆலமர்செஞ் சடையண்ணல் அருளியவே தாகமத்தின்
அரும்பொருளை அவனி யுள்ளார்
சீலமொடு கைக்கொண்டு செம்மைநிலை சேர்ந்திடவே
தெளிந்தோர்கள் சமயங் கண்டார்
காலமொடு பயின்றுஞான சம்பந்தர் முதற்றொண்டர்
கவினியதா யதன்வழி நின்றார்
சாலவளர் திருஞான சண்முகதே சிகமூர்த்தி
இந்நாளிற் சிறந்தார் மன்னோ.

சந்தான ஒருபொருளின் திருவருளாற் றாணிமீது இனிது மேவிச்
சித்தாந்தப் பெருநெறியும் செந்தமிழும் சிறந்துசிவம் பெருக்கி நாளும்
பித்தாந்தப் பிணக்ககற்றிப் பெட்புடைய திருவிளக்கும் பெருமை தன்னல்
பத்தாண்டு புகுந்ததுபோல் பல்லாண்டு பகவனருள் கூர வாழி. 2

தண்ணளி ஈகை யாதி தழைத்திட மாட்சித் தாகச்
சண்முக ஞான தேசிக! தகுதி பூண்ட சீர்த்தி
எண்முக மாகிச் செல்ல இன்புடன் நீடு வாழ்க
பண்ணியல் கொன்றை சூடும் பரமன தருளின் மன்னே. 3

மன்னிய தொண்டு மாநிலம் வாழியே!
மின்னு மாமழை மேனிலே வாழியே!
உன்னு மெங்கள் உயர்குரு வாழியே!
சென்னி யாறுள தேவ னருளினே. 4

வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர், நகராண்மை உயர்நிலைப்பள்ளி, சென்னை.
24—8—43

யான் நீண்ட நாட்களாகத் தருமபுர ஆதீனத்தின் பெருமைகளைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால், நேரில் பார்த்ததில்லை. 1942ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆதீனத்தின் சார்பாக ஸ்ரீ மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆதீன தேவஸ்தானங்களில் நடைபெறும் பிரம்மோற்சவங்களில் வந்து சமயச் சொற்பொழிவாற்ற வேண்டுமென எழுதிக் கேட்டார்கள். அக்கடிதங்கண்டு எனக்கு மகிழ்ச்சியும், வியப்பும் உண்டாயிற்று. நாம் கேள்விப்பட்ட ஆதீனத்தைப் பார்க்கும் பேறுபெற்றோமே என்பதனுல் மகிழ்ச்சிமிக்கது. சாதாரணமாகப் பெரிய பெரிய கோயில்களிலெல்லாம் பிரம்மோற்சவ மென்றால் சின்ன மேளம், பெரிய மேளம், வாணவேடிக்கை முதலியன அமக்களமாயிருக்கும்; இதென்ன ஆதீனத்தில் புதுமாதிரியாகச் சமயச் சொற்பொழிவுகள் நடத்துகிறார்களே என்று வியப்புண்டாயிற்று.

22, 23, 26—4—43 தேதிகளில் முறையே திருக்கடவூர், திருப்பனந்தாள், சீர்காழி ஆகிய தேவஸ்தானங்களில் பேசப்பணித்து எனக்குப் பிரசங்க அறிவிப்பிதழும் வந்தது. அறிவிப்பிற் கண்டபடி முதலில் திருக்கடவூரை யடைந்து ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி கோவிலுக்குச் சென்றேன். பகல் ஒரு மணி யிருக்கும். நல்ல வெய்யில். அப்போது அங்கிருந்த ஹெட்கிளார்க் அவர்கள் இன்முகங்காட்டி நன்மொழி புகன்று தக்கவாறு உபசரித்தார்கள். அப்போது, 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்ற பழமொழி என் நினைவுக்கு வந்தது. பின்னர் அங்கிருந்த ஆபீஸ் கட்டிடத்தைப் பார்த்தேன். அங்கே கண்ணாடி பீரோக்களில் திருமுறைகள் சாத்திரங்கள் ஸ்தல புராணங்கள் காணப்பட்டன. சுவர்களில் திருமுறைப் பாடல்கள் அழகாக எழுதப்பட்டிருந்தன. ஸ்தலயாத்திரைப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. கணக்குப்பிள்ளைகள் தங்கள் வேலையை அமைதியாகச் செய்துகொண்டிருந்தனர். அந்தஇடம் ஒரு கலைக்கூடமாகக் காணப்பட்டது.

கோவிலில் மாலை வழிபாடு கண்டு வணங்கினேன். அர்ச்சகர் சிறந்த பக்திமான்; யாவரிடத்திலும் அன்புடன் பழகுபவர். கோவிலின் பல பகுதிகளும் புதிதாகத் திருப்பணி நடந்ததுபோல் தோன்றியது. அங்குள்ளவர்களைக் கேட்டேன்; ஆதீனத்தில் ஆண்டுதோறும் சீர்திருத்தத் திருப்பணிகளும், புதுத் திருப்பணிகளும் செய்துவருகிறார்கள் என்றார்கள்.

மாலை மணி ஆறு அடித்தது. உடனே சுவாமி எழுந்தருளித் திருவீதிவலம் வந்து கோவிலுக்குள் வந்துசேர்ந்தார். கோவிலெங்கும் பன்னிற மின்சார விளக்குகள் ஜொலித்தன. கண்கொள்ளாக் காட்சி. இதுதான் பூலோக கைலாயமோ என்று எண்ணினேன். பின்னர் சுவாமி திருமுன் 'சைவத் திருமுறை' என்பதுபற்றிப் பேசினேன். அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர். அவ்வூர் பெருநிலக்கிழவர் திரு. கனகசபை பிள்ளையவர்கள் ஆதீனத்தையும் தொண்டினையும் பற்றி என்னிடம் பாராட்டிப் பேசினார்கள். திருக்கடவூரைத் தரிசித்ததிலிருந்தே தருமையின் பெருமை பெரும்பாலும் விளங்கியது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறுதானே பதம்.

அடுத்தபடியாகத் திருப்பனந்தாளை அடைந்தேன். அங்கே கோவிலின் அருகே கட்டப்பட்டுள்ள கட்டளை மடத்தைக் கண்டவுடன் பிரமித்துவிட்டேன். அங்கிருந்த கார்பார் திரு. முத்தையா பிள்ளை அன்பும் அநுபவமும் நிறைந்த நிர்வாகி. உபசாரத்திற்குக் குறைவேயில்லை. குறித்த காலத்தில் வெள்ளி ரிஷபத்தில் சுவாமி புறப்பட்டு வந்துசேர்ந்தார். பின்னர் 'திருவாசகம்' என்பதுபற்றிப் பேசினேன். எல்லோரும் கேட்டு இன்புற்றனர். அங்குள்ள கோவில் பணியாளர் அத்துணைபேரும் அன்பும் அறிவும் நிறைந்து சிவப்பொலிவுடன் விளங்கினர்.

மூன்றாவதாகச் சீர்காழி சென்றேன். புதிதாயமைந்த திருமடத்தில் தங்கினேன். கோவில் நிர்வாகிகள் அன்புடன் உபசரித்தனர். குறித்த காலத்தில் "ஞானசம்பந்தரும் உடனடியார்களும்" என்னும் பொருள்பற்றிப் பேசினேன். பெருங்கூட்டம் வந்திருந்தது. திருஞானசம்பந்தர் அவதரித்த ஸ்தலத்தின் பெருமையைக் கூறவொண்ணாது. அவரது திருவிழா நடந்தவண்ணமாகவே இருந்தது.

மூன்றிடங்களிலும் முறையே சொற்பொழிவுகளை முடித்துக்கொண்டு திருத் தருமபுரம் வந்துசேர்ந்தேன். என்னை யறியாமலே உள்ளம் பூரித்தது. உயர்ந்து விளங்கும் எழில்மிகு திருமடத்தைக் கண்டேன். இது மன்னாதிமன்னர் மாளிகையோ என நினைந்தேன். திருமடத்தின் முன்புறஞ் சென்று திருக்குளத்தையும் பார்த்தேன். இது கயிலைநாதன் வீற்றிருக்கும் ஆலயமோ என்று எண்ணினேன்; ஆம் திருக்கயிலாய பரம்பரையில் வந்த பரமாசாரியர் வீற்றிருக்கும் இடமல்லவா இது என மகிழ்ந்தேன்.

குருவார நன்னாளில் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானமவர்களைத் தரிசித்து வாழ்த்தி வணங்கினேன். கடைக்கணித்துச் சொற்பொழிவாற்றுமாறு கட்டளை பிறந்தது. அவ்வண்ணமே பண்டாரக்கட்டில் மகாசந்நிதானமவர்களின் திருமுன்பு "சைவத் திருமுறைகள்" என்னும் பொருள்பற்றி ஒன்றரைமணி நேரம் பேசினேன். அன்பர்களும் அடியார்களும் குழுமியிருந்து கேட்டனர். முடிவில் குருமகா சந்நிதானமவர்கள் ஆசி அருளி, புன்னகை புரிந்து 'பேச்சு மிக நன்று' என்று கூறித்

தலையசைத்தார்கள். அதுவே யான் பெற்ற பிறவிப் பெரும் பயனுகும். பின்னர் சிலபகல் அடியேனைத் தங்கவைத்து நல்விருந்தளித்துத், திருவைந்தெழுத்தை ஓதி உய்க என்னுங் குறிப்போடு ஜெபமணிமாலை அளித்துச் சன்மானமும் வழங்கினர் கள். இத்தகைய சைவ மடமிருக்கும்போது சைவத் தமிழ்ப் புலவர்களுக்கு என்ன குறை?

'இறைவன் ஆன்மாக்களைப் பக்குவப்படுத்திக் குருவுமாய் வந்து அருள் செய்வர்' என்னுஞ் சைவசித்தாந்த சாத்திரக் கருத்திற்கிணங்க குருமகா சந்நிதான மவர்கள் அடியேனைத் 'திருக்கோயில்களில் நற்பணி செய்து பக்குவம் பெற்றுப் பின்னர் நம்மிடம் வா' என்று குறிப்பால் பணித்தார்கள் என நினைந்து மகிழ்ந் தேன். ஸ்ரீ குமரகுருபரரை ஆட்கொண்ட ஆதீனமன்றே இது! 'ஆய்வார் பதிபசு பாசம்' என்ற பெருமை பெற்றதன்றே இம்மடம்! இதன் பெருமை பெரிது பெரிது! மலையினும் பெரிது! கடலினும் பெரிது! இம் மடத்தின் ஒப்பில் பெருமையை இப்படி தன்னில் எப்படி உரைப்பேன்.

திரு மடமும் ஆட்சியின் சிறப்பும்

சோழ நாட்டில் தஞ்சை ஜில்லாவில் காவிரியின் தென்கரையில், மாயூரம் என வழங்கும் திருமயிலாடுதுறைக்குக் கிழக்கே இரண்டுகல் தொலைவில் திகழும் சைவ ராஜதானியாகிய தருமபுர ஆதீன மடாலயத்தை மக்களாய்ப் பிறந்த யாவரும் கண்டு களிக்கவேண்டும். அதனைக்காணுத கண்கள் கண்களாகா. இந்தச் சைவ ராஜதானியாக விளங்குந் திருமடத்திற்குக் கிளைகளாக விளங்கும் பதிகள் திருக்கட வூர், திருவாரூர், திருவையாறு முதலிய இருபத்தேழு தேவஸ்தானங்கள். இருபத் தேழும் இருபத்தேழு நட்சத்திரங்கள்போல் விளங்குகின்றன.

இப்போது இருபத்துநான்காவது குருபீடமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் பட்டமெய்திப் பத்தாண்டு நிறைவுறுகிறது. இப் பத்தாண்டு நிறைவுவிழாவை, உயர் திரு சர். ஆர். எஸ். சர்மா, இராவ்பகதூர் என். ஆர். சாமியப்ப முதலியார், உயர்திரு. சி. கனகசபை செட்டியார் முதலிய தமிழ்ப் பெருமக்கள், உயர்திரு. சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் தலைமை யில் சிறப்புடன் கொண்டாட முற்பட்டிருப்பது கண்டு பெரிதும் மகிழ்கிறேன். இவ் விழாவைக் கொண்டாடுதல் தமிழர் தனிப்பெருங் கடமையாகும்.

மகாசந்நிதானமவர்கள் மேற்கொண்டு நடத்திவரும் இப்பத்தாண்டு நிர் வாகத்தில் ஆதீனம் அடைந்திருக்கும் சீர்திருத்தத்தையும் சிறப்பையும் நோக்கினல், வேறொருவரால் ஒரு நூற்றாண்டில்கூட இங்ஙனஞ் செய்யமுடியாதென்றே கூறலாம்.

சுருங்கக்கூறின்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல(து) அரசு"

என்று திருவள்ளுவர் கூறிய இறைமாட்சிக்கு இலக்கியமாய்த் திகழ்வது தருமையா தீனத்தின் தனிச்செங்கோலே என்பது மிகையாகாது.

தருமையம்பதி தெங்கும் மாவும் தேங்கதலியும், காவுங் குளமும் காவிரியுஞ் சூழப்பெற்ற இயற்கை வளம் வாய்ந்தது. அதன் நடுவில் பொலிவது ஓங்கி உயர்ந்த எழில்மிகு திருமடம். முகப்பிலெல்லாம் ஓவியமும் திருமுறைகளும் ஏற்ற இடங்களில் தீட்டப்பட்டிருக்கும். மடத்தின் முன் தண்ணென விளங்குந் தடாகம்: கட்டிடத்தின் முன் பக்கம் கண்ணையும் மனத்தையுங் கவரும் பெரிய நூல்நிலையம்; உள்ளே புகுந்தால் முதலில் 'ஞானசம்பந்தத்தை' உலகுக்களிக்கும் பதிப்பகம் துலங்கும்; ஒருபடி தாண்டினுல் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் ஆலயம்; அது உள்ளத்தை உருக்கும் சந்நிதி; அடுத்தபடி தாண்டினுல், குருமகா சந்நிதானம் வீற்றிருக்கும் பண்டாரக் கட்டு என்னும் தேவேந்திர சபை; அடுத்தபடி தாண்டினுல், அங்கே சைவ ஆதீன அரசாங்க வேலையை உத்தியோகஸ்தர்கள் அணிவகுத்துச் செய்வர். அடுத்தடுத்துக் காணப்படும் கட்டிட அமைப்பைப்பற்றிக்கூற இச்சிறு கட்டுரையில் இடம்போதாது.

மற்றும் வடக்கு முகப்பை ஒட்டிச் சாந்தநிலையம், மெய்கண்டார்நிலையம் பொலிவுடன் தோன்றும். ஆதீனக் கோயில்களிரண்டும் மடத்தின் பக்கத்திலேயே அமைந்துள்ளன. ஒருசார் வேதாகம பாடசாலை; மற்றொருமருங்கு தேவாரப் பாடசாலை. ஆதி குருமூர்த்திகளின் குருபூசை நாளில் தருமபுரம் தேவேந்திரப் பட்டணமாக விளங்கும்.

இப்பத்தாண்டு நிர்வாகத்தில் மகாசந்நிதானமவர்கள் ஆதீனத்தின் பொருள்வளம் பெருக்கி, தேவஸ்தானங்களில் திருப்பணிகள் பல செய்து, நித்திய நைமித்திக பூசைகள் சிறப்புறக் குறித்தகாலத்தில் நடைபெறச்செய்து, சமயப்பிரசாரமும் சிறப்புற நடத்திவருகிறார்கள். ஆதீன ஆலயங்களைக்கண்டு ஆநந்தப்படாதவர்களில்லை. சமயவளர்ச்சி கருதி, மெய்கண்ட சாத்திரம், நீதிநெறி விளக்கம் முதலிய அரிய செந்தமிழ், ஆங்கில வடமொழிகளிலுள்ள நூல்களை உயரிய பதிப்பாக, இலவசமாகவும், குறைந்த விலையிலும், ஐம்பத்தைந்து நூல்களுக்குமேல் வெளியிட்டுள்ளார்கள். மெய்கண்ட சாத்திர மகாநாடு நடாத்தியும், புலவர்களைக்கொண்டு சைவச் சொற்பொழிவு நிகழச்செய்தும் தமிழ்நாட்டைச் சிவமணங்கமழச் செய்துவிட்டார்கள். ஆரம்பப் பள்ளியும் நடைபெறுகிறது. மற்றும் பொதுப்பணி அளப்பில. கருணைவடிவாம் மகாசந்நிதானமவர்கள் பசுபதியருளால் நெடிது இனிது வாழ்க என அப் பசுபதியின் இணையடிகளை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழ்விரிவுரையாளர், அரசர் கல்லூரி, திருவையாறு.
25—8—43.

நாவலந் தீவினில் ஓவலில் வளமுறும்
பூமலி பொழில்சூழ் பொன்னிநன் னாடே
எந்நாட் டினுமுயர் செந்நா டென்பது
செந்நாப் புலவர் சிறப்பித் தேத்தலின்
சீர்முசு குந்தன் பார்முத லாளுழி
பரசிடும் வரமிகு மரசிருக் கையா
கமலை சேய்ஞலூர் கருவூ ருறையூர்

பூம்புகா ரிவற்றினை மேம்படக் கொண்டதால்
அன்னவ னன்பா லரியம ரகத்தினில்
எழுந்தருள் புரிந்த விழுநிதி யுண்மை
அறிவா னந்த வசபா நடத்தனை
பொன்னக ராளு முன்னரு வேள்விசெய்
இரண்டைஞ் சதங்கணன் றிரண்ட பேரன்பால்
புலவ ரோவியன் நலமிகக் கண்ட
ஏனை யாறு வெழிலுறு மூர்த்தியை
மண்டலத் தினிற்கொண் டண்டரும் பராவுநச்
சத்த விடங்கத் தலமெனச் சாற்றிடப்
பதிட்டை புரிந்த பண்புமிக் கூர்ந்ததால்
மூப்பொரு ளிலக்கணஞ் செப்பு மாகம
வழிவரு சைவ மாண்புறு கலைகளை
கயிலை நாயகன் கவினுரு வொளித்து
மக்கட் சட்டகம் தக்கவா பொறுத்துப்
பக்குவ மார்ந்த பொக்கமில் சீடர்க்
ககவிரு ளிரிய தகைவுடை யிறையுரு
வக்கரங் கொளீஇ துக்கம தொருவித்
தூய்மை யாக்கி வாய்மை யெனப்படும்
ஐந்தக் கரத்தினைச் சிந்தையி னிறுவி
யிறையொளி யாக்கு நிறைபே ரருளுடைத்
திருத்தளி பலவுந் திருத்தமா விருத்தலின்
இப்பெற் றியபல வியைதலி னிதுவே
செம்மற் றாமெனல் செப்பவும் வேண்டுமோ!
ஒப்புவ மையிலா விப்பெரு நாட்டினில்
திருக்கயி லாய பரம்பரைத் திருத்தளி
நவமா யிலகல் நவமுடைத் தாமே!
அப்பரம் பரையில் திப்பிய நந்தி
மரபுமெய் கண்டான் றிரமுறு வழிவரும்
பெருமை சான்ற தருமையம் பதியே
எப்பெரும் பதியின் ஒப்பரும் பதியே
என்பதை யறியா மன்பதை யிலரே!
முளைத்த முதல்வரின் முன்னு முளைத்த
ஆலவாய் மன்னிய மூல லிங்கமாம்
சொக்க லிங்கத்தைச் சுடர்மணிக் கோயிலில்
ஞான தேசிக ஞானசம் பந்தன்
அகத்தும் புறத்து மகத்துவ நிறைய
வைத்தருச் சித்த வைப்பா யிலகுறுந்
திருத்தளி யதனிடைத் தேசிக மூர்த்தியாய்ப்
பந்தம தொருவி யந்தமி லின்பம்
எய்த வேட்குறு மெம்மா ணவர்க்கும்
அம்மையோர் பாகன் செய்மா னேந்தி

செஞ்சடைப் பரமன் நஞ்சடை மிடறன்
தானே யெனலைத் தத்துவங் காட்டி
யஞ்சக் கரமாம் விஞ்சிய புகழ்மறை
யோதுவித் தாட்கொளு நீதிச் செங்கோல்
ஆட்சி புரியும் அருண்மிக் கூர்ந்த
இருபா னான்கா யிலகுறு மெந்தவச்
சைவக் கொழுந்தே! சண்முக தேசிக!
ஞானசம் பந்த ஞானா சாரிய!
ஆதிரை நாள்வரும் அண்ணல்! நாவலர்
போற்றுறுந் தேவ! புண்ணிய முதல்வ!
பண்டா ரமாகும் பண்டா ரக்கலை
பொய்கண் டொறுக்கும் மெய்கண் டக்கலை
செற்ற மில்லா நற்றமிழ்த் திருமுறை
ஆரியக் கலைபல சீரிய முறையில்
நாளும் வளர்க்கும் நாயக! மேனாட்
டறிஞரும் வியப்ப ஆங்கில மாதிய
நூல்பல தொகுத்து நூனிலை யத்தினை
கண்டவ ரீதே கவினுடைத் தென்னச்
சாற்றுமாக் கண்ட தற்பர மூர்த்தி!
நின்னரு ளாணையின் முன்னி நடக்குறும்
மூவொன் பானும் முன்னவ னாலயம்
வாவல் பற்றா வகையுறத் திருப்பணி
ஒளியுறச் செய்த அளியுறு மமல!
கற்பக விருக்கமென் கவினார் தென்னை
யோரி லக்கமென் னுயர்வெண் ணின்மேல்
பாங்குற வளர்த்துப் பரமன் பூசைக்
கேலப் புரிந்தருள் சீலத் திருவுரு
வாகிய புனித! வாண்டுப் பத்தினில்
குருத்துவம் பூண்டு குவலயம் போற்ற
செயற்கருஞ் செயலிவை செய்த சீரிய!
கசமுகன் நூன்முதல் காரண னூல்வரை
திண்ணிய முறையில் தேர்வான் வேண்டி
ஏமுற வச்சினில் ஏற்றுவித் தேவரும்
அகவிளக் கம்முற வறிவுத் தொடர்பாம்
ஈதே திங்க ளிதழா மென்றும்
மாசினைப் போக்கு மலரா மென்றும்
இகபரத் திற்காம் எழில்வைப் பென்றும்
பூமா தின்னருள் பொழிநிலைத் தென்றும்
நமனைக் காய்வுறு நன்மறை யென்றும்
அணிபெற வறைய வாக்கிய வாரிய!
எண்முக மாவொளிர் சண்முக தேசிக!
மாமணி நாம மன்னிய எதுகையில்

வந்தருள் புரியுஞ் சிந்தா மணியே!
ஆற்றுப் படைகொள் ளேற்ற மார்ந்த
காரண குரவ! ஆரண மாகமம்
செந்தமிழ் மறைமுதல் செழிப்புறப் பள்ளிக்
கூட மமைத்த கூடல் நாயக!
புலவரு மதிக்க நலமெய் கண்டான்
மாநா டொன்று மகிழ்வுறக் கூட்டியும்
சித்தியார் பாடச் சீர்வகுப் பொன்று
மும்மண் டிலத்துச் செந்தமிழ்ப் புலவர்கள்
குழுமிக் கற்க விழுமித நாட்டியும்
எம்மதத் தினரும் சம்மத மெனுமார்
அருளுரை நூற்பொருள் ஆதிய வுதவியும்
இருவகை நெறியினர் பெருநெறி யுறுவான்
தக்கவா நற்பொருள் ஒக்கவே யருளியும்
வருமெந் தாயே! வருமெந் தாயே!
திரமுறு செயல்பல வரமுறச் செயுநீ
நோயில னாகி நுவலருங் காலம்
என்று நின்று நன்று வாழியரே.

வித்துவான், திரு. T. S. தேவசேனாபதி தேசிகர்,
தமிழாசிரியர், ஸ்ரீ மகந்து உயர்நிலைப்பள்ளி, வேலூர்.

சண்முக தேசிகர் இரட்டைமணிமாலை

காப்பு

தன்னமர் சீர்த்தருமை சண்முக தேசிகன்மேல்
பன்ன விரட்டைமணிப் பாமாலை—நன்னர்
குணபதியின் செல்வி கொழுநற்கு மூத்த
கணபதியின் செஞ்சரணங் காப்பு.

நூல் — வெண்பா

திருவாரு மானிடனைச் சேர்ந்தோன் றருமை
யுருவாரு மானிடனா வுற்றோன்—கருவாரும்
துன்பக் கடலினெமைத் தூக்கியே சண்முகதே
இன்பக் கடலுய்ப்பான் இன்று. 1

கட்டளைக்கலித்துறை

இன்றா மறையடி யேத்துமன் பர்க்கினி தீத்துவக்க
பொன்றாத வாழ்வு திருவுருக் கொண்டு பொலிந்தனனால்
குன்றா வளனார் தரும புரத்தில் குலமறையான்
முன்றா னுணராத வன்சண் முகனெனும் மூர்த்தங்கொண்டே. 2

வெண்பா

கொண்டலுலாஞ் சோலைக் குளிர்தருமைச் சண்முக !மெய்
கண்டமறை தேர்ந்து கதிபெறவே—கொண்டறிஞர்
கூட்டத்தைக் கூட்டியெனைக் கூட்டி யருளின்பங்
காட்டி யினிதாண்டாய் கனிந்து. 3

கட்டளைக்கலித்துறை

கனியாத வன்னெஞ்சக் கள்வரும் நின்னடிக் கண்ணடைந்தால்
துனியாது நில்லாத நூனெறி யோர்ந்துன் றுகளிலருட்
கினியா ரெனப்படு வார்மெய்ம்மை தெங்கிள நீர்சுமந்த
பனியார் பொழிற்றரு மைச்சண் முகத்திருப் பண்ணவனே ! 4

வெண்பா

பண்ணவன் கோயில் பலதிருத்தி னுன் றருமை
அண்ணலவன் சண்முகத்தே வாமென்ப—மண்ணகத்தில்
தன்னகத்தைத் தான்புதுக்க ரூன்வியப்போ தானுணர்ந்தே
இன்னகத்தைத் தான்விடுவீர் ஏய்ந்து. 5

கட்டளைக்கலித்துறை

துளவுசெந் தாமரை யுங்கமழ் பாதந் துதைந்துவஞ்சங்
களவுபொய் யாதி கமழுவைப் பாய்கொல் கனிந்தெனையும்
அளவிலின் பப்பெருக் காறே சுவைகெழு மாரமுதே
வளமலி யுந்தரு மைப்பதிச் சண்முக மாதவனே ! 6

வெண்பா

மாதவமே மெய்ம்மை வளர்தருமைச் சண்முகனார்
போதலர்தார் வேட்டுப் புலம்புகின்ரூள்—காதலினல்
பெய்வளையீர் அந்தப் பெருமான் றிருமுன்னர்
எய்துபுபெற் றெய்துகவென் றீங்கு. 7

கட்டளைக்கலித்துறை

ஈங்கொன்று வேண்டினர்க் கோர்முக மாக இருந்தருணின்
பாங்கொன்று கண்டனன் சண்முக நாமம் பரித்ததெவன்
ஆங்கொன்று பன்முக மாக விரித்த வருமறைச் சொல்
தாங்கொன்று நீயென்ப தோதரு மைக்கட் டயாநிதியே. 8

வெண்பா

நிதியும் பதியுமெழில் நேரிழையார் பற்றும்
பொதியும் மனத்தகத்தே புக்கான்—மதியினுடன்
ஊன்று தருமை உயர்சண் முகனுங்கண்
மூன்று மலவேரறுக்க மூன். 9

கட்டளைக்கலித்துறை

முன்னிய பாவ புரத்திருந் தெய்த்தேன் முனைந்தடிக்கீழ்
மன்னிய காலை தரும புரத்து மறைமுனிவர்
பன்னிய மெய்ப்புக ழோன்சண் முகப்பெயர்ப் பண்ணவன்றான்
பொன்னிய லின்பம் புணரவுஞ் செய்து புரந்தனனே! 10

வெண்பா

தனக்கொரு பற்றிலன் றானா யினுமென்
மனக்கொரு பற்றா மருவி—இனக்கொடு
தீய வினைமுற்றுஞ் செற்றான் றருமைவாழ்
தாயனைய சண்முகன் றான். 11

கட்டளைக்கலித்துறை

தான்கொண்ட வின்பந் தனைக்கொண்டு வாழவித் தாரணிக்கண்
ஊன்கொண்ட வேடம் உடன்கொண்டு வந்தனை உண்டெனினீ
யான்கொண்ட வேட்கை யவாமுடித் தாளமற்றி யாவருளார்
தேன்கொண்ட காத்தரு மைப்பதிச் சண்முக தேசிகனே. 12

வெண்பா

தேசிகனாய் வந்தான் றிருவருள் பாலிப்பான்
மாசிலா வீடும் வழங்குவான்—பேசில்
தருமைப் பதிமேவு சண்முகனும் எங்கோ
ஒருவனென்றே நெஞ்சே உணர். 13

கட்டளைக்கலித்துறை

உணவுநஞ் சாகும் உடையாது மில்லை உறைவிடந்தான்
குணமினன் காடென்ப என்னை! மன் சண்முக! கோகனக
மணவி செஞ்சொல் வயல்மலி யுந்தரு மைப்பதியில்
வணமலி செம்மை யுடையெழிற் கோயிலில் வாழ்பவனே. 14

வெண்பா

வாழ்பவர் யாங்கெனினும் வண்ஞான சம்பந்தம்
சூழ்வருமா றுன்னருள் சூழுமெனில்—சூழ்தருமைச்
சண்முகநின் வாயிதழால் தந்தருள் வாய்திக்கின்
எண்முகமுஞ் சேர இனிது. 15

கட்டளைக்கலித்துறை

இனிய கதிர்முக மும்தண் ணருள்பொழி யேர்விழியும்
பனிசெய் குறுநகை யுந்தமி ழன்பர்கள் பால்வழங்கும்
கனியை நிகர்மொழி யுங்கண்டு நின்றாட் கலந்துறவே
நனியு விழைவன் றருமைவண் சண்முக நாயகனே! 16

வெண்பா

நாயகமாப் பல்லுயிர்க்கும் நண்ணினன் மற்றெனக்குத்
தாயக மென்னில் தவறுண்டோ— ஆயகலை
கற்றோர் புகழ்தருமை கண்மணிநேர் சண்முகப்பேர்
உற்றோன் றனையிண் டுவந்து. 17

கட்டளைக்கலித்துறை

உவலைப் பரசம யப்பாழ்ங் குழியி லுழன் றுழன்று
கவலைப் படுகின்ற காசினி யீர்! மெய்க் கதியடைவான்
சவலைப் படுகிலிர் தண்ணருள் பூத்துத் தருமையிலோர்
திவலைத் துயரின்றிக் கொண்டுய்ப்பன் சண்முக தேசிகனே. 18

வெண்பா

கன்னெஞ்சே கேட்டி கவின்றருமை மாதவன்
பின்னமிலான் சண்முகப் பேர்கொளினும்—அன்னவற்கும்
தந்தைநமக் குந்தந்தை தாரணிக்கட் பல்லுயிர்க்கும்
தந்தைஎவைக் குந்தந்தை தான். 19

கட்டளைக்கலித்துறை

தானு வுவந்தெனை வாவெனக் கூயருள் தந்தெவையு
மானுத இன்பகல் வாழ்க்கையுங் கைவரு மாறுதவி
ஆனுத சைவசித் தாந்தத் தெளிவை யருத்தியதால்
வானுடர் போற்றுந் தருமையிற் சண்முக மாத்திருவே. 20

திரு. த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை,
தமிழாசிரியர், தூயபேதுரு உயர்தரப்பள்ளி; தஞ்சை.
19—6—1943.

1. திருக்கிளருங் கயிலாய நந்திமர பினில்வந்த செம்மை யாள
னுருக்கிளரு மெய்கண்டான் சந்ததிக்கோ ருதயசூ ரியன்றா னென்ன
மருக்கிளருங் கொன்றையந்தார் தணந்துசெழுங் கழுநீரின் மாலை வேய்ந்து
குருக்கிளரு முருக்கொடெமை யாள்ஞான சம்பந்த குரவன் பின்னே.

2. இருபஃதோ டொருநான்கா வெணுங்குரவர் சிகாமணியா வெழின்மீக் கூர்ந்து
குருபதமீ தொப்பதிவ ணெங்கெங்குங் குவலயத்தி லின்றின் றென்னத்
தருபதங்க ளெண்ணிலவா விருபத்தேழ் தலங்களுள தளிகள் சூழ
வருதரும புரப்பதிக்க ணருட்செங்கோல் செலுத்திவரு மகிமைத் தேவே.

3. உண்முகமா ஞானிகணு டோறுமுனு மோருருவே குருவாய் வந்திச்
சண்முகமா ஞானவுருக் கொண்டெமது தவப்பெரிய வினைகள் பாற்றிப்
பண்முகமா ருமலொரு திசைபத்து மிசைபரப்பிப் பனுவல் கொண்டு
விண்முகமேற் புலவர்நனி விரும்பியிவண் வருமாறு வீற்றிருந்தே.

4 பலகலையா கமம்புரக்கும் படிபணித்த பண்புருவே புலவர்க் கெல்லாஞ்
சிலகலையோ பலகலைகள் கோடியெனத் தெரிந்தருளுஞ் செல்வத் தேவே
திலகமெனக் குரவர்சிகா மணியாகித் திசைமுற்று மிசையைச் சேர்த்தி
யுலகமுற்று மருட்செங்கோ லோச்சுமெம தருட்குருவே தருமைவாழ்வே.

5 போற்றுநர் கலியும் புன்மலப் பிணியும் போக்குவான் சுவணவட் டகையின்
நீற்றினை யெடுத்துக் கருணையி னளிக்கு நிருமல குரவருண் மணியே
ஆற்றினிற் கரைத்த புளியென வடியே னன்பையு மாக்கிடா தென்றும்
போற்றுமா வுளங்கொள் சண்முக குருவே புண்ணியத் தருமையெம் வாழ்வே.

6 கற்பக மாலைக் கவினுறு வோருங் கமலநன் மாலிகை யோரும்
பொற்புறு துளவத் தாரணி வோரும் பொருந்துநின் றிருவடி சூடும்
அற்புத மாலை யணிந்திடு மெம்மை யணுத்துணை யேனுமா னுவரோ
சொற்பதங் கடந்த சண்முக குருவே சுகுணநற் றருமையெம் வாழ்வே.

7 பற்பலர் சூழப் பல்லிய மொலிப்பப் பண்ணோடு தமிழ்மறை பயிலப்
பொற்பவிர் மடவார் பொன்னட மாடப் புண்ணியம் பூசுமெய்த் தொண்டர்
அற்பகத் தொருவா துன்னருங் கீர்த்தி யறைதர வருந்தபோ தனர்நின்
சொற்பணி கேட்கப் பவனிநீ வருதல் சூழ்தரி னெளியரேம் பொருட்டே.

8 பொருந்துறு மோரூ ரேனுமில் லென்னப் புகன்றனை யதற்குமா றாக
வருந்தவ ரொருவாக் கமலைவண் கூட லந்தகன் வழிபடு தருமைப்
பெருந்திரு வுடைய நகரெலாம் புரப்பாய் பேதையே னுய்யுமா றுளதோ
திருந்திய வடியார்க் குறுதவப் பேறே திப்பியச் சண்முக தேவே.

9 தருக்களைந்தோ சுரபியோதிப் பியமணியோ பதுமநிதி சங்கந் தாமோ
திருக்கிளரு மனைத்துமொரு குருவடிவாய்த் திருத்தருமை சேர்ந்த தேயோ
கருக்கிளரு மெமையுமொரு பொருளெனக்கொண் டினிதடியார் கணத்திற்கூட்டி
மருக்கிளருந் தாடலைமேற் சூட்டுமுயர் சண்முகசம் பந்த வாழ்வே.

10 மயனகத்தா னிருமித்த தெனவளங்கள் கொழிதருமை வாழ்வே நாயேன்
அயனங்கைத் தலத்தினிற்பட் டலமருத லதுதவிர்த்தந் தகன்கோ பத்தால்
உயும்வகையொன் றறியாமற் றிகைப்புண்டு கிடவாமே யுள்ளத் துள்ளிப்
பயனமது திருவடியே பெறும்பேறென் பதுகுறிப்பிற் பகருந் தேவா.

11 திருத்தரும புரத்துவரு குருமரபு தழைக்கவருட் செங்கோ லோச்சி
யருத்தியுட னிருபத்தேழ் தளிகளெலா மாங்காங்கே யன்பிற் பூசை
விருத்தியுற முன்னையினும் பலபடித்தாய் நன்காற்ற விதியி னேம்புங்
கருத்தனெங்கள் சண்முகசம் பந்தகுரு பரனைநிகர் வார்காண் பீரே.

12 அண்டருல களவுமுற மறைமுழக்க மருவாக மங்கள் வேதத்
தண்டமிழ்த்தே வாரமுழக் கொருபால்செந் தமிழ்கலையா ரியங்க ளோர்பால்
பண்டருநல் விசையொருபா னடனமொடு பல்லியவார்ப் போங்க வோர்பால்
கண்டிகைமா தவர்சூழ வரசுபுரி சண்முகசீர்க் கருணை வாழ்வே.

13 நின்னாம வெழுத்தஞ்சுங் கருதலர்கள் கருதலரே நிமலக் கோயின்
முன்னாக வலஞ்சூழ்ந்து வணங்காதார் வணங்கலரே முளரித் தாளிற்
கொன்னாகம் பொருளாவி முதற்கொடுத்து வீழாதார் குவல யத்தில்
துன்னாமே வீழ்பவரே தாழ்பவரே தருமைவரு சுகுண வாழ்வே.

14 பண்டாரக் கட்டொன்றே திருவெண்மர் பதுமமெனப் பாங்கிற் றங்கக்
கண்டார்கண் களிகொளுமா கட்டுதிரு மடமுகப்பும் பந்திக் கட்டும்
எண்டிசைசூழ் பொழில்வாவி சாந்தநிலை யெழிலச்சுப் பொறியு மேவத்
தண்டமிழ்த்தாள் திருஞானம் பெறவமைத்த சண்முகசம் பந்த தேவே.

15 வாழிதிருத் தருமைநகர் வாழிதிரு மடாலயச்சீர் வாழி யன்பர்
வாருதிருத் தொண்டர்நனி வாழிதிரு மாதவர்கள் வாழி பூழி
வாழிதிரு ஞானசம் பந்தன்வழி வருமரபு வாழி வாழி
வாழிகுரு சண்முகசம் பந்ததே சிகமூர்த்தி வாழி வாழி.

ஆசிரியர் திரு. அ, வரதநஞ்சைய பிள்ளை, தோரமங்கலம்.

5—9—1943.

காலப்போக்கை யறிந்து அவ்வப்போது மனமாறுபடும்மக்களை நல்வழியில் ஈடுபடுத்தி, இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற உதவிகளைப் பல்காலும் மாறாது செய்துவரும் வண்மையால் தமது சுயநலத்தை அறவே மறந்து நிற்கும் உண்மையாளர்கள் யாவரோ அவர்களே கண்கண்ட தெய்வங்களாம் என்பது யாவரும் உடன்படுவதொன்று. யாம் கண்டவரையில் தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் போன்ற பெருங்கொடையும், சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் பெருந்தொண்டும், செம்மை கனிந்த திருவுளமும், உள்ளத்தோடு மாறுபடாத வாய்மையும், சீலமும், கருணையும் உடையோர் பிறருள்ளார் எனச்சொல்லக் கூசுகின்றோம்.

இஃது ஏனைய மடாதிபதிகட்கும் எடுத்துக்காட்டாக நின்று மக்களைச் சைவநெறியினும், தமிழ்ப்பயிற்சியினும் வீறுபெறச்செய்து, நாட்டில் உண்டாகும் சாதிப்பூசலும், சமயச் சண்டையும் ஒற்றுமைக் குறைவும் ஒழியச்செய்து, நல்வளம் பெற நன்மார்க்கத்துச் செலுத்துதற்கு அடிகோலும் செயலாகும்.

இத்தகைய சந்நிதானம் பல்லூழி வீற்றிருந்து பல பெரும் பணிகளை நிறைவெற்றி, மேன்மேலும் ஞானச்செல்வமும் புகழ்ச்செல்வமும் மிகுந்து விளங்க அப்பெருமானர் திருவடிகளிற் பணிவுடன் வேண்டிக்கொள்வோமாக.

வாழ்த்துகம் வம்மினோ! வாழ்த்துகம் வம்மினோ!!
நாற்றிசை கவித்த நல்லிசை யாளர்
யாங்குளார் என்னத் தூங்குநாத் தினவுறப்
பொய்யிசை வெறுத்து மெய்யிசை நிறுவத்
திரிந்தல மருசீர்ச் செந்தமிழ் நாவலீர்!
வாய்த்தது நமக்கோர் வாழ்வுமிகு நன்னாள்

நாட்டினுள் மிக்கது சோணுடதுபோல்
சிவநெறி தமிழொடுந் திகழ வளர்க்கும்
மடங்களிற் றலைமை வாய்த்த நற்பதி
தருமபு ரப்பெயர் சார்கார ணக்குறி
வழக்கெனக் கைலை மலையி னீங்கிக்
கண்டக் கருமையும் கங்கைச் சடையும்
மானும் மழுவும் மாதொரு பாகமும்
முக்கணும் நாற்கையும் மொய்யதளாடையும்
கரந்தெம் பெருமான் கவினுருத் தாங்கி
சண்முக ஞான சம்பந்த நாமம்
பூண்டுதன் மெய்க்நெறிப் போதம் பரப்பவும்
பண்டுதான் வளர்த்த பைந்தமிழ் புரக்கவும்
யாமெலாஞ் செய்த மேன்மையாந் தவத்தால்
எய்தின ரென்ன எழுந்த அடிகளார்
சைவச் செங்கோல் தாங்கிநாற் றிசையும்
நிழற்று மெய்ஞ்ஞான நீள்வெண் குடைக்கீழ்
வாய்வந்த கூறி மனவழிச் செல்லும்
அறிவிலார் மாட்டும் அருள்மிகச் சுரந்து
தீவினைப் பகையறச் சிவாநந்தம் பெருக
ஆட்சிசெய் பத்தாம் ஆண்டுநிறை நன்னாள்
அன்பராம் அடியார் இன்புறக் குழீஇச்
செங்கை முகிழ்த்துச் சிரமிசை ஏறவும்
பொங்கு மகிழ்ச்சி நிரம்ப இடம்பெறு
துள்ளந் திகைப்ப வுவகைக் கண்ணீர்
மழையெனக் குதிப்ப மயிர்புறம் பொடிப்ப
எங்கோ வாழிய! எந்தை வாழிய!
சைவம் புரக்கும் தலைவனர் வாழிய!
செந்தமிழ் வளர்க்கும் செம்மல் வாழிய!
புலவர் அளவறிந்து புரக்கும் வள்ளல்
வாழிய வென்ன வழுத்தொலி கடலொலி
வாய்புதைத் திடவவர் வான்புகழ் வாழ்த்தி
வான்மீ னினத்தினும் வளர்கா விரியின்
நீண்மணற் கணக்கினும் நெடிதுநாள் மிகுக
ஏனை மடாதிபர்க் கெடுத்துக் காட்டாக
அவ்வவர் உள்ளம் அள்ளும் பெரும்பணி
எத்தனை யம்மவோ இப்படிச் செய்வரார்?
அருநூல் நிலையம் ஆகமப் பள்ளி
மூவர்தே வார மொழியிசைக் கூடம்
இலவச மாய்த்தமி ழியல்பயில் மண்டபம்
வந்தோர் புலவர்கள் வாக்கினயம் காட்டிச்
சுட்டி வாதாடும் பட்டிமண் டபங்கள்
கண்டோர் தம்போற் கண்ணிமை யாது

செயலற நிறுத்தும் சித்திர மாடம்
உரைசெய ஒருநா வொண்ணு தென்னப்
புரிவன வெல்லாம் பொதுநலப் பணியே
நினைவன வெல்லாம் நிலைச்சைவ மேன்மையே
சொல்லுவ அனைத்தும் துகளறு ஞானமே
காட்டுவ வெல்லாம் கடமைப் பாடே
ஊட்டுவ வெல்லாம் வீட்டுநெறிப் பாலே
இன்ன தன்மைய வெம்முயிர்த் தலைவனர்
கட்புலப் படுமெய்க் கடவுளே என்ன
மலர்புரை திருவடி வணங்கிப்
புலவர்காள் வாழ்த்தப் புகுதும் மகிழ்ந்தே.

வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர்,
தமிழ் ஆசிரியர், போர்டுஉயர்தரப்பள்ளி; குடவாயில்.
26—8—1943.

1. மலர்விரி சோலைகள் சூழ்தரு மைப்பதி வாழ்குருவே!
மலர் இதழ்க் கொன்றையம் வேணிசேர் சொக்கநன் ஞதனடி
மலர்தலை மேற்கொடு வையமும் சைவமும் உய்யவந்த
மலர்தரு ஞானசம் பந்தனெங் கோவின் வழிமுதலே!

2. சண்முக தேசிக ஞானசம் பந்தநற் சற்குருவே!
எண்ணரி தாம்பணி யாற்றுநின் கீர்த்தியிவ் வேழுலகும்
நண்ணிடு மென்னில் நினக்கார் நிகரிந் நிலவரைப்பில்
உண்ணெகிழ் அன்பின் உனதடி யேங்கட் குயிர்த்துணையே!

3. நற்றவப் பீடம் நயந்துநீ ஏற்றிடு நாளளவில்
நற்றவ! கற்றவர்க் கிந்தனை நற்கலை நூல்பலவும்
கற்றறி பற்பல கண்டனை தொண்டர் கதிபெறவே
உற்றிடு முப்பொருள் தந்தெனை யாள்வதும் உன்கடனே.

4. நின்னறி வின்திறம் நீள்புவி யாண்டிடு வேந்தருக்கும்
உன்னரி தென்னில் உயர்வு நவிற்சியாய் உற்றிடுமோ?
மன்னிய நின்பணி வாழிய வென்றும் வளம்பெறவே!
உன்னிப் பழமையும் ஆற்றிப் புதுமை உவந்தனையே.

5. நாசியர் தந்தை நலமிலி ஹிட்லர் நவிந்தொழிய
வீசிய வாட்படை கொண்டநம் வீரர் விறல்விளங்கப்
பேசிய கீர்த்தியன் ஆர்தர்ஹோப் பாகும் பெருமையனின்
பேசிய பேர்பெறு கின்றவிச் சாலைக் கனியெனவே.

6. சித்திரச் சின்னம் வளமார் டியூனி சியவளைவு
வைத்தநின் சீர்த்தி வளர்மதி போலென்றும் வாழியவிங்
கெத்திசை யோரும் இனிதின் விரும்பிடு மெங்குருவாம்
உத்தம! வாழி உயர்சைவம் வாழி உலகுய்யவே!

Vidwan, Sri G. SUBRAMANIA PILLAI, M. A., B. L.,
Lecturer in Tamil, Annamalainagar.
24—5—1943.

"Love others and be happy thyself" is the basic doctrine of the Saiva Siddhanta philosophy. It teaches mankind to discover Sivam in others and worship him. This would lead to the ultimate spiritual realisation of discovering God in one's own self. So this makes man essentially a social being. Thus a Siddhanti is not a cynic who turns his back on society, nor a misanthrope who flies to the forest from worldly joys. As Thiruvalluvar says, a man who lives a correct and proper life becomes himself deified. To breathe an atmosphere of the spirit of Hara, one has got to convert his environment into such a condition and this requires a certain amount of missionary work. We know that a legion and a leader are indispensable for this kind of missionary work. The life of the Saint Kanampullar may be cited as an instance.

One of the chief tenets of Siddhanta philosophy, as expounded in the Eighth Sutra of Sivagnana Bodam, is that God reveals himself to advanced souls in the form of a Guru and reclaims them from the toils of the five senses by illuminating the truth. Men who have achieved this divine benediction are held to be the proper medium of transmitting the revealed word by administering the Siva Dikshai or spiritual initiation. The heads of Saiva mutts in South India are such spiritual gurus and the Dharmapuram Adinam forms one of the twin premier institutions which have sprung to defend and disseminate the mission of Saiva Siddhanta throughout the length and breadth of the globe. The history of the Dharmapuram Mutt is traced back to several centuries in the past and shines as a beacon-lamp with its rich lore and hoary traditions. Thus thousands of people pay their homage and receive their benediction from the Mahasannidanam of Dharmapuram Mutt.

A galaxy of such grand gurus or Acharyas have adorned the holy seat of Dharmapuram and the Tamil Saiva world is now fortunate in having Sri-la-Sri Shunmuga Desika Paramachariya Swamigal as the present incumbent of this exalted place. It is ten years since the mantle has fallen on him and within so short a time he has won the love and good-will of the Tamil world and has accomplished so much as to justify the rule of a generation. First and foremost, he is a lover of Tamil studies, himself being a Tamil scholar and has built, through his own efforts, a vast library containing rare and precious works. He has arranged for weekly and monthly lectures and religious discourses at Dharmapuram and other temples under his management and he attends in person to many of them. He has started the bilingual monthly "Ganasambandam" with a view to propagate the gospel of Saiva Siddhanta, printed in his own press. A fair share of his wealth is being spent in publication of religious books which are mostly distributed free to the public. He is a lover and patron of Tamil music also. Viewing his various activities in this direction, one can hardly fail to see in him a stalwart champion of Tamil and Tamil culture. But he has not forgotten Sanskrit also and a Vedagama Patasala is being run at Dharmapuram under his auspices.

Above all, our Mahasannidanam is an architect of temples. There are several temples in the Tanjore and Trichinopoly Districts, under the direct management of the Dharmapuram Adinam. To whichever of these temples one goes, he will see Thiruppani going on, renovations made, old walls pulled down and replaced by new ones and darkness and dirt removed by more airy and spacious structures. Though he comes of an ancient line of illustrious heads, he is quite modern of the moderns and his engineering skill and sculptural taste are writ large in every wall or mantap he has erected or is erecting. It has got a cut and style of its own and everything is done according to plan. He has not touched anything which he has not beautified. This seems to be his hobby.

Finally, one, coming under the spell of his dominating and venerable personality, is sure to be captivated by the light that gleams through his lustrous eyes and will breathe an air of sanctity. He is brimming with agility and is still young, vigorous and virile. He works with an undefatigable energy and insists on inspecting things in person which accounts for his success, though he has departed in this from the policy of his predecessors. He is never idle but is always striving for the uplift and promotion of the Saiva faith. His presence is felt everywhere and he is marvellous in surprising his subordinates with frequent visits. This ensures a healthy administration of the affairs of the Mutt. Last but no least, he has a gentle heart and a generous disposition. His sweet and encouraging words are a panacea for bruised hearts. This is not the place to dilate upon his munificence. In short, he does not believe in hoarding.

By revering and honouring him, a Tamil Saiva reveres and honours his own self, his God, his religion and his Country. This noble Head is a living symbol of the faith which is dear to myriads of South Indians who, today, with an exultant jubilation bow low at his feet and salute him as their Saviour and Defender of the Faith.

Sri M. R. JAMBUNATHAN,

Editor Vedas & Upanishads in Tamil, Bombay.

25—8—1943.

May I add my tribute to Mahasannidhanam on the decennial celebration day. Ten years is but a speck in the growth of a Mutt. His Holiness has within this short time infused the mighty fire of His life into it which even as a spark is already becoming a beacon light that would shine for ever and is making a history in the renaissance of South India. As a follower of Rudra he has already burnt with his third eye of intelligence inaction and in ability and with aspects of Siva opened Veda Patasalas and Agama Schools. He brings auspiciousness by his monthly Gnanasambandam, his numerous publications carry the message of Parvathi-Parameswara and with the mighty tounge of Agni his ganas preach the gospul of Truth. Temple of south India are again becoming the centres of learning and Halls of Prayers. His seat of residence Dharmapuram under his guidance is fast becoming a University of Dharma and a place of pilgrimage. May the Almighty god shower on him his choicest blessings and longest life.

Sri A. CHIDAMBARAM MUDALIAR,

Circle Inspector of Police (Retired) Coimbatore.

Though I am physically here, my heart is with you all and I pray to God that the rule of Sri-la-sri Shanmuga Desiga Gnanasambanda Pandarasanndhi Avergal may continue for sevoral docades to foster the Tamil Language and the Sastras.

திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், திருவொற்றியூர்.

31—8—1943.

இறைவன் கீழ்க்கணக்கு.

இறைவனுர் உயிர்கள் செய்யும் வினைகள் யாவையும் பதிவுசெய்யும் வழக்குடையவர் எனப் போற்றப்படுகின்ருர். இறைவன் கீழ்க்கணக்கெழுதும் பயிற்சியுடையார் என்பது அப்ப மூர்த்திகள் கருத்துப் போலும். கணக்கெழுதுவோர் வரவினை ஒரு பக்கமும், செலவினை யொருப்பக்கமும் எழுதும் வழக்கினைப்போல இறைவன் பொழுதினைச் சுருக்குவோரை ஒருபக்கமும், காதலால் தொழுவோரை ஒருபக்கமும் குறிக்கின்ருர் என்று போற்றப்படுகின்றது.

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின், றழுது காமுற்றரற்று கின்ருரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும், எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பரீசனே"

எனவரும் அப்பர் சுவாமிகள் திருக்குறுந்தொகை கருதத்தக்கதாம்.

இங்ஙனம் சிவத்தொண்டுகள் இயற்றினேரும் இயற்றுவோரும் சால விழுமியோராவர். இவர்களே கீழ்க்கணக்கில் எழுதப்படும் பாக்கியம் பெறுவர். சிவபுண்ணியமடைவர். சிவபுண்ணியம் மிகுதியும் பெற்றுத் தான் பெற்ற வின்பம் வையகம் பெறுதல் வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் விளங்குபவர் திருக்கயிலாயபரம்பரை தருமையாதீனத்து 24வது பட்டத்தமர்ந்த மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகளாவர். அவர்கள் திருக்கோயிற்றிருப்பணிகல் பல இயற்றினர். மன்பதையுலகில் அன்பராக்குதற்கு முயன்று செய்துவரும் பணிகள்பல. நூலாலும், உரையாலும், வேத சிவாகம தமிழ்த் திருமுறை பாடசாலைகளாலும் இளைஞருக்குச் சமயவுணர்ச்சி யூட்டப்பெறுகின்றது. இன்னேரன்ன பணிகள் அவர்கள் கருத்திலூன்றியுள்ளன. அவை அங்குரித்து, மரமாகிக் காய்கள் காய்த்துப் பழுக்குமாயின் சைவ வுலகமும் தமிழுலகமும் பெரியதோர் சிறப்பு நிலையடையும் என்பதில் ஐயமில்லை. அவர்தம் அரியபணிகள் இறைவன் கீழ்க்கணக்கில் பதித்தனவே. அவர் அருட்செங்கோல் கைக்கொண்டு பத்தாண்டு கழியாநிற்க, தொடங்கும் புத்தாண்டில் அவர்தம் சிறப்பைக் கொண்டாடப்படுவதே கீழ்க்கணக்கில் பதியப்பெற்றதற்குச்சான்ரும்.

திரு. S. இராமலிங்க ஓதுவார்

தேவார ஆசிரியர், பழநியப்பமுதலியார் பாடசாலை, சிதம்பரம்.

1—9—1943.

சீர்பெறு சோழ னாட்டிற் சிறந்தநற் றருமை யென்னும்
பேர்பெறு மாதீ னந்தான் பிறங்கவே விளங்குங் கோவே
ஊர்பெறு மூத்த மர்கள் உன்புகழ் உரைக்கின் றார்கள்
கார்பெறு வண்கை யாலே கவின்பெற வழங்க ளாலே. 1

பட்டமு மிருபான் நான்குன் பண்புகள் இருபான் நான்கு
இட்டமா யுரைக்க வெண்ணில் இயன்றவா றியம்பு கின்றேன்
சிட்டரை மடத்திற் சேர்த்தல் சிவன்றளி புதுக்கி யாக்கல்
கட்டழ காக இந்தக் கடிநகர்த் தருமை யாக்கல். 2

அன்னமர் அமுதச் சாலை அச்சாரும் யந்த்ர சாலை
பன்னுதே வார மோதும் பண்புள பாட சாலை
பின்னுவார் சடையான் தந்த பீடுறு மாக மத்தைக்
கன்னலின் சாறுண் டாங்குக் கற்கவே பாடசாலை. 3

ஞானசம் பந்த மென்னும் நன்மதிப் பத்தி ரிக்கை
தானதை நடாத்த லோடு தலங்களின் தேவா ரத்தை
வானவர் வியக்கும் வண்ணம் வரைந்திடல் ஞான நூலை
ஊனமூ றுத வாறு உயர்ந்துளோர் மதிக்க வைத்தல். 4

சொக்கருக் குகந்த மூலச் சுபதினம் விழாக்கொண் டாடல்
நக்கனுர் பொற்ப ணிகள் நல்லன வாகச் செய்தல்
மிக்கவா கனங்க ளாதி மேலதாய்ச் செய்து வைத்தல்
தக்கவர் பிரசங் கங்கள் தலங்களிற் பேசு வித்தல். 5

உமையொரு பாகன் தந்த உயர்சிவ ஞானம் வந்து
அமைவுறு மடமி தென்றே அறிந்துமெய் கண்டார் பேரால்
அமைந்தமா நாடு கூட்டல் அனைவரும் அதிச யிக்க
நமையறி வடையும் வண்ணம் நல்லநூல் பதித்தே ஈதல். 6

ஆங்கிலக் கல்வி கற்க அவாவுறு மாண வர்க்கு
பாங்குட னுதவல் சீடர் பக்குவந் தேர்ந்தே நான்கு
தீங்கிலாத் தீக்கை செய்தல் தினஞ்சிவ பூசை செய்தே
ஓங்குயர் பந்திக் கேகல் ஓதுபண் ணோசை யோடே. 7

நங்குரு சந்தா னத்தை நாரையூர்த் தலத்தும் நாட்டல்
கொங்குசேர் கோவை சி.கே. குலவுசுப் பிரமண் யப்பேர்
தாங்குந் தக்கோ னலே தாண்டக வேந்தர்க் குற்ற
பொங்குறு புராணத் திற்குப் பொருந்துரை செய்வித் தீதல். 8

பன்னிரு திருமு றையைப் பவனியாய் வரவ ழைத்தல்
பன்னிரு திருமு றையின் பயன்களைப் பகரச் செய்தல்
பன்னிரு திருமு றையைப் பண்ணுடன் பாடச் செய்தல்
பன்னிரண் டிரட்டி சார்ந்த பத்திசால் பணிகள் கண்டேன். 9

கண்டவை இவையே யாகக் காண்பவை பலவே யாகத்
தொண்டர்கள் குழாத்தி னேடும் தொண்டுநீ செய்து வாழி
பண்டுபோ லாதீ னம்நம் பரம்பரை முறையில் நிற்கை
கண்டர சாங்கம் பெற்றோர் கருத்தினும் போற்றப் பெற்ருய். 10

தருமையிற் றலைமைத் தானம் தாங்கிய சண்முகப்பேர்
அருமையாய்ப் பெறுமா சானே அருட்குரு பீடத் துற்ருய்
ஒருவருஞ் செய்யாச் செய்கை உன்னிடத் துறுத லாலே
குருவருள் பெற்றி ருக்கை கூறவும் வேண்டுமோ தான். 11

ஆண்டுகள் பத்தும் நீசெய் அற்புதச் செயல்போல் நூறு
ஆண்டுகள் வாழ்க வென்று அம்பலத் தாடு கின்ற
தாண்டவ மூர்த்தி தாள்கள் தலைமிசைக் கொண்டு நாளும்
வேண்டுவன் தருமை வாழ்வே விழுமிய செய்யும் வேளே. 12

வித்துவான், திரு. வே. ஜயாநாயக்கர்,
தமிழாசிரியர், போர்டு உயர்தரப்பள்ளி, போளூர்.
2—9—1943.

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

தரவு

திருக்கயிலைப் பதிநீத்துத் தென்னுட்டிற் பொன்னிகரைத்
திருத்தரும புரமடத்திற் சீர்இருபான் நாற்பட்டத்
தருத்திருமே னியையடியார் உருவகற்றுங் கருணையினல்
தரித்தருள்சண் முகஞான சம்பந்த தேசிகனும்
குருத்தலைவ! மாசந்நி தானத்தின் குரைகழலே
பரித்திடுமுன் பழவடியேம் பணிந்துரைக்கும் சிறுமொழிகள்!

தாழிசை

திருமடத்தின் உயர்தலைமை சேர்ந்தவொரு பத்தாண்டாய்
கருமமே கண்ணகுங் கருணைமிகப் பலதுறையில்
உரிமையினல் செய்தருளும் உயர்பணிகள் அளவினவோ ?

தேவாரப் பாடல்பெறுந் திருக்கோயில் சீர்திருத்தம்
தாவாத முயற்சியினல் தலங்கடொறும் தரிசித்தோர்
நாவாரப் புகழ்ந்துரைப்ப நடத்தினசொல் அளவினவோ ?

தருமபுரத் திருமடமே தமிழ்ப்புலவோர் தாயகமாம்
பெரியமடம் ஆகுமெனப் பெரியரெலாம் மிகப்புகழ
உரியவகை செய்திறங்கள் உரைத்திடலாம் அளவினவோ ?

நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்

சைவசம யம்பரப்பச் சாத்திரங்கள் பலபதிப்பித்
துய்வகையிவ் வுலகமெலாம் உணருநெறி காட்டினையே.

சித்தாந்த முத்திநெறி சேர்ந்துய்யச் சிவஞான
சித்தியார்க் குரைவிரிக்கச் செய்தருளைக் கூட்டினையே.

நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்

திருக்கோயில் தொறும்சைவத் திருமுறைகள் தீட்டினையால்.

இருக்கோடு தமிழ்மறைகள் எங்குமொலி நாட்டினையால்.

வேதசிவா கமப்பள்ளி மேன்மையுற வைத்தனையால்.

போதமுறத் தேவாரப் புதுப்பள்ளி யுய்த்தனையால்.

முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்

ஆலயங்கள் அமைத்தனை. மண்டபங்கள் வகுத்தனை.
மேலுங்கட்டளை வைத்தனை. எண்டிசைச்சீர் தொகுத்தனை
அமையும்பூசை யமர்ந்தனை. மடாலயத்தை வளர்த்தனை
சமயவிரிவுரை தந்தனை. நடாத்தும் ஆட்சித்திறத்தினை.

இருசீர் ஓரடி பதினாறு அம்போதரங்கம்

மருள் ஒழித்தனை சிவ மளித்தனை குருவின் பூசனை தவம் பெருக்கினை
அருள் அளித்தனை பவ மழித்தனை பெருகச் செய்தனை அவம் முருக்கினை
மாயை போக்கினை சீலந் தந்தனை கோலக் காட்சியை சைவ மேவினை
தேய மாக்கினை நூல் வழங்கினை சாலக் காட்டினை தெய்வ மாயினை.

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

மெய்கண்டான் மாநாடு விளங்கக் கூட்டிச்
சைவ சித்தாந்த மெய்வழி காட்டி
"ஞானசம் பந்த" நல்லிதழ் விளக்கால்
ஊன சம்பந்தம் ஓட அருளினை
இனையநின் அருள்பணி புனைதல்எம் அளவோ

இன்றுபோற் சைவமும் நன்றுயர் தமிழும்
என்றும் ஓங்க நின்றிரு வருளே
வேண்டும் பன்னாள் ஆண்டுயர் மடத்தின்
தலைமைசேர் வெள்ளி பொன்மணி நிலைவிழாக்
கொண்டாட் டம்வரக் கொண்டுன் மலரடி
வெல்க வாழ்க வென்றே
பல்லாண்டு பாடிப் பரவுதும் யாமே.

வித்துவான், இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா, P. O. L.
கிறித்தவக்கலாசாலைத் தமிழாசிரியர், சென்னை.

கட்டளைக் கலித்துறை

சீர்மலி தெய்வத் தருமையா தீனச் செழுமணியே!
பேர்மலி சண்முக தேசிக ஞானப் பெருமணியே!
நார்மலி யுள்ளத் துயர்சைவ சம்பந்த நன்மணியே!
ஏர்மலி ஞானச் சிவம்பெறு வொண்முக வெம்மணியே!

திருக்கயி லாய மரபுகொள் தெய்வத் திருமணியே!
திருக்குக ணீக்கு முயர்சைவ தெய்வக் குருமணியே!
விருப்புறு சம்பந்த தேசிகன் சேவடி வாழ்ந்திடவே
உருப்பெறு ஞானக் கொழுந்தென வோங்கு முயர்மணியே!

திருக்கயி லாய பரம்பரை வாழுந் திருத்தருமைப்
புரத்தமர் சண்முக தேசிக ஞானச் செழுந்தவமே!
இருபத்து நான்கா முயர்சந்நி தான விளங்கதிரே!
ஒருபற்று மில்லா வடியனை யாண்ட வொருமணியே!

ஒப்புயர் வில்லா வுயர்சைவக் கல்வியு மொண்டமிழில்
இப்புவி சொல்வித் வானெனும் பட்டமு மீந்தெனையும்
முப்பொழு தும்பணி செய்திடக் கொண்ட முழுமணியே!
அப்பொடு கொன்றை மிலைந்தவன் றொண்டர்க் கருமணியே!

காசென் னிடமிலா தோங்குறு சைவக் கலைகடமை
மாசின் றெனக்கே மகிழ்வுற வீந்தருள் மாமணியே!
தூசறு சண்முக தேசிக ஞானத் தூயவனே!
மாசந்நி தானப் பெருமைகொள் சைவ மாதவமே!

ஒப்பில் குருபூசை செய்துயர் செல்வ முவந்தளித்தும்
இப்புவி யோர்க்கரும் போனக மூட்டியு மியலிசையோர்க்
கொப்பில் வரிசைகள் நேர்ந்து முயர்வுறு மொருமணியே!
எப்பரி சறைகுவன் நின்கொடைத் தன்மை யிரும்புவிக்கே!

பொன்னித் துறைசேர் தருமைப்பதிவாழ் புனிதமனத்
துன்னற் கரிய வொளியுறு ஞானத் துயர்குருவே!
பொன்னு முணவும் புகலருந் தூசும் பொலிவுறவே
மன்னுந் தமிழமு தீந்தருள் ஞானப் புரவலனே!

தாவில் புகழ்சேர் தருமைப் பதியமர் சண்முகனே!
பூவி லமர்தே வனையவ னாகிய பூசுரனே!
ஓவி லருங்கலை நூல்பல தொக்குறு மொண்டமிழாங்
காவி னுழைந்தெனை நன்மல ராய்ந்திடக் காத்தருளே.

ஆசிரியப்பா

கனைகட லுடுத்த காசினி தன்னில்
புனைதரு புகழ்சால் பொன்னிநா டதனில்
அருமைத் தாய வரனுறை நகருள்
தருமைப் பதிவாழ் தவத்துயர் முனிவ!
சகதலந் தொழூஉஞ் சண்முக தேசிக!
இகபர மிரண்டு மிணக்குங் கல்வி
வளமபெறு மாறு வண்மை புரியு
முளங்கொள் ஞான வுயர்தனிச் செல்வ!
தமிழ்மொழி வளர்க்குந் தவக்குறு முனியே!
அமிழ்துறு நூல்பல வச்சிற் பதித்தோய்!
திங்கட் டுண்டந் திதழ்தரு சென்னி
மங்கை பாகன் மகிழ்ந்தமர் தலங்கள்
துலக்கமில் கோயில் மிகப்பல புரந்தே
மலக்குறும் பறுக்கும் மாண்புறு மணியே!
அவநெறி போக்கித் தவநெறி காட்டும்
சைவப் பயிர்க்கோர் சாற்றரு முகிலே!
சென்னையில் வாழ்வேன் சிறந்திடுந் தமிழில்
மன்னிய வித்துவான் பட்டமு முற்றேன்;
அந்தணர் குலத்தின னருந்தமிழ் நூல்கள்
சிந்தை மகிழச் சிறக்கக் கற்றுளேன்
சாம்ப சிவனெனச் சாற்றுறு பெயரேன்;
தேம்பக் கொள்வ தறிவென வுன்னிப்
பால்வாய்ப் பசுந்தமிழ் நூல்வாய்ப் பயின்றனன்;
அன்ன மாடை அளித்தல் சேர்த்தே,
என்னினுங் கல்வி யிருளை நீக்குமால்,
முன்னியே கல்வி முதற்கண் ணளிக்க
வுன்னித் தமிழில் உறுநூல் பலதாம்
மன்னிட வச்சில் பதித்தாங் களிக்கும்
நின்பெருங் கொடையினை நிகர்ப்பன எவைகொலோ?
சென்னைக் கிறித்தவப் பள்ளிச் சாலையில்

நன்னய மாக நாளுந் தமிழினை
போதிக் குந்தொழில் பூண்டநான் குறைந்த
ஊதிய முற்றவ னுதவி னுன்றன்
சீரிய கழலடி சிந்தையி னுன்னி
நேரிய தமிழ்நூ னின்கையாற் பெற்றுத்
தூயநல் லறிவொளி துலங்குதல் வேண்டித்
தாயை நாடுந் தகைபெருங் குழவிபோ
லுயர்தமிழ் ஓங்கி யொளிர வமைந்த
நயமார் நூல்கள் நானடைந் திடுமா
றருள்புரிந் தருள வஞ்சலிக் கின்றேன்;
தாயை நாடல் சேயின தியல்பே
சேய்தனக் கீதல் தாய்தன தருளே.
எண்முகத் தெங்கு மிசையுறத் துலங்குஞ்
சண்முக ஞானசம் பந்தத் தேவே!
சாமிநா தையன் தகைபெறு மாணவர்
பூமியில் நின்னருள் பெற்றுக் களித்தல்
நோக்கிய யானின் னோக்கினை நோக்கிப்
பாக்கியம் பெறவே பணிந்து நின்றனன்
ஆதலின் ஆரிய! அடியேன்
பேதைமை நீங்கப் புத்தக மருளே.

வாழி திருக்கயி லாய பரம்பரை; வாழிதினம்
சூழிசை தூக்குந் தரும புரத்தமர் சண்முகனே;
வாழிநின் னல்லருள்; வாழி யுயர்சைவம் வாழிதமிழ்;
வாழிநின் றொண்டர்கள்; வாழிநின் னாதீனம் வாழியரோ.

திரு. மீ. சுந்தரம் பிள்ளை, சைவப் பிரசாரகர், தருமபுரம்.

சண்முகதேசிகர் திருமறம்.

கற்றவர் போற்றக் கருணையிற் பொலியும்
விண்மணி நிகர்க்குஞ் சண்முக தேசிக
ஞான சம்பந்தர் நல்லருட் செங்கோல்
திகழ்தர நடாத்தும் திறப்பா டதனில்
விருப்புடைத் தம்மவ் விரிகட லுலகே
உற்பவித் தெழுந்த துலகெலாம் மாகியும்
உயிர்க்குட னாகியும் மோங்கி வேறாகியுந்
தாமரைக் கண்ணனுஞ் சதுமுகத் தொருவனும்
ஊழிகள் பற்பல வுழன்று தேடியும்
அடியும் முடியு மறியா தயர்வுறக்
கனகமால் வரையோன் காதலிற் பயந்த
மயிலியற் சாயல் மானை நேர்விழி
தொண்டையங் கனிவாய் கண்டை நேர்கிளவி

அமைநேர் தோளமை உமையவள் பரிந்து
கவுணியர்க் குதவுங் கனகமாக் கலச
இளமுலை தழுவிட எண்ணி லுயிர்க்கும்
போகமும் வீடும் பொற்புற வளிக்க
ஐந்தொழில் நடாத்து மண்ணல்வீற் றிருக்குங்
கற்பனை கடந்த கயிலைப் பரம்பரை
மெய்கண்ட தேவனார் மேதகு மரபே
வீற்றிருந் தருள்வது விரிஞ்சனும் வியப்ப
தராதலக் கணியாம் தருமையம் பதியில்
இருபதில் நான்கு எண்கொடு பொருந்திய
விளங்குறு விமல ஞான பீடத்தில்
உறவெனக் கொண்டது ஒப்பில் தவத்தையே
பொருளெனக் கொண்டது பூதியு மக்கமும்
முடியெனக் கொண்டது சடிலமா முடியே
படைக்கலங் கொண்டது பஞ்சாக் கரத்தையே
அருந்துணை கொண்டது ஆலவாய்ப் பரனையே
எனினும்
அரசியற் றுறைக்கு மணுகிய நேசமாய்
எவ்வெவர் தன்மையுந் தன்மனக் கொண்டே
அவ்வவர் குறையெலா மகற்றி யெஞ்ஞான்றும்
பணிபவர் கலியைப் பாற்றிடல் காட்டக்
கனலியை நிகர்க்குங் கல்லாடை புனைந்தே
தேயத் துறையுநற் செல்வர் சூழ்தர
அருள்தரு பீடத் தமர்ந்து பத்தாண்டில்
ஆயிர மாண்டுகள் ஆற்றுறுஞ் செயலைக்
காரியத் துறையிற் கண்ணிய கருத்தராம்
பற்பலர் தமைக்கொடு பயன்றரு முறையில்
வித்தக ரெவரும் வியப்புறு வண்ணம்
விண்போய் மாடமும் விமல னிருக்கையும்
பொற்புறச் செய்தும் பொருணிலை பெருக்கியும்
பூமகள் வாழ்வாம் நூல்நிலை கண்டும்
தமிழ்மறை யுடனுஞ் சங்கர னாகமம்
பயில்வுறப் பற்பல மாணவர்க் குதவியும்
நன்னெறி யிதுவென நாநிலங் கைக்கொள
ஞான சம்பந்த நற்றாள் விடுத்தும்
கல்விச் சாலைகள் கவின்பெற வமைத்தும்
மெய்ந்நூற் பொருட்சுவை மேதினி கைக்கொள
அறிஞர் பலர்கொடு அறல்தபத் தெருட்டியும்
முன்னாட் கிடந்த நன்னூல் பலவும்
அகிலத் துலவுமா றச்சிட் டருள
இயந்திரம் பலவும் இயைபுறக் கொண்டு
புரவலர் போற்றப் பொதுக்கடிந் தென்றும்

அறநெறி வழாது
மன்னுயிர் யாவுந் தன்னுயி ரெனக்கொளி
ஐவகை யச்சமு மகற்றுவ தன்றியும்
அரனார் திருவடிக் காட்செயும் வண்ணம்
அருணிலை காட்டி ஆற்றல்சால் தெவ்வராம்
ஆணவத் தலைவரை யைம்புலக் களிற்றை
மனமெனும் பரியை மாயவன் படையை
மெய்ப்பொருள் துணியாப் பொய்நெறிக் குழுவை
புயற்காற் றிடைப்படு பூளைப் பூவெனாஅப்
புறந்தரச் செய்த புகழுடைச் சேவகன்
தமிழ்மொழி தன்னொடு சைவமுந் தேயமுஞ்
செய்தவப் பயனாய்த் திகழ்தரு செங்கோல்
பற்பல வாண்டுகள் பரித்தினி திருந்தே
வாழ்கநின் கொற்றம் வாழ்கவென் றியம்பி
யருள்சா லாட்சியின் மாட்சியை
போற்றி நாடொறும் புகழுதும் பெரிதே.

திரு. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை, திருநெல்வேலிப்பேட்டை.
22—8—1943.

பொலனிறை கமலப் பொகுட்டுறை பிரமன் பூத்திடு முலகினுக் கணிசெய்
கலனெனத் திகழு முயரிய பரத கண்டமங் கிலத்துறு மொழிகள்
பலவினும் வடசொல் தமிழெனு மவையே படிப்பவ ரறிவினைத் தெளிக்கு
மிலகுமவ் வறிவிற் கழிவிலின் புதவு மியல்பது சிவநெறி யொன்றே. 1

உறப்படு மிலக்குக் குயிர்களை யதுவே யுய்த்துப கரிக்குமா தலினாற்
பிறப்புதொ றுறுநல் வினைகளைப் புரிந்தே பெற்றிடப் படுவதா மந்தச்
சிறப்பினைப் பெறுநாஞ் செய்வன தவிர்ந்து சிறுவிரல் சிவந்திட மலட்டாக்
கறப்பவர் புரையப் பொழுதினை யவமே கழிப்பது தகுவதோ வந்தோ! 2

பலகலை பரப்பி யறிவினை விளக்கிப் பரிவுட னொழுக்கினிற் செலுத்திச்
சலனமில் சைவ நெறியினிற் பயிற்றித் தவலறு சுகநுகர் வித்தே
உலகினைப் புரக்கு மொருகுரு மணிதா னுயர்கயி லையின்வழி வந்தார்
சலமிகு பொன்னிக் கரைவளர் தரும புரநகர் சார்ந்தருள் கின்றார். 3

மின்னிய காவி முடியுடை யருள்சேர் விழிகொடைக் கரமிரு செவியில்
மன்னிய குழைநீற் றொளிநுத லரன்கண் மணிதவ முரஞ்சிவ நேயந்
துன்னிய வுளஞ்சீ ரடிமலர் முதலாச் சொலப்படு மழகொடு பொருந்து
மன்னவர்க் கிவண்சண் முககுரு பரனென் றருட்பெயர் மருவிடு மன்றே. 4

திருமடத் தலைமை வகித்தநாள் முதலத் தேசிக சிகாமணி யுஞற்றி
வருமருஞ் செயல்கள் வழிவழி நினைந்து மகிழ்ந்திடற் குரியவென் பதுதான்
பெருமலை யிலக்கா மினியுநா மவமே பெருக்கிநாள் கழிக்கிலோ மவர்தந்
திருவடி பிடித்திங் கொழுகிடப் புகுந்தோஞ் சிவனரு ளாலவர் வாழி. 5

பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை.
சுபாநு. ஆவணி உ௯-ம் நாள்.

சைவ உலகமும், தமிழுலகமும் செய்த தனிப்பெருந் தவப்பயனாக விளங்குபவர்கள், திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீன குருமூர்த்திகளாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். இவர்கள், இவ்வாதீனத்தலைவர்களாகிப் பத்தாண்டுகளேயாயினும் பல்லாண்டுகள் ஆட்சிசெலுத்தினோரும் அடையாத பெரும்புகழை அடைந்துவிட்டார்கள். இவர்கள் ஆட்சிக்குட்பட்ட ஆலயங்களின் நிர்வாகம், பிற ஆலய நிர்வாகிகளுக்கு வழிகாட்டியாக இருக்கின்றதென்பதை யாவரும் ஒப்புவர். விழாக்காலங்களில், சமயநூல் வல்ல தமிழ்ப்புலவரைக் கொண்டு நிகழ்விக்கும் சமயச் சொற்பொழிவுகள் மக்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்துணை செய்வன. சமய வளர்ச்சியிற் கண்ணுங் கருத்தும் உடையவர்களாய், இவர்கள் செய்துவரும் "நூல் வெளியீடு" முதலிய செயல்கள், இவர்களது சிறந்த குறிக்கோளை நன்கு வெளிப்படுத்துகின்றன. சைவ ஆதீனங்களின் தலை சிறந்த குறிக்கோளாகிய சமயவளர்ச்சி, தமிழ்வளர்ச்சி ஆகியவற்றில் இவர்களது திருவுள்ளம் நன்கு பதிந்திருப்பது மட்டுமன்றி, ஆட்சிக்குட்பட்ட பல இடங்களிலும் தொடர்புகொண்ட மக்களிடம் பேரன்பு காட்டுதலிலும், இவர்களது திருவுள்ளம் முன்னணியில் நிற்பதை யறிந்து யான் மகிழுவதுண்டு. இத்தகைய பெரியாரைப் பற்றிச் சுருங்கக் கூறவேண்டுமாயின், "மக்கள் முன்னேற்றம் கருதி இறைவனால் அனுப்பப் பெற்ற ஒருசெல்வர்" என்பதேசாலும். இவர்கள் ஆட்சியேற்ற பத்தாவதாண்டுக் கொண்டாட்டம், சைவத் தமிழுலகக் கொண்டாட்டமாகும். இவர்களைப் பல்லாண்டுகள் இவ்வுலகத் திருக்கச் செய்து, நம் தந்தை தாயர்களாகிய சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்க்கின்ற இவர்கள் செயலால், இவர்களைப் பாராட்டும் நம்மை வளமுடையவர்களாக்கி அருள்புரியும் வண்ணம் சொக்கநாதப் பெருமானையும் குருஞானசம்பந்த வள்ளலாரையும் வேண்டுகின்றேன். நலம்பெருகுக.

காவியங் கயற்க ணம்மை காதல்செய் சொக்க நாதன்
ஆவணிமூல நாளி லடியனேற் கருள லாகத்
தாவில்சீர்த் தருமை மேய சண்முக சாமி யெற்குக்
கோவியல் வித்து வான்பேர் கொடுத்தல் முன் தவத்தான் மன்னே.

திரு. செ. முத்துரத்தின முதலியார், தமிழாசிரியர், திருவாரூர்.
2—9—1943

விண்முக நாத நாதன் விழைந்துவாழ் பதிகள் சில்ல
மண்முக மென்ன வோங்கி வனப்புறப் பணிக ளாற்றித்
தண்முக மன்னு தாயாந் தமிழொடு சைவம் பேணுஞ்
சண்முக நாத ஞான சம்பந்தச் சதுரன் வாழி.

நாவலர் புகழும் நாவலந்தீவுள் பூவிரிபடப்பைக் காவிரிசுற்றும் மயிலாடுதுறையின் மாநகர் மருங்கு பொன்னகராமென மண்ணவர் மறுகுற அறமுதல் நான்கின் முதற்பெயர் படைத்த தருமபுரந்தனுள் ஞானபோனகம் யாவரும்

எய்திடப் பரமாசாரிய பீடமாய் விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய மூர்த்தியின் பத்தாவது ஆண்டு விழாவணியைக் கண்டவர் நவநிதி இவரொடு அருள்நிதி கூட்டிப்பத்தெனப் பகர்வாராக. அன்ன சொன்னம் வழங்கும் மாமழையைப் பருகிக்களிப்பவர், நந்தெய்வப்புலமை அவ்வைப் பிராட்டியார் "சோழவளநாடு சோறுடைத்து" என்னும் ஓரடியால் பாராட்டி இரார் எனவும் இதனைக் கண்ணுறின், பலபல வடிகளாலும் நூல்களாலும் புகழ்ந்துரைப்பராமென்பர். இன்னோரன்ன அணிவிழாக்கள் மதிகள் தோறும் ஆண்டுகள் தோறும் ஈண்டுக ஈண்டுக ஈண்டுக என எல்லாம் வல்ல இறைவன் ஸ்ரீகமலவசந்தத்தியாகராசப் பெருமான் திருவருளை வந்தித்து வாழ்த்துவோமாக.

வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார்,

தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்தரப்பள்ளி, காஞ்சிபுரம்.

4—9—1943.

மலர்மகன் வகுத்த நெடுநில வளாகத்
தலர்கதிர் பரப்பி யாரிரு டுமிக்குஞ்
செஞ்ஞா யிற்றிற் செம்புலம் பரப்பி
யஞ்ஞா னப்பே ராரிரு டுரந்த
மருவார் பொழில்சூழ் திருவா ரூரிற்
குருஞான சம்பந்த வொருபே ராளன்
அருமையும் பெருமையு மான்றமைந் தடைந்தோர்
இருமையும் பெறாஉந் தருமையம் பதியில்
நிலம்புடை பெயர்ந்து கலங்குவ தாயினும்
நின்று நிலைஇய ரென்றுமென் றிறாஉம்
ஒன்றரு ளருணெறி யோங்கர சிருக்கையின்
அறுநான் காகிய மூறைமையிற் பரமன்
அருட்குடை நிழற்கீழ்த் தெருட்பட நிகழ்ந்த
கல்லாற் சிறந்த நல்லாடை யுடுத்து
வெண்பொடி பூசிக் கண்டிகை யணிந்தங்
கொண்சடை முடித்து வண்மூறை யேந்தித்
தத்துவ வணைமிசைத் தங்கி மெய்த்தவர்
போற்றிசெய் திருப்ப வீற்றிருந் தருளி
யிஞ்ஞா லத்தோ ரெவரும் புகழ
மெய்ஞ்ஞா னப்பேர் விரிசுடர் வாள்கொடு
செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
மும்மலக் கொடும்பகை முழுவது முருக்கி
யறிவுப் பெரும்பொரு ளாறலைத் துக்கொளும்
விறலி னைம்புல வேடரை யடக்கி
இறையோன் சிவனடி நிறைவின் வந்த

முடியா வின்ப மடிவின் றூர்த்தி
யடியார்ப் புரந்திங் கருட்கோ லோச்சி
விண்முகத் தேவரும் வியப்ப விளங்குஞ்
சண்முகக் குரவன் றன்னருட் பெருமை
யெண்ணுதற் கெனினு மெளிதோ! அரிதே!
ஆங்கு,
நுதல்விழி நாட்டத் திறையோன் றளிகளின்
இதமுறு சிறப்பும் பூசையு மெழுமே!
அவநெறிச் செல்வோ ரறிவுமேம் படீஇய
சிவநெறிச் சிறப்புஞ் செந்தமிழ் மாண்புந்
தெருணூற் புலவர் தெரித்தலு மவற்றோ
டருணூல் வழங்கலு மாமே! பொருள்பொதி
ஞானசம் பந்த நல்லிதழ் திங்கடொறு
மாநில மறிய வருமே! மேனிலை
மெய்கண் டான்மா நாடு முதலா
வுய்கின் றோர்தமக் குறுதுணை யாகிய
புலவர் பேரவை நிலைதொறு நிலைதொறுங்
காண்டகு சிறப்பி னீண்டுதல் பெறுமே!
உலகுள நூல்கட் குறையு ளாகிய
கலைநிறை கோயிலுங் கவின்பொழி யும்மே!
கருமுன் னுவகை காத்தருள் புரியுந்
திருமுன் னென்றுஞ் செப்பருந் தொகையினர்
கற்பர் கேட்பர் கலைபல தெரிவார்!
நிற்பர் மேனிலை நெறிமுறை யறிவார்!
அறவ ரந்தண ரருங்கலை வாணர்
பிறரு மெல்லாம் பேணினர் தொழுது
காசும் பொன்னுங் கலனுங் கொள்வார்!
தூசு மணியுந் துகிலும் பெறுவார்!
இன்னோ ரன்ன பன்னருஞ் சிறப்பினற்
கென்னே ரனையோ ரியற்றுத லென்னே!
யிருளற விளங்கி யிருநில மெல்லாம்
அருளர சாளு மறிவோன் வாழ்க!
கல்வி மங்கையுஞ் செல்வ மங்கையுஞ்
சொல்லெதிர் நோக்குந் துறவோன் வாழ்க!
ஞானச் செல்வியை நயந்துடன் பிரியா
மோனச் செல்வத்து முனிவரன் வாழ்க!
புன்னெறி யகற்றும் புண்ணியன் வாழ்க!
நன்னெறி வளர்க்கும் நல்லோன் வாழ்க!
பதிற்றியாண் டகவையி னெய்திய பல்புகழ்
நிதிக்கோ னுடென நிலவுதல் பெறாஉஞ்
சேர நாட்டுத் திருவள ரமைச்சன்
நேர நாட்டிய நிலையோன் வாழ்க!

சைவமும் தமிழுந் தழைத்தினி தோங்கத்
தெய்வமா முகிலாஞ் சீர்மையன் வாழ்க!
வரமார் தருமைப் பரமா சாரியன்
வாழ்க! வாழ்க! விம் மாநிலத்
தூழி யூழியென் றுரைப்பதை யலதே!

வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்,

தலைமைத் தமிழாசிரியர், பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சி.

5—9—1943.

சுவாமிகளின் முதல் பத்தாண்டு நிறைவுவிழா இனிது நிறைவேறவும், இது போல் வெள்ளி, பொன், மணி முதலிய விழாக்கள் நிறைவேறவும் இறைவன் திருவருள் பாலிக்க அவன் இணையடிகளை என்றும் இறைஞ்சுகிறேன்.

சுவாமிகள் நீடூழி வாழ்ந்து தமிழ்த்தொண்டும் சைவத்தொண்டும் புரியுமாறு அருள்செய்வாராக என்று பிரார்த்திக்கிறேன்.

திரு. R பஞ்சனதம் பிள்ளை,

தமிழ்ப்பண்டிதர், பிஷப் உயர்நிலைப்பள்ளி, திருச்சி.

4—9—1943

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தலைவர், குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடத்தில் அமர்ந்து அருட்செங்கோல் நடத்திவரும் பத்தாவது ஆண்டு நிறைவுவிழா, தக்கார் தலைமையில் இனிது நிறைவேறுக. சைவசமய வளர்ச்சியையும், தமிழ் வளர்ச்சியையும் இரு கண்ணாகக்கொண்டு அவைகளுக்குரிய காரியங்களை மகாசந்நிதானம் நேரில் கண்காணித்து அருள்செய்துவருவது போற்றற்குரியது. சிறப்பாகப் பல வெளியீடுகளை வெளியிடுவித்துப் பலரும் பயிலும்வண்ணம் அருள்செய்துவருவது மிகவும் பாராட்டற்குரியது.

ஸ்ரீ தாயான செல்வரின் தண்ணருளால் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் பல ஆண்டுகள் சுகமேவாழ்ந்து சைவமும் தமிழும் தழைத்தோங்க அருள்புரிந்தருள வேண்டுகின்றேன்.

கயிலாய பரம்பரைசேர் தருமபுர ஆதீனக் கவினுர் கர்த்தர்
பெயராரும் சண்முகதே சிகஞான சம்பந்தப் பெருமா னுர்தம்
உயர்ஞான பீடத்தின் பத்தாண்டு வைபவமும் ஒளிபெற் றோங்க
நயமார்ந்த தேசிகராம் நற்குருவும் பல்லாண்டு நலமே வாழ்க.

வித்துவான், திரு. மு. குஞ்சிதபாத தேசிகர்,

தமிழாசிரியர், போர்டு உயர்தரக் கலாசாலை, நன்னிலம்.

3—9—1943

காவை வளர்க்குங் காவிரி யாறு
ஆவியாய் ஓடி அழகுறச் செய்யுஞ்
சோழநன் னாட்டின் திலகமா யிலங்கும்
அறப்புர மதனி லருட்பீடத் திருந்து
அறப்பணி யாகிய அறிவுநூ லீந்தும்
ஆலயப் பணியை அணிபெற முடித்தும்
சதுருடன் விளங்குஞ் சண்முக மணியே!
பத்தித் தொண்டர்கள் பரவுத லுடனே
பத்தாண்டு விழாவைப் பன்மொழி யறிஞரும்
பொன்மொழி பொழிந்துப் போற்றுத லன்றி
பொன்விழா இயற்றவும் பொன்னருள் செய்ய
பொன்மேனி இறைவனைப் போற்றுதும் யாமே!

திரு. கொ. பா. திருஞானசம்பந்த முதலியார், ஓதுவார், வலிவலம்.

உரைச்செய்யுள்

திணை: பாடாண் **துறை: வாழ்த்தியல்**

உலகுஅவாம் பேரறிவாளரும், பழுதகலும் பெருங்கீர்த்தி போர்வை பூண்டவரும், அஞ்செழுத்தும் திருநீறுங் கண்டிகையும் பொருளாகக்கொண்டு அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும் மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்து மேலோரும், புனிதாத்துவித சைவசித்தாந்த நிகமாகம ஞானபீடா குருமூர்த்தமாய் விளங்காநின்ற துறவறப் பெருநெறிப் பெரியார் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானமவர்களின் பொன்னடிக்கமலத்திற்கு மனம்மொழி மெய்களால் அன்பு அடக்கம் வாய்மை பொறை முதலிய விரயபக்தியுடன் தாழ்வென்னுந் தன்மையோடு வணங்கி யேத்திக் கூறும் வாழ்த்துரை.

ஆளுடையநாயகி உள்நெகிழ் கருணையின் ஒழுக்கம்போன்ற காவிரியாறு பரந்தோடிக் கொங்கும் தெங்கும் எங்கும் நிறைந்து கள்ளார்வண்டு பண்செய்யுந் திருத்தருமையாதீனத்து மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞானபாநுவாய் விளங்காநின்று ஒளிவீசும் முதற்குரவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களால் நிறுவப்பட்ட திருமடாலயத்தின்கண் எழுந்தருளாநின்று, குனித்தபுருவமும் கொவ்வைச்செவ்வாயில்குமிண்சிரிப்பும் பனித்தசடையும்கொண்டு பவளம்போல்மேனியில் பால்வெண்ணீறணிந்து திருவருட்பொலிவழகு தாங்கும் குருமகாசந்நிதானத்தின் சைவம் தமிழ்மறை, மெய்கண்ட சித்தாந்த சாத்திரங்கள், வேதசிவாகமங்கள் பரிபாலனமும். வடமொழி, தென்மொழிப் புலவர்க்கேயன்றி பன்மொழிப் புலவர்கட்கும் கற்பகத்தருவாய் நின்று கருணைவெள்ளம் பொழியுஞ்

செம்மையும், பிறவாயாக்கைப் பெரியோன் ஆலயங்களிற் புலத்துறைமுற்றிய நலத் துறையாளர்களைக்கொண்டு சமயச்சொற்பொழிவுகள் நடாத்தும் திறனும், திங்கள் தோறும் ஊனசம்பந்தம் ஒழிக்கும் ஞானசம்பந்தச் சஞ்சிகையின் வாயிலாக மன் பதைகட்குப் போதித்து நல்லறிவுச்சுடர்கொளுத்தி ஞான ஆட்சி நடாத்தும் வெற்றி யையும் நட்டார் பகைவர் நொதுமலர் என்னும் முத்திறத்தாரும் ஒத்துக்கோடற் பாலதேயாம். எனவே தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே தேற்றுவிக்கும் மாறி லாத மாக்கருணை வெள்ளமென விளங்காநின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானமவர் கள் பல்லாண்டு பல்லாண்டு நல்வாழ்வுபெற்று இனிதோங்கி ஞானஆட்சி, செலுத் தும்வண்ணம் மறைமுதற்பொருளான கறைமிடற்றண்ணல் அன்னந்திளைக்கும் அணிதில்லையம்பலத்தில் மலர்சிலம்படியார்க்க குனிப்பருளுங் கூத்தப்பெருமான் திருவருளையும், ஆலவாய் அவிர்சடை எம் அண்ணல் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் தன் திருவடித்தாமரையையும் மனம்மொழி மெய்களால் இறைஞ்சி வாழ்த்துதும்.

திரு. கிருஷ்ணமூர்த்தி சர்மா, எம். ஏ.,

தலைவர், அரசர் கல்லூரி, திருவையாறு.

4—9—43.

स्वस्ति श्रीमन्महामाहेश्वरसिद्धान्तप्रतिष्ठापनाचार्यश्रीकैलासपरंपरान्वित धर्मपुरीय संस्थानस्थ चतुर्विंशतितमगुरुपाद श्रीलश्री षण्मुखदेशिक ज्ञानसंबन्ध परमाचार्याणां द्विपञ्चवार्षिक पट्टाभिषेक महोत्सवमभिनन्द्य, तञ्जापुरजनपदान्तर्गत पञ्चनदक्षेत्रस्थ शरभमहीपति संस्कृत महाविद्यालयाध्यक्ष-कोच्चिनरपति गुरुवंशसंभूत कृष्णमूर्तिशर्मप्रणीता दशश्लोकी ।

श्रीकैलासमठीयसद्गुरुगणे विख्यातभूरिश्रवाः
शैवाद्यागमपाठन प्रवचनैः संप्राप्तविद्योज्ज्वलः ।
लोकानां च शिवेतरं परिहरंस्तन्वन्सतामादरं
सोऽयं षण्मुखदेशिकेन्द्र यतिराड् जीयाच्चिरं नो मुदे ॥ १ ॥

अस्मिन्नद्य निजप्रभावमहिते धर्मासनेऽधिष्ठिते
वर्षाणां दशकं व्यतीतमपि तन्नावैक्षि शिष्यैः किल ।
यद्विद्या विभवादिभिः सुबहुभिर्हृद्यैर्गुणैः पूरितः
स्वान्तैः साधुजनैरहोऽस्य महिमा वाचां न वै गोचरः ॥ २ ॥

येनायं निरणायि शैवसमयाचार्योक्तिशुद्धाशयः
प्राखण्डि प्रतिवादिदर्शनगणः प्रारम्भि नूत्ना कृतिः ।
शिष्येभ्यः समदायि वित्तमुभयं प्रालम्भि धर्मासनं
सोऽयं षण्मुखदेशिको विजयतामाचन्द्रमातारकम् ॥ ३ ॥

अपि घोरतरे कलौ युगे सुतरां संशयिते च सज्जने ।

अवनावनाय कोविदां प्रादुरास गुहनामकधाम ॥ ४ ॥

तत्र तत्र स सदागमवेदपाठनाय कृतविस्तृतशालः ।

तासु चापि सततान्नविधानात्पोषिताःसुबहवो हि माणवाः ॥ ५ ॥

सप्तविंशति शिवालयोत्सवं कारयत्यतिधनेशशोभया ।

प्रत्यहं प्रणिधिभिश्च लीलया नात्र चित्रमनुरंजितशंभोः ॥ ६ ॥

आत्मीयसैद्धान्तिकपुस्तकादिप्रचारमालोच्य स मुद्रणालयम् ।

संस्थाप्य तत्रापि च "ज्ञान" पूर्विकां"सम्बन्ध" संशब्दित पत्रिकां दधौ ॥ ७ ॥

एतानि चान्यानि च भूरिकर्मणः कार्याणि वीर्याणि च सन्ति तानि हि ।

मादृशां न तदनुवर्णन धैर्यं नाथवा तदनुरूपकौशलम् ॥ ८ ॥

अथापि महतां शश्वच्चरित्रमनुवर्णयेत् ।

विशेषतस्त्वीदृशेऽह्नीत्येवं कृत्वा ब्रवीम्यहम् ॥ ९ ॥

अनया मम पद्यमालया शुभकण्ठार्पितया गुरुःकिल ।

प्रियतासुमुखः शुभेक्षणो भवतु प्रीतियुतोऽधुना मयि ॥ १० ॥

शिवं पश्यत सायाह्ने चिदम्बरपुरे स्थितम् ।

नानटीति चिदाकाशे गृहीताद्वैतडिण्डिमः ॥ ११ ॥

ஸ்ரீமத். மீனாட்சிசுந்தரசாஸ்திரிகள்,
ஆசிரியர், அரசியலார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மாயூரம்.
6—9—43.

यो वाणी तुलितस्सतां सुपुरुषः श्रीशैवभक्ते रतः ।
यत्कीर्तिर्धवलीचकार सहसा ब्रह्माण्डभाण्डोदरम् ॥

हौणद्राविडसंस्कृतादि सुकलायंप्राप्य सार्थं गताः ।
सोऽयंसद्गुणरत्नराशिजलधिः जेजीयतो सर्वदा ॥

श्रीसप्तविंशतिशिवालयपोषकेन्द्रः ।
श्रीशैवपूजन धुरन्धर संयमीन्द्रः ॥

श्रीवैद्यनाथपदपंकज षट्पदेन्द्रः ।
श्रीधर्मवर्धनरतोऽस्तु षण्मुखेन्द्रः ॥

अधिगत्य गुरोरयं दयालोः अखिलाम्नायनिगूढमर्थजातं
विषयेषु विरक्तिमान् मुमुक्षुः परिवव्राज सुधीरतीव बाल्ये ॥

जयतु जयतु धर्म्यं भारतं सस्यरम्यम् ।
जयतु जयतु देशो धर्मपुर्याभिधानः ॥

जयतु जयतु शैवग्रन्थकोशः स्वकीयः
जयतु जयतु तेषां पालकोऽयं मुनीन्द्रः ॥

जयतु जयतु जार्जः सार्वभौमोऽपि षष्ठः ।
जयतु जयतु योगी षण्मुखेन्द्राभिधानः ॥

जयतु जयतु तस्य प्रार्थना कालकाले ।
जयतु जयतु सा श्रीभारती पुण्यभूमिः ॥

मृत्युंजयः स भगवान् मृकण्डु तनयं यथा ।
भवतामपि दीर्घायुर्दद्यात् भर्गः प्रसन्नधीः ॥

शिरोमणी विरुदेन श्रीमीनाक्षीसुन्दरार्येण ।
पद्यपुष्पोपहारः श्रीषण्मुखाय समर्प्यते ॥

சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார்,
சிவாகம ஆசிரியர், தருமபுர ஆதீனம்.
6—9—49.

धर्माभिधानमतुलं पुरमुच्चशृङ्गं पुण्यैःकवेरसलिलैःपरिधौतपापम् ।
ज्ञानाम्बिकेत्यभिधया जगतांजनन्या साकं जयत्यखिललोकगुरुश्च यत्र ॥

तस्मिन्विराजति पुरे भुवनप्रसिद्धे शैवो मठः परिवृतस्सुमनस्समूहैः ।
दृष्ट्वा तमद्य मुनयो विबुधास्सुरा वा स्वर्गाच्च्युतं सुरपतेर्निलयं वदन्ति ॥

तस्मिन्गुरुर्निखिलशैवधुरंधराणां साक्षाद्गुरोस्सदृशकान्तिरमेयकीर्तिः ।
श्रीषण्मुखेन्द्र इति तां प्रथितामभिख्यां प्राप्तो जयत्यतितरां गुहतुल्यरूपः ॥

विद्वत्समूहपरिपालितसच्चरित्रो वापीतटाकशिवधामसुमन्दिराणाम् ।
निर्माणकौशलविधौ निहितात्मशक्त्या नीत्वा समा दश विराजति भाग्यतो नः ॥

जयतु जयतु धर्मे ज्ञानसंबन्धनामा निखिलबुधजनानां पालकस्सन्निधिश्च ।
सकलभुवनजानां कामदं शैवशास्त्रं हरिविधिसुरवन्द्यः पार्वतीवल्लभश्च ॥

சிரோமணி, பிர்மஸ்ரீ K. ராஜகோபால சாஸ்திரிகள்,
தமிழ்த்துறை ஆராய்ச்சிக்குதவி, அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
6—9—43.

का त्वं योषे, अहमलसता,ऽऽयासि कस्मात्पुराद्वो,
धर्माख्यात्, के तव सविधगाः, चौर्यनिद्रामदाद्याः, ।
क्वेदानीं तैः सह तव गतिः, यत्र मे स्यान्निवासः,
तत्र स्थानं न किमलभथाः, मा स्म भूयो वदेत्थम, ॥ १ ॥

को वा हेतु,र्विलसति सदा षण्मुखो देशिकेन्द्रः
तस्मात्त्रासः, स किमवनिपो, ज्ञानपीठाधिरूढः, ।
किं तादृक्भोः प्रभवतिमठे, संशयो मास्तु तत्र,
क्रूरः किं वा, नहि नहि घृणी तादृशो जीवलोके, ॥ २ ॥

कस्त्वं स्वामिन्नहमपि सतां पूजितः शैवसारः,
कालं चैतं कथमगमयो, ग्रन्थमात्राधिरूडः, ।
वार्ता ते मे कथय सदयं, षण्मुखं देशिकेन्द्रं
श्रुत्वैमीमं पुरवरमहं शैवशास्त्रार्थपालम्, ॥ ३ ॥

देवाराद्या अभिमतसखा आसते कुत्र, तांस्त्वं
नापश्यः किं, दश च शरदः प्रस्थितानां ततो नः, ।
वक्ष्ये तर्हि श्रृणु मम वचस्ते तु गुप्ताः पुरैव,
कालो मेऽयं, त्वमरमधुना धाव, गच्छामि शीघ्रम् ॥ ४ ॥

एवं लोके विनुतमहिमा वेदशैवागमाना-
मुद्धर्तासौ कमलसरसां जीर्णदेवालयानाम् ।
निर्माता च प्रथितधिषणो रोगहीनश्चिरायु-
र्हृष्टः पुष्टोऽनुभवतु सदा सौख्यमन्यैर्दुरापम् ॥ ५ ॥

பிரும்மஸ்ரீ. நாராயண சாஸ்திரிகள், தருமபுர ஆதீனம்.
5—9—43.

दोषः कृतौ मे बहवो भवेयु-
स्तथापि गृह्णीयुरिमा मभिज्ञाः ।
तां केतकीं कण्टकितामपीमां
न किं मृगाक्ष्यो शिरसा वहन्ति ॥ १ ॥

श्रीकैलासात्क्रमविभवतः प्राप्तमेते महान्तं
भारं कालोचिततमपरिष्कारसंशोभमानम् ।
कृत्वा बुध्या पुरहरपदासक्तितो निर्वहन्तो
राजन्ते श्रीगिरिशभवनाधीशितारस्त्विदानीम् ॥ २ ॥

दग्धाखिलाघतूलं कैवल्याभिधमहीरुहो मूलम् ।
नौमिमदप्रतिकूलं भिन्नमतस्थांबुवाहतूलम् ॥ ३ ॥

सुमसायकनिभमूर्तिं द्यावाभूम्योःप्रशस्ततरकीर्तिम् ।
साधितविद्यापूर्तिं सन्निधिमेत्योत्सृजाम्यहं जूर्तिम् ॥ ४ ॥

देवा मनुजा नागामुदा त्रिलोक्यांप्रपूरितास्सन्ति ।
तेषामाशीर्वचनादमेयमायुर्भवेदरोगतया ॥ ५ ॥

धर्मपुरन्तदिदानीं धर्माधिपतिं भवन्तमासाद्य ।
हृष्यति नृत्यति विलसति लब्धो राजा ममानुरूप इति ॥ ६ ॥

एतावन्तं कालं यद्यपि पान्ति स्म धर्मकार्याणि ।
तैस्सह षण्मुखदेशिकवर्यस्तावन्न तुल्यतामेति ॥ ७ ॥

इत्थं प्रमुदितमनसा श्रीनारायणशास्त्रिणा रचिता ।
धर्मपुराधीनमठे विद्वन्मणिबिरुदभूषेण ॥ ८ ॥

வித்வான் திரு. மு. நடராஜ தேசிகர்,
ஆசிரியர் தேவார பாடசாலை, திருவிடைமருதூர்.

தமிழ் இசைப்பா

இராகமாலிகை] [தாளம்: ஆதி

1 தருமையமர் சண்முக குருஆட்சியில் தருமங்கள் பலவற்றுள்
தகுதியிலாவென்றன் சிற்றறிவிற்சிலவற்றைச் சாற்றுவேன்.

2 திருவமர்தருமையில் சிவன்அருள் ஆகமம் ஆதிசைவச் சிறுவர்
உரிமைபெற வோதிஉய்ய உறைவிடம் உண்டியும் உதவினேன்.

3 நால்வர்வாய் மலர்ந்த நற்றமிழ் மறையை நல்லசைவச் சிறூர்
சீலமுடன் ஓதிச்சிறப்படை பள்ளியும் திகழவேநன்கமைத்தோன்.

4 மெய்கண்ட மகாநாடு கூட்டியே மெய்கண்டநூல்கள் மேதினியோர்
உய்வைப்பெற விலையின்றியே அச்சிட்டு உதவும் பெருவள்ளல்.

5 ஆதீனமகாநாட்டில் அரும்புலவரைக் கொண்டு சொற்பொழி வாற்றுவித்து
ஊதியமும் உண்டிஉறையுளும் உவந்து உதவியே அருள்செய்வோன்.

6 திருக்கடையூர் திருத்துருத்தி திருப்பனந்தாள் புள்ளிருக்குவேளூர்
திருக்கழுமல முதல் பெரிய தலங்களில் திருப்பணி பலசெய்வோன்.

7 திருப்பணிசெய்த திருக்கோயில் திகழ்பிரசார மண்டபத்தில்
விருப்பொடு விழாவில் வித்தையில் வல்லார் வாய்ச்சொல் ஆற்றுவிப்போன்.

8 ஆலயமுற்றும் அருட்பதிகமும் வரலாறும் எழுதி சீலமுடன்
ஓதுவார்களும் வைத்து திறம்பட நடத்துவோன்.

9 திருநாரையூரில் சந்தானுசாரியர் புதிய திருக்கோயில் பெருநாளெடுத்து
பேருலகத்தவர் பேசும்பெரும்புகழோன்.

10 ஆலயமடாலய முதலிய நிலங்களில் அருந்தெங்குங் கமுகும்
மாவாழை பலாவும் மற்றுமுள் ளனவும்வைத்து வளர்த்தவன்.

11 மடத்தில் தெரிசனம் மாண்புடன் செய்யவருபவர் யாவர்க்கும்
இடத்தில் குறைவிலாதின் னுண வளித்து இனிய உரைபகர்வோன்.

12 திறம்பட அரசுசெய் சண்முகதேசிக ஞானசம்பந்த குரு
பரம்பரன் அருளால் பாரில் பல்லாண்டு வாழ்கவாழ்கவே.

திரு. காளஹஸ்திநாதஐயர், சிதம்பரம்.
3—9—1943

வானிமிர்ந்த மாமரத்தில் மன்னுங் குயில்கூவும்
தேனிறைந்த சோலை திகழ்தருமை—மாநகர்வாழ்
சண்முகநற் றேசிகனைச் சைவர்க் கருள்குருவை
அண்டியவர்க் கின்பமே யாம். 1

சைவப் பயிருந் தமிழ்ப்பொழிலும் ஓங்கவென்றும்
தெய்வத் தருமைத் திருநகரில்—உய்வழியைச்
சார்ந்தார்க்குக் காட்டியருள் சண்முகனை வாழ்த்துவரால்
மாந்தரெலாம் போற்றி மகிழ்ந்து. 2

ஞானசம் பந்தனென நற்றமிழில் மாதவிதழ்
தேனமுதம் போலத் திகழ்ந்துலவும்—மோனஞ்சேர்
மாமுனிவர் வாழ்தருமை வந்தகுரு சண்முகன்றன்
தோமிலரு ளாட்சியிதிற் சொல். 3

முன்னோர் அறியா முறையிலருட் செங்கோல்கொள்
தன்னேர் இலாத்தருமைச் சண்முகன்காண்—பொன்னேபோல்
இச்சகத்தார் போற்றும் இனியபல நூலளிப்பான்
அச்சகத்தைத் தன்பால் அமைத்து. 4

வாழி சிவனடியார் வாழி திருத்தருமை
வாழி திருஞான வள்ளலருள்—வாழியவே
சண்முகநற் றேசிகனைச் சார்புலவர் இவ்வுலகும்
விண்ணுலகு மேத்த வியந்து.

வித்துவான், திரு. கோ. பாலசுந்தர நாயகர்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி, வந்தவாசி.

திணை: பாடாண். **துறை: இயன்மொழி வாழ்த்து.**

வண்புகழ் நிலவும் வளம்பழுத் தின்சுவைத்
தண்டமிழ்த் தேன்சொரி தருமையம் பதியில்
சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க
உய்திறம் உயிர்கள் உற்றறிந் துய்யக்
கயிலாய பரம்பரை கருதும் ஆதீனத்து
வழிவழி சிறக்க வயங்கிய குரவருள்
இருபத்து நான்காம் இயல்பெரும் பட்டத்(து)
உயர்ந்த ஒழுக்கினர் உற்றடைந் தவர்க்குச்
சைவசித் தாந்தம் கைவர இனிமையும்
எளிமையும் மேவர என்றும் பகருவோர்
தமிழ்நூற் கடலைத் தனிமடுத் துண்டலின்
மலய முனியெனும் மாண்புடை உருவர்;
சைவசித் தாந்தம் சிறுவரும் உணர
அத்துறை போகிய அறிஞரால் அப்பொருள்
அடைந்து கேட்கென அருஞ்சபை கூட்டினர்;
அன்றியும்,
ஞானசம் பந்தமாம் ஊனமில் திங்கள்
வெளியீட் டாலும் விளக்குவர் அறிவை;
தமிழும் தமிழறி புலவரும் வீறுபெற்(று)
ஓங்கிநல் லாக்கம் பாங்கினில் அடையப்
பல்வகை முறைகள் ஒல்லையிற் புரிந்தும்
அரும்பொருள் வழங்கியும் அமைந்திலர் உள்ளம்;
பின்னும்,
எம்முறை புரிதுமென் றெண்ணும் கோளினர்;
பன்னூல் வெளியிடும் பரிசினில் வழாதோர்;
எண்டோ ளீசன் மண்டிய தளிகள்
செவ்வனம் இயங்கச் செய்ம்முறை புரிந்தனர்;
ஆதீன அமைதியில் ஓதுகண் ணுடையர்;
இத்திறம் ஏவரே இயற்றினர் முன்னாள்;
அவர்யா ரென்னின் அறைகுவம் கேண்மதி,
சாற்றும் அருட்டிரு சண்முக தேசிக
பரமா சாரியர்; பண்புமேம் படுநர்;

துறவுடை யுளத்தர்; அருளுடை மனத்தர்;
பட்டம் பெற்றுப் பத்தாண் டகவையில்
பகரொணு நலம்பல பான்மையின் இயற்றினர்;
பேசுகம் அவர்புகழ்; பேசுகம் அவர்குணன்;
இறைஞ்சுகம் அவரடி; ஏத்துகம் அவர்குணன்;
மற்(று) அவர்,
உமையொரு பாகத் தமைந்தவ னருளால்
வாழிய பன்னுள், வாழிய தருமை
ஆதீ னம்புகழ் அமைந்தே
தண்டமிழ் ஓங்குக பண்டையிற் சிறந்தே.

திரு. P. G. சுப்பிரமணிய அய்யர், B. A. தஞ்சை.
4—9—1943.

பிறருக்கு உபகாரார்த்தமாய், தக்க உன்னத பதவியில் தங்களை இதுவரை வைத்து அருளிய கடவுள் இனிமேலும் நீண்டகாலம் திடகாத்திரத்துடன் ஜீவந்தராய் வைப்பார் என்பது திண்ணம். தங்களுக்குத் தீர்க்காயுளைக் கொடுக்கும்படி ஈசனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. அ. கணபதி ஐயா,

தலைமை ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாசாலை, தேவகோட்டை.

1. திருவமருந் தருமபுரத் திருத்தலத்தே வீற்றிருந்து சிவஞா னத்தை
அருமை பெறு சிவசமய நூல்வழங்கு மதனுலும் அவையோர்க் கூட்டிப்
பெருமை யுற விரிவுரைசெய் முறையாலும் உபதேசப் பெருக்கி னுலும்
உருவிளங்க இந்நாளில் உலகினர்க்குப் பலவழியா லுதவும் வள்ளல்.

2. மும்மலங்க ளவைநீக்கி முதற்பொருளைத் தலைக்கூட்டும் முதன்மை யாய
செம்மைபெறு வெண்ணீறும் கண்டிகையு மைந்தெழுத்துந் திகழமேற்கொண்
டெம்மையிரு வினைநீக்கி யீடேற்றக் குருபீடத் திலங்குகின்ற
தம்மைநிக ரில்லாச்சீர்ச் சண்முகமெய்ஞ் ஞானபரன் சரணம் போற்றி.

3. சன்னிதியிற் சொலவிரும்பும் விண்ணப்பம் எமையுடையீர் தகுதி முற்றும்
துன்னியசீர்ப் பெருநூல்கள் தோற்றுவித்துப் பலர்க்குதவும் தூயஈகை
நன்னிலையி லேன்பெறவும் நனிவிழைந்தேன் அஃதான்றி நலங்களெல்லாம்
மன்னியசீர்ச் சந்நிதியை நேர்கண்டு தொழும்விழைவு மனத்துட் கொண்டேன்.

4. காண்பதெல்லாம் சிவவேடம் கருதுவது மவன்றாளே கருத்தினோடு
பூண்பதுவுஞ் சிவவணியே புனைவதுவும் பூசைதனிற் புனிதன்மேனி
ஊண்புசிக்கு மிடமெல்லா மூலவுமிடம் நிற்குமிட மொருசற் றேனும்
வீண்பொழுது போக்காத மெய்வாழ்வைக் கண்டுகள விருப்பமிக்கேன்.

5. மூசுவது சிவனடியார் முடிப்பதவன் றாட்குமலர் முழுவுடம்பும்
பூசுவது திருநீறு புகல்வதுவு மைந்தெழுத்தின் பொருளேயாகும்
ஏசுவது பிறப்பிறப்பை இரவுபகல் சிவப்பணியே யியற்று மிக்க
மாசுவராப் பெரும்பதிக்கண் மாதவத்தீர் நும்மடிகள் வணங்கல் வேண்டும்.

6. ஐந்துவய தாமளவும் மூங்கையா யவனியின்மே லமர்ந்திருந்து
செந்தில்வடி வேலவன்றன் திருவருளா லவன்புகழைச் செவ்வையாகக்
கந்தர்கலி வெண்பாவாற் கனிந்துசொலி யுலகுபுகழ் கரைகண் டிட்ட
எந்தையாங் குமரகுரு பரன்றனையு மீடேற்ற எண்ணங் கொண்டே.

7. அருண்மொழிசொல் திருமொழியா மைந்துபே ரறிவென்னும் அருட்பா
வொன்றின்
பொருண்மொழியென் றதுவழியாப் புகுந்தாண்ட புண்ணியனார் புலனைமேவும்
மருண்மாற்றி யுலகுய்த்த மாசிலா மணிவள்ளல் மன்னி வாழ்ந்த
தெருண்ஞான மாபீடச் சிவவணியைக் கண்டுவக்கச் சிந்தை வேட்டேன்.

8 வானமிழ்தங் கைக்கவரு மண்ணுலகோர் கன்மமல மாயை நீங்க
ஞானமிழ்தந் தனைக்காழி நம்பற்கீந் திறையிடப்பால் நண்ணுமெந்தாய்
தேனமிழ்த வல்லிமகிழ் யாழ்மூரி நாதனுறை சிறப்பு மிக்க
கானமிழ்தம் யாழ்மீறும் கவுணியன்பாப் பெறும்பதியைக் காண வேட்டேன்.

9. அறவரசைச் சிவஞான அறிவரசைப் பரம்பொருளை அண்மிநிற்கும்
திறவரசைத் திசைபுகழும் சிவவரசைக் குருவரசைத் தீவினைக்கோர்
மறவரசைச் சண்முகமெய்ஞ் ஞானபர மாச்சார்ய வள்ளலாமெய்த்
துறவரசைத் தருமபுரத் துறையரசை யருளரசைத் தொழவேட்டேனே.

10. காண்விருப்ப மிகுதியினாற் கழறுவதொன் றறியாதேன் கரைந்தபுன்சொல்
சேண்கடந்த பெரியீர்நும் செவிக்கின்னா வாயிடினும் சிறியோர் செய்யும்
வீண்பிடிவா தத்தினுக்கும் வெறுப்புறா தாற்றுமொரு மேலோர் போல
மாண்புடையீர் பொறுத்தருள மலரடியைத் தலைக்கொண்டு வாழ்த்துவேனே.

Sri. M. BALASUBRAHMANYA MUDALIAR, B.A., B.L.,

Advocate, High Court, Madras and Honorary Secretary of the Saiva Siddhantha Mahasamajam, Madras. 26—8—1943.

It gives me great pleasure to record my appreciation of the services of His Holiness Sri-la-Sri Shanmukha Desika Parmacharya Swamigal, the head of the Dharmapuram Adheenam, in the cause of Saivism and Tamil. By a unique combination of cirumstances, the Dharmapuram Adheenam is singularly fortunate in being entrusted with the management of several important Siva Temples in the Tamil country. Indeed no single person or institution is the trustee of so many temples in South India as this Adheenam. *It is remarkable that all these temples are kept in a very good condition as places of public worship.*

There are several bigger temples with larger incomes under the care and management of others which are an eyesore to the visitor, provoke his indignation, and invite nothing but curses upon the head of those in charge. In striking contrast to such temples stand the neat and tidy institutions under the management of this Adheenam.

Anyone, who has eyes to see, can easily find out the reason why there is the remarkable difference. It is the *personal interest which His Holiness takes in every little detail* connected with every institution that is responsible. His Holiness is a very bold reformer in more ways than one. The matadhipathis of S. India could not muster courage to dispense with the palanquin, the traditional vehicle of locomotion, which is all too slow for modern requirements. Even the Pope at Rome is said to be "a voluntary prisoner of the Vatican", because, by his own choice, he never moves out of the holy limits of Vatican city. But the Sage of Dharmapuram has achieved, what the heads of other Mutts, what even the "Holy Father" at Rome have not chosen to do. The palanquin has been reserved for high ceremonial occasions like the grand procession on Guru Pooja Day. *The motor car used for surprise visits, for daily supervision, for personal inspection of works in progress,* and for all purposes for which a prudential administrator would think of it.

This very simple reform has enabled His Holiness to travel long distances at a moment's notice, to see things for himself to check whether his orders are carried out in all detail, and to satisfy himself that the money ear-marked for a particular purpose has been well and truly spent for that purpose. When His Holiness first began to use the motor car, there was a mild flutter in the dove-cotes of the disciple world, and a wild fear that the reform was a step in the wrong direction. But very quickly stories of recalcitrant tenants being brought to their knees, habitual swindlers being caught red-handed, traitors being exposed, and hundreds of miscreants being rounded up reached the ears of the wondering disciples, who forthwith loudly applauded the reform and realised that the palanquin, like the motor car, was after all a means of locomotion, and not really of the very essence of spiritual headship.

The *boldness* which lay at the bottom of his simple reform, *has characterised the administration of His Holiness* in various other channels. In several mutts, there is a small body of persons, the "King-makers". whose advice, the heads of those Mutts dare not ignore. There are no such King-makers at Dharmapuram. In several South Indian religious institutions, there is evidence of gross and wanton neglect, colossal waste, skilful dishonesty, unwillingness to listen to advice, indifference to scholars and respectable well wishers, and a hundred other things. From what I have been able to see and hear, I can, without hesitation, assert that the Dharmapuram Adheenam, under the excellent guidance of Holiness, is singularly free from several of these draw-backs. *Temple libraries, festival lectures, substantial help to all deserving causes, the Mutt series of publications, the Agama Patasala and the Dhevaram School,* these and a hundred other noteworthy features, for which His Holiness is

responsible, have been acclaimed with one voice, throughout the length and breadth of this province, as remarkable achievements, which no matadhipathi has accomplished in so short a time.

His Holiness has plenty of youthful vigour, a keen sense of idealism, robust common-sense, a reformer's courage, an instinctive desire to carry public opinion with him, and several other characteristics that go to make up leadership. In the first decennium of administration, he has achieved so many good things of which anyone can justly feel proud. May the next decennium by the grace of the Almighty, see more and more of the good things of the world, accomplished by His Holiness, and may each succeeding decennium out-beat the record of its predecessor.

கவிராஜபண்டித, திரு. நா. கனகராஜையர், B.O.L.
தமிழ்ப்பேராசிரியர், அரசர்கல்லூரி, புதுக்கோட்டை.
11—2—1945.

தரும புரமாஞ் சிவநகரிற் சைவ நெறியின் றருமமெலாம்
கரும ஞான பக்திநெறி காட்டு மறையா கமவழியே
தரும தெய்வ மனமகிழத் தகவே நிகழுந் தவம்பூண்ட
பெமை யுடைய தவமணியே பெரிது முவந்தேன் அருள்நினைந்தே. 1

சிவத்தி னருளுஞ் சிவநெறியின் திருவு முலகிற் பரவுகெனத்
தவத்தி னெறியைப் பிடித்தாருள் தருமை மடத்துத் தலைவரைப்போல்
அவத்தை யைந்து மவன்பொருட்டே யமைத்த பெரியா ரில்லையென
நவத்தின் விளங்கு புகழ்பெருக நடாத்து மறத்தின் முறைதெளிந்தேன். 2

இருக்கு முதல மறைநான்கும் இருபத் தெட்டா மாகமமும்
உருக்கு முணர்ச்சித் தமிழ்மறையும் உணர்த்தும் பொருளை யுணராதார்
கருக்குள் விழுந்து கலங்குவது கருதி யருளாற் கடைத்தேறப்
பெருக்கும் நெறிகள் அமைப்பதனைப் பிடித்த பெருமை யெவரறியார். 3

பொய்யில் புலமைச் சிவனடியார் பொருளை விளக்கி யருணூல்கள்
கையில் நெல்லிக் கனியெனவே காண்பா ரெவர்க்கும் விளங்குமுறை
மெய்யி னுரைகள் முறைவகுத்தும் வியப்பப் பலவாம் பதிப்பிடுதல்
செய்யும் உதவி யறிந்தவெவர் சிறப்பை நயவார் வியவாரே. 4

ஒருநா ளுளத்தோ டுயிரொன்ற ஒருமைப் பரமன் பணிபூண்டார்
வருநா ளிலையே பிறப்பகலும் வாரா வாழ்வு பெறுவரெனப்
பெருநா வலவர் உரைக்குமுறை பேணி யுணர்ந்து பலவாண்டாய்க்
கருவாழ் வகல வவன்பணியே கருதுந் துறவை யெவர்புகழார். 5

சைவ நெறியி னருணூல்கள் தகவே பயிலுங் கருத்துடையேன்
சைவ மடங்கள் புரிதருமம் தழைக்க நாவின் பணிபூண்பேன்
சைவ மிழைத்த தருமைமடத் தலைவீர் பத்தாண் டாட்சிமலர்
சைவ மணமுந் தமிழ்மணமும் தமியே னுணர வந்ததுவே. 6

செம்மை யுருவச் சிவபெருமான் சிறப்ப வமர்ந்த திருவாரூர்
இம்மை யும்மை வினைப்பயத்தால் எய்தப் பெறுவேன் முனிமொழியும்
மும்மை முதலி யருண்மொழியும் முறையே சிறிது விளக்குமுரை
அம்மை நலங்கள் அடைகருத்தால் அமைத்து விளம்ப விடம்பெற்றேன். 7

அருமை யறியுங் குணம்படைத்தார் அமலன் பணியி லுளம்படைத்தார்
தருமை மடத்தின் தலைவரெனத் தமிழ நாட்டார் புகல்வதெலாம்
பெருமை யுடைய பிரான்கோயில் பிறங்கு முறையா லுணர்ந்துள்ளேன்
தருமம் வளரச் சிவனருளே தழைக்க வினியும் வாழ்த்துவனே. 8

Sri. S. SUBBARAYA MUDALIAR, Shiyali.

தருமபுரம் ஆதீன கர்த்தர் அவர்கள் பத்துவருஷ காலமாகத் தன் ஆதிக்கத்திற்குள் ஏற்பட்ட சொத்துக்களை எல்லாராலும் போற்றத்தக்க வகையில் பரிபாலித்து வருவதும், எல்லோருக்கும் எடுத்துக்காட்டும் நிலையிலிருப்பதும், பொறுப்புணர்ந்த ஒவ்வொருவரும் சந்தோஷப் படக்கூடியது. அதைப் பகிரங்கமாய்க் கொண்டாட நினைப்பது எவ்விதத்திலும் பொருத்தமே.

திருமதி A. பாலாம்பாள், பொன்மலை.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த மெய்கண்டான் மகாநாட்டிற்குத் தருமபுரம் சென்று மகாசந்நிதானத்தின் பொற்பாத கமலங்களைச் சிரமேற்கொண்டு ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானையும் தெரிசிக்க நேர்ந்தது. ஸ்ரீ மகா சந்நிதானத்தின் அறிவுடைமை, ஆற்றல், தயை, கருணை, சாந்தம், ஈகை, அன்பு இவைகள் அளவிடற்பாலன. அன்னார்கள் அநேக ஆண்டுகள் ஜீவித்திருக்க ஸ்ரீ மீனாக்ஷி சொக்கலிங்கத்தைச் சிந்திப்போம்.

சித்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக்கண் சேர்த்து, இச்செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக வைத்து, ஆண்டு, மலங்கழுவி, ஞானவாரி மடுத்து, வரும்பிறப்பை அறுத்து, முத்தாந்தப் பாத நிழற்கீழ் வைத்திடும் தருமை ஆதீன ஞான தேசிகன் கழலடி போற்றுதும்.

திரு. R. சின்னையா பிள்ளை, மிராசுதார், காருகுடி.

நமது ஆதீனங்களில் இதுவரையில் இருந்த பரமாச்சாரியர்களில் தங்கள் கடமைகளையும், நிர்வாகத்தையும், இவ்வளவுபரிசுத்தமாகவும், ஒழுங்காகவும்நடத்திப் பொது ஜனங்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்களில்லை. தாங்கள் பொது ஜனங்களின் உள்ளத்தை அறிந்து இக்கொண்டாட்டத்தின் மூலம் தங்கள் நன்றியைச் செலுத்த நல்ல சந்தர்ப்பத்தைக் காட்டியதற்குப் பொதுமக்கள் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தவிர, பரசமயத்தாரும் தங்களுடன் சேர்ந்து கொண்டாட்டத்தை நடத்த முன்வந்தது போற்றத்தக்கதாகும்.

Sri. K. TIRUVENKADA MUDALIAR, Tanjore.

9—6—1943.

It is no exaggeration when I say that Sri-la-Sri Shanmuga Desika Gnana-Sambanda Sannithanam Avl., of Dharmapuram richly deserves all that is going to be done in his honour. I with the special Committee all sucess.

திரு. V. V. C. R. முருகேச முதலியார், ஈரோடு.

22—6—43

ஸ்ரீ சுவாமிகள் போன்ற பெரியார்களின்பட்டம் ஏற்புக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வது மிகவும் புண்ணியமும், சரதாரணமாய்க் கிடைக்கக்கூடாத ஒரு அரிய சந்தர்ப்பமும் ஆகும். அப்பேர்ப்பட்ட பாக்கியத்தை எனக்கு அளித்ததுபற்றி நான் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தலைவர்களுக்கும் கமிட்டியாருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழனி ஸ்ரீ ஷண்முக நாதர் கிருபையால் விழா மிகவும் வெற்றிகரமாய் முடியவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

Resolution of the NATIONAL SECONDARY SCHOOL ASSOCIATION, Mayavaram. 30—8—1943.

Resolved that the Committee do congratulate His Holiness the Pandarasannathi Avl., Dharmapuram Adhinam on the Completion of his first decennium as the Head of the Adhinam, and do pray for the long coutinuance of the administration in the interests of Art, Education and Religion.

திரு. P. L. சுந்தரேசன், புதுக்கோட்டை.

சைவமும் தமிழும் தழைக்கும் தங்களின் மேலான ஆட்சி நீண்டகாலம் நடக்க இறைவன் அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

Sri. S. PADMANABHA PILLAI, Manacaud, Trivandrum.

தமிழுக்கும் திருமுறைகளுக்குமாகச் செய்துவரும் திருப்பணிகள் மேலும் பலசெய்துவர, அடியேன் குருபாதமாகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

Sri A. C. SHANMUKHA NAINAR, B.A., B.L., Advocate, Tenkasi.

தமிழ் மொழிக்கும், சிவநெறிக்கும் வளர்ப்புப்பண்ணை மடங்களில் முக்கியமான தொன்றாகிய தரும ஆதீனமென்ற தருமபுர ஆதீனம் இச்சிறந்த தொண்டை வெற்றியுடன் ஆற்றிவருவதை யார்தான் போற்றாமலிருக்கமுடியும். மகாசந்நிதானத்தின் அருந்தலைமையில் இப்பணிகள்பெருகிச் சைவம் ஓங்கவும், தமிழ் செழிக்கவும் ஆதீனம் நீடூழி வாழ்க.

Sri K. S. JAYARAMA AIYER, Advocate. Mylapore.

தருமபுர ஆதீனத்தில் என்னுடைய 20 வருஷ பழக்கத்தில் தருமபுர ஆதீனத்தின் பெருமையை எல்லாத்துறைகளிலும் பெருமைப்படுத்தி, சைவசமயத்தை மேலோங்கும்படி, தொண்டுசெய்து கொண்டுவருவது மிகவும் மெச்சத்தக்கது. மகாசந்நிதானத்துக்குச் சகலவித தேக ஆரோக்கியமும், ஆயுசும், உற்சாகமும் அளிக்குப்படி எல்லாம் வல்ல இறைவனைச் சதாபிரார்த்திக்கிறேன்.

Hon'ble Justice, A. S. P. AYYAR, M. A., I. C. S., F. R. S. L., Bar-at-Law.
(Then at Madura.)

Your mutt is doing some very useful and necessary work for our dear Tamil Thai. I wish more of our religious heads followed this fine example.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

3—9—1943

தருமையாதீன ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானமவர்கள் ஆதீனத்தின் ஆட்சி ஏற்று நிகழ்த்தியருளும் பத்தாம் ஆண்டின் நிறைவு அறிந்து சைவத்தமிழுலகு கடலன்ன மகிழ்ச்சியிற் களிதுளும்பி நிற்கின்றது. மகாசந்நிதானம் அவர்களால் ஆதீனம் இக்காலத்தில் தக்க புகழ் எய்திவருகின்றது. திருக்கோயில்களின் செவ்வையான விழா நிகழ்ச்சிகளும், அக்காலங்களில் கல்வி கேள்வி மிக்காரை வருவித்து நிகழ்த்தும் விரிவுரை நிகழ்ச்சிகளும், தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் பொருட்டு அவ்வப்போதும் நிகழ்வித்து வருகின்ற சைவத் தமிழ் வகுப்புக்களும், மெய்கண்ட சிவஞானபோத மாநாடுகள் போன்ற பல மாநாடுகளும், 'ஞானசம்பந்தம்' இதழ் வெளியீடும், பிறநூல்கள் வெளியீடுகளும் போல்வன திருத் தருமையாதீனத்தின் பெருந்தொண்டினை உலகமறியச் செய்கின்றன. மகாசந்நிதானமவர்கள் நீடூழி வாழ்ந்து விளங்கிச் சைவத்தமிழுலகை உய்வித்தருளும் வண்ணம் எல்லாம் வல்ல சிவத்தின் திருவருளை வேண்டி வழுத்துகின்றோம்.

சென்னைத் தமிழ்ச் சங்கம்

5—9—1943

அற ஆட்சிதொடங்கிப் பத்தாண்டு நிறைந்தமையைக் கொண்டாடும் திருவிழாவைக்கண்டு தமிழர் அனைவரும் இன்புறுவர். சென்னைத் தமிழ்ச்சங்கம் சிறப்பாக இங்குப் பாராட்டுகிறது. எங்கள் துணைத்தலைவர் திவான்பகதூர் திரு. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் விழாவில் ஒருநாள் தலைமைபூண்கிறார்: ஆதலின், எங்களுக்கும் பெரும்பங்கு கிடைத்துள்ளதுகண்டு இறுமாக்கின்றோம். திரு ஆஸ்டின் துரைமகனர் திறந்துவைத்த கோயில் மாநாட்டில் தாங்கள், பிரதிநிதிகள்மூலம் அருளிப்பாடிட்ட சித்தாந்த வகுப்புகள் பெரும்புலவர்களது சிறந்த சொற்பொழி

வாகத் தொடங்குநாளைத் தமிழுலகம் எதிர்பார்க்கிறது. அது தொடங்கியதும் தங்கள் அறப்பெரும் புகழ் சென்னையிலே நாள்தோறும் முழங்கி அனைவரையும் ஒன்றுபடுத்திப் பேரின்பத்தில் ஆழ்த்தும். இன்றே அது தொடங்குவதாக.

சென்னைத் தமிழ் இசைச் சங்கம்

31—8—1943.

தருமபுர ஆதீனத் தலைவர் அவர்கள் பட்டமேற்றுப் பத்தாண்டுகள் பூர்த்தி ஆவது கேட்டு, மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். சைவ சமயமும், தமிழ் மொழியும் மக்களுக்குப் பயன் தரும் முறைகளில் சுவாமி அவர்கள் கைக்கொள்ளும் முயற்சிகள் மிகவும் பாராட்டற்குரியவை. கால தேச வர்த்தமானங்களுக்குத் தகுந்த விதமாக ஆதீன சம்பிரதாயங்களைத் திறம்பட நடத்தி வருகிறார்கள். ஞானசம்பந்தம் என்ற மாதப் பத்திரிகை, அச்சகம், நூல்நிலையம் இவைகள் சுவாமி அவர்களால் அளிக்கப் பெற்ற அபிவிருத்திச் சின்னங்களாகும். இசைக்கலையில் இவர்களுக்கிருக்கும், ஆர்வமும் குறிப்பிடத்தக்கது. சென்னைத்தமிழ் இசைச் சங்கத்திற்கு நன்கொடையாக, பெருந்தொகைதந்து ஆதரித்திருப்பதற்குச் சங்கம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. மகாசந்நிதானம் நீடூழி அருட்செங்கோல் செலுத்திச் சமயம் மொழி, கலை அனைத்தையும் ஆதரித்துவரவேணுமாய், கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

8—9—1943.

"ஆறிருவ ரோரொருவ ரவர்தாஞ் செய்த துய்யதமிழ் இருபத்துநான்கிற் பாட்டின் தொகை நாலாயிரமு மடியோங்கள் வாழ்வே" என்ற சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுருவின் திருமொழியின்படியையும் உலகுக் கன்பன்கண்ட அந்தணர் மந்திரத்தின் அக்ஷரங்களின் எண்ணிக்கையின்படியையும் அநுசரித்தோ இவ்வாதீனத்தின் நாலாரும் பட்டத்தை வகித்து அனைவரையும் நல்லாற்றுப்படுத்தியோ இன்று தமிழ்கூறு நல்லுலகில் அன்பு வெள்ளப்பெருக்கை மிகுத்துக்கொண்டு மிளிர்வது! என் புகழ்கின்றது ஏழை? வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகியென்பான் இருபத்துநாலாயிரம் கொண்ட இராமாயணம் பாடினன். எத்தனையோ அவ்வாயிரத்தை அவனியோர் அடையுமாறன்றோ அமலன் அப்பட்டத்து அமர்த்தியது! திருமாலின் அவதாரக் கணக்கான ஈரைந்தாண்டு முற்றுப்பெற்று, அது நற்றமிழர் நல்லுள்ளத்தைக் கவர்ந்தது போன்று வேதநூற் பிராயத்தாண்டு நிறைவுமுற்றுங்காறும் "பதிகம் பதிகமதாக" என்ற கவிச்சிரேட்டனின் அமுதவாக்குப்படி, ஒவ்வொரு பத்தாண்டும் நன்குநிறைவேற்றி அருளுவன் அவன் என்பது எம்மனோர் துணிபு. திருககாணும் பெற்றியரே திருத்தமிழர். "தோடுடைய செவியனை" ஆதியிறகண்டவரே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். 'சேமமுட னெடுமாலைக் காணப்புக்குத் திருக்கண்டே னெனவுரைத்த தேவே' எனப் பேயாழ்வாரை விளிக்கின்றார் தூப்புற்பிள்ளை இவ்வாழ்வாரையே "ஞானத் தமிழ்த் தலைவர்" என்பர் திருவரங்கத்தமுதனார். திருககண்ட செல்வனின திருத்தமிழைப்

புரந்துவரும் தீர்த்தனே! மகாசந்நிதானம் பல்லாண்டு பல்லாண்டு அரோக திடகாத்திரராய், அவனியில் பேரும்,புகழும், சீர்த்தியும நிலைபெறறுவீற்றிருக்கும்படி எல்லாம் வல்ல இறைவனது திருவருள் மேன்மேலும் சுரக்குமாறு அன்னவனை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றனம்.

கங்கையிற் புனிதமாய காவிரிபாயப்பெற்று அன்பருள்ளங் கவர்கள்வனின் திருத்தலங்கள் நிறையப்பெற்றுள்ள சோழநாட்டின்கண் திகழும் தருமபுர ஆதீனம் மேன்மேலும் செழித்தோங்குக! வாழ்க அறவோர்! வாழ்க பண்ணமரும் பாவளருந் தமிழ்! வாழ்க உலகெலாம்!

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
31—8—1943.

சிவபெருமான் திருமுகம் கொண்டருளும் திருத்தவம் பெற்றதும், சைவம் வளர்க்கும் தனிப்பேரருள் கொண்ட சைவ ஆதீனங்களை யெல்லாம் கொண்ட பெருஞ்சிறப்பினதும் ஆகிய இத்தென்னாட்டில், தருமபுரம் எனும் திருப்பெயர்பெற்ற மாபெரும் ஆதீனத்தலைவர்களாக விளங்கும் மகாசந்நிதானத்தின் ஆட்சியின் பல வகையான சிறப்புக்களை இத்தமிழகம் சென்ற பத்து ஆண்டுகளாக நன்கு உணர்ந்து மகிழ்ந்து வருகின்றது. அம்மகிழ்ச்சியே, இக்காலை உருப்பெற்று, மகா சந்நிதானத்தின் பத்தாவது ஆண்டுவிழாக் கொண்டாட்டமாக வெளிப்படுகிறது.

மகாசந்நிதானத்தின் ஆட்சிச் சிறப்புக்களை அம்மடத்தின் அணுக்கத் தொண்டரும் முற்றும் அறிந்துரைக்க வல்லரல்லர் எனின், தமிழகத்து ஆங்காங்குள்ளார் தாம் தாம் அறிந்தவாற்றான் உரைப்பது, எங்ஙனம் எல்லாம் உணர்ந்துரைப்பதாகும்! இங்ஙனம் பல்லாரும் கூறும் பல்வகைச் சிறப்புக்களும் ஒருசேர நோக்கின், ஒருவாறு பெரும்பாலன சிறப்புக்களை உணர்ந்து கோடலாகும். இந்நோக்கம் கொண்டு வெளிவரும் கொண்டாட்ட மலர், தமிழகத்தில் மிக்க பயன் தருவதொரு நறுமலராகும். அத்தகைய மலரில், ஒருபுற இதழாகவேனும், இச்சிற்றுரை இணையும் எனும் பேரவாவுடன் இஃது எழுதப்படுகின்றது.

மகா சந்நிதானம், சிவத்தொண்டு செய்து, சிவனடியார்களைப் போற்றுதற்கென்றே, இவ்வுலகில் தோன்றியவர்கள் என்பது தோன்ற, இளம் பருவத்தேயே துறவுற்றவர். உள்ளும் புறமும் ஒன்று எனக் கூறும் உயர்ந்த ஒழுக்கமுடையவர். மதிநுட்பம் நூலோடு கூடிய பேரறிவினர். கல்வியின் பயனாகிய சாத்திரக் கலைகளைக் கரைகண்டவர். அவற்றின் பயனாகிய இறைவன் திருவடிப்பூசையில் இடையறுதொழுகும் தவப்பேறு உடையவர். சொக்கலிங்கப் பெருமானின் துணைமலரடி எக்காலும் அகலாது எழில்தரு திருவுளத்தர். சாத்திரக்கலைகளின் நுண்மாண் கருத்துக்களை, யாவரும உணர, எளிதின் உரைக்கும் இரும்பேராற்றலுடையவர்.

இவ்வாதீனத்தினைச் சார்ந்த சிவாலயங்கள் பலவற்றினும் மகாசந்நிதானத்தின் திருப்புகழ் பரந்து எங்கும் செறிந்து கொண்டன எனும்பரிசு, ஆலயங்களெல்லாம் வெள்ளொளி நிறைந்தன; ‘ஆலயங்களும் இறைவன் திருவுருவே’ எனும் உண்மை, ஞானிகளேயன்றி, எளியரும் உணரற் கேதுவாயின. ஆலயங்களெல்லாம்

தூய்மைபெற்றுப் புதுக்கப் பெற்றன. சிறப்பொடு பூசனைகள் எந்நாளும் இடை யறாது நிகழ்வ ஆயின. திருவிழாக்கள் செவ்விய முறையிற்றிகழ்வன ஆயின. ஆல யங்களில் நூனிலையங்கள் நிறுவப்பெற்று அடியார்கட்குப் பெரும்பயன் விளைப்பன ஆயின. மகாசந்நிதானம் ஆலயங்களிலெல்லாம் சிறப்பு நாட்களில் பேரறிஞர்கள் இயற்றும் சமய விரிவுரைகள் தொடர்பாக நிகழ்த்திவரவும், திருவிழாக்களில் பல இடங்களில் பல விரிவுரைகள் நிகழ்த்தவும் திட்டம் செய்தருளியவர். ஆலயங்களில் தமிழ்மறைவல்ல இசையாளர்களைக் கொண்டு முறையாகத் தமிழ் மறை ஓதிவரும் நெறிகளை அமைத்தருளியவர். ஞானசம்பந்தப் பதிப்பகம் என்பதொன்றை நிலைநாட்டி, ஞானசம்பந்தத் திங்கள் இதழ் ஒன்றை வெளியிட்டு வருபவர் (ஆங்கி லத்திலும் வெளிவந்து வேறு நாடுகளிலும் சிவமணம் வீசுவது இது). வடமொழி தமிழ் மொழிகளிலுள்ள அரிய கலைநூல்களை இனிது அச்சியற்றி, யாவர்க்கும் அளித்து வருகின்றனர். திருமடத்தின்கண் ஆகம பாடசாலையொன்றும் திருமுறை ஓதும் செந்தமிழ்ப் பாடசாலையொன்றும் நிறுவிப் பலமாணவர்கட்கு உணவுமுதலிய வசதிகள் செய்தருளி இனிது நடாத்தி வருகின்றனர்.

மெய்கண்டான் மாநாடு கூட்டிச் சிவஞானபோதச் செம்பொருளைப் பல பெரும் புலவர்களைக் கொண்டு விரிவுரைகள் செய்வித்து வெளியிட்டருளிய பெருஞ் சிறப்பினை அறியாதார் இலர். இங்ஙனமாக மகாசந்நிதானம் சமய உணர்ச்சி களைப் பரப்பிவரும் பேரருட்செயல்களை யெல்லாம் முற்றவிரிப்பது யாவர்க்கும் இய லாததாகும். தமிழ்த் தாய்க்கும் சைவசமயத்திற்கும் செவிலித்தாயாக விளங்கும் மகாசந்நிதானத்தின் தண்ணிய பேரருள் ஆட்சியில் தமிழ்மக்கள் உள்ளம் தண்மை யுற்றுப் பெருமகிழ்ச்சி எய்துவது போன்றே, அம்மகாசந்நிதானத்தின் ஆட்சியில் இனிது எழுந்த இலட்சக்கணக்காய தெங்கின் நறுநிழலில் தமிழ்த் திருநாடு தண் மையுற்றுப் பெருவளம் கொண்டு மிளிர்கின்றது. மகாசந்நிதானத்தின் பேரருள் ஆட்சி, ஊழி ஊழி ஓங்கிச் சிறப்புறுவதாக என இறைவன் திருவடியை எண்ணி வழுத்தி வணங்குகின்றோம்.

குடந்தைத் தமிழ்ச் சங்கம்

25—8—1943.

1. பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாகச் சைவநன்மக்களும் செய்த நற்றவத்தின் உருவாய்த் தோன்றி, திருத்தருமை மடாலயத்தின் தலைமைதாங்கி, திருவருட் செங்கோலோச்சிவரும் குருமகாசந்நிதானம், கடந்த பத்து ஆண்டுகளில் தமது ஆட்சிக்குட்பட்ட பல சிவாலயங்கள் ஜீரணமாயிருந்தவைகளைத் திருப்பணி யாற்றி, குடமுழுக்குச் செய்வித்திருப்பதை இச்சங்கம் பாராட்டுகின்றது.

2. ஷை திருமடாலயத்தில், நிர்வாக விஷயங்களில் மிகமிகத் திறமையோடு சீர்திருத்தங்களைச்செய்து, திருமடாலயத்திலே என்றும் எங்கும் எவரும் நடத்தாத முறையில் மிகச்சிறப்பாக, தக்கவசதிகளோடு மெய்கண்டான் மகாநாட்டைக் கூட்டி, தக்கார்களைக்கொண்டு சிவஞானபோதச் சூத்திரங்கட்கு விரிவுரையாற்றச்செய்த தோடமையாது, புலவர்பெருமக்கள் சைவவுணர்ச்சியோடுவிளங்கவேண்டி, சிவஞான சித்தியார் வகுப்பு ஒன்றும் நடத்திய தன்மையை இச்சங்கம் பாராட்டுகின்றது.

3. சைவமும் தமிழும் ஒருங்கே வளரவேண்டுமென்னும் பெருநோக்கத்தால் பலநூல்களைத் தற்போது காகிதம் முதலியன கிடைக்காத இந்நாளில் அச்சியற்றி வெளிப்படுத்தியும், மிகக்குறைந்த சந்தாவில் "ஞானசம்பந்தம்" என்ற ஓர் திங்கள் வெளியீட்டையும் நடத்தத் திருவுளம்பற்றிய குருமகாசந்நிதானத்தின் திருவருளைப் பாராட்டுவதோடு மகாசந்நிதானம் இம்மாதிரி சைவம் வளரவும், தமிழ் தழைக்கவும் பல்லாண்டு அரோக திடத்திருமேனியுடன் பாங்காக எழுந்தருளியிருந்து திருவருட் செங்கோலோச்சுமாறு திருவருள்பாலிக்க எல்லாம்வல்ல எமது ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ ஆதிகும்பேசப்பெருமானை இச்சங்கம் இறைஞ்சுகின்றது.

திருவாரூர் ஸ்ரீதம்பிரான்தோழர் தமிழ்ச் சங்கம்

19—6—1943.

திருவளர் தருமை திகழ்தரு மெங்கள்
சண்முக ஞான சம்பந்த தேசிகர்
தெய்வ நலஞ்செறி திருவரு ளாட்சி
தடம்பல கண்டது தடம்பல கண்டு
தளிபல திருந்தச் சமைத்தது தளியில்
விதிமுறை பூசை விளங்கிட ஆகமம்
பயிலப் பாட சாலைபா லித்தது
சிவமிகு தெய்வத் தீந்தமிழ்ப் பள்ளி
பவநோய் போக்கிப் பலர்செவி நிறைந்து
அருள்கனி விக்க அழகுற அமைத்தது
முனிவர் பலர்க்கும் நனிவிருப் புடனே
கனியெனக் கண்டெனக் களிவர இனித்துப்
பன்னல மாரருள் பாலித்த தன்றிப்
புலவர் கூட்டுணச் சித்தித் தேனை
சிந்தையி னிறைத்துச் சிவம்பெருக் கியதால்
தம்பிரான் தோழர் தமிழ்ச் சங்கத்தினும்
பத்தாண் டாகப் பலவகை யானும்
மெத்த வுதவி விரும்பிக் காப்பது
சிறியோர் பெரியோர் செல்வர் வறியர்
யாவரும் ஒப்பும் மேவரு ஆட்சி
கமலைவாழ் ஞானத் தியாகன தருளால்
சிவமணம் வீசுக அருட்டேன் பொழிக
தவநெறி மிகுக்க தக்கோர்க் கெல்லாங்
களைகணாய் நின்று கவினுக என்று
செல்வத் தியாகர் திருவடி
போற்றுதும் போற்றுதும் புகலென மதித்தே.

ஆக்கூர் பாரதி சங்கம்

நந்தமிழ்நாடு ஞானசம்பந்தம்பெற "ஞானசம்பந்தம்" இதழ் வெளியிட்டும், சைவநெறியும், அதன்பெருமையும் யாவரும் எளிதில் கற்றுணர, குறைந்த விலையில் நிறைந்த நூல்கள் பதிப்பித்தும், தேனினு மினிக்கும் தெய்வீகத்தேவாரம் திகழ்வுற விளங்கத்தேவாரபாடசாலையும், வேதசிவாகமபாடசாலையும் நடாத்தியும், எம்பிரான் இருக்கைகொண்ட எழில்மிகு ஆலயங்களை இறைமணங்கமழச் சீர்திருத்தியும், செந்தமிழ்ப் புலவோர்களை ஆதரித்துவரும் வள்ளலே வாழ்க! வாழ்க! பண்டைப் பெருமையிழந்து நலிவுற்ற நற்றமிழ் மீட்டும் உலகம் வியக்கும் உயரிய மொழியாக விளங்கப் புத்துயிர் பெற்றெழும் இற்றைநாளிலே தமிழ்க்கல்லூரி ஒன்று எழுப்புவித்துச் சைவப்பணி, தமிழ்ப்பணி முதலாய் நற்பணிகள் பலபுரிந்து மண் மிசை, பல்லாண்டுகள் வாழ எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி ஏத்துகின்றோம்.

The Teachers' Association, Board High School, Vandiwash.

The Association respectfully conveys to His Holiness Sri-La-Sri Shanmugadesika Paramacharya, the Head of Dharmapuram Adhinam Mutt, felicitations on the completion of 10-th year of his accession to the "Peetam" and wish him many happy years of glory in all his expanding fields of service of reform of the Mutt. Promotion of Tamil literature and Saivasiddhantha philosophy and the establishment of a Tamil University. The Association prays for a gift of the further issues of the Tamil Magazine "Gnanasambanda" and such works of Tamil research as may be of value for a teacher to equip himself.

The Ramakrishna Mission Students' Home, Mylapore, Madras

7th September, Madars.

On the happy occasion of the decennial celebration of the accession to the headship of the Dharmapuram Math, I beg to offer on behalf of the Orphanage, The Ramakrishna Mission Students' Home, our most hearty felicitations with prayers for a long period of Presidentship of the Adhinam, ministering to the spiritual welfare of the countless devotees that look up for guidance in the spiritual realm. May the All-merciful grant this prayer!

The Orphanage. the Ramakrishna Mission Students' Home, Madras has been the object of patronage and goodwill from the 'Adhinam'. It was in the year 1919 that the late Sri-la-Sri Satchidananda Desika Gnanasambanda Pandarasannadhi Avergal paid Rs. 2000 for a room to be built in His Holiness' name in the new buildings of the Orphanage. A brass-tablet proclaims to the future generation this generous help.

The Mayavaram Permanent Fund Ltd.,

2—9—1943.

We beg to communicate hereunder the Resolution of the Board of Directors of the Fund passed at their Meeting held on 1—9—1943.

"Resolved that in view of the First Decennial Celebration of the regime of His Holiness Sri-la-Sri Shanmuga Desika Gnanasambanda Pandarasannadhi, Avergal of Dharmapuram Adhinam, we, the Directors of the Mayavaram Permanent Fund, Limited, hereby unanimously resolve to convey our hearty congratulations and felicitations on the completion of the first Ten years' Administration of His Holiness."

Maharishi Sivadhyanandanda, Veda Pravachana Mandir, Kodambakkam (Madras).

3—9—43.

Kindly convey my congratulations on the Decennial Rule celebrations of the Adhinakartha of Dharmapuram. The Present Swamigal keeps up the high intelligence and spiritual greatness which Sri-la-Sri Kumaraguruparaswamigal, the founder of Tiruppanandal Mutt found in the Adhinakartha of his times. May His Holiness live to see the Silver, Golden and Diamond jubilee of the Headship of the Mutt.

The Mutt very recently published a clear and cheap edition of the fourteen Siddhanta Sastras worth having a big mansion worthy of its high traditions.

I wish the Library to complete successfully with the Saraswati Mahal of the Tanjore Palace in the near future.

Proceedings of the Committee, Theosophical Lodge, Kallakurichi.

Resolved that Almighty may be pleased to confer long life on His Holiness Pandarasannadhigal of Sri Dharmapuram Adhinam and enable His Holiness to Help the Humanity for several decades with the spread of knowledge and spiritual life by the learning and example of His Holiness.

சென்னை, சைவாசாரியார் சங்கம்.

5—9—43.

श्रीलश्री षण्मुखदेशिक ज्ञानसंबन्ध परमाचार्य पादारविन्दे समर्पित प्रशस्ति पत्रिका ।

आर्याः, अभिरूपाः, सुविदितमेव समेषां शैवसमयाचारभावनापरिष्कृतधिषणानां यत् श्रीलश्री षण्मुखदेशिक ज्ञानसंबन्ध परमाचार्याणां धर्मपुराचार्यपीठविराजमानानां, शैवसमयसंरक्षणबद्धादराणां द्विगुणानि, पञ्चवर्षाण्यतीतानीति ।

तत्रभवतामाधिपत्यस्य अद्य दशमोवत्सर इति समारब्धो अयं वैभवः महते प्रमोदाय भवेदास्तिकानां सर्वेषां महाजनानां इति विश्वसिमः।

इदं च बहुमन्तव्यं यत् आगमोक्तमेव पूजाविधानं श्रीपरमेश्वरसान्निध्यं आलयेषु संपादयेदिति निश्चिन्वानैरेतैः श्रीमदाचार्यवर्यैः वेदागमशास्त्रेषु वैदुष्यं अर्चकपरंपराप्राप्तानां शिवद्विजानां आवश्यकमिति च वेदागमशास्त्रपाठशाला सुप्रतिष्ठिता विराजते। तत्रविद्यार्थिनां भोजनाच्छादनादिदानेन बहूपकुर्वन्त्य-र्चकलोकस्य श्रीधर्मपुरमठाधिपतयः। अपरं च श्रीपरमेश्वरलीलाविभूति प्रतिपादकानां भक्तानुग्राहक-तया सुप्रसिद्धानां दक्षिणदेशेविलसतां तत्तत्क्षेत्रमहिमोपवर्णनपराणां द्राविडाम्नायत्वेन परिगणितानां देवारतिरुवाचकप्रभृतीनां नित्यपठनं महते श्रेयसे कल्पेत इति भावितान्तरंगैरेतैः देवारपाठशालापि पारायणनियुक्तैः माणवकैः मण्डिता विराजते इतिहेऽस्माकं परमामोदः।

किंच महाशयैरेतैः देशेऽस्मिन् जीर्णप्रायाः बहवः शिवालयाः महता द्रव्यव्ययेन सुपरिष्कृता-स्सन्तः श्रीपरमेश्वरसेवावहितचेतसां भक्तानां स्वान्तमावर्जयन्तः प्रकाशन्ते इति महानादरः।

शैवशास्त्र भण्डारशास्त्र स्तोत्रप्रबन्ध अघोरशिवपद्धति प्रभृतयः बहवो ग्रन्थाः, शैवसमय बोधकग्रन्थप्रचाराय प्रतितिष्ठिते स्वकीये मुद्रणालये एव मुद्रयित्वा मूल्यं विनैव सर्वेषां विनियुज्यन्ते इति बहुमन्तव्यं।

अन्यच्च शैवसिद्धान्तस्य क्षीणांदशां, समयनिष्ठानां आधुनिकानां नैराश्यं च निराकृत्य, स्वयं शैवसिद्धान्तामृतं सपाद्य सर्वानपि पाययित्वा स्वयं च पीत्वा यौवनदशां शैवसमयस्य समुत्पाद्य हृद्यान्तरं-गास्समेधन्ते परमाचार्याः।

जयतु जयतु देवः शङ्करः शक्तियुक्तः
जयतु जयतु धर्मोऽपौरुषेयोक्तिगम्यः।
जयतु जयतु शास्त्रं शैवसिद्धन्तरूपम्
जयतु जयतु नित्यं षण्मुखो देशिकेन्द्रः॥

பிரம்மஸ்ரீ. கிருஷ்ணசாஸ்திரிகள், சாஸ்திரபண்டிதர், தருமபுர ஆதீனம்.
5—9—43.

एकैश्वर्य स्थितोऽपि प्रणतबहुफलो यस्वयं कृत्तिवासाः
कान्तासंमिश्रदेहोऽप्यविषयमनसां यः परस्ताद्यतीनां।
अष्टाभिर्यस्यकृत्यं जगदपि तनुभिर्बिभ्रतोनाभिमानः
सन्मार्गालोकनाय व्यपनयतुसवस्तामसीं वृत्तिमीशः॥ १॥

जयतु जयतु योगी षण्मुखानन्दरूपः जयतु जयतु विद्या धर्मकर्मैकदीपः।
जयतु जयतु शैवाचार्यवर्यो यतीन्द्रः जयतु जयतु निष्ठाधर्ममार्गैकनिष्ठः॥ २॥

धर्मपुर्यां महाक्षेत्रे धर्मं संस्थाप्य योगवित् ।
यतिवर्योमहात्माऽयं सजीव्याच्छरदांशतम ॥ ३ ॥

अवनिरमरसिन्धुस्सार्धमस्मद्विधाभिः स च कुलपतिराद्यश्छन्दसां यः प्रयोक्ता ।
स च मुनिरनुयातारुन्धतीको वसिष्ठः तव वितरतु भद्रं भूयसे मङ्गळाय ॥ ४ ॥

-

-

பிர்மஸ்ரீ. க. ரா. சங்கரநாராயண சாஸ்திரிகள், ஸம்ஸ்கிருதபண்டிதர்,
காட்டுபுத்தூர்.

श्रीषण्मुखो देशिकेन्द्रः मठेऽत्र परिराजते ।
आरूढराज्यकस्यास्य दश वर्षास्तथागताः ॥

तमुत्सवं कर्तुकामः देशिकेन्द्रस्समादिशत् ।
तथैव शिष्यकास्तस्य परिपूर्णमनस्विनः ॥ २ ॥

ते गुरोराज्ञया मुग्धाः उत्सवं तमहो वत ।
निर्वर्त्यैव चसुप्ता हि गुरोराज्ञा न लङ्घ्यते ॥ ३ ॥

सर्वैरप्याद्दतोह्येषः देशिको नागरैर्जनैः ।
द्राविडीपरिवृद्ध्यर्थं सर्वयत्नान्समाचरत् ॥ ४ ॥

सी. पि. रामस्वामि वर्यः ब्राह्मणोत्तमएत्य हि ।
सभापतिपदेस्थित्वा सभां सर्वां अहोऽकरोत् ॥ ५ ॥

ओड्डकं स्वामिसाहाय्यः देशिकेन्द्रो मुदाज्वलन् ।
सर्वदेवालयांस्तत्र समुद्धर्तुंकृतक्षणः ॥ ६ ॥

देवालया हि लोकेऽस्मिन् भक्तिमार्गप्रदर्शकाः ।
समुद्भूता इति सदा देशिकेन्द्रो वदन् स्थितः ॥ ७ ॥

अनेन देशिकेन्द्रेण पुस्तकालयसङ्घकाः ।
निर्मिताबहवस्तैर्हि द्राविडीवृद्धिमागता ॥ ८ ॥

देशिकेन्द्राः महावर्याः वोशतायु र्भविष्यति ।
जनक्षेमरता नित्यं अन्ते मोक्षमवाप्स्यथ ॥ ९ ॥

TELEGRAPHIC MESSAGES.

BHARAT DHARMA MAHAMANDAL, BENARES.

4—9—1943

Bharat Dharma Mahamandal highly appreciates His Holiness Madathipathi's brilliant administration. Admires Holiness exemplary Religious mindedness with profound regards. Offers award a national distinction ''Dharmamoolam'' to His Holiness. Prays graces acceptance. MAHAMANDAL.

THE SAIVA MAHAJANASANGAM, Tiruvadi.

6—9—1943

Tiruvadi Saiva Mahajana Sangam record heartiest congratulations at the commemoration of the first decennial rule of Paramacharia Swamigal Dharmapuram Adhinam and pray almighty to shower his choicest blessings upon His Holiness with long life for the improvement and enlightenment of the Saivas and World.

Balasubramania Pandaram, Secretary.

Sri, V. P. NARAYANAN NAMBIAR, B.A., B.L.,
Chairman Corporation Taxation Committee, Madras.

4—9—1943

From opportunities I had for years of watching at close quarters administration of His Holiness, I wholeheartedly join in tributes of the glorious regime of His Holiness that will be paid at function tomorrow under distinguished presidency of Sachivothama Ramaswami Aiyar. Wish function all success.

Telegraphic messages wishing success of function from the following gentlemen were also received.

1 Sri-la.Sri Gnaniarswamigal, Tirupappuliyar.
2 The Administrator, Karikal (French Territory.)
3 Sri. K. S. Jayarama Ayyar, Advocate, Mylapore, Madras.
4 Sri. Gopala Ayyar, Secretary, Saraswati Mahal Library, Tanjore.
5 The Rettayambadi Zamindar, Devakottai.
6 Sri. S. Sadasiva Mudaliar, Shiyali.

7 Sri. L. N. Paramasivam Pillai, Lalgudi.
8 Sri. G. Ramanuja Mudaliar, Municipal Chairman, Tiruvarur
9 Sri. M. R. Jambunathan, Editor, Vedas and Upanishads. Khar, Bombay.
10 The Saiva Siddhanta Sabha, Tuticorin
11 Sri. Al. Ar. Kalairaja Chettiar, Elaya Zamindar of Devakottai.
12 Sri. V. Nadimuthu Pillai, Pattukottai (President District Board, Tanjore,
13 Rao Bahadhur (now Diwan Bahadhur), Sri Avudayappa Pillai, Advocate, Tinnevelly
14 Sri. Tanjore Ramanathan Chettiar, M.L.C., Karaikudi.
15 Sri. Sarma, Editor, Chettinad, Karaikudi
16 Sri. A. Sivagnanam Pillai, Advocate, Ambasamudram.
17 Janab Thambi Saiboo Maricar, Karikkal.
18 Sri. Tirunavukarasu Pillai, Thiagaroyanagar.
19 Sri. S. Muthiah Mudaliar, Advocate, Mylapore (Madras).

வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர்,
நூல்நிலையப் பரிசோதகர், தருமபுர ஆதீனம்.

ஆட்சிச் சிறப்பு

பூவார் கயிலைப் பரம்பரையிற் புகழ்சேர் நந்தி யருண்மரபு
போற்றும் வெண்ணெய் மெய்கண்ட புனிதாத் துவித சித்தாந்தத்
தோவா நெறியி னநுபூதி உண்மைத் தவத்தோர்க் கருள் செய்ய
ஓங்கும் பொன்னி வளம்பெருகி யொளிருந் தரும புரத்தின்கண்
தாவா திலகுங் குருஞான சம்பந் தாசான் தருசெங்கோல்
தழைத்து வளரப் பெருங்கருணை தருசண் முகதேசிகமணியின்
பாவார் புகழ்ப்பத் தாண்டாட்சிப் பண்பின் பெருமை தனையடியோம்
பாங்கால் வணங்கித் துதிப்பதலாற் பகருந் திறமெந் தரமேயோ.

பத்தாண்டாட்சி நிகழ்ச்சிகள்:

உலகம் புரக்கு முமைபங் காளன்
நிலவுறு மானிட வுருவந் தாங்கி
மானிடங் கரந்து மங்கையைத் தணந்து
வானிடம் புகழ வளமுறு தருமையில்
பொன்னொளிர் மேனியும் புன்னகை முகமும்
மின்னொளி பணியும் பூதியும் மணியுஞ்
செஞ்சடைக் கற்றையுங் கொஞ்சுமென் மொழியும்
அஞ்செழுத் தோதுந் தலைமையுந் தாங்கி
புறப்பகை கடிந்து பொதுநலம் வளர்க்கவும்
அறப்பகை யாவையு மகலச் செய்யவும்
தாய்மொழி வளர்க்கவுஞ் சமய முயரவும்
நேயம் மிக்க திருவுளம் பற்றி

“வேண்டினுண் டாகத் துறக்க; துறந்தபின்
யீண்டியற் பால பல”வா மென்னும்
பொதுமறை வாக்கிற் கிலக்கிய மாகக்
கதுமெனத் தமது விளம்பிரா யத்தே
அறுபத் தேழ்குறை யிரண்டா யிரமாம்
மறுவறு வாண்டில் மாதவச் செங்கோல்
ஏற்றுயர் ஞான பீடத் தமர்ந்து
சாற்றருஞ் செயல்பல சாதித் தனையே
இருமையு முதவ வெழுந்தருள் சிவமே
பெருக்கமாம் மக்களின் துன்பமு மின்பமும்
உருக்கமா யேற்றுத் துடைத்துத் துய்ப்போய்
நுண்ணறி வுடைமையுந் திண்ணிய நெஞ்சமும்
நுண்ணிய பொருளையும் பண்புடன் பிறர்க்குத்
திடமுட னுரைக்குஞ் செஞ்சொல் லாற்றலும்
பட்டாங் குவக்கும் நீதிநிர் வாகமும்
“ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும்
எண்ணில் தவத்தால்” கைவரப் பெற்றோய்
இருகால் கொண்டு பலகால் தேடி
அருகே வந்துதம் காரியம் உரைக்கும்
மருகா வுள்ள மக்கள் தமக்குச்
சருகா வுளமொடு உண்(டு)இல வென்னும்
உற்ற துரைக்கு முயர்குணக் குன்றே
காளி யம்மை காதல்செய் மாவூர்
யாளி மொய்ம்புடை ஆரெஸ் சர்மா
சிஐ இஎனும் சிறப்புறு செல்வன்
இராவ்பக தூரெனு மிறைதரு பட்டம்
தராதல மீதுதம் மதிகொடு பெற்ற
என் ஆர் சாமி யப்ப முதலியார்
இன்னோர் பலரும் பிறருஞ் சேர்ந்து
மன்னிய பத்தாண் டாட்சி விழாவினை
நத்து மைம்புலனை வென்றவ னுதலின்
ஐந்தொன் பதுநாற் பத்து மூன்று
மைந்துடை ஞாயிறு முதலதாத் தொடங்கி
பத்தரை நாளில் பாங்காய் மகிழ்வுடன்
சுத்த சண்முக தேசிகன் திருமுன்
ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
நந்தலில் புகழை நாளுங் கொண்டாடினர்.

முதல்நாள் நிகழ்ச்சி.

திருவாங் கூருறை திவான்சச் சிவோத்தம
சர்சிபி ராம சாமி ஐயர்
முதனாள் நிகழ்ச்சித் தலைமை வகித்து

இதமாய் மொழிந்த தினிதெடுத் துரைப்பாம்.
ஸ்ரீல ஸ்ரீமகா சந்நி தானத்தின்
நாவலப் புலமையும் நயமுஞ் சான்ற
வரவேற் புரையை வளமா ரடியவர்
அருணந்தித் தம்பிரா னடிகள் தாங்கி
இருக ணிமையா வினிதெடுத் தோதி
கலைமக ளுருவாக் கவினுநூல் நிலயம்
புலமையுஞ் சமயமும் பொருந்தினி தோங்க
திறந்திடு மாறு கூறிய பின்னர்
அழகுறு தந்தப் பேழையில் வைத்து
மகிழுறு மனத்தராய் தலைவற் களித்தனர்.
மாயூர மாநகர் முனிசிபல் தலைவர்சி
கனக சபையாம் செட்டியா ரதன்பின்
யேனையோர் சார்பாய் ஏற்புரை வழங்கி
பாராட்டு வளைவையுந் திறந்திடக் கேட்டனர்.
ஏனைய புலவரும் பெருநிலக் கிழாஅரும்
இனியதம் வாழ்த்துச் செய்திக ளியம்பினர்.
கடனெடு கால மறிந்து சங்கங்கள்
வந்தனோப சாரப் பத்திரந் தந்தன.
சண்முக தேசிக ராட்சித் திறத்தினைக்
கண்ணிய முடனே ஆரெஸ் சர்மா
எண்ணி லுரைகளால் யிதம்பட மொழிந்தனர்.
சற்குரு தேசிக சண்முக நாதனும்
நற்குணத் தலைவரும் நாடிய பலரும்
அடங்கிய புகைப்படம் அழகா யெடுத்து
முடக்கந் தீர முதல்விருந் துண்டு
பெருகிய நடன கலாவல் லபர்திரு
திருவாங் கூர்சமஸ்த் தானத் தில்லமர்
கோபிநாத் கோஷ்டியார் நடனங் கண்டு
யாவரும் மகிழ்ந்து இன்பத் தாழ்ந்தனர்
இத்துடன் முதனாள் நிகழ்ச்சி முடிந்தது.

இரண்டாம்நாள் நிகழ்ச்சி.

இரண்டுநாள் நிகழ்ச்சியைப் புலவர் தினமென
காலையில் சென்னை எச்சார் போர்டின்
தலைவராம் திவான்பக தூரெனுஞ் சிறப்புறு
டியெம்நா ராயண சாமிப் பிள்ளையின்
தலைமையில் நடந்த வகைதெரித் திடுவாம்;
முறையாய்த் திருமுறை பலரும் வோதினர்.
கனக சபையாம் செட்டியா ரவர்கள்
வரவேற் புரையை வாசித் தளித்தனர்.
தலைவர் முகவுரை கூறு முகத்தில்

மக்களும் மடமும் கலந்து வாழும்
காட்சியை யின்றே கண்டன மதற்குச்
சற்குரு நாதன் சால்பும் நிர்வாகமும்
பொன்போல் போற்றற் குரியவா மென்று
இன்னோ ரன்ன பெருங்குண முரைத்து
பின்பொரு வேண்டுகோள் வேண்டியே நின்றனர்.
கோவையில் வதியுஞ் சிவக்கவி மணியாம்
சிகே சுப்பிர மணிய முதலியார்
எழுதிய தாண்டக வேந்தின் புராண
விரிவுரை யரங்க மேற்றக் கோரினர்.
சிவக்கவி மணியாம் முதலியா ரவர்களும்
சென்னைசேர் சைவசித் தாந்த சமாஜக்
காரிய தரிசியாம் எம்பால சுப்பிர
மணிய முதலியார் காஞ்சிமெய் கண்டார்
கழகத் தின்செய லாள ராகிய
வச்சிர வேலு முதலியார் தாமும்
ஆதீனத் தலைவர்தன் னருங்குணச் செயலை
பராதீ னஞ்செய்யும் பான்மையும் விளக்கெதிர்
பாரா விதமாய்ப் பாங்குற மொழிந்தனர்.
காஞ்சிவாழ் வச்சிர வேலு முதலியார்
ஔவை சுதுரை சாமிப் பிள்ளை
இராமகோ விந்த சாமிப் பிள்ளை
நலஞ்சால் தண்ட பாணி தேசிகர்
வேலூர் வைமு சண்முக தேசிகர்
முத்துசு மாணிக்க வாசக முதலியார்
திருவை குஞ்சித பாதம் பிள்ளை
ஆகு மிவ்வெழு வித்துவான் தமக்கும்
தருமையா தீனத் தண்டமிழ்ப் புலவர்
என்னும் பட்டம் யிசையவே கொடுத்து
முற்றத் துறந்த பட்டினத் தடிகளின்
ஏற்றம் நீங்கா யெழிற்புக ழுடலையும்
தன்னதாக் கொண்ட தக்கோன் நற்குணன்
இசையர செனவுந் தேவார மணியுமாம்
எம்மெம் தண்ட பாணி தேசிகர்க்குத்
தருமை யாதீன விசைப்புல வரெனும்
பட்டமுந் தந்துதன் பெயர்கள் பொறித்த
பொற்பதக் கங்களும் புகழ்ச்சியாய் வழங்கினர்.
பள்ளியிற் பயிலுறு சிறுமியர் சிறார்க்கு
மெள்ளவே சிறந்த பரிசுகள் வழங்கினர்.
சந்நிதா னத்தின் ஆசி யுரையினை
அடியவ ராமரு ணந்தித் தம்பிரான்
படியோ ரறியப் பாங்காய் மொழிந்தனர்.

சோகம் நீக்குங் கோகில கான
இசைவா ணியான யெம்எஸ் ஸ்ரீமதி
சுப்பு லெட்சுமியி னிசைவிருந் துண்டு
நலமாய் மகிழ்வாம் கடலில் மிதந்தனர்.
இன்றைய நிகழ்ச்சி யினிதாய் முடிந்தது.

மூன்றும்நாள் நிகழ்ச்சி.

மயூரப் பதியின் முனிசிபல் தலைவர்சி
கனக சபையாம் செட்டியா ரவர்கள்
மூன்று நாளின் முதன்மை வகித்தனர்.
வரவேற் புரைகள் வழங்கிய பின்னர்
தலைவரும் பலரும் தருமையா தீனத்
தலைவரி னருங்குணம் பலவுஞ் செப்பினர்.
காசி வாசி சிவயீ சான
சிவா சாரிய ரவர்கள் தமக்குப்
பொன்னி ளுடை பொருந்தவே சாத்தி
சைவசித் தாந்தச் சரபம் என்னும்
பட்டமுஞ் சிறப்புரை பொதிந்த பட்டயமும்
இட்டமாய் வழங்கி யிருந்தருள் குரவ!
திருவா ரூரில் இலக்கண விளக்கப்
பரம்பரா வித்துவான் இராம லிங்க
தேசிகன் வாழ்த்துரை வழங்கித் தந்தை
எழுதிய பதினேழ்நூற் ருண்டுப் புலவர்
என்னும் நூலி னிரண்டாம் பதிப்பினை
இவ்விழா நினைவு காரண மாக
முதலாம் பிரதியை முதல்வர்க் களித்தனர்.
நடுப்பக லதனில்மா கேசுர பூஜை
உடுத்த வாடையை நெகிழ்த்தியே யுண்டு
முடுக்காய் யாவரும் முறையா யிருந்தனர்
இன்றொரு புகைப்படம் இனிதே யெடுத்தனர்
தருமையா தீன விசைப்புல வர்எனும்
எம்எம் தண்ட பாணி தேசிகர்
இசையரங் கினியதாய் நடந்ததன் பின்னர்
பல்லவி யென்னுநல் வித்துவப் பகுதியை
மெல்லவே கைவரப் பெற்ற வித்தகன்
வழிவரு தோன்றல்செம் பொன்னார் கோயில்
கோவிந்த சாமி தக்ஷிணா மூர்த்தி
இருவரு மொருமையா யிசைக்கும் பண்பினால்
தகவாய் யேற்றுதம் தருமையா தீன
நாதசுர வித்துவான் சிறப்புரை தந்து
பொற்பதக் கங்களும் வழங்கிய புனிதா!!
இன்திர வெட்டு மணிக்கு ஸ்ரீமதி

யெஸ்டி சுப்பு லக்ஷிமி கோஷ்டியார்
நாட்டியங் கண்டு நலமாய் வதிந்தனர்.
அதன்பி னடியவர் கூட்டமும் புலவர்
கூட்டமும் வேறுபல் திரண்ட மக்களும்
யானையும் குதிரையு மெடுபிடி வகைகளும்
இன்னிசை முறையே யியம்பிமுன் செல்ல
ஞான சம்பந்த சண்முகதேசிகர்
சிவிகைமீ தமர்ந்து வலம்வரு காட்சியை
நேரிற் கண்டு களிப்பதே யன்றி
சொல்லக் கேட்டுக் களிப்பது பொருந்தா.
வந்துபின் ஞானக் கொலுவினி லமர்ந்து
வந்திடு மடியவர் தமக்கும் பிறர்க்கும்
அருட்பிர சாதம் வழங்கிய வகையினை
இருகண் கொண்டு கண்டோர் யாவரும்
மருளா வுளமொடு மனங்களித் திருந்தனர்.
இதுவரை மூன்றுநாள் நிகழ்ச்சி முடிந்தது.

நான்காம் நாள் நிகழ்ச்சி.

ஆவணி மூலத் திருநா ளன்று
மாவணி செய்து மங்கைசேர் சொக்க
நாதனார் தமக்குநல் லபிஷேக மும்ஆ
ராதனை புரிந்துபஞ் சாக்கரம் வழங்கினர்.
தேவ கோட்டைவாழ் திருவளர் செல்வன்
பால கவியெனப் பகர்ந்திடுஞ் சீலன்
இராம னாதன் செட்டியா ரவர்க்குத்
தருமையா தீன வித்துவா னென்னும்
சிறப்புப் பெயருடன் செம்பொற் பதக்கமும்
அளிக்கப் பெற்ற வெங்குரு நாதனை
'காவி யெனவே' தொடங்கிய பாடலில்
தாவில்சீர்த் தருமை மேய சண்முக
சாமி யெற்கு வித்துவான் பேரை
கொடுத்தல் முன்செய் தவத்தால் மன்னோ
யெனவே முடித்துச் செய்யுளாம் மலரால்
கனமாய்ச் சூட்டிக் காதலாய்ப் பணிந்தனர்.
பள்ளிச் சிறுமியர் சிறார்கள் தமக்குச்
சந்நி தானத்தின் திருவுரு வமைந்த
பதக்கம் பலவும் பரிவாய் வழங்கினர்.
சைவசித் தாந்த சரபம் சிவஸ்ரீ
ஈசான சிவாச் சாரியார் தலைமையில்
திருமதி காஞ்சன மாலை யம்மையார்
திருவி ராம னாதன் செட்டியார்
திருபூ சமர புரியாம் முதலியார்

திருமீ சுந்தரம் பிள்ளை ஆடூர்
ஆசு கணபதிப் பிள்ளையென் றின்னோர்
மாசிலா மாண்பொருள் விளக்கிப் பேசினர்.
ஆதீ னப்பரி பாலனத் திருக்கும்
திருமுறை பயிலும் மாணவர் தமக்கும்
வேதசி வாகமம் விளம்பு சிறார்க்கும்
ஊக்க மூட்டவும் உயர்நெறி காட்டவும்
ஆக்கம் மிக்க திருவுளங் கொண்டு
தருமை யடியவர் தக்கநல் லறிஞர்
மௌன சோம சுந்தரத் தம்பிரான்
சுவாமி யவர்களைக் கொண்டுநல் புத்தகப்
பரிசு வழங்கக் கட்டளை யிட்டனர்.
தண்ட பாணி ராஜ மிருவரும்
அப்பர்தே வாரம் அடைவே பெற்றனர்.
ஜிமுரு கையன் சந்திர சேகரன்
நலமுறு நீதி நெறிவிளக் கம்மெனும்
நீதிநூ லதனை நேர்மையாய்ப் பெற்றனர்.
சித்தாந்த சைவ வினாவிடை நூலை
சைவ நற்குரு சாமி பெற்றனன்.
முடிவில் சங்கீத பூஷண மான
முத்துக் குமர சாமிநல் வீணையை
வாசித் தின்ப வெள்ளத் தாழ்த்தினன்.
இத்துட னின்றைய நிகழ்ச்சி முடிந்தது.

ஐந்தாம் நாள் நிகழ்ச்சி

தொழுதூண் சுவையி னுழுதூ ணினிதெனும்
பழுதிலா வுரையையே தொழிலதாகக் கொண்ட
பஞ்சமர் பல்லா யிரமவர் தமக்குக்
குஞ்சிக் கெண்ணையும் குடலுக் கறுசுவை
மிஞ்சும் போனக வகைகளும் யீந்து
சந்தனம் தந்து களித்திடும் போது
அன்னவர் பலரும் தத்தம் களிப்பினை
அஞ்சலி யானுநின் னடிபணி செயலினும்
பஞ்சமர் பஞ்சம் போக்கிய பரனே!
எஞ்சிய மக்களாம் எங்களை யென்றும்
வஞ்சியா தொழுகும் வள்ளலே யென்று
கூக்குர லிட்டுக் கூத்து மாடினர்.
மற்றவர் மகிழ்ச்சிக் களவும் உண்டோ!
இன்றுட னைந்துநாள் விழாவும் முடிந்தது.
வாழி வாழி மாதவ சண்முக
வாழி பூதி சாதனப் பொருள்கள்
ஊழிதோ றூழி வாழிவர் மியவே

செய்திகள்.

தருமபுர ஆதீனகர்த்தர் அவர்களது பத்துவருட ஆட்சி.

திருக்கயிலாய பரம்பரை தருமபுரவாதீனம் மிகப் புராதனமானது. இதன் ஆதீனகர்த்தர்களாக எழுந்தருளியிருந்த, மகா சிரேஷ்டர்களான குருமூர்த்திகளும், அவர்களது சிஷ்யகோடிகளும், அவ்வப்போது செய்திருக்கும் அருஞ்செயல்கள் பல. தெய்வாம்சமாக விளங்கி யிருந்தார்கள். தெய்வச் செயல்கள் பல புரிந்திருக்கிறார்கள். இவ்வுண்மைக்கு இவ்வாதீன அடியாராகவிருந்த, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளது சரித்திரமே சான்றாகும். சமயவளர்ச்சிக்கும், மொழிவளர்ச்சிக்கும், தெய்வப் பணிக்கும், நற்காரியங்கள் பலப்பல செய்திருக்கிறார்கள். இவ்வாதீனத்தின் தொடர்பு எமது முன்னோர்கள் காலந்தொட்டே எமக்குண்டு. எமது முன்னோர்கள் சொல்லிய கர்ணபரம்பரைச் சரித்திரங்கள் பல. அவை அவ்வொன்றும் கேட்டோர் வியக்கத் தக்க தெய்வாம்சச் செயல்கள் கொண்டதாகவே யிருக்கும். அவைகளை விரிக்கிற் பெருகும்.

நமக்கும் இவ்வாதீனத்தில் சென்ற ஐந்து பட்டத்திலும், இப்போது எழுந்தருளி யிருக்கும் மகாசந்நிதானத்தின் காலத்திலுந் தொடர்புண்டு. முந்திய ஐந்து குருமூர்த்திகளும், அவ்வப்போது செய்த அருஞ்செயல் பலவற்றையும், நாம் அப்போதைக்கப்போதே நமது பத்திரிகையில் நன்கு எடுத்தெழுதி வியந்து பாராட்டி யிருக்கிறோம்.

இதுபோது ஸ்தானத்தில் எழுந்தருளித் துறவரசுகொண்டு சமயநெறி நின்று, செங்கோலோச்சும், அருங்கலை விநோதர், அருட்கொடை வள்ளல், நமக்கு ஆறுவது அருட்குரவராவார்கள். ஆதீன முறைப்படி இருபத்திநான்காவது பரமாசாரியாரவர்கள் சைவ உலகுக்கு இவர்கள் ஸ்தானமேற்று பத்துவருடமாக நல்ல ஆட்சிபுரிந்து வருகிறார்கள். இவர்களது ஆட்சி மிகவுமாட்சிமையுடையது. அரசியல் நிபுணர்களுங்கூட, இவர்களது ஆட்சித் திறனையும்; திட்டம் வகுத்து நடத்தும் பொறுப்பையும், அவற்றின் கணக்குகளைப் பரிசீலனைசெய்யும் பண்பையும் பல முறை வியந்து பேசியிருப்பதை நாமறிவோம். துறவரசு வீற்றிருந்து ஆட்சிபுரிவது சுலபமன்று. இத்தகைய பெரியார்களுக்குப் பல அருங்குணங்கள் வேண்டும். முக்கியமாக வைதீக சமய ஞானமும், லௌகீக ஞானமும் வேண்டுமென்பதை மறுப்பதற்கில்லை. நமது பரமாசாரிய ஸ்வாமிகளுக்கு இவ்விரண்டு முண்டு. வைதீகஞான முதிர்ந்து, லௌகீக ஞானஞ் சிறந்து விளங்குவதினாலேயே இவர்களது ஆட்சி பல வகையாலும் மேன்மைபெற்று விளங்குகிறது என்பது மிகையல்ல.

இவர்கள் துறவரசுமுடி சூடியவுடனே, தங்கள் கீழுள்ள ஆலயங்களை யெல்லாம் நேரிற்பார்த்து அவ்வப்போது வேண்டுவன செய்துவந்தார்கள்; வருகிறார்கள். முதன் முதலாக மக்கள் சுகாதாரத்துக்கு வேண்டிய முக்கிய சாதனங்களை யுண்டு பண்ணினார்கள். ஆங்காங்கே ''காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல், மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும்'' ''காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துங் கருணையினால், ஆசில் அறச்சாலைகளுந் தண்ணீர்ப் பந்தல்களுமமைத்தார்கள்''. சிலமாகவிருந்த ஆலயங்கள் பலவற்றைத் திருப்பணிசெய்து, மகா கும்பாபிஷேகங்கள் நடத்தினார்கள். மக்கள் உடல்வளர்ச்சிக்குச் செய்வது போதாதென உணர்ந்த

நமது பெருந்தகையார், அறிவுவளர்ச்சிக்கு வேண்டுவனவும் செய்யப் பின்தயங்கி ஞர்களில்லை. அரும்பெரும் நூல்கள் பலவற்றை அச்சிட்டு இலவசமாக வழங்குகிறார்கள். அன்றியும் சமய உண்மைகளை மக்கள் உணர்ந்தாலன்றி, வருங்கால சைவநன் மக்களது ஒழுக்கம் வழுவடைந்துவிடுமோ என்று அதனையுணர்த்தித் திருத்தத் திங்கள் வெளியீடொன்றை நடத்திவருகிறார்கள். தேவார பாடசாலை—ஆகம பாடசாலை முதலியன நிறுவி, மாணவர்களுக்கு உண்டியும், உணவும், உறைவிடமுமளித்து, கண்களை இமைகள் காப்பதுபோல மாணவர்களைப் பாதுகாத்துப் பயிற்றுவித்து வருகிறார்கள். வருடந்தோறும் மகாநாடு கூட்டிப் பாமரமக்களுஞ் சுலபமாகச் சமய உண்மைகளை யறிய வசதியுண்டாக்கித் தக்க அறிவுடைய பலரைக்கொண்டு உபந் யஸிக்கச் செய்துவருகிறார்கள். இவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனி விரித் தெழுதுவது அவசியமென நாம் கருதினாலும், காகிதப்பஞ்சத்தின் கொடுமை நமக்கு இடந்தர மறுக்கிறது. ஆகவே சுருக்கமாகக் கூறுவோமானால், இவர்களாட்சியில் கண்ட அளப்பருஞ்செயல்கள் பலப்பல. "செயற்கரிய செய்வர் பெரியார்" என்ற வாக்கும், "பெருமையுடையவர் ஆற்றுவார், ஆற்றின் அருமையுடைய செயல்" என் னும் வள்ளுவர் குறளும், உலகர்முன் நிலைநிறுத்தப்பெற்றுப் புகழ்வெய்தி வருவது இவர்கள் முற்பிறப்பிற்செய்த புண்ணியச்செயலே ஆகும். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்துவிடல்" "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல்தலை"என்ற தமிழ்மறைகளின் கருத்தை நமது ஆசாரிய ஸ்வாமிகள் நன்கு கடைபிடித்து ஆண்டுவருவதினாலேதான் அவர்க ளது ஆட்சி சொல்லற்கரிய—எழுதற்கரிய அவ்வளவு பெருமையுடையதாகக் காணப் பெறுகிறது. இத்தகைய ஆட்சியை மக்களுணர்ந்து அனுபவிப்பது உண்மையானால், அதற்குக் கைம்மாறு செய்யவேண்டுவதும் அவர்கள் கடமையல்லவா? இன்றேல், செய்நன்றிமறந்த மக்களாகி உய்வில்லாது போய்விடுவார்களன்றோ? இதனை நன் குணர்ந்த தமிழ்நாட்டுப் பெரியார்களாகிய ஸர். ஆர். எஸ். சர்மா, (கே டி. ஸி. ஐ. இ.) அவர்களும், ராவ்பகதூர் N. R. சாமியப்பா முதலியாரவர்களும், முன்வந்து நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய ஸ்வாமிகளது பத்துவருட ஆட்சியைக் கொண்டாட முடிவுசெய்து அதற்கென்று ஜில்லா பிரபலஸ்தர்கள் பலரடங்கிய குழூஉ ஒன்றும் அமைத்து 5—9—43உ நடத்த முடிவுசெய்திருக்கிறார்கள். அதற்குத் தலைமை வகித்து நடத்த திருவிதாங்கூர் சமஸ்தான திவான், சச்சிவோத்தம ஸர். ஸி. பி. ராமசாமி அய்யரவர்கள் அன்புடன் இசைந்திருக்கிறார்கள், என்று அறிய நாம் பெரிதும் சந்தோஷிப்பதுடன், இவ்வேற்பாட்டைச் செய்த கனவான்களது சம யோஜித அருஞ்செயலை மிகப் பாராட்டுகிறோம். முன்வந்துள்ள கனவான்களும் தலைமைதாங்கும் பெரியாரும் இத்தகைய பெருந்தொண்டுக்குத் தகுதியுடையவரே ஆவர். அவர்களைப்பற்றித் தமிழ்நாடு நன்கு அறியுமாகையால் நாம் அதிகம் எழுத வேண்டுவது அனாவசியமாகும். என்றாலும் ஒன்றைச் சொல்லாதிருக்க இயலவில்லை. இவ்வாறு இவ்விழாக் கொண்டாடுவது நமது ஆசாரியஸ்வாமிகளுக்குப் பெருமையா? நமக்குப் பெருமையா? என்றால், முந்தியதைவிடப் பிந்தியதே அதிக முக்கியத்துவம் பெறும் என்பதில் ஐயமில்லை. ஆகவே விழாக்கொண்டாட்டம் வெற்றிகரமாக முடியவேண்டுமென்றும், நமது அருட்குரவர் ஆட்சிக்கு, வெள்ளிவிழா, தங்கவிழா, வைரவிழா முதலியன கொண்டாடும் பெரும் பாக்கியத்தை இறைவன் நமக்கு அரு ளல் வேண்டுமென்றும், நமது ஆசாரிய ஸ்வாமிகள் அவ்வளவு நெடுங்காலம், திரு மேனி ஆரோக்கியத்துடன் வீற்றிருந்து, துறவரசு செலுத்த அவர்களுக்கும் இன்ன

ருள்பாலிக்க வேண்டுமென்றுந் தண்ணளி சுரக்கும் தயாநிதியாகிய நமது வழிபடு தெய்வம் ஷண்முகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈண்டு மற்றொரு முக்கிய விஷயத்தையும், நினைவுக்குக் கொண்டுவருவது அவசியமாகும். இப்போது ஸ்தானம் வகித்தருளும் மகாசந்நிதானத்தை, இந்தப் பதவிக்குரிமையாக்கிய பெருமை முந்திய சந்நிதானத்தின் செயற்கரிய செயலாகும். "இதனை இதனால் இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற ஆன்றோர் வாக்கை யுணர்ந்து தெரிந்து வகைசெய்ததினாலன்றோ, இன்று தமிழ் சைவ நன்மக்கள் இவ்வாதீனத்தின் சிறப்பைப்பற்றி மனம்பூரித்துப் பெருமிதங் கொண்டு அவர்களையும் பாராட்டுகிறார்கள்.

—பத்திராதிபர், "நவ இந்தியா" 29—8—1943.

தருமபுரவிழா.

வருகிற ஞாயிற்றுக்கிழமை (5—9—43) ஒரு விசேஷமான நாள். அன்றையதினம் மாயவரத்தருகே உள்ள தருமபுரத்திலே, ஏக 'மோக்ளா'வாக இருக்கப் போகிறது. அன்று அவ்வூருக்கு ஸர் ஸி பி. ராமஸ்வாமி அய்யர் விஜயம் செய்கிறார். ஸர். ஆர். எஸ். சர்மா வேறே அங்கிருக்கப் போகிறார். அவர் தவிர, தஞ்சை ஜில்லாவில் உள்ள பல பிரமுகர்களை அங்கு அன்று காணலாம்.

விசேஷம் என்ன தெரியுமா? தருமபுர மடாதிபதியாக உள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பண்டார சந்நிதிகள் தருமபுர மடாதிபதியாக வந்து பத்தாண்டுகள் சுகமே கழிந்து போயிருக்கின்றன. இதுவரை இந்தப் பீடத்தில் அமர்ந்த எவரும் இத்தனை காலம் பட்டம்வகித்திருந்ததில்லையாம். ஆகவே தஞ்சை ஜில்லாவில் உள்ள பல பிரபலஸ்தர்கள் இவ்வருடத்தை ஒரு விசேஷ வருடமாகக் கொண்டாட விரும்பி, பண்டார சந்நிதிகளையும் கலந்துகொண்டார்களாம். அப்புறம் தான் இந்த மணிமுடி விழாவிற்கு ஏற்பாடாகியதாம்.

அன்று ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவ்வூரில் இந்த விழா ஞாபகார்த்தமாகக் கட்டப்பெற்றிருக்கும் 'வளைவு' ஒன்றையும், அதோடு, தருமபுர ஆதீனப் புத்தகசாலைக்கான கட்டிடமொன்றையும் திறந்துவைக்கப் போகிறாராம். அன்று கோபிநாத், தங்கமணி நடனமும் இருக்கிறதாம்.

அதற்கடுத்த இரண்டு தினங்களில் முறையே திவான் பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளையும், ஸ்ரீ கனகசபை செட்டியாரும் தலைமை வகித்திருக்க, வித்வத் சம்மேளனம், சர்ச்சைகள், வித்வான்களுக்கு பட்டமளிப்பு விழா, சங்கீதம் எல்லாம் நடக்கப் போகிறதாம்.

இவர் பட்டத்தை ஏற்றபொழுது இந்த ஆதீனம் இருந்த நிலைமையையும், அது இப்பொழுதுள்ள நிலைமையையும் பார்த்தவர்கள், 'அடேயப்பா! எத்தனை மாறுதல்கள்!' என்றே மூக்கின்மீது கைவைக்கிறார்கள். தமிழை வளர்க்க தருமபுர மடாதிபதி எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பல. அங்கே ஞானசம்பந்தம் என்ற

பத்திரிகையை நடத்துகிறார் இவர். நல்லதோர் அச்சுக்கூடமும் அங்கிருக்கிறது. வேத பாடசாலை, தேவார பாடசாலை, ஆகம பாடசாலை என்றெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார். வித்வான்கள் என்றால் வேண்டிய உதவி பெறலாம் இவரிடம். நகர நிர்மாணத் திட்டம் என்று போட்டு சென்னை போன்ற இடங்களில் அமுல் படுத்துகிறார்களே, அதே போல இவரும் ஒரு திட்டம் போட்டிருக்கிறார். சண்முக தேசிக ஞான சம்பந்தத் திட்டம் என்று அதற்குப் பெயரிடலாம் என்று நினைக்கிறேன். இத் திட்டத்தின் பயனாக, தருமபுரம் ஒரு அழகுபுரமாகிவிட்டதாம். காலத்திற்கேற்ற கொள்கைகளைக் கொண்டு, இவர் பல அரிய விஷயங்களைச் செய்து முடித்திருப்பது கண்டு இவரைப் பாராட்டாதவர்களே இல்லை. நவீன மோஸ்தரில் பெரிய வீடுகள் கட்டி, தமது குடிகளுக்குக் குறைந்த வாடகைக்கு விட்டிருக்கிறார். அங்கே ரேடியோ ஒன்றையும் கொண்டு வைத்திருக்கிறார். இத்தகைய ஒருவர் இன்னும் பல காலம் தருமபுர ஆதீனத்திற்குத் தலைமை வகித்திருக்க பகவான் அருள்புரிய வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

—நாரதர் 1—9—43.

தருமபுர ஆதீனத்தில் வைபவம்

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்டத்தை முன்னிட்டு பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தருமபுர ஆதீனம் ரமணீயமாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. வைபவத்தின் தலைவர் திருவாங்கூர், திவான். சர். ஸி. பி. இராமசாமி ஐயர் 5-ந்தேதி காலையில் மாயூரம் ஜங்ஷனில் வந்து சேருவார். அவரை வரவேற்புக்கமிட்டியார் உபசரித்து வரவேற்பார்கள். காலை 10-மணிக்குப் பிறகு குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பெறும். இவ் ஆதீனத்தின் ஆதிகுருமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் மகேசுவரபூசை முதலியன சைவாசரணைப்படி நடக்கும். ஏழைகளுக்கு அன்னமளிக்க பெரியதோர் பந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது. மாலை 3-மணிக்குத் தேநீர் விருந்து வைபவம், 4-மணி துவங்கியதும் திவானுக்கு மடத்தின் சார்பாக வந்தனோபசார வரவேற்பு, மாயூரம் நகரசபை, ஏனைய விழாக் குழுவினரின் வந்தனோபசாரம், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் பதில் கூறுதல். வைபவத் தலைவர் முடிவுரைக்குப்பின்பு இக் கொண்டாட்ட வளைவு (ஆர்ச்சு) அழகாகக் கட்டியுள்ளதைத் திறந்துவைப்பார். நூல் நிலையத் திறப்புக்குப் பிறகு ஸ்ரீ கோபிநாத் கோஷ்டியாரின் நடனக்கச்சேரி நடைபெறும். இந்த வைபவத்திற்கு, மாகாணத்திலுள்ள பல பாகங்களிலிருந்து பிரமுகர்கள் விஜயம் செய்வார்களென்று தெரிகிறது. ஏராளமான பாராட்டுக் கடிதங்களும், வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்தவண்ணமாக இருக்கின்றன. உபசாரணைக் கமிட்டியார் இங்கு விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் இவ்வைபவத்திற்கு வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது 6—9—43லும், 7—9—43லும் விசேஷ நிகழ்ச்சிகளோடு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பட்டிணப்பிரவேசமும் நடத்திவைக்க பிரபலமான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது. திவான் வருகையை முன்னிட்டு, ரயில்வே அதிகாரிகள் மிகவும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

—சுதேசமித்திரன், 4—9—1943.

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பண்டாரசன்னதி அவர்களது

பத்து வருஷத்திய நிர்வாகச் சிறப்பு.

1933—43.

சந்தான ஆசாரியர்கள் முக்கியமாக ஸ்ரீ மெய்கண்டார் பரம்பரையில் உதித்த சைவ சமய ஞானசாரியர்கள் வசித்த புனிதமான வாசஸ்தலமே தருமபுரம் ஆகும். இவர்கள் பல நூற்றாண்டுகளாகத் தெய்வீக வழிபாட்டைப் பாதுகாத்துவந்துள்ளனர். தற்பொழுதுள்ள ஆதீனகர்த்தர் 24-வது மகாசந்நிதானமாவார். பிரசித்தி பெற்ற இந்த ஆதீனத்தை முதலில் குருஞானசம்பந்தர் ஸ்தாபித்தார் இந்தப்புனிதமான ஸ்தலத்தை நிச்சயித்து இங்கு ஆச்ரமம் ஒன்றைக் கட்டி முடித்தார். தாம் முத்திபெற வேண்டி தர்மபுரத்தில் மகாதேவனைக் குறித்து யமதர்மராஜன் தவம் புரிந்து முத்தியடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தருமபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மூர்த்தி ஸ்ரீ தருமபுரீசுவரர்.

தருமபுரத்தின் சிறப்பு

தருமபுரம் மாயவரத்திலிருந்து 2மைல் தூரத்திலுள்ள கிராமம். காவேரி நதியின் தென்கரையில் அமைந்திருக்கிறது. பச்சைப்பசேலென விளங்கும்தோட்டங்கள் தடாகங்கள் நீரோடைகள், தோப்புகள் முதலிய நீர்வள நிலவளங்களால் சூழப்பட்ட இத்தருமபுர கிராமம், பார்வைக்கு ரிஷிகளது ஆச்ரமம் போலவே விளங்கும், கிராம ஆரம்பத்தில் புதிதாகக் கட்டப்பட்ட விருந்தினர்கள் விடுதி நம்மை வரவேற்கிறதுபோல் இருப்பதைக் காணலாம் அதுபோலவே கிராமத்தில் நுழையும் பொழுதே விநாயகர் ஆலயத்தைக் காணலாம் இதன் பிறகு தெருக்களைச் சுற்றி வருகிறோம். வடக்கு வீதியிலிருந்து மடத்திற்குப் புறப்படுவோமானால் தற்பொழுதுள்ள மகா சந்நிதானத்திற்கு மூந்திய பட்டத்திலுள்ளவரது ஞாபகார்த்தமாக எழுப்பப்பட்ட வளைவுமூலம்தான் போகவேண்டும். பிறகு தற்பொழுது பட்டத்திலுள்ள மகாசந்நிதானம் ஆரம்பித்துள்ள இரு ஸ்தாபனங்களான தேவாரபாடசாலையையும், வேத சிவாகம பாடசாலையையும் காண்கிறோம். இவ்விரு பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு இலவச போஜனம் இடவசதி யளிக்கப்படுகின்றன. மேலும் நாம் சென்றால் தர்மபுரீசுவரர் ஆலயமும், ஆலயத்திற்கு மேற்கில் ஆதீன ஸ்தாபகரான ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆலயத்தையும் காணலாம். மடத்திற்கு அப்பர் வாயில் மூலமாக நுழைகிறோம் அப்பர் சுவாமிகள் திலகவதியார் இவர்களது அழகிய சித்திரங்களும் அவர்களது அரிய மொழிகளும் வாயிலின் இருபுறங்களையும் சிறப்பிக்கின்றன. மனதைக் கவரும் அப்பர் சுவாமிகளது தேவாரங்கள் சுவரில் எழுதப்பட்டிருப்பது வருவோரது கவனத்தைக் கவருகின்றன. வாயிலைத் தாண்டியவுடன் புத்தகசாலையைக் காணலாம். பழங்காலத்திய ஆசிரியர்களும், நவீன ஆசிரியர்களும் மத சம்பந்தமாக எழுதிய புத்தகங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம். விவரங்கள் தெரிந்துகொள்ள, சகல புத்தகங்களும் நிறைந்த தென்னிந்தியாவி

ஆுள்ள புத்தகசாலைகளுள் இது ஒன்று எனக்கூறுவது மிகையாகாது. பின்பு புராதன மடத்திற்குள் போகிறோம் இது கிழக்கில் இருக்கிறது. கட்டிடத்தின் முக்கிய பாகங்கள் பழுது பார்க்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. அழகிய செதுக்கப்பட்ட தூண்கள் அமைக்கப்பட்டு சலவைக்கற்களால் தளவரிசை செய்யப்பட்டுள்ளன. உட்புற மண்டபத்தின் இருபுறங்களிலும் உயர்த்தப்பட்ட இடங்களில் ஞானசம்பந்தம் அச்சு இயந்திரசாலை, பிரசுர இலாகாக்கள் முதலியன அமைந்துள்ளன. நவீன இயந்திர சாதனங்கள் இருப்பதுமட்டுமின்றி தேர்ச்சி பெற்ற வேலைக்காரர்களும் இங்கு வேலை செய்கின்றனர். சைவ சமயத்தார்களுக்கு மதசம்பந்தமான விஷயங்களில் அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் மாத சஞ்சிகை பிரசுரம் செய்ய முன் வந்தவர் தற்பொழுதுள்ள மகாசந்நிதானம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. "ஞானசம்பந்தம்" மேற்படி சஞ்சிகையின் பெயர். பிரசுர இலாகா இதுவரை 48 அரிய உபயோகமான புத்தகங்களை வெளியிட்டுள்ளனர். பிரசுரம்செய்யப்பட்ட வெளியீடுகள் அனைத்தும் அழகாகவும், நல்ல காகிதத்திலும் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவை இலவசமாகவோ அல்லது மிகக் குறைந்த விலைக்கோ கொடுக்கப்படுகின்றன. உள் மண்டபத்தில் மேலும் போனால் எட்டு லக்ஷ்மிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அஷ்டலக்ஷ்மி கட்டிற்கும், அங்கிருந்து வடக்கே சென்றால் ஆதீனத்தின் பிரதான மூர்த்தியான ஸ்ரீ சொக்கலிங்கத்தின் கர்ப்பக்கிருகத்திற்கும் செல்லலாம். தினசரி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் பூஜைகள் நடத்தப்படுகின்றன. இதற்குத் தெற்கே போஜன சாலை அமைந்திருக்கிறது. இங்கு சைவர்களுக்குத் தினசரி அன்னம் அளிக்கப்படுகின்றது. மேலும் உள்ளேசென்றால் மத்தியமண்டபத்திற்கு வருகிறோம். இந்த ஆதீனத்தின் பட்டத்திலிருந்த மகாசந்நிதானங்களின் உருவப்படங்களை இங்கு காணலாம். இதன் உட்புறத்தில் ஆகமக்கட்டுஇருக்கிறது. இங்கு சைவசமயாச்சாரியர்கள் முதலியவர்களின் சித்திரங்களைச் சுவர்களில் காணலாம். இதற்கும் தெற்கில்தான் வரவேற்குமிடம் அமைந்திருக்கிறது. இது சீர்திருத்தம் செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகமக்கட்டிற்கு மேலும் வடக்கே சென்றால் ஆபீஸ்கட்டிடத்தைக் காண்கிறோம். இந்தக் கட்டிடங்களுக்கு மேற்கில் பிரதானக் கட்டிடத்திற்கும் புதிதாகக் கட்டப்பட்ட விருந்தினர் விடுதிக்கும் மத்தியில் அழகிய தோட்டத்தைக் காணலாம். இதற்கு "ஷண்முக விலாஸ்" என்று பெயர். மடத்திற்கு எதிரில் படிக்கட்டுகளுடன் கூடிய அழகிய தடாகம் இருக்கிறது. மேலும் தெற்கில் சம்பந்தர் வாயில் இருக்கிறது. வடக்கேயுள்ள அப்பர் வாயிலுக்கு நேராகவே இதுவும் அமைந்திருக்கிறது.

மடத்தைச்சுற்றி நான்கு தெருக்களிருக்கின்றன. இந்தத் தெருக்களுக்கு மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டிருப்பதுடன் சிப்பந்திகளுக்காகப் பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட விடுதிகளுமிருக்கின்றன. தெருக்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதுடன் விடுதிகளும் சுத்தமாகவும் அழகாகவும் இருப்பதைக் காணலாம். இங்குள்ள சில்லரைக் கோயில்களும் குளங்களும் நல்ல நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதீனம் தேவஸ்தானம்

இந்த ஆதீனத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டு இருபத்து ஏழு தேவஸ்தானங்களிருக்கின்றன. மகா சந்நிதானம் அவர்கள் இந்தக்கோயில்கள் அனைத்தையும்

அபிவிருத்தி செய்திருப்பதுடன் இவற்றைத் திருத்தி அமைக்கப் பல ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்துள்ளார்கள். திறமையான நிர்வாகம் நடைபெறுவதற்குப் பிரத்யேகமுயற்சி எடுத்துள்ளார்கள். யாத்ரீகர்களுக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுக்க விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டுள்ளார்கள். மனித சமூகத்தினரிடம் விசேஷ அன்பு கொண்டவராதலால் ஆதித்திராவிடர்களுக்கு குடிக்க வசதி செய்யக் கிணறுகள் கட்டி உதவி செய்துள்ளார்கள். தாம்செய்துள்ள சீர்திருத்தங்கள் சரிவர நடைபெறுவதைக் கவனிக்கும் நோக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அவ்வப்பொழுது பற்பல கோயில்களுக்கும் திடீரென முன்னெச்சரிக்கையின்றி விஜயம் செய்வார்கள். அவரது ஸ்தானத்தில் வேறுயார் இருப்பினும் இவ்வித அபிவிருத்தி ஏற்பட்டிராது என்பதைத் தைர்யமாகக்கூறுவேன். இக்கோயில்களுக்குத் தரிசனம் செய்யவரும் சைவ சமயத்தார்களும், பொதுமக்களும் இங்கே ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளுக்கும் வசதிகளுக்கும ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வெகுவாகக் கொண்டாடுகின்றனர்.

உணவுப்பொருள்கள் பெருக்கத்திட்டதிற்கு ஆக்கமளித்து நூற்றுக்கணக்கான ஏக்கர்களை தான்யங்கள், கனிவர்க்கங்கள், விறகு முதலியவற்றிற்காக சாகுபடி செய்ய ஏற்பாடுசெய்துள்ளார்கள்.

ஆதீனமும் யுத்த முயற்சியும்

நேசநாட்டினர் விரைவில் வெற்றிபெறவேண்டி எல்லாக் கோயில்களிலும் அர்ச்சனைகளும் விசேஷப்பிரார்த்தனையும் செய்யும்படி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உத்தரவிட்டார்கள். பாதுகாப்புப்பத்திரங்களில் வட்டியில்லாமல் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட தொகையை முதலீடு செய்திருப்பதுடன் கவர்னர் யுத்த நிதிக்கும் அநேக ஆயிரம் ரூபாய்கள் நன்கொடையளித்துள்ளார். ஏழைகளின் துயரைப் போக்க ஏராளமான தொகை கொடுத்து உதவியுள்ளார். நேசநாட்டினருக்கு வட ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட வெற்றியைக் கொண்டாட ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்களுக்குத் தின்பண்டங்கள் கொடுத்ததுடன் ஏழைகளுக்கும் அன்னமளித்தார்கள். ஆதீனம்மட்டுமன்றி கோயில்களிலுள்ள சிப்பந்திகள் அநேகருக்கு முதல்சிகிச்சை முறையில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது.

ஆதீனத்திற்குச் சொந்தமான மோட்டார்லாரி எவ்விதப்பிரதிப்பிரயோஜனமுமின்றி கவர்மெண்டு உபயோகத்திற்கு இலவசமாக அளிக்கப்பட்டிருக்கிறது. சீதோஷ்ணநிலையைச் சீர்படுத்தும் இயந்திரம் (Air Conditioner) ஆஸ்பத்திரிகளில் உபயோகப்படுத்தச் சர்க்காரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது.

ஆதீனக் காரியாலயமும் நிர்வாகமும்

தற்பொழுதுள்ள ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆதீனம் வேலையைப் பலபிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவின் வேலையையும் தேர்ச்சிபெற்ற உதவியாளர்களிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

சர்க்கார் இலாக்காக்களைப் போலவே எல்லா அலுவல்களும் கவனிக்கப் படுகின்றன. வருஷாந்திரக் கணக்கு விவரங்கள் அனுப்பப்படும் முறையைக்கண்டு ஹிந்து மதஸ்தாபன போர்டு அதிகாரிகள் வெகுவாகத் திருப்தியடைந்துள்ளனர்.

பிரபலஸ்தர்கள் விஜயம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது நிர்வாககாலத்தில் பல பிரபலஸ்தர்கள் இவ்வாதீன மடத்திற்கு விஜயம்செய்துள்ளார்கள். பிரெஞ்சு இந்தியா கவர்னர், காரைக்காலின் நிர்வாக அதிகாரி, சென்னை மந்திரிகள், ஸர், பி. டி. ராஜன், டாக்டர் தி. சே. சௌ. ராஜன், ஸ்ரீ எஸ். ராமநாதன், டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார், ஸர், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் கே. ஸி. ஐ இ., ஸர். ஆர். எஸ் சர்மா. ஸி. ஐ. இ., முதலியவர்கள் தற்பொழுது பட்டத்திலுள்ள ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் நிர்வாகத்திறமையை வெகுவாக அவர்கள் கொண்டாடியுள்ளனர்.

நன்கொடைகள்

பொதுமக்களுக்கு உபயோகமாகவுள்ள சகலஸ்தாபனங்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் உதவியளித்துள்ளார்கள். திருப்பதியில் கீழ்த்திசைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற மகாநாட்டிற்கு ஏராளத் தொகை நன்கொடையாகக் கொடுத்து உதவி யுள்ளார்கள்.

சென்னை தமிழ்ச் சங்கத்திற்கு நன்கொடை யளித்திருப்பதுடன் இப்பொழுது அதன் போஷகராகவும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் இருந்து வருகிறார்கள். விவசாய அபிவிருத்தியில் விசேஷ ஊக்கமும் அக்கரையும் இருப்பது மட்டுமின்றி, தஞ்சை ஜில்லா விவசாயிகள் சங்கம் டெல்டா மிராசுதார்கள் சங்கத்தின் போஷகராகவும் இருந்து வருகிறார்கள். தஞ்சை, ஸரஸ்வதி மகால் லைப்ரெரியை மீண்டும் புதுப்பிக்க விசேஷமாக உதவியது மட்டுமின்றி அதன் போஷகராகவுமிருந்துவருகிறார்கள். குஷ்டரோகிகள் நிவாரணச் சங்கத்திற்கு ஊதியமளித்து உதவியுள்ளார்கள். செல்வமும், செல்வாக்கும் சூழப்பெற்றிருந்தாலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மிக்க எளிய வாழ்க்கையையே மேற்கொண்டிருக்கிறார்கள். எந்த வேலையை மேற்கொண்டாலும் இடையூறுகளைச் சற்றும் பொருட்படுத்தாமல் அதை முடித்தே தீருவார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது தர்மம் அனைத்திற்கும் சாச்வத நிதிகள் ஏற்படுத்தியிருப்பதால் அவை நிரந்தரமாக நடைபெறுபவைகளாகும். ஸ்ரீ சொக்கலிங்கஸ்வாமிகளது பரமபக்தர். தமிழ்க்கலையில் விசேஷ ஊக்கம் கொண்டவர். தமிழ் வித்வான்களை வெகுவாக ஆதரிப்பவராவார்கள். வித்வான்களது சிறந்த தமிழ் உபன்யாசங்களுக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் 1941-ம் ஆண்டில் தருமபுரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டில் அவர்களைக் கொண்டு நல்ல கட்டுரைகள் வரைய வற்புறுத்தியதன் மூலமும் சைவ உலகிலேயே பரபரப்பு ஏற்படச் செய்தார். மகாநாட்டு நடவடிக்கைகள் இன்றும் இப்பொழுதும் பண்டிதர்கள் நினைவிலிருக்கும். எல்லா மகா

நாடுகளுக்கும் இந்த மடத்தில் பிரதிநிதிகள் அனுப்பப்படுகின்றனர். முதிர்ந்த தமிழ்ப் பண்டிதர்களுக்கான சைவ சித்தாந்த மறு பயிற்சித் திட்டமும் நடை பெற்றது.

தருமபுரத்திற்குப் பக்கத்திலுள்ள இடங்களிலிருந்து மாணவர்கள் அவ்வப் பொழுது இங்கு விஜயம் செய்கின்றனர். இவ்வகையில் அவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் சிற்றுண்டிகள் வழங்கப்படுகின்றன. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்குக் குழந்தைகளிடம் விசேஷ அன்பு உண்டு. அவர்களது அறிவு வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ளார்கள். மாணவர்களது விளையாட்டுகளுக்கு ஊக்கமளிப்பது மட்டுமின்றி உயர்தரக் கல்விச்சாலைகளில் நடைபெறும் விளையாட்டுகளுக்குப் பதக்கங்கள் பரிசளிக்க ஏற்பாடுசெய்துள்ளார்கள். வெளியேயுள்ள ஸ்தாபனங்களில் பிரத்யேகப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்திருப்பதுடன் தக்க ஏழை மாணவர்களது படிப்பிற்கும் உதவுகின்றார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வருங்கால சந்ததியார்களுக்குச் செய்துள்ள எண்ணற்ற நன்மைகளுக்கும், அவர்களது நிர்வாகத் திறமைக்கும், அவரது அன்பு உதார குணத்திற்கும் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் நன்றி செலுத்துவர். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது பெயர் சரித்திரத்தில் பொன்னேபோல் புகழ்ந்து போற்றப்படும்.

ஸர். ஸி. பி. க்கு வரவேற்பு

இன்று காலை இங்கு வந்து இறங்கிய ஸர். ஸி. பி. இராமஸ்வாமி அய்யருக்கு அமோகமான வரவேற்பு நடைபெற்றது. தருமபுரம் தெருக்கள் வழியாக ஸர். ஸி. பி. இராமஸ்வாமி அய்யர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். குழந்தைகளுக்குத் தின் பண்டங்கள் வழங்கப்பட்டன. ஏராளமான கூட்டம் வந்திருக்கிறது. எங்கும் ஒரே உற்சாகமாக இருக்கிறது.

சுதேசமித்திரன், 5—9—1943.

ஹிந்து மதமும் சைவ சித்தாந்தமும்

மடாதிபதிகளின் கடமை

தருமபுரத்தில் ஸர். ஸி. பி. யின் பிரசங்கம்

மாயூரத்திற்கு அருகாமையிலுள்ள தருமபுர ஆதீனம் 24-வது ஆதீனக் கர்த்தராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்டம் இன்றையதினம் திருவாங்கூர் திவான். ஸர். ஸி. பி. இராமசாமி ஐயரின் அக்கிராசனத்தின்கீழ் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தலைவர் ஸர். ஸி. பி. க்கு ரயில்வே ஸ்டேஷனில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரபலஸ்தர்கள் ரயில்வே ஸ்டேஷனில் பிரசன்னமா

யிருந்து தலைவருக்கு மாலையிட்டு வரவேற்றார்கள். மேற்படி வைபவத்தையொட்டி தருமபுரம் பூராவும் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி மலர் கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாக ஸ்திரமான புதிய ஆர்ச்சுகள் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. காலை 10 மணிக்குத் தலைவர் நாதஸ்வரக்கச்சேரிகளுடன் ஊர்வலமாய் அழைத்துச்செல்லப்பட்டார். பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தின் பண்டங்கள் வழங்கப்பட்டது. மாஹேஸ்வர பூஜை நடைபெற்ற பிறகு ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

மாலை 1-30 மணிக்கு ஸர் ஸி. பி. இராமஸ்வாமி அய்யருக்கு மாயவரம் வக்கீல் சங்கத்தினர் சப் கோர்ட்டு கட்டிடத்தில் ஒரு உபசார, தேநீர் விருந்து நடத்தி வைத்தனர். நாகை ஜில்லா ஜட்ஜும், வக்கீல்களும் கூட்டமாய் விஜயம் செய்திருந்தார்கள்.

விழா ஆரம்பம்

மாலை 3 மணிக்குத் தேனீர் விருந்துக்குப் பிறகு வைபவம் ஆரம்பமாயிற்று ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பிரபலஸ்தர்கள் கூட்டமாய் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் ஸர். ஸி. பி. க்கு ஆதினத்தின் சார்பில் ஸ்ரீ அருணந்தித் தம்பிரான் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார். உபசாரப்பத்திரம் அழகாக வேலை செய்யப்பட்டுள்ள தந்தப் பேழையில் வைத்து திவானிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதீனகர்த்தர் அவர்களுக்கு மாயவரம் நகர சபை, ஆட்சிக் கொண்டாட்டக் கமிட்டியார், சீர்காழி வாசிகள், மாயவரம் தாலூகா சாரணர் சங்கம், மாயவரம் முனிசிபல் உத்தியோகஸ்தர்கள் சங்கம், கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேசுவரஸ்வாமி ஸ்ரீ மங்கள விலாச நூல்நிலையம், பொறையார் தரங்கம்பாடி வாசிகள் ஆகியவர்களின் சார்பாக உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. சென்னை ஹிந்துமத தேவஸ்தான போர்டு பிரசிடெண்டு திவான்பகதூர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை ஸ்ரீலஸ்ரீ சன்னிதானம் அவர்களுக்கு மேற்படி வைபவத்தின் ஞாபகார்த்தமாக "நினைவு மலர்" சமர்ப்பித்தார். கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அனுப்பியுள்ள பிரஸாதமும், ஆசிச் செய்தியும், மேன்மைதங்கிய சென்னை கவர்னர் அனுப்பியுள்ள செய்தியும், படிக்கப்பட்டபிறகு ஸ்ரீலஸ்ரீ ஆதீனகர்த்தர் அவர்கள் சார்பாகத் தனக்கு அளித்த நல்வரவேற்பும் பத்திரங்களுக்காகவும் உபசாரங்களுக்காகவும், வந்தனம் அளிக்கப்பட்டது.

ஸர். ஸி. பி. யின் பிரசங்கம்

ஸர். ஸி. பி. இராமஸ்வாமி அய்யர் பலத்த கரகோஷங்களிடையே பேசுகையில், இந்த மடத்தின் நிர்வாகத்தலைவரின் பத்து வருஷபூர்த்திக்கொண்டாட்டத்தில் தான் ரொம்பவும் சந்தோஷத்துடன் தலைமை வகிப்பதாகவும் பதின்மூன்று வருஷங்களுக்கு முந்தி தான் இங்குவந்திருப்பதாகவும், அப்பொழுது இருந்த நிலைமைக்கும் தான் இப்பொழுது பார்ப்பதற்கும் மடத்தின் நிர்வாகத்தில் விசேஷ சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் 500 வருஷங்களுக்குமுன்பு இந்த மடம்

எதற்காக ஸ்தாபிதம் செய்யப்பட்டதோ, அதே நோக்கத்தை ஈடேற்றப் பல துறைகளில் மடத்தின் நிர்வாகம் அபிவிர்த்தி யடைந்து வருவதைக் குறித்துப் பாராட்டுவதாகவும், ஹிந்து மத தர்மத்தையும், சைவ சித்தாந்தத்தைப் பரப்புவதற்காகவும் தான் மடங்கள் ஏற்பட்டிருப்பதால் மடாதிபதிகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள கடமையை உணர்ந்து அதற்காக ஆர்வத்துடன் உழைக்கவேண்டும் என்றும் கிருஸ்துவப் பாதிரிகள் தங்கள் மத அபிவிர்த்திக்காக எவ்வளவு தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து நமது ஹிந்துமதமும், தர்மமும் ஓங்கிவளரத் தீவிரமாக வேலைசெய்யவேண்டும் என்றும், மற்றமதத்தினர்கள் எல்லோரும் தங்கள் மதத்தை அபிவிர்த்திசெய்யப் பல துறைகளிலும் தீவிரமாக பிரசாரம் செய்துவரும் இந்த நெருக்கடியான சமயத்தில் ஹிந்து மதமும், கலையும் அபிவிர்த்தி செய்ய முற்போக்கான திட்டங்களுடன் தீவிரமாக வேலைசெய்யவேண்டியது மடாதிபதிகளுடையவும், கோவில் நிர்வாகிகளுடையவும் கடமை என்பதைத்தான் வற்புறுத்திக் கூற விரும்புவதாகவும், இந்த வைபவத்திற்குத் தன்னை தலைமைவகிக்கும்படி கேட்டுக் கொண்டதற்காகத் தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுவதாகவும், சொன்னார்.

பிறகு ஸர் ஸி. பி. கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாகப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொண்டாட்டவளைவு, ஆதீனநூல்நிலயம் ஆகியவைகளைப் பலத்த கரகோஷங்களிடையே திறந்து வைத்தார். வைபவம் வெற்றிகரமாக நடைபெறவேண்டும் என்று கோரி, ராஜா, ஸர். அண்ணாமலை செட்டியார், ஸர், பி. டி. ராஜன், ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல், ஸ்ரீமான்கள் சி. எம். இராமச்சந்திர செட்டியார் (ஹிந்துமத தேவஸ்தானபோர்டு கமிஷனர்) டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் (திருவாங்கூர் ஹைக்கோர்ட் சீப் ஜஸ்டிஸ்) முதலிய பல பிரபலஸ்தர்களிடமிருந்து வந்த ஆசிக்கடிதங்கள் படிக்கப்பட்டன. பிறகு ஸ்ரீ கோபிநாத் கோஷ்டி நடனத்துடன் முதல் நாள் வைபவம் முடிவு பெற்றது.

—சுதேசமித்திரன். 7—9—1943

SRI SHANMUKHA DESIKA SWAMIGAL FELICITATED

Sir C. P. Ramaswami Aiyar's Tribute

DHARMAPURAM.

Sir C. P. Ramaswami Aiyar, Dewan of Travancore, who arrived at Mayavaram last night, in connection with the celebration to mark the tenth year of accession of H. H. Sri la sri Shanmukha Desika Gnanasambandha Swamigal of Dharmapuram Adhinam, was given a reception by the Special Committee formed for the purpose.

This morning Sir C. P. Ramaswami Aiyar was taken in procession to the Mutt Headquarters at Dharmapuram. Leading landholders of the district. Mr. K. S. Ganesa Aiyar, District Judge, East Tanjore, Sir R. S. Sarma, Dewan Bahadur T. M. Narayanaswami Pillai and others were present.

Sir Ramaswami Aiyar after an hour's talk with His Holiness, proceeded to the Mayavaram Bar Association at 2 in the afternoon. After tea. Mr. P. Balasubramania Aiyar, President of the Bar Association, in welcoming the Dewan, spoke in appreciative terms of his donation to the Madras Advocates' Association.

The Dewan, in his reply, referred to the crowding in the legal profession, at also to the absence of organisation, comradeship and even trade union spirit, and appealed to them to rise equal to the situation. He added that it was not always merit thas succeeded in the profession, but chance and luck counted much.

Mr. K. S. Ganasa Aiyar, District Judge, East Tanjore, referred in appreciative terms to Sir C. P. Ramaswami Aiyar's donation to the Lawyers' Benevolent Fund.

The celebration in connection with the commemoration of the accession of H. H. Sri la sri Shanmukha Desika Gnanasambanda Swamigal commenecd in the evening, under the presidentship of Sir C. P. Ramaswami Aiyar. The Celebration Committee presented addresses to the President and to His Holiness, enclosed in ivory caskets. The Mayavaram Municipal Council, the Shiyali Saivite citizens, the Scout Association, the Municipal Empolyees' Association and several other public bodies presented addresses to His Holiness, felicitating him, and referring to the keen interest he had evinced in the spread of Saivism. Messages from H. E. the Governor of Madras, Raja Sir Annamalai Chettiar, and others were read.

Sir C. P. Ramaswami Aiyar spoke for about an hour, explaining the duties and responsibilities of the Mutts in general and paid a glowing tribute to the work and administration of His Holiness the Pandarssannathi. He also opened the Dharmapuram Adhinam Library Buildings and the Commemoration Arch.

His Holiness announced the investment of Rs. 1 lakh in the Defence Savings. The celebrations will continue for two days more.

The Hindu. 7—9—1943.

IMPORTANCE OF MUTTS

Travancore Dewan's Address.

Speaking on the occasion of the First Decennial Rule celebration of H H. Srilasri Shanmukha Desika Gnanasambanda Swamigal of Dharmapuram Adhinam yesterday, (a report of which has already appeared in these columns), Sir C. P. Ramaswami Aiyar, Dewan of Travancore referred to his visit to the place about 13 years ago to conduct a litigation on behalf of the Mutt. and to the vast improvements that had been effected since—which testified to the organising talents and capacity of the present Head of the Mutt.

After briefly referring to his connections with the Mutt, Sir Ramaswami Aiyar dealt with the origin and institution of the mutts in general, and observed that 1,000 years

ago, when strange faiths, new cults and new ways of philosophy invaded the country and threatened to bring in new-fangled ideas, these mutts originated as centres of learning to propagate their faith and to keep alive the torch of learning. Our religious institutions, our temples and mutts would be failing in their duty and would be untrue to the great trust which devolved upon them, if they did not institute a system by which the truth, as they saw it were not propagated.

Proceeding, Sir C. P. Ramaswami Aiyar referred to the temples in the Travancore State and said that these were connected with Sanskrit · culture and the priests were all trained in a school and only those who were trained in that school could perform poojas in such temples. He stated that about 1½ millions of the people living in the State were Tamils, and they had no such priests, and appealed to the Heads of Mutts to take immediate steps for the propagation of Tamil culture in these places. The speaker continued that there was no essential disparity and no divergence of idea and outlook between Sanskrit and Tamil. One of our great national saints, Thayumanavar did not hesitate to use Sanskrit version in Tamil and Tamil in Sanskrit, considering both the languages as national streams. The speaker saw no distinction really between these Sanskrit and Tamil cultures, and hoped that enlightened men, like the Head of the Mutt, would spread the true spirit of religion.

Dewan Bahadur T. M. Narayanaswami Pillai, President of the Hindu Religious Endowments Board, Rao Saheb C. S. Srinivasa Mudaliar and Rao Saheb N. R. Samiappa Mudaliar also spoke felicitating Sri Shanmukha Desika Swamigal. A volume, enclosed in a silver case, touching upon the various reforms effected during thg tenure of His Holiness was presented to the latter by Mr. T. M. Narayanaswami Pillai. The present Pandarasannadhi had assumed office in 1933, and was responsible for renovating the temples at Shiyali, Mayavaram and Vaitheeswarankoil. The Mutt owns extensive landed properties, with an annual income of about Rs. 5 lakhs.

The function concluded with a short programme of dances by Gopinath and party and a vote of thanks proposed by Sir R. S. Sarma.

—The Hindu, 8—9—1943.

PROPAGATE TAMIL CULTURE

Appeal to Heads of Mutts

Dharmapuram: An appeal to heads of Mutts to take immediate steps for the propagation of Tamil culture was made by Sir C. P. Ramaswami Ayyar, Dewan of Travancore, presiding over the 10th year of accession of Sri Shanmugha Desika Gnanasambanda Swamigal of Dharmapuram Adinam. He added that 1½ million people in Travancore State were Tamils and they had no priests in the temples to inculcate the spirit of their religion into their minds. All the temples were connected with Sanskrit culture and the priests were all trained in the Sanskrit schools only.

The Dewan, on arrival, was received and taken in a procession, Sri Arulanandi Thambiran presented an address. The Mayavaram Municipality and other institutions

presented addresses to the Pandarasannadhi on the occasion. Messages wishing the function success were received from H. E. the Governor of Madras. Mr. T. M. Krishnaswami Ayyar, Chief Justice of Travancore, and Raja Sir Annamalai Chettiar, Dewan Bahadhur, T.M. Narayanaswami Pillai presented a silver box containing a book on the Mutt's reforms. Rao Bahadur Srinivasa Mudaliar paid a tribute to the President and His Holiness.

Sir C. P. Ramaswami Ayyar referred to his connexion with the Mutt some 13 years ago regarding litigation, and paid a tribute to the wisdom and foresight of the Head of the Mutt and the reforms carried out by him. He then dealt with the origin of mutts and Sanskrit and Tamil culture. Quoting instances from Thayumanavar's works he said the Sanskrit and Tamil cultures propagated the origin and history of faith. Temples and mutts would be failing in their duty if they did not propagate the truth as seen by them. Times, no doubt, had changed and the functions of the holy mutts and ministers of religion had also undergone changes.

SANSKRIT-TAMIL CONTROVERSY

Sri Ramaswami Ayyar said that there was no disparity and no divergence of idea and outlook between Sanskrit and Tamil. Great saints like Thayumanavar did not hesitate to use Sanskrit words in Tamil and Tamil words in Sanskrit. The two languages were national streams. Internal hatred was responsible for the Sanskrit-Tamil controversy, and the Dewan hoped that periods like the Head of the Mutt would help to spread the true message of religion.

Earlier Sir C. P. Ramaswami Ayyar opened the commemoration arch in Sir Arthur Hope Road, and also opened the Mutt's Tamil library. There was a dance performance by Gopinath and party.

Among those who attended the function were Sir R. S. Sarma, Rao Saheb Srinivasa Mudaliar, Rao Bahadur V. S. Thyagaraja Mudaliar, Dewan Bahadur T. M. Narayanaswami Pillai, Mr. K. S. Ganesa Ayyar, Distrcit Judge, Negapatam, Mr. C. Kanakasabhai Chettiar, Mr. Krishnamurthi Sarma and others.

At Mayavaram the Bar Association presented an address to the Dewan and also entertained him at a tea party. Replying to the address Sir C. P. Ramaswami Ayyar said the presonal difficulties of the lawyers were due to the profession being too much overcrowded.

—The Mail, 8—9—1943

மணி முடி விழா.

"ஹிந்து மதம் பழமையான மதம். அதன் பெருமை சொல்லச் சொல்லப் பெருகும்; ஆனல் அதற்கு ஒரு குறை இருக்கிறது. போதுமான பிரசாரமும், பிரசாரகர்களும் இல்லாதது குறை. அந்தக் குறையைத் தருமபுரம் போன்ற பெரிய ஆதீனத்தைப் பரிபாலித்து நடத்துகிறவர்கள் வெகு எளிதில் அகற்றலாம். மதம், கலே ஆகியவற்றைப் பாதுகாப்பவர்களாகிய நீங்கள் இதற்காகத் தனியாக

ஒரு பள்ளியை ஏற்படுத்தி, அதிலே பிரசாரகர்களைத் தயார்செய்யவேண்டும், அவர்களை நாடெங்கும் அனுப்பவேண்டும். ஹிந்துமதத்தின் பெருமை நம்மவர்களிலேயே பலருக்குத் தெரியாதிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் இதன் உண்மைப் பெருமையைத் தெரியப்படுத்தவேண்டும்.

சம்ஸ்க்ருதம், தமிழ் என்று வேற்றுமைப் படுத்தியும், சம்ஸ்கிருதத்தைத் தலை தூக்கவொட்டாது ஒதுக்கி வைக்கவேண்டுமென்றும் பேசி வருகிறார்கள் சிலர். அது சுத்த அசட்டுத்தனம். ஒன்றுக்கொன்று சகோதர பாவத்தில் உள்ளது; ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்டவை அவை. இது பலருக்குத் தெரிவதில்லை. "சரியான பிரசாரத்தால் இந்த அறியாமையை அகற்றலாமே!" என்று அழகாகவும், கம்பீரமாகவும் அன்று தருமபுரத்திலே தற்போதைய மடாதிபதியாகவுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதிகளின் மணிமுடி விழாவிலே, ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் பேசினார்.

ஸர், ஸி. பி. ராமஸ்வாமி அய்யரை இந்த விழாவிற்கு வரவழைத்து, அவர் தலைமையில் பண்டார சந்நிதிகளுக்கு வாழ்த்துக்கள் பலவற்றைக் கூறி, ஏழைகள் பல்லாயிரவர்களுக்கு இன்னமுதுபடைத்து, கோபிநாத் கோஷ்டி நடனம், எம். எஸ். கச்சேரி, நடன கலாசேவா டான்ஸ் ஆகியவற்றிற்குப் பல பிரமுகர்களைச் சேர்த்துக்கொண்டு ஏற்பாடுசெய்து அனைவரையும் மகிழச்செய்த ஸர், ஆர். எஸ். சர்மா, ஸர். ஸி. பி. க்கும், மற்றபேர்களுக்கும் வந்தனம்கூற எழுந்து, வெகு தமாஷாகச் சிறிதுநேரம் பேசினார்.

ஸர் ஸி.பி. பேசியபின் இன்னொருவர் பேசுவதென்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம். அத்தகைய பட்டத்தைப் பெறுவோரில் நானும் ஒருவனாக இருக்க இஷ்டமில்லை. இப்பொழுது வாசகசாலையை ஸர். ஸி. பி. திறந்துவைக்கவேண்டியிருக்கிறது. அதற்கிடையில் நான் என் வாயைத்திறக்க உத்தேசிக்கவில்லை என்று ஸர். சர்மா கூறியபொழுது, ஒரே கரகோஷமும் சிரிப்புமாகிவிட்டது.

தருமபுர மடாதிபதி செய்துள்ள சீர்திருத்தங்களை அந்த கெடுபிடியில் பார்க்கமுடியவில்லை. சாவதானமாகப் பிறகு பார்க்கவேண்டும். ஆனால் அந்த இடத்தை, கலைக்கு இருப்பிடம் என்று சொல்லுவதற்கு அதிக அவகாசம் ஒன்றும் தேவையில்லை. சுத்தம் என்பதை அங்குதான் காணவேண்டும். மனத்திலே தூய்மை; ஆகவே வெளியெங்கும் தூய்மையாகவே தோன்றுகிறது.

இப்பொழுதுள்ள பண்டார சந்நிதிகள், நம். எம். எம். தண்டபாணி தேசிகருடைய பால்ய சிநேகிதராம். பல கலைகளிலே நல்ல பாண்டித்யமுடையவராம். அதுகாரணம் பற்றியே பண்டிதர்களை ஆதரிக்கத் துணிந்திருக்கிறார் அவர். இளம்பிராயம்தான். இன்னும் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டும்; தமிழின் இன்பத்தைச் சகலரும் பருக வழிசெய்ய வேண்டும்; நமது மதத்தின் பெருமையை மண்டல மெங்கும் பரவச் செய்ய வேண்டும் என்ற அவா அவரது அகத்திலே பொங்கிக்கொண்டிருக்கிறது என்பதை அவரது முகம் நன்றாகக் காட்டுகிறது. இத்தகைய ஒருவரைக் காணவும், அவரது மணிமுடி விழாவில் கலந்துகொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி நான் பெரிதும் மகிழ்ந்தேன். பூரண மகிழ்ச்சி

யுடன் திரும்பிப் போகிறேன். எல்லாம் இன்ப மயமாகவே இருந்தன' என்று சொல்லிச் சென்றார் ஸர் ஸி. பி. நான் மட்டும் வேறு என்ன சொல்லப் போகிறேன் என்று நினைக்கிறீர்கள். அதுவேதான்! அதோடு இந்தப் பண்டார சந்நிதிகள் இன்னும் பல்லாண்டு சுகமே இப் பீடத்தில் அமர்ந்திருந்து, நன்மைகள் பல புரிய, பகவான் அருள் பாலிக்கவேண்டும் என்றும் பிரார்த்திக்கப் போகிறேன்.

—நாரதர், 8—9—1943.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீன 24-வது மகாசந்நிதானமாய் விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்டம்.

நமது சோழவளநாட்டில் சைவசமய அபிவிருத்தியை நாடி நிறுவப்பட்ட ஆதீனங்களுள், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீன மடாலயம் சிறந்து விளங்குவதொன்றாம். இம்மடாலயமிருக்கும் இடமாகிய தருமபுரம் இயற்கை வளங்கள் நிரம்பியதாய், தவத்தினர் வதிதற்குரிய வாய்ப்புடையதாய் விளங்குவது. இவ்வாதீனத்தார் தவவொழுக்கத்தை நன்குணர்ந்தே 27 தேவஸ்தானங்கள் சிறப்புடையனவாக இவர்கள்பால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாதீனத்தை நிறுவியவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இத் திருத்தலத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் மூர்த்தி ஸ்ரீ தருமபுரீசுவரர். இப்போது இவ்வாதீன கர்த்தராகி 24-வது மகாசந்நிதானமாக விளங்குபவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

தபோவனமாக விளங்கும் இத் திருத்தலத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் விருந்தினர் விடுதி, விநாயகராலயம், மடத்திற்குள் புகுந்தால் தமிழ் வேதமாகிய தேவார பாடசாலை, வேதசிவாகம பாடசாலை, 'ஞானசம்பந்தம்' பதிப்பகம், பிரசுராலயம், அஷ்டலக்ஷ்மி ஆலயம், போஜனக்கட்டு, ஆகமக்கட்டு, ஆபீஸ்கட்டு, மடாலயத்திற்கெதிரே படிக்கட்டுகளுடன் திருக்குளம் முதலியவை அமைக்கப்பட்டிருக்கின்றன. மடத்தைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களிலும் வீடுகள் செம்மையுறப் புதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அத்தலமெங்கும் மின்சார விளக்குகள் இரவில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. சிப்பந்திகளுக்காகக் கட்டப்பட்டுள்ள விடுதிகளுமிருக்கின்றன. அங்குள்ள திருக்கோயில்களெல்லாம் செம்மையுற்று விளங்குகின்றன. இவ்வாதீன நிர்வாகத்திற்குரிய தேவஸ்தானங்களெல்லாம் சீர்திருத்தப்பட்டு நல்ல நிலைமையில் விளங்குகின்றன. யாத்ரீகர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாதீன கர்த்தர் அருளையே அணிகலமாகப் பூண்டவராதலால், ஆதித்திராவிடர்களுக்குக் குடித்தண்ணீர் வசதிக்காகக் கிணறுகள் வெட்டியுள்ளார்கள். மற்றும், உணவுப்பொருட் பெருக்கம், நமது மன்னர் போரில் வெற்றியுறவேண்டி தமதாதீன ஆலயங்களெல்லாவற்றிலும் விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து பூசித்தல், யுத்தநிதிக்காக அநேக ஆயிரம் ரூபாய் நன்கொடை யளித்தல் முதலான பொதுநலக் காரியங்களில் சிரத்தைகொண்டுள்ளார்கள். தமிழ்மொழி வளர்ச்சியின்பொருட்டு தமிழ்ச் சங்கங்களுக்குத் தக்க

பொருள் உதவியுள்ளார்கள். தஞ்சை சரசுவதிமாலைப் புதுப்பிக்கவேண்டி பொருளுதவியுள்ளார்கள். புலவர்களைப் புரப்பதில் பேரன்பு உடையவர். ஏழை மாணவர்களுக்கு இயன்ற உதவி புரிகின்றனர். மக்களது அறிவு வளர்ச்சியில் கருத்துடையவர். உயர்தரப்பள்ளியில் மாணவர்களுக்குப் பதக்கங்கள் பரிசளிக்கும் பாங்குடையவர். இன்னோரன்ன மகாசந்நிதானத்தின் பேரன்பையும் நிர்வாகத் திறமையையும் எடுத்துரைக்க இவ்வேடு இடங்கொடா.

இத்தகையோர் தாம் குருஸ்தானத்து அமர்ந்து சென்ற பத்தாண்டு நிறைவின் நிர்வாகத் திறமையைப் பாராட்ட 5—9—43 முதல் மூன்றுநாட்கள் அத்தலத்தில் ஒரு குதூகலமான விழா நடத்தப்பட்டது. முதல்நாள்: காலையில் சச்சிவோத்தம சர் C. P. இராமசாமி அய்யர் அவர்கள் சகல சம்பிரமங்களுடன் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டு திருவிழாவிற்குத் தலைமைவகித்தார்கள். குழந்தைகட்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. குருபூஜை, மாகேசுவரபூஜை நன்கு நடந்தேறின. ஏழை எளியவர்கட்கு அன்னமளிக்கப்பட்டது. மாலையில் தேநீர் விருந்து நடைபெற்றது. விழாத் தொடக்கத்தில் கடவுள் வணக்கம் செய்யப்பட்டுத், திவானுக்கு மடத்தின் சார்பாக வந்தனோபசாரம் வழங்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கட்குப் பல கழகங்களால் வந்தனோபசாரங்கள் வழங்கப்பட்டன. அவர்களது நிர்வாகத் திறமையைப்பற்றிப் பலரும் பலவாறு பாராட்டிப் புகழ்ந்து போற்றினார்கள். புகைப்படமெடுக்கப்பட்டு, கொண்டாட்ட வளைவு, ஆதீன நூல் நிலையம் திறப்பு ஆகியவைகள் நடைபெற்றன. நல்விருந்து செய்யப்பட்டது. ஸ்ரீ கோபிநாத் கோஷ்டி நடனக்கச்சேரி நடைபெற்றது. இரண்டாம்நாள்: சென்னை இந்து சமய அறநிலைக்கழகத் தலைவர் திவான்பதூர் ஸ்ரீ T. M. நாராயணசாமி பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள். கோவை சிவக்கவிமணி ஸ்ரீ C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்கள் பெரியபுராணத்தில் ஸ்ரீ அப்பர் புராணத்திற்கு இயற்றிய விரிவுரை அரங்கேற்றம் நடைபெற்றது. வித்துவான்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானத்திற்கு வாழ்த்துப் பத்திரங்கள் அளித்தல், அவர்கட்குப் பட்டம் வழங்குதல், இசைக்கச்சேரி முதலியன நிகழ்ந்தன. மூன்றாம்நாள்: விழாவிற்கு மாயவரம் நகராண்மைக்கழகத் தலைவர் ஸ்ரீ C. கனகசபை செட்டியாரவர்கள் தலைமைவகித்தார்கள். சமயப் பிரசங்கங்கள், பாட்டுக்கச்சேரி, டான்சு முதலியவை நடைபெற்றன. இரவு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அலங்காரச் சிவிகையில் ஆரோகணிக்கப்பெற்று, சிறந்த மேளவாத்திய கோஷங்கள் முழங்கப் பட்டணப் பிரவேசம் செய்தருளினார்கள். இவரது அருட்கோலத்தைக் கண்டுகளிக்கப் பல ஜனங்கள் வந்திருந்தார்கள். தபோவனமான இத்தலம் இந்திரவனம் போல் இலங்கியதென்னலாம். பலவகையிலும் இக்கொண்டாட்ட விழா சிறப்புற நடந்தேறியது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் இவ்வாறு செவ்விய முறையில் நிர்வாகஞ் செலுத்திச் சைவமும் தமிழும் தழைத்து வளரத்தக்க பணிகள் இன்னும் பல புரிந்து சுகசீவியாய் நீடுவாழத் திருவருளை வழுத்துகின்றோம்.

—யதார்த்தவசனி, 8—9—1943.

தருமபுர ஆதீனம் 10-வது ஆண்டு விழா இரண்டாம் நாள் நடவடிக்கை.

மேற்படி கொண்டாட்டத்தின் இரண்டாம் நாள் நடவடிக்கை சென்னை ஹிந்து மத பரிபாலன போர்டு தலைவர் ஸ்ரீமான் டி. எம். நாராயணசாமிபிள்ளையின்

தலைமையின்கீழ் நேற்றையதினம் ஆரம்பமாயிற்று. ஆரம்பத்தில் ஸ்ரீநாராயணசாமி பிள்ளைக்கு கொண்டாட்டத்தாரின் சார்பில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. உபசாரப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டு ஸ்ரீநாராயணசாமிபிள்ளை பேசுகையில் காலத்துக்கும் சமயத்துக்கும் தகுந்தபடி மடத்தில் நிர்வாகம் திருத்தியமைக்கப்பட்டு வருவதைக்குறித்து மனப்பூர்வமாய்ப் பாராட்டுவதாகவும், சமூக வாழ்விலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும், மடங்களுக்கும் சைவ மக்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதுபோல் ஒரு எண்ணம் இருந்து வந்ததாகவும் சைவ மக்களும் மடங்களும் இணைய வேண்டியது அத்தியாவசியம் என்றும், மனிதசமூகத்தைத் திருத்தி யமைக்க நல்ல பயிற்சி அத்தியாவசியமானதால் ராமகிருஷ்ண மிஷனைப்போல் மடத்துக்கு வருபவர்களுக்கு ஒரு உயர்தரப் பள்ளிக்கூடம் இருக்கவேண்டியது அவசியம் என்றும், இந்தமடம் நம்முடையது என்ற உணர்ச்சி பொது மக்களுக்கு ஏற்படவேண்டும் என்றும், மடம் சமூகத் தொண்டில் ஈடுபடவேண்டியது அவசியம் என்றும் சொன்னார். சேக்கிழார் அருளிய அப்பர் புராணம் ஸ்ரீ சி. கே. சுப்பிரமணிய முதலியார் இயற்றிய விரிவுரை அரங்கேற்றப்பட்டது. பிறகு வித்வான்கள், ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதீனகர்த்தர் ஸ்வாமிகளுக்கு வாழ்த்துப்பத்திரம் படித்துக்கொடுத்தார்கள். புலவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப் பட்டு, மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவருடைய முடிவுரைக்கும் பிறகு சங்கீத கச்சேரியுடன் இரண்டாம் நாள் வைபவம் முடிவு பெற்றது.

கடைசிதின நடவடிக்கை.

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிக் கொண்டாட்டத்தின் கடைசி தினம் மாயவரம் முனிசிபல் சேர்மன் ஸ்ரீ C. கனகசபைசெட்டியார் தலைமையின் கீழ் நேற்றைய தினம் ஆரம்பமாயிற்று. ஆரம்பத்தில் மடத்தின் சார்பில், தலைவருக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ செட்டியார் பேசுகையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் மடத்தின் நிர்வாகத்தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து மடத்தின் நிர்வாகம் பல துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து இருப்பதாகவும், இந்த வைபவத்தை யொட்டி ஏராளமாக வாழ்த்துகள் வந்திருப்பதாகவும், அவைகளை எல்லாம் சேர்த்து புஸ்தக ரூபமாக வெளியிட முடிவு செய்திருப்பதாகவும், சுவாமிகள் ஹிந்து மதத்தைச் சேர்ந்த தாழ்ந்த வகுப்பினர்கள் முன்னேற்றத் திற்காகவும் வைத்திய வசதி கிராம புனருத்தாரனம் ஆகிய வேலைகளில் விசேஷ ஒத்தாசை செய்து வருவதாகவும், சமயத்துக்கும் காலத்துக்கும் ஏற்றவாறு லௌகிகம் வைதீகம் இரண்டையும் சேர்த்து வெற்றிகரமான காரியங்களைச் செய்துவருவதாகவும் சொன்னார். பிறகு குடந்தை நகரில் பாரதி போட்டி பாடல்களில் எட்டு ஆண்டுகளாகப் பதக்கங்கள் பெற்று வருகிற மாணவர் சி. என். வேதாந்தம் பாரதி பாடல்களைப் பாடினார். பிறகு மௌனமடம் ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் பேசிய பிறகு நேற்றைய தினம் ஆதீன புலவர் பட்டம் பெற்ற வித்வான்கள் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். பிறகு ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள், "சைவ சிந்தாந்த சரபம்" என்ற பட்டத்தை ஸ்ரீ ஈசான்ய சிவாசாரிய சுவாமிகளுக்கு வழங்கினர். மேற்படி வைபவத்தை வெற்றிகரமாக நடத்தியதற்காக உபசரணை கமிட்டியாருக்கு ஸ்ரீ ஆதீனகர்த்தர்கள் சார்பாக வந்தனோபசாரம் கூறியபின் தலைவர் முடிவுரை

யுடன் வைபவம் முடிவுபெற்றது. பிறகு மாகேஸ்வர பூஜையும் இரவில் பட்டணப் பிரவேசமும் வெகு விமரிசையாக நடைபெற்றது. இரண்டாம் நாள் இரவு ஸ்ரீ மதி எம். எஸ். சுப்புலெக்ஷிமி சங்கீத கச்சேரியும், கடைசிதினத்தில் ஸ்ரீ எம். எம். தண்ட பாணி தேசிகர் சங்கீத கச்சேரியும். ஸ்ரீமதி எஸ் டி. சுப்புலெக்ஷிமி கோஷ்டியார் நடனமும் விமரிசையாக நடைபெற்றது. தற்போதைய ஆதீனகர்த்தராகிய ஸ்ரீ சண் முக தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் 1933-ம் வருடம் பட்டத்துக்கு வந்தார். அவருடைய பத்து வருட நிர்வாகத்தில் மாயவரம், சீர்காழி, வைதீசுவரன் கோவில் முதலிய பல இடங்களிலுள்ள கோவில்கள் திருப்பணி செய்விக்கப்பட்டும், மடமும் அதைச் சுற்றியும் பல புதியகட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டும், சைவசித்தாந்தத் தைப்பரப்ப ஆகம பாடசாலை, தேவார பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு நடந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

— சுதேசமித்திரன், 9—9—43.

VIDVATH SAMMELAN AT DHARMAPURAM

In connection with the Decennial Rule celebrations of Sri Shanmukha Desika Swamigal of Dharmapuram Adhinam, there was a Vidvath Sammelan, when the commentaries by Mr. C. K. Subramanaia Mudaliar on Appar's Peria Puranam were approved.

His Holiness conferred titles of "Darmapuram Adhina Vidvan" on several Vidvans and distributed prizes to the Primary, Secondary, and High School students, who came out successful in sports. Defence Bond Certificates were given as prizes to some of the winners in sports, along with silver cups.

Mr. C. Kanakasabai Chettiar, Chairman, Mayavaram Municipal Council, presided over the third day's proceedings, when lectures on religion and philosophy were delivered by various Vidvans. After a music programme in the evening, His Holiness was taken in procession round the main streets of Dharmapuram, with which the celebrations came to a close.—F. O. C.

—The Hindu, 9—9—1943.

தருமபுர ஆதீன விழா

இம்மாதம் 5-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மறக்கமுடியாத ஓர் சுபதினம். தமிழ்நாடே கொண்டாட வேண்டிய தவத் திருநாள் அது. காரணம் தருமபுர ஆதீன 24-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மடாதிபதியாக ஆட்சி பெற்று பத்தாண்டுகள் சிறப்பாகக் கழிந்துள்ளன. அத்தினத்தை விசேஷமாகக் கொண்டாடத் தஞ்சை ஜில்லாவின் பல பிரபலஸ் தர்கள் முன் வந்தது போற்றத்தக்கது.

தஞ்சாவூர் ஜில்லா வாசியான ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் கடந்த பத்தாண்டு களில் ஆற்றியுள்ள அரும் பெரும் செயல்கள் அளப்பரியன. தருமபுரத்தை ஓர்

பூலோக சொர்க்கமாகக் கருதி சுவாமிகள் ஒரு தனித் திட்டம் வகுத்துச் செயலாற்றி வந்திருக்கிறார். நாகரிக நகரங்களின் நிர்வாக சபைகளில் கூச்சலுடன் எழுகின்ற திட்டங்களே கவனத்தைக் கவரும் இந் நாட்களிலே, தருமபுர மடாதிபதி விளம்பர மின்றி நிறைவேற்றும் செயல்கள் வெளிவராதிருப்பது வியப்பல்ல. தருமபுரத்தில் பெரிய வீடுகள் கட்டி, தம் குடிகளுக்குக் குறைந்த வாடகைக்கு விட்டிருக்கிறார். ரேடியோ ஒன்றும் ஸ்தாபித்துள்ளார். இன்னும் காலத்திற்கு ஏற்ற பல சீர் திருத்தங்கள் செய்திருக்கிறார்.

தமிழ் வளர்ச்சிக்காக மடாதிபதி காட்டும் ஆர்வமும், செய்து வரும் முயற்சி களும் தமிழ்நாடு நன்கறிந்தவை. ஆதீனத்திலிருந்தே 'ஞானசம்பந்தம்' எனும் பத்திரிகை ஒன்று வெளியிடப்படுகிறது. தமிழன்பர்களுக்கும் வித்வான்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்யப்படுகின்றன அங்கு. தேவார ஆகமப் பாடசாலை களுடன், நல்ல அச்சுக்கூடம் ஒன்றும் அங்கு இருக்கிறது.

பொது ஜன நலத்தில் இவ்வளவு ஆர்வம் கொண்டுள்ள மடாதிபதியின் ஆட்சி விழா கொண்டாடுவது தகுதியான காரியமல்லவா? இவ்விழா 5, 6, 7 தேதி களில் சிறப்பாக நிறைவேறியது.

முதல் நாள் திருவாங்கூர் சமஸ்தான திவான் சச்சிவோத்தம சர். ஸி. பி. இராமசாமி ஐயர் தலைமைவகித்தார். பூஜை, மாகேசுவரபூஜை, ஏழைக்கு அன்ன தானம், வந்தனோபசாரம், சிறப்புரைகளுடன் கோபிநாத் கோஷ்டி நடனமும், நடைபெற்றது. விழாவின் நினைவுச் சின்னமாகக் கட்டப்பட்டுள்ள 'கொண்டாட்ட வளைவு', ஆதீன 'நூல் நிலையம்' ஆகியவற்றைத் தலைவர் திறந்துவைத்தார்.

இரண்டாம்நாள் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை தலைமையில் வித்வத் சம்மேளனம், கோவை திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் இயற்றிய 'அப்பர் புராண விரிவுரை' அரங்கேற்றம், வாழ்த்துப் பத்திரம் படித்தல், பட்டம் பரிசுகள் வழங்கல், சங்கீதக் கச்சேரி முதலியன நிகழ்ந்தன.

மூன்றாம்நாள் சமயப்பிரசங்கம், பூஜைகள், பட்டணப்பிரவேசம் முதலியன வுடன் விழா சிறப்பாக முடிவுபெற்றது.

குடிகளின் நன்மையையே தம் நலமாக எண்ணும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகள் இவ்வாதீனத்தின் 24-வது மகாசந்நிதானமாவர். இம் மடாதிபதியைப் போல இது வரை வேறு யாரும் இத்தனை காலம் இப்பீடத்தில் அமர்ந்து அருள் ஆட்சி செய்த தில்லை. அன்னார் இன்னும் பலகாலம் தருமபுர ஆதீனத் தலைமைப் பதவி வகித்து அளவற்ற நன்மைகள் செய்யவேண்டும் என்பதே நமது அவா. அதற்கு இறைவன் திருவருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

— சினிமா உலகம், 10—9—1943.

TEN YEARS' PROGRESS OF THE DHARMAPURAM MUTT

Decennial Celebrations

Kumbakonam: The second day's proceedings of the Decennial Rule celebration of the Dharmapuram Mutt were held under the presidentship of Dewan Bahadur T. M. Narayanaswami Pillai, President of the Hindu Religious Endowments Board, Madras. His Holiness the Swamigal of the Dharmapuram Adhinam was seated on a special PEETAM on the dais.

An address of welcome was presented to the President, who, in his reply, said the Mutt had been doing very useful work in spreading the SAIVA SIDDHANTA, for which it was specially established. He said Sir S. Radhakrishnan, the speaker's teacher, and the late Dr. Tagore had enriched the glory of their country in foreign lands, and in a similar way, the principles of SAIVA SIDDHANTA should be made known to the outside worlds. These were now not so widely known as they ought to. He hoped that religious leaders would put their heads together, and devise a suitable method of achieving that end.

Then a VIDWAT SAMMELANAM was held, at which speeches were made by Pandit M. Vajravelu Mudaliar of Conjeevaram, Avvai Duraiswami Pillai of the Annamalai University, Somasundara Swamigal of the Mouna Mutt and others.

TITLES CONFERRED

His Holiness then conferred the title of Dharmapuram Adhina Pulavar on Vidwans Vajravelu Mudaliar of Conjeevaram, Arni Manikkavachaka Mudaliar, Kunjithapatham, Dandapani Desikar of Tiruvarur, Govindaswami Pillai and Shanmugha Desikar.

The title of Dharmapura Adhina Isai Pulavar was conferred on Sri M. M. Dandapani Desikar.

Sri Sivakavi Mani C. K. Subramania Mudaliar then presented his newly written commentary on Sekkilar's APPAR PURANAM, which was financed by the Adhinam in the name of the Mutt. The book was praised as a best work deserving the support of all Tamilians and SAIVA SIDDHANTINS. Mr. Mudaliar explained the essentials of his commentary.

Earlier, the Vidwans presented an address to His Holiness. Prizes were then distributed to the winners in sports for school Children and boys held in commemoration of the decennial celebration.

The President thanked the Mutt for having given him an opportunity to be present at the celebrations, and to come into close contact with its work.

On behalf of the Celebration Committee, Mr. Vaithyanatha Ayyar thanked the President, His Holiness, and others who had responded to their invitation to attend the celebrations.

An audience of about 10,000 was then entertained with music by Srimathi M. S. Subbulakshmi.

The day's proceedings concluded with a soul-stirring song sung by Master S. Vedantam of Kumbakonam, son of Mr N. Sreenivasachari of the SWADESAMITRAN, which drew a chorus of applause. Master Vedantam (15) rendered exquisitely a Bharati's song, which sent a thrill round the vast audience. The boy has been winning the gold medal in the annual Bharathi Songs competition in Kumbakonam. His Holiness and several of the distinguished guests present appreciated the musical talent of Vedantam.

FINAL DAY'S CELEBRATIONS

Today's proceedings commenced under the presidentship of Mr. Kanakasabai Chettiar, Municipal Chairman, Mayavaram. Master Vedantam sang a few Bharati songs in a camp of Boy Scouts, who had come from Karaikudi, and Mr S. Vajravel thanked Vedantam.

The President, Mr. Kanakasabai Chettiar, said this was the first occasion in the history of the Mutt, and of the Municipality when both of them had come together as a result of the extreme affableness of His Holiness. The administration of the Mutt by His Holiness had elicited universal tributes, which was no mean achievement. His Holiness was working not only for the spiritual uplift of his disciples but was also greatly interested in the elevation of the Depressed Classes, providing medical relief and educational facilities to these people of the place. He commanded the love and respect of his tenants.

To those who had visited the place 10 years ago, the present lay-out of the village of Dharmapuram and the Mutt would present a vast change for the better, and the credit for this was due to the great administrative drive of His Holiness. The 27 temples under the Mutt were being administered in a model way and to the satisfaction of the public. The gospel of SAIVA SIDDHANTA was being spread far and wide. Last, but not the least, the poor were being fed in large numbers, a charity of first rate magnitude in these days when people were dying of hunger and diseases. Under the auspices of the Mutt, PATASALAS, to teach VEDAGAMA, were being efficiently conducted. All these were no small achievements, and the thanks of the public were due to His Holiness.

SPEECHES

Speeches were then made by Mounamata Somasundara Swamigal and ADHINA PULAVARS Dandapani Desikar of Tiruvarur, Shanmugha Desigar of Negapatam (who sang verses composed in honour of His Holiness), Muthu Manikkavachaka Mudaliar of Madras, Govindaswami Pillai of Tiruvadi Raja's College, Kunjithapatham of Madras, Avvai Duraiswami Pillai of Annamalai University, and Vajravelu Mudaliar, SIVAKAVI MANI Subramania Mudaliar, Pandarathayya of Vedaranyam, and Balakavi of Chettinad.

The President requested His Holiness to confer the title of SAIVA SIDDHANTA SARABA on Sri Isana Sivacharya Swamigal in accordance with the unanimous request of ADHINA PULAVARS and other learned men. The title was then conferred by His Holiness, who presented to the Swamigal a shawl and an engraved plate in the traditional manner.

The Swamigal, replying, thanked His Holiness for the honour. He then explained the essential principles of the Saivite philosophy.

Mr. Vaithyanatha Ayyar of the Celebration Committee proposed a vote of thanks.

After Maheswara Puja, there was a music performance by Sri M. M. Dandapani Desikar.

There was PATNAPRAVESAM at night after which the celebrations concluded.

ALL ROUND PROGESS

The ten years' administration of Sri-La-Sri Shanmuka Desika Gnanasambanda Paramacharya Swamigal of Dharmapuram Adhinam, is a record of all round improvement in the affairs of the Mutt. His Holiness has, with an imagination and drive unparalleled in the history of the Mutt, has created a pattern as it were for other religious institutions. The lay-out of the Mutt amidst peaceful surroundings, reflecting the spiritual effulgence pervading all round the place, getting its radiation from His Holiness, recalls to one's mind the golden days of the past.

Dharmapuram itself is a place where Yama (the God of Death) did penance to Lord Mahadev and attained salvation. So the Sthalapurana says. The presiding deity is Dharmapuriswarar. The spiritual Gurus of Saiva religion who descended from Santhana Acharyas and particularly from the boy prodigy, Sri Meikandar, had as their sacred abode Dharmapuram, and were the custodians of the spiritual treasure for centuries. The present head is the 24th successor, the illustrious founder being Guru Gnana Sambandar who selected this holy spot and built an Ashram here.

Many are the reforms effected by the present Mahasannithanam and they cover every field of beneficence. During this short period, decades of progress has been made. The Thevara Patasala and Vedasivagama Patasala, which he has founded, bear testimony to his noble desire to create in the younger generation a thirst for SAIVA SIDDHANTA, which the Mutt is so nobly helping. Here, boys are given free boarding and lodging. The library buildings, which bear witness to His Holiness genius,' contain a collection of ancient and modern works of standard authors on all religious subjects particularly on SAIVA SIDDHANTA. Needless to say this is one of the best reference libraries in whole of South India. The Mutt building, of the classical Dravidian style, have been renovated as also several temples.

PROPAGANDA

Propaganda, the most effective weapon of the modern age, has not been lost sight of. The Mahasannithanam is the pioneer in publishing a journal to broadcast the essential principles of SAIVA SIDDHANTA and a separate printing press has been set up for the purpose. The Gnanasambandam Press and the publishing department have brought out about 50 rare and useful books, all distributed free or sold at a nominal price.

Around the Mutt are the well-kept streets of Dharmapuram, electrified for the public benefit. Specially built houses for the staff is another amenity enhancing the town-planning value of the locality. Perfect sanitation prevails. His Holiness has spent thousands

of rupees on renovating the 27 temples, under the control of the Adhinam taking particular care to cater to the needs of pilgrims attending these shrines. He takes a practical interest in every side of the administration, surprise visits forming an essential feature.

In furtherance of the war effort in which direction His Holiness has shown the way to people in general and Tamils in particular, he has brought under cultivation hundreds of acres by cultivating food crops, fruit-yielding and fuel trees. The celebration of the North African victory, the performance of archans and special prayers, the investment of about Rs. 50,000 in Defence loans without interest, the contribution of large sums to the Governor's War Fund are some of the outstanding features. Many servants of the Mutt have undergone the First Aid course and the Adhinam lorry has been placed at the disposal of the Government free of charge. An air conditioning apparatus has been given to the Government for use in hospitals.

The administration of the Mutt follows Government Secretariat lines. The Endowments Board is greatly satisfied with the Mutt's yearly returns and other accounts. The Mahasanithanam has contributed to the restoration of the Saraswathi Mahal Library, Tanjore, and is its patron. Tamil Vidwans' SIDDHANTA conferences, and every other activity connected with the material and religious uplift of the people command the patronage of His Holiness. To give in detail the various activities in this direction will take much space. Though surrounded by pomp and pageantry, he leads a very simple life.

The Governor of French India, the Administrator of Karaikal, Madras Ministers, Raja Sir Annamalai Chettiar of Chettinad, Sir R. K. Shanmukham Chettiar, Sir P. T. Rajan Dr. T. S. S. Rajan, Mr S. Ramanathan, Sir R. S. Sarma, and several other distinguished persons have visited the Mutt and spoken highly of its administration.

GOVERNOR'S MESSAGE

His Excellency Sir Arthur Hope, Governor of Madras, sent the following message on Sest. 3 when Sir C. P. Ramasawami Ayyar, Dewan of Travancore, presided over the Decennial Rule celebartion.

"Your Holiness,

It is with sincere pleasure that I send you my congratulatons and best wishes on the 10th anniversary of Your Holiness accession to the Dharmapuram Adhinam. I have frequently heard of the widespread and beneficent influence which you exercise and of what you have done in various ways for the war efforts. I am particularly pleased that you should have taken the opportunity, on this auspicious occasion of today's celebrations, once again to set an example by investing, as a first instalment, one lakh of rupees in Defence Loans. I am sure that your decision to make this investment will give a lead to many of the guests and devotees present today. Once more, I would like to thank you for your cooperation of which I know, I can always trust and I sincerely hope that you will continue for many happy years in the illustrious office which you now hold."

—The Mail, Sept., 11, 1943.

தருமபுர ஆதீனகர்த்தரவர்களது பத்தாண்டுஆட்சி விழா.

இவ்விழா நாம் முன்னறிவித்தபடி, 5, 6, 7 ஆகிய மூன்று தினங்களிலுஞ் செவ்வனே நடைபெற்றது. விழாவின் விபரமான நடவடிக்கைகள் தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டன. ஆகையால் மீண்டும் அவைகளை இங்கே எழுதுவதற்கவசியமில்லை. பத்திரிகையிலும் இடம்போதாதென்று விடுத்தோம். ஆனாலும் அவ்விழாவையொட்டி நடந்த மகாநாட்டைப்பற்றி நமது அபிப்பிராயத்தை யெழுதுவது அவசியமென்றே நினைக்கிறோம்.

விழாக் கமிட்டியார் நல்ல ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். விழாவிற்கு விருந்தினராக வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்றவாறு, தக்க ஏற்பாடுகள் செய்து உபசரித்தது குறிப்பிடத்தக்கது. விழாவை நடத்த அமைத்திருந்த கொட்டகையும் அங்கே ஒலிபெருக்கிகளமைத்து எல்லோருக்கும் கேட்க வசதி செய்திருந்ததும், கொட்டகையில் செட்டிநாட்டுச் சாரணர்கள் செய்த ஊழியமும் பாராட்டத்தக்கதே.

தலைவர்கள் மூவரும் செய்த பிரசங்கங்கள், மக்களுள்ளத்தைக் கவர்ந்து அவ்வழி யீர்த்துச் சென்றிருக்கும் மென்பதற்கையமில்லை. முக்கியமாக 2-ம் நாள் தலைவர் திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் மடத்தின் சென்ற கால நிர்வாகத்தையும், வருங்காலம் செய்யவேண்டிய செயல்களையும் எடுத்துக் காட்டியது வியந்து பாராட்டத் தக்கது. சைவ நன்மக்களுக்குத் தொடர்பு உண்டாகத்தக்க வகையில், நிர்வாகம் சமயசேவையோடு நில்லாது, சமூக சேவையிலும் ஈடுபட வேண்டுமென்றது போற்றுதற்குரியது.

பிரசங்கம் செய்த புலவர்களில் சிவக்கவிமணி, ஸி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்களது சொற்பொழிவும், பட்டம்பெற்றுப் பதிலளித்த, சாசிவாசி, ஈசானிய சிவாசாரியாரவர்களது விரிவுரையும் மக்களைத் தட்டி யெழுப்பி, சமயநெறி நின்றொழுகும்படி ஊக்க மூட்டியிருக்குமென்பதில் ஐயமில்லை.

மகாசந்நிதானம் திருமேனியின் சிரமத்தையுங் கருதாது மூன்று தினங்களிலும் விழா மண்டபத்துக்கெழுந்தருளி, எல்லாவற்றையும் அனுபவித்து இன்புற்றுத் தக்கவர்கள் பலருக்குத் தகுதிக்குத் தகுந்த பட்டங்களளித்துத் திருவுளம் பூரித்ததும், அவர்களது இயற்கையான, தமிழ்மொழிப் பற்றையும், சமயப்பற்றையுந் தெற்றென விளக்கிற்று. "ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகவாம் பேரறிவாளன் திரு" என்பது வள்ளுவரின் தெள்ளிய வாக்காதலின் மகாசந்நிதானம்,"தாமின் புறுவதுலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்ற பொய்யாமொழிக்குத் தாங்கள் ஓர் எடுத்துக்காட்டாக உலகினர்க்கு விளங்கி, தாங்கள் பெற்ற பொருளும் அறிவும், கல்வித்துறைபோய் அனுபவிப்பதே மேலானதோர் இன்பம் என்று கண்டு, அவ்வழி நின்று, ஒழுகிவருவதை, நம்மைப் போலவே பலரும் பாராட்டினார்கள் என்று சொல்லாதிருக்க இயலவில்லை. குறைவிலா நிறைவாய், கோதில் குணக்குன்றாய், கயிலாய பரம் பரையிற் சிவஞானபோத நெறிகாட்டும், வெண்ணெ பயில் வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞானுபானுவாகி, தருமையம்பதில் எழுந்தருளித் தனித் துறவரசு நடத்திவரும், நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பன்னெடுங்காலம் திருமேனி ஆரோக்கிய மாய் வீற்றிருந்து அருளாட்சி செலுத்தி வரவேண்டுமென்று பன்முறை பரணனைப் பிரார்த்திக்கிறோம்.

—நவஇந்தியா, 12—9—1943.

REGENERATION OF HINDUISM

Sri C. P. On Duty of Mutts, Decennial Celebrations At Dharmapuram

(From Our Correspondent)

The first decennial celebrations of the rule of Sri-la-Sri Shanmukha Desika Gnana Sambanda Paramacharya Swamigal of Dharmapuram Adhinam commenced on Sunday under the distinguished presidency of Sir C. P. Ramaswamy Ayyar, Dewan of Travancore. The inaugural function was held in a gorgeously decorated pandal before a record gathering of the elite of the district and outside. His Holiness was present on the platform.

After prayer, addresses of welcome were presented to the Dewan on behalf of the Mutt and the Celebration Committee, the Mayavaram Municipal Council, the Celebration Committee and several other public organisations presented adresses to His Holiness, paying tributes to his great piety, love of the poor and administrative capacity. His Holiness replied in suitable terms through the Kattalai Thambiran. Messages from H. E. the Governor of Madras, Raja Sir Annamalai Chettiar, Mr. T. M. Krishnaswamy Ayyar, Chief Justice of Travancore, Rao Bahadur V. S. Thyagaraja Mudaliar of Vadapathimangalam Estate and several others, were read.

Dewan Bahadur T. M. Narayanaswami Pillai, President, the Hindu Religious Endowments Board, speaking first, referred in detail to the various improvements effected in the administraion of the Adhinam during the last 10 years. He instanced the work carried on by Christian missionaries in the propagation of their faith and wished that religious institutions emulated that example.

Rao Bahadur N. R. Swamiappa Mudaliar, spok aboute the services of His Holiness in the cause of religion and society.

Sir C. P.'s ADDRESS.

Rising amidst cheers, Sir C. P. Ramaswamy Ayyar recalled his past connection with the Mutt when he was a lawyer and testified to the great improvement effected by the present occupant of the seat who possessed great drive and imagination.

Continuing, Sir C. P. Ramaswamy Ayyar observed that there was essentially no difference or confiict between the various faiths and creeds, as all of them were fundamentally one and the same. Unity was the essence of apparent diversities found all over the world. He endorsed the observations made by Mr. T. M. Narayanaswami Pillai that they should be actuated by missionary zeal in propagating their religion. The Mutts and other religious institutions should take a lead in regimenting the spiritual forces of the country in the cause of Hindu regeneration, without which the material world would lose its soul and

never return to the path of holiness and righteousness—which meant the world would not be a place of truth, honour and justice. He pointed out that the Ruler of Travancore had endowed properties for the three mutts in this district for the propagation of Saiva Siddhantha in Travancore where there were one and a half millions following the Siddhantha. They were asking for light but it was not forthcoming in adequate measure. It was the duty of those in charge of endowments to see that such things were not left to the caprice of a chance fulfilment here and there but care taken to fulfil the spirit of donor in the fullest and most comprehensive measure possible. Else, there was no need at all for such trusts to exist.

Sri C. P. Ramaswamy Ayyar then opened the Dharmapuram Adhinam Library Buildings and Commemoration Arch.

Sir R. S. Sarma proposed a vote of thanks on behalf of the Celebration Committee.

VIDWAT SAMMELANAM

The secound day's proceedings were held under the presidency of Dewan Bahadur T. M. Narayanaswami Piilai. His Holiness was seated on s special peeta on the dais. An address was presented to Mr. Pillai. In reply, he said that the Mutt had been turning out very useful work in spreading the Saiva Siddhanta. He pleaded that the principles of Saiva Siddhanta be made known to the outside world.

There was then a Vidwat Sammelanam at which speeches were made by Pandits Vajravelu Mudaliar of Conjeevaram, Avvai Duraiswamy Pillai of the Annamalai University, Somasundara Swamigal of Mouna Mutt and others. His Holiness then conferred the title of "Dharmapuram Adhina Pulavar" on Vidwans Vajravelu Mudaliar of Conjeevaram, Arni Manikkavachaka Mudaliar, Kunjithapatham, Dandapani Desikar of Tiruvarur, Govindaswamy Pillai and Shanmugha Desikar. The title "Dharmapura Adhina Isai Pulavar" was conferred on Sri. M. M. Dandapani Desikar. Sri Sivakavi Mani C. K. Subramania Mudaliar B. A., then presented his newly written commentary on Sekkilar's Appar Puranam. Prior to this, the Vidwans presented an address to His Holiness.

The proceedings of the third day commenced under the presidentship of Mr. Kanakasabai Chettiar, Municipal Chairman, Mayavaram. Master Vedantam of Kumbakonam sang few songs from Barathi in the Boy Scouts Camp, which had come here from Karaikudi. Mr. Kanagasabati Chettiar paying tributes to the Holiness said His Holiness was not only working for the spiritual upliftment of his disciples but was also concerned in no small degree in the elevation of the Depressed Classes, provision of medical relief and catering to the educational needs of the place.

Speeches were then made by Adhina Pulavars. His Holiness conferred the title of "Saiva Siddhanta Saraba" on Sri Isana Sivacharya Swamigal.

Mr. Vaithinatha Ayyar of the Celebration Committee proposed a vote of thanks. After Maheswarapooja and a music performance by the Adhina Isai pulavar M. M. Dandapani Desikar, the three-day celebrations concluded.

A RECORD OF ALL ROUND ACHIEVEMENT

The ten years' administration of Sri-la-Sri Shanmuka Desika Gnanasambanda Paramacharya Swamigal of Dharmapuram Adhinam, is a record of all-round improvement in the affairs of the Mutt. His Holiness has, with an imagination and drive unparalleled in the history of the Mutt, has created a pattern as it were for other religious institutions.

The lay-out of the Mutt, amidst peaceful surroundings, with the spiritual effulgence radiating from His Holiness and pervading the whole place, recalls to one's mind the golden days of the past. Dharmapuram itself, further, is a place where Yama (God of Death) did penance to Lord Mahadev and attained salvation, so the Sthalapurana recites. The presiding deity is Dharmapuriswarar. The spiritual Gurus of Saiva religion who descended from Santhana Acharyas and particulary from the boy-prodigy, Sri Meikandar, had as their sacred abode Dharmapuram and were the custodians of the spiritual treasure for centuries. The present head is the 24th in the line, the illustrious founder being Guru Gnana Sambandar who selected this holy spot and built an Ashram.

Many are the reforms effected by the present Mahasanithanam and they cover every field of beneficence. During this short period, decades of progress have been made. The Thevara Patasala and Vedasivagama Patasala which he has founded bear testimony to his noble desire to create in the younger generation a thirst for Saiva Siddhanta for which the Mutt is so nobly helping. Here, boys are given free boarding and lodging. The needs of the Adi-Dravidas has been the abiding care of His Holiness and provision has been made for water-supply, education and medical relief.

The library buildings which bear the imprint of His Holiness genius, contain a collection of ancient and modern works of standard authors of all religious subjects and particularly on Saiva Siddhanta. Needless to say that this is one of the best reference libraries in the whole South India. The Mutt building of fine architecture in the classical Dravidian style have been renovated as also the several temples. Propaganda, the most effective weapon of the modern age, has not been lost sight of. The Mahasannithanam is the pioneer in publishing a journal to broadcast the essential principles of Saiva Siddhanta and a separate press has been set up for the puspose. The Gnanasambandam Press and the publishing department have brought out about 50 rare and useful books, all given free or at nominal price.

Around the Mutt are the well-kept streets of Dharmapuram electrified for public benefit. Specially built houses for the staff enhance the town-planning value of the locality. Perfect sanitation prevails. His Holiness has spent thousands of rupees in renovating the temples, 27 in number, under the contorl of the Adhinam, taking purticular care to cater to the convenience of pilgrims attending these shrines. He takes a practical interest on every side of the administration, surprise visits forming an essential feature.

In furtherance of war efforts, in which direction His Holiness has shown the way to the public in general and the Tamils in particular, he has brought under the plough hundreds of acres for cultivation of good crops, fruit-yielding and fuel trees. Many

servants of the Mutt have undergone complete First Aid courses and the Adhinam lorry is placed at the disposal of the Government free of charge. Air conditioning apparatus is given to the Government for use in Hospitals.

The administration of the Mutt follows Government Secretariat lines. The Endowments Board is greatly satisfied with the yearly returns and other accounts. The Governor of French India, the Administrator of Karaikal, Madras Ministers, Raja Sir Annamalai Chettiar, Sir R. K. Shanmukham Chettiar, Sir P. T. Rajan, Dr. T. S. S. Rajan, Mr. S. Ramanathan, Sir R. S. Sarma and several other distinguished persons have visited the Mutt and spoken highly of the administration.

The Mahasannithanam has contributed to the restoration of the Saraswathi Mahal Library, Tanjore, and is its patron. Tamil Vidwans, Siddhanta conference and every other activity connected with the material and religious upliftment of the people command the patronge of His Holiness. To enunciate the various items of his activities in this direction will be a long list. Though surrounded by pomp and pageantry, he leads a very simple life.

—The Indian Express, 12—9—43.

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்து வருஷ ஆட்சி விழா

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்து வருஷ ஆட்சி விழா, திருவாங்கூர் திவான் சச்சிவோத்தம ஸர். ஸி. பி. இராமசாமிஐயரின் தலைமையின் கீழ் ஞாயிறன்று நடைபெற்றது. திவானுக்குக் கம்பீரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பூசையானவுடன் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. காரைக்குடி ஹிந்துஸ்தான் சாரண் கோஷ்டியார் வைபவத்தையொட்டி இவ்விடம் வந்து சேவைசெய்தது குறிப்பிடத் தக்கதாகும். விழாக்கமிட்டியார், ஸர். ஸி. பி. க்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். மடத்தின் சார்பில் மற்றொருபத்திரமும் கொடுக்கப்பட்டது. மாயூரம் நகரசபை, இன்னும் அநேக பொதுஸ்தாபனங்கள் மகாசந்நிதானத்திற்குப் பாராட்டு பத்திரங்கள் படித்துக் கொடுத்தனர். இவைகளில் மடாதிபதியின் சீலம், தெய்வ பக்தி, நிர்வாகத்திறமை, தாராளமனது, ஏழைகள்பால் அன்பு முதலிய குணங்களைப் புகழ்ந்து குறிப்பிடப்பட்டிருந்தன. தக்கபடி இவைகளுக்குப் பதிலளிக்கப்பட்டது.

சென்னை கவர்னர், ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியார், திருவனந்தபுரம் பிரதமநீதிபதி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், வடபாதிமங்கலம் திரு. வி. எஸ். தியாக ராஜ முதலியார் முதலியவர்களிடமிருந்து வந்த செய்திகள் படிக்கப்பட்டன.

ஹிந்துமத தர்ம பரிபாலன போர்டு தலைவர், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை மேட்டூர் அணை கட்டியதால் தலைவர் காவேரி பாசன பிரதேசத்திற்குச் செய்திருக்கும் நன்மைகளை குறிப்பிட்டுவிட்டு, தருமபுரம் மடத்தின் நிர்வாகம் பத்து வருஷ காலத்தில் எப்படி சீர்பட்டுவந்திருக்கிறதென்பதைப்பற்றியும் குறிப்பிட்டார். கிருஸ்துவ பாதிரிமார்கள்போல் ஹிந்துமத தர்ம ஸ்தாபனங்களும், மடங்களும்

பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். திரு. என். ஆர். சாமியப்ப முதலியார், எம். எல். ஸி., திரு. ஸி. எஸ். சீனிவாச முதலியார் முதலியவர்கள் மடாதிபதியின் நிர்வாகத்தைச் சிலாகித்துப் பேசினார்கள். ஸர். ஸி. பி. இராமசாமி ஐயர் பேசியதன் சாராம்சமாவது :—

"இந்தவைபவத்தில் மிகவும்சந்தோஷத்துடன் நான் கலந்துகொள்கிறேன். எனக்கு இந்த மடத்தைப்பற்றி 13-வருஷங்களுக்கு முன் மடத்தின் சார்பாய் நான் வக்கீலாகயிருந்ததுமுதல் நன்குதெரியும். இப்பொழுது வீற்றிருக்கும் தலைவர் வந்த பிறகு வெகுவாக மடத்தின் நிர்வாகம் முன்னேறியிருக்கிறது.

திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை கூறியதுபோல் நம் மத ஸ்தாபனங்களை நடத்துபவர்களுக்கு கிருஸ்துவ பாதிரிமார்களைப்போல் ஆர்வமும் ஆவேசமும் இருக்கவேண்டும். ஐரோப்பிய பாதிரிகள் தங்கள் சௌகரியங்களைக் கவனிக்காமல் ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து தாங்கள்நம்பும் தெய்வத்தைப்பற்றி பிரசாரம் செய்வதுபோல் ஒவ்வொரு ஹிந்து மடாதிபதியும் மதத்தைப்பற்றி பிரசாரம் செய்ய வெண்டும். சைவமோ, வைஷ்ணவமோ மற்றெந்த சித்தாந்தமாயினும் அடிப்படையில் ஒரே கருத்தைக் கொண்டதாகும். தாயுமானசுவாமிகள் தன் ஆழ்ந்த கருத்துக்களை ஸம்ஸ்கிருதம், தமிழ் இந்த இரண்டு பாஷைகளிலும் வெளியிட்டிருக்கின்றார். தமிழுக்கும், ஸம்ஸ்கிருதத்திற்கும் யாதொரு முக்கிய வித்தியாசமும் கிடையாது. இரண்டும் நம் தேசிய பொக்கிஷங்களேயாகும். இதை தேச முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொருவரும் உணரவேண்டும். மடங்கள், மற்ற தர்ம ஸ்தாபனங்கள், ஹிந்து மத தத்துவங்களின் பிரசாரத்திற்காக தாங்கள் முழுகவனத்தையும் செலுத்திப் பாடுபடவேண்டும். சைவசித்தாந்தத்தை தழுவும் 15-லக்ஷம்பேர் திருவனந்தபுரத்தில் வசிக்கிறார்கள். இந்த சித்தாந்த வளர்ச்சிக்கு மகாராஜா இந்த ஜில்லாவிலுள்ள மூன்று மடங்களுக்கும் மான்யம் விட்டிருக்கிறார்கள். மான்யத்தின் தன்மையை உணர்ந்து சித்தாந்தவளர்ச்சிக்குவேண்டிய வசதியை இம்மடங்கள் செய்யவேண்டும். இல்லாவிட்டால் மான்யங்கள் பிரயோஜனமுள்ளதா என்பதை யோசிக்கவேண்டிவந்துவிடும்."

பிறகு ஸர். ஸி. பி. இராமசாமி ஐயர், தருமபுர ஆதீனம் புத்தகசாலையையும், பத்தாவது ஆண்டு ஆட்சிமுடிவின் ஞாபகார்த்த விழாவையும் திறந்துவைத்தார். ஸர். ஆர். எஸ். சர்மா வந்தனோபசாரம் கூறினார். கோபிநாத் கோஷ்டியின் நடனம் நடைபெற்றது.

இரண்டாவதுநாள் நடவடிக்கை ஹிந்து தர்ம பரிபாலன போர்டு தலைவர், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளையின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவர் பேசுகையில், சைவசித்தாந்தத்தைப் பரப்புவதில் இம்மடம் மிகவும் உபயோகமுள்ள முறையில் வேலைசெய்து வருவதை நான் மிகவும் பாராட்டுகிறேன். வெளிநாடுகளில் இந்த சித்தாந்த தத்துவங்கள் தெளிவுபடத் தெரிய பிரசாரவேலை செய்யவேண்டும். டாக்டர் தாகூர், ஸர். ராதாகிருஷ்ணன் இவர்களால் இந்தியாவின் கீர்த்தி வெளிநாடுகளில் மிகவும் உயர்ந்திருக்கிறது. இதுபோல் சைவசித்தாந்த உண்மைகளையும் வெளிப்படுத்தவேண்டும். பிரசாரத்தின் அவசியத்தை உணர்ந்தே இந்த மடத்தில் பத்திரிகைகள் போட்டு வருவதையும், புத்தகங்கள் வெளியீடுகள் முதலியவைகளை

பரப்பிவருவதையும் நாம் ஒவ்வொருவரும் பாராட்டவேண்டிய விஷயமாகும். வெளி நாடுகளில் பிரசாரம்செய்யத் தக்க முறைகள் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

தருமபுர ஆதீனப் புலவர்கள்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அடியிற்கண்ட வித்துவான்களுக்குத் "தருமபுர ஆதீனப் புலவர்" என்ற விருதை வழங்கினர்கள். பண்டிதர்கள் காஞ்சி புரம், வச்சிரவேல் முதலியார், அண்ணமலையூனிவர்ஸிடி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஆரணி முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், வை. குஞ்சிதபாதம் பிள்ளை, திருவாரூர் ச. தண்டபாணி தேசிகர், திருவையாறு இராம. கோவிந்தசாமி பிள்ளை, பிரபல சங்கீத வித்துவான், திரு. எம். எம். தண்டபாணி தேசிகருக்கு "தருமபுர ஆதீன இசைப்புலவர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. பிறகு சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அப்பர் புராணத்திற்கு எழுதியிருக்கும் விரிவுரை அரங்கேற்றப்பட்டது. இதன் செலவு மடத்தைச் சார்ந்ததாகும். வெளி யீடும் மடத்தின் பேரிலேயே வந்திருக்கிறது.

வித்துவான்களால் மடாதிபதிக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப் பட்டது. வேதாந்தம் என்ற இளைஞரால் மிகவும் உணர்ச்சியுடன் பாடப்பட்ட பாரதி பாடலுடன் இரண்டாம்நாள் வைபவம் முடிவுபெற்றது.

மூன்ரும்நாள் நடவடிக்கை மாயூரம் முனிசிபல்சேர்மன் திரு. சி. கனகசபை செட்டியார் தலைமையில் நடைபெற்றது. நகரசபை ஏற்பட்டு இந்த 80-வருஷ காலத்தில் இப்பொழுதுதான் மடத்திற்கும் நகரசபைக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மகாசந்நிதானத்தின் நிர்வாகச்சிறப்பு யாவராலும், எவ்விதமான அபிப்பிராயபேதமின்றிக் கொண்டாடப்படுவது மடத்தின் மேன்மையை நன்கு குறிப்பிடுவதாகும். ஆத்மார்த்த வழிகளோடுமாத்திரமன்றி, சிஷ்யர்களின் இக வாழ்க்கையில் அவர் எடுத்துவரும் சிரத்தை கொண்டாடத்தக்கதாகும். தாழ்ந்த வகுப்பினர்கள் முன்னேற்றத்திற்காகவும், ஏழைகள் பசியைத் தீர்க்க அவர் செய்து வரும் வேலை சாமான்யமானதல்ல. படிப்பு, சுகாதாரம், வைத்தியவசதி, சிப்பந்தி களுக்கு விடுதிகள் கட்டிக்கொடுப்பது, வித்துவான்களை ஆதரிப்பது, சித்தாந்த மகாநாடுகள் நடத்துவது இவைபோன்ற முன்னேற்ற காரியங்களில் சந்நிதானம் கண்ணும் கருத்துமாயிருந்து தொண்டுபுரிவது பொதுவாகத் தமிழ் நாட்டினருக்கும் சிறப்பாகச் சைவசமயத்திற்கும் பெரும் பெருமையையும் புகழையும் கொடுப்பதாகும்.

10-வருஷத்திற்குமுன் மடத்தைப் பார்த்தவர்கள் இப்பொழுது பார்த்தால் முன்னேற்றத்தை நன்கு தெரிந்துகொள்ளலாம். மடத்தின் கீழிருந்துவரும் 27-தேவா லயங்கள் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருவதைக்கண்டு மகிழ்ச்சியடையாதவர்கள் யாருமில்லை. பசிப்பிணியால் ஜனங்கள் வாடும் இன்னளில் ஆயிரக்கணக்கான ஏழை களுக்கு அன்னமளித்துவருவது சாமான்ய தர்மமென்று சொல்லுவதிற்கில்லை. வேதாகமப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்றுவருவது குறிப் பிடத் தக்கதாகும். பிறகு ஆதீனப் புலவர்களால் சித்தாந்தத்தைப்பற்றி உபன்னி யாசங்கள் செய்யப்பட்டன.

சைவசித்தாந்த சரபம்

மகாசந்நிதானமவர்கள் 'சைவசித்தாந்த சரபம்" என்ற பட்டத்தை ஸ்ரீ ஈசானசிவாசாரிய சுவாமிகளுக்கு வழங்கினர்கள். அன்று மாலை திரு. எம். எம். தண்டபாணி தேசிகரவர்களால் இசைக்கச்சேரி நடைபெற்றது.

பண்டாரசந்நிதிகள் செய்த சேவை

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 10-வருஷ ஆட்சி, ஒவ்வொரு துறையிலும் மிகவும் முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. மற்ற தர்ம ஸ்தாபனங்களுக்கு ஓர் வழிகாட்டியாகவும் விளங்குகிறது. மகாசந்நிதானத்தின் நிர்வாகத் திறமையையே தருமபுரத்தில் காணப்படும் ஒவ்வொரு ஸ்தாபனமும் குறிப்பிடுகின்றது. ஏழைகள்பால் அன்புசெலுத்திவருவது இன்னும் விசேஷமான செய்கையாகும். அமைதி உலாவும் தருமபுரம் ஓர் ஆசிரமம்போல் விளங்குகிறது. ஸ்தல புராணத்தில் எமன் சாக்ஷாத் பரமசிவத்தைக்குறித்து தவம்செய்து மோக்ஷமடைந்த இடமென்று தருமபுரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது காணலாம். நூற்றுக்கணக்கான வருஷங்களாய் ஆத்ம ஞானத்தின் பீடமாய் விளங்கிவரும் இந்த ஆதீனம், ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகரால் ஏற்படுத்தப்பட்டது. இப்பொழுதிருக்கும் சந்நிதானமவர்கள் 24-வது பட்டத்தில் அமர்ந்திருப்பவராவர். மகாசந்நிதானம் 10-வருஷத்திற்குள் அநேக சீர்திருத்தங்கள்செய்து மடத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார். பொதுநலத்திற்கு உகந்தவகையில் அபிவிருத்தியடைந்திருப்பது விசேஷமாக குறிப்பிடத்தக்கதாகும். தேவார பாடசாலையும், வேதசிவாகம பாடசாலையும் ஸ்தாபித்து, இளைஞர்களுக்குச் சைவசித்தாந்தத்தில் உற்சாகமும், உழைப்பும் உண்டாகும்படி செய்துவருகின்றார். சித்தாந்த அபிவிருத்திக்கு மடம் மிகவும் உன்னதமாய் வேலைசெய்துவருவதை அறிஞர்களும், புலவர்களும் மனமார வாழ்த்தி வருகிறார்கள். மடத்துப்பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவச சாப்பாடும், விடுதியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் புத்தகசாலை தென்னிந்தியாவிலேயே முதன்மையாய் விளங்கக்கூடியதில் ஒன்றாகும். சைவசித்தாந்த நூல்கள் ஒப்புயர்வற்றதாய் இதில் விளங்குகின்றன. ஆதீனத்திலுள்ள எல்லா தேவாலயங்களும், திராவிட சிற்பத்தின் நுட்பத்தை விளக்கக்கூடிய மடத்தின் கட்டிடங்களும் வேண்டிய அளவில் புதுப்பிக்கப்பட்டு இருக்கின்றன. நவீன உலகத்தின் கூரிய ஆயுதமாகிய பிரசார முறையும் மறக்கப்படவில்லை. மடங்களின் சார்பாய் முதன் முதலாய் சித்தாந்த சஞ்சிகையை ஆரம்பித்தது மகாசந்நிதானமவர்களே யாவார்கள். இதற்காகத் தனி அச்சுக்கூடமும் அமைக்கப்பெற்று, தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது. "ஞானசம்பந்தம்" அச்சுக்கூடம் பல புத்தகங்களையும் வெளியிட்டுக் குறைந்த விலைக்கோ அல்லது இனமாகவோ விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்களின் நன்மையை உத்தேசித்து, தருமபுரம் வீதிகள் மின்சார விளக்குகளால் பிரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. நகர நிர்மாண முறையை அனுஷ்டித்து மடத்து சிப்பந்திகளுக்கு வீடுகள் கட்டப்பட்டு வசதிசெய்யப்பட்டிருக்கின்றன. சுகாதார முறையும் அப்படியே. சுவாமிதரிசனம்செய்ய வருபவர்களின்

சௌகரியத்தை முக்கியமாய் மனதில்கொண்டு, மடத்தின் ஆளுகைக்குட்பட்ட 27-தேவாலயங்களும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைக்கொண்டு சீர்படுத்தப் பட்டிருக்கின்றன. மடத்தின்காரியங்கள் சரிவர நடத்தப்பட்டு வருகிறதா என்பதை முன் அறிவிப்பில்லாமலே நேரில்சென்று கவனித்துவருகிறார். படாடோபமில்லாமல் எல்லோரிடத்திலும் மிகவும் அன்பாய் பழகிக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஏழைகளுடைய குறைகளும் அப்போதைக்கப்போது நீக்கப்பட்டு வருகின்றன.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பண்படுத்தி உணவுப்பொருள் அபி விருத்தி திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மடத்துச்சிப்பந்திகளில் அநேகர் முதல்உதவி பயிற்சியில் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். நோயாளிகளின் உதவிக்காக "ஏர் கண்டிஷன் அப்ரெடஸ்" ஆஸ்பத்திரி உபயோகத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மடத்து நிர்வாகம் சர்க்கார் இலாகாக்களைப்போல் நடத்தப்பட்டு வருகின்றது. மடத்து நிர்வாகத்தையும், கணக்குகள் வைத்திருக்கும் முறையையும், வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் முறையையும் ஹிந்துமத தர்ம பரிபாலனபோர்டார் பெரிதும் பாராட்டியிருக்கிறார்கள். தஞ்சை சரஸ்வதி மகால் புத்தகசாலையைப் புனருத்தாரணம் செய்ய மிகவும் உதவிசெய்து, அதன் போஷகராயுமிருந்து வருகிறார்.

சித்தாந்த மகாநாடுகள் கூட்டி, பண்டிதர்களுக்குச் செய்துவரும் உதவி விசேஷமானதாகும். இந்தமுறையில் சந்நிதானம் செய்துவரும் வேலைகளைக் குறிப் பிடுவதென்றால், அது நீண்ட ஜாப்தாவாகவேயிருக்கும். மிகவும் எளியவாழ்க்கையை கைக்கொண்டு, யாவருக்கும் உதவியாயிருப்பதே தன் நோக்கமாகக்கொண்டு, சைவ சமய உலகத்திற்குப் பாடுபட்டுவருகிறார். ஆதித்திராவிடர்களுக்காகக் குடி தண்ணீர் வசதியும், குடியிருப்பு வசதியும், குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடமும், மற்ற வைத்திய வசதியும் செய்து கொடுத்திருக்கிறார்.

பல பிரமுகர்கள் மடத்திற்கு விஜயம்செய்து, பொதுஜனங்களுக்குச் சாதக மான முறையில் நிர்வாகம் நடத்தப்பட்டுவருவதை பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிறார் கள். பிரெஞ்சு இந்தியா கவர்னர், காரைக்கால் அட்மினிஸ்ட்ரேட்டர், ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார், ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், திரு. எஸ் ராமநாதன், ஸர். பி. டி. ராஜன், ஸர். ஆர். எஸ். சர்மா ஆகியோர் பத்து வருஷ விழா ஆட்சிக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார்கள்.

— தினமணி, 13—9—1943

தருமபுர ஆதீனத்தின் பத்தாண்டு விழா.

மாயூரத்தைச் சார்ந்த தருமபுரம் ஆதீனம் 24-வது ஆதீனகர்த்தராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பத்தாண்டு ஆட்சிக்கொண்டாட்டம் 5-ந்தேதி திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. இராமசாமி அய்யர் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தை தருமபுரம் பூராவும் விசேஷ அலங்காரத்துடன் கொண்டாடப்பட்டது. மாகேசுவர பூஜைகள் நடைபெற்றது. ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது. பிரபலஸ்

தர்கள் விஜயம்செய்து இருந்தார்கள். தலைவருக்கு உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மே. த. கவர்னர் அவர்களும் இன்னும்பல பிரபலஸ்தர்களும் ஆசிச் செய்திகள் அனுப்பி இருந்தனர். ஹிந்துமத ஸ்தாபன போர்டு பிரசிடெண்டு திரு. நாராயணசாமி பிள்ளை ஸ்ரீ-ல-ஸ்ரீ சந்நிதானத்திற்கு நினைவுமலர் சமர்ப்பித்தார்.

— "சிவாஜி" 13—9—1943

ஹிந்துமத வளர்ச்சிக்கு உதவி

ஹிந்துமத வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ளவை கோயில்களும் மடங்களும். தெய்வ வழிப்பாட்டிற்காக ஏற்பட்டவை கோயில்கள். மத அறிவையும் அதற்கேற்ற ஒழுக்கத்தையும் ஊட்ட ஏற்பட்டவை மடங்கள். தமிழ்நாட்டில் தொன்று தொட்டு இக்கடமை புரிந்துவரும் மடங்கள் பல. இவை ஸ்தாபிதமானகால தர்மத்திற்கும் இப்பொழுதுள்ள சமூகநிலைக்கும் வேறுபாடுகள் உண்டு. தற்காலத் தேவைக்குஏற்ப ஹிந்துமதத்தின் அடிப்படையான தத்துவங்களைப் போதித்து, மக்கள் வாழ்க்கையை மேற்படச் செய்யவேண்டுவது மடங்களின் முக்கிய கடமை. லோகாயதம் அதிகரித்துவரும் இந்நாளில் இக்கடமை பதின்மடங்கு அவசியமாகிறது. இதை கருத்தில்கொண்டு தர்மபுரம் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதிகள் தமது மடத்து நிர்வாகத்தை நடத்திவருவது பாராட்டுதற்குரியதாகும். அவர்கள் நிர்வாகம் நடத்தியுள்ள சென்ற பத்து வருஷங்களில் ஹிந்து மதப் பிரசாரத்திற்காகவும் சைவ சமய வளர்ச்சிக்காகவும் அரிய தொண்டு புரிந்திருக்கின்றார்கள். இதுசம்பந்தமாகச் சமீபத்தில் நடந்த கொண்டாட்டத்தில் திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர், மதஸ்தாபன போர்டு தலைவர் திவான் பகதூர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை ஆகியோர் இந்த சேவையைப்பற்றிய தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றனர். முக்கியமாகப் பண்டாரசந்நிதிகள் அரிய புத்தகசாலை நிறுவுவதில் விசேஷ கவனஞ்செலுத்தி யிருக்கின்றனர். பல சைவசமய நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆதீனத்திற்குட்பட்ட 27 கோயில்களைத் திறம்பட நிர்வகித்து வருகிறார்கள். வகையறிந்து இவர்கள் செய்துவரும் முயற்சி இந்துமத அபிவிருத்திக்குச் சாலவும் உதவுமென நம்புகிறோம்.

—பத்திராதிபர், சுதேசமித்திரன், 14—9—1943

பத்தாண்டு ஆட்சி விழா !

தருமபுரம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞான சம்பந்த பண்டார சந்நிதிகளின் பத்தாண்டு ஆட்சிவிழா, சென்ற 5—9—43ல் கொண்டாடப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஸர். ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்கள் தலைமை வகித்தார். பிரபல நிபுணர்கள் அன்று பேசினார்கள். கணக்கற்ற வாழ்த்துப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. 5—9—43 இரவு 9-மணிக்கு கோபிநாத், தங்கமணி நடனம் அருமையாக நடைபெற்றது. 6உ மாலை 6-மணிக்கு எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாட்டு வெகு ரம்யமாக, சந்நிதானத்தைக்கூட ரசிக்கும்படிச் செய்து விட்டது. 7உ மாலை 4-மணிக்கு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் பாடினார்கள். அன்று இரவு எஸ். டி. சுப்புலட்சுமி தனது கோஷ்டியாருடன் நடனம் ஆடிப்

பார்ப்போரைப் பரவசப்படுத்தினுர். பிறகு சுமார் 2-மணிக்குச் சந்நிதானம் அவர்களின் பட்டணப்பிரவேசம், பிரபல நாதஸ்வர வித்வான்களின் நாதஸ்வரக்கச்சேரியுடன் நடைபெற்றது.

—சினிமா நிலையம், 15—9—1943.

வாழ்த்து :

திருத் தருமையாதீனத்தின் இருபத்துநான்காம் பட்டத்து அருள்தலைவர் மறைத்திரு சண்முகதேசிக பரமாசாரிய அடிகளார், ஆதீனத்தின் தலைமையேற்றுப் பத்து ஆண்டுகள் நிறைவுற்றமையின், இத்திங்கள் முதற்கிழமையில் அதன் நிறைவு விழா திருத்தருமபுரத்தில் அன்பர் பெருங்குழுவினரால் மிகச் சிறப்பாக நிறைவேறப்பெறுகின்றது.

சுருங்கிய காலமாகிய இப்பத்து ஆண்டுகட்குள், அடிகளார், தருமை ஆதீனத்தின் நிலையைப் பலவகையாலும் உயர்த்திப் பலராலும் புகழப்பெறும் நல்விளக்கத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். மாநாடு கூட்டுதல், இதழ் வெளியிடுதல், நூல் வெளியிடுதல், விரிவுரைகள் நிகழ்வித்தல், வகுப்பு நடப்பித்தல், பிற இயக்கங்கட்கும் உதவுதல் முதலிய கிளர்ச்சியான பணிகள் பலவும் இவர்கள் நடத்தி, நாட்டின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விளங்குகின்றுர்கள். அடிகளார் செயலாற்றல் மிக்கவர்கள். இவர்கள் காலத்தில் திருத்தருமையாதீனம் சிறந்த பல நற்றொண்டுகளை உருவாகச்செய்து முடிக்கும் என்று, தானே நம்பிக்கை அரும்புகின்றது.

நாட்டின் கல்வி, வாழ்க்கை, நாகரிகம் முதலியவற்றைச் சமய அருள்துறையின் வாயிலாகப் பலவகையாலும் உயர்த்துங் கடமை திருமடங்கட்கு உண்டு. உண்மையிற், சமயவாழ்க்கை, தக்க கல்வியையும் வாழ்க்கையையும் நாகரிகத்தையும் மக்கட்கு உயர்ந்த முறையில் அளித்து மாட்சிமைப்படுத்துகின்றது. திருமடத்தின் அருட்டலைவர்களின் நேர்மையால் நாட்டின் நிலை எவ்வளவோ மேலோங்குதற்கு இடமுண்டு. திருமடங்களின் தலைமை மிகவும் பொறுப்புவாய்ந்தது. ஆதீனத்தைச் சேர்ந்த திருக்கோயில்கள் பலவும் தக்க அருள்நேய மன்றங்களாக விளங்குதலோடு தக்க கல்விநிலையங்களாகவும், வாழ்க்கை வழிகாட்டியாகவும், நாகரிக அரண்களாகவும் திகழ்ந்து நலம் பயப்பதற்குரியனவாகும். சமயவாழ்க்கையின் முதல் நோக்கமானது, இக் கல்வி முதலியவற்றின் அடிப்படையின் மேலேயே இனிது நிறைவேறுதற்குரியது. சமய அருள் வாழ்க்கையைத் தாங்கும் தூண்கள் இவை என்பது பொருந்தும். அடிகளார் ஆட்சியில் இந்நன்னிலைகள் பலவற்றையுங்காண நாடு மிக்க ஆவலுடையதா யிருக்கின்றது.

அன்றியும், திருத் தருமையாதீனத்தின் சார்பில், சித்தாந்தத்தையும் தமிழையும் மிகவும் உயர்ந்த செவ்வியில் காத்து வளர்க்கும் தனிப்பெருங் கல்லூரி ஒன்றைத் தக்க இடத்தில் நிறுவி நடைபெறச் செய்யவேண்டுமெனவும் அன்பர்கள்உறுதியான கருத்தோடு பெரிதும் எதிர்பார்க்கின்றனர். அடிகளார் திருவுளங் கொள்வார்களாக.

எல்லாம்வல்ல அம்மைப்பர் திருவருளால் இவர்கள் தக்க திருமேனி திருவுள்ள நலங்களுடன் இனிது பெருவாழ்வுபெற்று விளங்கித் தமது பொறுப்பினுள்ள

இத்தென்றமிழ்ச் சைவ நன்னாட்டைப் பெரிதும் உய்வித்தருள்கவென வேண்டுகின்றனம். வாழி அடிகளார் திருவடிமலர்கள்.

— செந்தமிழ்ச்செல்வி, 15—9—1943.

மான்யம் எதற்கு?

"நம் மத ஸ்தாபனங்களை நடத்துபவர்களுக்கு, கிறிஸ்துவமத பாதிரிகளைப் போல் ஆர்வமும், ஆவேசமும் இருக்கவேண்டும். ஐரோப்பியபாதிரிகள் தங்கள்சௌகரியங்களைக் கவனிக்காமல் ஆயிரக் கணக்கானமைல்கள் கடந்து வந்து தாங்கள் நம்பும் தெய்வத்தைப் பற்றிப் பிரசாரம் செய்கிறார்கள். அதைப்போலவே ஒவ்வொரு இந்து மடாதிபதியும் மதத்தைப் பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டும். இல்லா விட்டால், மடங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மான்யங்கள் பிரயோசனமுள்ளதா என்பதை யோசிக்கவேண்டி வந்து விடும்."

இவ்வாறு, வெகு விமரிசையாக நடந்த தர்மபுரம் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் பத்தாவது ஆண்டு ஆட்சி விழாவுக்குத் தலைமை வகித்த ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர் பேசினாராம். தர்மபுரம் ஆதீனத்தைப்போல மான்யங்களை நல்ல வகையில் செலவிட வழிதேடும் மடாதிபதிகளெல்லாம் இனியாவது 'இந்துமத' தத்துவங்களின் பிரசாரத்திற்காகத் தங்கள் முழு கவனத்தையும் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கலா மல்லவா?

—ஆனந்த விகடன் 19—9—1943.

திருத்தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் பத்தாண்டு ஆட்சிவிழா

தருமபுர ஆதீனத்தில் 24-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது ஆட்சியேற்ற பத்தாவது ஆண்டுவிழா மிக்க சிறப்புடன் நாளது மாதம் 5—9—43முதல் மூன்று நாட்கள் இனிது நடைபெற்றது. முதல்நாள் வைபவத்திற்கு திருவாங்கூர் இராஜ்யம் திவான், சச்சிவோத்தம சர். ஸி. பி. இராமசுவாமி ஐயரவர்களும், இரண்டாம்நாள் சென்னை அறநிலையக் காப்புக் கழகத் தலைவர், திவான் பகதூர் திரு. டி. எம். நாராயணசுவாமி பிள்ளையவர்களும், மூன்றாம்நாள் மாயவரம் நகராண்மைக் கழகத் தலைவர் திரு. சி. கனகசபைச் செட்டியார் அவர்களும் தலைமை தாங்கினர். மற்ற வைபவங்களுக்குமிடையே தலைவரவர்கள், முதல்நாள் ஆதீன நூல்நிலையக் கட்டிடங்களைத் திறந்துவைத்தனர். இரண்டாம்நாள் கோவை, சிவக்கவிமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தன்னால் எழுதப்பெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் புராண விரிவுரையை அரங்கேற்றினார்கள். அந்நாள் பிற்பகல் அடியிற் குறித்த எழுவர்களுக்கு 'தருமை ஆதீனத் தமிழ்ப்புலவர்' என்ற பட்டத்தையும், இசையரசு, தேவாரமணி எம். எம். தண்டபாணி தேசிகரவர்களுக்குத் 'தருமை ஆதீன இசைப்புலவர்' என்றும், சந்நிதானங்கள் திருவுளம்பெற்று பொற் பதக்கங்கள் வழங்கி வாழ்த்தியருளினார்கள்.

1. திரு. க. வச்சிரவேல் முதலியார் காஞ்சீபுரம், 2. ஔவை. துரைசாமி பிள்ளை அண்ணாமலைநகர், 3. திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை திருவையாறு,

4. திரு. ச. தண்டபாணி தேசிகர் திருவாரூர், 5. திரு. வை. மு. சண்முக தேசிகர் நாகை, 6. திரு. மு. சு. மாணிக்கவாசக முதலியார் சென்னை, 7. திரு. வை. குஞ்சித பாதம் பிள்ளை சென்னை. மூன்றும்நாள், பழநி, வேதாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர், சிவஸ்ரீ ஈசானசிவாசாரியாரவர்களுக்கு 'சைவ சித்தாந்த சரபம்' என்னும் பட்டம் வழங்கியதுடன் பொன்னுடை. சாத்தியும் ஆசி கூறினர்கள்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்காகச் சைவ உலகம் நமது குருமூர்த்தியாகிய மகாசந்நிதானங்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது. அவர்களது ஆட்சி பல்லாண்டு பல்லாண்டாக நின்று நிலவி சைவமும், தமிழும் தழைக்க நமது ஞான தண்டாயுதபாணியின் அருளைச் சிந்திக்கிறோம்.

—பழநி ஆண்டவர், 19—9—1943.

தமிழ் மணம் கமழ்ந்த திருவிழா.

இப்பொழுதெல்லாம் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தால் பளீரென்று ஒரு விஷயம் தட்டுப் படுகிறது. அதுதான் கிருஹப்பிரவேசச் செய்திகள். இங்கே, அங்கே, எங்கே பார்த்தாலும் கிருஹப்பிரவேசங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. கிருஹப்பிரவேசம் செய்ய முடியாத பிரபலஸ்தர்கள் சஷ்டியப்த பூர்த்தியாவது செய்து கொள்கிறார்கள். இதைத்தவிர வேறு புதுச்செய்திகள் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்த போதுதான், பரபரப்பான செய்தி ஒன்று வந்தது. "தருமபுரம் ஆதீனத்துப் பண்டார சந்நிதிகள் ஆட்சியின் பத்தாவது ஆண்டு விழா நடக்கப்போகிறது'' என்னும் செய்திதான் அது. நாம் போகா விட்டால் அந்த விழா நடக்காதோ என்னமோ என்று தோன்றவே, எதற்கும் நம் மேல் குற்றம் ஏற்படாமல் விழாவுக்குப் போய்த்தீர்ந்துவிடுவதென்று கிளம்பினேன்.

* * *

மாயவரத்தில் இறங்கிக் காவேரி தீரத்தின் அற்புத இயற்கை வனப்புக்களைப்பார்த்து மகிழ்ந்துகொண்டே தர்மபுரம் போய்ச்சேர்ந்தோம்.

பத்தாண்டு விழாவின் ஞாபகார்த்த 'வளைவை'த் தாண்டி உள்ளே பிரம்மாண்டமான அலங்காரப் பந்தலுக்கு வந்தோம். அந்தப் பந்தல் முகப்பின் அழகிய வேலைப்பாட்டைப் பார்த்துப் பிரமித்துப் போய் நிற்கையில், ஓர் இனிய நறுமணம் வீசுவது புலனாயிற்று. "இது என்ன மணம்?'' என்று கவனித்தபோது முகப்புக்கள், சுவர்கள் எங்கும் தேவாரம், திருவாசகத்திலிருந்து எடுக்கப்பட்ட மணி வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தோம். தமிழ்ப் பெரியார்களின் படங்களும் சைவசமயக் குரவர்களின் திரு உருவங்களும் அங்கங்கே காட்சியளித்தன.

"சைவமும் தமிழும் தழைத் தினிதோங்குக'' என்ற வாக்கியம் அங்கங்கே காணப்பட்டது. இவ்விதம் நாலாபுறமும் கமழ்ந்த தமிழ் மணத்துடன் பக்தர்கள் பூசிக்கொண்டிருந்த திருநீற்றின் மணமும் சேர்ந்து ஆகாயத்திற்குத் தூக்கிக் கொண்டு போயிற்று. என் கூடவந்த நண்பர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் ஒவ்வொரு இடமாகக் காண்பித்தார். "இதுதான் மடத்தின் காரியாலயம்!

இதுதான் ஆசாரக்கட்டு! இதுதான் வாகன மண்டபம். இதுதான் பண்டார சந்நிதிகளின் திரு அறை. இதுதான் பூஜை மண்டபம். இதுதான் மடத்தின் அச்சு நிலயம், இதுதான் நூல் நிலயம். இதுதான் தேவாரப் பாடசாலை" என்று ஒவ்வொரு இடமாகக் காண்பித்துக்கொண்டே போனர்.

"அடே யப்பா! ஒவ்வொன்றும் பிரம்மாண்டமாயிருக்கிறதே!" என்று சொல்லி வாய் மூடுவதற்குள், தூரத்தில் மணிகளின் நாதமும் ஆரவாரமும் கேட்டன. "ஊர்வலம் வருகிறது, வாருங்கள்!" என்று கூப்பிட்டார் நண்பர்.

வாசற் பக்கம் வந்ததும், "உள்ளே பார்த்துவிட்டுப் பிரம்மாண்டம் என்றீர்களே, பாருங்கள் இங்கே!" என்ருர். பிரும்மாண்டமான ஆறு யானைகள் முதலில் வந்துகொண்டிருந்தன. பிறகு, ஒட்டகங்கள் வந்தன. ஒட்டகங்களுக்குப் பின்னல் சசிவோத்தம சர் சி. பி. ராமசாமி ஐயரை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு வந்தார்கள். இடுப்பில் பஞ்சகச்சம் மேலே சரிகைப் பட்டுடன் சர் சி. பி. சிவப் பழமாய்க் காட்சியளித்தார். "சர் சி பிக்கு ஜே!" என்று கோஷம் கேட்டது. அந்தப் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் யானைகளும் வெறித்துக் கொண்டு கிளம்பின. மிகவும் சரியான ஆசாமியைத்தான் தலைமை வகிப்பதற்குக் கூப்பிட்டிருக்கிருர்கள் என்று தோன்றிற்று. ஊர்வலம் முடிந்ததும் சர். சி. பியை விருந்தினர் விடுதிக்கு 'சிரம பரிகாரம்' செய்து கொள்ள அழைத்துக்கொண்டு போனர்கள்.

"புரோகிராமைப் பாருங்கள்! இத்துடன் காலை நிகழ்ச்சி முடிந்தது. இனிமேல் மத்தியானம் நாலு மணிக்கு வரவேற்பு வாருங்கள் போகலாம்" என்ருர் நண்பர். மடத்தைச் சுற்றிப்பார்த்துக் கொண்டே திரும்பினேம். "இடம் வெகு சுத்தமாக இருக்கிறதே!" என்றேன். "இது மட்டுமா? இந்த ஆதீனத்தைச்சேர்ந்த 27 கோயில்களும் இப்படிதான் இருக்கின்றன. இந்தப் பண்டார சந்நிதிகள் பட்டத்துக்கு வந்ததிலிருந்து ஊழல்களை யெல்லாம் களைந்தெறிந்து சீர்திருத்தம் செய்திருக்கிருர். மடத்தின் வருமானம் பெருகியிருக்கிறது. அனவசியச் செலவுகள் கிடையாது. சொந்தமாகத் தமிழ் நூல்களைப் பிரசுரம் செய்கிருர்கள். பண உதவி செய்து நூல்களைப் பிரசுரிக்கச் செய்கிருர்கள். தமிழ்க் கல்விக்காக மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிருர்கள். சைவ சமயத்திற்காக "ஞானசம்பந்தம்" என்ற ஒரு மாதப் பத்திரிகையும் நடத்துகிருர்கள். வேத ஆகமப் பாடசாலையும் தேவாரப் பாடசாலையும் நடக்கின்றன. சந்நிதானத்துக்குப் பழைய ஜபர்தஸ்து ஒன்றும் கிடையாது. காரில் ஏறிக்கொண்டு கோயில் திருப்பணியைப் பார்வையிடப் போவார். மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற வேற்றுமை இல்லை......" என்று எனது நண்பர் சொல்லிக்கொண்டே போனர். "அப்படியா சமாசாரம்? இப்பேர்ப்பட்ட சுவாமியாரை இலேசில் விடக்கூடாது. சாயங்காலம் பார்க்கலாம் ஒரு கை! என்று மனதிற்குள் தீர்மானித்தேன்.

சாயங்காலம் நாலு மணிக்கு அந்த அலங்காரப் பந்தலில் சுமார் மூவாயிரம் பேர் கூடியிருந்தார்கள். மேடைமீது தஞ்சை ஜில்லாவின் பிரபலஸ்தர்களின் சரிகை அங்கவஸ்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. "எங்கே பண்டார சந்நிதிகள்?" என்று தேடினேம். தூரத்தில் சர். சி. பி. யோடு அவர் வந்துகொண்டிருந்தார். இன்னெரு சுவாமியார் — 'ஒடுக்கம்' என்று இவரைச் சொல்கிருர்கள் — கைலாகு

கொடுத்து அழைத்து வர சந்நிதானம் வந்தார். மடத்து வாசலில் மூன்று பேரும் வழியாக அகப்பட்டுக் கொண்டார்கள்! — என் நண்பரின் காமிராவுக்குள்ளே.

கூட்டம் ஆரம்பமானதும், ஒரு கனவான் சர். ஸி. பி. யை வரவேற்றுப் பேசினர். அவர் சர். ஸி. பி. சென்னை மந்திரியாக இருந்து செய்த தொண்டையும், அவரது ராஜதந்திரத்தையும், திருவாங்கூரில் செய்துவரும் மகத்தான காரியங்களையும் பாராட்டிப் பேசினர். அதற்கு பிறகு விழாக்கமிட்டியின் சார்பாக சர், ஸி. பிக்கு உபசாரப் பத்திரமும் ஒரு வெள்ளிப் பேழையும் பரிசளிக்கப்பட்டன. மேட்டூர் பைகாரா திட்டத்திற்குக் காரணபூதரான சர். ஸி. பிக்கு எப்படி நன்றி செலுத்துவதென்று தெரியாமல் திண்டாடுவதாகவும் ஒரு பத்திரத்தில் காணப்பட்டது.

பிறகு மாயவரம் நகரசபைத் தலைவர் ஸ்ரீ கனகசபைச்செட்டியார் நகரசபையின் சார்பாகப் பண்டார சந்நிதிகளுக்கு வாழ்த்துரையை வாசித்துக் கொடுத்தார். "திருக் கயிலாயத்திலிருந்து வந்த பரம்பரை தன்னில் திகழுஞ் செம்மால்!" என்று ஆரம்பித்துத் தமிழ் மணம் கமழும் இனிய வாழ்த்துரையைப் படிக்க ஆரம்பித்தார். "நினைத்தால் திருப்பணி, நிமிர்ந்தால் தமிழ்ப் பணி, கொண்டால் குடமுழுக்கு, கூடினல் மதிலெடுப்பு" என்று சந்நிதானம் செய்து வரும் தர்ம கைங்கர்யங்களை அப் பத்திரத்தில் அழகாகப் பாராட்டியிருந்தது. நகரசபையின் சார்பாக ஒரு வெள்ளி 'வளைவு'ம் சுவாமிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

மடாதிபதிகளைப் பாராட்டிப் பல சங்கங்களின் சார்பாக உபசாரப்பத்திரங்கள் படித்துக் கொடுக்கப்பட்டன. "அன்புருக்கொண்ட ஆதீனத் தலைவ!" என்றும் "சைவக் கலையும் சார்ந்த நற்றமிழும் மெய்வைத்து ஓங்க மேவிடு மடிகள்!" என்றும் "ஞானசம்பந்த ஞானச்சாரிய நீ! ஞாலமீதினிலே வாழிய நீடே!" என்றும் அப் பத்திரங்களில் அறைந்திருந்தார்கள்.

தீந்தமிழ்ச்சுவையில் அதிகமாக மாந்தித்திளைத்த ஒருவர் வாழ்த்துப்பத்திரத்தைப் படிக்கும்போது "மதுமைச் சொக்கழ் மழரடி மட்வா சதுழப்பாடுழ முண்மூக தேழிக!" என்று அழகாக வாழித்துச் சபையோரை ஒழே குழுகலத்தில் ஆழ்த்திவிழ்ட்டார்.

மொத்தத்தில் சுமார் 250 வாழ்த்துப்பத்திரங்கள் சந்நிதானத்துக்குப் படித்துக் கொடுப்பதற்காக வந்திருந்தன என்று அறிந்து பிரமித்துப்போனேன்! மடாதிபதி ஒருவர் இவ்வளவுதூரம் பொதுஜன அபிமானத்தைக் கவர்ந்திருக்கிறுர் என்பது மிகவும் ஆச்சர்யமான விஷயந்தான். அன்று சில முக்கிய பத்திரங்களை மட்டும் வாசித்துவிட்டு, பாக்கிப் பத்திரங்கள் மறுநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பல பிரமுகர்கள் மடாதிபதியைப் பாராட்டிப் பேசினர்கள். இந்துதேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் திவான்பகதூர் ஸ்ரீ டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை, தமக்கும் இந்த விழாவில் பங்கு உண்டென்றும், அந்தப் பெருமையை நேரில் தட்டிக்கொண்டு போவதற்காகவே தாம் வந்திருப்பதாகவும் சொன்னர். இதுவரை பண்டாரசந்நிதிகள் செய்த சேவைகளுக்காக அவர் சந்தோஷப்படவில்லையாம்; இனிமேல் செய்யப்போவதை நினைத்துத்தான் சந்தோஷப்படுகிறுராம். அவ்வளவு நல்ல நல்ல திட்டங்களை யெல்லாம் சந்நிதானம் ஆலோசித்து வருவதாக

அவர் வெளியிட்டார். உதாரணமாக, தமிழ் மணங்கமழும் ஓர் உயர்தரக் கலாசாலை கூட நடத்த உத்தேசித்துவருவதாகத் தெரியப்படுத்தினர்.

சீகாழி ஸ்ரீ சீனிவாச முதலியார் அவர்கள் பேசிய பிறகு, ஸ்ரீ என். ஆர். சாமியப்ப முதலியார் பேசினர். அவர் என்ன பேசினர் என்பது தெரியவில்லை என்றாலும், மடாதிபதியைப் பாராட்டித்தான் ஏதோ பேசியிருக்க வேண்டுமென்று ஊகிக்கிறேன். ஸ்ரீ என். ஆர். எஸ். போன்ற நிர்வாகத்திறமை வாய்ந்தவரின் பாராட்டைப் பெற்றதே மடாதிபதியின் நிர்வாகத் திறமைக்குச் சான்றாகும்.

மடாதிபதிக்குப் பதிலாக ஸ்ரீ-ல-ஸ்ரீ 'ஒடுக்கம்' வாழ்த்துரைகளுக்குப் பதிலுரை அளித்தார். 'நமப்பார்வதி பதயே' என்ற கோஷத்தைப் பிரசங்கத்தின் நடுவில் அடிக்கடி போட்டு, "ஹரஹர மகாதேவா" என்று சபையோர் வாயிலிருந்து வரவழைத்துவிட்டுத்தான் மேலே பேசினர்.

சர். ஸி. பி. தமது பிரசங்கத்தில் தமக்கும் மடத்துக்குமுள்ள வெகுநாளைய சம்பந்தத்தை நாஸூக்காக வெளியிட்டார். பிறகு மடத்தில் இப்பொழுது காணும் மாறுதலைப் பார்த்துப் பிரமித்தார். "சபாஷ்! இப்படியே இன்னும் மேலே போய்க் கொண்டிருங்கள்!" என்று ஊக்கப்படுத்தினர். "என் நண்பர்—என் கிறிஸ்தவ நண்பர்கள் செய்யும் காரியங்கள் எனக்குத் தெரியும். 6000 மைல்களுக்கப்பாலிருந்து வந்து அவர்கள் மதம் மாற்றுவது ஆச்சரியமா யில்லையா? நமக்கு அவமானமாயில்லையா?" என்று கேட்டார்.

"மலையாள நாட்டில், மலையிலும், நாட்டிலும் ரட்சண்ய சேனைத் தொண்டர்கள் வெய்யில் மழையைப் பாராது மதபோதனை செய்வதைப் பார்க்கிறேன். ஆனல் நாம் என்ன செய்தோம்? செய்கிறோம்? செய்யப்போகிறோம்?" என்று ஆள் காட்டி விரலைக்காட்டிக் கேட்டார்.

"கேரளத்தில் பதினைந்து லட்சம் தமிழர்கள் மதபோதனைக்காகத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாகத்தைத் தீர்க்கவேண்டும் இந்தமாதிரி மடாலயங்கள்தான் அந்தக்காரியத்தைச் செய்யவேண்டும்" என்றார் ஆவேசத்துடன்.

சர். ஸி. பி. ஆங்கிலத்தில்தான் பேசினர். ஆனல் அவர்கூட அங்கே பெருகி யோடிய தமிழ் வெள்ளத்திலிருந்து தப்பிக்கொள்ள முடியவில்லை. "குறைவிலா நிறைவே, கோதிலா அமுதே" என்ற தமிழ்ப் பாடலைத் தமிழிலேயே பாடிக் காட்டினர்.

விழாக் கமிட்டித் தலைவர் சர் ஆர். எஸ். சர்மா வந்தனேபசாரம் சொல்ல எழுந்து, "நான் இப்பொழுது வாயைத் திறப்பதைவிட ஸர் ஸி. பி. நூல் நிலையத்தைத் திறப்பதைத்தான் எல்லோரும் விரும்புவார்கள்!" என்று சொன்னர். சொல்லிவிட்டு 'ஓஹோ!' வென்று பெரிதாக வாயைத் திறந்தார். அந்த சமயம்பார்த்து எங்கேயோ ரயில் என்ஜினும் பெரிதாக வாயைத்திறந்து ஊதியது.

* * * *

மறுநாளும், அதற்கு மறுநாளும் நடந்த திருவிழாவில் தமிழ் மணம் இன்னும் அதிகமாகக் கமழ்ந்தது. அப்பர் புராணத்துக்குச் சிவக்கவிமணி ஸ்ரீ ஸி. கே.

சுப்ரமண்ய முதலியார் இயற்றியுள்ள விரிவுரை அரங்கேற்றமாயிற்று. தமிழ் வித்வான்கள் எட்டுப்பேருக்குத் "தருமபுரம் ஆதீனப் புலவர்" என்ற பட்டம் ஸ்ரீ பண்டாரசந்நிதி அவர்களால் அளிக்கப்பட்டது. இவர்களில் ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகருக்குத் "தமிழ் இசைப் புலவர்" என்ற பட்டம் தரப்பட்டது.

இரண்டு தினங்களிலும் திருவிழாப் பந்தலில் அமோகமாகத் தமிழிசை பொழிந்தது.

சென்னைக்கு வந்து கூவம் நதியின் மணத்தை அனுபவிக்கத் தொடங்கிய பிறகும் தருமபுரத்தின் தமிழ் மணத்தை என்னால் மறக்க முடியவில்லை.

* * * *

மடாலயங்கள் எல்லாம் ஆதிகாலத்தில் மிக உயர்ந்த நோக்கங்களுடனே மகா புருஷர்களால் ஸ்தாபிக்கப்பட்டன. மனிதர்களைப்போலவே, மனிதர்களால் நடத்தப்படும் எந்த ஸ்தாபனமும் மாறி மாறி வாழ்வையும் தாழ்வையும் அடைவது இயல்பு. அவ்விதமே சில காலத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் மடங்களின் நிர்வாகம் மிகவும் சீர்கேடு உற்றிருந்ததாகப் பெரும் புகார்கள் கிளம்பின. மடங்களின் நிர்வாகத்தில் சர்க்கார் தலையிட்டு சீர்கேடுகளைப் போக்கவேண்டுமென்று ஜனங்கள் கிளர்ச்சி செய்ததும் உண்டு.

அந்தக்காலம் மாறி, இப்போது மடாலயங்கள் மறுபடியும் பொதுமக்களின் அபிமானத்துக்கு உரியனவாகும் காலம் வந்துவிட்டதென்றே தோன்றுகிறது. உண்மையில், மடாதிபதிகள் மனம்வைத்தால் எப்பேர்ப்பட்ட அரும்பெரும் தொண்டுகளைத்தான் செய்யக்கூடாது? ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் செய்துவரும் சமூக-சமயத்தொண்டுகளையும், விசுவ பாரதியில் நடைபெறும் அரிய கலைஞானத் தொண்டையும் தமிழ்நாட்டு மடாலயங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே செய்துவிடலாமே? இதற்கெல்லாம் வழிகாட்டி யாகும் பெருமையைத் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்தப் பண்டாரசந்நிதிகளும் ஏன் அடையக்கூடாது.

— "கல்கி" 20—9—43

தருமையாதீன முதல்வர் பதிற்றுண்டுவிழா.

நிகழும் சுபானு, ஆவணி, 20, 21, 22-ம் நாட்களில் திரு. Sir. C. P. இராமசாமி அய்யர், திரு. திவான்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை, மாயூரம் நகராண்மைக் கழகத் தலைவர் திரு. கனகசபை செட்டியார் ஆகிய இவர்கள் தலைமையில் அரிய விரிவுரைகளையும், இசை முழக்கத்தினையுங்கொண்டு சிறப்பாக நிகழ்ந்தேறியது. புலவர் எழுவர்க்குத் 'தருமையாதீனத் தமிழ்ப்புலவர்' எனவும் திரு. இசையரசு M. M. தண்டபாணி தேசிகரவர்கட்கு 'இசைத்தமிழ்ப்புலவர்' எனவும், பட்டங்களும், அன்பர்கட்கும் அறநிலையங்கட்கும் நன்கொடைகளும் வழங்கப்பெற்றன. நம் சங்கத் தலைவரவர்கள் அன்பர்களுடன் சென்று, வாழ்த்துரை ஒன்று வழங்க ஆதீனத் தலைவரவர்கள் மகிழ்ந்து ஏற்றருளினர்.

—தமிழ்ப்பொழில், 21—9—43.

அடிகளார் வாழ்க!

சமரஸ சமயம்

உலகத்திலேயே மிகப் பழமையான சமயநெறிகளில், சைவசித்தாந்தம் முதன்மை வகிப்பதாகும். "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருள்" ஆகிய இறைவன் எவ்வாறு "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய்" விளங்குகிறானோ, அவ்வாறே, சைவசமயமும், உலகிலுள்ள பழமையான மதங்களெல்லாவற்றையும்விட அதிகப்பழமையானதாயிருந்தும் கூட, மிகமிக நூதனமான சமயக் கொள்கைகளையெல்லாம் தன்னகத்தே தழுவியதாக அமைந்துள்ளது. எனவே, எச்சமயத்தினருக்கும் அடிப்படையான கொள்கைகளில் முரண்பாடில்லாதது இந்த சமரஸ சன்மார்க்க சமயம். அப்படி இருந்தும், இத்தகைய உயர்ந்த சமய நெறி, உலகில் போதிய அளவு பரவவில்லை. அதற்குக் காரணம், பிரசாரக் குறைவுதான் என்று கூறினால் மிகையாகாது.

பண்டார சந்நிதிகள்

இச் சைவ சமயத்தை வளர்ப்பதற்காக, முற்காத்தில் ஆதீனங்கள் நிறுவப் பெற்றன. கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தலைசிறந்து, தெய்வீகத்தன்மை வாய்ந்து விளங்கும் பெரியோர்கள், ஆதீனத் தலைவர்களாகப் பட்டம் பெற்றார்கள். இவர்களுடைய பரம்பரைகள் இன்றும் நம் தமிழ்நாட்டில் சிறப்புடன் திகழ்கின்றன. மகா ராஜாக்களாலும் பிரபுக்களாலும் அவ்வக்காலத்தில் ஏராளமான சொத்துக்கள் இவ்வாதீனங்களுக்கு மானியமாக வழங்கப்பெற்றன. தலைமுறை தலைமுறையாகப் பெருகிவரும் இவ்வைசுவரியங்கள், சைவ சமயத்தை உலகில் பரப்புவதற்காகவும், சைவ சமயநெறி பற்றிய அறங்களை வளர்ப்பதற்காகவுமே ஆதீனத் தலைவர்களாகிய பண்டார சந்நிதிகளின் பொறுப்பில் ஒப்படைக்கப் பட்டவை என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், செல்வம் என்பது ஒரு பொல்லாதவஸ்து, மனிதன் சிறிது விழிப்பின்றியிருந்தால், அது அவனை நிச்சயம் படுகுழியில் வீழ்த்திவிடும். அதனாலேயே, பெரியோர்கள் செல்வத்தை அதிகமாக விரும்புவதில்லை. அத்தகைய செல்வம், தான் யார் கைப்படுகிறதோ அவருடைய மேன்மைக்கோ, சிறுமைக்கோ தக்கபடி, நற்காரியங்களுக்கு அல்லது தீச்செயல்களுக்குப் பயன் படுகிறது. மடாலயங்களுக்கு ஏராளமான பொருள்களை நன்கொடையாக அளித்த வள்ளல்கள், அது நற்காரியங்களுக்குப் பயன்படும்பொருட்டே அவ்வாறு செய்தனர்.

இயற்கை நியதி

ஆனால், இயற்கை நியதி எனச் சொல்லப்படுகிற ஆண்டவன் கட்டளை ஒன்று தனியாக இருக்கிறதல்லவா? "உலகில் தீமை அதிகரித்துத் தலைவிரித்தாடும் போது, அதை யொழித்து நன்மையை நிலை நிறுத்துவதற்காக நான் உலகில் அவதரிக்கிறேன்," என்றான் கண்ணன். இதன் உட்பொருள் என்னவென்றால், தீய சக்திகள் மேலோங்கி விடாதபடி இயற்கை நியதியானது என்றும் காத்துக்

கொள்ளும் என்பதேயாகும். இந்த இயற்கை நியதியின் அமுல் வேகத்தில் தோன்றி அதன்வழி நின்று செயலாற்றுபவர்களைத்தான் மகான்களென்று கூறுகிறோம்.

பத்தாம் ஆண்டு விழா

தருமபுரம் ஆதீனம் பண்டார சந்நிதிகளாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அத்தகைய மகான்களில் ஒருவராவர். சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முன் குருஞானசம்பந்தர் என்றபெரியாரால் ஸ்தாபிக்கப் பெற்ற இவ்வாதீனத்தில், இவ்வடிகளார் இருபத்து நாலாவது குருமூர்த்தியாக விளங்குகிறார்கள். இவர்கள் பட்டத்துக்கு வந்து இப்போது பத்தாண்டுகள் பூர்த்தியாகின்றன. பத்தாண்டுகள் என்பது மனிதவாழ்க்கையில் ஒருபிரமாதமானநீண்ட காலமாகாது. ஆனால் தருமபுர ஆதீனச் சரித்திரத்தில், பத்தாண்டு ஆட்சி என்பது ஒருகுறிப்பிடத்தக்க சம்பவம் என்றே தெரிகிறது. அத்துடன் இப்பொழுது பட்டத்திலிருக்கும மகாசந்நிதானம் அவர்கள் பல்வேறு அம்சங்களில் பெருஞ்சிறப்பும் மேன்மையும் வாய்ந்தவர்கள். எனவே, அவர்களது ஆட்சியின் பத்தாம் ஆண்டு நிறைவை யொட்டி ஒருவிழாக் 'கொண்டாடுவதென்று தஞ்சை ஜில்லாப் பிரமுகர்கள் தீர்மானித்து, அதற்கென ஒரு கமிட்டியும் நியமித்தனர், மகா சந்நிதானம் அவர்களின் உடன்பாடும் இதற்குக் கிடைத்துவிடவே, செப்டம்பர் 5, 6, 7களில் இவ்விழாவானது அதிவிமரிசையாகக் கொண்டாடப்பெற்றது.

மேன்மையான அம்சங்கள்

இந்த சந்தர்ப்பத்தில், தற்போது ஆட்சி பீடத்தி லமர்ந்திருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞான சம்பந்த பண்டார சந்நிதி அவர்களின் மேன்மைக்குக் காரணமான பல அம்சங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. இவர்களது அருளாட்சி முறையானது, மற்ற தர்ம ஸ்தாபனங்களுக்கு ஒரு இலக்கியமாக இருக்கிறது. இவர்களது நிர்வாகத்திறமையை வியந்து பாராட்டாதவர்களில்லை. சைவத்துக்கும் தமிழுக்கும் இவர்கள் செய்துள்ள சேவைகள் ஏராளம். தேவார பாடசாலையும், வேத பாடசாலையும் நிறுவி, இளைஞர்களுக்குச் சைவ சித்தாந்தத்தில் உற்சாகமான பற்றுதலை வளர்த்து வருகிறார்கள். இவர்களுடைய மேற்பார்வையில் இருபத்தேழு தேவஸ்தானங்களிருக்கின்றன. இக்கோவில்களின் திருவிழாக்காலங்களிலும் பிற சந்தர்ப்பங்களிலும் புலவர்களைக்கொண்டு சமயப்பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் சைவ சித்தாந்த மகாநாடுகள் கூட்டி அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நடத்திவருகிறார்கள். மடத்தின் சார்பாக சைவசித்தாந்த நூல்களும், "ஞானசம்பந்தம்" என்னும் பத்திரிகையும் வெளியிட்டு வருகிறார்கள்.

அடிகளின் சேவைகள்

மகாசந்நிதான மவர்கள் ஆதீனத்தில் ஒரு பெரிய புத்தகசாலை நிறுவியிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலுள்ள மிகச் சிறந்த புத்தகசாலைகளில் இதுவும் ஒன்று. பல மொழிகளிலுள்ள புத்தகங்கள் இங்கு சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

மாணவர்களுக்கு உதவுவதில் மகாசந்நிதானம் பேரார்வம்கொண்டுள்ளவர்கள். பள்ளி மாணவர்களுக்கு ஏராளமான பரிசுகொடுத்து, அவர்களுக்குத் கல்வியில் ஊக்கமளித்து வருகிறார்கள். அவர்கள் நடத்திவருகிற தேவார, வேதாகமப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இலவசமாக உணவளித்து வருகிறார்கள். ஏழை மாணவர்களிடத்தில் இரக்கம்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவருகிறார்கள். இவர்களது மேற்பார்வையிலுள்ள கோயில்களுக்குப் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டுச் சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள்.

தயாள சிந்தை

அடிகளார் மகா தயாள சிந்தையுடையவர்கள். எத்தனையோ பொது ஸ்தாபனங்களுக்கு நன்கொடைகள் வழங்கியுள்ளார்கள்.

திருப்பதியில் கீழ்த்திசைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற மகாநாட்டிற்கு ஏராளத்தொகை நன்கொடையாகக் கொடுத்து உதவியுள்ளார்கள்.

சென்னை தமிழ்ச் சங்கத்தின் போஷகர். விவசாய அபிவிருத்தியில் விசேஷ ஊக்கமும் அக்கரையும் உள்ளவர். தஞ்சை, சரசுவதி மகால் லைப்ரெரியை மீண்டும் புதுப்பிக்க விசேஷமாக உதவியது மட்டுமின்றி அதன் போஷகராகவுமிருந்து வருகிறார்கள். செல்வமும், செல்வாக்கும் சூழப்பெற்றிருந்தாலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மிக்க எளிய வாழ்க்கையே மேற்கொண்டிருக்கிறார்கள். எடுத்த காரியத்தை முடித்தே தீருவார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது தர்மம் அனைத்திற்கும் சாச்வத நிதிகள் ஏற்படுத்தி யிருப்பதால் அவை நிரந்தரமாக நடைபெறுபவைகளாகும். தமிழ்க் கலையில் விசேஷஊக்கம் கொண்டவர். தமிழ் வித்வான்களை வெகுவாக ஆதரிப்பவராவார்கள். பல மகாநாடுகளுக்கும் இந்த மடத்தின் பிரதிநிதிகள் அனுப்பப்படுகின்றனர். முதிர்ந்த தமிழ்ப்பண்டிதர்களுக்கான சைவ சித்தாந்த மறுபயிற்சித் திட்டமும் நடைபெறுகிறது.

ஒப்புரவொழுகல்

அடிகளாரிடத்தில் அரிய குணம் ஒன்று உண்டு. அதுதான் உலகத்தோடொட்ட ஒழுகல். முற்காலத்தில் முன்னோர்கள் வகுத்த அரிய கொள்கைகளை அவர்கள் அணுவளவும் பிசகாது கடைப்பிடிப்பார்கள். ஆனல் அதற்காக காலப் போக்கிற்கு ஒவ்வாத இற்றுப்போன பயனற்ற ஐதீகங்களை, அவை பழமையாயிருப்பதற்காக அவற்றை விடாது பற்றிக்கொண்டிருக்கமாட்டார்கள். உண்மையும் நன்மையும் நூதனவடிவில் வந்தால், அவற்றை அவர்கள் உதாசீனம் செய்யாமல், ஆர்வத்துடன் தழுவிக்கொள்வார்கள். இதுஒன்றே அவர்களது எல்லாப் பெருமைகளுக்கும் முக்கிய காரணமாக இருக்கிறது. அவர்களது சீர்திருத்த மனேபாவம் எல்லோராலும் போற்றப்படுகிறது.

அரிய நிர்வாகம்

அடிகளார் துறவிகளாயிருப்பினும், திரண்ட செல்வத்தின் நிர்வாகப் பொறுப்பு அவர்களுக்கிருப்பதால், அவர்கள் தம்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள

தர்மச் சொத்தை மக்களுக்குப் பயன்படும் முறையில் செலவிடுகிறார்கள். அவ்வாறு செலவிட்டுச் செய்யும் காரியங்களையும், நல்லநிர்வாகத் திறமையுடன் செய்கிறார்கள். அறிவாளிகள் எக்காரியத்தைச் செய்யப் புகினும் அதை நன்கு திறம்படவே செய் வார்களல்லவா? அதற்கிணங்க, மகாசந்நிதானம் அவர்கள், ஆதீன வேலைகளைப் பலபிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவின் வேலையையும் தேர்ச்சிபெற்ற உதவி யாளர்களிடம் ஒப்படைத்துள்ளார்கள். தருமபுர ஆதீனத்தையே இவர்கள் அடி யோடு மாற்றியமைத்துப்புதுப்பித்து அழகுபடுத்தியிருக்கிறார்கள். சர்க்கார் இலாக் காக்களைப் போலவே எல்லா அலுவல்களும் கவனிக்கப்படுகின்றன. வருஷாந்திரக் கணக்கு விவரங்கள் அனுப்பப்படும் முறையைக் கண்டு ஹிந்துமதஸ்தாபன போர்டு அதிகாரிகள் வெகுவாகத் திருப்தியடைந்துள்ளனர்.

பிரபலஸ்தர்கள் விஜயம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது நிர்வாக காலத்தில் பலபிரபலஸ்தர் கள் இவ்வாதீன மடத்திற்கு விஜயம் செய்துள்ளார்கள். பிரெஞ்சுஇந்தியா கவர்னர், காரைக்காலின் நிர்வாகஅதிகாரி, சென்னைமந்திரிகள், ஸர் பி. டி. ராஜன், ஸ்ரீ எஸ். ராமனுதன், டாக்டர் ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியார், ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் கே. சி. ஐ. இ. முதலியவர்கள் தற்பொழுது பட்டத்திலுள்ள ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் நிர்வாகத் திறமையை வெகுவாக அவர்கள் கொண்டாடி யுள்ளனர். தருமபுரம் மக்களுக்கு இவர்கள் செய்துள்ள நன்மைகள் அனந்தம்.

அடிகளார்வாழ்க !

இத்தகைய பெரியார் ஆட்சிபெற்ற 10-ம் ஆண்டு விழா இப்போது நடை பெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களும் பதினாயிரக்கணக்கான பொதுமக்களும் அடிகளார் நீண்டநாள் இந்நில உலகில் வாழ்ந்து, சைவத்தையும் தமிழையும் தழைக்கச்செய்து மக்களுக்கு வேண்டிய நன்மைகள் யாவற்றையும் குறைவின்றிச் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டினார்கள். அவ் வண்ணமே யாமும் அவனை மனமொழி மெய்களால் வழுத்துவோமாக!

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் திரு வடிகள் வாழ்க!!

—செட்டிநாடு, 23—9—1943.

தருமபுரம் ஆதீனகர்த்தரின் விருந்து

தருமபுரம் ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பண்டாரசந்நிதிகள் மாயவரம் நகரவாசிகளுக்கு நேற்றிரவு மடத்தில் ஒரு விருந்து நடத்திவைத்தார். நகரில் உள்ள பிரபலஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களும் வியா பாரிகளும் கூட்டமாக விஜயம் செய்திருந்தார்கள். விருந்துக்குப் பிறகு சர் ஆர். எஸ். சர்மா, விருந்துநடத்திவைத்ததற்கு ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு, வந்தனம் தெரிவித்துவிட்டு, அவருடைய சென்ற பத்து வருஷத்திய நிர்வாகத்தில் மடம் விசேஷ அபிவிருத்தி அடைந்து இருப்பதாகவும் நிர்வாகத்தைத் திருத்தி

அமைத்து பல முற்போக்கான காரியங்களை வெற்றிகரமாக செய்துவருவதற்கு அவர் மனோதிடத்துடன் தைரியமாக உழைத்துவருவதே காரணம் என்றும் சொன்னார். பிறகு மாஜிக் வேடிக்கைகள் நடைபெற்று இரவு 1-மணிக்கு வைபவம் முடிவு பெற்றது.

—சுதேசமித்திரன், 26—9—1943.

சிவதர்மம்

சித்தாந்தத்தை விளக்கவும், சிவதர்மத்தைப் பரப்பவும், குருஞானசம்பந்த சுவாமிகள் என்ற ஒருவர் தர்மபுரத்தில் இப்போது உள்ள மடத்தை ஸ்தாபித்தார். இதைப்போலவே தஞ்சை ஜில்லாவில் பல மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இன்னமும் இருந்து வந்த போதிலும், இந்தத் தருமபுர மடமும், திருப்பனந்தாள் மடமுமே சிவ தர்மங்களைப் புரக்கும் வேலையைச் சிவபெருமானுக்கே விட்டுவிடாமல் தாங்களே செய்து வருகின்றன.

தருமபுர மடத்தின் தலைவராக இப்போதிருப்பவர் பெயர் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக பரமாசார்ய சுவாமிகள் என்பது. குருஞான சம்பந்தருக்கும் இவருக்கும் இடையே 22 தலைமுறைகள் ஏற்பட்டுவிட்ட போதிலும் ஸ்தாபகரின் லட்சியத்தைத் தளரவிடாது, நிஜமான சிவதர்மத்தை அனுஷ்டித்து, சரியான வகையில் நிர்வாகம் செய்து, சைவசித்தாந்தத்தைப் புதிதாய் வந்த சித்தாந்தங்கள் மோதிச் சிதைத்து விடாமல் காத்துவருகிறார்.

நான்கைந்து வருஷங்களுக்குமுன் ஒருநாள் இருந்தாற்போலிருந்து இதை எழுதுபவருக்குச் சைவ சித்தாந்த நூல்களின்மேல் பெரும்பற்று ஏற்பட்டுவிட்டது. ஆகையால் அவற்றைக் கறைத்துக் குடித்துவிடவேண்டுமென்ற எண்ணத்துடன் தருமபுர ஆதீன மடத்திற்கு, உடன் சைவ சமயநூல்கள் எவ்வளவு அனுப்பமுடியுமோ அவ்வளவையும் அனுப்பிவைக்கும்படி எழுதினார். அந்த மடத்திலிருந்து சில தினங்களில் பல புத்தகங்கள் அடங்கிய ஒரு கட்டு இலவசமாக வந்து சேர்ந்தது. அவற்றைக் கறைத்துக் குடிப்பதும், அவற்றின்மேல் பகைமை பூணுவதும், அவ்வளவு சுலபமான காரியமல்ல என்று தெரிந்துகொள்ளவேண்டியகதி அவருக்கு ஏற்பட்டுவிட்டது. பிறகு விசாரித்ததில் இம்மாதிரி சைவசமய வெளியீடுகள் பலவற்றைத் தானம்செய்வதோடு, தற்போதுள்ள ஆதீனத் தலைவர், உருவான பல தொண்டுகளுக்கும் உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் ஊக்கமளித்து வருவது தெரிந்தது.

திருப்பதி கீழ்த்திசைக் கலைக்கழகத்திற்கும், சென்னைதமிழ்ச்சங்கத்திற்கும், தஞ்சை சரசுவதி மகாலுக்கும் பேருதவி புரிந்திருக்கிறார் என்பதும் அறிந்துகொண்டபொழுது இத்துணைப் பெரிய மனமும், பேரறிவும், பெருமிதமும், இலக்கிய உணர்வும் படைத்த இவர் என்றும் அத்தருமபுர ஆதீனத் தலைவராயிருக்கவேண்டும் என்று தோன்றிற்று. சென்றமாதத்தில் இப் பெரியார் மடத்தின் தலைமையை ஏற்ற பத்தாவது ஆண்டைக் கொண்டாடினார்கள் என்ற செய்தி கிடைத்தபோது நமது விருப்பமும் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. ஸ்ரீமான் கடவுளுக்கும் இதை

எழுதுபவருக்கும் மன ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. இன்னும் பல பத்தாண்டுகள் இவர் வாழ்ந்து பலகோடி நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற நமது விருப்பம் ஸ்ரீமான் கடவுளின் ஆமோதிப்பிற்குரிய ஒரு விஷயமாகத்தான் இருக்கவேண்டும்.

—கலாமோகினி 1–10–1943.

மௌன சேவை

என்ன காரணமோ தெரியவில்லை. நமக்கு நிரம்ப நாளாகவே ஒரு பழி இருந்துவருகிறது. ஆத்ம ஞானம், ஆத்ம ஞானம் என்று ஒன்று இருக்கிறதே அதற்கும் நமக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நூறு வருஷங்களுக்கு முன் ஒருகால் நாம் அந்தப் பழிக்குப் பாத்திரர்களாயிருந்திருக்கலாம். ஆனால் இப்போது அம்மாதிரி குற்றம் சாட்டுவது எவ்வளவுதூரம் ஆதாரபூர்வமானது-எவ்வளவு அபாண்டமானது-என்பது நாம் நடத்தும் தினசரி வாழ்வைக் கவனித்தவர்களுக்கு மாத்திரம்தான் நன்கு தெரியும்.

உயிரை வைத்துக்கொண்டிருப்பதற்காக நம் நித்திய வாழ்வில் எத்தனை ஜெகத்ஜாலப் புரட்டுகள் நடக்கின்றன என்பதை அவர்கள் என்ன கண்டார்கள், பாவம்! எந்த விஷயமும்-அது கலையாகத்தான் இருக்கட்டும், இலக்கியமாகத்தான் இருக்கட்டும் அல்லது அத்யாத்மமான மதம், மனச்சாட்சி முதலிய விஷயங்களாகத்தான் இருக்கட்டும்; பொருளாதாரம் போன்ற பெரிய விஷயங்கள் என்று வந்துவிட்டால் நிரந்தரமான அடக்குமுறையைப் பிரயோகித்துவிடும் நமது அந்தரங்கங்களை அறியாமல் அவர்கள்பாட்டுக்குத் தொடர்புகளைக் கற்பித்து விடுகிறார்கள்.

பொருளாதார காரணங்களால் இன்று தமிழ் நாட்டில் எத்தனை எத்தனை புதுமைகள் நடந்திருக்கின்றன. எத்தனை லோபிகளும் உலுத்தர்களும் தானகர்ணர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்; எத்தனை கடைப்பட்ட ஜன்மாக்களை மகாத்மாக்களாக நாம் செய்திருக்கிறோம். இதையெல்லாம் கவனித்தால் நமக்காவது ஆத்ம ஞானமாவது என்று சொல்லத்தான் தோன்றுகிறது.

இப்போது நாம் சில வித்தைகளில் அதிமேதைகளாக ஆகியிருக்கிறோம்; முகஸ்துதி, பிரசாரம், மனச்சாக்ஷிவிற்பனை முதலியவைகளில், நிஜமான—மனப்பூர்வமான சேவையாக இருந்தாலும், நமக்கு அதில் பொருளாதார லாபமில்லாவிட்டால் அதைப் பாராட்டவோ, ஆதரிக்கவோ அல்லது அதற்கு இடையூறுண்டாக்காது இருக்கவோ மனம் வருவதில்லை.

இந்த விபரீதமான வியாதிக்காளான நமக்கு மத்தியிலும் சில மனப்பூர்வமான லட்சியங்களுக்காக எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது சில ஸ்தாபனங்கள் பணியாற்றி வருவதுதான் அற்புதம். நோக்கம் கற்பிக்கப்படுவதை நான் பொருட்படுத்தவில்லை. சமீபத்தில் நான் காண நேர்ந்த ஸ்தாபனங்களிரண்டில் ஒன்று நமது ஆதரவுக்கும் மற்றொன்று நம் பாராட்டுதலுக்கும் உரியது.

கருமமே கண்ணான சில ஆத்மஞானிகளின் இடையறாத—நிஷ்காம்யமான சேவையால் சென்னையில் நடந்துவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம் நமது ஆதரவுக்குரிய ஸ்தாபனங்களில் முக்கியமானது. இந்தியர்களின் கலைக்காகவும், ஆசாரங்களுக்காகவும், தர்மத்திற்காகவும், மௌனமாக தேவ மனதுடன் ராக்ஷஸ சேவை செய்யும் இந்த ஸ்தாபனம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம், ஸ்ரீ சாரதா வித்தியாலயம் முதலியவற்றின்மூலம் அபாரமான சாதனைகளைச் செய்துவருகிறது.

பிச்சை கேட்பதுமில்லை இன்பத்திற் பித்துக்கொண்டு திரிவதுமில்லை. அதோடு இச்சையில்லை யிழந்த பிரசாரத்தில் என்று மௌனமாக சைவசித்தாந்தத்திற்கும் சிறப்பாகத் தமிழுக்கும் பெருந்தொண்டு செய்துவரும் தர்மபுரமடம் நமது பாராட்டிற்குரிய ஸ்தாபனங்களில் முக்கியமானது. இதேபோன்ற மற்ற ஸ்தாபனங்களுக்குக் கற்பிக்கப்படும் மாக்களை மனத்தாலும் கற்பிக்கமுடியாத தோரணையில் புத்தக விநியோகம் முதல் 'ஞானசம்பந்தம்' (இது அங்கு நடத்தப்படும் சித்தாந்தப் பத்திரிகை) பற்றிய விஷயங்களைப் பரப்புவதுவரை திறமையுடன் நிர்வகித்து வருகிறது.

இந்த ஆதீனத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முகதேசிக பரமாசார்ய சுவாமிகளின் தமிழன்பும், நிர்வாகத் திறமையும் பாராட்டுக்கு மட்டுமல்ல; மற்றவர்கள் பின்பற்றுவதற்கும் உரிய சிறந்த உதாரணங்களாகும். கத்தோலிக்கர்கள்—போப்பாண்டவரிடம் காட்டும் அளவு அன்பையும் சைவர்கள் இம்மாதிரி ஞானசம்பந்தம் உள்ளவர்களுக்கு ஏன் கொடுப்பதில்லை?

—கலாமோகினி, சுபானு, ஐப்பசி.

தருமபுர ஆதீன வெளியீடுகள்

எண்	பெயர்	வருஷம்
1.	குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு சமூகமாலை முதலியன	1924
	,, **இரண்டாம் பதிப்பு**	1944
2.	நித்திய கன்மநெறி	1927
3.	திருமுல்லைவாயிற் புராணம்	,,
4.	திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல்	,,
5.	சித்தாந்த நிச்சயம்	1928
6.	சம்பிரதாய தீபம்	1928
7.	வருணாச்சிரம சந்திரிகை	1930
8.	சிகாரத்தின மாலை	,,
9.	திருப்பதிகமும் பஞ்சரத்தினமும்	,,
10.	தசமணிமாலை	,,
11.	ஞானசம்பந்த குருராயவட்டகமும், சந்திரகலா மாலையும்	,,
12.	திருவையாற்றுப் புராணம்	,,
13.	சிவானந்தபோத சாரம்	1931
14.	சோடசகலாப் பிராசாத சட்கம்	1931
15.	சைவசன்யாச பத்ததி (வடமொழி)	1932
16.	சிவபோகசாரம்	1932
	,, **இரண்டாம் பதிப்பு**	1936
17.	சிவப்பிரகாசக்கட்டளை	1932
	,, **இரண்டாம் பதிப்பு**	1939
18.	௨௫-வது மகாசந்நிதானத்தின்மீது பலர் பாடிய தோத்திரப் பாடல்	1933
19.	திருத்துருத்திப் புராணம்	1933
20.	ஞானசரிதை	1934
21.	முத்திநிச்சயம் — சிற்றுரையுடன்	,,
22.	அறிவானந்த சமுத்திரம்	,,
23.	பண்டாரமும்மணிக்கோவை குறிப்புரையுடன்	1937
24.	இந்துமத பாலபாடம்	,,
25.	சிதம்பரச் செய்யுட்கோவை உரையுடன்	,,
26.	திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம்	,,
27.	கிளிவிடுதூது	,,
28.	திருமுலைப்பால் சிறப்பு	1939
	,, **இரண்டாம் பதிப்பு**	1941
29.	பதி பசு பாசத்தொகை	1940
30.	ஸ்ரீலஸ்ரீசிவஞானதேசிகர்நான்மணிமாலை	,,
31.	திருபுவனத் தலமகிமைச் சுருக்கம்	,,
32.	கீர்த்தித்திருவகவல்	1941
33.	ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் வரலாறும், சில பாசுரங்களும்	,,
34.	வைத்தீஸ்வரன்கோயில் தேவாரம் திருப்புகழ்	,,
35.	திருத்தொண்டத் தொகையும் அசபாநடன பதிகமும்	,,
36.	குங்கிலியக்கலய நாயனார் அன்பின்திறம்	,,
37.	திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ்	,,
38.	திருவையாற்றுத் தேவாரம் திருவாசகம் திருப்புகழ்	,,
39.	புள்ளிருக்குவேளூர்ப் புராணம்	,,
40.	சித்தாந்த சைவ வினாவிடை	,,
41.	நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத் திரட்டும்	,,
42.	ஆச்சாள்புரத் தலவரலாறு	,,
	,, **இரண்டாம் பதிப்பு**	1943
43.	திருவையாற்றுத் தலவரலாறு	1941
	,, **இரண்டாம் பதிப்பு**	1943
44.	சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலி வெண்பாவும்	1941
45.	தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு	,,
46.	சிவபூஜாவிதி	,,
47.	சைவாநுட்டானவிதி	,,
48.	திருக்கடவூர் உலா குறிப்புரையுடன்	,,
49.	திருப்பாடல்கள்	1942
50.	விநாயகர் அகவல்கள்	,,
51.	சீகாழித் தலவரலாறு	,,
52.	மெய்கண்டசாத்திரம் மூலம்	,,
53.	கற்குடித் தலவரலாறு	1943
54.	நீதிநெறிவிளக்கம் (உரையுடன்)	,,
	,, **இரண்டாம் பதிப்பு**	1949

எண்	பெயர்	வருஷம்
55.	திருவாரூர் நான்மணிமாலை மூலமும் வசனமும்	1943
56.	சகலகலாவல்லிமாலை (உரையுடன்)	,,
57.	கந்தரனுபூதி	,,
58.	குத்தாலத் தலவரலாறு	,,
59.	குறுக்கைத் தலவரலாறு	,,
60.	திருபுவனத் தலவரலாறு	,,
61.	திருக்கடவூர்த் தலவரலாறு	,,
62.	புள்ளிருக்குவேளூர்த் தலவரலாறு	,,
63.	திருப்பனந்தாள் தலவரலாறு	1943
64.	௨௪-வது மகாசந்நிதானம் பத்தாண்டு ஆட்சி மலர்	,,
65.	அப்பர் சுவாமிகள் புராணம் C. K. S. விரிவுரையுடன்	1944
66.	மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள்	,,
67.	சிவஞானபோத சூத்திரக் கட்டுரை	,,

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் காலத்தில் வெளியிடப்பட்டவை

எண்	பெயர்	வருஷம்
68.	ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை	1945
69.	சிவப்பிரகாசம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
70.	தருமபுர ஆதீன நூல்நிலையப் புத்தகப்பட்டி	,,
71.	புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
72.	பஞ்சாவரணத் தோத்திரங்கள்	1945
73.	சிதம்பரத்துத் திருப்பதிகங்கள்	,,
74.	தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா	,,
75.	திருவேட்களத் திருப்பதிகங்கள்	,,
76.	திருநெல்வாயில் திருப்பதிகம்	,,
77.	திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள்	,,
78.	திருநாரையூர்த் திருப்பதிகங்கள்	,,
79.	தருமபுர ஆதீன ஆவணிமூலத் திருநாள்	,,
80.	ஆச்சாள்புரத் திருப்பதிகம்	,,
81.	திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம்	,,
82.	திருத்துருத்தித் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
83.	திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள்	1945
84.	திருகோளிலித் திருப்பதிகங்கள்	,,
85.	திருக்கடவூர்த் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1946
86.	சிவஞானபோதம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1945
87.	சோமவார விரதம்	,,
88.	திருநீறு	,,
89.	உருத்திராக்கம்	1945
90.	ஐந்தெழுத்து	,,
91.	கந்தர்சஷ்டி விரதச் சிறப்பு (திருமுருகாற்றுப்படையுடன்)	1946
	,, இரண்டாம் பதிப்பு	1948
92.	திருவருட்பயன் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	1946
93.	தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம்	,,
94.	ஆண்டாள் திருப்பாவை	,,
95.	திருக்கலிக்காமூர்த் திருப்பதிகங்கள்	,,
96.	தருமபுரஆதீனப்பாடசாலைநிர்ணயவிதிகள்	,,
97.	திருநெல்வேலித் திருப்பதிகம்	,,
98.	திலகவதியார் (உரைநடை)	,,
99.	சீகாழித் திருப்பதிகங்கள்	,,
	,, இரண்டாம் பதிப்பு	1948
100.	திருக்கோலக்காத் திருப்பதிகங்கள்	1946
101.	திருக்குருகாவூர்த் திருப்பதிகங்கள்	,,
102.	திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகங்கள்	,,
103.	திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்	,,
104.	திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள்	,,
105.	கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம்	,,
106.	சித்தாந்தத் திரயம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
107.	ஸ்ரீகண்டன் (ஓர் சிறு நாடகம்)	,,
108.	திருமுலைப்பால் சிறப்பு	,,
109.	முத்திநிச்சயப்பேருரை	,,

எண்	பெயர்	வருஷம்
110.	மிருகேந்திரம் (தமிழ்மொழிபெயர்ப்புடன்)	1946
111.	நடராஜசதகம்	,,
112.	உண்மைவிளக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
113.	திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம்	,,
114.	சுவாமிநாத சுவாமி தோத்திரங்கள்	,,
115.	திருநள்ளாற்றுத் திருப்பதிகங்கள்	,,
116.	திருக்கடைமுடித் திருப்பதிகம்	,,
117.	திருப்பறியலூர்த் திருப்பதிகம்	,,
118.	திருவிளநகர்த் திருப்பதிகங்கள்	,,
119.	திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்	,,
120.	திருஆக்கூர்த் திருப்பதிகங்கள்	,,
121.	திருக்கடவூர்மயானத் திருப்பதிகங்கள்	,,
122.	மாயூரத் திருப்பதிகங்கள்	,,
123.	திருநீடூர்த் திருப்பதிகங்கள்	,,
124.	திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள்	1947
125.	திருஅன்னியூர்த் திருப்பதிகங்கள்	,,
126.	திருத்தருமபுரத் திருப்பதிகம்	,
127.	ஆலயவழிபாடு(வசனம்)தோத்திரங்களுடன்	,,
128.	திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள்	,,
129.	திருஎதிர்கொள்பாடித் திருப்பதிகம்	,,
130.	திருமயிலாப்பூர்த் திருப்பதிகம்	,,
131.	திருஒற்றியூர்த் திருப்பதிகங்கள்	,,
132.	திருஞானசம்பந்த நாயனார் புராணம் முதல் நூறுபாடல்கள் C. K. S. விரிவுரையுடன்	,,
133.	திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள்	,,
134.	இருபா இருபஃது (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
135.	திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள்	,,
136.	தருமபுர ஆதீனப் பாடசாலை ஆறாவது ஆண்டு அறிக்கை	,,
137.	திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள்	,,
138.	உ௬-வது மகாசந்நிதானம் முதலாண்டு ஆட்சி அறிக்கை	
139.	திருக்குரக்குக்காத் திருப்பதிகம்	,,
140.	அருஅஞ்சைக்களத் திருப்பதிகம்	,,
141.	திருப்பழமண்ணிப்படிக்கரைத்திருப்பதிகம்	,,
142.	திருவாழ்கொளிபுத்தூர்த் திருப்பதிகங்கள்	,,
143.	திருஓமாம்புலியூர்த் திருப்பதிகம்	,,
144.	சிவபோகசாரம் விரிவுரையுடனும் ஆங்கில மொழிபெயர்ப்புடனும்	,,
145.	திருக்கானாட்டுமுள்ளூர்த் திருப்பதிகம்	,,
146.	துள்ளிவருகுதுவேல் (வசனம்)	,,
147.	திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள்	1947
148.	திருஅவிநாசித் திருப்பதிகம்	,,
149.	திருமுருகன்பூண்டித் திருப்பதிகம்	,,
150.	திருவெம்பாவைத் திருப்பதிகம் விளக்கத்துடன்	,,
151.	திருவலஞ்சுழித் திருப்பதிகங்கள்	,,
152.	உங-வது மகாசந்நிதானம் இரண்டாவதாண்டு ஆட்சி அறிக்கை	1948
153.	திருப்பந்தணைநல்லூர்த் திருப்பதிகங்கள்	,,
154.	திருக்கஞ்சனூர்த் திருப்பதிகம்	,,
155.	திருக்கோடிக்காத் திருப்பதிகங்கள்	,,
156.	திருவாப்பாடித் திருப்பதிகம்	,,
157.	சிவஞானசித்தியார் சுபக்கம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	,,
158.	அபிராமி அந்தாதி விரிவுரையுடன்	,,
159.	திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம்	,,
160.	பண்டாரசாத்திரம் முதல் தொகுதி	,,
161.	நலவழி	,,
162.	சுவாமிநாதன் பிரபாவம்	,,
163.	திருந்துதேவன்குடித் திருப்பதிகம்	,,
164.	இன்பம்	,,
165.	அறுபத்துமூவர்	,,
166.	திருவியலூர்த் திருப்பதிகம்	,,
167.	மெய்கண்ட நூற்பொருட் சிறப்பு	,,
168.	திருக்கொட்டையூர்த் திருப்பதிகம்	,,
169.	திருஇன்னம்பர் திருப்பதிகம்	,,
170.	தண்டாயுதபாணித் தோத்திரங்கள்	,,
171.	உ௬-வது மகாசந்நிதானம் மூன்றாவதாண்டு ஆட்சி அறிக்கை	,,
172.	திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம்	,,
173.	திருப்புறம்பயத் திருப்பதிகம்	,,
174.	திருவியலூர்த் திருப்பதிகம்	,,
175.	சைவத் திருமுறைகள் (வசனம்)	,,
176.	அமைதி	,,
177.	திருவைகாவூர்த் திருப்பதிகம்	,,
178.	திருச்சிவபுரத் திருப்பதிகம்	,,
179.	மதுரைப்பதிகம் தலவரலாற்றுடன்	,,
180.	திருப்பரங்குன்றத் திருப்பதிகம்	,,
181.	திருவடகுரங்காடுதுறைத் திருப்பதிகம்	,,
182.	திருப்பழனத் திருப்பதிகம்	1949
183.	திருக்குறள் கதைகள் எண்பது	,,
184.	சிதம்பரம் பதிகங்களுடன்	,,
185.	திருப்பெரும்புலியூர்த திருப்பதிகம்.	,,

தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.
2. சிவாகமபாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசைமுறைகளைப் பயிற்றுவிப்பது.
3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.
4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.
5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் வெளியிடுவது.
6. அறிஞரைக்கொண்டு ஆலயம்தோறும் அறவுரை வழங்குவது.
7. பிரசாரவாகனத்தின்மூலம் தமிழ்நாடெங்கும் சமயம்வளர்ப்பது.
8. ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ்ப்பரிசு அமைப்பது.
9. ஆதீனக் கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.
10. தமிழ்க் கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது.
11. வடமொழிக் கல்லூரி நிறுவி சிரோமணித் தேர்விற்கனுப்புவது.
12. ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.
13. நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.
14. விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிடுவது.
15. சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.
16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகைவாயிலாகச் சமய உண்மைகளை அறிவுறுத்துவது.
17. சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.
18. தமிழ்ப்பணி, சமயப்பணி செய்பவர்க்குதவுவது.
19. தமிழ்நாட்டுத் தலவரலாறு எழுதுவித்து வழங்குவது.
20. புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.
21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.
22. பொருளும் புத்தகமும்அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.
23. மாயூரத்தில் பிரஸவ ஆஸ்பத்திரி கட்டிவருவது.
24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்துவருவது.
25. காந்திநிதி, ஹரிஜனபண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவிநிதி முதலிய பல பொதுஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது.

நீங்கள் படித்தவை ...

விழா நிகழ்ச்சிகள்

எண்		பக்கம்
1.	ஏற்பாடுகள்	2
2.	விழாத்தொடக்கம்	3
3.	புலவர்தினம்	7
4.	மாகேசுவரபூஜையும், பட்டணப்பிரவேசமும்	9
5.	ஆவணிமூலத்திருநாள்—மாணவர்தினம்	11
6.	ஆதித்திராவிடர்தினம்	12
7.	பத்தாண்டாட்சி தருமம்	13

பிரசங்கங்கள்

1.	திரு. கணேசய்யர் B.A., B.L., கீழத்தஞ்சைஜில்லா ஜட்ஜ், நாகை	17
2.	இராவ்பகதூர், திரு. N. R. சாமியப்ப முதலியார், நெடும்பலம்	,,
3.	திவான்பகதூர், திரு. T. M. நாராயணசாமி பிள்ளை M.A., B.L., இந்துமதமான்யக்கழகத் தலைவர், சென்னை	18, 26, 32
4.	ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியுரை	21, 35
5.	சச்சிவோத்தம, Sir C. P. இராமசாமி அய்யர் K.C.S.I., K.C.I.E., LL. D., திருவாங்கூர் சமஸ்தான திவான்	21
6.	சிவக்கவிமணி, திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., B.L., கோயம்புத்தூர்	29, 46
7.	திரு. C. கனகசபைச் செட்டியார், மாயூரம் நகராண்மைக்கழகத் தலைவர்	35, 51
8.	வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை	38
9.	,, ச. தண்டபாணி தேசிகர்	40
10.	,, இராம. கோவிந்தசாமிப் பிள்ளை	41
11.	,, முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்	43
12.	,, வை. குஞ்சிதபாதம் பிள்ளை	45
13.	திரு. பூ. சமரபுரி முதலியார், தாம்பரம்	47, 54
14.	பாலகவி, வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார்	49, 52
15.	காசிவாசி, சிவஸ்ரீ. ஈசானசிவாசாரியார் பழநி	50
16.	திரு. N. வைத்தியநாத அய்யர், B.A., B.L., பத்தாண்டு விழாக்கமிட்டி அங்கத்தினர், மாயூரம்	103

வாழ்த்துப் பத்திரங்கள்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் சார்பில்:

1.	சச்சிவோத்தம, Sir C. P. இராமசாமி அய்யர்	59

எண் பக்கம்

கொண்டாட்டக் குழுவினர் சார்பில்:

2. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் 62
3. சச்சிவோத்தம, Sir C. P. இராமசாமி அய்யர் 61
4. திவான்பகதூர், திரு. T. M. நாராயணசாமி பிள்ளை M.A., B.L., 99
5. திரு. C. கனகசபைச் செட்டியார் 101

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்திற்கு:

6. மாயூரம் நகராண்மைக் கழகத்தார் 64
7. மாயூரம் ஊராண்மைக் கழகத்து உத்தியோகஸ்தர்கள் சங்கம் 66
8. பிறையாறு தரங்கம்பாடி வாசிகள் 67
9. The Citizens of Shiyali 68
10. திருவையாறு பஞ்சாயத்து போர்டு 69
11. மாயூரம் தமிழ்க்கழகத்தார் 70
12. மாயூரம் தாலூகா சாரணச் சங்கத்தார் 72
13. சென்னை சைவாசாரியார் சங்கம் 73
14. கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேசர் தேவஸ்தானத்து ஸ்ரீ மங்களவிலாஸ் நூல்நிலைய நிர்வாகிகள் 75
15. கரந்தைத் தமிழ்ச்சங்கம் 76
16. காழிக் கல்விக்கழகத்தார் 78
17. திரு. T. S. தியாகராஜ ஞானியார், ஆசிரியர், 'நவ இந்தியா' திருவாரூர் 79
18. திரு. A. S. சர்மா, ஆசிரியர், செட்டிநாடு, காரைக்குடி 80
19. திரு. நீ. செ. சிதம்பரேஸ்வர தீக்ஷிதர், ஸ்ரீ நடராஜர் தேவஸ்தானம் டிரஸ்டி ஸ்தானீகம், சிதம்பரம் 81
20. இசையரசு, தேவாரமணி, M. M. தண்டபாணி தேசிகர், சென்னை 83
21. திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, B.A., சென்னை 85
22. வித்துவான், மூத்து, சு. மாணிக்கவாசக முதலியார், சென்னை 88
23. ,, சோம. இராமலிங்க தேசிகர், சென்னை 89
24. ,, வை. குஞ்சிதபாதம் பிள்ளை, சென்னை 90
25. திரு. க. வஜ்ஜிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம் 91
26. பாலகவி, திரு. வே. இராமநாதன் செட்டியார், தேவக்கோட்டை 93
27. திரு. ர. வடமலை செட்டியார், சென்னை 94
28. திரு. S. V. சீனிவாசன், செம்பொனார்கோயில் 96
29. திரு. R. கோவிந்தராஜன், மாயூரம் 97
30. சென்னைத் தமிழ்ச்சங்கம் 98

வாழ்த்துச் செய்திகள்.

1. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் 107
2. ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 108

எண்		பக்கம்
3.	H. E. Sir Arthur Hope, Governor of Madras	
4.	திரு. V. C. வெள்ளியங்கிரி கவுண்டர், வெள்ளக்கிணறு	109
5.	ராஜா Sir அண்ணமலைச் செட்டியார், செட்டிநாடு	,,
6.	திரு. S. முத்தையா முதலியார், அட்வகேட், மயிலாப்பூர்	,,
7.	Hon'ble, Sir T. M. Krishnaswamy Iyer, High Court Chief Justice, Trivandrum	110
8.	திரு. V. S. தியாகராஜ முதலியார், M.A., வடபாதிமங்கலம்	,,
9.	திரு. AL. V. R. P. பெத்தபெருமாள் செட்டியார், ரெட்டயம்பாடி ஜமீன்தார், தேவகோட்டை	,,
10.	திரு. P. A. C. இராமசாமிராஜா, இராஜபாளையம்	111
11.	இராவ்பகதூர், திரு. R. V. ராமசுந்தரம்பிள்ளை, பண்ணையார், ராஜபாளையம்	,,
12.	டாக்டர், P. சுப்பராயன், Bar-at-Law, குமாரமங்கலம் ஜமீன்தார், திருச்செங்கோடு	112
13.	திவான்பகதூர், திரு. K. S. இராமசாமி சாஸ்திரிகள், சென்னை	,,
14.	திரு. A. கொண்டப்பகாரு, B.A., B.L., அனந்தப்பூர்	113
15.	இராவ்பகதூர், திரு V. S. செங்கல்வராயப் பிள்ளை, M.A., சென்னை	,,
16.	ஸ்ரீமதி, ருக்மினிதேவி, அடையாறு	,,
17.	திரு. P. சம்பந்த முதலியார், B.A., சென்னை	114
18.	ராவ்சாகிப், திரு. S. R. ரெங்கநாதன், சென்னை	,,
19.	திரு. இராஜகோபால பிள்ளை, பிக்ஷாண்டார்கோயில்	115
20.	திரு. Dr. B. V. நாராயணசாமி நாயுடுகாரு, சென்னை	,,
21.	திரு. S. நாகராஜ ஐயர், B.A., B.L., மயிலாப்பூர்	,,
22.	திரு. O. Rm. M. Sp. Sv. M. மெய்யப்ப செட்டியார், தேவகோட்டை	116
23.	இராவ்பகதூர், திரு. K. அரங்கசாமிமுதலியார், (விடுதிபெற்ற டிப்டிகலெக்டர்) முனிசிபல் கமிஷனர், குண்டூர்	,,
24.	இராவ்பகதூர் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், சென்னை இந்து சமய அறநிலையக்கழக கமிஷனர்	118
25.	திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T., Rtd. D. E. O., வேலூர்	120
26.	இராவ்பகதூர், திரு. T. V. கிருஷ்ணசாமி அய்யர், (Rtd. D. S. P.) புதுக்கோட்டை.	121
27.	திரு. S. முத்துராமலிங்கம் பி.ஏ., முனிசிபல் கமிஷனர், காரைக்குடி	,,
28.	திரு. C. அமிர்தகணேசன், பி.ஏ., முனிசிபல் கமிஷனர், வேலூர்	122
29.	திரு. S. பஞ்சநத முதலியார், பி.ஏ., பி.எல்., சென்னை	123
30.	திரு. சர்தார், அ. வேதரத்தினம் பிள்ளை, எம். எல், ஏ. வேதாரணியம்	,,
31.	திரு. C. V. இராஜகோபாலாசாரியர், அட்வகேட். திருவையாறு	,,
32.	திரு. A. கணேசய்யர், அட்வகேட், திருவையாறு	,,
33.	திரு. M. K வைத்தியநாத அய்யர் B.A., B.L., கும்பகோணம்	124
34	திரு. A. முத்தையாப் பிள்ளை B A., B.L., பாளையங்கோட்டை	,,
35.	ஹாஜி, மூனத்தம்பி மரக்காயர், காரைக்கால்	,,
36.	திரு. R. கந்தசாமி மூப்பனர் B.A., B.L., கும்பகோணம்	125, 136
37.	திரு. S. ரெங்கசாமிப் பிள்ளை, வழக்கறிஞர், விருத்தாசலம்	,,

எண்		பக்கம்
38.	திரு. T. V. இராமநாதய்யர் பி.ஏ., பி.எல்., சென்னை	126
39.	திரு. V. நாடிமுத்து பிள்ளை, தலைவர், ஜில்லாபோர்டு, தஞ்சை	,,
40.	இராவ்பகதூர், திரு. A. வீரையா வாண்டையார், பூண்டி	,,
41.	திரு. P. T. S. குமாரசாமி செட்டியார், கும்பகோணம்	,,
42.	திரு. T. M. மீனாட்சிசுந்தரம் அய்யர் பி.ஏ., பி.எல்., திருநெல்வேலி	128
43.	திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை பி.ஏ., பி எல்., தேவஸ்தான நிர்வாக அதிகாரி, பழநி	,,
44.	திரு. N. R. இராமானுஜம், ஆசிரியர், காவேரி, கும்பகோணம்	,,
45.	திரு. T. V. கோவிந்தசாமிப் பிள்ளை, ஆசிரியர், யதார்த்தவசனி, கும்பகோணம்	129
46.	திரு S. சுந்தரேசன் செட்டியார், B.A., L.T., கும்பகோணம்	130
47.	திரு. ஆதிநாத பிள்ளை, வேகுப்பட்டி	131
48.	The Administrator, Karaikkal	,,
49.	திரு. B. வெங்கடாசலம் பிள்ளை, B.A., B.L., தலைவர், திருச்சி ஜில்லாபோர்டு	132
50.	Dr. A. நடேசய்யர், மாயூரம்	,,
51.	திரு. V. அண்ணாமலை முதலியார், ஆற்காடு	133
52.	திரு. C. நாராயணன், தஞ்சாவூர்	,,
53.	Prof. N, M. சுந்தரம், F. I. A. Sc., திருநெல்வேலி	134
54.	திரு. S. இரத்தினம், சென்னை	,,
55.	திரு. R. நாகசுந்தரம், திருச்சி	,,
56.	The Handmade Paper, Mayuram	,,
57.	திரு. ச. க. தியாகராஜ பிள்ளை, ஆஸ்திகசங்கக் காரியதரிசி, திருவாரூர்	135
58.	திரு. M. S. தாயப்ப பிள்ளை பி.ஏ., தாயுமானவர் இலவச தமிழ்வகுப்பு அமைப்பாளர், திருச்சி	136
59.	வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருப்பதி	137
60.	,, ச. தண்டபாணி தேசிகர், திருவாரூர்	,,
61.	,, வை. மு. சண்முக தேசிகர், நாகை	138
62.	திரு. தி. சுப்பிரமணிய தேசிகர், திருவாரூர்	140
63.	திரு. தி. சாமிஐயா தேசிகர், திருவாரூர்	,,
64.	திரு. ஆ. முத்துசட்டைநாத தேசிகர், வரணி ஆதீன வித்துவான், நீர்முளை	141
65.	வித்துவான், R. P. அமிர்தலிங்கம் பிள்ளை, அண்ணாமலைநகர்	142
66.	,, P. இராமச்சந்திர சாஸ்திரிகள், மாயூரம்	143
67.	மகாமகோபாத்தியாய, முதுபெரும்புலவர், பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார், அண்ணாமலைநகர்	145
68.	இராவ்சாகிப், திரு. S. வையாபுரிப் பிள்ளை பி.ஏ., பி.எல், சென்னைப் பல்கலைக்கழகம்	,,
69.	திரு. K. இராமநாதன் செட்டியார் பி.ஏ., பி.எல்., சென்னை	,,
70.	திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	,,
71.	வித்துவான் கி. வா. ஜகந்நாதன், B.O.L. ஆசிரியர், கலைமகள், சென்னை	146

எண்		பக்கம்
72.	வித்யாபூஷண திரு. V. S. சஞ்சீவி ராவ், பங்களூர்	148
73.	திரு. T. K. சிதம்பரநாத முதலியார், B.A., B.L., திருக்குற்ருலம்	149
74.	வித்துவான், S. நாராயணசாமி நாயுடு, S. V. Oriental College, திருப்பதி	,,
75.	வித்துவான் ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை, சிதம்பரம்	,,
76.	திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, B.A., சென்னை	150
77.	கடலங்குடி பண்டிட் திரு. நடேச சாஸ்திரிகள், சென்னை	151
78.	பண்டித வ. மு. இரத்தினேஸ்வர அய்யர், யாழ்ப்பாணம்	152
79.	வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை, சென்னை	153
80.	வித்துவான் இராம. கோவிந்தசாமி பிள்ளை, திருவையாறு	156
81.	வித்துவான் T. S. தேவசேனபதி தேசிகர், வேலூர்	159
82.	திரு ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, தஞ்சை	162
83.	ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை, தோரமங்கலம்	164
84.	வித்துவான் மு. இரத்தின தேசிகர், குடவாயில்	166
85.	வித்துவான் G. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பி.எல்., அண்ணுமலைநகர்	167
86.	திரு. M. R. ஜம்புநாதன், பாம்பே	168
87.	திரு. A. சிதம்பரனர், கோயம்புத்தூர்	169
88.	திரு. R. ஷண்முகசுந்தரஞ் செட்டியார், திருவொற்றியூர்	,,
89.	திரு. S. இராமலிங்க ஓதுவார், சிதம்பரம்	170
90.	வித்துவான் வே. ஐயா நாயகர், போளூர்	171
91.	வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா, P. O. L. சென்னை	173
92.	திரு. மீ. சுந்தரம் பிள்ளை, தருமபுரம்	175
93.	திரு. ஆ. ஈசுவரமூர்த்தி பிள்ளை, உத்தரமேரூர்	177
94.	பாலகவி வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியார்	178
95.	பண்டித சே. முத்துரத்தின முதலியார், திருவாரூர்	,,
96.	வித்துவான், சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்	179
97.	,, தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சி	181
98.	,, R. பஞ்சநதம் பிள்ளை, திருச்சி	,,
99.	,, மு. குஞ்சிதபாத தேசிகர், நன்னிலம்	182
100.	திரு. கொ. பா. திருஞானசம்பந்த முதலியார், வலிவலம்	,,
101.	Sri Krishnamurthi Sarma, M. A., Principal, Raja's College, Tiruvadi	183
102.	திரு. மீனுட்சிசுந்தர சாஸ்திரிகள், மாயூரம்	184
103.	சிவ S. சுவாமிநாத சிவாசாரியார், தருமபுரம்	185
104.	சிரோமணி, K. இராஜகோபால சாஸ்திரி, அண்ணுமலைநகர்	186
105.	திரு. நாராயண சாஸ்திரிகள், தருமபுரம்	,,
106.	வித்துவான் மு. நடராஜ தேசிகர், திருவிடைமருதூர்	187
107.	திரு. காளஹஸ்திநாதையர், சிதம்பரம்	188
108.	திரு. கோ. பாலசுந்தர நாயகர், வந்தவாசி	189
109.	திரு. P. G. சுப்பிரமணிய அய்யர், தஞ்சாவூர்	190
110,	திரு. அ. கணபதிஐயர், தேவகோட்டை	,,
111.	திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L., காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை	191

எண		பக்கம்
112.	கவிராஜபண்டித, நா. கனகராஜ அய்யர், B. O. L. புதுக்கோட்டை	193
113.	திரு. S. சுப்பராய முதலியார், சீகாழி	194
114.	திருமதி. A. பாலாம்பாள், பொன்மலை	,,
115.	திரு. R. சின்னையாபிள்ளை, காருகுடி	,,
116.	திரு, K. திருவேங்கடமுதலியார், தஞ்சாவூர்	195
117.	திரு. V. V. C. R. முருகேசமுதலியார், ஈரோடு	,,
118,	National Secondary School Association, Mayavaram	,,
119.	திரு. P. L. சுந்தரேசன், புதுக்கோட்டை	,,
120.	திரு. S. பத்மநாபபிள்ளை, திருவனந்தபுரம்	,,
121,	திரு A. C. ஷண்முகநயினர், B. A., B. L., தென்காசி	,,
122.	திரு. K, S. ஜெயராம அய்யர். அட்வகேட், சென்னை	196
123.	Hon'ble, A. S. P. Iyer. Madras.	,,
124.	சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்	,,
125.	சென்னைத்தமிழ்ச்சங்கம்	,,
126.	சென்னைத்தமிழிசைச்சங்கம்	197
127.	திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்	,,
128.	கரந்தைத் தமிழ்ச்சங்கம்.	198
129.	குடந்தைத் தமிழ்ச்சங்கம்	199
130.	திருவாரூர் தம்பிரான்தோழர் தமிழ்ச்சங்கம்	200
131.	ஆக்கூர் பாரதி சங்கம்.	201
132.	The Teachers' Association Vandiwash	,,
133.	The Ramakrishna Mission Students Home, Madras	,,
134.	The Mayavaram Permanent Fund	202
135.	மகரிஷி சிவத்தியாநந்தர், கோடம்பாக்கம்.	,,
136.	The Theosophical Lodge, Kallakurichi	,,
137.	சென்னைச் சைவாச்சாரிய சங்கம்.	,,
138.	திரு. கிருஷ்ணசாஸ்திரிகள், தருமபுரம்	203
139.	திரு. க. ரா. சங்கரநாராயண சாஸ்திரி, காட்டுப்புத்தூர்	204
140.	Bharat Dharma Mahamandal, Benares	205
141.	The Saiva Mahajana Sangam, Tiruvadi	,,
142.	Sri V. P. Narayanan Nambiar, B. A., B. L., Madras	,,
143.	ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திருப்பாப்புலியூர்	,,
144.	Sri. S. Gopala Iyer, B.A., B.L., Secretary, Saraswathi Mahal Library Tanjore	
145.	Rao Sahib, Sri. L. N. Paramasivam Pillai, Lalgudi	206
146.	Sri. G. Ramanuja Mudaliar, Municipal Chairman, Tiruvarur	,
147.	Saivasiddhantha Sabha, Tuticorin	,,
148.	Sri. AL. AR. Kalairaja Chettiar, Kumara Zamindar, Devakottai	,,
149.	திவான்பகதூர், ஸ்ரீ ஆவுடையப்ப பிள்ளை, அட்வகேட், திருநெல்வேலி	,,
150.	தஞ்சாவூர் S. A. S. R. M. இராமநாதஞ் செட்டியார், M. L. C., காரைக்குடி	,,
151.	திரு. A. சிவஞானம் பிள்ளை, அட்வகேட், அம்பாசமுத்திரம்	,,

எண்		பக்கம்
152.	திரு. திருநாவுக்கரசு பிள்ளை, தியாகராயநகர்	206
153.	வித்துவான், திரு. M. ஆறுமுக தேசிகர், தருமபுரம்.	

பத்திரிகைச் செய்திகள்

1,	நவ இந்தியா	215, 239
2.	நாரதர்	217, 228
3.	மித்திரன்	218, 219, 223, 231, 248, 259
4.	Hindu	225, 226, 233
5.	Mail	227, 235
6.	யதார்த்தவசனி	230
7.	சினிமா உலகம்	233
8.	Indian Express	240
9.	தினமணி	243
10.	சிவாஜி	247
11.	சினிமா நிலையம்	248
12.	செந்தமிழ்ச்செல்வி	249
13.	ஆனந்த விகடன்	250
14.	பழநியாண்டவர்	,,
15.	கல்கி	251
16.	தமிழ்ப் பொழில்	255
17.	செட்டிநாடு	256
18,	கலாமோகினி	260, 261

பிழைத் திருத்தம்

பக்கம்		வரி		பிழை		திருத்தம்
26	—	18	—	6-9-1944	—	6-9-1943
33	—	22	—	சித்தாந்தசாத்திங்களையும்	—	சித்தாந்தசாத்திரங்களையும்
34	—	26	—	இசைப்பயிச்சி	—	இசைப்பயிற்சி
49	—	2	—	சரித்திர	—	சாத்திர
50	—	31	—	விருப்புவார்க்	—	விரும்புவார்க்
50	—	32	—	அவ் வருள்பெற்றே	—	அவ்வருள்பெற்றோரே
50	—	37	—	வடிமேதிப்பியம்	—	வடிவேதிப்பியம்
61	—	6	—	The Celebration of	—	The Celebration Committee of
66	—	40	—	உத்தியோகத்ச்சங்கதார்	—	உத்தியோகச்சங்கத்தார்
185	—	17	—	6-9-49	—	6—9—43